உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சேக்கிழார் சுவாமிகள் என்னும் அருண்மொழித்தேவர்

அருளிய

பெரிய புராணம் என்னும்

திருத்தொண்டர் புராணம்

(பன்னிரண்டாம் திருமுறை)

(மூன்றாம் தொகுதி - இரண்டாம் பாகம்) 3(2)/7

திருநின்ற சருக்கம்



உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

சேக்கிழார் சுவாமிகள் என்னும் அருண்மொழித்தேவர்

அருளிய

பெரிய புராணம் என்னும்

திருத்தொண்டர் புராணம்

(பன்னிரண்டாம் திருமுறை)

மூன்றாம் தொகுதி - இரண்டாம் பாகம் 3(2)/7

பாடல் எண்கள்

(1695 - 1898)

கோவை - வழக்கறிஞர்

திரு. C.K. சுப்பிரமணிய முதலியார், B.A., அவர்கள்

தொகுத்தியற்றிய

உரையுடன்


பதிப்பாசிரியர்

டாக்டர் இராச. வசந்தகுமார்
நிறுவன வேந்தர்
கற்பகம் பல்கலைக்கழகம்

பன்னிரு திருமுறை ஆய்வு மையம்
கற்பகம் பல்கலைக்கழகம்
ஈச்சநாரி, கோவை-21.

நூற்குறிப்பு

நூல் பெயர்	:	**பன்னிரண்டாம் திருமுறை** **மூன்றாம் தொகுதி - இரண்டாம் பாகம் 3(2)/7**
மூல நூலாசிரியர்	:	**சேக்கிழார் சுவாமிகள்**
உரை நூலாசிரியர்	:	**சிவக்கவிமணி C.K. சுப்பிரமணிய முதலியார்,** B.A.,
நூல் வகை	:	செய்யுள் மற்றும் உரைநூல்
வெளியீடு	:	**பன்னிரு திருமுறை ஆய்வு மையம்** **கற்பகம் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.**
வெளியீட்டு எண்	:	**61**
வெளியிடும் நாள்	:	**24-12-2017**
பக்கங்கள்	:	**400**
பதிப்புரிமை	:	**© க. மங்கையர்க்கரசி**
தாள்	:	மேப்லித்தோ 80 gsm
அளவு	:	கிரவுன் 1/8
அச்சகம்	:	செஞ்சுடர் அச்சகம் கோ.வா.பாளையம், போத்தனூர், கோவை – 23. செல் : 98431 74238





திருநாரையூர்ப் பொள்ளாப் பிள்ளையார்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

பன்னிரண்டாம் திருமுறை

மூன்றாம் தொகுதி - இரண்டாம் பாகம் 3(2)/7

பொருளடக்கம்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

பன்னிரண்டாம் திருமுறை

(மூன்றாம் தொகுதி - இரண்டாம் பாகம்) 3(2)/7

வழிபாட்டுக் கருத்தரங்கம்

திருத்தொண்டர் புராணம்
24.12.2017 ஞாயிறு

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகிறார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு உண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போது உன் அடியின் கீழ் இருக்க என்றார். **- பெரியபுராணம்-1776**

பதிப்புரை

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன்அடி சேரா தார். - திருக்குறள் (10)

1. உயிரின் நோக்கம் / இலட்சியம் - வீடுபேறு, முத்தி, மோட்சம். (சொர்க்க நரகங்கள் அல்ல)

2. எடுத்துக்கொண்ட கொள்கைகள்

அ) எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும் மன்னியசீர்ச் சங்கரன் தாள் மறவாமை.

ஆ) யாதொரு தெய்வங் கொண்டீர்; அத்தெய்வமாகி ஆங்கே மாதொரு பாகர் தாம் வருவார் எனத் தெளிதலும்/ உறுதிபட நிற்றலும்.

இ) பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும், மாதொரு பாகர் மலர்த்தாள் மறப்பிலாமை.

ஈ) சிவத்தைத் தவிர மற்றொரு தெய்வத்தைக் கனவிலும் நினையாதிருத்தல்.

உ) "ஞாலம் நின்புகழே மிக வேண்டும் தென் ஆலவாயில் உறையும் எம் ஆதியே" என்று எந்நேரமும் சிவன் புகழையே பாடிக்கொண்டிருத்தல். நம் புகழைப் பாடவோ, பரப்பவோ முயற்சி செய்யாதிருத்தல்.

ஊ) தம்மைத் தாம் முற்றிலும் மறத்தல்.

3. வகுத்துக்கொண்ட நெறிகள்

1) சிவபூசை - விசேட தீக்கை பெற்றுத் தினமும் சூரிய உதயத்தில் ஆன்மார்த்த படிகலிங்க மூர்த்திக்கு ஆனைந்துத் திருமஞ்சனத்துடன் 1008 போற்றி மலர் வழிபாடு.

2) எழில் ஞானபூசை - திருமுறைகளையும், சாத்திரங்களையும் ஓதுதல், ஓதுவித்தல்.

3) சிவாலயத் திருப்பணிகள் - அன்றாட, வாராந்தர, மாதந்தர, வருடாந்தர பெருஞ்சாந்திப் பெருவிழாக்கள் நடத்த உதவி செய்தல் - நல்விழாப் பொலிவு காணுதல் - காண்பித்தல்.

அன்புடையீர் வணக்கம்.

செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்கரிய செய்கலா தார். – குறள் 26

பன்னிரண்டாம் திருமுறை – பெரியபுராணம் எனப்படும் திருத்தொண்டர் புராணத்தின் முதற் காண்டத்தின் நிறைவுச் சருக்கமான திருநின்ற சருக்கத்தில் தெய்வச் சேக்கிழார், நம்பியாரூரரின் திருத்தொண்டத்தொகை வாக்குக்கேற்ப ஏழு நாயன்மார்களின் வரலாறுகளை விரித்துரைக்கிறார். முதல்வரான திருநாவுக்கரசரைப்பற்றி ஒரு முழுநூலை மூன்றாம் தொகுதியின் முதல்பாகமாக வெளியிட்டுப் படித்து உணர்ந்தோம். சிவபெருமானின் பரம கருணையால் மூன்றாம் தொகுதியின் இரண்டாம் பாகமான இந்நூலில் குலச்சிறை நாயனார், பெருமிழலைக் குறும்ப நாயனார், காரைக்காலம்மையார், அப்பூதிஅடிகள், திருநீலநக்கர், நமிநந்தி அடிகள் ஆகிய ஆறு நாயன்மார்களைப் பற்றிச் சிந்திக்க உள்ளோம்.

முதல்வரான குலச்சிறை நாயனார் நின்ற சீர் நெடுமாறன் என்ற பாண்டியனின் அமைச்சராக நாட்டை ஆண்டார். இந்த அமைச்சரைப் பற்றி நமது அநபாயனின் அமைச்சரும், பெரியபுராண மூல நூலாசிரியருமான தெய்வச்சேக்கிழார் புராணம் இயற்றுவது எவ்வளவு பெரிய ஒற்றுமை. ஒரு தலைசிறந்த அமைச்சர் இன்னொரு தலைசிறந்த அமைச்சரைப்பற்றி புராணமியற்றுகிறார். குரு, லிங்க, சங்கமம் என்ற மூன்று வழிபாடுகளிலும் தலைசிறந்து வாழ்ந்தவர் பெருநம்பி குலச்சிறையார். நம்பி என்றாலே ஆடவர்களில் மிக உயர்ந்த பண்புகளை உடையவர் என்று தமிழகராதி சொல்வதை நாமெல்லாம் அறிவோம். இவர் பெருநம்பி எனப்படுவதிலிருந்து அவர் பெருமையை நாம் உணரலாம். சாதாரண மனிதர்கள் எவரையும் பாடாத திருஞானசம்பந்தசுவாமிகள் மங்கையர்க்கரசியாருக்கும் குலச்சிறையாருக்கும் ஒரு பதிகமே பாடுகிறார். ஒரு பாடலை அரசியாருக்கும், அடுத்த பாடலை அமைச்சரான குலச்சிறையாருக்குமாக தலா 5 பாடல்களைப் பாடி பதிகப்பயன் கூறிப் பதிகத்தை நிறைவு செய்கிறார். அதில் அவரின் சங்கம வழிபாட்டைக் கீழ்க்கண்ட பாடல்களில் குறிப்பிடுகிறார்.

வெற்றவே யடியா ரடிமிசை வீழும் விருப்பினன் – குலச்சிறை 3-120-2

கணங்களாய் வரினுந் தமியராய் வரினு மடியவர் தங்களைக் கண்டால்
குணங்கொடு பணியும் குலச்சிறை குலாவும் கோபுரஞ் சூழ் மணிக்கோயில் 3-120-4

நலமிக ராக நலமதுண் டாக நாடவர் நாடறிகின்ற
குலமில ராகக்குலமதுண் டாகத் தவம்பணி குலச்சிறை பரவும் 3-120-6

நாவணங்கி யல்பா மஞ்செழுத்தோதி நல்லராய் நல்லியல்பாகும்
கோவணம் பூதி சாதனங் கண்டாற் றொழுதெழு குலச்சிறை போற்ற 3-120-8

தொண்டரா யுள்ளார் திசைதிசை தோறுந் தொழுதுதன் குணத்தினைக் குலாவக்
கண்டுநா டோறு மின்புறு கின்ற குலச்சிறை கருதி நின்றேத்த 3-120-10

"இப்படியும் ஒரு அமைச்சர் அடியார் வழிபாடே ஆண்டவன் வழிபாடு என்று வாழ்கிறார்" என்று திருஞானசம்பந்தர் பதிவு செய்கிறார். இது ஓர் அபூர்வமான நிகழ்வு. திருஞானசம்பந்தர் சங்கம வழிபாட்டை வலியுறுத்த குலச்சிறையார் சரிதத்தைப் பயன்படுத்திக் கொள்கிறார் என்றால் குலச்சிறையார் பெருமையை என்னவென்று சொல்வது? எழுதித் திருப்தி அடைய முடியுமா?

குலச்சிறை நாயனார் மிகவும் புண்ணியம் செய்தவர். அடியவர் வழிபாட்டை மிகச் சிறப்பாக செய்ததால் குருவாகச் சம்பந்தப் பெருமானே கிடைக்கப் பெறுகிறார். குருவும், சங்கமமும், செவ்வனே கிடைக்கப்பெற்றதால் ஆலவாய் இலிங்கத்தின் அருளும் கிடைக்க குரு, லிங்க, சங்கம வழிபாடுகள் நிறைவெய்தி வீடுபேறு பெறுகிறார். வன்தொண்டே இல்லாமல் மென்தொண்டு புரிந்தே அமைச்சராக நாடாண்டு கொண்டே வீடுபேறடைந்த குலச்சிறையாரின் வரலாற்றைப் பதினொரு பாடல்களில் பாடுகிறார் தெய்வச்சேக்கிழார்.

திருநின்ற சருக்கத்தின் மூன்றாவது நாயகரான பெருமிழலைக் குறும்பரும் அடியார் – குரு வழிபாடுகளின் மூலமாகத்தான் வீடுபேறடைகிறார். அவருடைய சங்கம வழிபாடுகளைத் தெய்வச் சேக்கிழார் கீழ்க்காண் பாடல்களில் பதிவு செய்கிறார்.

தொண்டர் பலரும் வந்து ஈண்டி உண்ணத்தொலையா அமுதூட்டிக்
கொண்டு செல்ல இருநிதியம் முகந்து கொடுத்துக் குறைந்தடைவார். (12–1708)

இத்தன்மையராய், இவர் நிகழ்ந்து விளங்கியதால்

நம்பியைப் பணிந்து, பாதம் நினைக்கும் நியமத்தலை நின்றார். (12–1709)

நாளும் குருவான நம்பி ஆரூரர் நாமம் நவின்ற நலத்தாலே
அணிமாசித்தி அணையப்பெற்றார். (12–1711)

நாயன்மார்களின் நாமங்களே ஐந்தெழுத்துக்கள் என்று போற்றப்படும். அவை ஆசாரிய ஐந்தெழுத்து எனப்படும். "நம்பியாரூரர்" என்ற திருவைந்தெழுத்தை ஓயாமல் தியானித்து அதனால் யோகப்பயிற்சி பெற்று யோக முயற்சியால் தாம் நினைத்தபோது கபால நடுவாயிலைப் பிரணவத்தால் திறக்கச்செய்து அதன்வழி மேலேறிச் சென்று சிவனடி சேர்ந்து பெருமை பெற்றவர் பெருமிழலைக் குறும்பர். அவரைப்பற்றிய பதினொரு பாடல்களையும் இந்நூலில் படித்துணர்ந்து மகிழ உள்ளோம்.

இந்நூலில் பேசப்படும் மூன்றாவது அடியாரும் அடியார்கள் வழிபாட்டைச் சிறப்புறச் செய்தே அரனருளைப் பெற்றவராவர். பெரியபுராணத்தில் பேசப்படும் மூன்று பெண்ணடியார்களில் ஒருவரான காரைக்கால் புனிதவதி அம்மையார் முற்பிறவியிலேயே இருவினை ஒப்பு – மலபரிபாகம் – சத்திநிபாதம் அடைந்த மாமுனி. எஞ்சிய மிகக்குறைந்த வினைக்கழிவுக்காகவும், நாம் பதிகமும், அந்தாதியும் பெற்றுய்யவும் சிவபெருமானால் தென்னாட்டிற்கு அனுப்பப்பட்டவர்.

"பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்து நின்சேவடியே சேர்ந்தேன்"

என்று முதல் பாடலிலேயே தமது வரலாற்றைப் பாட ஆரம்பித்து விட்டார்.

தமது மனையின்கண் வந்தணையும் அடியார்க்கு அன்புடன் அமுதமூட்டியும், பொன் – மணி – துகில் முதலியவற்றில் வேண்டுவனவற்றை அளித்தும் சிவநெறியில் நின்றவர் அம்மையார். சிவனடியாருக்கு ஊட்டும் உணவு இறைவன் உண்டதாகும். இறைவரிடம் வேண்டிப்பெறும் நல்வரங்களாவன பிறவாமையும் அவரை மறவாமையுமேயாம். என்றும் மீளாது சிவனது ஆனந்த நிறைவினுள் அடங்கி அம்மகிழ்ச்சியில் அமிழ்ந்து கிடத்தல் முத்தி நிலையாம். அதனையே குறிக்கொண்டு பெற முயலுதல் அறிவு பெற்ற நம் போன்றோர் கடமை என்று காரைக்காலம்மையார் வரலாற்றை 66 பாடல்களில் நிறைவு செய்கிறார் தெய்வச்சேக்கிழார்.

நால்வரின் பதிகப்பெருவழிக்கு வித்திட்டவர் அம்மையார் என்று சொல்லுவார்கள். இறைவன் ஆணையால் பேய் வடிவு பெற்ற பின் பாடியவை அற்புதத் திருவந்தாதியின் பாடல்களும், திருவிரட்டை மணிமாலையுமாகும். கயிலை சென்று வந்தபின் திருப்பதிகங்கள் பாடுகிறார். அனைத்துப் பாடல்களும் இந்நூலில் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

சாதாரண மானுட உடலோடு பாடாது – பூத உடல் நீங்கிப் புனித உடல் பெற்றுப் பாடியதால் "எனதுரை தனதுரையாக" என்று திருஞானசம்பந்தர் திரு இலம்பையங்கோட்டூர்ப் பதிகத்தில் பாடுவதுபோல, இவை சிவபெருமானின் திருவாக்குகளாகும்.

நம்பியாரூரரையே தியானித்து பெருமிழலைக் குறும்பர் வீடுபேறடைந்ததைப் போல திருநாவுக்கரசரையே தியானித்து வீடுபேறடைந்தவர் அப்பூதியடிகளாவர்.

இச்சருக்கத்தில் இடம்பெறும் ஐந்து ஆண் நாயன்மார்களும் மூவர் காலத்தில் வாழும் பேறு பெற்றவர்கள்.

குலச்சிறை நாயனாருக்கு	குரு	திருஞானசம்பந்தர்
பெருமிழலைக் குறும்பருக்கு	குரு	சுந்தரர்
அப்பூதி நாயனாருக்கு	குரு	திருநாவுக்கரசர்
திருநீலநக்கருக்கு	குரு	திருஞானசம்பந்தர்
நமிநந்திஅடிகளை	அப்பர்	பாடுகிறார்

"என்றும் அழியாப் பெருஞ்செல்வமானது திருநாவுக்கரசு நாயனாருடைய இனிய திருவடிகளே" என்று மனமார்ந்த வகையில் அன்னதானம், தண்ணீர் பந்தல், குளம், சோலை முதலிய அறங்களை அத்திருவடிகளை வாழ்த்தி ஒருமுறை கூடக் காணாத நிலையிலும் அப்பெயரால்

செய்து வைத்து பெரியோர்களது பெயரைத் தம் மக்களுக்கும் மற்றும் உடைமைகளுக்கும் இட்டு வழங்குதல் அப்பெரியோரை வழிபடும் முறைகளுள் ஒன்று என்று பெருவாழ்வு வாழ்ந்து, அப்பெரியவரையே தியானப் பொருளாய்க் கொண்டு பல நாள் வழிபட்டு அழைத்து வந்தால், ஒரு நாள் அவர்கள் அத்தவங்கூட்டி வைக்கத் தாமாக வந்து வெளிப்பட்டுக்கூடுவர் என்ற உண்மை அப்பூதி அடிகள் சரிதத்தால் நிரூபிக்கப்படும் வண்ணம் அப்பரடிகள் அப்பூதியடிகள் 'இல்லத்துக்கு' அவர் அழைக்காமலே சென்று அமுது செய்தார். அவரைப் பதிகத்திலும் வைத்துப்பாடினார். பதிகத்தில் இடம்பெறும் பேறு பெரும் பேறாகும். பிள்ளை "இப்போது இங்கு உதவான்" என்று மங்கலம் பேசி அடியார் பூசை செய்து குருவருள் பெற்றுத் திருவருளடைந்த அப்பூதியடிகள் புராணத்தை 45 பாடல்களில் தெய்வச் சேக்கிழார் நிறைவு செய்கிறார்.

திருநீலநக்க நாயனார் மறையவர் குலத்தாராயினும் விதிப்படி சிவதீக்கை பெற்றுச் சிவனையே தமது ஆன்ம நாயகராகக் கொண்டு சிவாகம விதிவழி ஆன்மார்த்த பூசை செய்யும் மகாசைவராகிய வேதியர் என்பது "மெய்த்த வாகம விதி வழி வேத காரணரை நித்தல் பூசனை புரிந்தெழு நியமஞ் செய்தே" என்ற 1833ஆம் பாடலால் அறியலாம். அயவந்தி நாயகரைப் பரார்த்த பூசையன்றி ஆன்மார்த்தமாகப் பூசை செய்தவர். திருநீலகண்ட யாழ்ப்பாணர் தேவியுடன் நடுமனை வேதியின் அருகில் பள்ளிகொள்ளச் செய்ய செந்தீ வலஞ்சுழி எழுந்தது இவர் தவப்பெருமையை நிரூபிக்கும் அற்புதச் செயலாகும். ஆளுடைய பிள்ளையாருக்கும் உடன் வந்த பல்லாயிரம் அடியார்கட்கும் வளம் பெறத் திருவமுது ஊட்டும் பெரும் பேறு பெற்றவர். ''வேதம் நான்கினும்'' மெய்ப்பொருளான திருவைந்தெழுத்தை அன்பு செய்தும், அத்திருவைந்தெழுத்தினையே கேட்டும் திருவடி சார்ந்த இந்நாயனாரது புராணம் முழுமையும் (பாடல்கள்) ஐந்து சீருடைய கலிநிலைத்துறை ஒன்றினாலே பெற யாத்த கவித்திறத்தை எப்படிப் புகழ்வது ? நல்லூர்ப் பெருமணத்தில் ஆளுடையப்பிள்ளையார் திருமணமங்கலத்துடன் இவரது வரலாற்றை முழு மங்கலத்தோடு சேக்கிழார் நிறைவு செய்கிறார்.

சிவபெருமான் திருவருளால் நீரால் விளக்கெரித்த நமிநந்தி அடிகளின் பெயர் 'நம்பிநந்தி' என்றும் 'நந்தி' என்றும் தேவாரத்தில் குறிக்கப்பட்டுள்ளது. அடிகள் என்பது பெரியோர்களைக் குறிக்கும் சிறப்புப் பெயர். அருநம்பி "தொண்டர்க்காணி" என்று, திருத்தொண்டின் பெருமையை அளவு காணுதற்குக் கருவியாயமையும் பண்புடைய பெரியார் எனத் திருநாவுக்கரசர் போற்றும் அருமைப்பாடு குறித்தது. நமிநந்தி அடிகள் நித்தமும் தவறாது (எந்நேரமானாலும்) சிவபூசை செய்து சிவம் பேணும் திறத்தை ஒரு அற்புதமான பாடலின் மூலம் தெய்வச் சேக்கிழார் பதிவு செய்கிறார்.

வாய்மை மறைநூல் சீலத்தால் வளர்க்கும் செந்தீ எனத் தகுவார்
தூய்மைத் திருநீற்று அடைவே மெய்ப்பொருள் என்று அறியும் துணிவினார்
சாமகண்டர் செய்யகழல் வழிபட்டு ஒழுகும் தன்மை நிலை
யாம இரவும் பகலும் உணர்வு ஒழியா இன்பம் எய்தினார். – (பெ.பு. 1870)

மேன்மை விளங்கும் திருவாரூர் வீதி விடங்கப் பெருமான்தாம்
மான அன்பர் பூசனைக்கு வருவார் போல வந்தருளி
ஞான மறையோர் ஆரூரில் பிறந்தார் எல்லாம் நம் கணங்கள்
ஆன பரிசு காண்பாய் என்று அருளிச்செய்து அங்கு எதிர் அகன்றார்.

– (பெ.பு. 1892)

என்பன போன்ற அருளிப்பாடுகள் நிறைந்த திருநின்றச் சருக்கத்துப் புராணங்களை வழிபாட்டு நூலாக வெளியிட்டுக் கருத்தரங்கு நடத்தத் திருவருள் கூட்ட இதுவரைப் பதிப்பித்து வெளிவந்துள்ள நமது பன்னிரு திருமுறை ஆய்வுமைய நூல்களை கீழ்க்கண்டவாறு பட்டியலிடுகிறோம்.

முதல் திருமுறை	டிசம்பர் 27, 28 - 2014
இரண்டாம் திருமுறை	பிப்ரவரி 21, 22 - 2015
மூன்றாம் திருமுறை	ஏப்ரல் 18, 19 - 2015
நான்காம் திருமுறை	ஜீன் 27, 28 - 2015
ஐந்தாம் திருமுறை	ஆகஸ்டு 29, 30 - 2015
ஆறாம் திருமுறை	அக்டோபர் 24, 25 - 2015
ஏழாந் திருமுறை	டிசம்பர் 26, 27 - 2015
எட்டாம் திருமுறை	பிப்ரவரி 27, 28 - 2016
எட்டாம் திருமுறை	ஏப்ரல் 23 - 2016
ஒன்பதாம் திருமுறை	ஏப்ரல் 24 - 2016
பத்தாம் திருமுறை	ஜீன் 26, 27 - 2016
பத்தாம் திருமுறை	ஆகஸ்ட் 27, 28 - 2016
பத்தாம் திருமுறை	அக்டோபர் 22, 23 - 2016
பதினொன்றாம் திருமுறை	டிசம்பர் 24, 25 - 2016
பதினொன்றாம் திருமுறை	பிப்ரவரி 18, 19 - 2017
பதினொன்றாம் திருமுறை	ஏப்ரல் 29, 30 - 2017
பதினொன்றாம் திருமுறை	ஜுன் 24, 25 - 2017
பன்னிரண்டாம் திருமுறை (முதல் தொகுதி)	ஆகஸ்டு 26, 27 - 2017

பன்னிரண்டாம் திருமுறை (இரண்டாம் தொகுதி)	அக்டோபர் 28, 29 - 2017
பன்னிரண்டாம் திருமுறை (மூன்றாம் தொகுதி- முதல் பாகம்)	டிசம்பர் 23, 24 - 2017

ஏழு தொகுதிகளாகப் பெரியபுராணத்தைப் பதிப்பிக்கத் திருவருள் கூட்டுவித்த நிலையில் சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் பதிப்பித்த உரை இருக்க இன்னொரு உரை புதிதாக எழுத முயற்சிக்க வேண்டிய தேவையில்லை என அடியார் பெருமக்கள் நினைத்ததற்கேற்ப அப்பதிப்புரிமை பெற்றிருந்த சி.கே.எஸ் அவர்களின் குடும்பத்தினரை அணுகினோம். அவர்களும் மனமுவந்து ஒருமுறை மட்டும் பதிப்பிக்க அனுமதி அளித்தார்கள். அப்பதிப்புரிமையைக் கட்டிக் காத்துவரும் திரு. கண்ணாயிரம், திருமதி. மங்கையர்க்கரசி கண்ணாயிரம், திரு. சிவசுப்பிரமணியம் ஆகியோர்களுக்கும் மனமுவந்த நன்றிகளை உரித்தாக்குகின்றோம். அம்முறையில் மூன்றாவது தொகுதியின் இரண்டாம் பாகமாக **1946, 1964, 1980** ஆம் ஆண்டுகளில் சிவக்கவிமணி அவர்கள் குடும்பத்தாரால் வெளியிடப்பட்ட இந்நூலை நான்காம் முறையாக மறுபடியும் வெளியிட்டுக் கருத்தரங்கம் நடத்தத் திருவருள் கூட்டுவித்த நிலையில் கீழ்க்காண் அட்டவணைப்படி நிகழ்வுகள் நடைபெறும்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

பன்னிரண்டாம் திருமுறை (மூன்றாம் தொகுதி - இரண்டாம் பாகம்)

வழிபாட்டுக் கருத்தரங்கம்

திருத்தொண்டர் புராணம்

24.12.2017 ஞாயிறு

நிகழ்ச்சி நிரல்

சொற்பொழிவாளர் நாள்/நேரம்	அமர்வுப் பொருள்		பாடல்கள்
சிவத்திரு சு. **குஞ்சிதபாதம்** அவர்கள் 24.12.2017 ஞாயிறு காலை 10.30-11.00	குலச்சிறை நாயனார் (1695 - 1705)	11	22
	பெருமிழலைக் குறும்பர் (1706-1716)	11	
சிவத்திரு **சிவ. காந்தி** அவர்கள் 24.12.2017 ஞாயிறு நண்பகல் 11.00-01.00	காரைக்காலம்மையார் (1717-1782)		66
சிவத்திரு ப. **குமரலிங்கம்** அவர்கள் 24.12.2017 ஞாயிறு பிற்பகல் 02.00-04.00	அப்பூதியடிகள் (1783-1827)		45
குடவாசல் சிவத்திரு. **இராமமூர்த்தி** அவர்கள் 24.12.2017 ஞாயிறு மாலை 04.00 - 06.00	நீலநக்கர் (1828-1865)	38	71
	நமிநந்தியடிகள் (1866-1897)	32	
	சுந்தரமூர்த்தி சுவாமிகள் (1989)	1	

இரண்டு திங்களுக்கு ஒருமுறை சுமார் பன்னூறு பாடல்கள் கொண்ட ஒரு திருமுறையை முறையாகப் படித்து, அச்சுப்பிழை பலமுறை பார்த்துக் கடின உழைப்பின் பயனாக நூலை வெளியிடும் முனைவர் ப. தமிழரசியைத் தலைவராகக் கொண்டு செயல்படும் தமிழ்த்துறையின் முனைவர் இரா. மதன்குமார், முனைவர் செ. ஆறுச்சாமி உள்ளிட்டோருக்கும், நூலாக்க ஒருங்கிணைப்புப் பணியில் செயலாற்றுகின்ற திரு. ப. வெள்ளிங்கிரி, கணினி நிபுணர்களான திரு.மு. மகேஷ், திரு. து. சசி அவர்களுக்கும், நூலைச் சிறப்பாக அச்சிட்டு வழங்கும் செஞ்சுடர் அச்சகத்தார்க்கும் மனமுவந்த நன்றிகள். அவர்கள் இம்மை, மறுமை, இன்பம் பெறுவார்களாக.

அனைவரும் வருக. சிவனருள் பெறுக.

நன்றி.

அன்பன்,

இராச. வசந்தகுமார்

வேந்தர்

கற்பகம் பல்கலைக்கழகம்

இடம் : கோயமுத்தூர்

நாள் : 01.11.2017

முற்சேர்க்கை (1)

மூன்றாம் தொகுதி - இரண்டாம் பாகம்
படங்களின் அட்டவணை

1. அபயகுல இராச இராச சோழ முடிமன்னர்.
2. குலச்சிறை நாயனர் - நின்றசீர் நெடுமாற நாயனர் - மங்கையர்க்கரசி யம்மையார் - திருஞானசம்பந்த நாயனர். மதுரையில் உள்ள திருவுருவங்கள்.
3. பெருமிழலைக் குறும்ப நாயனர்.
4. மேற்படி அவரது திருக்கோயிலும் குடவரையும் மலையும்.
5. மேற்படி திருக்கோயிலிலுள்ள முனிவர் ஒருவரின் திருவுருவம்.
6. மேற்படி திருத்தலத்திற்குச் செல்லும் வழிகாட்டும் படம்.
7. காரைக்காலம்மையார் திருக்கோயில் - காரைக்காலில் உள்ளது.
8. அம்மையார் திருவுருவம். மேற்படி
9. அம்மையார் இறைவரது திருவடியின்கீழ் இருக்கும் திருவுருவம்.
10. திங்களூர்த் திருக்கோவில்.
11. திருநாவுக்கரசு நாயனார் தண்ணீர்ப்பந்த ரிருந்த இடத்தில் இப்போதுள்ள திருமடம்.
12. மேற்படி திருமடத்தில் அமைந்துள்ள அப்பூதியார் சரிதம் காட்டும் படம்.
13. திருப்பழனம் - திருக்கோயில்.
14. திருப்பழனம் - விமானமும் சண்டீசர் கோயிலும்.
15. திருச்சாத்த மங்கை - அயவந்தித் திருக்கோயில்.
16. திருநீலநக்க நாயனாரும் மனைவியாரும்; மேற்படி கோயிலில் உள்ள திருவுருவங்கள்.
17. திரு அரநெறித் திருக்கோயில்.
18. நமிநந்தியடிகள் நாயனார் திருவுருவம் - திருஏமப் பேரூர்த் திருக்கோயிலில் உள்ளது.
19. நமிநந்தியடிகள் நாயனார் நீர் எடுத்து விளக்கெரித்த (திருவாரூர்) சங்கு தீர்த்தக் குளம்.
20. திருவாரூர்க் கமலாலயத் திருக்குளமும், ''பூங்கோயி''லும்.

உ

சிவமயம்

முற்சேர்க்கை (2)

மூன்றாம் தொகுதி - இரண்டாம் பாகத்தின் முன்னுரை

இவ்வெளியீட்டில் இதற்கு முன் மூன்று முறை முன்னுரை எழுத நேர்ந்தது. இப்பகுதி, முதற்பாகம் முன்னுரையில் அதுவரை நிகழ்ந்த வரலாறுகள் குறிக்கப்பட்டன. அதனை எழுதியபின் இப்போது இரண்டு ஆண்டுகளும் நான்கு மாதங்களும் கழிந்தன. அதனுள் $1\frac{1}{2}$ ஆண்டுகளாகக் காகிதம் ஒரு சிறிதும் பெற வழியின்றி அச்சுவேலைமுற்றும் நின்று பட்டிருந்தது; ஆதலின் இந்த இரண்டாம் பாகம் வெளிவர மிக மிகத் தாமதமாயிற்று; இதனை அச்சு உருவத்தில் நிறைவேறக் கண்டு களிப்போமா? இதனுள் புராண முதற் காண்டமாவது நிறைவேறி வெளிவருதல் காண்போமா? என்று எண்ணமிட்டிருந்த என் கருத்தை இவ்வளவிலேனும் முற்றுவித்தருளியது சிவபிரான் திருவருளாம்.

1. பொருளடக்கம்

இதனுள் 22 குலச்சிறை நாயனுர் புராணம் முதல் 27 நமிநந்தியடிகள் நாயனுர் புராணம் வரை 6 புராணங்களின் மூலமும் உரையும் வெளிவருதலால் இதனுடன் திருநின்ற சருக்கம் முற்றுப்பெறுகின்றது; புராணம், முதற் காண்டமும் நிறைவாகின்றது. காரைக்காலம்மையார் அருணூல்கள் நான்கனுள் 'அம்மை மூத்த திருப்பதிகங்கள்' என்னும் திருவாலங்காட்டுத் திருப்பதிகங்களிரண்டற்கும் ஏனைத் தேவாரத் திருப்பதிகங்களுக்குப் போலப் பதிகக் குறிப்பும் திருப்பாட்டுக் குறிப்புக்களும் தரப்பட்டன. அவரது அற்புதத் திருவந்தாதிக்கும் திருவிரட்டை மணிமாலைக்கும் முழுதுக்கும் உரை எழுதி அவர் திருப்பாதங்களிற் பணிசெய்ய வேண்டுமென்ற அவாவினுல் அவைகட்கு உரையும் விசேடக் குறிப்புக்களும் எழுதி அவர் புராணத்தில் பிற்சேர்க்கையாகச் சேர்த்துள்ளேன். திருவந்தாதியைப் பற்றிய சில குறிப்புக்களும் இறுதியிற் றந்துள்ளேன்.

2. படங்கள்

குலச்சிறை நாயனுர் புராணத்துக்குரிய மணமேற்குடித் திருக்கோயில் முதலிய உருவங்கள் கிடைக்கவில்லை. ஆதலின் மதுரையில் உள்ள அவரது திருவுருவம் மட்டில் ஆளுடைய பிள்ளையார் - நின்ற சீர்நெடுமாறர் - அவரது தேவியார் திருவுருவங்களுடன் சேர்த்து ஒரே படமாகப் பொறித்துள்ளேன். திருமணமேற்குடிப் படங்கள் கிடைப்பின் பின்னர்ப் பிள்ளையார் புராணத்தில் உரிய இடத்தில் வெளியிட எண்ணியுள்ளேன். இந்த மதுரைப் படம் எடுத்துதவியவர் எனது மாப்பிள்ளையும் மதுரைச் சில்லா பஞ்சாயத்து ஆபீசரும் ஆகிய திரு. T.S. மீனுட்சிசுந்தர முதலியார், B.A., அவர்கள். பெருமிழலைக் குறும்ப நாயனுர் புராணப் படங்களை அத்தலத்துக்குச் சென்று எடுத்து உதவியும், அத்தல யாத்திரைப் படம் எழுதி உதவியும் உபகரித்தவர் எனது உற்ற உறவினரும் சேக்கிழார் குடித்தோன்றலுமாகிய திரு. B. வைத்தியலிங்க முதலியார் ஆவர்; காரைக்காலம்மையார் புராணப் படங்களைத் தமது சொந்தச் செலவில் எடுப்பித்தவர் அவ்வூர்ச் சார்பதிவாளர்

"சிவநேசர்" திரு. C. இராச கணபதி பிள்ளை அவர்கள். இது மட்டுமன்றி அம்மையார் புராணம் தனிப் பதிப்புக்கும் ரூ. 150 அனுப்பி அன்புடன் உதவினூர்கள். அப்பூதியடிக நாயனூர் புராணப் படங்கள் பெறும் பொருட்டு அங்கு இருமுறை சென்று படங்கள் எடுப்பித்தும் தலக் குறிப்புக்கள் எழுதியும் கும்பகோணம் உயர் சைவத் திருவாளர் குமாரசாமி செட்டியாரவர்களும்; அவ்வாறே திருச்சாத்த மங்கைப் படங்களை எடுப்பித்தும், திருஏமப்பேறூர்ப் படங்களை எடுக்க உடனிருந்து உதவியும் திருவாரூர் வக்கீல் திரு. K. சண்முகம் பிள்ளையவர்களும் பேருதவி புரிந்துள்ளார்கள். இவற்றுக்கு அவ்வக் கோயிலதிகாரிகளும் அன்புடன் விடையளித்தனர். இவ்வெளியீட்டுக்குப் பொள்ளாச்சித் தாலூக்கா தென்சித்தூர் ஸ்ரீ மீனூட்சி சுந்தரேசுவரர் கோயில் சொந்தக்காரர்கள் ரூ. 200 அன்புடன் அளித்து ஊக்கப்படுத்தினூர்கள். இவர்களுக்கெல்லாம் எனது மனமார்ந்த நன்றி செலுத்துகின்றேன்.

3. தனிப் பதிப்புக்கள்

இவற்றுள், காரைக்காலம்மையார் புராணம் காரைக்கால் சார்பதிவாளர் "சிவநேசர்" திரு. C. இராச கணபதி பிள்ளையவர்கள் உதவியினூலும், அப்பூதியடிக நாயனூர் புராணம், பண்ருட்டி மிராசுதார் திரு. A.C. இராசகோபால் செட்டியார் அவர்கள் உதவியினூலும் தனிப் பதிப்புக்களாகவும் வெளிவந்துள்ளன. ஆனூல் அப்பூதி நாயனூர் புராணம் தனிப் பதிப்பு வெளிவருமுன் அன்பர் A.C. இராசகோபால் செட்டியார் அவர்கள் சிவபதமடைந்து விட்டமை பற்றி மிக வருந்துகின்றேன்.

4. பல அன்பர்களின் உதவி

முன் பகுதிகளில் உதவி புரிந்த எல்லா அன்பர்களும் இப்பகுதியிலும் முன்போலவே உதவி புரிந்தார்கள். அப்பூதி நாயனூர் புராணம் தனிப் பதிப்பு வெளியிடும் முயற்சியிலும், இப்பகுதிக்கு அச்சுக்கு வேண்டிய காகிதம் அவ்வப்போது மிக்க சிரமம் கொண்டு பெறும் முயற்சியிலும் திருத்துறையூர் திருநாவுக்கரசு சுவாமிகள் சைவ சித்தாந்தக் கழகத் தலைவர் திரு. K. ஆறுமுக நாயனூர் அவர்கள் பெரிதும் உதவியுள்ளார்கள். இவர்கள் எல்லோருக்கும் எனது நன்றி உரியது.

5. பிரிவாற்ருமை

எனது உரை வெளியீட்டுக்குப் பக்கத்துணையாகி அவ்வப்போது வேண்டிய திருத்தங்களைச் செய்துபகரித்து வந்த என் நண்பர் பறங்கிப்பேட்டை வித்வான் சைவத் திரு. ச. பெரியசாமி பிள்ளை அவர்கள் இப்பகுதி வெளிவருமுன் சிவபதமடைந்து விட்டார்கள். அதனூல் இவ்வெளியீடு ஒரு பெரிய உதவியை இழந்துள்ளது. இவ்வெளியீட்டில் மிகப்பெரிய அருட்கடைக் கண்ணேக்கம் வைத்தும், திருநாவுக்கரசு நாயனூர் புராணம் முற்றும் தமது ஆதீனத் தனிப் பதிப்பாக வெளிவரச் செய்தும், மேலும், அவ்வப்போது வேண்டிய அருளாணைகள் செய்தும் உதவி புரிந்தருளியவர்கள் திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரவாதீனம் 24-வது பட்டத்திலெழுந்தருளியிருந்த மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக பரமாசாரிய சுவாமிகளாவர். அப்பர் சுவாமிகள் புராணம் போலவே திருஞானசம்பந்த நாயனூர் புராண முற்றும் வெளிவருவதிலும் மேலும் இவ்வுரை வெளியீட்டிலும் பெரிதும் கருத்துச் செலுத்தி அடியேனை ஊக்கப்படுத்தி வந்தருளினூர்கள்

இவர்களும் இப்பகுதி இரண்டாம் பாகம் வெளிவருமுன் சமாதியெய்தி யருளினூர்கள். இவர்களது பிரிவுபற்றிய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

6. வரும் பகுதிக்குத் தோற்றுவாயும் நன்றியும்

இனி வரும் IV - V பகுதிகளில் திருஞானசம்பந்த நாயனுர் புராணம் தொடங்கி நிறைவாக்கி வெளியிடத் திருவருட்டுணை கொண்டு எண்ணியுள்ளேன். திருநாவுக்கரசு நாயனுர் புராணத்தைப் போலவே இதனைத் தனியாகத் தாமே ஏற்று வெளியிட முன்வரும் அன்பர்களைக் காணேன். இப்புராணத்தை, சீகாழிப் பன்னிரு பெயர்களால் பன்னிரு தொகுதிகளாக்கி வெளியிட நினைக்கின்றேன். அவற்றுள் திருஞானப் பாலுண்டருளிய வரலாறுள்ள முதற் றெகுதியைத் தருமபுர ஆதீனம் 25-ஆவது பட்டம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் தமது ஆதீனத் தனிப் பதிப்பாக வெளியிட மனமுவந்து கட்டளையிட் டருளியுள்ளார்கள். ஏனைப் பகுதிகளுக்காகச் சீகாழிப்பெருநிலக் கிழவர்களான சைவத் திருவாளர்கள் திரு. S. சுப்பராய முதலியார் அவர்கள் ரூ. 300-ம், திரு. S. சதாசிவ முதலியார் அவர்கள் ரூ. 250ம், திரு. S. சீனிவாச முதலியார் அவர்கள் ரூ. 200-ம், திரு. S. திருவேங்கடம் பிள்ளை அவர்கள் ரூ. 200-ம், அன்புடன் உதவியுள்ளார்கள். இவர்கள் எல்லோருக்கும் எனது நன்றி உரித்தாகுக.

மேல்வரும் தொகுதிகள் எவ்வித இடையூறுமின்றி விரைவில் வெளிவரத் திருவருள் துணை செய்வதாக.

கோயம்புத்தூர்
சேக்கிழார் நிலையம்
23-8-1946

C.K. சுப்பிரமணிய முதலியார்
பதிப்பாசிரியர்

உ

திருச்சிற்றம்பலம்

முற்சேர்க்கை (3)

மூன்றாம் தொகுதி - இரண்டாம் பாகம்

மூன்றும் பதிப்பின் முன்னுரை

பெரியபுராணப் பேருரையை மறுபதிப்பிட்டு வெளியிடும் பொறுப்பு 1961 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் என் மேலதாயிற்று. அதற்கான ஆயத்தங்களைச் செய்து வந்தேன். உரைநூல் பகுதிகளில் மூன்றும் பகுதியின் இரண்டாம் பாகம் முழுவதும் விற்பனையாகி விடவே, அதை மீண்டும் அச்சிட்டு அதன் இரண்டாம் பதிப்பை 12-3-1964இல் வெளியிட்டேன். அதன்பின் பதினறு ஆண்டுகள் ஆறுதிங்கள் கழிந்து விநாயகர் சதுர்த்தி நன்னுளாகிய இன்று இதன் மூன்றும் பதிப்பு வெளிவருதல் திருவருளின் துணையாலேயாகும்.

இடைப்பட்ட இந்தப் பதினறு ஆண்டுகளுக்கும் மேற்பட்ட கால எல்லையில் இவ்வுரை நூலின் முதல் ஆறு பகுதிகளை ஒவ்வொன்ருக மறு பதிப்பிட்டு வெளியிட்டு வந்துள்ளேன். ஒவ்வொரு பகுதியின் மறுபதிப்பின் போதும் காகித விலையும், அச்சுக்கூலியும் பிற செலவுகளும் பன்மடங்கு உயர்ந்து இப்பணியை அரியதாக்கின. சைவ உலகத்திலும், தமிழ் இலக்கியத்திலும் இவ்வுரை தனக்கென்று ஒரு தனியிடத்தை நிறுவிக்கொண்டுள்ளது. இதன் பெருமையை அறிந்த அன்பர்கள் பலர் இவ்வுரை நூல்களைப் பெறப் பெரும் ஆர்வம் காட்டிவந்தனர். திருவருள் துணையும் அவர்கள் ஈடுபாடுமே இப்பதிப்பு வெளிவருவதில் எனக்கு உதவின.

இவ்வுரை நூலின் ஏனைய பகுதிகளின் மறுபதிப்புக்களை அச்சிட்டுதவிய சென்னை, இராயப்பேட்டை திரு. மு. நாராயணசாமி முதலியார் அவர்களே இப்பகுதியையும் தமது முருகன் அச்சகத்தில் சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்துள்ளார்கள். அவர்களுக்கு எனது நன்றி உரித்தாகுக.

இவ்வுரை நூலின் இறுதிப் பகுதியும் விரைவில் வெளிவரத் திருவருள் துணைபுரிவதாக.

க. மங்கையர்க்கரசி

சேக்கிழார் நிலையம்
371, வைசியாள் வீதி
கோயம்புத்தூர்
PIN - 641 001
13-9-1980

முற்சேர்க்கை (4)

பெயர் விளக்கம்

(எண்கள் - பெரிய புராணப் பாடல் எண்கள்)

அணிமா - எண்வகைச் சித்திகளுள் முதலாவது (1711)

ஆண்டவரசு - திருநாவுக்கரசு நாயனார்; (1783 - 1801) வாக்கின் வேந்தர் (1785) திருநாவுக்கரசர் (1786, 1798, 1818, 1825) வாகீசர் (1785 - 1800) முனிவர் (791) கோதின் மொழிக் கொற்றவனார் (1794) அன்பர் (1815) பெரியவர் (1816) நாவினுக்கரசர் (1817) சொல்லரசர் (1820) அந்தமிழாளியார் (1828) நாவின் மன்னர் (1824) அருந்தவர் (1808) தொண்டர் (1810) தொண்டனார் (1812).

அப்பூதியார் - அப்பூதியடிகளுயனார் - 63 நாயன்மார்களுள் ஒருவர். சரிதச் சுருக்கம். பாடல் எண் 1827ன் விளக்கவுரைக்குப் பின் பார்க்க.

அப்பூதியடிகளார் - 63 நாயன்மார்களுள் ஒருவர். அப்பூதியடிகளார் (1789 - 1791) அப்பூதியார் (1827) பெருந்தவ மறையோர் (1822) மாதவ மறையோர் (1824).

அயவந்தி - திருச்சாத்தமங்கையிலுள்ள சிவபெருமானது திருக்கோயிலின் பெயர் (1884).

அரநெறி - சோழநாட்டில் தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று, திருவாரூர்ப் பூங்கோயிலினுள் தென்கீழ்த் திசையில் உள்ள தனிக்கோயில். நமிநந்தியார் திருப்பணி செய்ததும் அவர் நீரால் விளக்கெரித்த சரித நிகழ்ச்சி நடந்ததுமாகிய தலம். தலவிசேடம் பார்க்க.

அற்புதத் திருவந்தாதி - காரைக்காலம்மையார் பேயாகிய சிவபூத கணவடிவு பெற்றுக் கயிலைக்குச் செல்லும் வழியில் பாடியருளிய நூல். 100 வெண்பாக்களால் ஆகியது. நூலும் உரையும் பார்க்க. பக்கம் (157 - 201)

ஏமப்பேறூர் - நமிநந்தியடிக ளுயனாரது தலம். தலவிசேடம் பார்க்க.

கன்னிநாடு - பாண்டியநாடு - தமிழ்த்திரு நாடு.(1758)

காவிரிநாடு - சோழநாடு. பொன்னித் திருநாடு. (1828)

காரைக்கால் - (1717) காரைக்காலம்மையார் தலம். தலவிசேடம். பக்கம் 156.

காரைக்காலம்மை - பேயார் - 63 நாயன்மார்களுள் ஒருவர். சரிதச்சுருக்கம் 1782ம் பாடலுக்குப் பின் பார்க்க - புனிதவதியார் (1718).

குலச்சிறை நாயனார் - 63 நாயன்மார்களுள் ஒருவர். குலங் காப்பவர் என்பது சொற்பொருள். சரிதச் சுருக்கம். பக்கம் 28

குறும்பனூர் - *(1707)* பெருமிழலைக் குறும்பநாயனூருக்கு மரபால் வந்தபெயர்.

கொடுங்கோளூர் - *(1712)* கழறிற்றறிவார் என்னும் சேரமான் பெருமாள் நாயனூர் அரசாண்ட தலைநகரம். சேர நாட்டில் உள்ளது. அவர் புராணம் பார்க்க.

திருக்கயிலை - *(1715)* சிவபெருமானது திருமலை. திருமலைச் சிறப்பும், திருநாவுக்கரசு நாயனூர் புராணம் *(1612-1647)* பாட்டுக்களும் பிறவும் பார்க்க. திருமலை - வெள்ளிமலை *(1769 - 1712)*. கயிலை வெற்பு - *(1771)*.

திருச்சாத்தமங்கை - *(1828)* சோழநாட்டில் பாடல்பெற்ற தலங்களுள் ஒன்று. திருநீலநக்க நாயனூரது தலம், தலவிசேடம் பார்க்க.

திருத்தொண்டத் தொகை - *(1709)* திருவாரூர்ப் பெருமான் அருளால் ஆளுடைய நம்பிகள் அருளிய திருப்பதிகம். திருத்தொண்டர் புராணத்துக்கு முதனூல். ஏழாம் திருமுறையில் இடம்பெற்றுள்ளது.

திருநீலகண்டப் பெரும்பாணர் - *(1851)* திருநீலகண்ட யாழ்ப்பாணநாயனூர் 63 நாயன்மார்களுள் ஒருவர். திருவெருக்கத்தம் புலியூரில் பாணர் மரபில் அவதரித்தவர். யாழ் வாசித்தலிற் சிறந்தவராதலின் யாழ்ப்பாணர் எனப் பெறுவர். திருவாலவாயில் இறைவர்பால் இருந்து யாழ் வாசித்தற்குப் பொற் பலகையிடப்பெற்றவர். திருஞான சம்பந்தரின் நட்புப் பெற்று அவர் திருக்கூட்டத்துடனே பல தலங்களிலும் சென்று அவர் திருப்பதிகங்களை யாழிலிட்டு வாசித்துப் பிரிவின்றிச் சேவித்து வந்தவர். இவர்தம் தாயார் பிறப்பிடமாகிய திருத் தருமபுரத்தில் இவர் வேண்டுகோளின்படி யாழிலடங்கா வகை யாழ்மூரிப் பதிகத்தைப் பிள்ளையார் பாடியருளிய வரலாறுபற்றி அவர்தம் புராணம் 444 - 453 பாட்டுக்கள் பார்க்க. பிள்ளையாரது திருமணத்தில் அவருடனே திருக்கூட்டத்தில் இறைவரடி சேர்ந்தார். சகோட யாழ்த் தலைவர். *(1858)*.

திருநீலநக்கநாயனூர் - *(1831)* 63 நாயன்மார்களுள் ஒருவர். சரிதச் சுருக்கம் *(1865ம் பாடல் நிறைவில் பார்க்க)* திருநீலநக்கனூர். *(1856)*.

திருமணலி - *(1887)* திருவாரூருக்கு அருகில் 7 நாழிகை யளவில் உள்ள ஒருசிற்றூர். அங்குத் திருவாரூரினின்றும் இறைவர் திருஎழுச்சி செல்லும் சிறப்பு முன்னாளில் நிகழ்ந்தது.

திருவாரூர் - *(1871)* சோழநாட்டுத் தலம். தலவிசேடம் பார்க்க.

திருவாலங்காடு - *(1777, 1778, 1779)* தேவாரப் பாடல்பெற்ற தொண்டை நாட்டுத் தலங்களுள் ஒன்று. அம்மையார் மூத்த திருப்பதிகங்க ளிரண்டினூலும் பாடல்பெற்ற தலம். இறைவரது மேல்எடுத்த திருவடியின்கீழ் அம்மையார் பாடிக்கொண்டு என்றும் வாழ்ந்திருக்கும் தலம். தலவிசேடம் III (I) 1607 ஆம் பாடலுக்குக் கீழ் பார்க்க.

திருவிரட்டைமணிமாலை - *(1769)* காரைக்காலம்மையார் சிவபூத கணவடிவு பெற்றுக் கயிலைக்குச் செல்லும் வழியில் பாடியநூல்; கலித்துறையும் வெண்பாவுமாக விரவி அந்தாதித் தொடையாக வரும் இருபது பாட்டுக்களா லாகியது. நூலும் உரையும் பார்க்க. (பக்கம் 202)

திருப்பழனம் - *(1793, பழனமூதூர் 1824)* சோழநாட்டில் தேவாரப்பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. தலவிசேடம் பார்க்க.

நமிநந்தியடிகள் நாயனார் - *(1869)* 63 நாயன்மார்களுள் ஒருவர். சரிதச் சுருக்கம். தொண்டர்க்காணி. *(1896)*

நாகை - *(1722)* நாகப்பட்டினம்; கடற்றுறைமுகப் பட்டினம், சோழநாட்டுத் தலங்களுள் ஒன்று. தலவிசேடம் பார்க்க.

நாவலூராளி - (திருத்தொண்டர் திருவந்தாதி - 27) சுந்தரமூர்த்திகள் நம்பி *(1709)* நம்பியாரூரர் *(1711)* வன்றொண்டர் *(1712)* பரவைகேள்வன். *(1716)*

நிதிபதி - *(1723)* காரைக்காலம்மையாரது கணவனுடைய தந்தை.

நெடுமாறன் - *(1702)* பாண்டிய அரசர். கூன்பாண்டியரா யிருந்து திருஞானசம்பந்தரது திருவருளால் நின்றசீர் நெடுமாற நாயனாராயினவர். மங்கையர்க்கரசியாரின் கணவனார். இவர்பால் குலச்சிறையார் அமைச்சராயிருந்து இவரைச் சமணத்தினின்றும் ஏற்றிச் சைவத்திற் கொணர்ந்தனர்.

பகலவன் - *(1855)* சூரியன்.

பரம தத்தன் - *(1744)* காரைக்காலம்மையாருடைய கணவன்.

பரவையார் - *(1716)* ஆளுடைய நம்பிகளது இருதேவியார்களுள் முதல்வர். வரலாறு, திருமலைச் சிறப்பிலும் தடுத்தாட்கொண்ட புராணத்தும், ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணத்தும், கழறிற்றறிவார் புராணத்தும், வெள்ளானைச் சருக்கத்தும் பார்க்க.

பாண்டிமா தேவியார் - *(1703)* மங்கையர்க்கரசி யம்மையார்.

பிரமநாடி - *(1715)* சுழுமுனை நாடி - இடபிங்கலை - இவற்றோடு சேர்த்திமூன்று நாடிகளாக யோகசாத்திரத்துட் பேசப் பெறுவது.

பிள்ளையார் - திருஞானசம்பந்த நாயனார். சண்பை மன்னர் *(1850)*; காழி வள்ளலார் *(1854)*; புகலியார் பெருமான் *(1851)*; கவுணியர் தலைவர் *(1859)*; புதிய செந்தமிழ்ப் பழமறை மொழிந்த பூசுரனார் *(1860)* சேவின் மேலவர் மைந்தராம் திருமறைச் சிறுவர் *(1862)*; சண்பை யாளியார் *(1863)*.

புக்கொளியூர் - *(1898)* திரு அவிநாசி; கொங்கு நாட்டில் தேவாரப்பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. நம்பிகள் முதலைவாய்ப் பிள்ளை யழைத்தருளிய அற்புதம் நிகழ்ந்த தலம்.

புற்றிடங்கொள் புனிதர் *(1884)*; திருவாரூர்த் திருமூலட்டான நாதர், மணிப்புற்றிலிருந்தார். *(1896)*.

பூந்தராய் *(1849)* சீகாழியின் 12 பெயர்களுள் 6-வது பெயர்.

பெருநம்பி - *(1669)* முன்னுள் வழங்கிய சிறந்ததொரு குலப் பட்டப்பெயர். 'பெருநம்பி குலச்சிறை'.

பெருமிழலை - *(1706)* பெருமிழலைக் குறும்ப நாயனுர் தலம். தலவிசேடம் பார்க்க.

பெருமிழலைக்குறும்பர் - *(1707)* அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர். சரிதச் சுருக்கம் பார்க்க.

மணமேற்குடி - *(1695)* குலச்சிறை நாயனுர் தலம்; தலவிசேடம் பார்க்க.

மிழலைநாடு - *(1706)* பெருமிழலைக் குறும்ப நாயனுரது நாட்டின் பெயர்.

மூத்த திருநாவுக்கரசு - *(1805)* அப்பூதியடிகளின் மூத்த மகன்.

மூத்த திருப்பதிகம் - *(1779)* அம்மையார் பாடிய திருவலாங்காட்டுத் திருப்பதிகங்களிரண்டின் பெயர். தேவாரங்களின் முன் பதிகம் என்ற அமைப்பில் முதலிற் பாடிய படியால் **மூத்த** பதிகம் எனப்படுவன.

வீதி விடங்கப் பெருமான் - *(1885 - 1892)* திருவாரூர்த் தியாகேசர். திருவாரூர் மன்னர் *(1886)*; தெய்வப் பெருமாள் *(1894)*.


சிவபெருமான் கண்ணுதல் - *(1697)*; சங்கரன் *1698; 1772;* அம்புலியிலகு செஞ்சடையார் *1699;* ஆதிதேவர் *1701;* ஆறணி நாயனுர் *1703;* சென்னிமதியம் வைத்தவர் *1707;* உமையாள் கேள்வன் *1708;* முதல்வர் - *1711;* ஏறுகொடி மேலுயர்த்தவர் *1712;* நஞ்சுண்டவமுது *1713;* தேவர் பெருமான் *1713;* சிவன் *1714;* மூலமுதல்வர் *1715;* கயிலைப்பொருப்பர் *1716;* பணியணிவார் *1719;* விடையவர் *1720;* வளர்மதியம் புனைந்தசடை அண்டர்பிரான் *1721;* பொருவிடையார் *1730;* நம்பர் *1731;* உம்பர்பிரான் *1731;* படவரவம் புனைந்தருளும் பரமனுர் *1733;* வேதங்கள் மொழிந்தபிரான் *1734;* விடையவன் *1735;* உற்ற விடத்துதவும் விடையவர் *1741;* அருளுடையார் *1743;* மைதழையுங் கண்டர் *1744;* ஈசன் *1745;* தேசுடைய சடைப்பெருமான் *1745;* பணியணிவார் *1746;* கொன்றைவார் சடையினுர் *1764;* பரமர் *1665;* மன்றுளாடுவார் *1766;* உமைகோன் *1768;* அண்டர் நாயகனுர் *1770;* தொடையவி ழிகழிமாலைச் சூலபாணியனுர் *1771;* கலையிளந் திங்கட் கண்ணிக் கண்ணுதல் *1772;* நாயகன் *1773;* அங்கணன் *1775;* பரவுவார் பற்றுய் நின்றுன் *1777;* வேதமெய்ப் பொருளானுர் *1778;* மூலங்காணாதார் *1779;* மட்டவிழ் கொன்றையினுர் *1780;* மடுத்தபுனல் வேணியினுர் *1781;* ஆதியோடந்தமில்லான்*1782;* தாண்டவம் புரியவல்ல தம்பிரானுர் *1783;* தம்பிரானுர் *1785;* பொருப்பரையன் மடப்பிடியினுடன் புணருஞ் சிவக்களிறு *1786;* உடையவர் *1786;* ஒரு குன்ற வில்லார் *1793;* ஆறணியுஞ்சடை முடியார் *1794;* நம்மையுடையவர் *1796;* அங்கணர் *1779 - 1847;* மைதிகழ்மிடற்றினுர் *1804;* அண்ணலார் *1817;* சேவுகைத்தவர்

1818; கொந்தவிழ் கொன்றைவேணிக் கூத்தனுர் *1823;* நாதர் *1824;* மெய்ப்பூதியணிந்தார் *1825;* திருத்தில்லை மன்றுளாடும் நவ்வியங்கண்ணுள் பங்கர் *1826;* மான்மறிக் கையர் *1827;* ஆலம் வைத்த கண்டத்தவர் *1831;* விரிபுனல் வேணிநாதர் *1832;* வேதகாரணர் *1833;* அத்தர் *1833;* நாயனுர் *1834;* இறைவர் *1835;* அமுது *1836;* தேடுமாமறைப் பொருள் *1837;* நீண்டபொன்மேருச் சிலையினுர் *1838;* மின்னெடுஞ்சடை விமலர் *1842;* கற்றைவேணியார் *1843;* நஞ்ச முண்டவர் *1844;* பரமர் *1845;* அண்ட நாயகர் *1846;* ஆதிநாயகர் *1847;* விண் பிறங்கு நீர்வேணியார் *1250;* நம்பர் *1856; 1864, 1872;* திங்கள் சூடி *1859;* நம்பிரான் *1860;* சேவின்மேலவர் *1862;* ஈசர் *1869;* சாமகண்டர் *1870;* அடியார் மேற் வெவ்வூறகற்றும் பெருமான் *1871;* தெவ்வூரெரித்த வரிச்சிலையார் *1871;* செம்பொற் புற்றின் மாணிக்கச் செழுஞ்சோதி *1872;* அண்ணலார் *1873;* கையில் விளங்கு கனலுடையார் *1875;* பிறையணிந்த முருகு விரியு மலர்க்கொன்றை முடியார் *1876;* அந்திமதிய மணிந்த பிரான் *1877;* சென்னி மிசைநீர் தரித்தபிரான் *1878;* ஆதிமுதல்வர்; *1879;* மறையின் பொருள் *1880;* விமலர் *1881;* அரவமணிவார் *1881;* அண்டர் பெருமான் *1883;* பூதநாதர் *1884;* வென்றிவிடையார் *1885;* மதிச்சடையார் *1885;* திருவாரூர் மன்னர் *1886;* தேவர்பெருமான் *1887;* புனிதர் *1888;* திங்கண்முடியார் *1889;* தங்கள் பெருமான் *1889;* வேதநாதர் *1890;* தம்பெருமான் *1891;* விண்ணேர் பெருமான் *1891;* வீதிவிடங்கப் பெருமான் *1892;* ஆதிதேவர் *1893;* நாதனுர் *1893;* தெய்வப்பெருமாள் *1894;* மைவைத்தனைய மணிகண்டர் *1894;* பரமர் *1895;* நீறு புனைவார் *1896;* மணிப்புற்றிலிருந்தார் *1896;* சென்னிமதியுந் திருநதியு மலையவருவார் *1897.*

உமாதேவியார் - வண்டுமருவுங் குழலுமையாள் *1081;* வெறிமலர் மேற்றிரு *1735;* தாமரைத் தவிசின் வைகுந் தனித்திரு *1758;* உமை *1768;* கண்ணுதலொருபாகத்துச் சிலைநுத லிமயவல்லி *1772;* அம்பிகை *1773;* நம்பெருமாட்டி *1773;* பொருப்பரையன் மடப்பிடி *1786;* நவ்வியங்கண்ணுள் *1826;* இமயமங்கை *1855;* நாயகி *1856.*




தஞ்சை - இராசராசேச்சரம்.



1. குலச்சிறை நாயனார் 2. திருஞானசம்பந்த நாயனார் 3. நின்றசீர் நெடுமாற நாயனார் 4. மங்கையர்க்கரசி அம்மையார்


திருவாலவாயில் உள்ள திருவுருவங்கள்

(1702-1703-1704- பாட்டுக்கள்)




திருப்பழனம் கோபுரம்

(பாட்டு 1786)




திருப்பழனம் - விமானமும் சண்டீசர் கோயிலும்

(பாட்டு 1793)



"திருநாவுக்கரசு நாயனார் தண்ணீர்ப்பந்தர்"
அப்பூதி நாயனார் அமைத்த இடம்
(பாட்டு 1786)



அப்பூதியார் சரிதங்காட்டத் தண்ணீர்ப்பந்தரில் உள்ள படம்



குலச்சிறை நாயனார் (ஆவணி - அனுசம்)

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

௨௨. குலச்சிறை நாயனார் புராணம் (11 திருப்பாடல்கள்)

தொகை

"பெருநம்பி குலச்சிறைதன் னடியார்க்கு மடியேன்"

- *திருத்தொண்டத்தொகை (4)*

வகை

"அருந்தமி ழாகரன் வாதி **லமணைக் கழுநுதிமேல்**
இருந்தமிழ் நாட்டிடை **யேற்றுவித் தோ**; னெழிற் சங்கம்வைத்த
பெருந்தமிழ் மீனவன் றன்னதி காரி; **பிரசமல்கு**
குருந்தவிழ் சாரன் மண**மேற் குடிமன் குலச்சிறையே**" - (26)

- *திருத்தொண்டர் திருவந்தாதி*

விரி

1695. பன்னு தொல்புகழ்ப் **பாண்டிநன் னுட்டிடைச்**
செந்நெ லார்வயற் றீங்கரும் பின்னயற்
றுன்னு பூகப் புறம்பணை சூழ்ந்தது
மன்னு வண்மையி **னுர்மண மேற்குடி.** 1

புராணம்: குலச்சிறை நாயனரது பண்பும் வரலாறும் கூறும் பகுதி. இனி, நிறுத்த முறையானே, திருநின்ற சருக்கத்தில் இரண்டாவதாகக் குலச்சிறை நாயனுர் புராணங் கூறத் தொடங்குகின்றுர்.

தொகை: பெருநம்பி எனப்படும் குலச்சிறை நாயனரது அடியவர்க்கும் நான் அடியேனுவேன். "**பெருநம்பி**" என்பது முன்னுள் வழங்கிய சிறந்ததொரு குலப் பட்டப்பெயர். "ரகுமரபிற் - பொன்னும் பெருநம்பி குலச்சிறையும்" - தக்கயாகப் பரணி - *211* என்றதும் அதன் உரைக் குறிப்பும் பார்க்க. **நம்பி** - ஆடவரிற் சிறந்தவன். இங்குக் குலங்குறித்தது. இதனுல் நாயனுருடைய மரபும் பேரும் பேசப்பட்டன.

வகை : அருந்தமிழாகரன்.... ஏற்றுவித்தோன் அரிய தமிழாகரராகிய ஆளுடைய பிள்ளையார் செய்த வாதத்தில் தோற்ற சமணர்களைப் பெருமையுடைய தமிழ்நாட்டில் கழுவில் ஏற்றுவித்தவரும்; எழிற்சங்கம்... அதிகாரி - அழகிய முத்தமிழ்ச் சங்கங்களையும் நிறுவிய பாண்டியனது மந்திரியாரும்; பிரசம்... மன் - தேன் பொருந்திய குருந்த மலர்கள் அலர்தற்கிடமாகிய சாரல்களையுடைய மண மேற்குடித் தலைவரும் (ஆனவர்); குலச்சிறையே - குலச்சிறை நாயனுரே யாவர்.

குலச்சிறையே - ஏற்றுவித்தோனும் - அதிகாரியும் - மன்னும் - (ஆவன்) என்று கூட்டிமுடிக்க. தமிழாகரன் - ஆளுடைய பிள்ளையார்; தமிழாகரன் செய்த வாதில் - என்க.

1696. அப்ப திக்கு முதல்வர்வன் **றெண்டர்**தாம்
ஒப்ப ரும்"பெரு நம்பி"யென் றேதிய
செப்ப ருஞ்சீர்க் **குலச்சிறை யார்**;திண்மை
வைப்பி னுற்றிருத் தொண்டின் வழாதவர். 2

தமிழ்நாடு - பாண்டியநாடு; **தமிழாகரன் வாதில்** என்றமையால் வாதம் வென்றவர் பிள்ளையாரென்றும், **ஏற்றுவித்தோன் - மன்** - என்றமையால் அரசநீதி முறையில் தண்டஞ் செய்வித்தவர் என்றும், **இருந்தமிழ் நாட்டிடை** - என்றமையால் நீதிவரம்பு கடவாத ஒழுக்கமுடைய நாட்டில் இச்செயல் நடந்தது நெறி பிறழாத செய்கையேயாம் என்றும் அறிவித்தபடியாம். விரிவுகள் ஆளுடைய பிள்ளையார் புராணத்தினுட் கண்டுகொள்க. **சங்கம் - வைத்த** - பாண்டியர்களது மரபுச் சிறப்பு; **மீனவன்** - இங்கு நின்றசீர் நெடுமாறரைக் குறித்தது; **அதிகாரி** - மந்திரி என்ற பொருளில் வந்தது; மரபும் பெயரும் தொகை நூல் உணர்த்திற்று; அவற்றோடு சரித வரலாறும் திருத்தொண்டும் வகை நூல் வகுத்தோதிற்று; இவை விரித்தபடி விரிநூல் *1702 - 1705*-லும் பிறண்டும் கண்டு கொள்க.

1695. (இ-ள்.) வெளிப்படை. எடுத்துச் சொல்லப்பட்ட பழமையாகிய புகழினையுடைய நன்மைமிக்க பாண்டி நாட்டிலே, செந்நெல் நிரம்பிய வயல்களும் கரும்புப் பயிர்களின் பக்கத்தில் செறிவுடைய கமுகுகளுங் கொண்ட புற இடங்களும் உள்ள, நிலைபெற்ற வளப்பங்களையுடைய நகரம் மணமேற்குடி என்பதாகும்.

(வி-ரை.) பன்னு - பெரியோர்களால் எடுத்துச் சொல்லப்பட்ட.

தொல்புகழ் - "தொன்மைப் புகழ்" (*969*) என்றவிடத்துரைத்தவை பார்க்க.

செந்நெல் - **தீங்**கரும்பு - **துன்னு**பூகம் என்பவற்றின் அடைமொழிகள், நெல்லின் சிறப்புவகையினையும், கரும்பின் சுவைத்திறனையும், கமுகுச்சோலையின் செறிவினையும் உணர்த்தின.

புறம்பணை - நகர் சூழ்ந்த புற இடம், புறம்பணை சூழ்ந்தது - மணமேற்குடி என்க.

வண்மையின் ஆர் - வண்மை - வளப்பம். **ஆர்தல்** - நிறைதல், **வண்மையினார்** - வள்ளன்மையினால் மிக்கோர் என்று கொண்டு குடிச்சிறப்புக் கூறியதாகக் கொள்ளலுமாம். இச்சரிதமுடைய நாயனாரது குறிப்புமாம்.

இப்பாட்டினால் நாட்டுச் சிறப்பும் நகரச் சிறப்பும் குடிச் சிறப்பும் ஒருங்கே கூறியபடி காண்க. *1*

1696. (இ-ள்.) அப்பதிக்கு.... குலச்சிறையார் - அந்த நகரத்துக்கு முதல்வர். வன்றொண்டப் பெருந்தகையார் ஒப்பற்ற "பெருநம்பி" என்று போற்றிய சொல்லுதற்கரிய சிறப்பினையுடைய குலச்சிறையார்; திண்மை...வழாதவர் - (அவர்) திண்ணிய தன்மையினால் திருத்தொண்டின் நிறத்தினின்றும் சிறிதும் வழுவாதவர்.

(வி-ரை.) குலச்சிறையார் முதல்வர்; (அவர்) வழாதவர் - என்று கூட்டுக. **முதல்வர் வழாதவர்** - பெயர்ப் பயனிலைகள். பெயர்ப் பயனிலைகளால் முடித்தது திருத்தொண்டின்

1697. **கார ணங்கண் ணுதற்கன்ப** ரென்னவே
வார மாகி மகிழ்ந்தவர் தாண்மிசை
யாரு மன்பொடு வீழ்ந்தஞ் சலிமுகிழ்த்
தீர நன்மொழி யெய்த விசைத்துளார். 3

பயனுக வினையின்மையைக் குறிப்பாலுணர்த்திற்று. இப்புராண முழுமையும் இவ்வாறே முடிபு காட்டியதும் காண்க.

முதல்வர் - தலைவர் - "மணமேற்குடி **மன்**" என்ற வகைநூற் பொருளை விரித்தவாறு.

பெருநம்பி என்று ஓதிய - சீர் - திருத்தொண்டத் தொகையினுள் "பெருநம்பி குலச்சிறை தன் அடியார்க்குமடியேன்" என்று போற்றிய சிறப்பு. **பெருநம்பி** - குலத்தலைமைப் பெயர். "பெருநம்பி குலோத்பவரான குலச்சிறையாண்டாரும்" (தக்கயாகப்பரணி யுரை). இவர் குலம் திருக்கணக்கர் குலம் என்று அம்மரபுப் புராணம் கூறும்.

ஓதுதல் - எடுத்துப் போற்றுதல். "ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது" (பிள் - தேவா - நமச்சிவாயத் திருப்பதிகம் -1).

செப்பருஞ்சீர் - தியாகேசர் தமது திருவாக்கால் அடியும் பொருளும் எடுத்துக்கொடுக்க அத்திருவருட்டுணை கொண்டு அருளிய பதிகத்துள் இவ்வாறு எடுத்துப் போற்றப்படும் சிறப்பும், செய்து வந்த திருத்தொண்டின் சிறப்புமாம். அத்திருத்தொண்டின் சிறப்புப்பற்றியே இவ்வாறு எடுத்துப் போற்றப்பட்டார் என்பார் "திருத்தொண்டின் வழாதவர்" என்று காரணப் பொருள்பட மேல் விரித்தார். வழாதவர் ஆதலின் ஓதிய என்பது குறிப்பு.

குலச்சிறை - குலங்காப்பவ்ர் என்பது சொற்பொருள். (தக்கயாகப்பரணி யுரை). **திண்மை** - மனத்திட்பம் - மதித்திட்பம் - செயற்றிட்பம் முதலிய எல்லாம் கொள்ளப்படும். "எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார், **திண்ணியா** ராகப் பெறின்" (குறள்) என்ற நிலையில் உயர்ந்த தன்மை. இவரது திண்மையே தென்னவன் உய்வதற்கும் தென்னவனேடும் ஏனை நாடுகளும், திருநீறு சிறத்தற்கும், அமண் இருள் மாய்வதற்கும் காரணமாயினமை குறிப்பு.

திண்மை வைப்பு - திண்மைக்கிருப்பிடமாகிய தன்மை.

திருத்தொண்டு - சிவன் அடியாரிடத்தும் சிவனிடத்தும் முக்கரணங்களாலும் செய்யும் தொண்டு. இவற்றுள் அடியார் தொண்டினை **மேல்வரும்** ஐந்து பாட்டுக்களாலும், அரன்பால் தொண்டினை *1703* -லும் விரிப்பார்.

வழாமையாவது எஞ்ஞான்றும் பிறழாதிருத்தல். 2

1697. (இ-ள்.) காரணம்...என்னவே - சிவனுக்கன்பர்களே காரணமாவார் என்றே துணிந்ததனல்; வாரமாகி மகிழ்ந்து - அன்பு நிறைந்து மகிழ்ந்து; அவர் தாள் மிசை...இசைத்துளார் - அவர்களுடைய திருவடிகளில் மிக்க அன்பொடும் விழுந்து கைகள் கூப்பித் தொழுது அன்புடைய நல்ல மொழிகளைப் பொருந்தச் சொல்லியுள்ளார்; (அக்குலச் சிறையார்).

1698. குறியி னுன்கு குலத்தின ராயினும்
நெறியி னக்குல நீங்கின ராயினும்
அறிவு சங்கரற் கன்ப ரெனப்பெறிற்
செறிவு றப்பணிந் தேத்திய செய்கையார். 4

(வி-ரை.) காரணம் - சிவனருள் பெறுதற்குக் காரணமாவார். அடியார்களிடத்து அன்பு செலுத்திய அளவே சிவனருள் விளைவு உண்டாமாதலால் காரணம் என்றுர். சிவனருள் பெறுதற்கு என்பது இசையெச்சம். இவ்வாறன்றிக், கண்ணு தற்கன்பரென்னுங் காரணத்தால் வாரமாகி என்று கூட்டியுரைப்பினுமமையும்.

என்னவே - என்று கொண்ட அதனுலே; **வாரமாகி மகிழ்ந்து** - என்றதனுல் மனத்தின் செய்கையும், **வீழ்ந்து - முகிழ்த்து** என்றமையால் உடம்பின் செய்கையும், **மொழி - இசைத்துளார்** என்றமையால் வாக்கின் செய்கையும் உடன் கூறினுர். ஆண்டவன் வணக்கம் போலவே அடியார் வழிபாடும் இவ்வாறு செய்யத்தகுவது என்று காட்டியபடியுமாம்.

வீழ்ந்து - அஞ்சலி முகிழ்த்து - அடி வீழ்தல் கும்பிடுதலின் முன் நிகழத்தக்க தென்பது குறிக்க முன் வைத்தார். **அஞ்சலி முகிழ்த்தல்** - சிரத்தின்மேல் கைகூப்பித் தொழுதல். இருகைகளையும் சிரமேற் குவித்தபோது தாமரை மொட்டுப் போன்றிருத்தலின் **முகிழ்த்து** என்றுர். **முகிழ்** - மலரின் மொட்டு.

ஆருமன்பொடு என்றதனை வீழ்தல் - முகிழ்த்தல் - இசைத்தல் என்ற எல்லா இடத்தும் தனித்தனிக் கூட்டுக.

ஈர நன்மொழி - ஈரம் - என்றது பண்பும், **நன்** என்றது பயனும் குறித்தன. **எய்த** - பொருந்த. பொருந்துதல், காலத்துக்கும் - இடத்துக்கும் - அடியார்க்கும் - தமக்கும் பொருந்துதலாம்.

இசைத்தல் - கூட்டுதல் என்றலுமாம். குலச்சிறையார் **இசைத்துளார்** என வினைப்பெயர்ப் பயனிலை. எழுவாய் முற்பாட்டினின்றும் வருவிக்க. இவ்வாறே மேல்வரும் பாட்டுக்களினும் கொள்க. *3*

1698. (இ-ள்.) (அவர்), குறியின்.... ஆயினும் - குறிக்கொண்ட நான்கு குலத்தவர்களாயிருப்பினும்; நெறியின்.... ஆயினும் - நெறிப்படி அந்தக் குலங்களினின்றும் நீங்கினவர்களாயிருப்பினும்; அறிவு... எனப் பெறில் - சங்கரனிடத்திலே தம் அறிவு நிலைபெற்ற அன்பர்களாவார் என்று அறியப்பட்டால்; செறிவுற...செய்கையார் - மனம் செறியும்படி கூடிப் பணிந்து துதிக்கும் செய்கையினையுடையார்;

(வி-ரை.) குறியின் நான்கு குலம் - **நான்கு குல**மாவன அந்தணர் - அரசர் - வணிகர் - வேளாளர் என்பன. **குறியின்** என்றது, அக்குலமும் "(முன்னை) வினை பக்குவ மாங்காறும் சூக்கும கன்மமாய்ப், புத்தி தத்துவம் பற்றுக்கோடாக, மாயையிற்கிடந்து, சாதி ஆயுதப்போகமென்னு மூன்றற்கு மேதுவாய், முறையே சனகம் தாரகம் போக்கியமென்று மூவகைத்தாய்" நிற்குமென்ப (சிவஞானபோதம் 2 "நெல்லிற்குமி" என்ற வெண்பாவின் கீழ்ச் சிவஞானமுனிவர் சிற்றுரை பார்க்க) வாதலின் அந்தக் **குறியின் வழி** உயிர்கள் வந்து

பிறக்கும் குலம் என்க. **குறி** - வினை விளைவாகிய குறி. **நான்கு குலம்** என்று பெரும்பான்மைச் சிறப்புப்பற்றிக் கூறினுரேனும் ஏனைய வேடர் - பரதவர் முதலிய குலங்களையும் உடன்கொள்க.

நான்கு குலம் - வடவர் மதம்பற்றிப் பிறவாறு முரைப்ப.

நெறியின் அக்குலம் நீங்கினர் - ஆயினும் - என்றது "**குலமிலராக**" என்ற தேவாரப் பகுதியைத் தெரித்துரைப்பதாகும்.

அக்குலம் என்றது அந்த "நான்கு குல"த்தினின்றும் எனப்படும்; படவே **நீங்கினர்** என்பது "ஓங்கிய நாற்குலத் தொவ்வாப் புணர்விற் றம்மி னுயர்ந்தனவு மிழிந்தனவுமான சாதி"களை (*1180*) யுடையாரைக் குறிக்கும். இழிந்த சாதியாராயினும் "இலாடத் திட்ட திருநீறுஞ் சாதனமுங் கண்டால்" பணிவர் என்க. ஆகமங்களினும் அநுலோமம் பிரதிலோமம் எனச் சாதிபேதங்கூறுவதும் காண்க. இழிந்த சாதியாராயினும் அடியாரை வழிபடல் வேண்டுமென்ற கொள்கையை வற்புறுத்துவதே "**குலமிலராக**" என்ற தேவாரப் பகுதியின் கருத்து. "மறைசிலம் படியார் மிக்கசீ ரடியார்கள் **யாரெனினும்**", "அன்பரென்பதொர் தன்மையால், நேரவந்தவர் யாவராயினும்" என்ற இடங்களில் வரும் உம்மையால் இழி குலத்தவராயினும் என்று பொருள் தருதலும் காண்க. "புலையரே யெனினு மீசன் பொலன்கழ லடியிற் புந்தி, நிலையரே லவர்க்குப் பூசை நிகழ்த்துத னெறியே" என்பது ஆகம விதியுமாம்.

குலம் இலராக - என்ற தேவாரத்திற்கு ஆசிரியர் **நெறியின் அக்குலம் நீங்கினர்** என்று பொருள் விரித்துக் காட்டியருளினர். குலம் என்பது மக்கட்குப் பலவழியிலும் பிறவியினுல் இன்றியமையாது கூடிப்பற்றுவதொன்று என்பதனைத் தேவாரத்தினுள் **நாடவர் நாடறிகின்ற** என்று அறிவிக்கப்பட்டதும், அவ்வாறு வந்து பற்றினும் அது நெறி வழியே நீங்கவும் உள்ளது என்று புராணத்தினுள் அறிவிக்கப்பட்டதும் காண்க.

குலத்தினராயினும் - குலநீங்கினராயினும் அன்பரெனப் பெறில் - என்றதனுல் **குலம்** என்பதனுல் அன்புநெறி தடைப்படாது என்பதறிவிக்கப்பட்டது.

அறிவு - அறிவினுல்; அறிவை சங்கரற்கு அன்பில் வைத்த அதனுல்.

எனப்பெறில் - பெறுவதன் அருமை குறித்தது. பெற்றபோது - கண்டபோது - கண்டவிடத்து.

செறிவுற - மனத்தாலும் இடத்தாலும் நெருங்கிப் பொருந்த. **செறிவு** - அன்பின் வழிபாட்டின் மிகுதி.

பணித்து ஏந்திய செய்கை - பணிதல் - மனத்தாலும், **ஏத்துதல்** வாக்கினுலும், **செய்கை** - உடலாலும் நிகழ்வன. *442*-ல் உரைத்தவையும் பிறவும் இங்கு நினைவு கூர்க. 4

1699. (இ-ள்.) (அவர்) உலகர்...ஆயினும் - உலக நெறியில் மக்கள் ஆமென்று கொள்கின்ற நலங்களை யுடையவர்களாயினும்; அலகில்....ஆயினும் - அவ்வாறு உலகர் அன்றென்கின்ற தீமைகள் அளவின்றி உடையவர்களாயினும், அம்புலி....அடியாரெனில் - பிறை விளங்கும் சிவந்த சடையினையுடைய சிவபெருமானின் அடியார்களாயினுல்; தலமுற... தகைமையார் - நிலம் பொருந்த வீழ்ந்து வணங்கிப் போற்றுந் தன்மையினை யுடையவர்;

1699. **உலகர் கொள்ளு நலத்தின** ராயினும்
அலகில் தீமைய ராயினு மம்புலி
இலகு செஞ்சடை யார்க்கடி யாரெனிற்
றலமு றப்பணிந் தேத்துந் தகைமையார். 5

(வி-ரை.) உலகர் கொள்ளும் நலம் - உலகநிலை பற்றிய பசுதர்மங்களாகிய அறவொழுக்கம் இவை பசு பாச சம்பந்தமானவை. இவை வேறு; பதி தர்மங்களாகிய நலங்கள் வேறு. உயிர் இறைவனையும் பற்றும்; உலகத்தையும் பற்றிக்கிடக்கும்; உலகத்தைப் பற்றிய நிலையில் அதற்கு விதித்த நலங்கள் பசு தர்மங்களாம். இறைவனைப்பற்றிய நிலையின் வேண்டப்படுவன அவனையே பற்றிய அன்பு நிலைக்களமாகிய தருமங்கள். இவை பதி தர்மங்கள் எனப்பட்டு இறைவனிடத்தும் அடியாரிடத்தும் செய்யப்படுவன. உலகம் பற்றிய நலங்கள் இவற்றுக்குச் சம்பந்தப்படா. உயிர்க் கொலை உலக நிலையில் தீமை எனப்பட்டுப் பாவப் பலன் தந்து நரகில் வீழ்க்கும். ஆயின் அது இறைவனைப் பற்றியபோது உயர்ந்த பதி தர்மமெனப்பட்டுச், செய்தாரையும் செய்யப்பட்ட உயிர்களையும் முத்திப் பலன் தந்து உயர்த்தும், தந்தையைத் தடிந்த சண்டீசர் "அரனார் மகனாராயினார்"; அவராற் றடியப்பட்ட தந்தையும் "சிவலோக மெய்தப் பெற்றான்". கண்ணப்ப நாயனார் - வேட்டையிற் செய்த உயிர்க் கொலைகள், பாவமாகாமல் "ஒளி நின்று கொன்**றருளி**"ய (791) அருளிப்பாடு என்று போற்றப்பட்டன. இயற்பகை நாயனாரும், கோட்புலி நாயனாரும் சிவன் பணிக்கு இடையூறு விளைத்த சுற்றத்தார்களைக் கொன்ற நிகழ்ச்சி கொலைப் பயன் தராது அவ்வவரது நன்மைக் கேதுவாயின வரலாறுகளும் ஈண்டுக் கருதத்தக்கன. "ஏனைய சுற்றத் தாரும் வானிடையின்பம் பெற்றார்" (438); "சிந்தவாள் கொடுதுணித்தார் தீயவினைப் பவந் துணிப்பார்" (கோட்புலி நாயனார் புராணம் - 9). மண்ணைக் கல்லிற் பிராணி படும்; ஆதலால் திருக்குளம் பெருகக் கல்லவேண்டா என்றுரைத்த சமணர்களுக்குப் "பூசு நீறு சாந்தமெனப் புனைந்த பிரானுக் கானபணி, ஆசி லாநல் லறமாவ தறிய வருமோ வுமக்கென்"று அறிவுறுத்திய வகையால் தண்டியடிகள் (தண்டியடிகள் புராணம் - 7) இதன் நுட்பத்தை விளக்கியருளியதும் காண்க.

உலகர் கொள்ளு நலத்தினர் - இதனால் "நாடவர் நாடறிகின்ற நலம்" (மேற்படி - ஆலவாய் - 6) என்ற தேவாரத்தை விளக்கியவாறு. **உலகர்** - நாடவர்; **கொள்ளும்** - நாடறிகின்ற என்பதாம். இங்கு **நாடு** என்பது நாடு**தலை** யுணர்த்தி நின்றது.

அலகில் தீமையர் - நாடவர் நாடறிகின்ற நலமில்லாமையே **தீமை** எனப்பட்டது. "நன்றென்ப சிலவே, தீதென்பசிலவே, யொன்றினும் படாதன சிலவே" (கோயினான் - 32) என்றபடி நன்மை தீமை யிரண்டுமல்லாதவையு முளவாமே! இங்கு "நலமிலராக" என்ற தேவாரத்திற்கு "**அலகில் தீமையர்**" என்று ஆசிரியர் உரை விரித்தது என்னையோ? எனின், அற்றன்று; நாடவர் நாடறிவகையால் உலகர் கொள்ளும் நலங்கள் எல்லாம் வேதத்தினுள் "தர்மங்களைச் செய் - சத்தியத்தைச் சொல்" (தர்மம் சர; சத்தியம் வத) என்ற இரண்டனுள் அடங்க விதிக்கப்பட்டன. அவ்விரண்டினையும் செய்யாமை தீமையேயாம் என்பது ஆன்றோர் துணிபாதலின் நலமில்லார் தீமையரே யாவர் என்று ஆசிரியர் வற்புறுத்திக் காட்டியவாறும். சிறப்பின்மைபற்றித் தீமையர் எனப் பின்வைத்தார். நலமிலராயினும்

1700. பண்பு மிக்கார் **பலரா** யணையினும்,
உண்ப வேண்டி **யொருவ** ரணையினும்,
எண்பெ ருக்கிய வன்பா லெதிர்கொண்டு
நண்பு கூர்ந்தமு தூட்டு **நலத்தினார்;** 6

அன்புநெறி பற்றிப் பணியத்தக்கார் என்பதையும், அவ்வொழுக்கத்துள் நின்றமை குலச்சிறையாரது பெருமை என்பதனையும் வலியுறுத்தும்படி தேவாரத்தினுள் "நலமிலராக" என்று முன்வைத்தோதினர். "சீலமிலரேயெனினுந் திருநீறு சார்ந்தாரை, ஞாலமிகழ்ந் தருநரகில் நண்ணுமை யெண்ணுவார்" (நரசிங்கர் புராணம் - 7) என்றவிடத்து இந்நுட்பம் விளக்கப்பட்டது காண்க.

அம்புலி இலகு செஞ்சடையார் - தீமைபற்றித் தேய்வுற்ற அம்புலிக்கும் அருளிய பெருமானது அடியார்கள் உலக நலமின்மைபற்றி அன்புடையார்களை இகழாது ஏற்றுக்கொள்வது இயல்பே என்பது குறிப்பு.

தலமுற - உடல் நிலம் பொருந்த. இவ்வொழுக்கங் கண்டு உலகம் நன்னெறி பொருந்த என்றும், சிவன் அடித்தலங்களைத் தாம்பொருந்த என்றும் உரைக்க நின்றது.

தகைமை - இதுவே தகுதியுடைய நெறி என்றது குறிப்பு.

நலத்துளர் - சடையாரடியார் - என்பனவும் பாடங்கள். 5

1700. (இ-ள்.) பண்பு....அணையினும் - (அவர்) பண்பினால் மிக்கார்கள் - பெரும் கூட்டத்தாராய் வந்தாலும்; உண்ப...அணையினும் - உண்ணுபவற்றை விரும்பி ஒருவராய் வந்தாலும்; எண்பெருக்கிய....நலத்தினர் - எண்ணுதலில் மிகுதிப்பட்ட அன்பின் திறங்காரணமாக எதிர்கொண்டு அழைத்துக் கொண்டுவந்து நேயம்மிக்குத் திருவமுதூட்டும் நலத்தினை யுடையார்;

(வி-ரை.) பலராய் அணையினும் - ஒருவர் அணையினும் - "கணங்களாய் வரினும் தமியராய் வரினும்" (மேற்படி ஆலவாய் 4) என்ற தேவாரக் கருத்தை விரித்துரைத்தபடி. **பலராய்** -"கணங்களாய்"; **ஒருவர்** - "தமியராய்" என்க.

உண்பவேண்டி - என்பதனை "உண்ப வேண்டிப் பலராய்" என, முன்னுங் கூட்டியுரைக்க இடையில் வைத்தோதினர். **உண்ப** - உண்ணப் படுமவற்றை - உணவுகளை **உண்ப** - உண்ணப்படுவன அகரவீற்றுப் பலவின்பால் வினைப்பெயர். உண்பவேண்டி என்றதனால் அவர்கள் அணைவதன் கருத்துக் கூறப்பட்டது.

பண்பு - அன்புப்பண்பு. இது திருநீறு - கண்டிகை - கோவணம் முதலிய சிவசாதனங்களாலறியப்படும் என்பதனை வரும்பாட்டால் விளக்குவார்.

எண் பெருக்கிய அன்பால் - எண் - எண்ணம்; தியானம். பலகாலும் எண்ணி எண்ணி மனத்தினுட் பெருக்கிய. பேரன்பினால் என்றலுமாம்.

அமுது ஊட்டும் - ஊட்டுதல் - குழவிகளைத் தாய் ஊட்டுதல்போல அன்பு கொண்டு உண்ணச் செய்தல் என்பது குறிப்பு.

1701. **பூதி கோவணஞ் சாதனத்** தாற்பொலிந்
தாதி தேவர்த **மஞ்செழுத்** தாமவை
யோது **நாவணக் கத்தா** லுரைப்பவர்
பாத நாளும் பரவிய பண்பினர்; 7

நலத்தினர் - நலம் - சைவ நலம். இதனினின்றும் வேறு பிரிக்க "**உலகர் கொள்ளு நலம்**" - என்று பிறிதினியைபு நீக்க முன் பாட்டில் உரைத்தது காண்க.

அடியாரை உபசரிப்பவர்களுள்ளும், உலகில் பரவும் புகழ்ச்சிபற்றிச் செய்வோரும், பொருளை அளவுபடுத்திச் செய்வோரும் உள்ளாராதலின் அந்நிலைக்கேற்றவாறு அவர்கள் ஒருவர்வரின் குறைவுபட்டும், பலர்வரின் மிகுதிப்பட்டும், செயல் செய்வர். அல்லது அம்முறை மாறி மிகுதியாயும் குறைவாயும் செய்வர்; இந்நாயனர் அவ்வாறன்றி ஒருவர்வரினும் பலராய்வரினும் ஒன்றுபோலவே நிகழ்ந்தனர் என்பது.

பண்பின் - என்பதும் பாடம். 6

1701. (இ-ள்.) பூதி...பொலிந்து - (அவர்) திருநீறும், கோவணமும், உருத்திராக்கமும் ஆகிய சிவச் சின்னங்களாலே பொலிவு பொருந்தி; ஆதி....உரைப்பவர் - ஆதி தேவராகிய சிவபெருமானுடைய திருவைந்தெழுத்தாகிய அவற்றை, ஓதும் நாவின் வணக்கத்தினல் சொல்பவருடைய; பாதம் - பாதங்களை; நாளும்...பண்பினர் - ஒவ்வொரு நாளும் துதிக்கும் பண்பினை உடையவர்.

(வி-ரை.) அன்பர்கள் என்ற அளவால் அவர்களை வணங்குவார் என்று 1697லும், அவர்கள் குலமிலராயினும் குலத்தவராயினும்; அவர்களைப் பணிகுவர் என்று 1698லும், அவர்கள் உலகர் கொள்ளும் நலமிலராயினும் நலத்தினராயினும் அவர்களை அணுகிப் பணிவர் என்று 1699லும், அவர்கள் உண்ணுதற்காகப் பலராய்வரினும் தனியராய்வரினும் அன்புகூர்ந்து அவர்களை அமுதூட்டுவர் என்று 1700லும் கூறினர். ஆனல் அவ்வாறு அணைபவர்கள் அன்பர்கள் என்றதனை எவ்வாறு குலச்சிறையார் அறிந்து அவ்வாறு வழிபட்டார் என்று கேட்பின், அன்பர்களை அவர் அறிந்த சாதனமிவை என்றுணர்த்த எழுந்தது இப்பாட்டு. இவை திருநீறு - கோவணம் - உருத்திராக்கம் - திருவைந்தெழுத்தை ஓதுதல் என்ற இவை காணப்படுதலேயாம் என்பது.

பூதி - திருநீறு. ஐசுவரியம். சிறப்புக் குறிக்கும் **வி** என்ற முன்னெழுத்துச் சேர்த்து, **விபூதி** - விசேடித்த ஐசுவரியம் என்று தேற்றமாக வழங்கப்படும். அழியாச் செல்வமாகிய முத்தி தருதலின் இவ்வாறு வழங்கப்படும். "முத்தி தருவது நீறு" (தேவா).

சாதனம் - உருத்திர சாதனம் எனப்படும் உருத்திராக்கம்.

கோவணம் - சிவனையன்றி வேறு பற்றுக்கோடில்லாதார் சிவனடியார்களாதலின் அவர்கள் வேறு ஆடை அணிகலன் முதலியவையின்றிக் கீளும் - கோவணமும் உடுத்து ஒழுகுபவர். "ஆரங் கண்டிகை யாடையுங் கந்தையே" (*144*) அன்றியும் கோவணமுடுத்து உழல்வது சிவன் திருவேடமுமாம். "சாம்பற் பூச்சுங்கீ, ளுடையுங் கொண்ட வுருவம்" (பிள் - தேவா - கோலக்கா - *1*); "கொடுங்குழை புகுந்தவன்றுங் கோவண மரைய தேயோ?",

1702. இன்ன நல்லொழுக் கத்தினு; **ரீறில்சீர்த்**
தென்ன வன்னெடு மாறற்குச் சீர்திகழ்
மன்னு **மந்திரி** கட்குமே லாகியார்;
ஒன்ன லார்ச்செற் றுறுதிக்க ணின்றுளார்; 8

"கோவண முடுத்த வாறுங் கோளரவசைத்த வாறுந், தீவணச் சாம்பற் பூசித் திருவுரு விருந்த வாறும்" (தனிநேரிசை), "மன்னு கலை துன்னுபொருண் மறைநான்கே வான்சரடாத், தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ" (திருவா) முதலியவை காண்க.

பூதி-கோவணம் - சாதனத்தாற் பொலிந்து - "நல்லியல்பாகுங் கோவணம் பூதிசாதனங் கண்டால்" (ஆலவாய் - தேவா - 8) என்றதை எடுத்துக் காட்டியவாறு, "நல்லியல்பாகும்" என்ற கருத்தினைப் **பொலிந்து** என்றதனுல் விளங்க வைத்தார்.

ஆதிதேவர் தம் அஞ்செழுத்து - சிவன் திருநாமமாகிய சீபஞ்சாக்கர மகா மந்திரம். **அஞ்செழுத்து ஆம் அவை** - திருவைந்தெழுத்து முழுமையும் கூடி ஓர் மந்திரமாயினும், அதனுள் ஐந்தெழுத்துக்களும் தனித்தனி ஓரோர் பொருளையுணர்த்தி நிற்றலின் **அவை** என்று பன்மையாற் கூறினார். "மன்னுமஞ்செழுத்தாகிய மந்திரந், தன்னிலொன்று வல்லார்" (திருக்குறுந்) என்றதும் காண்க. அதனையே பலமுறையும் பயிலுதலின் பன்மையாற் கூறியதுமாம்.

ஓதும் நாவணக்கத்தால் உரைப்பவர் - "நாவணங் கியல்பா லஞ்செழுத்தோதி" (ஆலவாய - 8) என்ற தேவாரத்தை விளக்கியபடி. **ஓதும்நா** - எப்போதும் பயிற்சியால் ஓதும். "நான் மறக்கினும் சொல்லும் நா" (நம்பி - கொடுமுடி) என்றபடி எப்போதும் சொல்லும் என்க. **வணக்கத்தால் உரைப்பவர்** - "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார்" என்றபடி உரைப்பவர்.

பொலிந்து - என்றதனுல் செய்யும், **வணக்கத்தால்** - என்றதனுல் மனமும், **உரைப்பவர்** என்றதனுல் மொழியும் கூடி முக்கரண வழிபாடும், காண்போர் அறிய உணர்த்தி வைக்கும் பண்பும் காட்டியபடியாம். **பண்பினுர்** - என்ற கருத்துமிது.

1697 முதல் *1701* வரை ஐந்து பாட்டுக்களாலும் **அடியாரிடத்துத் திண்மை வைப்பினுற்** குலச்சிறையார் செய்யும் திருத்தொண்டினியல்பு கூறப்பட்டது. *7*

1702. (இ-ள்.) இன்ன நல் ஒழுக்கத்தினுர் - (அவர்) இவ்வாருகிய நல்லொழுக்கத்தில் நின்றவர்; ஈறில்... மேலாகியார் - முடிவில்லாத சிறப்பையுடைய பாண்டியராகிய நின்றசீர் நெடுமாறனுருக்குச் சிறப்புச் செய்து விளங்கிய மந்திரிகளுள் மேம்பாடாகிய நிலைபெற்றவர்; ஒன்னலார்ச் செற்று... நின்றுளார் - பொருந்தாதவர்களை - பகைவர்களை - அழித்து உறுதி பயக்கும் துறையில் நிலைபெற்றுள்ளார்;

(வி-ரை.) இன்ன நல்லொழுக்கத்தினுர் - முன்னர்க் கூறிப் போந்த ஐந்து திருப்பாட்டுக்களினும் காட்டப்பட்ட திறத்தின் வழாதவர் (*1696*) - இசைத்துளார் (*1697*) - செய்கையார் (*1698*) - தகைமையார் (*1699*) - நலத்தினுர் (*1700*) - பண்பினுர் (*1701*) என்ற ஒழுக்கம்.

ஒழுக்கத்தினர் - முன்னர், வழாமை - தகைமை - நலம் - பண்பு என்று பலவும் குணத்தன்மைகளாற் பண்பு கூறிய ஆசிரியர், அக்குணநலங்களுக்கேற்ற ஒழுக்கத்தினலும் விளங்கினர் குலச்சிறையார் என்று வரலாறும் கூறினராயிற்று. மந்திரியாயினர் என்றும், அடியார்களைக் கண்டாற் குணங்கொடு பணிவார் என்றும், கோவணம் பூதி சாதனங் கண்டாற் றெழுதெழுவார் என்றும், வரலாறும் கூறும் முகத்தால், தேவாரத்தினுள் ஆளுடைய பிள்ளையார் அருளியதனையேபற்றி ஆசிரியர் அவ்வச் செயல்களின் அடிப்படையான அன்பின் பண்புபற்றி முன்னர்க் கூறினர். இங்கு, **இன்ன நல் ஒழுக்கத்தினர்** என்று செயல்பற்றிக் கூறினர். செயல்கள் மேற்கண்டவாறு தேவாரத்தினுள் விரிக்கப் பட்டமையானும், வரலாறுகள் ஆளுடைய பிள்ளையார் புராணத்துள் விரிக்க வேண்டியிருத்தலானும் ஆசிரியர் குறிப்பிற் கூறிப்போந்த திறமும் தேவாரச் சான்றினையே உட்கொண்டு புராணம் வகுத்த திறமும் காண்க. ஒழுக்கத்தின் விரிவு ஆளுடைய பிள்ளையார் புராணத்துட் கண்டுகொள்க.

ஈறு இல் சீர்த் தென்னவன் நெடுமாறன் - "வெள்ளை நீறு அணியும் கொற்றவன்" என்பது தேவாரம். அத்தேவாரம் அருளியபோது நீறணியானுயினும், பின்னர் அணிய நின்றவன் என்று "**அணியும்** கொற்றவன்" என்ற மெய்த்திருவாக்காகிய வேதம் கூறிய சொற்பிழையாது, அவனும் நீறணிந்து சிறந்து ஓங்கி **நெடுமாறனு**மாயினன். இக்கருத்துட்கொண்டு "ஈறில்சீர்" என்றும், "நெடுமாறன்" என்றும் ஆசிரியர் விரித்தனர். பிள்ளையார் தேவாரம் அருளியபோது "**நீறு அணியும்**" என எதிர்காலச் சிறப்புப்பற்றியே பேச நின்றனர் அரசர்; ஆனல் ஆசிரியர் காலத்து அச்சிறப்பும், ஏனைய சிறப்புக்களும் முன்னரே முற்றுப்பேறடைந்தமையால் ஆசிரியர் இவ்வாறு போற்றினர்.

சீர்திகழ் மன்னர் மந்திரிகட்கு மேலாகியார் - "மந்திரியாய" என்ற தேவாரக் கருத்தை விளக்கியவாறு. "**ஆய**" என்ற தேவாரத்துக்கு **மேலாகிய** என்று உரை வகுத்தனர் ஆசிரியர். அரசனுக்கும் அவன்கீழ் வாழும் உயிர்களுக்கும் உலக நிலை பற்றிய நலங்களையே நாடிச்செய்த ஏனைய மந்திரிகள்போலல்லாது, குலச்சிறையார் அவ்விருதிறத்தார்கட்கும் உடலையும் உயிரையும் பற்றிய உயர் நிலையாகிய மேம்பாடுக ளிரண்டனையும் ஒருங்கு தேடித்தருதலே கருத்தாய் நின்றவராதலின், இவரே மந்திரி **யாய**வர்; ஏனையர் அத்துணைச் சிறந்தவராகார் என்பார் **மந்திரிகட்கு மேலாகியார்** என்று பொருள் விரித்தருளினர். ஆசிரியர், தாமும் அவ்வாறே அநபாயச் சோழரின் மந்திரிகளுள் மேலாகிய மந்திரியாராய் நின்று அவரைச் சமணநூற் சார்பினின்றும் நீக்கிச், சைவநூற் சார்புபடுத்தி, உலகுக்கு இப்புராணமாகிய உயர்ந்த ஞானேபதேச காரணராகி நின்ற தன்மை இங்குக் கருதத்தக்கது.

மந்திரிகட்கு மேலாகி மன்னுவார் - என்று கூட்டி உரைத்துக் கொள்க. அமைச்சின் றிறம்பற்றித் தெய்வப்புலவர் திருக்குறளுட் கூறிய குணநலங்களெல்லாம் ஒருங்கே வைத்து ஈண்டுக் கண்டுகொள்க.

ஒன்னலார் - பொருந்தாதார் - பகைவர்; உலக நிலையின் அரசனது ஆணைக்குட்படாது அவனது செங்கோன்மைக்கு இடையூறு விளைத்த பகைவரைக் குறித்து நின்றது. உயர்நிலையாகிய உயிர்பற்றிய நிலையிற் பகைவராய் நின்ற சமணர்களைச் செற்ற திறத்தை மேல் *1704* ல் உரைப்பார்.

1703. ஆய் செய்கைய ராயவ **ராறணி**
நாய ஞர்திருப் பாத நவின்றுளார்;
பாய சீர்புனே பாண்டிமா தேவியார்
மேய தொண்டுக்கு மெய்த்தொண்ட ராயினுர்; 9

உறுதிக்கண் - கோலும் குடியும் உறுதிப் பொருள்பெற்று வாழும் நெறியினிடத்து. உறுதிப் பொருளாவனஅறம் பொருளின்பம் வீடென்பன. "மக்கட்கு உறுதியென உயர்ந்தோரா லெடுக்கப்பட்ட பொருள் நான்கு; அவை அறம் பொருள் இன்பம் வீடென்பன" என்றது திருக்குறள் - பரிமேலழகர் உரைப்பாயிரம்.

உறுதிக்கண் நிற்றல் - அரசர்க்குக் களேகணுய் அறநூல் கூறும் வழி நிற்றல் என்பது ஆறுமுகத் தம்பிராஞருரை.

நின்றுளார் - நிற்றலாவது அரசனது சினம், உலகரது நிந்தை முதலிய எக்காரணத்தாலும் தமது குறிக்கோளாகிய நிலேயினின்றும் சிறிதும் விலகாது நிற்றல். **உளார்** என்ற கருத்துமிது.

ஈறிலா - என்பதும் பாடம். 8

1703. (இ-ள்.) அவர் ஆய செய்கையராய் - அவர் அத்தன்மைத்தாய செய்கையினே யுடையவராகி; ஆறு அணி...நவின்றுளார் - கங்கையைச் சூடிய தலேவராகிய சிவபெருமானது திருப்பாதங்களேயே இடைவிடாது சொல்லும் இயல்பினேயுடையார்; பாய... ஆயினுர் - எங்கும் பரப்பிய சிறப்புடைய மங்கையர்க்கரசி யம்மையாருடைய பொருந்திய திருத்தொண்டினுக்கு உண்மைத் தொண்டராயினுர்.

(வி-ரை.) ஆய செய்கையராய் - ஆய - முன் ஏழு திருப்பாட்டுக்களிலும் கூறிய ஒழுக்கத்தினிகழும் செயல்களேச் செய்பவராகிய. முன் ஆறு பாட்டுக்களினும் குணப்பண்பும், ஏழாவது பாட்டில் அதனுனிகழும் ஒழுக்கப் பண்பும் கூறி, அதன்படி எல்லாச் செயல்களேயும் செய்து நிகழ்பவர் என்பது.

நாயஞர் - தலேவர். அடியார்களுக்கு வழங்கும் இப்பெயரும் இப்பொருள் பற்றியது.

பாத நவின்றுளார் - பாதம் - திருவருள். திருவடித் திருத்தாண்டகத்துக் கூறியருளியவை இங்கு நினேவுகூர்தற்பாலன. திருவருளின் பெருமையினேயே எப்போதும் சிந்தித்து வந்தித்துக் கொண்டுள்ளார் என்றபடி. இதஞல், **திண்மை வைப்பி**னுல் அரனிடத்துக் குலச்சிறையார் செய்யும் திருத்தொண்டின் வழாமை கூறப்பட்டது.

பாய - பரப்பிய. **பாய சீர்** - என்றது திருநீற்றினே நாடெங்கும் பரப்பிய சிறப்பு. "தங்கள் பொங்கொளிவெண் டிருநீறு பரப்பி ஞரை" என்று பின்னர் அவ்வம்மையார் புராணத்துக் கூறுதல் காண்க. **பாய** - தன்வினே பிறவினேப்பொருளில் வந்தது.

மேய - மேற்கொண்ட. **மேய தொண்டு** - "அரும்பெறற் றமிழ்நா டுற்ற, தீங்கினுக்களவு தேற்ருச் சிந்தையிற் பரிவு கொண்டு" (திருஞான - புரா - 604), மன்னனேயும் மன்னுயிர்களேயும் தீமை நீங்கித் திருநீற்றுச் செந்நெறியில் நிற்கச் செய்யும் முயற்சியாகிய திருத்தொண்டு.

1704. புன்ன யத்தரு கந்தர்பொய் நீக்கவுந்,
தென்னர் நாடு திருநீறு போற்றவு,
மன்னு காழியர் வள்ளலார் பொன்னடி
சென்னி சேர்த்தி மகிழ்ந்த சிறப்பினுர்; 10

தொண்டுக்கு மெய்த் தொண்டர் - தொண்டினைக் கை கூடும்படி செய்வதற்கு உரிய எல்லாச் சாதனங்களையும் உண்மைத் தன்மையினுற் செய்வோர். இதனை மேல்வரும் பாட்டிற் கூறுவர். இங்குச் சிற்றினங்கொண்ட சில புல்லர் ஆதரவற்ற புன்மொழிகளால் அம்மையாரைப் பற்றிப் புன்மைப் பொருள் சில புகன்று தமது புன்மையை விளம்பரப்படுத்திக் கொண்டனர். அவ்வெற்றுரைகள் நல்லோரவை முன் சிறிதும் நிலவா என்றொதுக்கப்படுவன. *9*

1704. (இ-ள்.) (*அவர்*) புன்னயத்து...நீக்கவும் - நன்மையாற் குறைவுடைய சமணர்களுடைய பொய்ம்மைகளை நீக்கவும்; தென்னர்...போற்றவும் - பாண்டிய நாடு திருநீற்று நெறியினைப் போற்றியிடவும்; மன்னு....சிறப்பினுர் - பொருந்திய சீகாழியினுர்களது வள்ளலாராகிய ஆளுடைய பிள்ளையாரது பொன்னுர்ந்த திருவடிகளைத் தலையிற் சூட்டி மகிழ்ந்த சிறப்பினையுடையவர்.

(வி-ரை.) பொய் நீக்கவும் - போற்றவும் - சேர்த்தி என்க. **நீக்க - போற்ற** - நீக்குதற் பொருட்டும், போற்றுதற் பொருட்டும் எனக் காரியப் பொருளில் வந்த வினையெச்சங்கள் **சேர்த்தி** - என்ற வினையெச்சத்துடன் முடிந்தன.

புன்னயத்து - நன்மையாற் குறைவுடைய என்க. **நயம்** - நன்மை - நற்பயன் - நீதி இன்பம் என்பவற்றை யுணர்த்தும், "புன்மை யேபுரி யமணர்" (*1344*), "கொலையும் பொய்ம்மையு மிலமென்று கொடுந்தொழில் புரிவோர்" (*1346*), "வஞ்சனை தெரிந்து சித்திரிப்பார்" (*1347*) என்பன முதலியவையும், திருநாவுக்கரசு நாயனுரிடத்தும், ஆளுடைய பிள்ளையாரிடத்தும், தண்டியடிகளுயனுர், நமிநந்தியடிக ளுயனுர் முதலியோர்களிடத்தும் அமணர் செய்த தீமைகள் முதலியனவும் இங்கு நினைவு கூர்தற்பாலன.

தென்னர் நாடு திருநீறு போற்ற - "எல்லாம் அரனுமமே சூழ்க" என்றபடி எல்லா நாடுகளும் திருநீறு போற்றி யுய்யவேண்டுமாயினும், தென்னன் நாடு போல அரசனும் வழுவிச் சைவத்துக்கு இடையூறு விளைக்காமையானும், மங்கையார்க்கரசியாரும் குலச்சிறையாரும் என்ற "இருவர்தம் பாங்கு மன்றிச் சைவம் அங்கு எய்தாமையாகிய" (*திருஞான - புரா - 603*) பெருந்துன்பநிலை பெருமையானும், திருநீறு போற்றுதலை மிகுதியும் வேண்டிய காரணம் பற்றித் **தென்னர் நாடு போற்ற** என்றனர். "செய்வகை யிடையே தப்புந் தென்னவன் பாண்டிநாடு" (*திருஞான - புரா - 599*).

காழியர் பொன்னடி சென்னி சேர்த்தி மகிழ்த்த சிறப்பு - அவர்பாற் பரிசனங்களை விடுத்து விண்ணப்பித்தமையாலும், (*திருஞான - புரா - 607*), பின்னர்ப் பிள்ளையார் எழுந்தருளிய பின் நிகழ்த்திய செயல்களாலும் அறியப்படும் சிறப்பு. ஆளுடைய பிள்ளையார் புராணத்துள் விரித்துரைக்கப்படும் தகுதிபற்றி இங்குச் சுருக்கி இவ்வாறு சுட்டின வளவிலமைந்தார். **இந்நாயனுர் குருவருளால் முத்தியடைந்தவர் என்ற குறிப்புமாம்.**

1705. வாதிற் றோற்ற **வமணரை வன்கழுத்**
தீது நீங்கிட வேற்றுவித் தார்திறம்
யாது போற்றினேன்?; மேலினி யேத்துகேன்
வேத நீதி மிழலைக் குறும்பர் தாள். 11

பொய் நீக்கவும் - நீறு போற்றவும் - பொன்னடி சென்னி சேர்த்திய - பாசத்தை நீக்கி விடுதலும், சிவத்தைப் பெறுதலுமாகிய வீடுபேறும் சைவப்பயனு மென்பதும், அதற்குச் சாதனம் குருவின் உபகாரமேயாம் என்பதும், ஆகிய ஞான சாத்திரங்களிற் கண்ட உண்மைகள் இத்திருப்பாட்டிற் குறிப்பினுலுணர்த்தப்பட்ட திறம் காண்க

நீங்கவும் - என்ற பாடம் பிழை. **நீப்பவும்** - என்பதும் பாடம். 10

1705. (இ-ள்.) வாதில் தோற்ற அமணரை - வாதத்தில் தோல்வியுற்ற அமணர்களை; வன்கழு - வலிய கழுமரத்திலே; தீது நீங்கிட ஏற்றுவித்தார் திறம் - தீமை நீங்கும்படி ஏற்றுவித்த குலச்சிறையாரது திறங்களை; யாது போற்றினேன் - இதுகாறும் என்ன அளவில் போற்றி செய்தேன்? (ஒன்றும் போற்றினே னல்லேன்); மேல் இனி - மேலே இனி; வேத நீதி...தாள் - வேத நீதி விளங்கும் பெருமிழலைக் குறும்ப நாயனுருடைய பாதங்களை; ஏத்துகேன் - ஏத்தப் புகுகின்றேன்.

(வி-ரை.) இப்பாட்டினுல் குலச்சிறையாரது சரித வரலாற்றை நிறைவு செய்தும், இதுவரை கூறிப்போந்த புராணத்தை முடித்துக் காட்டியும், இனி மேல்வரும் புராணத்துக்குத் தோற்றுவாய் செய்தும் காட்டியருளிய திறம் கண்டுகொள்க.

வாதில் தோற்ற அமணர் - சுரவாதம், அனல்வாதம், புனல்வாதம் என்றவற்றில் இறுதியாய் புனல்வாதத்திலும் தோல்வியுற்ற எண்ணுயிரம் அமண குருமார். இவர்களே "இதிலும் தோல்வியுற்றேமாயின் இவ்வேந்தனே எங்களை வெங்கழு வேற்றுவான்" என்று தாமே ஒட்டி வாது செய்தார்களாவார்.

கழு - கழுவின்கண்; ஏழனுருபு தொக்கது.

தீது நீங்கிட - மாதவர்களாகிய அடியார்கள் இருந்த திருமடத்தில், நாடித், தீயை இட்ட தீமையாகிய அபசாரம் அவர்களைப் பற்ருது அவர்கள் தீமை நீங்கி உய்யும்படி. அரசன் இறைவன தாணையை நிறுத்துபவனுதலின் நீதியின்படி அரச தண்டனையைப் பெறும் உயிர்கள் தமது குற்றத்தினின்றும் நீங்குவர் என்று நூற்றுணிபு. அமணராற் சைவமாகிய உண்மை நிலைக்கு உளவாகிய தீமைகள் நீங்கிட என்றலும் ஒன்று.

ஏற்றுவித்தார் - அவர்களது இசைவின் படியும், அவர்கள் செய்த அபசாரங்களுக்குக் கழுவாய் வகுக்கும் தகுதியின் படியும், அரசனாணையின் படியும் நீதி முறையினை நிறைவேற்றுவித்த அம்மட்டே அமைச்சு நிலையில் குலச்சிறையார் செய்தனர் என்பது. இதன் விரிவு திருஞானசம்பந்த நாயனுர் புராணம் 853 - 855 பாட்டுக்களிற் காண்க.

திறம் - திண்மை வைப்பினுற்செய்த திருத்தொண்டின் வலிமைத் தன்மை.

யாது போற்றினேன் - அதன் தகுதிக்குரியவாறு யாதும் போற்றினேனல்லேன் என்பது குறிப்பு. வினு இன்மை குறித்தது.

யாது போற்றினேன் மேல்இனி ஏத்துகேன் - இரண்டு வினைகளையும் அடுத்து வைத்தது மேல்வருவதும் அவ்வாறேயாம் என்ற குறிப்புத் தருவதாம். இந்த இரண்டும் பதினொரு திருப்பாட்டுக்களில் அமைந்த அமைப்பும், இரண்டும் அவ்வப் பரமாசாரியர்களது சரிதத்துடனிணைந்து நிற்பதும் பிற ஒற்றுமைப்பாடும் குறிக்க.

வேத நீதி மிழலை - வேதங்களில் விதித்த நியதிகளாகிய ஒழுக்கத்தில் நிகழ்கின்ற இடமாகிய மிழலை. இதனைக் "குறும்பர்" என்றதனுடன் கூட்டி, உபநிடதங்களிற் கூறும் ஞானயோகம் கைவந்தவராதலின் என்பர் ஆறுமுகத் தம்பிரானுர்.

மிழலைக் குறும்பர் - மிழலையின் அதிபராகிய குறும்பர். **குறும்பர்** - சிற்றரசர் குறுநில மன்னர். "குன்றுங் கானு முடைக்குறும்ப ரிடங்க டோறும் குறையறுப்ப" (கழறிற்-புரா-51).

தாள் மேல் இனி ஏத்துகேன் என்று கூட்டி முடிக்க. 11

குறிப்பு:- இச்சரித முழுமையும் தேவார ஆதரவும் ஆட்சியும் பெற்ற சிறப்புடையது.

சரிதச் சுருக்கம்:- பண்டைப் புகழுடைய **பாண்டிநாட்டில்** வளங்கள் மிகுந்த ஊர் **மணமேற்குடி**. அதில் **பெருநம்பி** என்ற மரபில் வந்தவதரித்தவர் **குலச்சிறையார்**. அவர் திருத்தொண்டின் திண்மையிற் சிறந்து அந்நெறியினின்று ஒழுகியவர். அவர் சிவன் அடியார்கள் வரின் அவர்கள் நான்கு குலத்தவ ராயினும், அக்குலமிலாராயினும், உலக நலமுடைய ராயினும், அந்நலமில ராயினும், பலராய்வரினும், தனித்து வரினும், அவர்களை இறைஞ்சி அன்புடன் அமுதூட்டி வழிபடும் ஒழுக்கத்தினின்றுர்.

அவர் நின்றசீர் நெடுமாற பாண்டியர்க்கு மந்திரிகளுட் சிறந்த முதல்மந்திரியாராக இருந்து பகைவரைப் போக்கி நாட்டை இனிது காத்தனர். சிவனடிகளை நாளும் நவில்பவர். பாண்டிமாதேவியராகிய மங்கையர்க்கரசியம்மையாரது திருத்தொண்டுக்குத் தொண்டராகிப், பாண்டிநாடு சமணீங்கித் திருநீற்று நெறியில் வாழும் பொருட்டுத் திருஞானசம்பந்த நாயனுருடைய பொன்னடிகளைச் சார்ந்து மகிழ்ந்தனர். வாதில் தோற்ற அமணர்களை வன்கழுவில் ஏற்றுவித்தார்.

கற்பனை:- 1. பழைய புகழுடைமை நாட்டின் சிறப்புக்களுள் ஒன்று (1695).

2. வள்ளன்மையுடையோர் வாழ்தற் கிடமாவது நகரச் சிறப்புக்களுள் ஒன்று. (1695).

3. திருத்தொண்டின் நெறியில் வழாமையியற்றுதல் திண்மை வைப்பினுல் ஆவது (1696).

4. சிவனடியார்களே உயிர்கள் உய்தி பெறுதற்குக் காரணமாவார் (1697).

5. குறியில் நான்கு குலத்தினராயினும் அக்குல நெறியின் நீக்கியவராயினும்; அன்றி உலக நலமுடையவராயினும் அவையின்றித் தீமைகளுடையோராயினும்; அமுதுண்ண

வேண்டிப் பலராய்வரினும் தமியராய்வரினும், பூதிகோவணம் - சாதனங்களாற் பொலிந்து சிவன் திருவைந்தெழுத்தை நாவணங்கியல்பா லுரைக்கும் அடியாராகில் அவர்களை வணங்கி அமுதூட்டி வழிபடுவது திருத்தொண்டினியல்பு.(1697-1701).

6. குருவருள் கைகூடினுல் பாச நீக்கமும் சிவப்பேறும் வாய்க்கும் (1704).

7. தீமைபுரிந்து வாதிலும் தோல்வியுற்ற தீயோர்களை உரியபடி முறை செய்து ஒறுத்தல் அரசநீதி காரியஞ் செய்யும் மந்திரிகளின் கடமைகளுட் சிறந்தது (1705).

தலவிசேடம்:- மணமேற்குடி - முன்பு பாண்டி நாடாயிருந்து இப்போது புதுக்கோட்டை சில்லாவில் சேர்ந்திருக்கும் அறந்தாங்கி தாலுகாவில் உள்ளது. இன்றும் அப்பெயராலே வழங்குவது. திருஞானசம்பந்த நாயனுர், பாண்டிநாட்டு யாத்திரையில் நெடுமாறர், பாண்டிமாதேவியார், குலச்சிறையார் இவர்களுடனே சென்று தங்கி வழிபட்ட பெருமையுடைய பழவூர். (திருக்கோயில் மிகுந்த கிலமாகியுள்ளது; இப்போது முகமதியர்கள் மிகுதியாய்க் குடியேறியுள்ளனர்). தற்போது இருபத்தொன்றாம் நூற்றாண்டில் திருப்பணிகள் நிறைவு பெற்று, குடமுழுக்குகள் நடந்து திருக்கோயில் பொலிவுடன் விளங்குகிறது.

இஃது ஆவுடையார் கோயிலிலிருந்து தென் கிழக்கில் மட்சாலை வழியாக 16 நாழிகை யளவில் அடையத்தக்கது; திருப்புனவாயிலிலிருந்து வட கிழக்கில் 8 நாழிகையளவில் மிமீசல் போய் அங்கு நின்றும், வட கிழக்கில் 7 நாழிகை யளவிலும் இதனை அடையலாம். வெள்ளாறு முன்னுளிற் பாண்டி நாட்டின் வட வெல்லை யாதலின் இது பாண்டிநாட்டுத் தலமாம் என முன்னுளிற் கணிக்கப்பட்டது.

குலச்சிறை நாயனுர் புராணம் முற்றும்



பெருமிழலைக் குறும்ப நாயனார் (ஆடி - சித்திரை)

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

23. பெருமிழலைக்குறும்ப நாயனார் புராணம் (11 திருப்பாடல்கள்)

தொகை

"பெருமிழலைக் குறும்பர்க்கும் (பேயார்க்கும்) அடியேன்"

- *திருத்தொண்டத்தொகை (4)*

வகை

"சிறைநன் புனற்றிரு நாவலூ ராளி செழுங்கயிலைக்
கிறைநன் கழலுனை யெய்து; மிவனருள் போற்றவின்றே
பிறைநன் முடிய னடியடை வேனென் றுடல்பிரிந்தான்
நறைநன் மலர்த்தார் மிழலைக் குறும்ப னெனுநம்பியே" (27)

- *திருத்தொண்டர் திருவந்தாதி*

விரி

1706. சூத நெருங்கு குலைத்தெங்கு பலவு பூகஞ் சூழ்புடைத்தாய்
வீதி தோறு நீற்றினொளி விரிய மேவி விளங்குபதி
நீதி வழுவா நெறியினராய் நிலவுங் குடியா னெடுநிலத்து
மீது விளங்குந் தொன்மையது மிழலை நாட்டுப் பெருமிழலை. 1

புராணம்: பெருமிழலைக் குறும்ப நாயனுருடைய பண்பும் சரித வரலாறும் கூறும் பகுதி. இனி நிறுத்த முறையானே திருநின்ற சருக்கத்து மூன்ருவது பெருமிழலைக் குறும்ப நாயனுரது புராணங் கூறத் தொடங்குகின்ருர். இளையான்குடிமாறர் என்பதுபோல, பெருமிழலை என்பதும் ஊரும், குறும்பர் என்பது அவருடைய மரபின் பெயருமாம். நாயனுரது இயற்பெயர் விளங்கவில்லை.

தொகை: பெருமிழலைக் குறும்ப நாயனுருக்கும் (பேயார் என்னும் காரைக் காலம்மையாருக்கும்) நான் அடியேனுவேன். திருத்தொண்டத் தொகையினுள் ஒரு பாசுரத்தின் ஓரடியின் பாதியினுள் இரண்டு அடியார்களைச் சேர்த்தும் போற்றிய இரண்டாவது இடம். இவ்வாறு சேர்த்துப் போற்றிய மூன்ருவது இடம் "நாட்டமிகு தண்டிக்கு மூர்க்கர்க்கு மடியேன்" என்ற ஐந்தாவது திருவிருத்தத்துட் காண்க. ஏழாவது எட்டாவது ஒன்பதாவது பதினேராவது திருப்பாட்டுக்களுள் சேர்த்துப் போற்றுவன மற்ருெருவகை.

வகை : சிறை நன்புனல் - முன்னர்ச் சிறையில் தடையுண்டு நின்று பின்னர்ச் சிறை நீங்கிய நற்புனல் கடல் எய்துவதுபோல, திருநாவலூராளி.....எய்தும் - திருநாவலூர்த் தலைவராகிய ஆளுடைய நம்பிகள் செழுங்கயிலாயத் தலைவராகிய இறைவரது நற்கழல்களை நாளை எய்துவர்; "இவனருள்... அடைவேன்" என்று உடல் பிரிந்தான் - "இத்தகையோ ரருளினைப் போற்ற நற்பிறைசூடிய முடியுடைய சிவபெருமானுடைய திருவடிகளை இன்றே அடைவேன்" என்று துணிந்து தமது உடலைப் பிரிந்தனர்; நறை....நம்பியே - தேன் பொருந்தி நன்மலர் மாலை யணிந்த மிழலைக் குறும்பரென்னும் நம்பியே.

சிறை நன்புனல் - முன்னர்ச் சிறையிற்றடைப்பட்டு நின்று, இப்போது அவை தடை நீங்கிப் "பள்ளந்தா முறுபுனல்" என்றபடி தன்வழியே செல்லும் வாய்ப்பு பெற்ற நல்ல புனல்போல. **சிறை** என்றதனுல் முன்னர்ச் சிறைப்பட்ட என்பதும், **நன்** - என்றதனால் இப்போது அச்சிறை விட்ட என்பதும் பெறப்பட்டன. **புனல்** - புனல்போல. **இன்** என்ற உவமப் பொருளில் வருமுருபு தொக்கது. புனல் கடல் எய்துவதுபோல, நாவலூராளி கழல் எய்தும் என்று முடிக்க. எய்தும் என்ற பொருள் வினை புனல் எய்துவதுபோல என உவமையினும் சென்றியைந்தது. **சிறை** - கரை.

கழல் எய்தும் என்றவாற்றால் **கடல்** என்றது உவமையில் வருவித்துக்கொள்க. **கழல்** - கால்; அதில் கட்டப்படுதலாகிய காரணம்பற்றி மணி வடத்துக்கும் பெயராயிற்று. "இடுகுறிக் காரணப் பெயர்" என்ற சூத்திரம் பார்க்க.

நன்கழல் - சிவசத்திக்குக் கேடில்லாமையின், அதனிற் தலைப்பட்டவுயிர் மீண்டும் பிறவியில் மீளுதலில்லையாதலின் **நன்கழல்** என்றார். "உலைவிலரன்பாதம்" (சிவஞானபோதம் 8 - 4 வெண்பா). **கழல்** - மலவாற்றல் தவிர்க்கும் வெற்றிப்பாடு குறித்து நின்றது. கள்ளவினை, வென்றுபிறப் பறுக்கச் சாத்திய வீரக்கழலும்" (போற்றி பஃறொடை).

சிறை நன்புனலின் திருநாவலூராளி கழல் எய்தும் - "வெறுத்தேன் மனை வாழ்க்கையை விட்டொழிந்தேன்" (நம்பி - திருவஞ்சைக்களம்-8) என்று, "பரமரைப் பண்டுதாம் பிரிந்**தெய்தும்** சேய நன்னெறி குறுகிட" (வெள்-சருக்-28), முத்தி விண்ணப்பம் செய்து, ஆளுடைய நம்பிகள் இவ்வுலகப் பிறவியை விட்டுக் கயிலைக் கிறைகழலாகிய மீளா நெறியடைந்த வரலாறும், "சிறை செய்ய நின்ற செழும்புனலி னுள்ளஞ், சிறைசெய் புலனுணர்விற் றீர்ந்து - சிறைவிட், டலைகடலிற் சென்றடங்கு மாறுபோல் மீளா, துலைவிலரன் பாதத்தை யுற்று" என்ற சிவஞானபோதம் 8-ம் சூத் - 4 அதி - உதாரணவெண்பாவின் கருத்தும் முற்றும் பொருந்துதல் காண்க.

சிறை நன்புனல் திருநாவலூர் - என்று கூட்டியும், மேற்சொல்லியவாறன்றிச் "சிறைவான் புனற்றில்லை" (திருக்கோவை) என்புழிப்போலப் **புனல்** என்பதனை ஊர்க்கு அடைமொழியாக்கியும், புனலையுடைய திருநாவலூர் என்றுரைப்பினுமமையும். "ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய்" (தேவா) என்றபடி அணையிற்றேக்கிய நீர்ச்செழிப்பு ஊருக்கு வளம் செய்வதாம்.

இவன் அருள் போற்ற - முடியன் அடிஅடைவேன் - இவன் - கழல் நாளை யெய்தும் இவன் - ஆளுடைய நம்பிகள். அணிமைச்சுட்டு, குறும்பனாருக்கு நம்பிகள் எப்போதும் "கையாற் றொழுது வாய் வாழ்த்தி மனத்தா னினைக்கும்" கடப்பாடு பற்றி அணியராய் நின்றமை யுணர்த்திற்று. நம்பிகளது அருளினைப் போற்றுதற்கென்றே குறும்பனார் நாதனடி யடைவேன் என்று துணிந்தார். இதனைப் "பரவை கேள்வன் பாதமுறக் கயிலைப் பொருப்ப ரடியடைந்த மிழலைக் குறும்பர்" (1715) என்று விரித்தமை காண்க. **போற்ற** - போற்றும் பொருட்டு.

உடல் பிரிந்தான் - நிட்டையிலிருந்தபடியே கபாலமூலம் திறப்ப அதன் வழியே உயிரைச் சிவனடியிற் சேர்த்தினார்.

நாவலூராளி கழல் நாளை எய்தும்; இன்றே இவனருள் போற்றச் சிவன் அடி அடைவேன் என்று உடல் பிரிந்த செய்திகளை விரிநூல் *1713-1714-1715-1716* பாட்டுக்களில் விரித்தது. ஊரும் மரபும் பெயரும் தொகை நூல் உணர்த்திற்று. குருவருள் பெறச் சிவனடி சேர்ந்த வரலாற்றை வகை நூல் வகுத்தது. செய்த திருத்தொண்டும் பிறவும் விரிநூல் விரித்தபடி மேற்கண்டு கொள்க.

1706. (இ-ள்.) *மிழலைநாட்டுப் பெருமிழலை* - மிழலை நாட்டிற் பெருமிழலை என்ற ஊர்; சூதம்... சூழ்புடைத்தாய் - மாவும், நெருங்கு குலைகளையுடைய தென்னைகளும், பலாவும், கமுகுகளும் சூழும் சுற்றுப்புறப் பணைகளையுடையதாகி; வீதி.... மேவி - வீதிகள் தோறும் திருநீற்றின் ஒளிபெருகப் பொருந்தி; விளங்குபதி - விளங்கும் ஊராகும்; நீதி...தொன்மையது - வேதநீதி வழுவாத நல்லொழுக்கத்தில் நின்று நிலவும் குடிகளின் பெருமையால் நீண்ட வுலகில் விளங்கும் பழமையை யுடையது.

(வி-ரை.) சூதம் - தெங்கு - பலவு - பூகம் - எண்ணும்மைகள் தொக்கன.

நெருங்கு குலைத் தெங்கு - குலைகள் நெருங்கியனவும், குலைகளிற் காய்கள் நெருங்கினவுமாகிய தென்னை.

பலவு - பலா. "குறியதன் கீழாக் குறுகலு மதனோ, டுகர மேற்றலும்" என்றபடி, **பலா** என்பது **பலவு** என நின்றது; நிலா - நிலவு என்பது போல. **புடை** - பக்கத்துச் சூழும் புறம் பணை. **புடைத்து** - புடையினையுடையது.

வீதிதோறும் நீற்றினொளி மேவுதலாவது - திருநீற்றினொளி விளங்கும் நெறியினுள்ளார் நிறைந்து விளங்குவன வீதிகள் என்றதாம். **நீதிவழுவா நெறியினர்** என்று இதனை மேலும் விளக்கியவாறும் காண்க.

நீதி வழுவா நெறி - வேதங்களிற் சொல்லிய விதி விலக்குக்களை அறிந்து அந்நெறியிற் பிறழாத ஒழுக்கம். 'வேதநீதி மிழலை' (*1705*) என்று தோற்றுவாய் செய்தது காண்க.

குடியால் - குடிகள் நிறையும் பெருமையினால்.

தொன்மையது - பழமையுடையது. பழமையாவது நீண்ட காலமாகப் பெருமை மாறுது நிலவும் புகழ். 'தொல்புகழ்' (*1695*). அதுவே சிறப்புத் தருவதாம் என்று வலியுறுத்த மேலும் 'தொன்மைத் திருப்பதி' (*1707*) என்பது காண்க.

மிழலை நாட்டுப் பெருமிழலை - மிழலை - நாட்டின் பெயர். **பெருமிழலை** - தலைநகரின் பெயர். **பெருமிழலை** என்ற பெயரால் பல நாடுகளில் பலவூர்கள் உளவாதலின் அவற்றினிடை மயங்காது பிரித்துணர்தற் பொருட்டு **மிழலைநாட்டுப் பெருமிழலை** என்றார். 'மிழலைநாட்டு மிழலை வெண்ணிநாட்டு மிழலையே' (தேவா - நம்பி - திருநாட்டுத்தொகை - இந்தளம் - *5*); சோழநாட்டு வீழிமிழலையும் கருதுக. பெரு என்ற சிறப்பு அடைமொழி வழக்கும் அந்நாட்டின் அப்பெயர் கொண்ட ஏனை ஊர்களினின்றும் பிரித்துணர வைப்பதாம்.

இதனால் நாட்டுச் சிறப்பும் குடிச்சிறப்பும் கூறியவாறு. **பெருமிழலை - விளங்கு பதி; தொன்மையது** என்று முடிக்க. *1*

1707. (இ-ள்.) அன்ன...மிழலைக் குறும்பனார் - அத்தகைய பழமையாகிய திருநகரத்தின்

1707. அன்ன தொன்மைத் திருப்பதிக்க **ணதிபர் மிழலைக் குறும்பனார்**
சென்னி மதியம் வைத்தவர்த மடியார்க் கான செய்பணிகள்
இன்ன வண்ண மென்றவர்தா **முரையா முன்ன மெதிரேற்று**
முன்ன முணர்ந்துசெய்வாராய் **முதிரு மறிவின் பயன்**கொள்வார்; 2

கண்ணே குறுநில மன்னராகிய மிழலைக் குறும்பனார்; சென்னி...செய்வாராய் - தலையிற் பிறையை வைத்த இறைவருடைய அடியவர்களுக்கு ஆயினசெய் பணிவிடைகளை யெல்லாம் இன்னின்னவை என்றும் இன்னின்னபடி என்றும், அவர்கள் தாம் எடுத்துச் சொல்லாத முன்னமே எதிர்கொண்டு விருந்தாக ஏற்று அவர்களது குறிப்புணர்ந்து செய்வாராகி; முதிரும் அறிவின் பயன் கொள்வார் - முதிர்ந்த அறிவு பெற்ற பயனை அடைவாராகி;

(வி-ரை.) அதிபர் - சிற்றரசர் என்ற பொருளில் வந்தது.

குறும்பனார் - குறும்பர் என்னும் சிற்றரசர் மரபினர். இஃது அவரது பெயரன்று. அவரது இயற்பெயர் விளங்கவில்லை.

ஆன - ஆயின. ஞான நூல்களுள் விதிக்கலான. "ஆசையொடு மரனடியா ரடியாரை யடைந்திட் டவர்கரும முன்கரும மாகச் செய்து, கூசிமொழிந் தருண் ஞானக் குறியி னின்று கும்பிட்டுக் கூத்தாடித் தட்டமிட்டுத் திரியே" (சித்தி - 12 - 2) என்றவிடத்துக் குறித்தவை.

ஆன - அவர்கள் விரும்புவன ஆன; வேண்டுவன ஆன என்ற குறிப்புமாம்.

செய்பணிகள் - "கூடுமே நாயடியேன் செய்குற் றேவல்" (தேவா - தாண்) என்ற எண்ணத்துடன் செய்யும் பணிவிடை.

எதிர் ஏற்றலாவது - எதிர்கொண்டு வரவேற்றல்

முன்னம் - என்ற இரண்டனுள் முன்னையது காலத்தையும், பின்னையது குறிப்பையும் உணர்த்தி நின்றன. "முந்தனார் திருவுள்ளத் தெழு**முன்ன** மிக்கறிந்திட்டு" (திருவானைக்காப் புராணம்).

முதிரும் அறிவின் பயன் - முதிர்தலாவது ஏனையவாற்றான் மிக்கிருத்தல். **அறிவின் பயன்** - அறிவு பெற்றதனாலாய பயன். "படைத்தநிதிப் பயன்கொள்வார்", "பெற்ற நீடு பயன்கொள்வார்" முதலியவை காண்க. **இவ்வாறு அடியார்க்கான செய்பணிகள் குறிப்பறிந்து செய்யாதாரும் அறிவு பெற்றிருப்பினும், அறிவினாலாய பயன் பெறுதொழிகுவரே யாவர் என்பது.**

வண்ணம் எதிர் ஏற்று - உவந்து செய்வாராய் - என்பனவும் பாடங்கள். 2

1708. தொண்டர் பலரும் வந்தீண்டி யுண்ணத் தொலேயா வமுதூட்டிக்
கொண்டுசெல்ல விருநிதிய முகந்து கொடுத்துக் குறைந்தடைவார்
வண்டு மருவுங் குழலுமையாள் கேள்வன் செய்ய **தாளென்னும்**
புண்ட ரீக மகமலரில் வைத்துப் போற்றும் பொற்பினுர். 3

1708. (இ-ள்.) தொண்டர்... அமுதூட்டி - தொண்டர்கள் பலபேரும் வந்து கூடி உண்ண உண்ணத் தொலேயாதவாறு அமுதூட்டியும்; கொண்டு...கொடுத்து - எடுத்துக்கொண்டு போகும்படி பெருஞ் செல்வங்களே அள்ளிக் கொடுத்தும்; குறைந்தடைவார் - தம்மைச் சிறியராக வைத்து நடந்துகொள்வார்; வண்டு மருவும்...பொற்பினுர் - வண்டுகள் மொய்த்த கூந்தலேயுடைய உமையம்மையாருக்கு நாயகரது சிவந்த பாததாமரைகளேத் தமது நெஞ்சத் தாமரையில் வைத்துப் போற்றும் நியதியுடையவர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை.) உண்ணத் தொலேயா அமுது ஊட்டி - பலரும் வந்து ஈண்டி உண்ணவும் மாளாத நிலேமையில் அமுதினேப் பெருக உண்பித்து, "அன்ப ரானவ ரளவிலாருள மகிழவே, நாளு நாளு நிறைந்து வந்து நுகர்ந்த தன்மை" (444) என்றதும், பிறவும் காண்க.

கொண்டு செல்ல - எடுத்துக் கைக்கொண்டு போகும்படி.

முகந்து - மிகுதியாக அள்ளி.

குறைந்தடைதல் - அடியார் முன்பு தம்மை மிகச் சிறியராய் வைத்து ஒழுகுதல். "நாதனடி யார்தம்மை நயப்பாட்டு வழிபாட்டால், மேதகையா ரவர்முன்பு மிகச் சிறிய ராயடைந்தார்" (சிறுத்-புரா-15) என்றவிடத்து இத்தன்மை விரிக்கப்பட்டது. **குறைந்தடைந்தார்** - தொலேயா அமுதூட்டியும் நிதியம் முகந்து கொடுத்தும் மனம் அமைவுபட்டு நிரம்புதல் பெருது, மேலும் குறைவின்றிச் செல்லலாஞர் என்ற குறிப்பும் தருவதாம்.

புண்டரீகம் அகமலரில் வைத்துப் போற்றும் பொற்பு - நெஞ்சத் தாமரை மலரில் நியதியாய் நினைந்து பூசிக்கும் தன்மை. "அகனமர்ந்த வன்பினரா யறுபகை செற் றைம்புலனு மடக்கி ஞானப், புகலுடையோர் தம்முள்ளப் புண்டரிகத் துள்ளிருக்கும் புராணர்" (பிள் - வீழி). மணியைப் பொன்னிற் பதிப்பதுபோலத் **தாள்** என்னும் புண்டரீகத்தை அகமாகிய மலரில் வைத்தனர் என்பது. **அகமலரில் - அகம்** - உள்ளம் இருதய கமலம் என்பர். **இதயம்** - பூசைத் தானமாதலிற் **போற்றும்** என்ருர். "அரனே யஞ்செழுத்தா லர்ச்சித் திதயத்தில்" (சிவஞான போதம் - 9 - 3 வெண்பா) என்றதற்குப் "புறம்பே ஞானபூசை செய்யு முறைப்படி இதய பங்கயத்தில் அவ்வஞ்செழுத்தா லமைந்த திருமேனியில் அம்முதல்வனே, அன்பு, கொல்லாமை, ஐம்பொறிகளடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம் என்னும் அட்ட புட்பங்கொண்டு அம்மனுவா லர்ச்சனே செய்து" என்று எமது மாதவச் சிவஞான யோகிகளுரைத்ததனேக் காண்க. அகப்பூசையில் இருதயம், நாபி, புரு மத்தியம் இவற்றை முறையே பூசை, ஓமம், சமாதித் தானங்களாக ஆகமம் விதித்தது. "ஹ்ருத்பதமே பூஜயேத் வித்வாந்" - (சுப்ரபேதம்).

1709. இத்தன் மையராய் நிகழுநா ளெல்லை யில்லாத் திருத்தொண்டின்
மெய்த்தன் மையினை யுலகறிய விதியால் வணங்கி மெய்யடியார்
சித்த நிலவுந் திருத்தொண்டத் தொகைபா டியநம் பியைப் பணிந்து
நித்த னருள்பெற் றவர்பாத நினைக்கு நியமத் தலைநின்றார். 4

போற்றுதல் - ஈண்டு அகப்பூசையில் அருச்சனை செய்தல் என்னும் பொருளில் வந்தது.

பொற்பு - ஈண்டு அன்பின் மிகுதியினையும், ***நியதி*** - வழுவாதியற்றும் முறைமையினையும் குறித்தன. சிறப்புப்பற்றி அடியார் பணியை முன்வைத்தது மன்றிப், பெருக உரைத்தருளிய திறமும் காண்க. நாயனாரது சரிதக் குறிப்புமாம். அதிபர் குறும்பனாராவர்; அவர், பயன் கொள்வாராயும், குறைந்தடைவாராயும் போற்றும் பொற்பினர் என்க.

வருநிதியம் - என்பதும் பாடம். 3

1709. (இ-ள்.) இத்தன்மையராய் நிகழும் நாள் - மேற்கூறிய இத்தன்மையினை யுடையராகி நிகழ்கின்ற நாளிலே; எல்லை இல்லா...உலகு அறிய - அளவுபடாத திருத்தொண்டினது உண்மை நிலையினை உலகு அறியும் பொருட்டு; மெய் அடியார் சித்த நிலவும் திருத்தொண்டத்தொகை - உண்மை யடியாரது சித்தத்துள் நீங்காது நிலைபெற்று விளங்கும் திருத்தொண்டத்தொகைத் திருப்பதிகத்தினை விதியால் வணங்கி - விதிப்படி வணக்கஞ் செய்து; பாடிய நம்பியைப் பணிந்து - பாடியருளிய ஆளுடைய நம்பிகளைப் பணிந்துகொண்டு; நித்தன் அருள் பெற்று...தலைநின்றார் - நித்தராகிய சிவபெருமானது அருள் கூடியதனாலே அவரது திருப்பாதங்களை நியமமாக நினைக்கின்ற நிலையில் சிறந்து விளங்கினார்.

(வி-ரை.) இத்தன்மையராய் நிகழுநாள் திருத்தொண்டின் தன்மையினை உலகு அறிய; வணங்கித், திருத்தொண்டத் தொகைபாடிய நம்பியைப் பணிந்து திருஅருள் பெற்றதனால் அவர்பாதம், நினைக்கும் நியமத் தலைநின்றார் என்று கூட்டி உரைத்துக் கொள்க.

திருத்தொண்டின் மெய்த்தன்மையாவது ***திருத்தொண்டு ஒன்றே உயிருக்கு உறுதி தரும் சிறப்புவாய்ந்து நிலைபெற்று நிற்றல்.***

உலகறிய வணங்கிப் பாடிய என்க. உலகம் தொண்டின் தன்மையினையறிந்துய்ய வேண்டுமென்னும் கருணைப் பெருக்கினால் தாம் விதியால் வணங்கி பாடியருளிய என்பது.

விதியால் வணங்கி - அடியார் திருக்கூட்டத்தைக் கண்டு, இவர்க்கு யான் அடியேனாகப் பண்ணு நாள் எந்நாள் என்று கருதிப் **பரமனார் தாள்களைப்பரவி வணங்கியதும்**, பரமர், "அவர்க்கெதிர் காணக் காட்டும் படியெதிர்தோன்றி"யதும், அவ்வாறு தோன்றிய திருவடிகளை நம்பிகள் பரவி **வணங்கியதும்,** திருத்தொண்டை உணர இறைவர் அவர்க்கு நல்கி, "இவரை நீ அடைவாய்" என்றதும், அதுகேட்ட நம்பிகள் "நான் ஏதந்தீர் நெறியைப் பெற்றேன்" என்று **வணங்கிப்** போற்ற, "இவரை நீ பாடு" என்று நாதர் அருள அதற்கு "நான் யாதினை

அறிந்து என் சொல்லிப் பாடுகேன்?" என்று நம்பிகள் **வேண்டியதும்**, "தில்லை வாழந்தணர்த மடியார்க்கு மடியேன்" என்று தொடங்கிப் பாடு என்று இறைவர் முதல் எடுத்துக் கொடுத்து மறைந்தருள, நம்பிகள் **திருக்கூட்டத்தைத் தூரத்தே பலமுறையால் தொழுது** அருகு சென்று எய்தி நின்று திருத்தொண்டத் தொகை பாடி **வணங்கியதும்**, தடுத்தாட்கொண்ட புராணத்தினுள் உரைக்கப்பட்டன; 335 முதல் 348 வரை திருப்பாட்டுக்கள் பார்க்க. இவையெல்லாம் குறிக்க **விதியால் வணங்கிப் பாடிய** என்ற நயம் காண்க.

உலகறிய - அறிந்து ஓதி வணங்கி உலகு உய்யும்பொருட்டு. "அல்லறீர்ந் துலகுய்ய" (345).

மெய்யடியார் சித்த நிலவும் - மெய்யடியார்கள் எப்போதும் மனத்துள் வைத்துப் போற்றுகின்ற. இதனால் மெய் அடிமைத் திறத்தில் நின்று உய்யும் கருத்துடையோர் இதனை மனத்துள் எஞ்ஞான்றும் மறவாது வைத்துப் போற்றுதல் வேண்டுமென்று வலியுறுத்திக் காட்டியவாறுமாம்.

பாடிய நம்பியைப் பணிந்து - பாடியதனால் அதுவே பணிதற்குக் காரணமாயிற்று என்ற குறிப்புப்பெற "பாடிய நம்பி" என உடம்பொடுபுணர்த்தி ஓதினார்.

நித்தன் அருள் பெற்றவர் - அடியார்கள். திருத்தொண்டத் தொகையிற் றுதிக்கப் பெற்றவர்.

பணிந்து நினைக்கும் நியமம் - என்க. நம்பியைப் பணிதலும் அடியார் பாத நினைத்தலுமாகிய இரண்டினையுமே நியமமாகக் கைக்கொள்ளுதல். அடியார்க்கான பணிசெய்து அமுதூட்டி நிதி கொடுத்துக் குறைந்தடைதலும், சிவன்றாள் சிந்தை மறைவாது வைத்துப் போற்றலும் செய்த நாயனார் நம்பியைப் பணிந்து அவரை நினைக்கும் நியமத்திற் சிறந்தனர்.

முன்னர் **அடியார்க்கான** (1707) என்றவிடத்துக் கூறப்பட்ட அடியார்கள் நாயனாரால் நேரே கண்டு வழிபடப் பட்டவர்கள். **மெய்யடியார்** - என்றது திருத்தொண்டத் தொகையை விடாது சிந்திக்கும் எல்லா அடியார்களையுமாம்.

நித்தன் அருள் பெற்று - நம்பியைப் பணிந்ததனால் நித்தன் அருள் பெற்றனர்; அதனால் அவர் பாதங்களை நியமமாக நினைக்கும் பேறு பெற்றனர் என்க. நம்பியை நினைக்கும் நியமம் சிவனருளால் வாய்க்கப் பெறுவதொன்றும் என்பது, முன் உரைகாரர்கள் இதற்கு வெவ்வேறாக உரைத்தனர். "மேவரிய பெருந்தவம் யான் முன்பு விளைத்தன வென்னோ" (கோட்புலி - புரா - 13) என்ற கருத்துக் காண்க. திருத்தொண்டத்தொகை யடியார்களுள் நாயனாரும் ஒருவராவாரன்றோ? எனின், அது கழறிற்றறிவார் நாயனாரைக் கூறியதுபோலே அருள்வழி நிற்க, வருங்காலமு முணர்த்தும் அருளிப் பாட்டின் நிலையாகும் என்க.

தலைநின்றார் - தலைநிற்றல் - சிறத்தல், **தலை** - ஏழுனுருபாகக் கொள்ளினுமிழுக்கில்லை. 4

1710. மையார் தடங்கட் பரவையார் மணவா ளன்றன் மலர்க்கழல்கள்
கையாற் றொழுது வாய்வாழ்த்தி மனத்தா னினைக்குங் கடப்பாட்டிற்
"செய்யாள் கோனு நான்முகனு மறியாச் செம்பொற் றாளிணைக்கீழ்
உய்வான் சேர வுற்றநெறி யிதுவே"யென்றன் பினிலுய்த்தார். 5

1710. (இ-ள்.) மையார் - கடப்பாட்டில் - மை பொருந்திய பெரிய கண்களையுடைய பரவையரின் மணவாளராகிய ஆளுடைய நம்பிகளது மலர்போன்ற பாதங்களைக் கைகளாற் றொழுதும், வாயினால் வாழ்த்தியும், மனத்தினால் நினைத்தும் இவ்வாறு முக்கரணங்களாலும் வழிபட்டு வரும் கடமைப் பாட்டினுள் நின்று; "செய்யாள் கோனும் .....இதுவே" என்று - திருமகள் கணவனாகிய திருமாலும் பிரம தேவனும் அறியாத சிவந்த பொன்போன்ற திருவடிகளின்கீழ் உய்யும்படி சேர்வதற்குப் பொருந்திய நெறிதா னிதுவேயாகும் என்று உட்கொண்டு; அன்பினில் உய்த்தார் - அன்பினால் செலுத்தி வருவாராயினார்.

(வி-ரை.) பரவையார் மணவாளன் ஆளுடைய நம்பிகள். முதன்மையாற் பரவையாரைக் கூறினாரேனும் இனம்பற்றிச் சங்கிலியாரையும் உடன்கொள்க.

கையால்...மனத்தால் நினைக்கும் - முக்கரணங்களாலும் வழிபாட்டு முறைகூறியபடி. **தொழுது, வாழ்த்தி, நினைக்கும்** என்றாலே அவ்வக்கரணங்களைக் குறிக்குமாயினும், அவை இதற்கென்றே தரப்பட்டன என்று வற்புறுத்த, அவ்வக் கருவிகளையும் உடன் கூறினார். **வாய்** - ஆல் என்ற மூன்றனுருபு தொக்கது. **ஆல்** - கருவிப் பொருளில் வந்த மூன்றனுருபுகள், மனங்கலத்தலே வழிபாட்டின் அடிப்படை என்ற சிறப்புப்பற்றி இறுதியில் வைத்தார். தொழுதலும் வாழ்த்தலும் பயிற்சி வயத்தால் முன்னிகழ்வன என்ற குறிப்புமாம்.

கடப்பாட்டில் - அவ்வழிபாட்டினைத் தவறாது செய்யும் கடமையாகக் கொண்டு செய்தனர் என்பது. கடப்பாட்டினுள் நின்று (அதனை) அன்பினில் உய்த்தார் என்று முடிக்க.

செய்யாள் - திருமகள். "செய்யவள்" (குறள்). பரவையார் மணவாளன் கழல் செய்யாள் கோனறியாக் கழலினை அடைவிக்கும் என்ற நயமும், பரவையாரின் சிறப்பினைக் குறிப்பிற் காட்டிப் போந்த திறமும் காண்க.

உய்வான் - உய்தி பெறும்படி; உய்யும்பொருட்டு. வானீற்று வினையெச்சம்.

உற்ற நெறி - நேர்பட்ட நெறி. **உறுதல்** - பொருந்துதல். அஃதாவது வழுவாது கொண்டு செலுத்துந் தன்மையுடன் கூடுதல்.

உய்த்தல் - மேற்கொண்டு செலுத்துதல். முதலில் அடியார் பணி செய்தலே அறிவின் பயன் என்று கொண்டனர்; அதனை அடுத்துச் சிவன்றாள்களை அகமலரில் வைத்துப் போற்றினர்; அதன்மேல் நம்பியைப் பணிந்து அவர் பாதம் நியமமாக நினைத்தனர்; அதனையே சிவன்றாள் சேர உற்ற நெறி என்று அன்புடன் உய்த்தனர், என்று இவ்வாறு இவற்றை ஒன்றற்கொன்று தொடர்பாக நாயனாரது அன்பு நெறி வளர வந்த சாதனங்களாகக் கண்டுகொள்க. இவற்றின் பயனைப்பெற்ற பேற்றினை மேல்வரும் பாட்டிற் கூறுதல் காண்க.

1711. **நாளு நம்பி யாரூரர் நாம நவின்ற நலத்தாலே**
ஆளும் படியா லணிமாதி சித்தி யான வணைந்ததற்பின்
மூளுங் காத லுடன்பெருக முதல்வர் நாமத் **தஞ்செழுத்துங்**
கேளும் பொருளு முணர்வுமாம் பரிசு வாய்ப்பக் கெழுமினுர். 6

1711. (இ-ள்.) நாளும்.....நலத்தாலே - நாள்தோறும் நம்பி ஆரூரருடைய திருநாமங்களை நவின்றதாகிய அந்நலங் காரணமாக; ஆளும்படியால்...அணைந்ததற்பின் தாம் கைக்கொண்டு ஏவல் கொள்ளும் தன்மையால் அணிமா முதலிய என்வகைச் சித்திகளுங் கைவரப் பெற்று, அதன்பின்; மூளும் காதல் உடன் பெருக மூள்கின்ற அன்பு மேன்மேற் பெருகுதலால்; முதல்வர்... பரிசு - முழுமுதற் பெருமானுகிய சிவபெருமானது திருநாமமாகிய திருவைந்தெழுத்துமே சுற்றமும் பொருளும் உணர்வுமாகும் என்ற தன்மை; வாய்ப்பக் கெழுமினுர் - கைவரப் பெற்ற நிலையைக் கூடினுர்.

(வி-ரை.) நாளும் - நாள்தோறும்; தோறும் என்பது தொக்கு நின்றது.

நாமம் நவின்ற நலத்தாலே - நவின்ற - சொன்ன. "நாக்கைக் கொண்டரனும நவிற்றிலார் (தேவா). வாய் வாழ்த்தி" (*1710*). நவின்றதனுலாயநலங் காரணமாக நம்பியாரூராது நாம நவிலுதலே நலங்கொடுப்பது என்பதாம். **பரமாசாரியர்களுடைய திருநாமங்களே, சொல்வாரைக் காக்கும் மந்திரங்களாமென்பது** "ஞானசம்பந்த ரென்னு **நாம மந்திரமுஞ்** சொல்ல", (திருஞான - புரா - 721) என்பதனுற் காண்க. ஞானசம்பந்தர் - நாவுக்கரசர் - நம்பியாரூரர் - மணிவாசகர் இத்திருநாமங்கள் யாவும் பெரு மந்திரமாகிய திருவைந்தெழுத்தாம். இம்மந்திரோபதேசம் பெற்ற **கூன் பாண்டியரும், உருவெண்ணிய அப்பூதியார், இக்குறும்ப நாயனுர் முதலாயினுரும் பெருவாழ்வு பெற்றனர். ஆசாரிய பஞ்சாக்கரம் என்று இவை பேசப்பெறும்.** இவை ஒற்றுநீக்கி ஐந்தெழுத்தாதல் காண்க. புள்ளிகள் அலகிடப் பெறுமை யாப்பிலக்கணத்துட் காண்க.

நம்பி ஆரூரர் நாமம் - "நம்பியாரூரர்" என்ற திருநாமம் **சிவனுமமேயா**தலானும், ஒற்று நீக்கி ஐந்தெழுத்தாமாதலானும், குருவின்பாற் பத்தி விளைவித்தலானும், பிறவாற்றுனும் நலஞ்செய்யும் சிறந்த சாதனமாம். ஆதலின் அதுவே அணிமாதி எண்வகைச் சித்திகளையும் எளிதிற் கைவரச் செய்ததுமன்றி, முத்திதரும் திருவைந்தெழுத்தினிடத்து உறுதியான பற்று வாய்க்கவும் செய்தது என்க. "நம்பீ" என்ற பதிகம் பார்க்க. "ஆரூர்ச் சிவன்பேர் சென்னியில் வைத்த", "அடிப்பேராரூரன்" (தேவா).

ஆளும்படியால் - ஆளுதல், கையாளுதல், வேண்டியவாறு ஏவல் கொள்ளுதல். **படியால்** - வகையினுல் - தன்மைபெற, இதற்கு இவ்வாறன்றி எல்லாஞ் செய்யக் கூடுந் தன்மையால் என்றுரைத்தனர் முன் உரைகாரர்கள். "அவர், தம்மை நிழல் போலடைந்துலகர்க் கனையார் பெருமை தனையுணர்த்தும்" என்ற திருவிளையாடற் புராணங் காண்க.

அணிமாதி சித்தியாவன - அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பராத்தி, பராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்ற எட்டுவகைச் சித்திகள்.

அறவுஞ் சிறிய வுயிர்தொறுந்தான் பரம காட்டை யணுவாய்ச்சென்
றுறையுஞ் சிறுமை **யணிமாவா**; மூவரி ஞால முதன்மேலென்
றறையுஞ் சிவாந்த மாறுறு முள்ளும் புறனு மகலாதே
நிறையும் பெருமைதனை யன்றே **மகிமா** வென்னு நிரம்பியநூல்; (23)

இலகு மேரு பாரம்போ லிருக்கும் யோகி தனையெடுத்தா
லிலகு வான தூலமென விருப்ப **திலகி** மாவாகு;
மிலகு வான பரவணுப்போ லிருக்கும் யோகிதனை யெடுத்தா
லிலகுமேருப் பாரமென விருப்ப தன்றே **கரிமா**வாம்; (24)

பிலத்தி லிருந்தோ னயனுலகிற் புகுதன் மீண்டும் பிலமடைதல்
பலத்தின் மிகுந்த **பிராத்திய**தாம்; பரகா யத்தி னண்ணுதல்வான்
புலத்தி னியங்க லிச்சித்த போக மனைத்துந் தானிருக்குந்
தலத்தி னினைந்த படிவருதல் **பிராகா மிய**மாந் தவக்கொடியீர்; (25)

விண்ணி லிரவி தன்னுடம்பன் வெயிலாலனைத்தும் விளங்குதல்போன்
மண்ணி லுளவாம் பொருள்பலவுங் கால மூன்றும் வானத்தின்
கண்ணி லுளவாம் பொருளுந்தன் காயத் தொளியா லிருந்தறித
லெண்ணி லிதுவு மறையொருசார் பிராகா மியமென் றியம்புமால்; (26)

ஈச னெனமுத் தொழிலுந்தன் னிச்சை வழிசெய் தெழுபுரவித்
தேசன் முதற்கோள் பணிகேட்பத் திகழ்வ **தீசத் துவ**மாகும்;
பூச லவுணர் புள்விலங்கு பூத மனிதர் முதலுலகும்
வாச வாதி யெண்மருந்தன் வசமாக் கொள்கை **வசித்துவ**மாம்; (27)

(திருவிளை - புரா - அட்டமாசித்தி உபதேசித்த படலம்)

என்பன காண்க. திருமூலர் திருமந்திரம் மூன்றாந் தந்திரமும் (92 - 141) பார்க்க. ***அணிமா ஆதி** - என்பது அணிமாதி என நின்றது வடமொழிச் சந்தி.

ஆளும்படியால்...அணைந்ததற்பின் - சித்திகள் தமது ஏவல் கேட்கத்தக்க நிலை கைவரப் பெற்றனர். ஏனையோராயின் அவற்றையே முடிபாகக்கொண்டு வீழ்ந்தொழிவார்; **நாயனார், மேலும் உள்ள உயர்நிலைக்கு உதவும் கருவிகளாகவே அவற்றைக் கைக்கொண்டு ஒழுகினர்** என்ற குறிப்புப்பட "அணைந்ததற்பின் - அஞ்செழுத்தும்.... **பரிசு வாய்ப்பக்**

***அணிமா** - பெரிது அணுப்போலாதல்; **மகிமா** - (மகத்) - சிறிது மிகப் பெரிதாதல்; **இலகிமா** - (இலகு) மிகக் கனத்தது மிக இலகுவாதல்; **கரிமா** - மிக இலகுவானது மிகக் கனத்ததாதல்; **பிராப்தி** - வேண்டுவனவடைதல்; **பிராகாமியம்** - விரும்பியாங்கு நுகர்தல்; **ஈசத்துவம்** - ஆட்சியுளனாதல்; **வசித்துவம்** - எல்லாம் தன் வசமாக்கவல்லனாதல். முதல் மூன்றும் உடம்பாலும், ஏனைய மன முதலிய கருவிகளானும் பெறுவன.

கெழுமினார்" என்றார். நம்பி நாமம் நவின்ற நலத்தால்வரும் பயன்களுள், ஏனையோர் மிகப் பெரியனவாகக் கருதும் இவை, தாழ்ந்த நிலையில் பிறிதொரு மேன்மைக்குக் கருவியாக வைத்து ஆளத் தக்கவையேயாம் என்பதும் குறிப்பு.

மூளும் காதல் உடன்பெருக - சித்திகளையணைந்த நிலையுடனே மேனிலை பெறும் ஆசை மேன்மேற் பெருக வளர்ந்தது.

கேளும் பொருளும் உணர்வுமாம் பரிசு - **கேள்** - சுற்றம் - உடற்சார்பு; **பொருள்** - உலகப் பொருட்சார்பு: **உணர்வு** உயிர்ச் சார்பு. பிறப்பின் உடலோடு பொருந்தி நிகழ்தலின் **கேள்** முதலிலும், **பொருள்** உடலின் வேறாய் அதனை அடுத்து நிகழ்தலின் அதன் பின்னும், உணர்வு இல்லாதவழி அவையிரண்டும் பயனில்லா தொழிவன ஆதலின் அதனை முடிபிலும் வைத்தோதினார்.

அஞ்செழுத்தும்....பரிசு - திருவைந்தெழுத்தே இம்மூன்று சார்புகளும் ஆகும் தன்மையாவது; அஃதொன்றே உயிருக்கு எம்மையிலும் பயன் தந்து உடன்நிலவும் மெய்த்தன்மை.

கெழுமுதல் - பொருந்துதல். நிறைதல் - முதிர்தல் என்றலுமாம். **கெழுமினார்** - என்றதற்கு உச்சரித்தார் - செப்பித்தார் என்ற உரைகள் பொருந்தா.

இந்தச் சித்திகள் நாயனாரது சிவசரித விளைவுக்குத் துணையாதல் பின்னர்க் காணப்படுமாதலின் அவற்றை ஈண்டு எடுத்துக் கூறினார். அம்மட்டேயன்றி அடியார்கள் இவற்றைப் பொருளாக எண்ணார் என்பது "எம்மை யுணர்ந்த யோகியர்கள் இவற்றைப் பொருளாக எண்ணார்" என்பது "எம்மை யுணர்ந்த யோகியர்களிவற்றை விரும்பார்" (திருவிளை - புரா - அட்டமா - 28) என்றதனாலுமுணர்க. "திண்டிறற் சித்தர்களே கடைக்கூழை சென்மின்கள்" (திருப்படையெழுச்சி - 2) என்ற திருவாசகமும் இக்குறிப்புத் தருதல் காண்க.

முதல்வர் நாமத்து அஞ்செழுத்தும் - திருவைந்தெழுத்தாகிய சீபஞ்சாக்கர மந்திரம். அது சிவனது திருநாமமேயாம் என்பது "ஆலை படுகரும்பின் சாறு போல வண்ணிக்கு மைந்தெழுத்தி **னமத்** தான்காண்" (தாண்); **"நந்தி நாம நமசிவாய"** (பிள் - தேவா) முதலிய திருவாக்குக்களாலறிக.

நலத்தாலே - அணைந்ததற்பின் - பரிசு வாய்ப்பக் கெழுமினார் - நம்பி நாமம் நவின்ற நலம் முதலில் அணிமாதி சித்திகளை அணைவித்தது; மேலும் காதல் பெருக முதல்வர் நாமமே எல்லா உறுதியுமாம் என்ற தன்மை வாய்க்கச் செய்தது என்க. 6

1712. (இ-ள்.) இன்னவாறே இவர் ஒழுக - இவ்வாறாகவே இந்நாயனார் ஒழுகியிருக்க; ஏறு...வன்றொண்டர் - இடப ஏற்றைக் கொடி மேலே பொறித்துத் தூக்கிய சிவபெருமான் தமது பொன் போன்ற இனிய பாதங்கள் மண்ணிற் பொருந்தும்படி நடந்துவந்து வழக்குப்

1712. இன்ன வாறே யிவரொழுக வேறு கொடிமே லுயர்த்தவர்தம்
பொன்னின் கழல்கண் மண்ணின்மேற் பொருந்த வந்து வழக்குரைத்து
மன்னு மோலை யவைமுன்பு காட்டி யாண்ட வன்றொண்டர்
சென்னி மதிதோய் மாடமலி கொடுங்கோ ளூரைச் சேர்வுற்றார். 7

பேசி, நிலைபெற்ற மூலவோலையினைச் சபையின் முன்னே காட்டித் தடுத்தாட்கொண்ட வன்றொண்டர்; சென்னி...சேர்வுற்றார் - உச்சியின்மேல் நிலாத் தோயும்படி உயர்ந்த மாடங்கள் நிறைந்த கொடுங்கோளூரைச் சேர்வுற்றனர்.

(வி-ரை.) இன்ன ஆறே - பறவாறுய ஒழுக்கங்களைப் பிரித்தமையின் ஏகாரம் பிரிநிலை.

ஒழுக - செயவெனெச்சம் இது நிகழ இது நிகழ்ந்தது என்னும் பொருளில் வந்தது. ஒழுகும் நாளில் என்பது கருத்து. இவர் ஒழுக வன்றொண்டர் சேர்வுற்றார் என்று பிறவினைமுதல் வினைகொண்டு முடிந்தது.

ஏறு கொடிமேல் உயர்ந்தவர் - இடபக் கொடியையுடையவர் - சிவபெருமான்.

தம்...ஆண்ட வன்றொண்டர் - இச்சரித வரலாறு தடுத்தாட்கொண்ட புராணத்துள் உரைக்கப்பட்டது. (173 - 219). இவ்வரலாற்றுச் சிறப்புப்பற்றி இங்குக் கூறியது அதுபற்றியே அவர் ஆளுடைய நம்பிகள் எனப் பெறுவதும், இதுபற்றியே நாயனார் இவர்பாற் பத்தி பண்ணியதும் ஆம் என்ற குறிப்புத் தருதற்கு. "அங்கண ரோலை காட்டி யாண்டவர் தமக்கு நாடு" (147) என்று அவர் புராணந்தொடங்கிக் காட்டியதும் இங்கு நினைவு கூர்க. முதலில் திருவருள் வெளிப்பட நிகழ்ந்த இந்நிகழ்ச்சியே உலகுக்கு நம்பிகளது பெருமையைப் புலப்படுத்தி வழிபடச் செய்ததாம். இக்கருத்தினையே பற்றி ஆளுடைய பிள்ளையார் ஆளுடைய அரசுகளை எதிர்கொண்டபோது "நீண்டவரை வில்லியார் வெஞ்சூலை மடுத்தருளி நேரே முன்னாள், ஆண்டவர செழுந்தருளக் கேட்டு" (1446), என்றதும் "**சூலை** மடுத்து முன்னாண்ட தொண்டர்" (1583) என்பதுவும் காண்க.

சென்னி மதிதோய் மாடமலி - மாடங்களின் உயர்வு குறித்தது. உயர்வு நவிற்சி யணி.

வன்றொண்டர் - கொடுங்கோளூரைச் - சேர்வுற்றார் - என்றதனால் நம்பிகள் தாமே தமது தோழராகிய கழறிற்றறிவாரை நினைந்து விருப்பினுடன் மலைநாடணைந்த வரலாறு குறிப்பாலுணர்த்தப்பட்டமை காண்க. இது நம்பிகள் மலைநாட்டுக்கு எழுந்தருளிய இரண்டாவது முறையாம். வெள்ளானைச் சருக்கம். 3, 28, 29 பாட்டுக்கள் பார்க்க. 7

1713. (இ-ள்.) அஞ்சைக் களத்து...மொழிய - (வன்றொண்டர்) திருவஞ்சைக் களத்தில் எழுந்தருளிய விடமுண்ட அமுத உருவாகிய சிவபெருமானைத் துதித்து வருபவர் செஞ்சொற் றமிழ்மாலையாகிய தேவாரத் திருப்பதிகம் பாடியருள; தேவர் பெருமான் அருளாலே - தேவ தேவராகிய சிவனது திருவருளினாலே; மஞ்சிற்றிகழும்...தெளிய - மேகங்களான் விளங்கும் வடகயிலாய மலையில் சேரும் வாழ்வினை மனத்திற் றெளிந்து கொண்டாராக; இங்கு...குறும்பனார் - அச்செய்தியை இங்கு நின்றே நீடு மிழலைக் குறும்பனார் உணர்ந்தனர்.

1713. அஞ்சைக் களத்து நஞ்சுண்ட வமுதைப் பரவி யணைவுறுவார்
செஞ்சொற் றமிழ்மா லைகண்மொழியத் தேவர்பெருமா னருளாலே
மஞ்சிற் றிகழும் வடகயிலைப் பொருப்பி லெய்த வரும்வாழ்வு
நெஞ்சிற் றெளிய விங்குணர்ந்தார் நீடு மிழலைக் குறும்பனார். 8

(வி-ரை.) அணைவுறுவார் - வன்றொண்டர் என்ற எழுவாய் முன் பாட்டிலிருந்து வருவிக்கப்பட்டது.

நஞ்சுண்ட அமுதைப் பரவி - முரண் தொடை. **நஞ்சுண்டும் சாவாதிருந்ததற்குக் காரணம் தாமே அமுத உருவமாயினவர் என்பதாம் என்றது குறிப்பு. அமுதம்** - முத்தி. "அமுதம் பெறுதண்டி" (தேவா). முத்தி தருபவர் என்ற குறிப்புடன் பரவி.

பரவி - அணைவுறுவார் - எய்தவரும் வாழ்வு - பதிகம்பாடி முத்தி விண்ணப்பஞ் செய்து, அதன் காரணமாகத், திருவாயிலை அணையும்போதே, இறைவரது திருவாணையும் வெள்ளையானையும் வரப்பெற்றுக், கயிலை எய்தப்பெறும் வாழ்வு. இது நம்பிகளது அருட்சரிதத்தில் இவ்வுலக நிகழ்ச்சிகளுள் இறுதியாவது : அவையின் முன்பு ஓலைகாட்டி ஆண்டது முதல் நிகழ்ச்சியாம் ; எனவே நம்பிகளது அருள் வாழ்வின் நிகழ்ச்சிகள் யாவும் இங்குத் தொடக்கமும் இறுதியும் காட்டிச் சுருக்கி நினைவூட்டிய குறிப்புமாம்.

செஞ்சொல் தமிழ் மாலைகள் - "தலைக்குத் தலைமாலை" என்று தொடங்கும் திருவஞ்சைக்களப் பதிகப் பாட்டுக்கள். பதிகத்தின் ஒவ்வொரு பாட்டும் ஒவ்வோர் மாலை எனப்பட்டது. "சந்தம்மிகு தண்டமிழ் மாலைகள் கொண்டு" (நம்பி - அஞ்சை - இந்தளம் - 10) என்ற இப்பதிகத்தை நினைவு கூர்வித்தபடி. "மாலை பத்தும் வல்லார்" (பிள்ளை - பூந்தராய் - இந்தளம் - 11) முதலியவையும் காண்க. "எடுத்த தமிழ்மாலை" (வெள் - சரு - 29) என இக்கருத்தே பற்றிப் பின்னர்க் கூறுவதும், இப்பதிகம் "தலைக்குத் தலைமாலை" என்று தொடங்குவதும் குறிக்க.

மொழிய - மொழிந்ததனாலே; காரணப் பொருளில் வந்த வினையெச்சம். அத்திருப்பதிகத்தினுள் "வெறுத்தேன் மனைவாழ்க்கையை விட்டடியேன்" என்று வரும் முத்தி விண்ணப்பங் குறித்தது. மொழிய - (அதனால்) - அருளாலே. கயிலை எய்த வரும் - என்று கூட்டி முடிக்க.

தேவர் பெருமான் அருளாலே - "இந்திரன் மால்பிரம னெழிலார் மிகு தேவரெல்லாம், வந்தெதிர் கொள்ள வென்னை மத்த யானை யருள்புரிந்"தா ரென்றுரராதலின், தேவரையெல்லாம் ஏவல்கொள்ளும் தலைவர் என்ற குறிப்புப்பெறத் **தேவர் பெருமான்** என்றார். **அருளாலே** - "ஒன்று சிந்தை நம் மூரனை யும்பர் வெள்ளானையினுடனேற்றிச், சென்றுகொண் டிங்கு வாருமென் றயன்முதற் றேவருக்கருள் செய்தான்" (வெள் - சரு - 31) என்றது.

மஞ்சில் திகழும் - எப்போதும் மேக மண்டலத்துள்ளே விளங்கும் என்றது உயர்ச்சி குறித்தது. "கருவாகி யோடுமுகிலே போற்றி" (3); "நீராவி யான நிழலே போற்றி", "காராகி நின்ற முகிலே" (5) என்று ஆளுடைய அரசுகள் திருக்கயிலைப் போற்றித் திருத்தாண்டகத்தினுள் இதனைக் கண்டு போற்றுதல் காண்க. **மஞ்சில்** - இல் - ஒப்புப்பொருளில் வந்த ஐந்தனுருபாகக் கொண்டு வெண்முகில் போலத் திகழ்கின்ற என்றலுமாம்.

எய்த வரும் வாழ்வு நெஞ்சில் தெளிய - எய்தும்படி வருகின்ற வாழ்வினை நம்பிகளது திருவுள்ளத்தினுள் தெளிந்து கொள்ளவே. இந்நிகழ்ச்சி கொடுங்கோளூரில் கழறிற்றிவாரது அரண்மனையினுள் எழுந்தருளியிருந்த நம்பிகள் தாம் கயிலைக்கு எழுந்தருளுதற்கு முதனாளில் திருமனத்துட் கொண்ட ருளியது. முதனாளில் மனத்துட் கண்ட கருத்தேபற்றிப் பின்னாளில் **தமிழ்மாலை**கள் மொழிந்தனர் என்பதாம். இதனை ஆசிரியர் இங்குக் கூறினாராதலின் பின்னர் விரித்திலர்.

இங்கு - திருப்பெருமிழலையில் தாம் இருந்த இடத் திருந்தபடியே.

இங்கு உணர்ந்தார் - நம்பிகள் கொடுங்கோளூரில் எண்ணி முடித்த தெளிவினை இங்கு நாயனார் உணர வந்தவாறென்னையோ? எனின், அது யோகக் காட்சியின் இயல்பினால் என்க. இவ் யோகக் காட்சியின் தன்மையைச் "சமாதியான மலங்கள் வாட்டிப், பொருந்திய தேச கால வியல்பகல் பொருள்களெல்லாம், இருந்துணர்கின்ற ஞானம் யோகநற் காண்ட லாமே" (சித்தி - அளவை) என்றதனாலறிக. நாயனார் அடைந்த அணிமாதி சித்திகள் இத்தகைய ஆற்றலை விளைவிக்க வல்லன. அன்றியும், "நாளு நம்பியாரூரர் நாம நவின்று" அவரையே மனத்தினுட் பிரியாது வைத்து வழிபட்டு அவர் திறமே தமது திறமாக நின்ற நாயனார்க்கு அவரது மன நிகழ்ச்சி இங்கு புலப்படுத்தலும் ஆம். உலக நிலையிலும் அன்பில் ஒத்த இருவர்க்கு நெடுந்தூரம் பிரிந்த நாளிலும் இவ்வாறு ஒத்த மன நிகழ்ச்சிகள் உண்டாதல் கண்கூடாகக் காண்போமாதலின், உலகிறந்த நிலையில் நின்று நம்பிகளையே அழுந்தி எண்ணியிருந்த நாயனார்க்கு, அவர் எண்ணி மனந்தெளிந்து செய்கை புலப்படுதல் வியப்பன்றென்று விடுக்க. "புணர்ச்சி பழகுதல் வேண்டா" (குறள்) என்ற விடத்துக், கோப்பெருஞ் சோழனுக்கும் பிசிராந்தையார்க்கும்போல உணர்ச்சி யொப்பின் அதுவேஉட னுயிர்நீக்கும் நட்புத்தரும் என்று பரிமேலழகர் உரைத்ததுவும், இதனையே சுட்டித் தொல்காப்பியம் கற்பியல் 52ஆம் சூத்திரத்தின்கீழ் நச்சினார்க்கினியர் உரைத்ததுவும் இங்குக் கருதத்தக்கன. **நீடும்** (மிழலைக் குறும்பனார்) என்ற குறிப்பும் அது. **நீடும்** - உருவினால் பெருமிழலையின் அளவில் இருப்பினும், கருத்தால் கொடுங்கோளூரினும், நம்பிகளது திருமணத்தி னிகழ்ச்சியுள்ளும் நீடுகின்ற என்க. "தோய்ந்த நீள் சடையார்" (831) என்ற விடத்துரைத்தவை பார்க்க. சீவன்முத்தி நிலைபெற்ற சித்தர்கள் உலகில் மாக்களது உயிரின் நிகழ்ச்சிகளைத் தமது நுண்ணுருவினால் உண்ணிறைந்து அறியுந் திறமுடையார் என்பது "இருந்திரைத் தரளப் பரவைசூ ழகலத் தெண்ணிலங் கண்ணில்புன் மாக்கள், திருந்துயிர்ப் பருவத் தறிவுறு கருவூர்" என்ற (கோயில் - புறநீர்மை - 11) கருவூர்த்தேவர் திருவிசைப்பாவானும் அறியப்படும் உண்மை. 8

1714. "மண்ணிற் றிகழுந் திருநாவ லூரில் வந்த **வன்றொண்டர்**
நண்ணற் கரிய திருக்கயிலை நாளை யெய்த, நான்**பிரிந்து,**
கண்ணிற்கரிய மணிகழிய வாழ்வார் போல, வாழே"னென்
றெண்ணிச், "**சிவன்ரு ளின்றேசென் றடைவன் யோகத் தா**"லென்பார், 9

1714. (இ-ள்.) மண்ணில்....எய்த - விளங்கும் திருநாவலூரினுள் இம்மண்ணுலகில் வந்தருளிய வன்றொண்டர், பிறரால் எளிதில் அடைதற்கரிய திருக்கயிலையை நாளைச் சென்றடையவும்; கண்ணில்...போல - கண்ணின் கருமணி கழிந்தபின்னும் வாழ்வார்கள்போல; ("நான் பரிந்து வாழேன்") என்று எண்ணி - நான் பிரிந்து இவ்வுலகில் வாழமாட்டேன் என்று நினைந்து; சிவன் தாள்... என்பார் - (அதனால் யோக நெறியின் மூலம்) சிவன் திருவடியை இன்றே சென்று அடைவேன் என்று துணிந்தாராகி,

(வி-ரை.) மண் - இந்நிலவுலகம். **திகழ்தலாவது** சைவ சமய பரமாசாரியராகிய நம்பிகள் அவதரிக்கப்பெற்ற பேறுடன் பலவும் விளங்குதல். "நாதனுக் கூர்நமக் கூர் நரசிங்க முனையரைய, ஞதரித் தீசனுக் காட்செயுமூரணி நாவலூர்" (நம்பி - தேவா).

மண்ணில் - வந்த - என்று கூட்டுக. **மண்ணில் வருதலாவது** திருக்கயிலையினின்றும் "தென்புவி மீது தோன்றி" (37) என்ற ஆணையின்படி அவதரித்தவர். "**மண்ணிலே வந்த** பிறவியே" (253) என்றதும் கருதுக. "திருநாவலூராளி". (திருவந்தாதி).

நண்ணற்கரிய - பிறரால் நேரே சென்று நணுகுதற்கரிய. "ஞானவா ரூரரைச் சேரரை யல்லது நாமறியோம், மானவ வாக்கை யொடும்புக் கவரை வளரொளிப் பூண், வானவ ராலு மருவற் கரிய வடகயிலைக், கோனவன் கோயிற் பெருந்தவத்தோர் தங்கள் கூட்டத்திலே" (திருத்தொண் - திருவந் - 86) என்ற நம்பியாண்டார் நம்பிகள் திருவாக்கும், "கயிலை மால்வரை யாவது காசினி மருங்கு, பயிலு மானுடப் பான்மையோ ரடைவதற் கெளிதோ, வயில்கொள் வேற்படை யமரரு மணுகுதற் கரிதால்" (1630) என்ற திருநாவுக்கரசர் புராணமும், பிறவும் காண்க.

நாளை எய்த - என்றதனல் இவ்வுலகை விட்டு, அடுத்த நாளே கயிலை எய்த நெஞ்சிற் றெளிந்தருளினர் என்பதும், அதனை அவர் உள்ள முள்கலந்து அவ்வாறே நாயனுர் உணர்ந்து கொண்டார் என்பதும் விளங்கும்.

"**நான் பிரிந்து வாழேன்; இன்றே சென்று யோகத்தாற் சிவன்றாள் அடைவன்**" என்பாராகி - என்று கூட்டிக்கொள்க.

கண்ணிற் கரிய மணி கழிய வாழ்வார் போல - கழிய - கழிந்த பின்னும்; நாயனார் நம்பிகளைத் தமது கண்ணினுள் மணிபோலக் கருதி வழிபட்டு வந்தனர் என்பதாம். கண்ணிருந்தும் மணியில்லாதபோது காட்சி நிகழ்தல் கூடாது போலத், தாம் இருந்தும் நம்பிகளில்லாத வழி இறைவனைக் கண்டுகொண்டிருத்தல் இயலாது என்பதும், இறைவனையடைந் தின்புறுதற்குக் குருவருள் இன்றியமையாத தென்பதும் குறிப்பு.

1715. நாலு கரணங் களுமொன்ரு நல்ல வறிவு மேற்கொண்டு
காலும் பரம நாடிவழிக் கருத்துச் செலுத்தக், கபாலநடு
ஏல வேமுன் பயின்றநெறி யெடுத்த மறைமூ லந்திறப்ப,
மூல முதல்வர் திருப்பாத மணைவார் கயிலை முன்னடைந்தார். 10

நம்பியாரூரர் நாமம் நாளும் நவின்ற நலத்தால் அணிமாதி சித்திகள் அணைந்து, அதன்பின் சிவன் திருவைந்தெழுத்துமே கேளும் பொருளும் உணர்வுமாம் பரிசு பெற்ற அனுபூதி நிலையினராதலின் நம்பிகள் கூட்டம் இல்லாத உயிர், கருமணியில்லாத கண் போன்றது என்று உணர்ந்தனர் என்க. "கண்ணே கண்ணிற் கருமணியே" (தேவா).

வன்ரெண்டர் நாளை எய்த - நான் சிவன்தாள் இன்றே சென்று அடைவன் என்றது அவரை எதிர் நோக்கிச்சென்று முன்னின்று அவரருளின் பயனை அடைதற்கு. சிவன்தாள் அடைதல் என்ற முடிந்த நிலையினையும் வன்ரெண்டர் கூட்டம் நேரே வாய்க்கும் நலம் பெறற் பொருட்டு ஒரு சாதனமாகவே நாயனர் விரும்பி முயன்றனரே யன்றிச் சிவனை அடைந்திருக்கும் நிரதிசயானந்தமாகிய அது கருதியன்று என்பது ஈண்டுக் குறிக்கற்பாலதாம். "பரவை கேள்வன் பாதமுறக், கயிலைப் பொருப்ப ரடியடைந்த" (*1716*) என்பது காண்க. "நாளையெய்தும், இன்றே அடியடைவேன்" என்ற திருவந்தாதியும் காண்க.

யோகத்தால் சிவன்தாள் அடைவன் - இதனை மேல்வரும் பாட்டில் விரிப்பார். "பயிலச் செறிந்த யோகத்தால்" (*1716*) **யோகம்** - கூடுதல். ஈண்டுச் சிவயோக முயற்சி குறித்தது. "தாம் முயன்ற, பவனவழி யவனுடலிற் றம்முயிரைப் பாய்த்தினர்" (திருமூலர் - புரா - *13*).

சென்றடைவன் - சென்றடைதல் - வேற்றிடப் புணர்ச்சி, "சென்றடையாத திருவுடையார்" சிவபெருமான் ஒருவரே. சென்றடையும் திருவெல்லாம் போகநிலைகள்; அவை அத்துவிதக் கலப்பில்லாதன. "வந்து புகுதலும் சென்று நீங்கலும், இன்றி யொன்ருய் நின்ற வந்நிலையில்.... தன்னது, பேரா னந்தப் பெருங்கடல்தனுள், ஆரா வின்ப மளித்து" என்ற இருபாவிருபஃதும் (20) "சேர்ந்து துன்னலுந் துன்னுருமையு மற்று" என்னுந் தணிகைப் புராணமும் (நந்தியுப), முதல்வனது சென்றடையாத திருவை உயிர்கள் சென்றடையாமலே "பண்டைப் பரிசே" பெறுவனவா மென்பதை உணர்த்தும். ஆதலின் உயிர்கள் பண்டைப் பரிசே ஒன்ருய் நின்ற நிலையில் முதல்வனது திருவாகிய சிவத்துவத்தை எய்துவனவேயாம் என்க. ஈண்டு **யோகத்தாற் சென்றடைவன்** என்றது இக்கருத்துப் பற்றியது. (ஸ்ரீ மத் முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள் அருளிய குறிப்பு). *9*

1715. (இ-ள்.) நாலு கரணங்களும் ஒன்ரு - மனம் முதலிய கரணங்கள் நான்கும் ஒன்ருக; நல்ல அறிவு மேற்கொண்டு - நல்ல அறிவினை மேற்கொண்டு கருத்துப் பிரமநாடிவழிக் காலும் செலுத்த - உணர்ச்சியானது சுழுமுனை வழியே பிராணவாயுவைச் செலுத்த; கபால நடு...திறப்ப - கபால நடுவினிற் பொருந்தும்படி முன்னே பயின்ற நெறியினல் எடுத்த பிரணவ மந்திரமானது (பிரமரந்திர வாயிலைத்) திறக்க; மூலம் - அவ்வழியின் மூலம்; முதல்வர்...முன் அடைந்தார் - சிவபிரானது திருவடிகளைஅடைவாராகித் திருக்கயிலையை (நம்பிகள் வந்தடைவதற்கு) முன்பே அடைந்தனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

(வி-ரை.) நாலு கரணங்கள் - புத்தி அகங்காரம் மனம் சித்தம் என்பவை. **ஒன்ரு** - ஒன்ருக. சிந்தையாகிய ஒன்றிற்பட்டு அமைய. "அளப்பருங்காரணங்களுன்குஞ் சிந்தையே யாக" (252) என்றதும், ஆண்டுரைத்தவையும் பார்க்க. **கரணங்களும்** - எளிதின் ஒன்றுதல் அடையாத அவையும் என, உம்மை உயர்வு சிறப்பு. முற்றும்மையுமாம். "அளப்பரும்" (252) என்றதும் இக்கருத்து. **நாலுதல்** - தொங்குதல் எனக் கொண்டு, முக்குணங்கள் பிரேரிக்கப்புலன்களின் வழியே மாறிநின்று உயிர்களை ஊசலாட்டும் இயல்புடைய என்று பிறவினைப் பொருட் குறிப்புப்படக் கூறலுமாம். "நாலந்தக் கரணமு மொரு நெறியாய்ச் சித்திக்கே யுய்த்திட்டு" (பிள் - தேவா).

நல்ல அறிவு மேற்கொண்டு - சிறந்த அறிவுத் தொழில் மாத்திரையே மேற்கொண்டு. **நல்ல அறிவு** - புறக்கரண உட்கரணங்களின் தொழில் கலவாத சிறந்த அறிவு.

பிரமநாடி - சுழுமுனைநாடி, **காலும் செலுத்த** - பிராணவாயுவை உயிர்ப்புச் செலுத்துதலால் : "அங்கணைந்து போய் மேலேறி யலர்மதி மண்டலத்தின், முகமார்க்க வமுதுடல் முட்டத் தேக்கி" (சித்தி. 8 - 21) என்றதும், "மூல வாயுவை யெழுப்பிரு வழியைச், சிக்கெ னும்படி யடைத்தொரு வழியைத் திறந்து தாண்டவச் சிலம்பொலி யுடன்போய்ப், புக்கழுந்தினர்" (திருவாத - புரா -) என்றதும், பிறவும் இங்கு நினைவு கூர்தற்பாலன. **காலும்** - ஒளிவீசும்; மின்கொடி போன்ற ஒளி. சுழுமுனைநாடி, பிரமரந்திரத்திற் கூடியிருத்தலின் அதனைப் **பிரமநாடி** என்ருர்.


மறைமூலம் கபாலநடுத் திறப்ப என்று கூட்டுக. **எடுத்த மறைமூலம்** - தக்கவாறு ஏற்ற உச்சரிப்பாக எடுத்த பிரணவ மந்திரம்; திருவைந்தெழுத்து. **கபாலநடுத் திறத்தல்** - இதனை உயிர் செல்லும் வழியாகக் கபாலத்தின் உச்சியில் உள்ள பூட்டப்பட்ட வாயில் திறத்தல் - கபாலமோட்சம் எனவும், இது, யோகிகள் உயிரினைத் தம் முயற்சியினுல் வெளிச் செலுத்தும் முறை எனவும் கூறுப. இதன் அடையாளமாக இன்றும் யோகியர்- ஞானியர்- துறவிகள் உயிர்ஒடுங்கிய பின் உடலைச் சமாதி நிலையில் வைக்குமுன் அவர்களது தலையில் தேங்காய்களைச் சிதறச் செய்யும் சடங்கு வழங்கிவருகிறது. தலையோட்டின் உச்சிப்பகுதி முதலில் இருபிளவாகக் கலித்துப், பின்னர்நாட்செல்லப் பற்சக்கரம்போலப் பொருந்தி வலுப்படுதலும் உடைந்தபோது அவ்வாறே இருபிளவாதலும் உடற்கூற்றின் அமைப்பிலும் காணப்படும். இவ்வாயிலை வெளி முயற்சி வகைகளாகிய தாக்குதலின்றி, யோகியர் தாமே திறக்கவல்லவராதல் யோகசாதனைகளுள் ஒன்று என்பது **முன் பயின்ற நெறி - திறப்ப** என்றதனுற் பெறப்படும். **ஏனையோர்க்கு உயிர் பிரிந்து செல்லும் வழிகள் உடலின் ஏனைய பல துவாரங்களுமாம் என்ப.**

ஏலவே - பொருந்தவே. பிரமநாடி வழிக் கருத்துச் செலுத்தக் கபால நடு ஏலவே என்க. **உயிர் பிரமரந்திர வாயிலைப் பொருந்தச் செய்யவும், அவ்வாயிலைப் பிரணவம் திறக்கவும் அதன் மூலம் அடைந்தார் என்க.**

மூலம் அடைந்தார் - திறப்ப - அதன் மூலமாக - வழியாக - அடைந்தார் என்க.

அடைவாராகி அடைந்தார் என்க. **அடைவார்** - முற்றெச்சம்.

காரைக்கால்



அம்மையார் திருக்கோயில்




அம்மையார்
இறைவரது திருவடியின்கீழ்
இருக்கும் திருக்கோலம்
- பாட்டு *1781*



அம்மையார் திருவுருவம்
- பாட்டு *1736*

இத்திருவுருவங்களைப் படம் எடுப்பித்து உதவியர்
காரைக்கால் அன்பர் - (சார் பதிவாளர்) -
சிவநேயர் - திரு. C. இராசகணபதி பிள்ளை அவர்கள்



பெருமிழலைக் குறும்ப நாயனார் தலம் பெருமிழலை (யாத்திரைப் படம்)



பெருமிழலைக்குறும்ப நாயனார் திருக்கோயில்



பெருமிழலைக்குறும்ப நாயனார்
திருவுருவம் - பாட்டு 1715



இத்திருக்கோயிலிலுள்ள
ஒரு முனிவர் திருவுருவம்

1716. பயிலைச் செறிந்த யோகத்தாற் பரவை கேள்வன் பாதமுறக்
கயிலைப் பொருப்ப ரடியடைந்த மிழலைக் குறும்பர்கழல்வணங்கி,
மயிலைப் புறங்கொண் மென்சாயன் மகளிர்கிளவி யாழினொடுங்
குயிலைப் பொருவுங் காரைக்கா லம்மை பெருமை கூறுவாம். 11

முன் - வன்றொண்டர்கயிலையை அடைவதற்குமுன் - முன்னுளிலே என்றும், வன்றொண்டர்திருமுன் என்றும் உரைக்க நின்றது.

கபால நடு - மறைமூலம் திறப்ப - தூல சூக்கும காரண முதலிய திருவைந்தெழுத்தே உடலினின்றும் உயிர்பிரிகின்ற காலத்து உடனின்று அத்தொழிலை அவ்வவ்வுயிர்களின் கன்மத்துக்கேற்றவாறு நிகழ்த்துவிப்பன என்பது ஞானநூற்றுணிபு. "துஞ்சும் போதுநின் னுமத் திருவெழுத், தஞ்சுந் தோன்ற வருளுமையாறரே", "சாமன் றுரைக்கத் தருதிகண் டாயெங்கள் சங்கரனே", "நாம முரையா வுயிர்போகப் பெறுவே னுகி லுறுநோய்வந் தெத்தனையு முற்றுலென்னே" (தேவா) முதலியனவாக அப்பர்சுவாமிகள் விண்ணப்பித்தவைகள் இக்குறிப்புத்தருவன. "கிரணங்களேழுங் கிளர்ந்தெரி பொங்கிக், கரணங்கை விட்டுயிர்தானெழும்போது, மரணங்கை வைத்துயிர்மாற்றிடும் போதும், அரணங்கை கூட்டுவ தஞ்செழுத் தாமே" (9 - 54); "ஞாயிறு திங்க ணவின்றெழு காலத்தி, லாயுறு மந்திர மாரு மறிகிலர், சேயுறு கண்ணி திருவெழுத் தஞ்சையும், வாயுற வோதி வழுத்தலு மாமே" (மேற்படி 55); "குருவழி யாய குணங்களினின்று, கருவழி யாய கணக்கை யறுக்க, வரும்வழி மாள மறுக்கவல் லார்கட், கருள்வழி காட்டுவ தஞ்செழுத் தாமே" (மேற்படி 57) முதலிய திருமந்திரங்களும் இங்கு சிந்தித்துணர்தற்பாலன.

"கரணநான்குந் தமக்குப் பிரேரகமாகவிருக்கும் சுத்தவித்தை ஈசுவரம் சாதாக்கியம் விந்துவென்று பெயர் பெறும் அகர முதலிய நான்கனுள் ஒன்றனு ளொன்றாய் அடங்குங்காற் கரணவியாபார மற்றுச் சித்தவியாபார மாத்திரமாய் நிற்றலின் - நாலு.... மேற்கொண்டென்றும், பிரதானநாதம் மும்மண்டல உபாதியால் முச்சுடரின் ஒளி வடிவாயும் தன்னியல்பால் மின்கொடிப் பிழம்பாயு மிருத்தலின் காலும் பிரமநாடி என்றும் கூறினர்;...திறப்ப என்றதனால் அப்பிரணவ கலைகட் கதிட்டானமாயிருக்கும் இதயம் கண்டம் தாலு புருவமத்தியம் முதலிய ஸ்தானங்களிலிருக்கும் கமல முடிச்சுக்கள் திறந்தபின் பிரமரந்திரந் திறக்க எனப் பொருள் கொள்க" என்பது இவ்விடத்து ஆறுமுகத்தம்பிரானார் உரை. 10

1716 (இ-ள்.) பயிலை...வணங்கி - பயிலுந் தொழிலை மிகச் செறிவுறச் செய்துவந்த யோக முயற்சியின்றுணையாலே, பரவையம்மையாரது கேள்வனாராகிய வன்றொண்டப் பெருமானுடைய பாதங்களைப் பிரியாது பொருந்துதற்குக் கயிலைமலைக் கிறைவராகிய சிவபெருமானது திருவடியடைந்த பெருமிழலைக் குறும்ப நாயனாருடைய திருவடிகளை வணங்கி; (அத் துணை கொண்டு) மயிலை....கூறுவாம் - மயிலின் சாயலைப் புறங்கொண்ட வெற்றியுடன் விளங்கும் மெல்லிய சாயலையுடைய மகளிராகிய, யாழினொடு குயிலின் கீதத்தையும் ஒத்துச் சொற்கள் ஒலிக்கும் தன்மை பொருந்திய காரைக்காலம்மையாரது பெருமையை இனிச்சொல்லப் புகுவோம்.

(வி-ரை.) இப்பாட்டினுல் இதுவரை கூறிவந்த புராணத்தை முடித்துக் காட்டி இனிக் கூறப்புகும் சரிதத்துக்குத் தோற்றுவாய் செய்கின்ருர் ஆசிரியர்.

பயிலேச் செறிந்த - பயில் - பயிற்சி பயிலுந் தொழில். முதனிலேத் தொழிற் பெயர். **செறிதல்** - மிகுதல், முயற்சியின் செறிவு.

யோகம் - ஈண்டு முன் பாட்டிற் கூறிய யோக முயற்சி குறித்தது. "பெருமிழலேக் குறும்பரெனும் பரமயோகி" என்ற பாட்டும் காண்க. **யோகத்தார்** - என்பது பாடமாயின் யோகியராகிய நாயனுர்என்க. **பரவை கேள்வரா**யினும் யோகிகள் வணங்கும் நிலேயினர் நம்பிகள். இக்கருத்துப்பற்றியே "துறந்த முனிவர் தொழும் பரவை துணேவர்" என்றனர் சிவப்பிரகாசரும்.

பாதமுற - அடியடைந்த - பாதங்களேப் பிரிந்து வாழத் தரியாது பொருந்தி வாழும் பொருட்டுத் திருவடியைச் சென்றடைந்த. **உற** - உறுதல் காரணமாக. **உறுதல்** காரணமும், **அடைதல்** காரியமுமாக உரைக்கப்பட்டது கருதுக. **அடி அடைதலே உறு**தலுக்குச் சாதனமாக வைத்துரைத்தலும் குறிப்பு. "கும்பிட்ட பயன் காண்பார்போல்" (திருஞான - புரா - 1023) என்பதும் கருதத்தக்கது. **பாதம் - பத்** - பகுதி; நடத்தல் - சரித்தல் - "மாதவஞ் செய்த தென்றிசை வாழ்ந்திடத், தீதிலாத் திருத்தொண்டத் தொகைதர" வந்து சரித்தனராதலின், அது காரணமாக நாயனுர் அவரை வழிபடவந்த குறிப்புத்தரப் **பாதம்** என்றும், **(அடு** - பகுதி**)** குறிக்கொண்டு அடுக்கவேண்டும் இடம் என்ற குறிப்புத் தரப் **பொருப்பர் அடி** என்றும் கூறினுர். "அடியடைவேன்" - திருவந்தாதி.

மகளிராகிய - அம்மை - என்று கூட்டுக. **மகளிர்** - சிறப்புப்பன்மை.

மயிலேப் புறங்கொள் மென்சாயல் - மயில் - மயிலின் சாயல்; ஆகுபெயர். **புறங்கொள்ளுதல்** - தோல்வியுறச் செய்தல்; போரிற்ருேற்றுப் பின் காட்டி ஓடச் செய்யும் செயல் குறித்தெழுந்த வழக்கு. "தளிரடிமென் னகைமயிலே" (1727) என்றும், "மடநடை மயிலன் ஞரை" (1758) என்றும் மேல் இக்கருத்தே பற்றிக் கூறியது காண்க.

யாழினெடும் குயிலேப் பொருவும் - கிளவி - அம்மை என்று கூட்டுக. **பொருவுதல்** - ஒத்திருத்தல். **கிளவி** - சொல். **யாழ் குயில்** - அவ்வவற்றின் ஓசைகளேக் குறித்து நின்றன. திருப்பாட்டுக்கள் பாடுதலும் கீதம் பாடுதலும் ஆகிய இயல் இசை என்னும் இரண்டுக்கும் இரண்டுவமை கூறினுர். "பேயாரிம் மூவ ரியலிசை வல்லோர்" (திருத்தொண்டர்புராண வரலாறு - 46) என்று உமாபதியார் வகுத்ததனே நினேவு கூர்க.

மயிலேப் புறங்கொள் சாயல் என்றது அம்மையாரது உலகம் பற்றிய நலனேயும், **கிளவி யாழினெடு குயிலேப் பொருவும்** என்றது அவரது சிவம்பற்றிய தெய்வ நலனேயும் கூறிய வகையால் சரித முழுமைக்கும் தோற்றுவாய் செய்தபடி கண்டுகொள்க. இவ்வாறு தோற்றுவாய் செய்து **காரைக்கால் (அம்மை)** என்று தொடங்கிக் **கீத முன்பாடும் (அம்மை)**

(1782) என்று முடித்துக் கூறியதனுல் திருவவதாரம் தொடங்கித் திருவடிப்பேறு இறுதியாகக் கூறிய நயமும் கண்டுகொள்ளத் தக்கது.

மென்சாயல் - கிளவி - பொருவும் மகளிர் - (வாழ் தற்கிடமாகிய) காரைக்கால் என்று மகளிரின் பொது வியல்பாகக்கொண்டு காரைக்கால் நகரச் சிறப்புப் பற்றி உரை கொண்டனர் முன் உரைகாரர்கள்.

பெருமை கூறுவாம் - அம்மையாரது பெருமைகளைப் பற்றிச் சிலவற்றைக் கூறுதலல்லது அவர்தம் அற்புதச் சரித முழுமையும் அளவுபடுத்திக் கூறுதல் இயலாது என்பது குறிப்பு. "அடுத்த பெருஞ் சீர்பரவ லாரளவா யினதம்மா" (1781) என்று முடிக்கும் வகையால், அப்பெருமைகளைப் போற்றுதல்தானும் யாராலும் அளவுபடுத்தப்படாதது என்று பின்னர் இக்கருத்தே பற்றிக் கூறுதலும் காண்க.

பயிலச்செறிந்த - யோகத்தார் - என்பனவும் பாடங்கள். *11*

....

சரிதச் சுருக்கம்:- மிழலை நாட்டில் **பெருமிழலை** என்பது வளஞ்சிறந்த பழவூர், அது சைவ வொழுக்கத்துள் நிலவும் குடிகள் நிறைந்தது. அதன் அதிபர் **குறும்பர்** மரபில் வந்தவர். அதனுல் **பெருமிழலைக் குறும்பனர்** என்றறியப்பட்டார். அவர்சிவனடியார்களது குறிப்பறிந்து பணிசெய்தும், அமுதூட்டியும், நிதி நிரம்பக் கொடுத்தும் வந்தார்; சிவபெருமானை மறவாது மனத்துட்கொண்டு போற்றி வந்தனர்.

இவ்வாறு நிகழு நாளில் அவர், திருத்தொண்டினது மெய்யாந் தன்மையை உலகுக்கு அறிவுறுத்தித், திருத்தொண்டத் தொகை பாடிய ஆளுடைய நம்பிகளை நித்தம் நியமமாக நினைந்து, மனம் வாக்குக் காயம் என்ற முக்கரணங்களாலும் வழிபடும் கடப்பாட்டில் நின்றனர்; சிவனைச் சேரும் நெறியிதுவே என்று கொண்டு அன்புடன் அந்நெறியினை உய்த்தனர். இப்படியே நாளும் நம்பிகளது திருநாமத்தை நவின்ற நலத்தினுலே அவர் அணிமாவாதி அட்டமா சித்திகளும் கைவரப் பெற்றனர். அதன்பின் அதுவே வழியாகச் சிவன் றிருநாமமாகிய திருவைந்தெழுத்தே தமக்குச் சுற்றமும் பற்றுக்கோடும் உணர்வுமாகும் தன்மை கைவரப் பெற்றனர்.

இங்ஙனமே அவர்ஒழுகி வருங்காலத்தில் ஆளுடைய நம்பிகள் கொடுங்கோளூரை அடைந்தனர்; ஒருநாள் திருவஞ்சைக்களத் தப்பரைத் துதித்துத் தமிழ் மாலைகள் மொழியச் சிவன்றிருவருளாலே வடகயிலை மலையினைச் சென்றடைய வரும் வாழ்வுபெற நெஞ்சிற்றெளிந்து கொண்டனர். அவ்வாறு நம்பிகளது மனத்துட் போந்த நிகழ்ச்சியினை இங்கு அப்படியே பெருமிழலைக் குறும்பனரும் உணர்ந்து கொண்டனர். "நம்பிகள் நாளைத் திருக்கயிலை செல்லக், கண்மணியைப் பிரிந்து வாழ்வார்போல் அவரைப் பிரிந்து நான்

வாழமாட்டேன்; ஆதலின் இன்றே யோகத்தால் கயிலை சென்று அடைவேன்" என்று துணிந்தனர் குறும்பனூர். முன் பயின்ற யோக முயற்சியினுலே பிரம நாடிவழிப் பிராண வாயுவை நல்லறிவு மேற்கொண்டு மதி மண்டலத்துச் செலுத்தப், பிரணவத்தாற் றிறக்கப்பட்ட கபால நடுவாயிலின் மூலம், முதல்வர் திருப்பாதங்களை நம்பிகள் செல்லு முன்பே சென்றடைந்தனர்; நெடுங்காலம் அங்குக் கணநாயகம் பூண்டு நம்பிகளின் உடனமர்ந்து காலாந்தரத்திற் சிவன் திருவடி சேரப் பெற்றனர்.

கற்பனை :- 1. அடியார் வேண்டும் பணிவிடைகள், அவர்உரையாமுன் குறிப்பறிந்து எதிரேற்றுச் செய்யத் தக்கன. *(1707)*

2. அரன் பணியினும் சிறக்க, அடியார்பணியை முன்வைத்துப் போற்றிச் செய்வது சிவன்பாலன்புடைமையை விளக்குவதாம். *(1708)*

3. அன்பர்கள் பலரும் கூடியணையினும் தொலையா அமுதூட்டியும், நிதியம் பெருக அளித்தும், அவர்முன்பு குறைந்தடைந்தும் ஒழுகுதல் அடியார் பணிகளுட் சிறப்புடையன. *(1708)*

4. **திருத்தொண்டத்தொகை மெய்யடியார் சித்த நிலாவுந் தன்மையுடையது.** *(1709)*

5. ஆளுடைய நம்பிகளது நாமம் நாளும் நவிலும் நலம் காரணமாக ஒருவற்கு அணிமாவாதி அட்டமாசித்திகளும் கைவரப் பெறுதல் எளிது. *(1711)*

6. **அணிமாவாதி அட்டமாசித்திகளும் கைவரப் பெறினும், பெரியோர் அவற்றுள்ளே மயங்கி நின்றுவிடாது, சிவன் திருவருட்பேற்றையே கருதி முயல்வர்.** *(1711)*

7. **அணிமாதிசித்தி கைவரப்பெற்றோர்தமது உயிர்அறிவு நிறைதலினுலே ஏனை உயிர்களினுள்ளே விரவி, உண்ணிகழ்ச்சிகளையும் தாம் இருந்தவிடத் திருந்த வண்ணமே அறிந்துகொள் வல்லவராவர்.** *(1713)*

8. நம்பிகளைப் பிரிந்து வாழ்தல் கண்மணி கழிந்தும் வாழ்வதுபோலாம். *(1714)*

9. **யோகப் பயிற்சி பெற்ற பெரியோர் தமது யோக முயற்சியால் தாம் எண்ணியபோது கபால நடுவாயிலைப் பிரணவத்தாற் றிறக்கச் செய்யவும், அவ்வாயிலின் வழியே பிரமநாடி வழியாகப் பிராணவாயுவைச் செலுத்தி மேலேற்றிச் சென்று சிவனடி சேரவும் வல்லவராவர்.** *(1715)*

10. சிவனடி யடைதல் அடியாரது கூட்டமடையும் இன்பம் பெறுதற்குக் கருவியுமாகும். *(1714)*

....

தலவிசேடம்:- பெருமிழலை - இது மிழலை நாட்டினைச் சேர்ந்தது. சோழ நாட்டு வீழிமிழலை முதலியவற்றினின்றும் வேறு பிரித்துணரத் தக்கது. "மிழலை நாட்டு மிழலை; வெண்ணிநாட்டு மிழலையே" (நம்பி - நாட்டுத்தொகை - 5). புதுக்கோட்டைச் சீமையில் வெள்ளாற்றுக்குத் தென்கரையில் புதுக்கோட்டைக்கு வடக்கு நான்கு நாழிகையில் உள்ளதென்பர். தில்லை விளாகம் இருப்புப்பாதை நிலையத்தினின்றும் கிழக்கே வழி 1½ நாழிகையளவில் அடையத் தக்க தென்றும் கூறுவர். புதுக்கோட்டைச் சீமை திருமெய்யத்துக்கு மேற்கே உள்ள பேரையூரினின்றும் மேற்கில் ½ நாழிகையளவில் **தேவமலையில்** உள்ள குடவறையில் சிவலிங்கத் திருவுருவின்முன் யோகநிலையில் அமர்ந்த சடைமுடியுடைய முனிவர் உருவம் குறும்ப நாயனாருடைய திருவுருவம் என்று கருதப்படுகின்றது. (படம் பார்க்க)

பெருமிழலைக் குறும்ப நாயனார்புராணம் முற்றும்.



காரைக்காலம்மையார் (பங்குனி - சுவாதி)

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

24. பேயார் என்கிற காரைக்காலம்மையார் புராணம்

(66 திருப்பாடல்கள்)

தொகை

(பெருமிழலைக் குறும்பர்க்கும்) "பேயார்க்கும் அடியேன்"

- *திருத்தொண்டத்தொகை (4)*

வகை

"நம்பன் றிருமலை நான்மிதி யே"னென்று தாளிரண்டு
மும்பர் மிசைத்தலை யானடந் தேற, வுமைநகலுஞ்
செம்பொன்னுருவ 'னென் னம்மை' யெனப்பெற் றவள்செழுந்தேன்
கொம்பி னுகுகாரைக் காலினின் மேய குலதனமே".

- *திருத்தொண்டர் திருவந்தாதி (28)*

விரி

1717. **மானமிகு** தருமத்தின் வழிநின்று வாய்மையினில்
ஊனமில்சீர்ப் பெருவணிகர்குடிதுவன்றி யோங்குபதி
கூனல்வளை திரைசுமந்து **கொண்டேறி** மண்டுகழிக்
கானன்மிசை யுலவுவளம் பெருகு**திருக் காரைக்கால்.** 1

புராணம்: பேயார் என்ற பெயராற் போற்றப்பட்ட காரைக்கால் அம்மையாரது சரித வரலாறும் பண்பும் கூறும் பகுதி. இனி நிறுத்த முறையானே, திருநின்ற சருக்கத்துள் நான்காவது காரைக்காலம்மையாரது புராணங் கூறத் தொடங்குகின்றார்.

தொகை: "பேயார்" என்றறிந்து போற்றப்படும் அம்மையார்க்கும் நான் அடியேனாவேன். **பேயார்** - என்றது அம்மையார் இறைவரை வேண்டிப் பேய்வடிவம் பெற்றதானும் தம்மைக் "காரைக்காற் பேய்" என்று தமது திருப்பாட்டுக்களில் தமது பெயர் பொறித்திருத்தலானும் போந்த பெயர். ஆயின் ஆசிரியர் இப்புராணத்தை அதுகொண்டு "பேயார் புராண"மென்றுதல், அம்மையாரது இயற்பெயர்பற்றிப் "புனிதவதியார்புராண"மென்றுதல் பெயர் புனைந்தாரிலர். "**அம்மை**" என்று இறைவர் அழைத்த அப்பெருமை கொண்டே காரைக்கால் "அம்மையார்" புராணம் என்று இதற்குப் பெயரிட்டனர் என்பது "காரைக்கால**ம்மை** பெருமை கூறுவாம்" (*1716*) என்று தொடங்கியும், "கீத முன்பாடு**மம்மை**" (*1782*) என்று முடித்தும் முன்னும் பின்னும் வைத்தமையானும், "வேணியினா "**ரம்மை**"யென மதுரமொழி கொடுத்தருளப் பெற்றாரை" (*1781*) என்று விதந்து போற்றிக் கூறியவாற்றானும் விளங்கும். **பேயார்க்கும்** உம்மை எண்ணும்மை.

வகை : நம்பன்...ஏற - இறைவர் வீற்றிருக்கும் திருமலையாதலின் இதனைக் காலால் மிதித்து நடவேன் என்று துணிந்து தாள்களிரண்டையும் மேலே தூக்கித் தலையினால் நடந்து மலையினை ஏற, உமை நகலும் - உமையம்மையார் திருநோக்கம் செய்து 'இவள் அன்பு இருந்தவாறு என்னே!' என்று முறுவல் செய்யவும்; செம்பொன்...பெற்றவள் - செம்பொன் மேனியாகிய சிவபெருமான் "வரும் இவள் என் அம்மையாவாள்" என்று கூறி அருளும் பேறுபெற்றவள்; செழும்தேன்.....குலதனமே - மரக்கொம்புகளினின்றும் செழுந்தேன் பொழியும் காரைக்காலில் மேவிய எமது குலதனமாகிய அம்மையேயாம்.

எனப்பெற்றவள் - குலதனமே என்று கூட்டுக. நம்பன்....பெற்றவள் - அம்மை திருக்கயிலையைத் தலையால் நடந்து ஏறியது கண்டு உமையம்மை முறுவல் செய்யப், பெருமான் "இவள் என் அம்மை" என்றனர். இவ்வரலாறு புராணம் (1771 - 1775) பாட்டுக்களில் விவரிக்கப்படும். **உமை நகலும் நகல்** - திருக்கண்ணோக்கம் செய்து அதிசயித்து வினவுதல் என்ற பொருளில் வந்தது. **செம்பொன் உருவன்** - சிவபெருமான். "பொன்னார் மேனியனே", "செம்பொன் மேனி வெண் ணீறணி வானை" (தேவா) "பொன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மேனி" (11- திருமுறை) முதலியவை காண்க. **என் அம்மை** - பேணுந் தன்மையால் அம்மை போல்வார். "நம்மைப் **பேணு** மம்மைகாண்" என்று இதனை ஆசிரியர் உரை செய்தமை காண்க. **குலதனம்** - குலம் இங்கு மேன்மை குறித்தது. தொகை நூல் பெயரைப் போற்றும் நிலையில் சரிதக்குறிப்புப் பெறப் போற்றிற்று; சரிதத்தின் முடிந்த பெருமையும் ஊரும் வகை நூல் வகுத்துக் காட்டிற்று.

1717. (இ-ள்.) கூனல்வளை..திருக்காரைக்கால் - வளைவுகளையுடைய சங்குகளைக் கடல் அலைகள் சுமந்து எடுத்துக்கொண்டு மேல் ஏறி அடுத்து நிறைந்த கழிக்கானல்களில் உலவுகின்ற வளம் பெருக உள்ள திருக்காரைக்கால் என்ற ஊர்; மானமிகு தருமத்தின் வழி நின்று - மானம் மிகும் தருமநெறியில் ஒழுகி; வாய்மையினில் ஊனமில் சீர்-வாய்மையினின்றும் குறைவுபடாத சிறப்புடைய; பெருவணிகர் குடிதுவன்றி ஓங்கு பதி - பெரு வணிகர்களின் குடிகள் நெருங்கிவிளங்கும் பதியாகும்.

(வி-ரை.) இப்பாட்டால் நகரச் சிறப்பும் குடிச் சிறப்பும் கூறியபடி. நாடு சோழநாடு என்பது கருத வைத்தார். நாடறியப்படாமை இன்றைக்கும் காண்க.

மானமிகு தருமத்தின் வழி நின்று - நிற்றல் - ஒழுகுதல். **தருமம்** - அறம். **மானம்** - பெருமை. "அஃதாவது எஞ்ஞான்றும் தந்நிலையிற் றாழாமையும், தெய்வத்தாற் றாழ்வு வந்துழி உயிர்வாழாமையுமாம்" என்பர் ஆசிரியர் பரிமேலழகர். வணிகராவார்ஏனை மூன்று திறத்தார்க்கும் பொருள்செய்து உலகம் நிலைபேறு பெறத் துணையாய் நிற்றலின், "வாணிக வாழ்க்கையும் (தொல் - பொருள் - மரபு - 77), "மெய் தெரிவகையி னெண்வகை யுணவின் செய்தியும்" (மேற்படி 78) உலக நலங்கருதி அறத்தாற்றில் அருளுடன் ஆற்றி ஒழுகுதல் அவர்கடனும். "கொள்வதூஉ மிகைபடாது கொடுப்பதூஉம் குறைபடாது" (பட்-பாலை) என்பது முதலிய நலங்கள் அவரது அறவொழுக்கத்தை அளவுபடுத்துவன என்பதும், அதற்குத் தாழ்வு நேர்ந்த வழி உயிரையும் பொருட்படுத்தார் என்பதும் இவை போன்ற நன்மைகள் எல்லாம் ஈண்டுக் கருதவைத்து **மானமிகு தருமத்தின் வழி நின்று** என்றார்.

தமக்குரிய நூல்களை ஓதுதல், வேட்டல், ஈதல், உழுவித்தல், பசுக்காத்தல், என்பன வணிகர்க்குரிய தருமங்கள் என்ற தொல்காப்பியமும் காண்க.

தருமம் - இங்குக் கருணை என்னும் வித்தின்முளைத்த கொல்லாமையைமுதலாக உடைய அறம் என்ற பொருளில் வந்தது. என்னை? உணவின் செய்தியை உள்ளுறுத்த வாணிகக் கடன் பூண்டாராதலின் அதனிற் றுழ்வு செய்யின் உயிர்கள் வருந்துமென்று அஞ்சி அறத்தின் வழி ஒழுகுதல் கருத்து. இவ்வொழுக்கத்தினைத் தம்மியல்பாக உடையார்என்பதும் தருமம் என்றதன் குறிப்பு. (**தருமம்** - இயல்பு) "கவரிமா வன்னர்" என்ற உவமை உயர்குடிப் பிறந்தார்க்கு அஃதியல்பென்பது விளக்கி நின்றது என்ற திருக்குறளுரை கருதத்தக்கது. "வணிகர்பெருங்குடி" எனப் பின் கூறுவதும் இக்கருத்துட்பட நின்றது.

வாய்மை என்பது இங்கு வாய்மை ஒழுக்கம் குறித்து நின்றது. தருமத்தின் வழியிற் போல **வாய்மையினிலும்** - என்று இறந்தது தழுவிய எச்ச உம்மை தொக்கது.

ஊனம் - வழுவுதல். **வாய்மையினில் ஊனமில் சீர்** என்றது வாய்மை திறம்பாமை. **மானம்** படவரின் வாழாமைபோலவே, வாய்மை நெறியினையும் உயிர்போலக் காத்தனர் என்க. "உயிரையும் வணிகனுக் கொருகாற், சொற்ற மெய்ம்மையும் தூக்கியச் சொல்லையே காக்கப் பெற்ற மேன்மை" (1080) என்ற விடத் துரைத்தவை இங்கு நினைவுகூர்தற்பாலன.

தருமம் - வாய்மை - "**தருமத்தைச் செய் - சத்தியத்தைப் பேசு**" (தர்மம் சர; சத்யம் வத.) என்று வேதத்தில் விதித்த இரண்டுங் குறித்தபடியாம். இவை விளங்கிய படியை இச்சரிதத்திற் பின்னர்ப் பல விளைவுகளிலும் வைத்துக் கண்டு கொள்க. இவற்றுக்கு மாறுக இந்நாளில் "கறுப்பு வாணிபம்" (Black Market) என்ற பாவப் பேர்பெறும் வாணிக நிலை எங்கும் பரவி மக்களைக் கொல்லாது அலைக்கும் கோரக் காட்சியானது இந்நாள் "**நாகரிக**" **மக்கட் கூட்டம்** எத்தனை அளவு நன்னெறியின் வழுவி வீழ்ந்துள்ளது என்பதை விளக்கும். இக்கால நிலை வருந்தத்தக்கதாம். கொண்ட கடன்களைக் கொடாமல் மோசம்செய்தோர் சென்று வாழும் நகரங்களுள் ஒன்று என்று இந்நாளில் இத்திருநகருக்கு வந்த பழிப்பெயர் இந்நாள் மாக்களது கீழ் நிலையினை விளக்குவதன்றி வேறன்றென்க. **வாய்மையினில் - ஊனமில்** - மெய் சொல்லுதலினல் குற்றமற்ற என்றுரைப்பாருமுண்டு.

வணிகர் பெருங்குடி - என்று கூட்டுக. பெருங்குடி என்றது வணிகருள் இப்பர்- கவிப்பர்- பெருங்குடியர் முதலாகப் பகுக்கப்பட்ட பண்டைப் பெரும் பகுதிகளையும் குறிப்பாலுணர்த்தி நின்றது. கூல வாணிகர் முதலாக வியாபாரத்தாலும், சேனை வாணிகர் முதலாக உத்தியோகத்தாலும் வரும் வகைகளும் காண்க.

வளை சுமந்துகொண்டு - ஏறிக் - கழிக்கானல் மிசைத் - திரை உலவும் என்க.

கழிக்கானல் - கழிகளினும் அவற்றருகில் உள்ள கானல்களிலும், கடலின் பெரிய அலைகள் சங்குகளைச் சுமந்துகொண்டு கடற்கரையேறி அருகில் உள்ள கழிக்கானலில் சென்று உலவி மீளும் என்க. **உலவுதல்** - மெல்லச் சென்று மீளுதல்.

1718. வங்கமலி கடற்காரைக் காலின்கண் வாழ்வணிகர்
தங்கள்குலத் தலைவனார் **தனதத்த னார்**தவத்தால்
அங்கவர்பாற் றிருமடந்தை யவதரித்தா ளெனவந்து
பொங்கியபே ரழகுமிகப் **புனிதவதி** யார்பிறந்தார். 2

உலவு வளம் பெருகு - உலவுதலினால் வளம் பெருகுகின்ற. அலைகள், சங்கு பவளம் முதலிய கடல்படு பொருள்களை வாரி மேல் எடுத்துக்கொண்டு கழிக்கானலில் அவற்றை விட்டு மீளுதலால் நெய்தனில மாக்கள் அப்பொருள்களால் வளம் பெற்று வாழ்கின்றார் என்பது. இனிக், கடல்படு பொருள்களை நாட்டில் வாழ்வார்க்குக் கலம் செல்லும் வணிக மாக்கள் கொண்டு கொடுத்துத் தருமத்தின் வழி வாணிபம் செய்தல்போல, அங்குக் கடற்றிரையும் கைம்மாறு கருதாது வாணிபம் செய்கின்றது என்ற குறிப்பும் காண்க. இஃது இயற்கை வளத்தினைச், சரித மயமாகிய தெய்வக் கண்கொண்டு கண்டு காட்டும் ஆசிரியரது தெய்வக் கவிநலங்களுள் ஒன்று. "சேற்றலவன் கருவுயிர்க்க முருகுயிர்க்குஞ் செழுங்கமலம்" (1042) என்ற திருப்பாட்டின்கீழ் உரைத்தவையும் பார்க்க.

வளம்பெருகு - பெருகு - மக்களின் முயற்சியாற் பெருக்குவதன்றித் தம்மியல் பிற் பெருகும்படி என்றபடி.

கொண்டேக - என்பது பாடமாயின், வளை - உலவும் என்று கூட்டி உரைத்துக் கொள்க. **வளை** - கடல்படு பொருள்களுள் ஒன்று. வளை என்றதனால் இனம்பற்றிப் பிற பண்டங்களையுங் கொள்க. "கடலேறித் திரைமோதிக் காவிரியி னுடன் வந்து கங்குல் வைகித், திடலேறிச் சுரிசங்கம் வெண்முத்தங் கீன்றலைக்குந் திருவை யாறே" (மேகரா - பிள் - தேவா) என்ற திருப்பாட்டின் கருத்தை இங்கு வைத்துக் காண்க.

குறிப்பு:- *இதனை அடுத்து, இரண்டாவது பாட்டாகப் "**பீடுகெழு**" என்று தொடங்கும் ஒரு பாட்டுச் சில பிரதிகளிற் காணப்படுகின்றது. பொருத்தமின்மை, பொருள் சிறவாமை முதலிய பலவாற்றாலும் அது வெளிபாடலென்னும் இடைச்செருகல் என்று கருதப்படும். *1*

1718. (இ-ள்.) வங்கமலி...தவத்தால் - கலங்கள் மலிந்த கடற்கரையில் உள்ள காரைக்கால் நகரில் வாழும் வணிகர்குலத் தலைவராகிய தனதத்தனரது தவத்தினாலே; அங்கு.... என - அவ்விடத்தில் அவரிடத்தில் திருமடந்தை அவதரித்தனள் என்னும்படி; வந்து... பிறந்தார்- பொங்கிய பேரழகு மிகும்படி புனிதவதியார்வந்து.... பிறந்தருளினர்.

---

*பீடுகெழு பெருந்தெருவும் புத்தரொடு பீலியமண்
வேட முடை யவர்பொருள்போ லாகாய வெளிமறைக்கும்
ஆடுகொடி யணிநெடுமா ளிகைநிரைக ளலைகமுகின்
காடனைய கடற்படப்பை யெனவிளங்குங் கவின்காட்டும்.

மாளிகைகளின் மேல், வரிசைபெற நெருங்கி விளங்கும் கொடிகள், கமுகுச் சோலைபோல உள்ளன; அவை ஆகாய வெளியை மறைத்தலினால் ஆகாயம் என்றதொரு பூதம் இல்லை என்று மறுத்துக்கூறும் புத்தர்சமணர்களின் பொருள்போலவும் இருந்தன. தெருவுகள் இவ்வாறு அழகுபெற விளங்கின என்பது கருத்து.

(வி-ரை.) வங்கம் - மரக்கலங்கள். கடற்கரை நகரங்கள், கலங்கள் வந்து செல்லும்படி அமைப்புடைய கடலின் புடை விளங்குதலால் அந்நகர்களை வாணிபத்தால் வளஞ் செய்வன. அதிபத்தர்புராணம் (3) பார்க்க. நாகையைப் போலவே காரைக்காலும் துறை முகப் பட்டினமாதல் காண்க. இச்சரித விளைவில் வங்கங்களின் தொடர்பில் பின்னர் 1748 - 1750 பாட்டுக்களின் செய்திபற்றிய முற்குறிப்புமாம்.

தனதத்தன் - தத்தன் என்பது முன்னாளில் வணிகர்க்குப் பெருவழக்காய் வழங்கிய மரபுப் பெயர். **பரமதத்தன்** எனப் பின்னர்வருவதும் காண்க.

தனதத்தனூர் தவத்தால் - அரும்பெரும் தவம் முன்பு செய்த காரணத்தால் தான் இத்தகைய சிவஞ்சிறந்த மகப்பேறு பெறுதல் கூடுமென்பது. "கூத்தனு ரருளாலே - பிழைக்குநெறி தமக்குதவப் பெண்கொடியைப் பெற்றெடுத்தார்" (876) என்ற விடத்துரைத்தவை பார்க்க.

திருமடந்தை அவதரித்தாள் என - திருமடந்தை - முத்தித் திருவின் தெய்வமாகிய பராசக்தி. "வாயு மனமுங் கடந்த மனோன்மணி.... அரனுக்குத், **தாயு** மகளுநற் றாரமு மாவளே" (திருமந்திரம் - 4 - 295); "இமவான் மகட்குத் தன்னுடையகேள்வன் மகன் றகப்பன்" (திருவாசகம் - பொற் - 13) என்பனவாதி திருவாக்குக்களின் வண்ணம், சிவபெருமான் "அம்மை" என்றழைக்கும் தகுதிபற்றி அம்மையாருக்குச் சத்தியார்தாம் ஒப்பாவார்என்ற தன்மையால் இவ்வாறு கூறினார். பின்னர்த் "தாமரைத் தவிசின் வைகுந் தனித்திரு வென்ன" (1758) என்று இதனை விளக்கஞ் செய்தலும் காண்க. இவ்வாறன்றித் திருமடந்தை - இலக்குமி என்றுரைப்பது பொருந்தாமை யறிக. அன்றியும், **அடியவர்களை அடுத்து வரம்பெறும் நிலையில் உள்ள தேவமாதர்களைச் சிவன் அடியாருக்கு உவமை கூறுதலும் பொருந்தாதென்க.** சிவ பூசையில் வடக்கு வாயிலில் பூசிக்கப்படும் மகா லட்சுமி சிவ சத்தி யுருவகமாக அறியப்படுதலும் கருதுக.

தாமரைத் தவிசு - உச்சிக்குமேல் உள்ள ஆயிரம் இதழ்த்தாமரையாகிய யோகத்தானம்: "சகஸ்ரதள புட்பமிசை வீற்றிக்கும் நாரணி மனாதீத நாயகி குணாதீத - நாதாந்த சத்தி" (தாயுமானார்) **வந்து** - முன்னைத் தவ நிலையின் பயனாய் இவ்வுலகில் வந்து. மேல்வரும் பாட்டில் "**வந்து** பிறந்தருளியபின்" (1719) என்பதும், "மண்ணிலே **வந்த** பிறவியே" (253) என்றதும் காண்க.

பொங்கிய பேர் அழகு மிக - அழகுக்கெல்லா மிருப்பிடமாகிய திருமடந்தையின் அழகாதலின் **பேரழகு** என்றும், அது மேன்மேலும் **பொங்கிய** என்றும் அது மேலும் **மிக** என்றும் மூன் றடைமொழிகளாற் சிறப்பித்தார். "நித்த மணாளர்நிரம்ப வழகியர்" (திருவா) என்ற அழகின் தொகுதி.

புனிதவதியார் - அம்மையாருக்குப் பெற்றோர்களால் இடப்பட்ட திருநாமம். **அன்பின்றிறத்தால் உலகைத் தூய தாக்குபவர் என்ற காரணக்குறியீடு. ஐந்தெழுத்தாலமைந்ததும் குறிக்க.**

1719. வணிகர்பெருங் குலம்விளங்க வந்துபிறந் தருளியபின்
அணிகிளர்மெல் லடிதளர்வுற் றசையுநடைப் பருவத்தே
பணியணிவார்கழற்கடிமை பழகிவரும் பாங்குபெறத்
தணிவில்பெரு மனக்காத றதும்பவரு மொழிபயின்றுர். 3

1719. (இ-ள்.) வணிகர்... பின் - வணிகர்களது பெருங்குலம் விளக்கமடையும்படி இவ்வுலகில் அக்குலத்தில் வந்து அவதரித்த பின்பு; அணி....பருவத்தே - அணிபெருகும் மெல்லிய திருவடிகள் தளர்நடை கற்கும் பருவத்திலே; பணியணிவார்....பெற - பாம்புகளை அணியும் பெருமான் திருவடிகளில் அடிமைக்கண் பழகிவரும் பாங்கு பெறுவதற்கு; தணிவில்....பயின்றுர்- அடங்காத மன ஆசை மேலோங்க வரும் மொழிகளைப் பயின்று வருவாராயினர்.

(வி-ரை.) வணிகர் பெருங்குலம் - "பெருவணிகர்குடி" (*1717*). குலம் விளங்க - குலவிளக்காக அம்மையார் அவதரித்தருளியமையால் குலமுழுமையும் முன்னும் பின்னும் இப்பெருமை கொண்டு சுட்டியறியத்தக்கதாக விளக்கமுற்றது என்றபடி. "கானவர்குலம் விளங்க" என்றவிடத்துப் போல (*662*).

பிறந்தருளிய - ஒரு சொல் நீர்மைத்தாய்ப் பிறந்த என்ற பொருளில் வந்தது. பிறந்து அதனுல் உலகுக்கு அருளிய என்ற குறிப்பும்பட நின்றது. **அடிதளர்வுற் றசையும் நடைப்பருவம்** - தளர்நடைப் பருவம் என்க.

பருவத்தே - பாங்கு பெற - காதல் ததும்பவரும் மொழி பயின்றுர் என்றது கூட்டிமுடிக்க. காதல் ததும்பியதனுல் மொழி பயில்வதும், மொழி பயின்றதனுல் அடிமை பழகிவரும் பாங்கும் உளவாயின என்று காரண காரிய முறைப்படக் கொண்டு உரைக்க. மனம் வாக்குக் காயம் மூன்றுலும், பிறந்த மூனைநாட்டொடங்கிப் பணி செய்தமை குறித்தது. அதனை அம்முறையிற் கூருது **அணிகிளர் மெல்லடி** என அடியினை முதலிற் கூறியது, அம்மையார் இங்கு வந்து பிறந்த செயலினைக் கூறிக்காட்டிய ஆசிரியர், உடனே அவரை அடிவணங்கிப் போற்றல் வேண்டும் என்ற குறிப்புக் காட்டியவாறு. அம்மையா ரடிவணக்கமே அரன்கழல் செல்லுநெறி காட்டுமென்பார் "கழற்கடிமை" என்ற அதனை அடுத்துக் குறிப்பட்டதும் காண்க.

அணிகிளர் மெல்அடி - என்ற அடைமொழிகள் அவரது திருவடிப் புகழ்ச்சிக் குறிப்பாவன.

பழகி வரும் பாங்குபெறு - முன்னை நிலையிற் பழகி, அப்பழக்கத்துடன் இவ்வுலகில் வரும் அத்தன்மையே தொடர்ச்சி பெற.

தணிவில் பெரும் மனக்காதல் ததும்ப வரும் மொழி - அப்பருவத்தில் அம்மையார் பயின்ற மொழிகள் அவரது திருமனத்தினுள் முன்னரே விளைந்து கிடந்து அடங்காமல் மேலே பொங்கி வழிய, அதனைப் புலப்படுத்தும் மொழி. "பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாங் காதல், சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்" (அற் - அந் - *1*) என்று தொடங்கியருளிய அம்மையாரின் திருவாக்கினை ஆசிரியர் சரித அகச் சான்றுகக் கொண்டு விரித்தருளியபடி கண்டுகொள்க. பின்னர் "வண்டல் பயில்வனவெல்லாம் வளர்மதியம் புனைந்தசடை,

1720. பல்பெருநற் கிளையுவப்பப் பயில்பருவச் சிறப்பெல்லாஞ்
செல்வமிகு தந்தையார்திருப்பெருகுஞ் செயல்புரிய
மல்குபெரும் பாராட்டின் வளர்கின்றார்விடையவர்பால்
அல்கியவன் புடனழகின் கொழுந்தெழுவ தெனவளர்வார்; 4

யண்டர்பிரான் றிருவார்த்தை யணைய வரு வனபயின்று" (1721) என்று தொடர்ந்து கூறியதும் இக்கருத்து.

அசையுநடைப் பருவத்தே - பாங்கு பெற காதல் ததும்பவரும் மொழி பயின்றார் - என்றது செங்கீரைப்பருவம் குறித்தது.

பணியணிவார் கழற்கு அடிமை பழகி - அம்மையார் திருவந்தாதியில் இறைவர் "பாம்பலங்காரப் பரன்" என்ற இத்தன்மைபற்றிப் பலவிடத்தும் கூறினமை குறிப்பு. "மிகவடர ஊர்ந்திடு மாநாகம்" (அற் - அந் - 13); "நஞ்சுமிழு நீணாகத்தானை (மேற்படி 14); "இவ்வாளரவின், சிந்தை யதுதெரிந்து காண்மினோ" (மேற்படி 22); "அக்கயலே தோன்று மரவு" (மேற்படி 26); "அரவமொன் றாகத்து நீநயந்து பூணேல்" (மேற்படி 27); "பூணாக வொன்று புனைந்து" (மேற்படி 28); "படங்கொ ளணிமிடற்ற பேழ்வா யரவசைத்தான்" (மேற்படி 35); "வார்சடை மேனாகம்" (மேற்படி 36); "மதியை, வாளரவந் தீண்டச் சிறுகியதே போலாதே" (மேற்படி 38); "நேர்ந்தரவங் கொள்ளச் சிறுகிற்றோ?" (மேற்படி 42); "அராப்பூண்டுழலு மெம்மானை" (மேற்படி 46); "மதியொன் றில்ல வரா" (மேற்படி 48); "நாண்பாம்பு கொண்டணிந்த நம்மீசன்" (மேற்படி 53); "பணியுறுவார்செஞ்சடை" (மேற்படி 55); "தீய வரவொழியச் செல்கண்டாய்" (மேற்படி 57); "திருமுடிக்கே புக்கரவங் காலையே போன்று" (மேற்படி 64); "பைத்தாடு நும்மார்பிற் பாம்பு" (மேற்படி 66); "பாம்பு மதியும்" (மேற்படி 67); "நீண்முடிமேற் பாம்பியங்க லாலும்" (மேற்படி 75); "சீறி விழித்தூரும் வாளரவும்" (மேற்படி 90); "அங்காந் தனலுமிழு நாகத்தாய்" (மேற்படி 99) முதலியவை காண்க.

கழற்கடிமை பழகிவரும் பாங்குபெற வரும் மொழி - பன்னாளும் அடிமைத்திறத்தின் பயின்று பழகி வருதல் வேண்டும்; அதனை விளைத்தற்குரிய மொழிகளையே பயிலுதல் வேண்டும் என்பதாம். "பல்லூழி காலம் பயின்றரனை யர்ச்சித்தால், நல்லறிவு சற்றே நகும்" "நான் மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே" (தேவா) என்பனவாதி திருவாக்குக்கள் காண்க. *3*

1720. (இ-ள்.) செல்வமிகும் தாதையார்- செல்வ மிகுந்த தந்தையாராகிய தனதத்தனார்; பயில்பருவச் சிறப்பு எல்லாம் - மேலே முறைப்படி வருகின்ற பயிலும் பருவங்கள்தோறும் செய்யும் சிறப்புக்கள் எல்லாவற்றையும்; பல்பெருநல் கிளை உவப்ப - பல பெரிய நல்ல கிளைஞர்கள் உவப்படையும்படி; திருப்பெருகும் செயல்புரிய - திருப்பெருகும்படியான சடங்குகளாகிய செயல்களையெல்லாம் செய்ய; மல்கு...வளர்கின்றார் - பொருந்திய நிறைந்த பெரும் பாராட்டுக்களுடனே வளர்கின்றாராகிய புனிதவதி யம்மையார்; விடையவர்பால்...வளர்வார் - இடபத்தையுடைய இறைவரிடத்தில் மிக்க அன்புடனே கூடிய அழகினுடைய கொழுந்து எழுந்து வளர்ந்தாற்போல வளர்வார்.

1721. **வண்டல் பயில்வனவெல்லாம் வளர்மதியம் புனைந்தசடை**
யண்டர்பிரான் றிருவார்த்தை யணையவரு வனபயின்று
தொண்டர்வரிற் றொழுதுதா தியர்போற்றத் துணைமுலைகள்
கொண்டநுசுப் பொதுங்குபதக் கொள்கையினிற் குறுகினார். 5

(வி-ரை.) பருவச் சிறப்பு எல்லாம் - தாலாட்டு முதல் நீராடல் வரை உள்ளனவாய்ப் பெண்களுக்குரிய ஏனைப் பருவங்களிற் செய்யப்படும் கொண்டாட்டங்கள் எல்லாவற்றையும். *879*-ம், பிறவும் பார்க்க.

பருவச் சிறப்பு - பருவங்கள்தோறும் செய்யப்படும் உரிய சடங்குகள்.

கிளை உவப்ப - "செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்" என்றும், "சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான், பெற்றத்தாற் பெற்ற பயன்" என்றும் வருவனவாதி நீதியொழுக்கின்படி, கிளைஞர்கள் உவப்பச் செயல்புரியும் நியதியாலும், செல்வ மகப்பேற்றின் சடங்குகளில் கிளைஞர்கூடி மங்கலங்கள் நிகழ்த்தற்குரியார் ஆதலானும், இவ்வாறு கூறினார். "ஏதமில்பல் கிளைபோற்ற" (*1284*); "தொக்க பெருவிறல் வேடர்க் கெல்லாந், திருமலி துழனி பொங்க" (*668*) முதலியவை பார்க்க.

திருப்பெருகும் செயல் - தந்தையார்செய்த சிறப்புக்கள் சடங்குகளின் அளவேயாயினும் அவை திருப்பெருகும் செயல்களேயாயின என்பது குறிப்பு. **பாராட்டினுடன் வளர்கின்றார்- வளர்வார்** - என்றது மிக்குறிப்பு. ***திரு*** - முத்தித் திரு. சிவத் தன்மை பெருக விளைவிக்கும் செயல்கள்.

வளர்கின்றார் - வளர்வார் - குறுகினார் என்று மேல்வரும் பாட்டினுடன் கூட்டி முடித்துக்கொள்க. **வளர்கின்றார்- வளர்வார்** - இரண்டும் வினைப் பெயர்கள், சுற்றம் பாராட்ட வளரும் வளர்ச்சி உண்மையில் அன்புடன் அழகின் கொழுந்து எழும் வளர்ச்சியேயாயிற்று என்க.

அன்புடன் அழகின் கொழுந்து எழுவதென - உள்ள நிலையும் உடல் நிலையும் குறித்தது. உண்மைத் தன்மையான உயிரின் உயர்நிலையினையும், உலக நிலையினையும் ஒருங்கே பற்றிய வளர்ச்சி. சிறப்புப்பற்றி உடன் உருபை **அன்பு** என்பதனோடு சார்த்தி ஓதினார். அம்மையாரது சரித நிகழ்ச்சியில் இவ்விருவகை விளைவும் முற்ற வரும் நிலையும், அழகின் எழுச்சியராகிய விளைவு பின்னர் உதறப்பட்டொழிய (*1766*) அன்பு வளர்ச்சியாகிய முதிர்வே நிறைந்த பேய்வடிவுடன் நிலைபெற்றுத் திருவடிக் கீழ் என்றும் இருக்கின்ற பிற் சரித விளைவு காண்க. அல்குதல் - நிலைபெறுதல் "அற்கா வியல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால், அற்குப வாங்கே செயல்" (குறள்). அல்கிய அன்பு என்றதற்குப் பற்றும் பொருளை யறத்துறந்து சிவபிரானிடத்துத் தாழ்ந்த இயல்போ டுதிக்கு மன்பு என்பர் ஆறுமுகத் தம்பிரானார். 4

1721. (இ-ள்.) வண்டல்...தொழுது - சிறுமியருடன் வண்டலாட்டயரும் மகளிர் விளையாட்டுக்களிலெல்லாம் வளர்பிறையைச் சூடிய சடையினையுடைய தேவதேவருடைய திருவார்த்தைகளே பொருந்த வருவனவாகப் பயின்றும், சிவன் அடியார்கள் வந்தால்

அவர்களைத் தொழுதும் (இவ்வாறாக); தாதியர்போற்ற - தாதியர்கள் பாதுகாத்துக் கொண்டாட; துணை முலைகள்.....குறுகினார்- துணைமுலைகளைக் கொண்டு இடையானது துவளும் பருவங்கொண்ட வயதின் பருவத்தினை அடைந்தனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

(வி-ரை.) வண்டல் பயில்வன - வண்டல் - சின்னஞ் சிறு மகளிர்விளையாட்டு. **பயில்வன எல்லாம்** - பயிலுங்காற் சொல்லும் மொழிகள் எல்லாம்.

வண்டல்...திருவார்த்தை - பயின்று - "மொழி" (*1719*) என்றவிடத்து உரைத்தவை பார்க்க. இவை அதனின் முதிர்ந்த மொழிகள் என்பர் **திருவார்த்தை** என்றார்.

முன்னர்க் கூறியவை மனக் காதல் ததும்ப வெளிவரும் மழலைச்சொற்கள். இங்குக் கூறியவை உட்பொருளைப் புலப்படுத்தும் திருந்திய மொழிகள்.

திருவார்த்தை - திருவாசகத்தின் ஒரு பகுதி இப்பெயர்பூண்டது. ஆதிப் பிரமம் வெளிப்படுத்த அருள் - கருணை யளிக்குந் திறம் - ஏடர்களை யெங்குமரண்டு கொண்ட இயல்பு - கேழலாய்ப் பால்கொடுத்த கிடப்பு - அருள்செய் பெருமை - ஓவிய மங்கையர் தோள்புணரு முரு - கேதங் கெடுத்தென்னை யாண்டருளும் கிடப்பு - என்றிவைகளை அறிவார் எம்பிரா னாவாரே என்ற கருத்துடையவை திருவார்த்தை எனப்பட்டன. "பேசத் திருவார்த்தையிற் பெருநீளம் பெருங்கண்களே" (திருக்கோவை - *109*). **திருவார்த்தை - சிவன் பெருமைகளும், அடியார் பெருமைகளுமாம்**. அவை எண்ணிறந்தன. "உடைய மறைப்பிள்ளையார் திருவார்த்தை" (*1442*); நாவுக்கரச ரெழுந்தருளு நல்ல திருவார்த்தை" (திருஞான - புரா - *493*).

திருவார்த்தை - பயின்று - என்றதனால் அரன் வழிபாடும், **தொண்டர் வரிற்றொழுது** - என்றதனால் அடியார்வழிபாடும் எனச் சைவநெறியின் முடிந்த பொருள்களிரண்டும். பிறந்தநாள் முதலாக அம்மையாரிடத்து விளங்கி முதிர்ந்து விளைந்தன என்றதாம்.

தொண்டர் வரிற்றொழுது - "மறித்து மடநெஞ்சே வாயாலுஞ் சொல்லிக் குறித்துத் தொழு தொண்டர் பாதம்" (அற்-அந்-*40*) என்று முற்றியதன் முன்னை நிலை.

துணை முலைகள் கொண்ட நுசுப்பு ஒதுங்குபதம் - துணை - இரண்டு. கொண்டு - வளர்ச்சியினால். நுசுப்பு - இடை. **ஒதுங்குதல்** - (பாரமாற்றாது) துவளுதல். **பதம்** - பருவம். **கொள்கை** - கொள்ளுதல், பெறுதல். **கொள்கை** - உடல் வளர்ச்சியியல்பு என்றலுமாம். பெண்மை நலம் முற்றிய உடல் வளர்ச்சி பெற்றனர் என்பதாம்.

தாதியர்போற்ற - போற்றுதல் - வேண்டிய உதவிகள் செய்தல் என்ற பொருளில் வந்தது.

5

1722. நல்லவென வுறுப்புநூ லவருரைக்கு நலநிரம்பி
மல்குபெரு வனப்புமீக் கூரவரு மாட்சியினுல்
இல்லிகவாப் பருவத்தி லிவர்கண்மர பினுக்கேற்குந்
தொல்குலத்து வணிகர்மகட் பேசுதற்குத் தொடங்குவார்; 6

1722. (இ-ள்.) உறுப்பு நூலவர்- உடற்கூற்று நூல் வல்லவர்கள்; நல்ல என உரைக்கும் நலம் நிரம்ப - இவையிவை நல்லன என்று எடுத்துக் கூறும் நலங்கள் எல்லாம் நிரம்பப் பெற்று; மல்கு.....மாட்சியினுல் - பொருந்திய பேரழகு மேன்மேல் மிகப் பெருக வருகின்ற மாண்பினுலே; இல் இகவாப் பருவத்தில் - வீட்டினின்றும் வெளியே செல்லலாகாத பருவம் வர; இவர்கள்....தொடங்குவார் - இவர்களது மரபுக்குப் பொருந்தும் பழங்குடியில் வந்த வணிகர்கள் பெண்பேசத் தொடங்குவாராகி;

(வி-ரை.) உறுப்பு நூலவர் - உடல் உறுப்புக்களின் இலக்கணங்களை வகுக்கும் நூல் வல்லவர். சாமுத்திரிக இலக்கணம் என்பர் வடவர்.

நல்ல என உரைக்கும் நலம் - இன்னின்னவாறு உள்ள இவை இவை உறுப்புக்களில் நல்ல இலக்கணங்கள் என்று கூறும் நன்மைகள் யாவையும் முற்றும்மை தொக்கது.

இல் இகவாப்பருவம் - பெண்மை நலம் நிரம்பப்பெற்ற பருவத்தின்பின் பெண்களை வீட்டைவிட்டு வெளியிற் செல்லவிடாது செறிவித்துப் பாதுகாத்தல் மூதறிவின் நமது முந்தையோர் கைக்கொண்ட நன்முறை. இதனை **இற்செறிவித்தல்** என்று அகப் பொருணூல்கள் பேசும். "உற்று நோக்கியெம் மெல்லியலைப், போய்விளை யாடலென் ருளன்னையம்பலத் தான்புரத்திற், றீவிளை யாடநின் றேவிளை யாடி திருமலைக்கே" (திருக்கோவை - *133* இற்செறிவறிவித்து வரைவு கடாதல்). இந் நல்வழக்கு இந்நாளில் நாகரிகம் என்ற பெயரால் நழுவ விடப்பட்டுப் பல கேடுகளுக் கிடணுகி வருதல் மிக வருந்தத் தக்கது.

இவர்கள் மரபினுக் கேற்கும் தொல்குலத்து வணிகர் - மரபும் குலமும் குடியும் தொன்மையும் பொருந்துமாறு பற்றியே மகட்பேசி மணம் புரிதல் நமது முன்னோர்வழக்கு. "ஒத்தகுல முதல்வேளாண் குடித்தலைவர்" (*1287*); "குணம்பேசிக் குலம்பேசி" (*1289*); "சைவ, அந்தணர்குலத்துத் தங்க ளரும்பெரு மரபுக் கேற்ப வந்த தொல்சிறப்பில்" (*153*); "குலமுத லறிவின் மிக்கார்கோத்திர முறையுந் தேர்ந்தார்" (*154*); "ஓங்குகுல மரபினராய்" (*881*) "மறையவரில் ஏற்றகுலத் தோடிசைவால்" (திருஞான - புரா - *1161*); முதலியவை காண்க. இந்நாளில் மனம் போனவாறெங்கும் வரம்பின்றிச் செல்லும் தத்தம் கூடா வொழுக்கங்களுக் கெல்லாம் இம் மாபுராணத்தினுள் ஆதராந் தேடியலையும் புன்றலைமாக்கள் இங்குக் கூறிய ஒழுக்க முறைகளைக்கண் டமைவுபட் டொழுக மூயல்வாராயின் நலம் பெறலாம்.

1723. நீடியசீர்க் கடனாகை நிதிபதியென் றுலகின்கட்
பாடுபெறு புகழ்வணிகன் பயந்தகுல மைந்தனுக்குத்
தேடவருந் திருமரபிற் சேயிழையை மகட்பேச
மாடமலி காரைக்கால் வளநகரில் வரவிட்டார். 7

மகட் பேசுதல் - மணமகளாகப் பெண்ணைத் தரும்படி உரியனவற்றைப் பேசுதல். மரபு வழக்கு.

தொடங்குவார் - முற்றெச்சம். **தொடங்குவாராகி வரவிட்டார்** - என மேல்வரும் பாட்டுடன் கூட்டுக.

மகட் பேசத் தொடங்குவார் - மணமகன் வீட்டார் பக்கமிருந்து பெண் பெற்றூர்பால் முதியோர்வந்து மணப்பேச்சுத் தொடங்குதலும் முந்தையோர் மரபு. *6*

1723. (இ-ள்.) வெளிப்படை. சிறப்பினுல் நீடிய கடற்கரைப் பட்டினமாகிய நாகைப்பட்டினத்தில் நிதிபதி என்ற பெயருடன் உலகில் பெருமைபெறும் புகழுடைய வணிகன் பெற்ற குலமகனுக்கு ஒத்த மரபில் தேடவருகின்ற திருக்குலத்தில் வந்த இச் சிறந்த அம்மையாரைப் பெண் பேசும்பொருட்டு, மாடங்கள் நிறைந்த காரைக்கால் என்னும் வளநகரில் அறிவுடைப் பெரியோர்களை வரவிடுத்தனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை.) நிதிபதி என்று உலகின்கண் பாடுபெறு புகழ்வணிகன் - நிதிபதி என்ற பெயரால் உலகில் பெருமையும் புகழும் பெற்றவன். **நிதிபதி என்று** என்றமையால் அப்பெயர்இடுகுறி யளவானன்றிக் காரணக்குறி பெற்றமைந்தது போன்ற செல்வச் சிறப்பினையுடையான் என்று உலகோர் பாராட்ட என்பது குறிப்பு. **பாடு** - பெருமை.

பயந்த குலமைந்தன் - பயந்த - பெற்ற. இரட்டுற மொழிதலால் அஞ்சிய என்று, "தணிவரும் **பய மேற்கொள்ள** வுள்ளமுந் தடுமா றெய்தி" (*1747*) என்று பின்னர் பயந்த - அஞ்சிய - சரிதத்தின் முற்குறிப்புமாம்.

வரவிட்டார் - வணிகர் மகட் பேசுதற்குத் தொடங்குவார்- மகட் பேசி முடிக்கும் திறமை வாய்ந்த மூதறிவோர்களை வரவிடுத்தனர். "மூதறிவோர்" என்பதை மேல்வரும் பாட்டினின்றும் வருவித்துக் கொள்க. இவ்வாறு அறிவின் முதியோரை அனுப்பி மணங்குறித்து மகட் பேசுவது முந்தையோர்வழக்கு. "குலமுத லறிவின் மிக்கார்" (*154*) என்றதும், ஆளுடைய பிள்ளையாருக்கு மணம் செய்விக்க நம்பியாண்டார் நம்பிகளினிடம் தாதையாரும் தொண்டர்களும் வேதியரும் உடனேகினர் (திருஞான - புரா - *1163*) என்பதும், பிறவும் காண்க. *7*

1724. வந்தமூ தறிவோர்கண் மணங்குறித்த மனைபுகுந்து,
தந்தையாந் தனதத்தன் றனைநேர்ந்து, "நீபயந்த
பைந்தொடியை நிதிபதிமைந் தன்பரம **தத்தனுக்கு**
முந்தைமர பினுக்கேற்கு முறைமைமணம் புரி" கென்றார். 8

1724. (இ-ள்.) வெளிப்படை. அவ்வாறு வரவிட்ட மூதறிவாளர்கள் மணம் பேசப் பெண் குறித்த மனையிற் புகுந்து, பெண்ணின் தந்தையாகிய தனதத்தனை அடைந்து "நீ பெற்ற பைந்தொடியை நிதிபதியின் மகனுக்கு முந்தையோரின் மரபினுக்குப் பொருந்தும் முறையால் மணம் புரிக" என்று சொன்னார்கள்.

(வி-ரை.) இப்பாட்டால் மூதறிவோர்கள் மகட்பெற்றாரிடம் சேர்ந்து பேசும் மரபு அறிவிக்கப்பட்டது.

வந்த - "வர விட்டார்" என்று முன்பாட்டிற் கூறியபடி வரவிடப்பட்டு வந்த.

மணம் குறித்த - மணச் செய்தி பேசுதல் குறித்த.

நேர்ந்து - மரபின் முறைப்படி நேர்பட்டு நலம் வினவுதல் முதலிய எல்லாம் செய்து முடித்து.

"நீ பயந்த....புரிக" என்றார் - மூதறிவோர்கள் பெண் பெற்றாரிடம் பெண் பேசும் வழக்கு. ***நீ பயந்த பைந்தொடி*** - தனதத்தனுக்குப் புனிதவதியார் ஒரே மகளார் ஆனபடியால் இன்னார் என்றறிவிக்க வேண்டியதின்றி "உனது பெண்" என்றமட்டில் கூறியமைந்தார்.

நிதிபதி மைந்தன் பரமதத்தனுக்கு - மணமகனது பெயர் முதலியனவும், அவனது தந்தை பெயர், குலம் முதலியனவும் அறிவிக்க வேண்டியது முறையாகலின் விரித்துக் கூறியபடியாம்.

முந்தை மரபினுக்கு ஏற்கும் முறைமை - தொன்மை - குல ஒப்புமை முதலிய குலமுறை பொருந்தும் தன்மை. "இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி" (முருகு) என்ற கருத்துக் காண்க.

முறைமை - மணம் செய்தற்குரிய குல முறைமை.

புரிக என்றார் என்றது புரிகென்றார் என நின்றது. வியங்கோள்; வேண்டிக் கோடல் என்னும் பொருளில் வந்தது.

புரிக என்றார் - இன்ன பெண்ணை இன்ன மணமகனுக்கு இன்ன குலமரபின் முறையின் மணம் செய்ய இசைதல் வேண்டும் என்று மகட் பேசும் மரபு அறிவிக்கப்பட்ட நயமும் காண்க.

மணங் குறித்து - என்பதும் பாடம். *8*

1725. மற்றவனு **முறைமையினுன்** மணமிசைந்து செலவிடச், சென்
றுற்றவர்க ளுரைகேட்ட நிதிபதியு முயர்சிறப்புப்
பெற்றனன்போ லுவந்துதனிப் பெருமகற்குத் திருமலியுஞ்
சுற்றமுடன் களிகூர்ந்து வதுவைவினைத் தொழில்பூண்டான். 9

1725. (இ-ள்.) மற்று அவனும் முறைமையினுல் மணம் இசைந்து செலவிட - மணம் புரிக என்றது கேட்ட அந்தத் தனதத்தனும் அவர்கள் கூறியபடி மணம் இசைவது எவ்வகையானும் முறைமையுடைய காரணத்தால் மணம் புரிவதற்கு இசைந்து தனது இசைவினை அறிவித்து அவர்களைப் போகச் செய்ய; சென்று உற்றவர்கள் உரை கேட்ட நிதிபதியும் - அவ்வாறே சென்று சேர்ந்தவர்கள் சொல்லியவற்றைக் கேட்ட நிதிபதியும் உயர்சிறப்பு....தொழில் பூண்டான் - உயரும் பெருஞ் சிறப்பினைப் பெற்றவன்போல மகிழ்ந்து தன் தனிப் பெரும் மகனுக்குச் செல்வ மிக்க சுற்றத்தாருடன் கூடி மகிழ் சிறந்து மணத்திற்குரிய எல்லாச் செயல்களையும் செய்யலாயினுன்.

(வி-ரை.) மற்று அவனும் - மற்று - "புரிக" என்ற உரை கேட்ட அவன் என்று முன்னறி சுட்டுப் பொருளில் வந்தது. **அவன்** - தனதத்தன்.

முறைமையினுல் - முறைமை என்றது பெண் பெற்ருேன் மணம் இசைவதற்கு முன் எண்ணித் துணிய வேண்டிய எல்லா அமைதிகளும் பொருந்தும் தொகுதி குறிக்குமேனும் ஈண்டுக் குலமுறைமை என்றமட்டில் விடுக்க.

செலவிட - சென்று மணம் இசைந்த படியினை அறிவிக்கும்படி விடுக்க.

உயர்சிறப்புப் பெற்றனன்போல் - உயர் சிறப்பு - மணம் நிகழ்ந்த சிறப்பு. **பெற்றனன்போல்** - மண இசைவு கேட்டவுடன் மணமே நிகழ்ந்துவிட்டதுபோல என்க. பெறுபவன்போல என்பது பெற்றவன்போல என்று இறந்த காலத்தாற் கூறியது விரைவுக் குறிப்பு.

பெற்றனன்போல் - உண்மையில் இந்தத் திருமணத்தால் நிதிபதி உயரும் சிறப்புத் தான் பெற்றவனுயினும், பின்னர் அதனை இழந்து நீங்கிப் பரமதத்தன் வேறு மணம் செய்துகொள்ள உள்ளவனுதலின் அக்குறிப்புப்படப் **போல்** என்ருர். "செல்வ நல்க, வல்லாளை மணந்துவரு வான்**போற்**றம் மனைபுகுத" (திருவிளை - புரா - விருத்தகுமார பாலரான படலம் - 14) என்றதுபோலக் காண்க.

உவந்து என்றது நிதிபதி அந்நல்வார்த்தை கேட்டதும் தான் தனி மகிழ்ந்ததனையும், **களி கூர்ந்து** என்றது அச்செய்தியை ஒட்டிச் சுற்றத்தாருடன் கூடி மகிழ்ந்ததனையும் உணர்த்தின.

வதுவை வினைத் தொழில் - கலியாணத்திற்கு வேண்டிய முயற்சிகளும் செயல்களுமாம். அவை மேல்வரும் பாட்டில் விரிக்கப்படுவன. **தொழில் பூணுதல்** - செய்தல். 9

1726. மணமிசைந்த **நாளோலை செலவிட்டு**, மங்கலநாள்
அணைய,வது வைத்தொழில்க ளானவெலா மமைவித்தே,
யிணரலங்கன் மைந்தனையு மணவணியி னெழில்விளக்கிப்
பணைமுரச மெழுந்தார்ப்பக் காரைக்காற் பதிபுகுந்தார். 10

1726. (இ-ள்.) மணம் இசைந்த நாளோலை செலவிட்டு - மகட்பெற்றார் மணமிசைந்ததனால் மணநாட் குறித்து மணவோலையைஅனுப்பி; மங்கலநாள் அணைய - மணஞ்செய்நாள்கூட; வதுவை....அமைவித்து - மணச்சடங்கிற்குரிய செயல்கள் எல்லாவற்றையும் பொருந்தும்படி அமைத்து வைத்து; இணர்....விளக்கி - கொத்தாகப் பொருந்திய மலர்மாலையை யுடைய மணமகனையும் மணக்கோலம் புனையும் அணிகளால் அழகு விளங்கச் செய்து; பணை......புகுந்தார்- கூட்டமாகிய மணமுரசு முதலிய இயங்கள் மிக முழங்க மண எழுச்சிபெற எழுந்து காரைக்கால் நகரத்தினுட் புகுந்தனர் (நிதிபதியுஞ் சுற்றத்தாரும்.)

(வி-ரை.) நாளோலை - மணநாட் குறித்து எழுதும் ஓலை. இது மணமகன் வீட்டார்குறித்து மணமகள் வீட்டாரிடம் அனுப்பப் பெறுவது. "குறித்த நாளோலை விட்டார்" (*155*); "திருநாளோலை" (திருஞான - புரா - *1171*); பார்க்க.

செலவிட்டு - மணமகள் வீட்டாரிடம் செல்ல விடுத்து.

மங்கலநாள் அணைய - மணஞ்செய் திருநாள் அணித்தாக.

இணரலங்கள் மைந்தனையும் மண அணியின் எழில் விளக்கி - மணமகனை மண அணிகளால் அழகு விளங்கச்செய்து. **அணியின்** - அணியினால். **இன்** - சாரியை. சாரியை யுள்வழித் தன்னுருபு நிலையாது வந்தது. **இணர்** - பூங்கொத்து. மலருக்காயது. *158* **முதல்** *164* பாட்டுக்களும், திருஞானசம்பந்த நாயனார் புராணம் *1182 - 1187* பாட்டுக்களும் பிறவும் பார்க்க. **இணர் அலங்கல்** - வணிகர்க்குரிய அடையாள மாலையாகிய முல்லைமாலை. 'திருவடையாள மாலை' (திருஞான - புரா - *1216*).

எழுந்து - மண எழுச்சியாக எழுந்து. **பணை முரசம் ஆர்ப்ப - எழுந்து - புகுந்தார்** என்று கூட்டி முடிக்க. **பணை** - தொகுதி; கூட்டம்.*10*

1727. (இ-ள்.)அளிமிடைதார்....புகுந்து - (அவ்வாறு பதி புகுந்தவர்கள்) வண்டுகள் மொய்க்கும் மாலையை அணிந்த தனதத்தனது அழகு பொருந்திய மாடத்தினுள்ளே சேர்ந்து; தெளி.... அமைத்து - தெளிவினைத் தரும் தரும நூல்களின் விதித்தபடியே மணத்தின்முன் செய்யத்தக்க சமாவர்த்தனம் முதலிய சடங்குகளை யெல்லாம் செய்து முடித்து; தளிரடி.... செய்தார்கள் - தளிர் போன்ற திருவடிகளையும் மென்மை பொருந்திய நகையினையும் மயில்போன்ற சாயலினையும் உடைய புனிதவதி யம்மையாரை மாலையணிந்த காளை போன்ற பரமதத்தனுக்குக் களிமகிழ் சுற்றத்தார் போற்றும்படி கலியாணம் செய்வித்தார்கள்.

1727. அளிமிடைதார்த் தனதத்த னணிமாடத் துட்புகுந்து
தெளிதருநூல் **விதிவழியே செயன்முறைமை செய்தமைத்துத்**
தளிரடிமென் **னகைமயிலைத் தாதவிழ்தார்க் காளைக்குக்**
களிமகிழ்சுற் றம்போற்றக் **கலியாணஞ் செய்தார்கள்.** 11

(வி-ரை.) (பதி புகுந்தார் - *1726*) - மாடத்துட் - புகுந்து - செய்தமைத்துக் - கலியாணம் செய்தார்கள் என்று முடிக்க. (**புகுந்தாராகிய**) அவர் என எழுவாய் முன் பாட்டினின்றும் வருவிக்க.

தெளிதரும் நூல் விதிவழியே - சிவாகமங்களின் விதித்தபடியே. (உள்ள மணச் சடங்குகள்)

மயிலைக் காளைக்குக் - கலியாணம் செய்தார்கள் - மயில் - காளை என்பன உவம ஆகுபெயர்கள். மயிலைப்போன்ற சாயலும், காளையைப்போன்ற பெருமிதமும்; உவமைக் குறிப்பு. மயிலைக்கண்டு காளை மருள்வது இயல்பாதல்போல இம்மணமகன் பின்னர் மருண்டு அஞ்சி அகலும் பிற்சரிதக் குறிப்பும் காண்க. **மயிலும் காளையும்** பொருந்தாத உயிர்ச்சாதிகளாதலும், சோதிட வழக்கும் காண்க. **செய்தார்கள்** - செய்வித்தார்கள். பிறவினைப் பொருளில் வந்தது. **களிமகிழ்** - ஒரு பொருட் பன்மொழி.

தளிரடி - மென்னகை மயில் - இவை அம்மையாரின் இயற்கைச் சிறப்புணர்த்தின. **தளிரடி** - 'அணிகிளர்மெல்லடி' (*1719*) என்றவிடத் துரைத்தவையும் குறிப்பு. 'கிளரொளி மலர்த்தாள்' (*1782*) என முடிப்பதும் காண்க.

நூல் வழி முறையே - என்பதும் பாடம். *11*

1728. (இ-ள்.) மங்கலமாம்.....வைகும்நாள் - மங்கலமாகிய கலியாணச் சடங்குகளையும் அவை பற்றிய பிற செயல்களையும் முடித்து, அதன்பின் இயல்பில் வாழுநாளிலே; தனதத்தன் - தனதத்தனுனவன்; தங்கள் குடிக்கு ஒரு புதல்வி ஆதலினுல் - தங்கள் குடிக்குப் புனிதவதியார் ஒரே புதல்வியாரானதினுலே; பொங்கு ஒலி நீர்நாகையினிற் போகாமே - (தம்மைப் பிரிந்து) பொங்கும் ஒலியினையுடைய கடற்கரையில் உள்ள நாகப்பட்டினத்துக்கு அவர் போகாமல்; கணவனுடன்......அமைத்தான் - கணவனுடனே அக்காரைக்காற் பதியிலேயே தங்கி இனிதாக இல்வாழ்க்கை வாழ்ந்திருக்க அழகிய மாடத்தினைப் பக்கத்தில் அமைத்தான்.

(வி-ரை.) மங்கலமாம் மணவினைகள் - கலியாணத்திலும் பின்னும் தொடர்ந்து நிகழவேண்டிய மணச் சடங்குகள்.

இயல்பின் வைகுதலாவது - சடங்குகளுள் அடங்காது தம்மியல்பில் இல்வாழ்க்கை வாழத் தொடங்குதல்.

1728. மங்கலமா மணவினைகள் முடித்தியல்பின் வைகுநாட்
டங்கள்குடிக் **கொருபுதல்வி யாதலினுற்** றனதத்தன்
பொங்கொலிநீர்நாகையினிற் போகாமே **கணவனுடன்**
அங்கணமர்ந் தினிதிருக்க வணிமாட மருங்கமைத்தான். 12

குடிக்கு ஒரு புதல்வி - வேறு ஆண் பெண் மக்களின்றித் தமது குடிக்கு அம்மையார் ஒரே புதல்வியாராக.

தங்கள் குடி - சாத்தன் தம்மூர் புகுவன் என்புழிப்போலத் **திங்கள் குடி** என்பது வேறு முடிபாதலின் பால் வழுவாகாமையுணர்க.

கணவனுடன் நாகையினிற் போகாமே என்றும், **கணவனுடன் அங்கண் அமர்ந்து** என்றும் இருவழியும் கூட்டி உரைக்க இடையில் வைக்கப்பட்டது.

இதனுல் பெண் எத்துணைச் செல்வமுடையார் மகளாயினும் மணத்தின் பின் கணவனுடன் அவனது ஊரிற்சென்று வாழ்தலே இயல்பென்பதும், அவ்வாறன்றிப் பெற்ருேரது ஊரில் தங்குதல் போதிய காரணத்தால் விதிவிலக்காகச் சிறப்பு விதியாலமைதியாக்கப் படுவதென்பதும், அவ்வாறு பெற்ருேர்களது ஊரில் இருக்க நேரிடினும் கணவனுடன் தனித்து ஏற்றவாறு தனி வாழ்க்கையாக வாழ்வதே தகுதி என்பதும், பிறவும் அந்நாளின் வழங்கிய நன்மரபு வழக்குகளாக அறிவிக்கப்பட்ட திறம் காண்க. **பொங்கு ஒலி நீர்** - கடல்.

அரும்புதல்வி - என்பதும் பாடம். *12*

1729. (இ-ள்.) மகட்கொடையின்.......கொடுத்ததன்பின் - மகளை மணஞ்செய்து கொடுத்த அதனுல் மிகவும் மகிழ்ச்சி பெருகுதற்கேதுவாக அளவில்லாத தனங்களையெல்லாம் (தனதத்தன்) கொடுத்ததன் பின்னர்; நிகர்ப்பரிய....குலமகனும் - ஒப்பற்ற பெருஞ்சிறப்பினையுடைய நிதிபதியின் மகனுகிய பரமதத்தனும்; தகைப்பில் பெரும்....மேவினுன் - அடங்காத பெருவிருப்பினுல் மனையில் தங்கியபடி இல்வாழ்க்கையின் வரும் எல்லா வளங்களையும் தனது மரபுக்கேற்ற முயற்சிகளால் பெருகச்செய்து மிகுதியாக்கும் வாணிபச் செய்கைகளில் மேன்மையடைந்த நிலையைப் பொருந்தினுன்.

(வி-ரை.) தனதத்தன் கொடுத்ததற்பின் - என்று எழுவாய் முன் பாட்டிலிருந்து வருவிக்க. அணிமாடம் மருங்கமைத்ததன்றி மற்றும் தனி வாழ்க்கைக்கு வேண்டிய தனங்களை எல்லாம் அளவில்லாது அளித்தனன்.

மகட்கொடை - பெண் கொடுத்த நிலை. **மகட்கொடையின் மகிழ் சிறக்கும் வரம்பில் தனம்** - வரம்பில்லாத சீதனப்பொருள்கள் என்க. **மகிழ் சிறக்கும் - தனம்** - மகட்கொடை

1729. மகட்கொடையின் மகிழ்சிறக்கும் வரம்பிறனங் கொடுத்ததற்பின்,
நிகர்ப்பரிய பெருஞ்சிறப்பி னிதிபதிதன் குலமகனுந்
தகைப்பில்பெருங் காதலினுற் றங்குமனை வளம்பெருக்கி
மிகப்புரியுங் கொள்கையினின் மேம்படுதன் மேவினுன். 13

நேர்ந்தபோது உடன் கொடுக்கும் சீதனத்தின் அளவே பெண்கொண்டாருக்கு உளதாம். மகிழ்ச்சியின் அளவும், அது கண்டு பெண் பெற்றுர் மகிழும் அளவுமாம் என்பது உலகியல்பிற் காணப்படும் உண்மையாதல் குறிப்பு.

கொடுத்ததற்பின் - இதுவரை மகட்கொடுத்தாரின் செயல் கூறி இனி, மகட்கொண்டார் அதனைப் பயன்படுத்தும் வகையால் கணவன் செயல் மேற்கூறுகின்றுர்.

குலமகன் - குலம் - நன்மை என்ற பொருளில் வந்தது.

தகைப்பு - அளவுப்படுதல். **காதல்** - இல்வாழ்க்கையின் விருப்பம் என்ற பொருள் தந்து நின்றது.

மனைவளம்...கொள்கை - மனையின்கண் இருந்தபடியே பெரும் இலாபங்கருதிச் செய்யும் வாணிபம். வீட்டைவிட்டு வெளியே சென்று கலம் ஏறியும், வேற்று நாடு புகுந்தும் பொருள் ஈட்டும் வாணிபமும் இவர்க்கு உரித்தாதலின் வேறுய் அறியப்படுதற்கு **மனைவளம் பெருக்கி மிகப் புரியும்** என்றுர். மற்ற வாணிபம் மேல் *1748 - 1751* வரை பாட்டுக்களிற் காண்க. **பெருக்கி மிகப் புரியும்** - பெருகச் செய்து அப்பெருக்கு மேன்மேலும் மிகும்படியும் செய்கின்ற. கொள்கை - குறித்த வாணிபம் என்ற பொருளில் வந்தது. *13*

1730. (இ-ள்.) ஆங்கவன்றன்....தாமும் - அந்த மனையகத்தில் அவனுடைய அருமை பெற்ற இல்வாழ்க்கைத் துணைவியாய் அமர்கின்ற பூங்குழலாராகிய புனிதவதியம்மையாரும்; பொருவிடையார்...மிகப் பெருக - பொரு விடையினையுடைய சிவபெருமானது திருவடிகளின்கீழ் மிகுந்த அன்பு பொருந்திய காதல் இடையருமல் மேன்மேலும் பெருகும்படி; பாங்கில்....பயில்வார்- ஒழுங்கில் வரும் இல்லறத்தின் பண்பு பிறழாமற் பயின்று வருவாராகி;

(வி-ரை.) இப்பாட்டானும் மேல்வரும் பாட்டானும் புனிதவதி யம்மையாரது மனைவாழ்க்கை நலங்களைக் கூறுகின்றுர். திருமணத்தின் பின், இல்லற வாழ்க்கை நலங்கருதித் தனதத்தனுர் செயலை ஒரு பாட்டாலும், கணவன் செயலை ஒரு பாட்டாலும் உரைத்த ஆசிரியர், அம்மையாரது செயலின் சிறப்பினை இரண்டு பாட்டுக்களாற் கூறியது, மற்று, அவர்களது செயல்கள் உலகம் பற்றிய நிலையுடன் ஒழிந்தனவாக, அம்மையாரது ஒழுக்கம் சிவச்சார்புபற்றிய உயிரின் உயர்நிலையிற் செலுத்து நெறியாதற் சிறப்பு நோக்கி, உடல் நாயகனுகிய கணவனுடன் வாழ்கின்றதும் நிலையில்லாததுமாகிய உலகநிலை இல்லறத்தை ஒரு பாட்டாலும், அதனின் மேம்பட்டு உயிர் நாயகருடனிருக்கும் பெருவாழ்க்கையை மேல்

1730. ஆங்கவன்ற **னில்வாழ்க்கை யருந்துணையா** யமர்கின்ற
பூங்குழலா ரவர்தாமும் **பொருவிடையார் திருவடிக்கீழ்**
ஓங்கியவன் புறுகாத லொழிவின்றி மிகப்பெருகப்
பாங்கில்வரு மனையறத்தின் பண்புவழா மையிற்பயில்வார்; 14

வேறொரு பாட்டாலும், கூறும் தகுதியும் காண்க. *1765*-ல் உரைப்பவை பார்க்க. அன்றியும் அம்மையாரது தூயசரித விளைவுச் சிறப்பு நோக்கி விரித்தபடியுமாம்.

ஆங்கு - "அணிமாட"மாகிய மனையின்கண் - **ஆங்கு** - **அமர்கின்ற** என்று கூட்டுக.

அரும் இல்வாழ்க்கைத் துணை என்க. வாழ்க்கைத்துணை நலம் என்ற திருக்குறட் பகுதியும் காண்க.

அமர்கின்ற - இருக்கின்ற என்றும், விரும்பப்பெறுகின்ற என்றும் உரைக்க நின்றது. **அமர்தல்** - விரும்புதல்.

அவர் தாமும் - தனதத்தனும் பரமதத்தனும் மேற்கூறியபடி நிகழ, அம்மையாரும் என உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை. சிறப்பும்மையுமாம்.

பொருவிடையார்- விடை - கொடியும் ஊர்தியும் குறித்தது.

அன்புறுகாதல் - ஒழிவின்றி மிகப் பெருகப் பாங்கில் வரும் மனையறத்தின் பண்பு - கணவனுகிய பரமதத்தன் "மனைவளம் பெருக்கி மிகப்புரியும் கொள்கையினின் மேம்பட்டான்"; மனைவியாரும் இல்லறத்தில் "காதலிருவர்கருத்தொருமித், தாதரவு, பட்டதே யின்பம்" என்றபடி அதுபோலவே ஒன்று அநேகமாக மிகச் செய்து விளைத்தல் வேண்டும் என்றபடி மனையறத்தின் பாங்கு வழாமைத் தாமும் "மிகப் பெருக"ப் பயில்வாராயினர். ஆனல் அவன் **மிகப் புரிந்தது** உலகவளம்; இவர் **மிகப் பெருகச் செய்தது** திருவடிக்கீழ் ஓங்கிய அன்புறு காதல் என்னும் பொருள், மற்று, அது பொருளல்லாத மனைவளம்; இது பொருளாகிய திருவடிக் காதல் என்றதாம்.

பாங்கில் வரும் மனையறத்தின் பண்பு - மனையறம் கணவன் கண்ட வழியிற் பிறழாது நின்றே மனைவியால் இயற்றப்படும் தன்மை.

வழாமையிற் பயில்வார்- அளித்தும் - கொடுத்தும் - உணர்வு மிக ஒழுகும் என்று மேல்வரும் பாட்டுடன் கூட்டி முடித்துக்கொள்க.

வழாமையிற் பயில்வார் என்ற தன்மையினை மேல்வரும் பாட்டில் விரிக்கின்றூர்.

மிகப் பெருகப் - பயில்வார் - வாணிபத்தாற் பொருளினைப் பெருக்குதல் வணிகர்க்குரியதாதலின் அக்குறிப்புப்பட **மிகப் பெருக** என்றூர். மேல்வரும் பாட்டில் இதனைத் தொடர்ந்து மிக என்றதும் காண்க.

பூங்கொடியார் - வழாமைப்பயில்வார் - என்பனவும் பாடங்கள். *14*

1731. நம்பரடி யாரணைந்தா னல்லதிரு வமுதளித்துஞ்
செம்பொன்னு நவமணியுஞ் செழுந்துகிலு முதலான
தம்பரிவி ஞலவர்க்குத் தகுதியின்வேண் டுவகொடுத்தும்
உம்பர்பிரான் றிருவடிக்கீ ழுணர்வுமிக வொழுகுநாள்;

1731. (இ-ள்.) நம்பர் அடியார்அணைந்தால் - சிவனடியார் வந்தணைந் தார்களாகில்; நல்ல திருவமுது அளித்தும் - நல்ல திருவமுதினை அளித்தும்; செம்பொன்னும்...கொடுத்தும் - செம்பொன்னும், நவமணிகளும், செழுமையாகிய துகில்களும் என்ற இவை முதலாயினவற்றைக் கொடுத்தும்; உம்பர்பிரான்....ஒழுகுநாள் - தேவதேவராகிய சிவபெருமான் றிருவடியின்கீழ் வைத்த உணர்வு மேன்மேற் பெருகும்படி ஒழுகி வருகின்ற நாளிலே;

(வி-ரை.) நம்பர் அடியார் - நம்பரின் அடியார் என்றும், நம்பரும் அடியாரும் என்றும், நம்பராகிய அடியார் என்றும் உரைக்க நின்றது. மேற்சரித விளைவில் "பரமனுர் திருத்தொண்டர்" (*1733*) என்பதும், அதனைத் தொடர்ந்துஅவ்வாறே "வேதங்கள் மொழிந்த பிரான் மெய்த்தொண்டர்" (*1734*), "விடையவன்றனடியாரே" (*1735*); "அல்லறீர்ப்பவ ரடியார்" (*1736*) என்பவையும் கருதுக.

அணைந்தால் - கணவன், சிவனடிமைத் திறம் பேணும் குணநலம் பெற்றுனல்லனுதலின் அவன் சென்று அடியாரைத் தேடிக்கொண்டு வரு நியதியில்லை; பாங்கில் வரு மனையறத்தின் பண்பு வழாமைப் பயில்வாராதலின் அம்மையார்தாம் மனைப்புறம் போய் அடியார்களை நாடி அழைத்து வரவும் இயைபில்லை; ஆதலின் **அடியார்தாமே அணைந்தால்** என்றது குறிப்பு.

நல்ல திருவமுது - "உண்டி நாலு விதத்திலாறு சுவைத் திறத்தினில்" (*443*) என்றபடி எல்லா நலங்களையுமுடைய திருவமுது. உண்டோர்க்கே யன்றி இட்டோர்க்கும் நன்மை பயக்கும் திருவமுது என்பதும் குறிப்பு.

செம்பொன்னும் நவமணியும் - தகுதியின் வேண்டுவ - நம்பர் அடியார்கள் பொன்னும் மணியும் விரும்பார்; ஓடுஞ் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்; ஆதலின் அவர்க்கு அம்மையார் வேண்டுவ கொடுத்து என்ற தென்னையோ?எனின், அவ்வடியார் தங்கள்பால் வேண்டிய பிறர்க்கு உதவும் பொருட்டு என்க. "நீணிதி வேண்டினர்க் கீவ, தொன்று மற்றிலேன்" (திருஞான - புரா (*424*) என்று "ஈவதொன்றெமக் கில்லையேல்" என்னும் தேவாரத்தின் பொருளை ஆசிரியர்விளக்கம் செய்தது இங்குக் கருதத்தக்கது. "இருநிதிக் கிழவன் றனே முன்பெரு நிதியமேந்தி மொழிவழி யேவல் கேட்ப" (*465*) என்ற விடத்துரைத்தவையும், இடங்கழி நாயனுர் புராண வரலாறும், பிறவுங் கருதுக.

செழுந்துகிலும் முதலான தகுதியின் வேண்டுவ - என்றது அணைந்த அடியார்களின் வயது - திருமேனி நிலை முதலிய நிலைகளின் தகுதி குறித்தது. தமது தகுதியும், பிற தகுதியுமாம். 1735 பார்க்க.

வேண்டுவ - குறிப்பாலறிந்துகொண்டு, கொடுக்க அவசியமானவற்றை. அடியார்கள் விரும்பி வேண்டுவதியல்பின்றுதலானும், வேண்டியபின் கொடுத்தல் சிறப்பின்றுதலானும் அவர்கள் தம்பாற் கேட்டவற்றை என்றுரைப்பது சிறப்பன்று. "நிலைகண்டு" (1734) என்பது காண்க.

அமுது அளித்தும் - வேண்டுவ கொடுத்தும் - அளியினால் அமுது தரப்படுதலின் அளித்து என்ற சொல்லானும், அடியார்தமக்காகவன்றி அவர்பால் வேண்டுவார்க்காகத் தரப்படுதலின் கொடுத்து என்ற சொல்லானும் கூறிய தகுதி கண்டு கொள்க.

அளித்தும் - கொடுத்தும் - உணர்வுமிக - ஒன்றுகொடுத்துப் பிறிதொன்றினைக் கொள்வது வாணிபம். இங்கு அம்மையார் அமுதினையும் பொன் முதலாயினவற்றையும் கொடுத்து, உணர்வு மிகுதல் என்ற பொருளைக் கொண்டனர் என்று அவரது மரபு பற்றிய குறிப்புப்படக் கூறிய நயமும் காண்க. **மிகப் புரியும்** - (1729) என்றும், **மிகப் பெருக** (1730) என்றும் கூறியதற்கேற்ப மிக என்றார். "தந்ததுன்றன்னைக் கொண்டதென் றன்னை" என்ற திருவாசகம் இங்குக் கருதத்தக்கது. "கோவணங் **கொடுப்ப**னென் றுலகின்மே ளுளுஞ் சொல்லு வித்ததென் கோவணங் **கொள்வது** துணிந்தோ" (527) என்றவிடத் துரைத்தவையும் காண்க.

அளித்தும் - கொடுத்தும் - மிக - திருவடிக்கீழ்க் காதல் மிகப் பெருக. மனையறத்தின் பண்பு வழாமைப் பயின்றது (1730) எவ்வாறெனின், அணைந்தால் - அளித்தும் - கொடுத்தும் வந்ததனால் கருதியபடி மிகுவதாயிற்று என்றவாறு.

திருவடிக்கீழ் உணர்வு மிகுதலாகிய காரியம், அடியார்க்கமுதும், பொன் முதலியனவும் தருதலாகிய காரணமொன்றுனே விளைவதாம் என்ற ஞானசாத்திர முடிபாகிய உண்மை விளக்கப்பட்டதும் காண்க.

மிக ஒழுகுநாள் - இயம்பினன் - என மேல்வரும் பாட்டுடன் கூட்டி முடிக்க. இவ்வொழுக்கமே அம்மையாரது மனையினுள்ளே பின்னர்ப் பரமனர் திருத்தொண்டரை அணைவித்ததும், மாங்கனியின் நிகழ்ச்சியினை விளைவித்ததும் அதனைத் தொடர்ந்து போந்த சரித விளைவுகளால் இறுதியில் "சேவடிக்கீழ் என்று மிருக்கும்" (1781) பேறு பெறுவித்ததுமாம் என்ற குறிப்புப்பெற்ற **ஒழுகுநாள்** என்று குளகம்பெறக் கூறியதுமன்றி, மாங்கனிகளின் வரவோடு முடிக்க வைத்ததுமாகிய நயமும் காண்க. 15

1732. (இ-ள்.) வெளிப்படை. தன் அளவில் கொண்ட ஒழுக்க நெறியில் பயில்கின்ற பரமதத்தனிடம் வந்தணைந்த சிலர் அவனுக்கு ஓரிரண்டு மாங்கனிகள் கொடுக்க,

1732. பாங்குடைய நெறியின்கட் பயில்பரம தத்தனுக்கு
மாங்கனிக ளோரிரண்டு வந்தணைந்தார் சிலர்கொடுப்ப
வாங்கவைதான் முன்வாங்கி **யவர்வேண்டுங் குறையளித்தே**
"யீங்கிவற்றை யில்லத்துக் கொடுக்க" வென வியம்பினான். 16

அவ்விடத்தில் அவற்றைத்தான் முன்வாங்கிக்கொண்டு, அவர்கள் வேண்டி வந்த காரியங்களை முடித்துக் கொடுத்தே, "இங்கு இக்கனிகளை வீட்டில் கொண்டுபோய்க் கொடுக்க" என்று சொன்னான்.

இந்த மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டுரைக்க நின்றன.

(வி-ரை.) பாங்குடைய நெறி - இங்கு இல்வாழ்க்கைப் பாங்கும் வணிக மரபுத் தொழின்முறைப் பாங்கும் கொண்ட நெறி குறித்து நின்றது.

ஓர் இரண்டு மாங்கனிகள் - என்க. **ஓர்** - ஒப்பற்ற என்றும், நினைக்கத் தக்க என்றும் பிற்சரித நிகழ்ச்சிக் குறிப்புப்பட உரைக்க நின்றது. **இரண்டு** என்னாது **ஓர் இரண்டு** என்றது அவை யிரண்டும் ஒன்றுபோலன்றி, ஒன்று கணவனுக்கும் மற்றொன்று அடியாருக்குமாக, ஒன்றொன்று வெவ்வேறு திறம்பட நின்றனவாகி வெவ்வேறாகிய ஒவ்வோர் திறமுடைய இரண்டு என்றுரைக்கவும் நின்றது. அவற்றுள் ஒன்று ஒருமுறை அடியாருக்கும் ஒருமுறை கணவனுக்கும் உணவாய் நின்றதன்றி மறுமுறை திருவருட் சான்றாகவும் வந்ததோர் நிலையும் குறிப்பு.

ஆங்கு அவைதான் முன் வாங்கி - ஆங்கு மனையிடத்தன்றி வாணிபம் செய்யும் தொழிலிடத்தில் முன் வாங்கி - வந்தணைந்தவராகிய அவர்கொடுப்ப, அவர்கொடுக்கு முன்பே அன்புடன் வாங்கி. **முன் வாங்குதல்** - அதனை ஏற்கும் முறையால் அன்பினை வெளிப்படுத்தும் செயல் என்க. அவற்றை இல்லத்துப் பின்னர் அம்மையார் கைக்கொண்டு வாங்கி வைப்பாராதலின் (1733) பரமதத்தன் **முன் வாங்கினான்** என்றதுமாம். **தான்** என்ற குறிப்புமது. பின் **அதிசயித்து வாங்**குவா (1745) ஞதலின், இங்கு அந்நிலை பின்னர்ப் பெற **முன்** வாங்கினான் என்ற குறிப்புமாம்.

வாங்கி அவர் வேண்டும் குறை அளித்தே - கனி கொடுத்தார் ஒரு குறையினை வேண்டிப் பரமதத்தனிடம் வந்தனர் என்பதாம். **குறை** - இன்றியமையாது வேண்டும் காரியம். **குறை அவித்தல்** - குறை நீக்கி நிறைவாக்கிக் கொடுத்தல். **அளித்தல்** - அன்புடன் செய்தல் குறித்தது. பெரியோரிடமும் அரசர் முதலாயினோரிடத்தும் தெய்வத்திடத்தும் ஒருகுறை வேண்டினோர் பழம் முதலிய கையுறை கொண்டு சென்று வைத்துக் கண்டுகொள்வது வழக்கு.

"ஈங்கு இவற்றை இல்லத்துக் கொடுக்க" இது தன் ஏவலரிடம் பரமதத்தன் கூறியது. என இயம்பக் கனிகளை இல்லத்துக்கு அனுப்பினான் என விரித்துரைக்க. ஈங்கு - தொழிலிடமாகிய இங்கு நின்றும். தொழிலிடம் வேறு; மனையிடம் வேறு ஆகும் மரபும் காண்க.

1733. **கணவன்றான் வரவிடுத்த கனியிரண்டும் கைக்கொண்டு
மணமலியு மலர்க்கூந்தன் மாதரார் வைத்ததற்பின்,
பணவரவம் புனைந்தருளும் பரமனார் திருத்தொண்டர்
உணவின்மிகு வேட்கையினா லொருவர்மனை யுட்புகுந்தார்.** 17

இயம்பினான் - வந்தணைந்து மாங்கனி கொடுத்த அவர்களிடமே இயம்பினான் என்றுரைத்து அவ்வாறு அவர்கள் கொடுப்பப் பின்னர் அம்மையாரும் வாங்கிய படியால் ***முன் வாங்கி*** என்றுரைப்போருமுண்டு. ***16***

1733. (இ-ள்.) கணவன்றான்.....வைத்ததற்பின் - அவ்வாறு கணவன் அனுப்பிய இரண்டு கனிகளையும் கையிற் பெற்றுக்கொண்டு மணம் பொருந்திய மலர்க் கூந்தலினையுடைய அம்மையார் இல்லத்தில் வைத்ததன் பின்பு; பண அரவம்.....புகுந்தார்- படத்தினையுடைய பாம்புகளை அணிந்தருளும் சிவபெருமான் திருத்தொண்டர் உணவில் மிக்க விருப்புடன் ஒருவர் திருமனையினுள்ளே புகுந்தனர்.

(வி-ரை.) இப்பாட்டு முன்னிரண்டடிகளில் ஒரு தொடர்பும், பின் இரண்டடிகளில் வேறு ஒரு தொடர்புமாகக் கொண்டு நிற்பது குறிக்க.

வரவிடுத்த கனியிரண்டும் கைக்கொண்டு - "இல்லத்துக் கொடுக்கவென இயம்பினான்" என முன் பாட்டில் முடித்தபடி அவ்வாறு விடுத்த என்க.

மணமலியும் மலர்க்கூந்தல் - "பூங்குழலார்" *(1730)*; மணம் - இங்கு இயற்கை மணம் குறித்தது.

மணமலியும்...வைத்ததற்பின் - இவ்வடி முற்றுமோனை. அம்மையார் "பாங்கில்வரு மனையறத்தின் பண்புவழா மையிற்பயின்ற" உலக இல்லற வியல் இதனோடு முற்றுப் பெறுகின்றது; இனி இத்தொடர்பினின்றும் "திருவடிக்கீழ் உணர்வு மிக" நிற்கும் சிவச்சார்பாகிய திருத்தொண்டி னியல் மேல்வருவதாகும் என்று குறிக்க இவ்விரண்டு ஒவ்வோர்பாதியாக இவ்வொருபாட்டிற் சேரத்தொடுத்ததுமன்றி, முன்னைய உலகவியல் முற்றியநிலை காட்டுவார்முற்றுமோனை தந்தும் ஓதினார். அதனோடமையாது பின் என்ற சொல்லாற்றலால் மேற் சரித வியல்பின் றொடக்கத்தையும் குறித்த நயமும் காண்க.

பரமனார் திருத்தொண்டர் - "நம்பரடியார்" *(1731)* என்ற விடத்துரைத் தவை பார்க்க. பரமனாரே திருத்தொண்டரென வந்து புகுந்தார் என்ற குறிப்பும் காண்க. "விடையவன்ற னடியாரே, பெறலரிய விருந்தானாற் பேறிதன்மே லில்லையெனு"ம் *(1735)* மெய்யறிவுடன் அவரை ஊட்டுவித்தபடியே உண்ணின்று உண்டவர் பரமனாரேயாம். ஆதலினன்றே அவருண்ட மாங்கனி மீண்டும் அதிமதுரக் கனியாக வந்து கிடைத்ததுமன்றி மேலும் சான்று பகர்தற்காக வந்ததாகும்.

உணவின் மிகுவேட்கை - மிக்க பசி, பசியின்றியே பலமுறையும் உணவு உட்கொள்ளுதலும், மீதூண் விருப்பத்தினால் உணவுண்ணுதலும் உடல் நலத்திற்கும் ஆயுள்

1734. வேதங்கண் மொழிந்தபிரான் **மெய்த்தொண்டர் நிலேகண்டு**
"நாதன்ற **னடியாரைப் பசிதீர்ப்பே**" னெனநண்ணிப்
பாதங்கள் விளக்கநீர் முன்னளித்துப், பரிகலம்வைத்
தேதந்தீர் நல்விருந்தா வின்னடிசி லூட்டுவார், 18

பெருக்கத்திற்கும் மாருன தீயொழுக்கங்கள். முற்றப் பசித்த பின்பு உண்ணுதலே முந்தையோர் முறையாதலின் இங்கு உணவின்மிகு வேட்கை என்றதனல் மிக்க பசி உணர்த்தப்பட்டது. இதனை உணர்ந்தே அம்மையாரும் "மெய்த் தொண்டர்நிலே கண்டு பசி தீர்ப்பேன்" என்று, கறியமுதங் குதவாத போதும் திருவமுதினைக் கனியுடன் ஊட்டினுர் என்க.

ஒருவர் மனையுட் புகுந்தார் - தொண்டர் ஒருவர் என்றும், ஒருவரது (அம்மையாரது) மனை என்றும் உரைக்க நின்றது. கணவனுர் வாணிபத் தொழில் செய் இடத்தில் இருக்கத் தனித்து ஒருவராய் அம்மையார் இருந்தார் என்றதும் காண்க. "மாதரார் தாமிருந்த இடவகையிற் றனிபுகுதோம்" (சிறுத் - புரா - *38*) என்று சிறுத்தொண்டர் மனையினில்லாது தனித்துத் திருவெண்காட்டு நங்கையார் இருந்த மனையினுள் தனி புகுதோம் என்று உத்தராபதியாராகி வந்த இறைவர் மறுத்தது விதியாயிருப்பவும், இங்குப் பரமனுர் திருத்தொண்டர் ஒருவர் மனையுட் புகுந்த தென்னையோ? வெனின், உணவின் மிகுவேட்கையால் "பத்தும் பசி வந்திடப் பறந்து போம்" என்ற நீதியின் பாங்கு அறிவிக்க என்க. அன்றியும், அம்மையார் பரமனுர்க்குத் தாயாகிய அம்மை எனப் பெறும் தன்மையினுல் தாயினிடத்துச் சேய் புகுதல் போலப் புகுந்தமையால் அந்நியதியின் மாறுபாடின்று என்பதும் பெறப்படும். விருத்த குமாரபாலரான திருவிளையாடலுங் காண்க.
17

1734. (இ-ள்.) வெளிப்படை. வேதங்களைச் சொல்லியருளிய பெருமானுடைய மெய்த்தொண்டரது மிகப் பசித்த நிலேயினைக் கண்டு, "சிவனடியாரை விரைவாகப் பசி தீர்த்து அமுதளிப்பேன்" என்று சென்று முன்னர்ப் பாதம் விளக்கும் பொருட்டு நீர்அளித்துப் பரிகலம் திருத்தியிட்டுக் குற்றந்தீர்க்கும் நல்ல விருந்தாகக் கொண்டு இனிய அடிசிலே ஊட்டுவாராகி,

(வி-ரை.) நிலே - மூப்பின் தளர்வாலும் மிக்க பசியினுலும் அயர்ந்த நிலே. *1737* பார்க்க.

நாதன் தன் அடியாரை - நாதனுடைய அடியாரை. நண்ணி - மனையகத்துள் நண்ணி, முன்னரே மனையிடத்துள் இருந்தாரேனும், இப்போது நண்ணியது பசி தீர்க்கும் செயலுக்குரிய மனையிடத்துள் என்க.

முன் பாதங்கள் விளக்க நீர் அளித்து - என்க. **முன்** - இது முதலிற் செய்யப்படவேண்டிய உபசாரம் என்பதாம். பாத்தியம் என்பர். "கொண்டு வந்து மனைப்புகுந்து குலாவு பாதம் விளக்கியே" (*443*); "அவர்தாள் **முன்** விளக்கும் புனைமலர்நீர் தங்கண்மேற் றெளித்துள்ளும் பூரித்தார்" (அப்பூதி - புரா- *20*).

1735. கறியமுதங் குதவாதே திருவமுது கைகூட,
வெறிமலர்மேற் றிருவனையார் "விடையவன்ற னடியாரே
பெறலரிய விருந்தானாற் பேறிதன்மே லில்லை"யெனும்
அறிவினரா, யவரமுது செய்வதனுக் காதரிப்பார், 19

பரிகலம் - உண்கலமாகிய வாழைக்குருத்து. அப்பூதியார்புராணம் பார்க்க. அது கிடையாதபோது ஏனையிலைகளும் கொள்வது நூல் வழக்கிலும் உலக வழக்கிலும் வந்தது. உலோகங்களாற் சமைந்த கலங்களையும் சுடுமட்கலங்களையும் பரிகலமாகக் கொள்ளுதல் பிற்றைநாள் அநாகரிக வழக்கு.

ஏதம் - முதற்கண் உண்பாருடைய பசிப்பிணியும், அதுகாரணமாகப் பின்னர், உண்பிப்பாருடைய பிறவிப்பிணியினையும் குறித்து உரைக்க நின்றது.

நல்விருந்து - விருந்து இங்குப் புதிதாய் வந்த அடியார் என்ற பொருளில் வந்தது. "இம்மடத்தினிற் காணும் படியிலாதநீர்"(*511*) என்ற கருத்து. தென்புலத்தார் முதலாகிய ஐவருள் வைத்து, உலகர்கொள்ளும் ஏனை "**விருந்து**" என்ற பகுதியினின்றும் பிரித்தற் பொருட்டு "**நல்**விருந்து" என்றார். விருந்தோம்பல் முதலாக வைத்தெண்ணப்படுவன பசுதருமங்களாய் நற்பலன் தந்தபோதிலும் காலாந்தரத்திற் பிறவிக்கேதுவாவன. இங்கு இவ்"விருந்து" அவ்வாறன்றிப் பிறவியை நீக்கி முத்திக்கு வழியாவது என்பது குறிப்பு. "ஏதந்தீர்" என்ற குறிப்புமது. பின்னர்க் கணவனை ஊட்டுவதைக் "கடப்பாட்டி லூட்டுவார்" (*1738*) என்பது காண்க.

நல்விருந்தா - நல்ல விருந்தாக. **ஆக** என்றது **ஆ** என ஈறு குறைந்து நின்றது. "பெறலரிய விருந்தானால்" என இக்கருத்தை வரும்பாட்டில் விளக்கியது காண்க. "விருந்து" புதுமை என்ற மட்டில் அமைந்தது; அதுவரை அடியார்களுட் கலந்து வந்ததேயன்றி இவ்வாறு தாமாந் தன்மையிற் பட்டுப் புதிதாய் வந்தாரலர் என்பது குறிப்பு. *18*

1735. (இ-ள்.) வெறிமலர்மேல் திருவனையார்- மணமுடைய மலர்மேல் உள்ள திருவினைப் போன்ற அம்மையார்; கறியமுது...கைகூட - அப்போது கறியமுது உதவாமல் திருவமுது மட்டும் கைகூடிய நிலையில் இருக்க; விடையவன் தன்....அறிவினராய் - இடபத்தையுடையவரின் அடியவரே தேடிப்பெறுதற்கரிய விருந்தாக இங்கு வந்து கிடைப்பாரானால் இதன் மேலும் பெறத்தக்க பேறு வேறில்லை என்னும் துணிவுடையவராய்; அவர்...ஆதரிப்பார் - அவர்அமுது செய்வதனுக்குரிய செயலை அன்புடன் செய்வாராய்,

(வி-ரை.) கறியமுது அங்கு உதவாதே - கறியமுது - திருவமுதுடன் கூட்டுணவாகக் கொள்ளும் கறிவகைகள்; **அங்கு** - அதுபோழ்து - அதுகாலை என்று காலஞ்சுட்டிற்று; **உதவுதல்** - உண்பிக்கச் சித்தமாகி இருத்தல். "இன்னடிசிலாக்கி.... கறிக்கினியென் செய்கோமென்று" (*459*); "தூயநற் கறிக ளான வறுவகைச் சுவையா லாக்கி, யாயவின் னமுது மாக்கி" (அப்பூதி - புரா - *23*); "பலவுமற்றுங் கறிசமைத்து" (சிறுத் - புரா - *66*) முதலியவை காண்க.

1736. இல்லாளன் "வைக்க"வெனத் தம்பக்கல் முன்னிருந்த
நல்லநறு **மாங்கனிக ளிரண்டினிலொன் றைக்கொண்டு,**
வல்விரைந்து வந்தணைந்து, படைத்து,மன மகிழ்ச்சியினுல்
அல்லறீர்ப் பவரடியார் தமையமுது செய்வித்தார். 20

திருவமுது கைகூட **- *திருவமுது*** - அடிசில். கறியமுது அடைக்காயமுது என ஏனையவை ஒவ்வோர் அடைமொழிகளால் வெவ்வேறுணர்த்தப்படச், சிறப்பும் முதன்மையும் பற்றி அடிசில் (சோறு), சிறப்புணர்த்தும் அடைமொழிகளின்றித் **திருஅமுது** என்ற பொதுப் பெயராலுணர்த்தப்படும். **கைகூடுதல்** - சித்தமாயிருந்து உதவுதல். கை - பகுதிப்பொருளை உறுதிப்படுத்தும் முன் னொட்டுமொழி. உபசர்க்கம் என்பர் வடவர். அஃதாவது - திருஅமுது மட்டும் சமைக்கப்பட்டு ஏனைக்கறி வகைகள் ஒன்றும் சமைக்கப்படாத முற்பகல் நேரம் என்பதாம். "பெரும்பகலின்கண்" (*1738*) எனப் பின் வணிகன் வந்த நேரத்தைக் கூறுவதும் காண்க.

வெறிமலர்மேல் *திருஅனையார்* **- வெறிமலர்** - உச்சியிலிருக்கும் ஆயிரம் இதழ்த் தாமரை எனப்படும் யோகத்தானம், ஞானம்பிகை எழுந்தருளியிருக்கும் தாமரை. திரு - முத்தித்திருவின் முதல்வி. "திருமடந்தை" (*1718*) என்ற விடத்துரைத்தவை காண்க,

அடியாரே பெறல் அரிய விருந்தானுல் - ஏகாரம் சிவனடியார்கள் விருந்தாகி வந்து உதவும் அருமை தெரிந்து நிற்றலிற் பிரிநிலை. அறிவு - அறிந்துகொண்ட துணிபு என்ற பொருளில் வந்தது.

ஆதரித்தல் - அன்புடன் வழிவகை சூழ்ந்து ஏற்றன செய்தல். *19*

1736. (வி-ரை.) இல்லாளன் - இல் - வீடு; வீட்டுக்கு உடையவன்; ஆள்பவன். மாங்கனியிரண்டும் தனக்கேயாக்கி மனைவியார்க்கும் பிறர்க்கும் இல்லையாக்கிக்கொண்டவன். அதன்பயனும், அந்த இல்லும் தனக்கில்லாதவனுவன் என்ற குறிப்புப்பட இப்பெயராற் கூறிய நயமும் காண்க.

வைக்க என - இது, கனிகள் கொண்டு வந்த ஏவலன் மூலம் கணவன் கூறிவிடுத்த செய்தி. **என - இருந்த** - என்று கொடுத்ததன் மூலம் தம்மிடம் இருந்த.

நல்ல நறுமாங்கனிகள் - இரண்டு அடைமொழிகள், அக்கனிகள் பயன்படுமாற்றைப்பற்றிய தன்மைபற்றி இருவகை குறித்தன. நல்ல கனி யொன்று - நறுங் கனியொன்ருக உள்ள கனிகள் என்க. இவற்றுள் முறையே **நல்ல கனி** முதலில் நல்விருந்தாகிய நம்பரடியார்க்கும், மற்றை **நறுங்கனி**, "மதுரமிக வாய்ந்து நாவின் 'இனிய சுவை' மட்டில் லமைந்ததாய், உடம்பினேடு கழியும் சுற்றமாகிய கணவனுக்கும் பயன்படும் வகையும் கருதுக.

ஒன்றை - ஒப்பற்றதை என்ற குறிப்பும்பட நின்றது. அவ்வொன்றே முதலில் அடியார்க்காகி, அதன்மூலம் இறைவனுக்கு ஆகிப், பின்னர் அருள் வெளிப்பாடு பெறக்

1737. **மூப்புறுமத் தளர்வாலு** முதிர்ந்துமுடு கியவேட்கைத்
தீப்பசியி னிலையாலு மயர்ந்தணைந்த திருத்தொண்டர்
வாய்ப்புறுமென் சுவையடிசின் மாங்கனியோ டினிதருந்திப்
பூப்பயின்மென் குழல்மடவார் **செயலுவந்து** போயினார். 21

கணவனுக்குமாகி முடிவில் உண்மை புலப்படுக்கும் சான்றுகவும் பயன்படும் சரித விளைவினுல் ஒப்பற்றதேயாம் என்க.

வல் விரைந்து அணைந்து படைத்து - நிலைமை கண்டு நாதன்ற னடியாரைப் பசி தீர்ப்பதில் அம்மையார்க்குள்ள ஆர்வத்தின் மிகுதிப்பாடு பற்றிய விரைவு. வல்விரைந்து என்ற ஒரு பொருட் பன்மொழி விரைவின் மிகுதி குறித்தது. வந்து - அணைந்து - படைத்து என்ற வினையெச்சங்களின் விரைந்த தொடர்பும் அப்பொருளைப் புலப்படுத்துவன.

மனமகிழ்ச்சி - நாதன்றனடியார் பசி தீரக் கண்ட மகிழ்ச்சி.

அல்லல் தீர்ப்பவர் அடியார்தமை - அல்லல் தீர்ப்பவர் தமை - அடியார்தமை என்று பிரித்துரைக்கவும் நின்றது.

அல்லல் தீர்ப்பவர் - "பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல் சிறந்து" சிவன் சேவடிக்கடிமை பழகிவரும் பாங்கு பெறக் காதல் ததும்ப வரும்மொழி பயின்று, "எஞ்ஞான்று தீர்ப்ப திடர்?" என்று விண்ணப்பித்து நின்ற அம்மையார் வேண்டியவாறே இறைவர், அல்லல் எல்லாம் தீர்க்கப்புகும் இடம் இதுவாதலின் இச் சிறப்பாற் கூறினுர்.

கண்டு - நண்ணி - அளித்து - வைத்து - ஊட்டுவார் (*1736*) - திருவனையார் - அறிவினராய் - ஆதரிப்பார் (*1735*) - கொண்டு - அணைந்து - படைத்து - அமுது செய்வித்தார் (*1736*) என இம்மூன்று பாட்டுக்களையும் தொடர்ந்து முடித்துக்கொள்க. *20*

1737. (இ-ள்) மூப்புறும்... திருத்தொண்டர் -மூப்பினால் வருகின்ற அந்தத் தளர்ச்சியினாலும், முதிர்ந்து பெருக்கெடுத்த உணவு பெறும் விருப்பத்தை எழுவிக்கும் வயிற்றுத் தீயின் செயலால் விளைந்த பசியின் நிலையினாலும் அயர்ச்சி கொண்டு அங்கு வந்து அணைந்த திருத்தொண்டர்; வாய்ப்பு உறும்... இனிது அருந்தி - வாய்ப்புப் பொருந்தியதாய், மெல்லியதாய்ச், சுவையினையுடைத்தாய்ப் பெற்ற அவ்வடிசிலினை அத்தன்மைத்தாகிய கனியினோடும் இனிது உண்டு; பூப்பயில்...போயினார் - மலர்கள் பொருந்திய மெல்லிய குழலினையுடைய அம்மையாரது அன்பின் மிக்க செயலினை உவந்துகொண்டு போயினார்.

(வி-ரை) அயர்ந்து அணைந்த - அயர்ச்சிக்குக் காரணம் மூப்பின் தளர்வும், பசியின் முடுக்கமுமாம் என்பது. **திருத்தொண்டர்** என்ற சிறப்பினால் வந்த தொண்டர் இவ்வயர்ச்சியினைக் குறிவைத்து அணைந்தாரல்லர் என்றும், பின்னும் அம்மையாரது அன்பின் சிறப்பினை விளக்க அணைந்தவர் என்றும் குறித்தபடி. தமது அயர்ச்சியினை அவர் கூறினாரில்லை; அம்மையார் குறிப்பினால் நிலைகண்டுணர்ந்து பசி தீர்க்க ஆதரித்தார் என்றதும் இதனை வலியுறுத்தும்.

1738. மற்றவர்தாம் போயினபின், **மனைப்பதியா கியவணிகன்**
உற்றபெரும் பகலின்கண் ணோங்கியபே ரில்லெய்திப்,
பொற்புறமுன் னீராடிப் புகுந்தடிசில் புரிந்தயிலக்
கற்புடைய மனையாருங் கடப்பாட்டி லூட்டுவார். 22

திருத்தொண்டர் - முன் பரமனார் திருத்தொண்டர் - பிரான் மெய்த்தொண்டர் - விடையவன்றனடியார் - அல்லறீர்ப்பவர் அடியார் என்று பெருமானொடு சார்த்திக் கூறிய ஆசிரியர் இங்குத் தனிமையிற் கூறியது என்னை? எனின், "**உவந்து போயி**னார்" என்றும் "**போயின பின்**" என்றும் வரும் செயலுடன் பொருந்தும் பொருட்டென்க.

வாய்ப்பு உறும் - அன்பின் பெருவாய்ப்புப் பொருந்திய. முன் பல காலமும் "நம்பர் அடியா ரணைந்தா னல்ல திருவமுதளித்த" தெல்லாம் அன்பின் செயலே யாமாயினும் இங்கு அந்த அன்பு, முற்றிய நிலையடையும் தன்மை பொருந்தியது என்க. **மென் சுவை வாய்ப்பு உறும்** என்று கூட்டியுரைப்பாருமுண்டு.

பூப்பயில் மென்குழல் மடவார் - "பூங்குழலார்" (*1730*); "மணமலியு மலர்க் கூந்தல் மாதரார்" (*1733*); "நறுங் கூந்தல்" (*1739*); "மொய்தருபூங் குழன்மடவார்" (*1744*) என்று பன்முறையும் இத்தன்மைபற்றிக் கூறியது இறைவரது திருவடிமலர் முடிக் கணிந்து இறவாத நாயகன்பால் என்றுமிருக்கின்ற தன்மைபற்றி என்க.

செயல் - பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் சேவடியே சேர்ந்து, அண்டர்பிரான் திருவார்த்தையே பயின்று, தொண்டர்வரிற் றொழுது வந்தது முதல், அன்று, அடியார் நிலை கண்டு ஏற்றவாறு முன் அமுதூட்டியது வரை உள்ள செயல்களின் தொகுதி.

உவந்து போயினார் - உவப்புக்குரியபடி விரைந்து பயன் தருதல் குறிப்பு. *21*

1738. (இ-ள்.) மற்று அவர்தாம் போயினபின் - மற்று அத்தொண்டர் போயின பின்; மனைப்பதி... அயில - மனையின் உடையவனாகிய பரமதத்தன் நண்பகலில் மிகப் பெரியதாகிய அவ்வீட்டில் வந்து சேர்ந்து முன் அழகு பொருந்தக் குளித்து உட்புகுந்து உணவினை விரும்பி உண்ண; கற்புடைய....ஊட்டுவார் - கற்புடைய மனைவியாராகிய அம்மையாரும் தமது மனைக் கடமை முறைப்படி கணவனை உண்பிப்பாராகி,

(வி-ரை.) மற்று அவர்தாம் - மற்று - என்பது வினை மாற்றின் கண்ணும், **தாம்** என்பது சிறப்பின் கண்ணும் வந்தன. **அவர்** - திருத்தொண்டர் என்று முன்பாட்டிற் கூறிய அவர் என முன்னறி சுட்டு.

மனைப்பதி - **பதி** - முதல்வன் - உடையவன். இவனது முதன்மைத் தன்மை - உடைமைத் தன்மை - இவ்வீட்டின் மட்டில் நின்று ஒழிவது என்பதும், முன்போயின அவருடைய (முதன்மை) உடையராந் தன்மை மேலும் செல்வதென்பதும் குறிக்க மனைப்பதி என்றார். அவர் போலன்றி இவன் மனைப்பதி மட்டுமாவன் என்பதாம்.

உற்றபெரும் பகலின்கண்...எய்தி பெரும்பகல் - பகல் பதினைந்து நாழிகையளவில் உள்ள நாட்கூறு. இதுவே முன்னுளில் உணவுண்ண வகுத்த வேளை என்க. அதற்குமுன் ஒருமுறை இருமுறையும் சிற்றுணவு பேருணவு உட்கொள்ளும் இந்நாளின் புது வழக்கு நோய்க் கிடமாவதாம். "ஒருபோது யோகி இருபோது போகி முப்போது ரோகி" என வழங்கும் முதுமொழியும், "இரண்டு பொழுதும் பறை நிகழ்த்திச் சொல்லாற் சாற்றிச் சோறிட்டார்" (*1524*) என்றதும் காண்க. "Noon Breakfast" என்ற முறையைக் கைக்கொள்ளத் தொடங்கும் நவீனர் வழக்கும் காணத் தக்கது.

ஓங்கிய பேர்இல் எய்தி - அன்று அடியார் "ஒருவர்" திருவமுது செய்தமையால் **ஓங்கிய** என்றும், அடுத்துத் திருவருள் வெளிப்பாடுபெற உள்ளமையால் பேர் என்றும் சிறப்பித்தார். **இல் எய்தி** - தொழில் செய்யுமிடத்தினின்றும் என்க. அது இல்லினின்றும் வேறிடத்தமைந்தது என்பது முன்னர் "இல்லத்துக் கொடுக்க" என்பதனுலும் பெறப்பட்டது.

முன் நீராடிப் புகுந்து அடிசில் புரிந்துஅயில - முன் - தொழில் செய்யுமிடத்தினின்றும் வந்தமையாலும் நீராடி நியமமுடித் துண்ணுதல் முறைமையாதலாலும் முன் நீராடி என்றுர். புகுந்து - உணவு கொள்ளும் தனியிடம் புகுந்து. அடிசில் புரிந்து - உணவு விரும்பியிருக்க என்க. "இருக்க" என்றது இசையெச்சம்.

அயில - அயிலும்படி - உட்கொள்ளும்படி. அயில - ஊட்டுவார் (*1738*) இட்டதற்பின் - கொடுவந்து - அளித்தார்- (*1739*) என்று வரும்பாட்டுடன் முடிக்க.

கற்புடைய மனையாரும் - வணிகன் - புரிந்து (இருக்க), மனையாரும் ஊட்டுவார் என்றும் உம்மை இறந்தது தழுவிய எச்ச உம்மை. **கற்புடைய மனையார்** என்றதனுல் இங்கு ஊட்டியது மனைவியார் என்ற நிலையில் மனையறத்தின் வழாது காக்கவேண்டிய கற்பின் கடமைபற்றி என்பது குறிப்பு. **கடப்பாட்டின்** என்ற கருத்துமிது. முன்னர் "நாதன்ற னடியாரைப் பசிதீர்ப்பேன்" என்று கொண்டு "**ஏதந்தீர் நல்விருந்தா** வின்னடிசில் ஊட்டுவார்" (*1734*) என்றது சிவனடிமைத் திறத்தின் வந்த திருத்தொண்டின் உரிமை பற்றி யாதலில் அதனின்றும் பிரித்துணரும்படி இங்குக் "கற்புடைய மனையாரும் கடப்பாட்டின்" என்றுர். கடப்பாடு - இப்பிறவியில் வந்த உடற்சுற்றமாகிய கணவனுக்குச் செய்யும் கடமைத்திறம். பின்னர் "மன்னிய கற்பினேடு மனையறம் புரிந்து வைக" (*1755*) என்று கணவனைச் சிலகாலம் பிரிந்திருந்த நிலையிலும், "இவனுக்காகத் தாங்கிய வனப்பு நின்ற தசைப் பொதி கழித்திங்கு" (*1765*) என்று அவனை முற்றும் பிரியும் நிலையிலும் இக்கருத்தே பற்றிக் கூறுதலும் கருதுக.

மடவாரும் - என்பதும் பாடம். *22*

1739. (இ-ள்.) இன் அடிசில்.....இட்டதற்பின் - இனிய திருவமுதினைக் கறி வகைகளுடன் பொருந்தும் முறையில் வைத்ததன் பின்பு; மன்னியசீர்......இருந்ததனை - பொருந்திய சிறப்புடைய கணவன்தான் முன்பு மனையினிடை அனுப்பி வைப்பித்தபடி உள்ள நல்ல சுவை பொருந்திய மாங்கனிகளில் எஞ்சி நின்ற ஒன்றை; நறும் கூந்தல்....அளித்தார்-

1739. இன்னடிசில் கறிகளுட னெய்துமுறை யிட்டதற்பின்
மன்னியசீர்க் கணவன்றான் மனையிடைமுன் **வைப்பித்த**
நன்மதுர மாங்கனியி லிருந்ததனை நறுங்கூந்தல்
அன்னமனை யார்தாமுங் கொடுவந்து **கலத்தளித்தார்.** 23

நறுமணம் பொருந்திய கூந்தலினையுடைய அம்மையாரும் கொண்டுவந்து பரிகலத்தில் அளித்தனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை.) இன்அடிசில்...கறிகளுடன் இட்டதற்பின் - "சித்தந் தெளிந்தவர்சேடம் பருகிடின், முத்தியா மென்று மூலன் மொழிந்ததே" (*7-164*) என்று திருமூலதேவர் எடுத்தோதும் சிறப்பு வாய்ந்து இங்குத் திருத்தொண்டர் அருந்தி மிகுந்திருந்தது இவ்வடிசில் ஆதலின் இன் அடிசில் என்று சிறப்பித்தார்; கறிகள் அங்கு அடியார்க் குதவாதன ஆதலின் சிறப்பு அடைமொழியின்றி வாளா கூறினர்.

எய்துமுறை இட்டதற்பின் - எய்துமுறை - பொருந்தும் முறையாவது பரிகலத்தில் இடும் வகையும் உண்ணும் வகையும் நோக்கி அவ்வக்காலமும் இடமும் பொருந்துதல். இடுதல் - அவ்வாறு பொருந்த இடுதல் குறித்தது. பின் - கறிகளின் பின் கனி உண்ண உதவு முறையிலும் இடத்திலும்.

வைப்பித்த - வைக்கவென்று சொல்லிப் பிறர்மூலம் அனுப்பினபடி வைக்கச் செய்த. வணிகன் தனக்கென்று கருதி வைப்பித்தான் என அம்மையார் கருதினர் என்று குறிக்கக் கணவன் **தான்** வைப்பித்த என்றார்.

நன் மதுர மாங்கனியில் இருந்ததனை - நன்மை கொண்டதும் சுவை கொண்டதுமாகிய கனிகள் இரண்டு. முன்னரும் "நல்லநறு மாங்கனிகள்" (*1736*) என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க. இரண்டனுள் நலம் பெற்றது அடியார்க் காயினமையின், சுவை அளவில் நின்றது எஞ்சியிருந்தது; அதனை என்க. சுவை மட்டில் கொண்ட தென்பது மேல், "மதுரமிக வாய்ந்தகனி" (*1740*) என்பதனாலும் பெறப்படும். **இருந்ததனை** - எஞ்சியிருந்ததை; **எஞ்சி** என்பது எஞ்சி நின்றது.

தாமும் - தான் வைப்பித்த கனியைக் கொண்டு அவ்வாறே வைத்த அவர்தாமும் என எச்ச உம்மை.

கலம் - பரிகலம். **அளித்தார்** - அன்புடனிடுதல் குறித்தது. 23

1740. (இ-ள்.) மனைவியார்...ஆராமை - மனைவியார்தாம் கொடுவந்து கலத்தில் அளித்த மிக்க மதுரம் வாய்ந்த அந்த மாங்கனியினை நுகர்ந்ததன் சுவையினால் ஆசை நிரம்பப் பெறாமையால்; தார்வணிகன் - மாலை யணிந்த வணிகனாகிய பரமதத்தன்; இனியது....என

1740. **மனைவியார்தாம்படைத்த மதுரமிக வாய்ந்தகனி**
தனைநுகர்ந்த வினியசுவை யாராமைத் தார்வணிகன்
"இணையதொரு பழமின்னு முளததனை யிடுக!"வென,
வனையதுதாங் கொண்டுவர வணைவார்போ லங்ககன்றார். 24

- இதனைப்போன்ற பழம் ஒன்று இன்னும் உள்ளது; அதனையும் இடுக என்று சொல்ல; அனையது......அகன்றார்- அனையதனைத் தாம் கொண்டுவரச் செல்வார்போல அங்கு நின்றும் நீங்கினார்.

(வி-ரை.) மனைவியார்தாம் படைத்த மதுரமிக வாய்ந்த - படைத்ததனால் தன்னியல்பின் மேலும் உறுசுவையினை வாய்க்கப் பெற்ற என்பது. அன்புடன் இடும் உணவு, இயல்பிற் சுவை பெறுவிடினும் சுவை பெறுமென்பதும் அவ்வாறு படைக்கப்படாதது இயல்பிற் சுவையுடைத் தேனும் சுவை பெறுதென்பதும் நீதி. இங்கு அதன் மேலும் மனைவியார்தாமே படைத்ததனாற் சுவை மிகப்பெற்ற தென்பதாம். இது உலக அனுபவத்தினின்றும் காணவுள்ள உண்மையாம். இவ்வாறிருப்பவும் ஏவலாளர்களாகிய பரிசனங்கள் படைத்தூட்ட உண்ணும் அன்பு கலவாத முறை இந்நாளிற் பெருகி வருவது மக்கள் கீழ்நிலை யடைந்து வருதலைக்காட்டுவதாகும்.

இனிய சுவை ஆராமை....என - வணிகன் "அதனை இடுக" என்று சொன்னதற்கு நாவின்சுவை நுகர்ச்சியின்பம் ஆராமையே காரணம் என்றவாறு. நாவின் சுவை நுகர்ச்சியாகிய புலனின்பம் ஏனைய நேர்மைகளைக் கீழ்ப்படுத்தி வணிகனை நேர்மை தவறிய நெறியில் ஒழுகச் செய்தது என்பதறிவித்தபடி ஈண்டு உய்த்துணர்ந்து கொள்ளத்தக்கது. நேர்மைகளாவன - அனுப்பியவற்றுள் எஞ்சிய இன்னும் ஒரு பழம் உள்ளதா? அன்றிப் பயன்படுத்தப்பட்டதா? என்று வினவவேண்டிய கடமை; அப்படி அது பயன்படுத்தப்படாமல் எஞ்சியிருப்பனும் இனிய சுவையைத் தான் நுகர்ந்தின்புற்றது போலவே தன் மனைவியாரும் நுகர்தல் வேண்டும் என்று எண்ணவேண்டிய கடமை; பழம் இரண்டினுள் ஒன்று தனக்குப் பயன்பட மற்றொன்று மனைவியாரின் பங்குக்குரிய - தனது நன்மை தீமைகளிலும் உடைமைகளிலும் மனைவியாரும் சரிபங்குக்குடையவர் என்று எண்ணவேண்டிய கடமை; என்றின்னோரன்ன பலவும் உலக நிலையில் ஈண்டுக்கொள்ளத் தக்கன. இனி, உயர்நிலையினும் யான்பெற்ற இன்பம் பெறுகவிவ் வையகம் (திருமந்திரம்) என்றபடி தானின்புற்றதுபோலப் பிறருமின்புறக் காமுறும் கடமை; தென்புலத்தார் முதலிய நால்வரையும், துறந்தார் முதலிய மூவரையும் தன்னைப் போலவே கண்டு பகிர்ந்துண்ணும் கடமை முதலிய நேர்மைகளும் காணத்தக்கன.

இங்கு இவ்வணிகன் "அழுக்குடைப் புலன்வழி யிழுக்கத்தி னொழுகி, வளைவாய்த் தூண்டிலி னுள்ளிரை விழுங்கும், பன்மீன் போலவும்" (கோயினான்மணி மாலை - 28) என்றபடி நாவின் புலனுக் கடிமைப்பட்டு நன்னெறி யிழந்தான். இனி, நன் மனைவியாராய்த் தன்னை மேனெறி யுய்க்கவல்ல அரும்பெறல் தெய்வமாகிய அம்மையாரையும் இழக்க உள்ளவனுமாயினான். இந்நாள் நாவின் புலனுக் கடிமைப்பட்டுப் பல்வகை விருந்தும், சிற்றுண்டியும், பேருண்டியும் பான வகைகளும் என்றின்னோரன்னவற்றுக் கடிமையாகிய

நவீன உலகம் அடையும் கேடுகளும் செய்யும் தீமைகளும் அளக்க வொண்ணுதன! அந்தோ! கொடிது! கொடிது! ஈண்டு இவற்றின் உண்மைத் தன்மை கண்டு உலகம் உய்வதாக.

இனியது ஒரு பழம் இன்னும் உளது - தான் வரவிடுத்த இரண்டனுள் என்பது இசையெச்சம். உளது - எஞ்சி உள்ளது.

அனையது தாம் கொண்டுவர அணைவார்போல் அங்கு அகன்ருர் - இங்கு அம்மையார் அப்பழத்தினை அடியார்க்களித்த செய்தியினை அந்நிலையே கூருது, கொண்டு வருவார்போல அகன்றதென்னையோ? எனின், "வைக்க" என்று கணவன் வரவிடுத்த கனிகளை அவனது சொல்வழியா னன்றித் தாம் செலவிட்டது தவறென்றும், "கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை" என்றபடி அது உலகமறிந்த அளவில் கற்புநிலைக் கிழுக்காமென்று கணவன் எண்ணவரும் செயலாமென்றும், உயிருள்ளளவும் என் உடலுயிர்களை உம்மதாக்கி "என்னுயிர்க்கொரு நாதர்நீ ருரைத்த தொன்றை நான்செயு மத்தனை யல்லா லுரிமை வேறுள தோவெனக்"கென்றபடி (412) திருமணத்தில் இசைந்த நிலைக்கு மாருகுமென்றும் மனத்துள் வந்த இன்னேரன்ன பல நிகழ்ச்சிகள் போலுமென்பது கருதப்படும், ஆயின், தாம் செய்தது தவறு என்று அஞ்சினரோ? அல்லது எண்ணினரோ? எனின், அந்நிலை ஒரு சிறிது மிலர் என்க. தாமும், கணவனும், அவனுடைய உடைமையாக எண்ணியுள்ள அந்த மாங்கனிகள் உட்பட யாவையும் "எல்லாமுன் னடிமையே எல்லாமுன் னுடைமையே" என்றபடி சிவபெருமானது அடிமையும் உடைமையுமேயாம் என்பதும், சிவனது உடைமையை, அவனை அடைந்ததனுல் தம்மை உடையவடியார்களுக்கு ஆக்குதல் தகுதியே என்பதும், அதுவே பொருள் பெற்ற நீடுபயனும் என்பதும், அவ்வாறு ஆக்குதலினுல் கணவனது கருத்துக்கு மாறுபாடில்லை என்பதும், அவனேடு தாமோ அக்கனியினை உண்டு பெறும் இன்பத்தினும் மிக்க நீடிய இன்பம் சிவன் அடியார் உண்டதனுல் பெறப்படுமென்பதும், அதனுல் கணவனுக்கு நலமே செய்ததாகலின் கற்பு நெறிக்கு ஒரு சிறிதும் இழுக்கில்லை என்பதும், பிறவும் நன்குணர்வர். ஆனுல் இவ்வாறு தெருட்டியறிவித்தற்குப் போதிய நிலையில் கணவன் அமைவிலன் ஆதலின் அவனது மனம் மாறுபடாவண்ணம் நிற்பதொன்றினையே அதுபோழ்து கருதி அகன்ருர் என்க. மங்கையார்க்கரசி யம்மையார் தமது கணவன் வழுவிச் சமண நெறியுட் புக்கொழுகின னுயினும் தாம் தம் கடைப்பிடியினின்றும் வழுவாது சிவநெறியின் ஒழுகிப், பிள்ளையாரது திருவருளினுற் பின்னர், அவனையும் செந்நெறிப்படுத்திய வரலாற்றின் உண்மைத் திறத்தினையும், கற்பு நெறி வழுவாத கடமைப் பாட்டினையும் இங்கு வைத்துக் காண்க.

கொண்டுவர அணைவார்போல் - கனி கொண்டுவரத் துணிந்து அகலவில்லை; ஆனுல் அவர்அகன்றது கொண்டுவரச் செல்பவர்போலக் காட்டிற்று என்க. நிகழ்ந்ததையும் அதன் முறையினையும் சொல்லிக் கணவனது மனத்தைத் தம்மின் மாறுபடச் செய்யவும் அம்மையார் விரும்பவில்லை; அன்றியும், கணவன் விரும்பி வினவிய ததனையும் இல்லை என்பதும் இல்லாளுக்கு முறையன்று; ஆனுல் கனிகொண்டு வரலாமென்ற துணிவுமில்லை. கணவன் கேட்ட கனி கொடுத்தல் வேண்டும்; ஆயின் அங்கு அஃது இல்லாமையால் இறைவர் தோற்றுவித்தபடி காணலாம் என்ற மனநிலையின் அம்மையார் அகன்றனர் என்க.

1741. அம்மருங்கு நின்றயர்வா; **ரருங்கனிக்கங் கென்செய்வார்?**
மெய்ம்மறந்து நினைந்துற்ற விடத்துதவும் விடையவர்தாள்
தம்மனங்கொண் டுணர்தலுமே யவரருளாற் றாழ்குழலார்
கைம்மருங்கு வந்திருந்த ததிமதுரக் கனியொன்று. 25

"அருங்கனிக்கங் கென்செய்வார்?" என்றதனல் கனி கொண்டு வரமுயலுதல் அவரது எண்ணம் என்பது விளங்கும். அங்கு - அங்கு நின்றும். *24*

1741. (இ-ள்.) அம்மருங்கு நின்று அயர்வார் - அந்தப் பக்கத்தில் நின்று மனந்தளர்வார்; அருங்கனிக்கு அங்கு என் செய்வார்? - பின்னை அரிய கனி பெறும் வழிதான்வேறு என்ன செய்வார்?; மெய்ம்மறந்து....உணர்தலுமே - தம்மையும் மறந்து நினைந்து, அல்லல் உற்ற விடத்தில் வந்து உதவியருளும் விடையவராகிய சிவபெருமான் திருவடிகளைத் தமது மனத்தில் முற்றும் உறவைத்து உணர்வினிற் பொருந்தவைத்தவுடனே; அவர்அருளால் - அவரது திருவருளினலே; தாழ்குழலார்...ஒன்று - தாழும் கூந்தலினையுடைய அம்மையாரது திருக்கையினிடத்து அதிமதுரக் கனி ஒன்று வந்து பொருந்தியிருந்தது.

(வி-ரை.) அம்மருங்கு - அகன்று சென்ற அவ்விடத்தில்.

அருங்கனிக்கு அங்கு என் செய்வார் - கனியிலது என்று சொல்லவும் மாட்டாது, கொண்டுவரவும் மாட்டது கவலை கூர்வார்; இல்லை என்று கூறிக் கணவனைத் தெருட்டுவதன்றிக், கனி கொண்டு வந்து கொடுத்தலே மேல் என்று சிந்திக்கவே, அவ்வாறு கனிகொண்டு வர என்ன வழி காண்பார் என்றதாம்.

மெய்ம்மறந்து நினைந்து - "தம்மை மறந்து நின்னை நினைப்பவர், செம்மை மனத்தினும்" (கோயினன் - 4) என்றபடி தம்மை முற்றிலும் மறந்து சிவபெருமான் ஒருவரையே நினைந்து.

உற்றவிடத்து - துன்பம் உற்ற அப்போது அவ்விடத்தில்.

தாள் - பிறந்து மொழிபயின்ற பின் எல்லாம் காதல் சிறந்து சேர்ந்த அந்தச்சேவடிகள்.

மனங்கொண்டு உணர்தலாவது - மன முழுதும் அதுவேயாகி நிற்கும்படி அழுந்தியறிதல்.

தாழ்குழலார்- தாழ்தல் - விரும்புதல். தொங்குதல் என்றலுமாம்.

வந்து இருந்தது - வந்து பொருந்தி நின்றது. வருதலும் இருத்தலும் வெவ்வேறு செயல்கள். பின்னர் வணிகன் கைப்புக்க மாங்கனி வாங்குமளவில் வந்து பின் இருக்காது மறைவது போலன்றி, வந்து இருந்தது என்க.

அதிமதுரக்கனி - வணிகன்தான் உண்ட மதுரம் வாய்ந்த கனியினும் அதிமதுரம். **அதிமதுரம்** - என்பது ஒரு மருந்துப் பண்டம்; அது, மதுரம் மிகினும் தாகத்தைத் தவிர்க்கும்; அங்கு வந்தது மாங்கனியன்றி **அதிமதுரக்கனி** என்ற தொனிப் பொருளால் அதனை

1742. மற்றதனைக் கொடுவந்து மகிழ்ந்திடலு மயின்றதனில்
உற்றசுவை யமுதினுமேற் படவுளதா யிட, "விதுதான்
முற்றருமாங் கனியன்று; மூவுலகிற் பெறற்கரிதாற்,
பெற்றதுவே றெங்"கென்று பெய்வளையார் தமைக்கேட்டான். 26

யுண்டபின் வணிகனுடைய இவ் வில்வாழ்க்கைத் தாகம் தவிர்க்கப்படும் என்பது குறிப்பு. முன் வணிகன் உண்ட மதுரக்கனி இனிய சுவை ஆராமை மேலும் உண்ண ஆவல் தந்தது; இங்கு வந்த அதிமதுரக் கனியை அவன் உண்ணவும் புலனின்பத்தின் வேருகிய தெய்வ நலத்தின் உணர்வும், அம்மையாரை வழிபடும் முதற்பேறும் விளைவனவாவதும் காண்க. **ஒன்று** - ஒப்பற்றது என்பதுமாம். 25

1742. (இ-ள்.) மற்றதனை.....இடலும் - அவ்வாறு வந்திருந்த அக்கனியைக் கொண்டு வந்து மகிழ்ச்சியுடன் இடுதலும்; அயின்று - அதனை உண்டு; அதனில்...அயிட - அதனிற் பொருந்திய சுவையானது அமுதத்தினும் மேலாக உள்ளதாகவே; "இதுதான்....கேட்டான் - இது முன்பு தந்த மாங்கனியன்று; மூவுலகிலும் பெறுதற்கரிதாகும்; இதனைப் பெற்றதுதான் வேறு எங்கு?" என்று (வணிகன்) அம்மையாரைக் கேட்டனன்.

(வி-ரை.) மற்று அதனை - கணவன்தான் வைப்பித்த கனி இன்னும் உளது என்று எண்ணிக்கேட்ட அதனின் வேருதலின் **மற்று** என்றும், அருளால் வந்திருந்த அது என்பார் அதனை என்றும் கூறினர்.

மகிழ்ந்து - "அயர்வாந்" தன்மை நீங்கி, மகிழ்வாந்தன்மை பெற்று. இகம் பரம் என்ற இருநிலையும் பிறழாது செல்லும்படி கனி உதவிற்று என்ற மகிழ்ச்சி.

இடலும் - கணவனது பரிகலத்தில் இடுதலும்.

இடலும் அயின்று என்றது உணவின் ஆசை கொண்டு நாவின் சுவைப்புலனுக்கு அடிமைப்பட்டு நேர்மை தவறினுதலின் இடுதலும், வேறென்றும் எண்ணுது மிக விரைந்து உண்டுவிட்டான் என்ற விரைவுக் குறிப்புப்படக் கூறியது காண்க.

உற்ற சுவை - உற்ற - இறைவரருளால் பொருந்திய என்ற குறிப்புப்பட நின்றது.

அமுது - தேவாமிர்தம் என்பர். **அமுதினும் மேற்படுதல்** - சுவையாலும் பயனுலும் மிகுதல். இங்குப் பயனல் மிகுதலாவது ஏனை யமுதம்போ லன்றிச், சிவனருள் வெளிப்பாட்டினைக் காண உதவுதல். **மேற்பட** - மேற்படும்படி; அம்மையாரை "மானிட **மிவர்தா மல்லர் - நற்பெருந் தெய்**வமா"வர்(*1763*) என்று தெளியவும் வணங்கவும் பேறு பெறுவித்தது இச்சுவையே யாதலின் அமுதினும் மேற்பட்டதென்பதாம். அவன் தந்த கனி அடியார்க்காகிய பின், அருளொடு மீண்டு வந்ததாதலின் சுவை மேம்படக் காரணமாயிற்றென்க; கடன், வட்டியுடன் திரும்ப வருதல்போல. "தெங்கு தாளுண்ட நீரைத் தலையாலே தான்தருதல்" என்ற நீதியுரையும் காண்க.

முற்றரும் - முன் தரும் - முன் நான் அனுப்பி வைத்த.

1743. அவ்வுரைகேட் டலுமடவா "**ரருளுடையா ரளித்தருளுஞ்**
செவ்வியபே ரருள்விளம்புந் திறமன்"றென் றுரைசெய்யார்;
கைவருகற் புடைநெறியாற் "**கணவனுரை காவாமை**
மெய்வழியன்" றெனவிளம்பல் விடமாட்டார்; விதிர்ப்புறுவார்; 27

மூவுலகில் - மூவுலகிலும். முற்றும்மை தொக்கது. வணிகன் வாக்கில் அவனை யறியாமலே உண்மை போந்தது. மேல் - நடு - கீழ் என்ற மாயா புவனங்கள் எல்லாவற்றுக்கும் வேருய், அப்பாற்பட்ட சிவபுவனத்தின் விளைவாகிய கனியாதல் குறிப்பு.

பெற்றது வேறு எங்கு - மூவுலகினும் பெறற்கரிதாயினமை துணிந்தானுதலின் மூவுலகமுமல்லாது வேறு எங்கு என்றுன். பெற்றது எங்கு? என்றதனை, யார்கொடுத்தார்-என்னிடம் பெற்றதன்று - வேறு யாவரிடம் பெற்றது - என்றது பொருள்பட அம்மையார் உணர்ந்தனர். "எய்தவருங் கனியளித்தார் யார்?" என்னும் கணவனுக்கு (*1744*) என்பது காண்க. *26*

1743. (இ-ள்.) அவ்வுரை கேட்டலும் - தாம் எதிர்பார்த்திராத நிலையிற் போந்த அந்த வினைவைக் கேட்டலும்; மடவார்- அம்மையார்; அருளுடையார்....உரை செய்யார்- தம்பால் அருள் உடையாராகிய இறைவர் தமக்குச் செய்தபெரிய அருளிப்பாடு பிறர்பாற் சொல்லத்தக்கதன்று என்ற நிலையினல் அதனைச் சொல்லவுமாட்டார்; கைவரு...விளம்பல் விடமாட்டார்- கைவரும் கற்பு நெறியினல் கணவன் சொல்லினைச் சோர்வுபடாமற் காவாது விடுதல் மெய்ந்நெறி யன்று என்ற நிலையினல் அதனைச் சொல்லுதலை விடவுமாட்டார்; விதிர்ப்புறுவார்- இவையிரண்டுக்கு மிடைப்பட்டு நடுக்கமுற்றனராகி.

(வி-ரை.) இப்பாட்டுக் கணவன் இக்கனி.... எங்குப் பெற்றது என்று கேட்டபோது அம்மையாரது திருமனம் அடைந்த நிலையினையும் அதனுள் எழுந்த தம்முள் மாறுபட்ட எண்ணங்களையும் நன்கு எடுத்து விளக்கும் அரிய சிறப்பு வாய்ந்தது.

உரை செய்யார் - விளம்பல் விடமாட்டார் - ஒரு காரணத்தால் உரை செய்யவு மாட்டார்; மற்றொரு காரணத்தால் உரை செய்யாது விடவுமாட்டார் என்க.

உரை செய்யார் - சொல்லாமைக்குக் காரணம் ஒருவர்தம்பால் நிகழ்ந்த சிவனருட் செயலை வெளியிற் சொல்லத்தகாது என்ற விதி. கணவன் உரை காத்தலாவது கணவன் கேட்டதற்குப் பொய் விடை கூருமை.

விளம்பல் விடமாட்டார் - சொல்லாது விடாமைக்குக் காரணம் கற்புடை நெறியாற் கணவனுரை காவாமை மெய்வழியன்றென்னும் விதி. எனவே இகத்தும் பரத்தும் வரும் கடமைகளின் முரண்பாடு கருத்து.

விதிர்ப்புறுவார் - உடல் நடுங்குவாராகி, முற்றெச்சம், முன்னர் மாங்கனியில்லை என்று சொல்லவும் மாட்டாது, உண்டு என்று கொண்டு அளிக்கவும் மாட்டாது மனந்தளர்ந்தபோது "நின்றயர்வார்" (*1741*) என்றுர். இங்கு அதனினும் மேற்பட்ட மனத்தளர்வும் தடுமாற்றமும் நிகழ, அது உள்ளடங்காது உரிய மெய்ப் பாட்டினையும் விளைத்து விட்டதென்பார்

1744. "**செய்தபடி சொல்லுவதே கட**" **னென்னுஞ் சீலத்தான்**
மைதழையுங் கண்டர்சே வடிகண்மனத் துறவணங்கி
"யெய்தவருங் கனியளித்தார்யா?"ரென்னுங் கணவனுக்கு
மொய்தருபூங் குழன்மடவார்புகுந்தபடி தனைமொழிந்தார். 28

விதிர்ப்புறுவார் என்றார். மெய்ப்பாடு கூறவே மனத்தினுள் நிகழ்ந்த மிக்க தடுமாற்றம் தானே போதருமென்பது. *27*

1744. (இ-ள்.) செய்தபடி.... சீலத்தான் - எவ்வாறாயினும் செய்தபடி சொல்லுவதே கடமையாம் என்னும் சீலத்தை துணிந்தமையினாலே; மைதழையும்...வணங்கி - விடம் வளர்தற் கிடமாகிய கண்டருடைய திருவடிகளை மனத்துட் பொருந்த வணங்கிக் கொண்டு; எய்தவரும்...கணவனுக்கு - சுவை பொருந்தும்படி கொண்டு வந்த அந்தக் கனியினை அளித்தவர்யாவர்? என்று கேட்ட கணவனுக்கு; மொய்....மொழிந்தார்- பூங்குழலினையுடைய அம்மையார் அக்கனி புகுந்த வரலாற்றினை உள்ளவாறே, மறை விடுத்துச் சொன்னார்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை.) செய்தபடி சொல்லுவதே கடன் என்னும் சீலத்தால் - முன்பாட்டிற் கூறிய மனத்தடுமாற்றத்தினை மாற்றி ஒருவழியிற் றுணிந்த வகையைக் கூறியபடி. தமக்குச் சிவனருள் செய்ததனைப் பிறருக்குரைத்தல் குற்றம்; வினவிய கணவனுக்கு உண்மை கூறாது மாறுபடக் கூறுதலும் குற்றம்; என் செய்வதென்று எண்ணமிட்டு நடுங்கிய அம்மையார், "எவ்வாறாயினுமாகுக உண்மை நிகழ்ச்சியைக் கூறுவதே கடமை" என்று துணிந்தனர் என்க. இறைவன் சத் என்னும் சத்திய வுருவினன் ஆதலின் உண்மை கூறுதல் அவனருளுக்கு மாறுபடாது. அதுவே கணவனுரை காவாமை என்ற குற்றமும் சாராமற் செய்யும் ஆதலின் அவ்வாறு துணிந்தனர்.

சீலம் - நல்லொழுக்கம். ***சீலத்தால்*** - *சீலத்துணிபினால்*.

மை தழையும்....*வணங்கி* - பிறருக்குக் கூறலாகாத அருளை எடுத்துச் சொல்லப் புகுகின்றாராதலின் அதற்குத் தீர்வு தேடிக்கொள்வார்போன்று அடி வணங்கினார் என்பது குறிப்பு. மை - விடம். தழைதல் - விடத்தன்மை மாறி அருட்டன்மை பெற்று நீடியிருந்தல். அது தன்னை நினைத்தோரைத் துன்பநீக்கி இன்பமுற்றிருக்கச் செய்யும் எனத் தழைவித்தல் என்று பிறவினைப் பொருள் கொள்ளுதலுமாம். திருநீலகண்ட நாயனார்சரிதமும், திருநீலகண்டப் பதிகக் கருத்தும் காண்க. **மனத்துற** - மனம் முழுமையும் பொருந்த. மெய்ம்மறந்து.....மனங்கொண்டு (*1741*) என்ற நிலையில் மீளவும் நின்று என்பதாம்.

புகுந்தபடி தனை - கனி தமது கையினில் வந்து புகுந்தபடியினை - வகையினை. படி - விதம்; வழி. **புகுந்து படிதனை** என்றதனால் கனியினை அடியார்க்கு அளித்தது முதல் கையிற் கனிவந்த அளவுவரை நிகழ்ச்சி யெல்லாங் கொள்ள உரைத்த கவிநலம் காண்க. முடிபு **ஈசனருளால்** வந்தது என்றுரைத்தனர் என்பது வரும் பாட்டிற் காண்க. **புகுந்த** என்றதனாற் ஒருவர் மனையுட் புகுந்தார் - (*1733*) என்றபடி அடியார் புகுந்தபடியினையும், தம்

1745. "**ஈசனரு**"ளெனக்கேட்ட வில்லிறைவ னதுதெளியான்,
வாசமலர்த் திருவனையார் தமைநோக்கி "மற்றிதுதான்
றேசுடைய சடைப்பெருமான் றிருவருளே லின்னமுமோர்
ஆசில்கனி யவனருளா லழைத்தளிப்பா" யெனமொழிந்தான். 29

கையினுள் கனிபுகுந்த விதம் ஈசனருள் என்றதனையும் குறிப்பின் உணரவைத்த நலமும் காண்க. காரைக்காற் பதிபுகுந்தார் (*1726*); ஒருவர் மனையுட் புகுந்தார் - (*1733*) என்றபடி அடியார் புகுந்தபடியினையும், தம் கையினுள் கனிபுகுந்த விதம் ஈசனருள் என்றதனையும் குறிப்பின் உணரவைத்த நலமும் காண்க. காரைக்காற் பதிபுகுந்தார் (*1726*); ஒருவர் மனையுட் புகுந்தார் - (*1733*) கனிபுகுந்தபடி என்ற குறிப்பெல்லாம் காண்க.

சீலத்தார் - என்பதும் பாடம். *28*

1745. (இ-ள்) ஈசனருள்... இல் இறைவன் - "ஈசனருளே கனியளித்தது" என்று அம்மையார் சொல்லக் கேட்ட இல்லத்துக்குடையவனாகிய வணிகன்; அது தெளியான் - அதன் உண்மையில் மனத்தெளிவு பெறாதவனாகி; வாசமலர்... நோக்கி - மணம் பொருந்திய மலரில் எழுந்தருளிய திருவினை ஒத்த அம்மையாரை நோக்கி; "மற்றிது தான்.... அளிப்பாய்" என மொழிந்தான் - "மற்று இந்தக் கனி ஒளி பொருந்திய சடையினையுடைய சிவபெருமானது திருவருளால் பெறப்பட்டது என்பது உண்மையாயின் இன்னமும் ஒரு குற்றமற்ற இதுபோன்ற கனி ஒன்றினை அவர் அருளால் அழைத்து அளிப்பாயாக!" என்று சொன்னான்.

(வி-ரை) ஈசனருள்... தெளியான் - ஈசனருள் என - பெற்றது எங்கு? என்றும், அளித்தார் யார்? என்றும் கேட்ட கணவனுக்குக் கொடுத்தது ஈசனருளேயாம் என்று விடை கூறி முடித்தபடி; **என** - என்று அம்மையார் கூற,

இல் இறைவன் - இல் - வீடு - வீட்டுக்குடையவன். **இல்** - மனைவி எனக் கொண்டு மனைவிக்குக் கணவன் என்றலுமாம். மனைப்பதியாகிய வணிகன் (*1738*), இல்லாளன் (*1736*) என்றவை காண்க. இல்லாளன் என்புழிப்போல, இறை இல்லான் - இறைமைத் தன்மை (கணவனாந் தன்மை) வாய்க்கப்பெறாதவன் - இழந்துபடவுள்ளவன் என்பதும் குறிப்பு.

தெளியான் - மனங்கொள்ளான்; உண்மை யென்னும் தெளிவு பெறாதவனாகி. முற்றெச்சம். தெளியானாய் - மொழிந்தான். சிவனருட்டன்மையிற் பயிலாதவனாதலின் "அருள் தந்ததாகில் இன்னுமொரு கனி அழைத்து அளி" என்றான். இதுவே இந்நாள் மாக்களின் மனநிலை. இவ்வணிகன் சிவனடிமைத் திறமும் பண்பும் சிறிதும் பயிலாதவன் என்பதனை உய்த்துணர வைத்த நயம் காண்க. "குணம் பேசிக் குலம் பேசி" (*1289*) என்றும், "வேளாண் குடித்தலைவர், மின்னார் செஞ்சடையண்ணல் மெய்யடிமை விருப்புடையார்" (*1287*) என்றும் திலகவதி யம்மையாருக்கு நேர்ந்த மணமகன் றிறத்தை அறிவித்த ஆசிரியர், இங்குப் "புகழ் வணிகன் பயந்தகுல மைந்தனுக்கு...மகட் பேச" (*1723*) என்றும், "நிதிபதி மைந்தன் பரம தத்தனுக்கு" (*1726*) என்றும் குலம்பற்றிய அளவில்

*1746. பாங்ககன்று மனைவியார் பணியணிவார் தமைப்பரவி,
"**யீங்கிதளித் தருளீரே லென்னுரைபொய் யா**"மென்ன
மாங்கனியொன் றருளால்வந் தெய்துதலு மற்றதனை
யாங்கவன்கைக் கொடுத்தலுமே **யதிசயித்து வாங்கினான்.** 30

அறிவித்த குறிப்பும், "முன் னீராடிப் புகுந்தடிசில் புரிந்தயில" (1738) என நீராடிய பின் வேறு நியமங்கள் ஒன்றுமின்றிச் சோறுண்பவன் என்ற குறிப்பும், இவ்வணிகன் நற்குலத்து வந்தானாயினும் பண்டைத் தவத்தால் நிதிபடைத்தானாயினும் இந்நாள் இவ்வகைய மாக்கள் பலரையும் காண்கின்றவாறே பாங்கிற் றிருநீறு பண்டு பயிலாதா (641)னாய் நின்றான் என்பது கருதவைத்த உயர்கவி மாண்பும் கண்டுகொள்க. **பிறர் குறைகளை எடுத்துச் சொல்லாது உய்த்துணர வைத்தலும், மேம்பாடுகளை எடுத்துச் சொல்லுதலும் பெரியோர் மரபாம்.** நிதியொன்று கருதியே இவ்வாறாகிய இணைப்பில்லாத மணங்கள் பலவும் நிகழக் காண்பது காலக்கொடுமை.

வாச மலர்த்திரு - ஞானமுத்தித் திரு. அருளம்மை. "திருமடந்தை" (1718), "தாமரைத் தவிசின் வைகும் தனித்திரு" (1758) பார்க்க. **வாச மலர்** - உச்சியில் விளங்கும் ஆயிரம் இதழ்த் தாமரை.

திருவருளேல் - திருவருளில் தெளிவுபெறாது அவநம்பிக்கை கொண்டதனால் திருவருளாயின் என்றான்; அதனோடு அதனைத் தெளிவுபடுத்தற்கு இன்னொரு கனியைச் சான்றாக அழைக்கவும் வேண்டினான்.

ஆசில் - இவ்வாறே குற்றமில்லாது குணமுடைய.

மற்றதுதான் - என்பதும் பாடம். 29

1746. (இ-ள்.) பாங்ககன்று.....என்ன - அங்கு நின்றும் அம்மையார் நீங்கிச் சென்று, பாம்புகளை அணியும் பெருமானைத் துதித்து, "ஈங்கு இதனை அளித்தருள் செய்யீராயின் என்சொல் பொய்யாகும்" என்று வேண்ட; மாங்கனி...எய்துதலும் - ஒரு மாம்பழம் திருவருளால் அவரது கையில் வந்து பொருந்துதலும், மற்று அதனை..... வாங்கினான்- மற்று அக்கனியை அவ்விடத்தில் அவ்வணிகன் கையிற் கொடுத்தலும் அவன் அதிசயப்பட்டு அதனை வாங்கினான்.

(வி-ரை.) பாங்கு அகன்று - பாங்கு - இடம்; உணவுண்ட அவ்விடத்தினின்றும். பாங்கின் - என நீக்கப் பொருளில் வரும் ஐந்தனுருபு தொக்கது. **பாங்கு** - தன்மை என்றுகொண்டு கற்பின் தன்மை என்ற குறிப்புப்பட உரைத்தலுமாம்.

அகன்று - முன்னர்ச் சென்று அருளாற் கனி பெற்ற அவ்விடத்துக்குப் போய்.

மனைவியார் - மனைவியாராதலின் கணவன் கேட்ட சொற்கடவாத கற்புநிலையால் அகன்றனர் என்ற குறிப்புப்பட இங்கு **மனைவியார்** என்றார். "இல்லிறைவன்" என்ற குறிப்புக்கேற்க உரைத்த நயம் காண்க.

பணியணிவார் - "பணியணிவார் கழற்கடிமை பழகிவரும் பாங்கு" (*1719*) என்றவிடத்துரைத்தவை பார்க்க. பணியணியும் தன்மைபற்றி எண்ணிவந்தாராதலின் இங்கும் அது பற்றியே பரவினுர் என்பதாம். விடமுள்ள தீய பாம்பினை அமுதமயமாக்கி யணிதல்போல மலமுள்ள உயிர்களை மலநீக்கம் செய்து தம்பா லமரச் செய்வார் என்பது குறிப்புப் போலும். தம் குறைகளையே எண்ணி விண்ணப்பித்து அவற்றை நீக்கி ஆட்கொள்ள வேண்டுவது பெரியோர் மரபு.

"**ஈங்கு.....பொய்யாம்**" **என்ன** - **ஈங்கு** - இவ்விடத்து இச்சமயத்தில் என்றலுமாம். இது - கணவன் வேண்டிய இது. "இன்னமும் ஓர்கனி" என்ற இது. **என் உரை பொய்யாம்** - இது அளிப்பினும் அளிக்காவிடினும் உன் அருள் பொய்யாகாது; அது என்றும் உள்ள உண்மையே என்பதனை நான் திண்ணமாய் உணர்வேன். ஆனுல் அளித்தருளாவிடின் என் உரைதான் பொய்யாகும் இக்கணவனிடத்து என்றபடி. அவ்வாறு என் உரை பொய்யாமாயின் உன் அடிமைத்திறம் பழிப்படும் என்பதன்றி எனக்காவதொன்றில்லை என்பதும் குறிப்பு. "காவா தொழியிற் கலக்குமுன் மேற்பழி" (தேவா); "உன் அடியானென் றேசப்பட்டேன்" (திருவாசகம்).

மாங்கனி ஒன்று - முன்னர் வந்தது நுகர்தற்பொருட்டு அளிக்கப்பட்டதாதலின் சுவைத்திறம்பற்றி "அதிமதுரக் கனியொன்று கைம்மருங்கு வந்திருந்தது" (*1741*) என்ருர். இங்கும் அருளால் வந்ததாயினும் இது நுகர்தற்பொருட்டானன்றி அருளுக்குச் சான்றுநிற்கும் அளவே வந்ததாதலின் "மாங்கனி ஒன்று" என்று மாங்கனியின் உருவமே பற்றிக் கூறினுர்.

மற்று அதனை - மற்று - அருளால் வந்த இரண்டினும் முன்னையதின் வேருகிச் சான்ருகிய அளவில் வந்தது என்ற குறிப்புத் தந்து நின்றது.

ஆங்கு அவன் - ஆங்கு - கனிபெற்ற இடத்தினின்றும் வேருகிய உணவுண்ட இடம். **ஆங்கு** - அக்கணமே என்றலுமாம். அவன் கேட்ட ஆங்கு - கேட்டபடி - என்றலுமாம். **அவன்** - திருவருளுக்குச் சேயனுய் ஐயப்பட்ட அவன் என்றதும் குறிப்பு. முன்னறிசுட்டு.

அதிசயித்து வாங்கினுன் - ஒருமுறைக் கிருமுறையும் கைகண்ட பொருளாய்க் கண்டானுதலின் அதிசயித்து என்ருர். "அதிசயம் கண்டாமே" என்றது திருவாசகம்.

கைக் கொடுத்தலுமே - உண்ணுதலை விரும்பக் கேட்டானுதலின் அருளால் முன் வந்த கனியைக் கலத்தினிட்டார் என்று "மகிழ்ந்திடலும்" (*1742*) என்ருர்; இங்கு அருளின் உண்மையைக் காணச் சான்று வேண்டிக் கேட்டானுதலின் அதனைக் கலத்திலிடாது கையிற் கொடுத்தனர் என்பது.

இல்லாளன் தொடர்பாகிய உலக யாப்பு(கட்டு) இதனேடு அற்றுவிடுவதாதலின் இதுவரை கூறிவந்த யாப்பினை மாற்றி வேறு யாப்பிற்கூற எடுத்துக் கொண்டார். இனி வேருகிய சிவத்தொடர்பு என்பதாம். *30*

வேறு

1747. வணிகனுந் தன்கைப் புக்க மாங்கனி பின்னைக் காணான்
றணிவரும் **பயமேற் கொள்ள வுள்ளமுந் தடுமா** றெய்தி
யணிகுழ லவரை **வேறோ ரணங்**கெனக் கருதி, நீங்குந்
துணிவுகொண் டெவர்க்குஞ் சொல்லான் றொடர்வின்றி யொழுகு நாளில்; 31

1747. (இ-ள்.) வணிகனும்...காணான் - வாங்கி வணிகனும் தனது கையில் புகுந்த மாங்கனியினைப் பின்பு காணாதவ னாயினான்; தணிவரும்.....எய்தி - தணியாத பயம் மேற்கொள்ளவே மனம் தடுமாறி; அணி குழலவரை...கருதி - அழகிய கூந்தலுடைய அம்மையாரை மானுடரல்லாத வேறு ஒரு தெய்வம் என்று எண்ணி; நீங்கும் துணிவு கொண்டு - அவரை விட்டு நீங்கிவிட வேண்டுமென்ற துணிவு கொண்டு; எவர்க்கும்....நாளில் - இதனை எவரிடமும் சொல்லாதவனாய் அம்மையாரிடம் தொடர்பு இல்லாமல் ஒழுகுகின்ற நாளில்.

(வி-ரை.) பின்னை - அதிசயித்து வாங்கிய பின்பு. **காணான்** - காணாதவனாகி. வணிகனும் - காணான் - மேற்கொள்ள - எய்திய - கருதி - துணிவுகொண்டு - ஒழுகுநாளில் (*1747*) - முயற்சி செய்வான் - என்ன வணிக மாக்கள் - சமைப்பித்தார்கள் (*1748*) என்று கூட்டிமுடிக்க. வணிகன் - என்ன வணிக மாக்கள் - சமைப்பித்தார்கள் என்று வினையெச்சங்கள் பிறவினைமுதல் வினைகொண்டு முடிந்தன. வணிகன் இங்குத் தன்வயத்தனலன்றிப் பிறவயத்தனாய் நின்ற சரித இயைபும் குறிப்பு.

பயம் மேற்கொள்ள - பயம் - அச்சம்; **மேற்கொள்ளுதல்** - பற்றிக் கொள்ளுதல். அச்சமாவது - அவரோடு உடனுறைதல் தனக்குத் தகாது என்ற எண்ணம்.

வேறு ஓர் அணங்கு - மானுட அணங்கு அல்லாது பிறிது தெய்வ வகையுட் பட்டதோர் அணங்கு. **அணங்கு** - தெய்வப் பெண். 'நற்பெருந் தெய்வ மாதல் நானறிந்து' (*1763*) என்பது காண்க.

நீங்கும் துணிவு - உடனுறையத் தனக்குத் தகுதியின்மையால் தான் அவரை விட்டு நீங்கிவிடுதல் வேண்டுமென்னும் முடிவு. அவரது சார்பில் தான் வாழ்ந்தமையால் அவரை நீக்குதல் இயலாமையின் தான் நீங்கத் துணிந்தான்.

எவர்க்கும் சொல்லான் - இந்நிகழ்ச்சியை வேறெவர்க்கும் சொல்ல அஞ்சினான்; ஆதலின் வெளிச்சொல்லாது மனத்துள்ளடக்கிக் கொண்டு. **தொடர்பு** - கணவனும் மனைவியாரும் என்ற இல்லறத் தொடர்வு, ஏவல் கொள்ளுதல் முதலியன. *31*

1748. (இ-ள்.) விடுவதே...செய்வான் - அம்மையாரை விட்டு நீங்குவதனையே எண்ணி அதற்குப் பொருந்தும் முயற்சியைச் செய்வானாய்; படுதிரை...என்ன - 'அலைகளையுடைய கடலின்மேல் செல்லும் கப்பலைக் கொண்டு சென்று பெருஞ் செல்வம் கொண்டு வருவேன்' என்று சொல்லவே; **நிரந்த**...சமைப்பித்தார்கள் - நெருங்கிய பல சுற்றத்தாராகிய வடுவில்லாத சிறப்பினையுடைய வணிகமாக்கள் அதன் பொருட்டு மரக்கலத்தைச் செய்வித்தார்கள்.

1748. விடுவதே யெண்ண மாக மேவிய முயற்சி செய்வான்
"படுதிரைப் பரவை மீது படர்கலங் கொண்டு போகி
நெடுநிதி கொணர்வே"னென்ன, நிரந்தபல் கிளைஞ ராகும்
வடுவில்சீர் வணிக மாக்கள் மரக்கலஞ் சமைப்பித் தார்கள். 32

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

(வி-ரை.) விடுவதே - தான் நீங்கிவிடுவதே. **எண்ணமாக** - கருத்தாக. மனத்துணிவாக. மேவிய - அதனை முடித்தற்குப் பொருந்திய. **செய்வான்** - செய்வானாகி முற்றெச்சம். வணிகன் என்ற எழுவாய் வருவிக்க. செய்வான் - என்ன என்று கூட்டுக. செய்வான் - வானீற்று வினையெச்சமாகக் கொண்டு, செய்யும் பொருட்டு என்றலுமாம்.

படுதிரை.....கொணர்வேன் - இது வணிகன் தன் சுற்றத்தாரிடம் சொல்லியது. "திரைகடலோடியுந் திரவியந் தேடு" என்பது மூதாட்டியின் பழமொழி யாதலின், கடலிற் சென்று பொருளீட்டுதல் மிகப் பழங்கால முதல் தமிழர்களிடையே வழக்கமாயிருந்தது. பட்டினப்பாலையினும், சிலப்பதிகாரத்துட் காவிரிப் பூம்பட்டினச் சிறப்பினும் இவ்வழக்கினை நன்கு காணலாம். மொழி நூல் ஆராய்ச்சியாளர்கள் கண்ட முடிபுகளானும் பல்லாயிரம் ஆண்டுகளின் முன் தமிழர் கடல் கடந்து வாணிபம் செய்த வரலாறுகள் காணப்படுகின்றன. "ஊறுபொருளின்றமி ழியற்கிளவி தேருமட மாதருடனார், வேறுதிசை யாடவர்கள் கூறவிசை தேருமெழில் வேதவனமே" (4-பிள்- சாதாரி) என்ற தேவாரத்தினும் இவ்வாணிபக் குறிப்புக் காணப்படுகின்றதென்பர். அம்மையாரை விட்டு நீங்குதற்கு ஒரு தந்திர நெறியாகக் கடல் வாணிபஞ் செய்யப் புகுவேன் என்ற வாணிப முறையினை வெளிக்காட்டினன் வணிகன் என்பதாம். "பொருள் வயிற்பிரிவு" என்று அகப்பொருள் நூலிலக்கணத்துள் அறியப்படுகின்றபடி பொருளீட்டச் செல்லும் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லுதலேயன்றி, உடன்கொண்டு செல்லும் வழக்கில்லையாதலின் மனைவியாரைப் பிரிந்து செல்லுதல் பற்றி இங்கு யாவரும் ஐயங்கொள்ளார். அன்றியும் "முந்நீர்வழக்க மகடூஉவொடில்லை" (தொல்காப்பியம்) என்பது பழந்தமிழ ரிலக்கண மாதலானும் அவன் மனைவியாரை உடன்கொண்டு செல்லாது விட்டுப் பிரிந்து செல்வதும் முறையாகக் காட்டிற்று.

பரவை மீது படர்கலம் - கடல் கடந்து செல்லும் கப்பல்; நாவாய். **கலம்** - மரக்கலம். **கலம்கொண்டு** - கப்பலில் வாணிபம் செய்தற்கு வேண்டிய பொருள்களைக் கொண்டு.

நிரந்த பல்...வணிக மாக்கள் - தனதத்தன் சுற்றத்தாரும், நிதிபதியின் சுற்றத்தாரும், கப்பல் வாணிகத் துறைபோய்க் கைவந்த பிற கிளைஞரும். வடுவில் சீர் என்றது குலமுறை வாணிப வழக்கின் தருமத்தினையும் குலநலங்களாகிய பிற இல்லற மரபொழுக்கங்களையும் வழாமற் காக்கும் சிறப்பு. 1757 - 1758 பாட்டுக்கள் பார்க்க.

மரக்கலம் சமைப்பித்தார்கள் - மேற்கூறியபடி மிகப் பழங்காலத்தே தமிழர்கடல் கடந்து சென்று தம் நாட்டுப் பண்டங்களை, அவை பெறும் வாய்ப்பில்லாத பிற நாடுகளில் விற்றுப்

1749. கலஞ்சமைத் ததற்கு வேண்டுங் கம்மிய ருடனே செல்லும்
புலங்களில் விரும்பு பண்டம் பொருந்துவ நிரம்ப வேற்றிச்
சலந்தரு கடவுட் போற்றித் தலையா நாய்கன் ருனு
நலந்தரு நாளிலேறி நளிர்திரைக் கடன்மேற் போனான். 33

பொருளீட்டும் கடல்வாணிபத் தொழிலால் நாடுசெழிக்கச் செய்தனர் என்பது மட்டுமே யன்றிக், கப்பல் சமைக்கும் தொழிலும் (Ship building) கைவந்தவர்களாயினர் என்பது பழஞ் சரிதங்களிற் கண்ட உண்மை. நம் நாட்டுப் பண்டங்களைக் கடல் கடந்து அயல்நாடுகளிற் கொண்டுபோய்ச் செய்யும் வாணிபம் அறவே யொழிந்தது! கப்பல் செய்யுந் தொழிலும் அதனோடொழிந்தது! அது மட்டுமன்றி அயல்நாட்டுப் பண்டங்களைப் பெற்றாலன்றி உயிர்வாழ இயலாது என்ற நிலையிலும் இந்நாடு இறங்கி வந்து விட்டது! கால வேறுபாட்டின் வலிமைதான் என்னே? தமிழர்கள் இச்சரித விளக்கத்தை ஊன்றிக் கருதுவார்களாக. *32*

1749. (இ-ள்.) கலம் சமைத்து - மரக்கலம் சமைப்பித்து முடித்து; அதற்கு வேண்டுங் கம்மியருடனே - கப்பல் செலுத்தற்குரிய மீகாமன் முதலிய தொழில் செய்வார்களுடனே; செல்லும்....ஏற்றி - சென்று வாணிபம் செய்யும் கடல் கடந்தநாடுகளில் விரும்பும் பண்டங்களுட் பொருந்துவனவற்றை நிரம்ப ஏற்றிக்கொண்டு; சலம்தரு கடவுட் போற்றி - கடற்றெய்வத்தினை வழிபட்டு; தலைமையாம் நாய்கன் தானும் - அவ்வாணிபத் தலைவனாகிய வணிகனும்; நலம் தரும் நாளில் ஏறி - நன்னாளில் பயணம் கொண்டு கப்பலில் ஏறி; நளிர்திரைக் கடல்மேற் போனான் - குளிர்ந்த அலைகளையுடைய கடலின்மீது பயணமாகச் சென்றான்.

(வி-ரை.) இப்பாட்டில் அந்நாளில் தமிழ் வணிகர் கடல் கடந்து கப்பலிற் சென்று வாணிபம் செய்யும் முறை நான்கு அறிவிக்கப்பட்டமை காண்க. ஆசிரியர் சேக்கிழார்பெருமான் வாழ்ந்த நாளிலும் தமிழ் மக்கள் கடல் தாண்டிச் சென்று வாணிபத்திலும் பிற வழிகளிலும் சிறந்திருந்தனர் என்பது நாட்டுச் சரிதங்களால் அறியப்படும். அவ்வுயர் நிலையினை இந்நாளில் தமிழ் மகன் நிற்கும் தாழ்ந்த நிலையுடன் ஒப்பு நோக்கின் எவரும் வருந்தாமலிருக்க இயலாது.

கலம் சமைத்து - முன்பாட்டில் "மரக்கலஞ் சமைப்பித்தார்கள்" (*1748*) என்றது கப்பலினை வேண்டுமாறு அமைத்து முடித்ததனை; இங்குக் கலம் சமைத்து என்றது அதனை முற்றுவித்து நீரில் விடத்தொடங்கும் சடங்கினை.

அதற்கு வேண்டும் கம்மியர் - கப்பல் செலுத்துவோர் - (மீகாமன்). தொழில் செய்வோர் - செப்பனிடுவோர் - முதலிய ஏவலர். கப்பல் வாணிபமும், கப்பல் அமைக்கும் தொழிலும் இந்நாளில் மறந்தொழிந்தபோது கப்பல் செலுத்தும் தொழிலும் அதனோடு மறைந்துபட்டு, இனிப் பிறர்பாற் கற்குந் தொழிலாயிற்று என்பது தாமே போதரும் என்க.

செல்லும் புலங்கள் - கடல் கடந்து வாணிபம் செய்யச் செல்லும் அயல் நாடுகள்.

1750. கடன்மிசை வங்க மோட்டிக், **கருதிய தேயந்** தன்னில்
அடைவுறச் சென்று சேர்ந்தங் களவில்பல் வளங்கண் முற்றி,
யிடைசில நாட்க ணீங்க மீண்டுமக் கலத்தி லேறிப்,
படர்புனற் **கன்னி நாட்டோர் பட்டின மருங்கு** சார்ந்தான். 34

விரும்பு பண்டம் - அந்நாட்டவர் விரும்ப ஏற்கும் பண்டங்கள். **பண்டம்** என்றதனுல் பஞ்சு - உணவுப் பொருள் முதலிய விளைபொருள்களல்ல என்பதும், தொழில்செய்து முற்றியவை என்பதும் பெறப்படும்.

பொருந்துவ - காலத்துக்கும் இடத்துக்கும் பொருத்தமாவனவற்றை.

நிரம்ப - வாணிப முறையில் விற்றுப் பெரும்பொருள் ஈட்டுதலுக்கேற்ற அளவும், மரக்கலம் ஏற்றிச் செல்லும் ஆற்றலுக்கமையும் அளவும் முற்ற.

ஏற்றி - கம்மியருடனே - பண்டங்களை ஏற்றி என்க.

சலந்தரு கடவுள் போற்றி - கடற்றெய்வம் போற்றிக் கடலிற் செல்லத் தொடங்குதல் முறை. சலந்தரு கடவுள் - வருணன். "ஆழி கடலரையா" (நம்பி. தேவா. நொடித்தான் மலை - *10*); "வருணனுஞ் செய்தனன் முன்பு மாதவம்" (*1895*).

தலைமையாம் நாய்கன் - அவ்வாணிபத்தின் தலைவன். **நாய்கன்** - வணிகன்.

தானும் நலந்தரு நாளில் ஏறி - நன்னுட்கொண்டு பயணமெழுதல் முந்தையோர்கண்ட முறை; "நன்னுட்கொண்டு பெரும்பயண மெழுக வென்று நலஞ்சாற்ற" (கழறிற். புரா - *46*). கம்மியர்களையும் பண்டங்களையும் ஏற்றுதற்கு நல்ல நாள் காண வேண்டுவதில்லை. அவை பயணத்துக்கு முன் பல நாளும் நிகழ்வன. தலைவன் ஏறிப் பயணம் தொடங்குதற்கு மட்டும் நன்னுட் குறித்தல் மரபாதலின் **போற்றி - நாய்கன் - நாளில் ஏறி** என்றுர். இங்கு அவன் உட்கொண்டு குறித்த நலமாவது அம்மையாரை முற்றும் நீங்கிவிடும் காரியம்.

போனுன் - மாங்கனி கண்ட அன்று முதலே தொடர்பின்றி ஒழுகினுனுதலின் அம்மையார்பால் அறிவித்திலன்; பிரிபவன் நாயகியிடம் சொல்லிப் பிரிதல் மரபன்று என்பது மேலால் உள்ள காரணம். சென்றவன் இங்கு மீண்டுவந்து சார்தலிலன் என்ற குறிப்புப்படப் **போனுன்** என்று கூறினுர். *33*

1750. (இ-ள்.) கடன்மிசை வங்கம் ஒட்டி - கடலின் மீது கப்பலை ஓட்டி; கருதிய.....சேர்ந்து - தான் எண்ணிய தேசத்தில் சேரும்படி செலுத்திப் போய்ச் சேர்ந்து; அங்கு அளவில் பல் வளங்கள் முற்றி - அவ்விடத்தில் அளவில்லாத பல வளங்களையும் நிறைவித்துக்கொண்டு; இடை........ஏறி - இவ்வாறு இடையில் சில நாட்கள் செல்ல மீண்டும் அந்தக் கப்பலில் ஏறிக்கொண்டு; படர்புனல்.....சார்ந்தான் - புனல்படரும் பாண்டி நாட்டில் ஒரு கடற்கரைப் பட்டினத்தின் பக்கத்திற் சார்ந்தான்.

(வி-ரை.) (நாய்கன்) - ஒட்டி - சேர்ந்து - முற்றி - ஏறி - சேர்ந்தான் என்க. நாய்கன் என்ற எழுவாய் முன்பாட்டினின்றும் வருவிக்க.

வங்கம் - கப்பல்; ஓட்டி - செலுத்தி; கப்பல் ஓட்டுதல் என்பது மரபு வழக்கு.

கருதிய தேயம் - வாணிபஞ் செய்தற்காகக் குறித்து வைத்த தேசம். கடலின் அக்கரையில் உள்ளது. வங்காளம் அல்லது பர்மா முதலிய நாடுகளும், கடற்றீவுகளும் என்பது கருதப்படும். அந்நாடுகளிலும் தீவுகளிலும் பண்டைச் சோழர் காலத்திலும் அதற்கு முன்னும் தமிழ் நாட்டார் வாணிபஞ் செய்து வந்தமை சரிதங்களாலறியப்படும். இச்சரிதத்துக்கு வேண்டப்படும் சிறப்பின்மை பற்றி அதனையும் இன்னதெனக் கூறிற்றிலர்.

அடைவுறச் சென்று சேர்ந்து - அடைவு உற - அடையும்படி, நீரின்மேற் செல்லுதலால் வழிகளைத் திசையறி கருவி முதலியவற்றின் றுணைகொண்டு அறிந்து செல்லும் வருத்தங்களைப்பற்றி **அடைவுற** என்றும், **சென்று** என்றும், **சேர்ந்து** என்றும் பயணத்தை அளவுபடுத்திக் கூறினார்.

அங்கு அளவில் பல் வளங்கள் முற்றி - வாணிபமுறையில் தான் கொணர்ந்த பண்டங்களை ஊதியம்பெற விற்று நிதியீட்டியும், மேல் திரும்பும் நிலையில் அந்நாட்டுப் பண்டங்களை ஊதியத்தின் பொருட்டுத் தான் சேரும் நாட்டில் விற்க நிறையக் கொண்டு இவ்வாறு விற்றும் வாங்கியும் பல வளங்களையும் நிறைவாக்கி. அளவில் - என்றது தொகையும், **பல்** என்றது வகையும் குறித்தன. **வளங்கள்** - நிதியும், அந்நாட்டுப் பண்டங்களும், பொன் மணி முதலாயினவும், **முற்றி** - எஞ்சாது நிறைவித்து.

படர்புனற் கன்னிநாட்டு ஓர் பட்டினம் - புனல்படர் என்க. ஆறுகள் கடலை நோக்கிச் சென்று சேரும். **படர்தல்** - செல்லுதல். **கன்னி நாடு** - பாண்டி நாடு. **ஓர் பட்டினம் - பட்டினம்** - கடற்கரை நகரம் என்ற பொதுப்பெயர் குறித்து நின்றது. பட்டினம் - பாக்கம் முதலியன கடற்கரை நகரங்களின் பெயராதல் மரபு. இப்பட்டினத்தின் பெயர் ஆசிரியர் கூறவில்லை. இது மந்திர நகர்(தூத்துக்குடி), சேதுக்கரை, குலசேகரன் பட்டினம் முதலாகிய துறைமுகப் பட்டினங்களுள் ஒன்று என்று கருதப்படும். மதுரை என்று சிலர்கருதிப் படங்களிற் காட்டவும் துணிந்துவிட்டனர். கடற்கரையில்லாமையால் அது பொருந்தாமை யறிக.

ஓர் பட்டினம் - அம்மையாரைவிட்டு நீத்து அவன் சேர்ந்தமையாலும், அங்குத் தாமே போய்த் தங்கி வாழச் சென்றபோதும் அம்மையாரை ஏற்காமையால், இதன் மருங்கு நின்றே பேய் வடிவுடன் நீங்கியமையாலும் இந்நகரின் பெயரைக் கூறுதலும் வேண்டா என்று ஆசிரியர் விடுத்தனர் போலும், **ஓர்** என்ற இலேசாற் கூறியதும் கருதுக. சரிதத்துக்கு வேண்டப்படும் சிறப்பின்மையும் காண்க. 34

1751. (இ-ள்.) வெளிப்படை. அந்த நகரத்தில் ஏறிச்சென்று தான் கொணர்ந்த அளவில்லாத பலவகைப் பொருள்களால் ஆக்கிய ஒப்பற்ற பெருநிதியங்களை யெல்லாம் ஒரு வழியாகச் சேர்த்து மேன்மேல் சேமஞ்செய்து, மெய்ப்புகழ் விளங்கும் அந்த ஊரார்விரும்பும்படி ஒரு வணிகன் பெற்ற செப்பரிய கன்னியைச் செல்வம் பெருகக் கலியாணம் செய்தான்.

1751. அப்பதி தன்னி லேறி யலகில்பல் பொருள்க ளாக்கும்
ஒப்பின்மா நிதிய மெல்லா மொருவழி பெருக வுய்த்து
மெய்ப்புகழ் விளங்கு மவ்வூர் விரும்பவோர் வணிகன் பெற்ற
செப்பருங் கன்னி தன்னைத் திருமலி வதுவை செய்தான். 35

(வி-ரை.) ஏறி - கப்பலில் நகர மருங்கு சார்ந்தவன் கப்பலினின்றும் இறங்கிப் படகுகளிற் சென்று கரையேறி நகரம் சேர்ந்து என்பார் **ஏறி** என்றார். கப்பல்கள் குறித்த ஆழமுள்ள நீர்அளவில் நின்றுவிடும், அதன்பின் இறங்கிப் படகேறி வந்து கரையேற வேண்டிய தன்மை குறிக்கப்பட்டது.

அலகில் பல் பொருள்கள் ஆக்கும் - இப்பொருள்கள் வணிகன் கப்பலிற் கொணர்ந்தவை, **பொருள்கள் ஆக்கும்** - பொருள்களால் ஆக்கப்படும் என்க.

ஒருவழி பெருக உய்த்தலாவது பல வகைகளாகிய பொன் - மணி - வெள்ளி முதலிய பொருள்களை எல்லாம் சேர்த்து, விளைநிலம் - மனை - ஏனை வாணிபத்துறை - வட்டிக்குக் கடன் கொடுத்தல் - என்றிவை முதலிய ஊதியம் வரும் நிலைகளில் ஒரு முகமாக அமைவுபடுத்துதல்.

மெய்ப்புகழ் என்றது கடல் துறைமுகமாக உலக நிலையின் அந்நகர் பெற்ற புகழினை.

ஊர் விரும்ப - ஊரார் வணிகனைத் தனித்து வாழாது மணம் செய்து இல்லறத்தின் வாழ்க என்று கூறி விரும்ப என்றும், அவ்வூராரால் விரும்பப்படும் பொருட்டு என்றும் உரைக்க நின்றது. அவன் முன்பே கலியாணமானவன் என்ற செய்தியை அறிவிக்காது மறைத்து ஒழுகினான் ஆதலின் ஊரவர் அவனைக் கலியாணம் செய்யப்பெறாதவன் என்று எண்ண இடமிருந்தது. மேல்வரும் பாட்டும் காண்க.

செப்பரும் கன்னி - உடல் அளவில் அம்மையாரது நாயகனையே தனக்கும் நாயகனாகப் பெறும்பேறு கருதிச் **செப்பரும்** என்றார். "பெறலருந் திருவினாள்" என்று மேலுங் கூறுதல் காண்க.

திருமலி வதுவை - உலகநிலைச் செல்வங்கள் பெருகுதற் கேதுவாகிய மணம். **திரு** - செல்வம். **மலி** - மலிந்த காரணத்தால் என்ற குறிப்புமாம்.

தன்னிலெய்தி - விரும்புமோர் - என்பனவும் பாடங்கள். *35*

1752. (இ-ள்.) பெறலரும்...புணர்ந்து - பெறுதற்கரிய திருவினைப்பெற்ற அப்பெண்ணைப் பெருவிழாவினோடு கலியாணம் செய்து; முன்னை...வைகி - முன்னர் மணம் புரிந்த கருமணலின் ஒழுங்குபோன்ற வாசனை பொருந்திய மெல்லிய கூந்தலையுடைய தெய்வம் போன்ற புனிதவதியம்மையார்பால் தான் செய்த வஞ்சனையைப் புறத்தில் ஒரு சிறிதும் வெளிப்படாதபடி மறைத்துவைத்த மனத்துடனே ஏனை எல்லாவற்றிலும் முறைமையில் வழுவாது வாழ்ந்து; முகமலர்ந்து ஒழுகும் நாளில் - முகமலர்ச்சியுடன் ஒழுகி வரும் நாளில்,

1752. பெறலருந் திருவி னாளைப் பெருமணம் புணர்ந்து முன்னை
யறலிய னறுமென் கூந்த லணங்கனார் திறத்தி லற்றம்
புறமொரு வெளியு றாமற் பொதிந்தசிந் தனையி னோடு
முறைமையின் வழாமை வைகி முகமலர்ந் தொழுகு நாளில், 36

(வி-ரை.) பெறல் அரும் திருவினாள் - முன் "**செப்பரும்" கன்னி** - (*1751*) என்ற கருத்தை விரித்தபடி. **பெறல் அருந் திரு** என்றது புனிதவதியாரது கணவனையே தனக்கும் நாயகனாகப் பெறும் அரிய செல்வம்.

பெருமணம் - செல்வநிலைக்கேற்பப் பெருவிழாவாகச் செய்த மணம்.

முன்னை - முன் மணம் புணர்ந்த என்ற பொருளில் வந்தது.

அறல் இயல் நறுமென் கூந்தல் - முதற் சாதிப்பெண்ணின் கூந்தலிலக்கணம். அறல் - கருமணல். இயல் - அதன் ஒழுக்குப் போன்றமைதல். **நறுமை** - இயற்கை மணம். **மென்மை** கூந்தலின் உயர்வு காட்டும் என்ப.

அணங்கு அனார் - அணங்கு - தெய்வம்; முன்னர்த் "**திருமடந்தை**" (*1718*) என்ற கருத்து. தெய்வம் அன்னார் என்று வணிகன் கொண்டவர் என்றலுமாம்.

அற்றம் - வஞ்சனை யொழுக்கமாவது விட்டு நீத்தலை உள் வைத்துக், கடல் வாணிபஞ் செய்து நிதிகொணர்தலை வெளிக்காட்டிப், போந்துவிட்ட செயல்.

புறம் ஒரு வெளியுறாமல் - புறத்தே மனைவிக்கும் பிறருக்கும் ஒரு சிறிதும் வெளிப்படாதபடி. ஒரு - ஒன்றும்; சிறிதும். **பொதிந்த சிந்தனை** - மறைத்து வைத்த சிந்தனை. **சிந்தனை** என்றதனால் உள்ளே பொதிந்து வைப்பனும் அது எவ்வாற்றானும் வெளிவருதல் ஆகாது என்றதனையே மறவாது சிந்தனையுட் கொண்டிருந்தான் என்பது குறிப்பு.

முறைமையின் - இல்வாழ்க்கை நிலையின் முறையில்.

முகமலர்ந்து - அகத்துள் வஞ்சனை பொதிந்து வைத்தானாயினும், "அகத்தினழகு முகத்திற் றெரியும்" என்றபடி இல்லாது, முகத்தின் மட்டில் மலர்ச்சியே பூண்டு என்பது. "மனத்தினுட் கறுப்பு வைத்துப் பொய்தவ வேடங் கொண்டு" (*473*) என்ற நிலையை இங்கு நினைவு கூர்க.

36

1753. (இ-ள்.) வெளிப்படை. வாசம் வீசுகின்ற சோலைகளையுடைய பழமையாகிய அவ்வூரில் முதன்மை தங்கிய பெரு வணிகர்களுடன் கூடிக், குபேரன்போலப் பொருந்திய செல்வத்தால் மிகுந்த அலைகள் பொரும் கடலில் கப்பல்களைச் செலுத்தி வாணிபம் செய்யும் புகழ்படைத்த அவ்வணிகன் தன் மனைவியிடமாக ஒளி பெருகும் விளக்குப்போல ஒரு பெண் மகவை அருமையாகப் பெற்றனன்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

1753. முருகலர் சோலை மூதூ ரதன்முதல் வணிக ரோடும்
இருநிதிக் கிழவ னென்ன வெய்திய திருவின் மிக்குப்
பொருகடற் கலங்கள் போக்கும் புகழினுன் மனைவி தன்பாற்
பெருகொளி விளக்குப் போலோர் பெண்கொடி யரிதிற் பெற்ருன். 37

(வி-ரை.) முதல் வணிகர் - அவ்வூரில் முதன்மை பெற்ருேர். "பெரு வணிகர் குடி" *(1717)* என்றலுமாம்.

எய்திய திரு - ஈட்டியதனுல் வந்த உலகச் செல்வம். இது முன்னை அம்மையாருடன் எய்திய தெய்வத் திருவினின் வேருும் என்று குறிப்பார் "நிதிக்கிழவன் என்ன" என்ருர்.

பொரு...புகழினுன் - கடலிற் கப்பல்கள் செலுத்திச் செய்யும் மிக்க நிதி படைத்த வாணிபத்தின் புகழ். **மனைவி** - அம்மையாரை **மனைவியார்** *(1750) - (1754) (1761)* என்பதும், இவளை "**மனைவி**" என்பதும் கருதுக.

பெருகு ஒளி விளக்குப்போல் ஓர் பெண்கொடி - அம்மையாரது திருப்பெயரை மக்கள் இட்டு வழங்கி அவ்வழக்கினுல் நலம் பெறும் மரபு இப்பெண் கொடியானின்று தொடங்குவதாதலின், இனி ஒளி பெருகும் விளக்கு என்று உவமித்தார். இது உள்ளுறை. ஒவ்வொரு பெண்மகவும் ஒவ்வோர் குடியினை விளக்கம் செய்யவுள்ளதாதலும், முதல்மகவு பெண்ணுய்ப் பிறந்தால் குடி பெருகும் என்பது உலக வழக்காதலும் மேற்பார்வையான குறிப்பாகும். **பெருகு** என்ற குறிப்பு காண்க. *37*

***1754. (இ-ள்.)** மடமகள்...பேணி - பெண் மகவைப் பெற்று அதற்குப் பேரிடும் மங்கலச்சடங்கு செய்ய எண்ணி; தான் முன்பு...கொண்டு - தான் முன்பு உடன் வாழ்தலை அஞ்சி நீத்துவிட்டு வந்த ஒப்பற்ற பெருமனைவியாரை இல்லறத் தொடர்பு அற நினைந்து தெய்வத்தன்மை வாய்ந்த தொழுதற்குரிய பொருளாவர் என்றே துணிவு கொண்டு; கடன் அமைத்து - உரிய சடங்குகளைச் செய்து; அவர்... இட்டான் - அவரது "புனிதவதியார்" என்ற பெயரைத் தன்னுல் விரும்பப்பட்ட மகவுக்குச் சூட்டினுன்.

(வி-ரை.) மகள் தன்னைப் பெற்று மங்கலம் பேணி - பெண் மகவுக்கு மணம் ஒன்றே சடங்காக விதித்திருப்பவும் செல்வ நிலையின் அருமைப்பாட்டினுல் பெயர் சூட்டுதல் முதலிய பலவும் தனது பெண் மகவுக்குச் செய்ய எண்ணி என்க. **பெற்றும்** - பெண் மகவாகப் பெற்றும் எனச் சிறப்பும்மை விரித்துரைக்க.

தான்...மனைவியாரை - புனிதவதியம்மையாரை. **தொடர்பு அற நினைந்து** - "வாழ்வற வாழ்வித்த மருந்தே" (திருவாசகம்) என்றபடி தன்னை அவர் பற்றித் தொடராதிருக்கும் வண்ணம் நினைந்து அதன் பொருட்டு என்க.

தெய்வத்தொழுகுலம்...இட்டான் - **தொழும் குலதெய்வம்** என்க. **கடன் அமைத்து நாமம் இட்டான்** - "உமது பெயர் இக்குழந்தைக்கு இட்டுச் சடங்கு செய்கின்றேன். இனி

1754. மடமக டன்னைப் பெற்று மங்கலம் பேணித் தான்முன்
புடனுறை வஞ்சி நீத்த வொரு பெரு மனைவி யாரைத்
தொடர்வற நினைந்து தெய்வத் தொழுகுல மென்றே கொண்டு
கடனமைத் தவர்தந் நாமங் காதல்செய் மகவை யிட்டான். 38

1755. இந்நிலை யிவனிங் கெய்தி யிருந்தன; னிப்பா னீடுங்
கன்னிமா மதில்சூழ் மாடக் காரைக்கால் வணிக னுன
தன்னிகர் கடந்த செல்வத் தனதத்தன் மகளார் தாமும்
மன்னிய கற்பி னேடு மனையறம் புரிந்து வைக; 39

மனைவி என்ற உமது தொடர்பு இன்றி இருத்தல் வேண்டும்'' என்று வேண்டிக்கொண்டு பேரிடுதல். பாம்புகள் முதலியவற்றின் அதிதெய்வங்களுக்குப் பொங்கலிட்டு வழிபட்டு "நீவிர் இனி வந்து எமது கண்ணிற் காணக்காட்டுதல் கூடாது'' என்று வழிபடும் நாட்டுச் சிறுதெய்வ வழிபாட்டு முறையினைப் பற்றிக்கொண்டு வணிகன் இவ்வாறு வேண்டினன் என்பது. **உடன் உறைவு அஞ்சி நீத்த** - நீத்தற்குக் காரணம் அவர் உடன் உறைதற்குத் தகுதியின்று என்ற அச்சமே என்பது. **கடன் அமைத்தல்** - வேண்டுகை செய்து வழிபடுதல்.

மகவை - நாமம் - இட்டான் - என்க. மகவுக்குப் பேர் இட்டான். *38*

1755. (இ-ள்.) இந்நிலை...இருந்தனன் - இந்த நிலையை இவ்வணிகன் இங்குப் பொருந்தி யிருந்தனன்; இப்பால் - இப்பக்கம்; நீடும்...தாமும் - நீண்ட கெடுதலில்லாத பெரிய மதில் சூழ்ந்த மாடங்களையுடைய காரைக்காலின் வணிகனுகிய தனக்கு ஒப்பு இல்லாத செல்வமுடைய தனதத்தன் மகளாராகிய புனிதவதியம்மையாரும்; மன்னிய...வைக - நிலைபெற்றுப் பொருந்திய கற்பினுடன் இல்லறம் புரிந்து தங்க,

(வி-ரை.) இந்நிலை - முன் *1748* முதல் *1754* வரை உள்ள ஏழுபாட்டுக்களாலும் தொடர்ந்து கூறிவந்த வரலாற்றின்படி வணிகன் வாழ்ந்த நிலைமை. இவன் - வணிகன். இங்கு - பாண்டி நாட்டு ஓர் பட்டினம். இதுவரை வணிகனது செய்தி கூறிவந்தாராதலால் நம் கருத்துக்கள் அணிமையில் உள்ள வணிகன்பாலும் அவன் தங்குமிடத்திலும் அவன் நிலையிலும் தங்கிருந்தமை குறிக்க அணிமைச் சுட்டுக்கள் மூன்றும் அடுக்கிக் கூறினர்.

இப்பால் - அவ்வாறு வரலாற்று முறையில் வணிகனது செய்தி அணித்தாயுள்ள தாயினும், நமது சிந்தையில் என்றும் அணுக்கராய் உள்ளவர் அம்மையார் என்பது தோன்ற இப்பால் என்றார்.

கன்னி மதில் - காவல் கட்டழியாத மதில்; பகைவர்களால் அழிக்கப்படாத மதில் என்று குறிக்க இவ்வாறு கூறுதல் மரபு.

தன்னிகர் கடந்த செல்வ - மகளார் என்று கூட்டுக. அம்மையாரைத் தனக்கு மகளாராகப் பெற்றது ஒப்பில்லாத பெருமையாதலின், தன் நிகர் கடந்த தனதத்தன் என்று கூட்டினுமமையும்.

1756. "விளைவளம் பெருக்க வங்க மீதுபோம் பரம தத்தன்
வளர்புகழ்ப் பாண்டி நாட்டோர் மாநகர் தன்னின் மன்னி
அளவின்மா நிதிய மாக்கி யமர்ந்தினி திருந்தா"னென்று
கிளரொளி மணிக்கொம் பன்னார் கிளைஞர்தாங் கேட்டா ரன்றே. 40

கற்பினோடு மனையறம் புரிந்து - கணவனும் பெரியோருங் கற்பித்தவாறு மனையினிடையமர்ந்து உலக நிலையில் உரிய அறங்களைச் செய்து. **புரந்து** - என்பது பாடமாயின் மனையறங்களை வழுவாமற் காத்து என்க. மனையறம் - இல்லத்தில் உள்ளவர் செய்வன. **அறம்புரிந்து மனை வைக** என்று கூட்டிப் பதிதருமம் பசுதருமம் என்ற இரண்டினையும் மனையின் வைகிச் செய்திருந்தனர் என்பதுமாம்.

எய்த விருந்தனன் - என்பதும் பாடம். *39*

1756. (இ-ள்.) கிளர்ஒளி... கிளைஞர் - பெருகும் ஒளியுடைய மணிகளையுடையதொரு கொம்புபோன்ற புனிதவதியம்மையாரின் சுற்றத்தார்கள்; "விளைவளம்...இருந்தான்" என்றே - வாணிபத்தால் விளைக்கப்படும் வளங்களைப் பெருக்குதற் பொருட்டுக் கப்பலின் மேல் ஏறிச்செல்லும் பரமதத்தன், வளரும் புகழினையுடைய பாண்டி நாட்டில் ஒரு பெருநகரினிடத்துத் தங்கி, அளவில்லாத "பெருஞ்செல்வங்களை ஆக்கி, அங்கு நிலையாக விரும்ப இனிதிருந்தான்" என்று; தாம் கேட்டார் - தாங்கள் கேள்விப்பட்டனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை.) 'விளைவளம்...இருந்தான்' - இது அம்மையாரின் கிளைஞர்கள் கேள்வியுற்ற செய்தி.

விளை வளம் - விளை - விளைக்கும் - வாணிபத்தின் மூலம் உளதாக்கும். வளம் - நிதியும் அயல்நாட்டுப் பண்டங்களும் பிறவுமாம். **பெருக்க** - பெருக்கி வருவேன் என்று.

ஓர் மாநகர் - 'ஓர் பட்டினம்' (*1750*) பார்க்க.

அமர்ந்து - விரும்பி. அங்கு அமர்ந்து இனிதிருந்தான் என்ற இலேசினால் இப்பால் காரைக்கால் நகரின் தொடர்பை விரும்பாமலும் அதனை இனிதாகக் கொள்ளாமலும் என்றது குறிப்பு.

கேட்டார் - அறிந்த அயலவர் வந்து கூறக் கேட்டார். இச்செய்தி இவர்களுக்கு வந்து சேர்தற்கு இவ்வாறு ஒரு சில ஆண்டுகள் சென்றதென்னை? எனின், அவ்வணிகன் முன்னை மணத்தின் செய்தி ஒரு சிறிதும் புறம் வராமற் காத்தமையும், அந்நாடு கப்பற் செலவிற் சாரும் நெடுந்தூரமுள்ள வேறு நாடாயினமையும், அந்நாளிற் போக்குவரத்து வசதிகளும், செய்திகளை அறியும் பிற வசதிகளும் இல்லாமையும், பிறவும் அச்செய்தி விரைவிற் பரவாமற் செய்தன என்க. குறிப்பிடப்படாத பிறர் சொல்ல என்பார் இன்னாரிடமாக என்றுங் கூறுது விடுத்தார்.

1757. அம்மொழி கேட்ட போதே யணங்கனுர் சுற்றத் தாருந்
தம்முறு கிளைஞர்ப் போக்கி யவனிலை தாமுங் கேட்டு,
மம்மர்கொண் மனத்த ராகி, "மற்றவ னிருந்த பாங்கர்க்
கொம்மைவெம் முலையி னுரைக் கொண்டுபோய் விடுவ"தென்றுர். 41

அன்றே - அதிசயக் குறிப்புப்பட நின்ற அசை. "மம்மர்கொள் மனத்தர்" என மேற் கூறுதல் காண்க. *40*

1757. (இ-ள்.) வெளிப்படை. அந்தச் செய்தியைக் கேள்விப்பட்டவுடனே அம்மையாருடைய சுற்றத்தார்களும் தம்முடைய நெருங்கிய கிளைஞர்களை விடுத்து, அவ்வணிகனது நிலையினைத் தாமும் கேட்டறிந்துகொண்டு, துன்பங்கொண்ட மனமுடையவர்களாகி, "மற்று அவன் இருந்த இடத்தில் பருத்த வெம்முலையினராகிய புனிதவதி யம்மையாரைக் கொண்டுபோய் விடுவது கடன்" என்று சொன்னார்கள்.

(வி-ரை.) தம் உறு கிளைஞர்ப் போக்கி....கேட்டு - "கேட்டாரன்றே" (*1756*) என முன்பாட்டிற் கூறியிருப்பவும், மீண்டும் கேட்க வேண்டியதென்னை? எனின், முன்னர்க் கேட்டது நம்பத் தகுந்த உறவினரிடத்தன்றி அயலாரிடமிருந்து கேட்ட செய்தி யாதலானும், அச்செய்தி இல்வாழ்க்கை நிலையினைப்பற்றிய அந்தரங்கமான செய்தியாதலானும், முன் கேட்டதனை உறவினரால் மீண்டும் உறுதிப்பட வறிந்து உண்மை கண்டாலன்றி மேற் செய்தக்கதனை நிலையிட முடியாமைபற்றி என்க. ஒற்றொற்றித் தந்த பொருளைப் பிறிதினோ, ரொற்றினாலொற்றிக் கொளல் (குறள்) என்ற உண்மை இச்செய்தியிலும் ஏற்றபடி பொருந்தக்கொள்வது உலகநிலை மரபென்க. **சுற்றத்தாரும் தாமும் கேட்டு** என்ற உம்மைகள் இக்கருத்துப் புலப்படநின்றன.

கேட்டபோதே - போக்கி - கேட்ட செய்தி மிகக் கவலை விளைப்பதொன்றாதலின் கேட்டவுடனே உற்ற கிளைஞரைப் போக்கினர் என்ற விரைவு குறித்தது.

உறுகிளைஞர் - உற்ற செய்தியைத் தம்மைப் போலவே கவலைகொண்டு உண்மைப்பட அறிவார். "ஒட்டி உலர்வா **ருறவு**" என்ற நீதிநூற் கருத்துங் காண்க.

அவன்நிலை - அவ்வணிகனது வரலாறு முழுமையும்.

மம்மர் - துன்பம்; துயரம். மயக்கம் என்பாருமுண்டு.

மற்று அவன் - மற்று - அவ்வாறு மனம்மாறி வேறுபட் டொழுகுகின்றவன் என்பது குறித்தது.

அவன்...விடுவது - விடுவது செய்தக்க கடன்; கருமம் என்பதாம். கடன் என்பது இசையெச்சம். அவன் இருந்த பாங்கர்க் கொண்டுபோய் விடுவது என்பது, அவன் இங்கு மனைவியாருடன் இருத்தல் நியதியும் முன்னை நிலையிற்கொண்ட ஒழுக்கமுமாம்; ஆயின், அது செய்யாது, அவன் வேறிடத்திற் றங்கிவிட்டால் அது கொண்டு பிணக்கம் செய்யாமற்

1758. மாமணிச் சிவிகை தன்னின் மடநடை மயிலன் னுரைத்
தாமரைத் தவிசின் வைகுந் தனித்திரு வென்ன வேற்றிக்,
காமரு கழனி வீழ்த்துக், காதல்செய் சுற்றத் தாருந்
தேமொழி யவருஞ் சூழச் சேணிடைக் கழிந்து சென்றார். 42

கணவன் இருக்குமிடத்தில் மனைவியுமிருக்கச் செய்தலே குலமுறையும் ஒழுங்குமாம் என்று துணிந்தனர் அச்சுற்றத்தார். இது அந்நாள் மக்களது மனநேர்மையினையும் ஒழுக்கத்தினையும் எடுத்துக்காட்டி உலகரை வழிப்படுத்துவதாம். இங்கு வஞ்சனையாக நீங்கித் தன் கடமையைவிட்டு ஒழுகும் குற்றம் வணிகன் மேலது. அதுகொண்டு பிணங்குதலும் வழக்கிடுதலும் அக்குற்றத்துக்கு நீதிநூல் வகுத்தபடி அரசதண்டஞ் செய்வித்தலும் உரியதே யாகும்; அவ்வாறு நடப்பர் ஏனைச் சாதாரண மக்கள்; அதிலும் தனதத்தன் போன்ற செல்வமிக்கவர் அவ்வாறே செய்தல் இயல்பு; என்பன இந்நாளிலும் நாம் கண்கூடாகக் காண்பனவாம். ஆயினும், இங்கு அம்மையாரின் சுற்றத்தார் ஒழுகிய நன்முறை அவர்களது மேம்பாட்டினைக் காட்டுவதன்றி உயர்ந்த குறிக்கோளையும் காட்டுவதாம். **கொண்டுபோய் விடுவது** - தாமாகச் செல்வது என்றதும் அவ்வுயர்நிலையைக் காட்டும்.

என்றார் - என்று துணிந்துகொண்டனர்.

கொம்மைவெம் முலையினார் என்றது அம்மையாரின் இளம்பருவ நோக்கி அவர் அதுபோழ்து கணவனுடன் கூடிய இல்வாழ்க்கையில் அமரத்தக்க பருவத்தினர் என்பதும், அவர் கணவனை நீங்கித் தனித்து இருத்தல் தகாது என்பதும் சுற்றத்தார் கருதியவை என்று குறித்தது. இது நற்சுற்றத்தின் இயல்பு. "காதல்செய் சுற்றத்தார்" (*1758*) என்பது காண்க.*41*

1758. (இ-ள்.) வெளிப்படை. பெரிய அழகிய சிவிகையில் மடப்பமுடைய நடை பொருந்திய மயில்போன்ற புனிதவதியம்மையாரைத் தாமரை யாதனத்தில் வீற்றிருக்கும் தனித்திருவினுர்போன்று ஏற்றிக்கொண்டு, அழகிய திரையைச் சூழ்வித்துக், காதல் செய்யும் சுற்றத்தார்களும் இனிய மொழியினையுடைய தோழியர் முதலிய பெண்களும் சூழ்ந்து செல்ல; நெடுந்தூரம் பல நாட்கள் கடந்து சென்றனர்.

(வி-ரை.) சிவிகை - ஏற்றி - சிவிகையில் ஏற்றிச் செல்வது இவ்வாறு பல திறத்தாலும் நாயகனிடத்துக் கொண்டு சேர்க்கும் பெண்களைக் கொண்டு செலுத்தும் அந்நாள் வழக்குக்களுள் ஒன்று போலும். தனதத்தன் மகளாருக்குரிய செல்வ நிலையின் தகுதிபற்றி இவ்வாறு சென்றனர் என்றலுமொன்று. **கழனி வீழ்த்து** - மறைந்து செல்லுதல் வணிகர்களுள் மரபுவழக் கல்லாமையும் உணரப்படும்.

மடநடை மயில் அன்னுரை - "மென்னகை மயிலை" (*1727*) என்றபடி மணஞ்செய்த அற்றை நாட்போலவே இன்றும் விளங்கியவர் என்பது குறிப்பு.

தாமரைத் தவிசின் வைகும் தனித்திரு - திரு - முத்தித்திருவின் தெய்வமாகிய ஞானமுதல்வி. **தனித்திரு** - என்ற கருத்துமது. **தாமரை** - முன்னர்த் "திருமடந்தை" (*1718*) என்றவிடத்து விளக்கப்பட்டது காண்க. பலகாலும் பிறந்திறந்துழல் பவர்களாய்

1759. சிலபகல் கடந்து சென்று, செந்தமிழ்த் திருநா டெய்தி,
மலர்புகழ்ப் பரம தத்தன் மாநகர் மருங்கு வந்து,
குலமுதல் மனைவி யாரைக் கொண்டுவந் தணைந்த தன்மை
தொலைவில்சீர்க் கணவனுக்குச் சொல்லிமுன் செல்ல விட்டார். 43

வெண்டாமரை செந்தாமரைகளில் வாழும் ஏனைத் திருமாதர்களை இங்குக் கொண்டுரைத்தல் பொருந்தாமை தனி என்பதனாற் பெறப்படும்.

கழனி - திரை. சிவிகையின் வாய்தலையும் திரையால் மறைத்தனர்.

காதல் செய் - என்றதனாற் சுற்றத்தார்களின் இச்செய்கைகளுக்குக் காரணங் கூறியபடி. **காதல் செய் - செய்** என்பது கொண்ட என்ற பொருளில் வந்தது. காதல் செய்தலால் சூழ்ந்து சென்றார் என்பார் உடம்பொடு புணர்த்தி ஓதினார்.

தேமொழியவர் என்றது இங்குத் தோழியர் முதலியோர்களைக் குறித்தது. சுற்றத்தார் என்பது ஆண்மக்களையும், தேமொழியவர் என்பது பெண்களையும் குறித்த தென்பாருமுண்டு. **சுற்றத்தார்** - இருபாலாரையும் உணர்த்தும் என்க.

சேண் - காலத்தாலும் இடத்தாலும் நெடுமை. **இடைக் கழிதல்** - இடையிடுதல். கப்பல் ஏறிச் சென்ற வணிகன் அந்நெடுந்தூரம் உள்ள அயல் நாட்டில் வாழ்ந்தானாதலின், பன்னூறு நாழிகை வழி கடந்து நடந்து செல்வோராகிப் பல நாட் பயணம் செய்தனர் என்பது. அந்நாளில் வேறு பயண வசதியில்லாமையும் உணரப்படும். நடந்து செல்வோர் இடையிடையே தங்கிச் செல்லும் அவசியமுண்டு.

செல்லுதல் - இப்பாட்டினாலும், **சேர்தல்** - வரும் பாட்டினாலும் கூறும் கவிநயமும் காண்க.

கவிகை வீழ்த்து - என்பதும் பாடம். 42

1759. (இ-ள்.) வெளிப்படை. சில நாட்கள் கடந்து போய்ச், செந்தமிழ் நாடாகிய பாண்டி நாட்டிற் சேர்ந்து, மலர் புகழினையுடைய பரமதத்தனிருந்த பட்டினத்தின் பக்கம் வந்து, குலமுதல் மனைவியாரைக் கொண்டுவந்து தாம் அணைந்துள்ள செய்திகளையெல்லாந் தொலைவில்லாத சீர்க் கணவனறியும்படி முன்னே சொல்லியனுப்பினர்.

(வி-ரை.) சில பகல்...எய்தி - காரைக்காலுக்கும் பாண்டி நாட்டெல்லைக்கும் உள்ள தூரம் சிலநாட்களில் நடந்து சென்று சேரத்தக்க அளவு உள்ளது என்பதாம்.

செந்தமிழ்த் திருநாடு - பாண்டிநாடு. 1554 பார்க்க.

மலர் புகழ் - புகழ் - இம்மையில் வருவது. அது செல்வம் முதலிய பல காரணங்களாலும் வரும். "புகழும் பழியும் பெருக்கிற் பெருகும்" (திருக்கோவை - 181) என்றபடி அது பரவுந் தன்மையுடையது. பரமதத்தனது நிலையினையும் நகரையும் அவனது செல்வம்பற்றிய புகழினால் இவர்கள் அறிந்து வந்தடைந்தார்கள் ஆதலின் **மலர் புகழ்** என்றார்.

1760. வந்தவ ரணைந்த மாற்றங் கேட்டலும் வணிகன் றானுஞ்,
சிந்தையி லச்ச மெய்திச், செழுமணம் பின்பு செய்த
பைந்தொடி தனையுங் கொண்டு பயந்தபெண் மகவி னோடு
"முந்துறச் செல்வே" னென்று மொய்குழ லவர்பால் வந்தான். 44

தொலைவில் சீர் - இது மலர் புகழ் என்றதனின் வேறு. மனைவியாரைச் சார்வுபடுத்தக்கொண்டுவந்த தன்மை கணவனுக்குச் சொல்லிவிடும் நிலைபற்றிச் சுற்றத்தார் எண்ணியபடியால், அவர்களுடைய எண்ணத்திறங்கள் புனிதவதியாரின் அரும்பெறற் கணவன் என்று நின்ற தன்மைபற்றித் **தொலைவில் சீர்** என்றார். அச்சிறப்பு எவ்வாற்றானும் கணவன் வேண்டாது பிரிந்திருப்பினும் தொலைக்கினும் தொலைக்க முடியாதொன்றாம் என்ற குறிப்புச் சுற்றத்தார்கள் எண்ணியது. **கணவனார்க்கு** என்பது பாடமாயின் அது இக்கருத்துப் பற்றியதென்க. இனிக் கணவனும் அம்மையாரைத் தெய்வம் என்று கொண்டு ஒழுகியமையாலும், மேலும் அவரது பெயரைத் தன் மகவுக்கு இட்டு வழிபட்ட நிலையாலும், இனியும் அவரை வணங்கி உலகர்க்கு அவர் பெருமையைக் காட்டவுள்ள நிலையாலும் தொலைவில் சீராயிற்று என்க.

செல்லவிட்டார் - முன் அறிவிப்பின் பொருட்டுத் தூதாகச் சிலரைச் செலுத்தினர். *43*

1760. (இ-ள்.) வெளிப்படை. அவ்வாறு வந்தவர்கள் தனது நகரை அணைந்த மாற்றத்தினைக் கேட்டதும், வணிகனும் மனத்தில் அச்சங்கொண்டு செழுமையுடைய கலியாணத்தைப் பின்னாட் செய்துகொண்ட மனைவியையும் பெற்றெடுத்த பெண் மகவினுடன் கொண்டு, "அவர்கள் இங்கு என்னிடம் வரும்முன்பு நான் செல்வேன்" என்று கருதி அம்மையாரிடம் வந்தான்.

(வி-ரை.) மாற்றம் - செய்தி. தூது வந்தவர் சொல்லிய சொல். தான் எண்ணி யிருந்ததற்கு மாறாக வந்த செய்தி என்ற குறிப்புப்பட **மாற்றம்** என்றார்.

அச்சம் எய்தி - மாங்கனியை அதிசயித்துக் கையில் வாங்கியவுடன் அது மறையக்கண்ட அப்போது "தணிவரும் பயமேற் கொள்ள வுள்ளமும் தடுமாறெய்தி...நீங்கும் துணிவுகொண்"டதனையே (*1747*) மனத்துட் பொதிந்து வைத்து, அவ்வாற்றினையே இதுவரையும் தொடர்ந்து ஒழுகி இந்நிலையில் நின்றானாதலின் உள்ளிருந்த அந்த அச்சம் மீண்டும் தலைப்பட்டு மேற்செயல்களை ஊக்குவதாயிற்று. எனவே செய்தி கேட்டவுடனே வணிகன் மனத்துள் முதலில் எழுந்த மன நிகழ்ச்சி அச்சமே என்பது.

செழுமணம் பின்பு செய்த - முன்பு செய்ததும் செழுமணமாதலின் பின்பு செழுமணம் என்னாது செழுமணம் பின்பு என்றார். **செய்த** - செய்துகொண்ட.

பைந்தொடி தனையும் கொண்டு - கொண்டு - உடன் அழைத்துக்கொண்டு. அச்செய்தியின் வரலாற்றை அவளும் அறியாதபடி வணிகன் ஒழுகினானாதலின், அவன் அழைப்ப ஏவல்வழி உடன் வந்தனளேயன்றி அறிந்து வந்தனளல்லள் என்பார் (ஒரு பண்டம் போலக்) **கொண்டு** என்றார்.

1761. தானுமம் மனைவி யோடுந் தளர்நடை மகவி னோடு
மானிளம் பிணைபோ னின்ற மனைவியா ரடியிற் றாழ்ந்தே
"யானுும தருளால் வாழ்வேன்; இவ்விளங் குழவி தானும்
பான்மையா லுமது நாமம்" என்றுமுன் பணிந்து வீழ்ந்தான். 45

பயந்த பெண் மகவினோடும் - பயந்த - பெற்ற. பயத்தின் காரணமாக நீங்கி வந்து மணஞ்செய்து, அச்சத்தின் வழியே பெற்று, அவ்வழியே பெயருமிடப் பெற்ற என்ற குறிப்புப்படப் பயந்த என்றார்.

"முந்துறச் செல்வேன்" - இது வணிகன் உட்கொண்ட மனத்துணிவு. **முந்துற** - மனைவியார் தன்மனையினிடத்து வரும் முன்பு. மனைவியார் தனது மனைத்தொடர்புபற்றி வருதலைப் பெருந் தீங்கு பயக்கும் செயலாகக் கருதித் "தொடர்வற நினைந்து...கடனமைத்து" (*1754*) ஒழுகி வந்தானாதலின் அவர்தன் மனைக்கு வருதலாகிய தீங்கு நிகழாமற் காக்கும்பொருட்டு அது வருமுன்பு - செல்வேன் என்றுட்கொண்டான்.

மொய் குழலவர் - "பூங்குழலார்" (*1730*) என்பது முதலாக முன்னுரைத்த வற்றுக்கேற்பக் கூறினார். *44*

1761. (இ-ள்.) வெளிப்படை. வணிகன் தானும் அந்த மனைவியோடும் தளர்நடைப் பருவத்தில் உள்ள பெண் மகவினோடும் மானின் இளம் பிணைபோல் நின்ற மனைவியாருடைய அடிகளில் வணங்கி "நான் உமது அருளினால் வாழ்வேன்; இந்த இளங்குழவிக்கும் அப்பான்மைபற்றி உமது திருநாமத்தையே சூட்டி யிருக்கின்றேன்" என்று சொல்லி அவர் முன்பு பணிந்து நிலமுற வீழ்ந்தனன்.

(வி-ரை.) அம்மனைவி - உடன் கொண்டு சென்ற அந்த - முன்னறி சுட்டு.

மானிளம் பிணைபோல் - இளமையுடைய பெண் மான் என்றது இளம் பருவமும், மாறிய நிலைகண்டு மருண்ட நோக்கமும் குறித்தது. **நின்ற** - கணவன் வருதல் கண்டு எழுந்து நின்ற என்ற பொருளும் தர நின்றது.

அடியில் தாழ்ந்தே - என்றது நின்றபடி செய்த முதல் வணக்கம். வந்து கண்டவுடன் இவ்வாறு தலை வணங்கித் தனது நிலையினையும் தனது கருத்தினையும் விண்ணப்பித்துப், பின் நிலமுற வீழ்ந்து செய்த வணக்கம் **பணிந்து வீழ்ந்தான்** என்றதனால் அறிவிக்கப்பட்டது. **அடியில் தாழ்ந்தே** - "முந்துறச் செல்வேன்" என்று வந்தானாதலின், தான் வந்தவுடன் பன்னாட் பிரிந்துவந்த மனைவியார் தன்னை முறையில் வீழ்ந்து வணங்குவார் என்று எண்ணி, அவர் அவ்வாறு வணங்குமுன் தான் அவரது அடியில் தலைவணங்கித் தாழ்ந்து, பின்னரே சொல்லத் தொடங்குகின்றான். தெய்வமாகக் கொண்டானாதலின் அதற்கேற்ப முன்னர்த் தாழ்ந்தான் என்பதும் முறையாகும்.

"யான் உமது...நாமம்" - சுற்றத்தாரெல்லாம் முன் நிற்க, இது வணிகன் புனிதவதியம்மையாரை நோக்கிக் கூறியது. **அருளால்** என்றும், **குழவி - உமது நாமம்** என்றும் கூறியவதனாலும், முன்னர்த் தலை வணங்கியும் பின்னர் வீழ்ந்து வணங்கியும் செயல்

1762. கணவர்தாம் வணங்கக் கண்ட காமர்பூங் கொடிய ஞரும்
அணைவுறுஞ் சுற்றத் தார்பா லச்சமோ டொதுங்கி நிற்ப,
வுணர்வுறு கிளைஞர் வெள்கி "யுன்றிரு மனைவி தன்னை
மணமலி ருரி ஞய்நீ வணங்குவ தென்கொல்!" என்ருர். 46

செய்தவாற்ருலும் தான் அவரைத் தெய்வமாகக் கொண்டு ஒழுகியதனை உணர்த்தினுன். இதனை இன்னபடி என்று முன் வரலாறு அறியாமையால் மயங்கி நின்றனர் அம்மையாரும் சுற்றத்தார்களும். ஆயினும் அம்மையார் தமது நிலைக்கேற்ப வினவாது அஞ்சி ஒதுங்கி நிற்கச், சுற்றத்தார் வினவுகின்ற நிலை மேல்வரும் பாட்டினுலும், வணிகனது மாற்றங் கேட்ட பின் அவ்விரு திறத்தாரும் அடைந்த நிலை 1764-ஆம் பாட்டினுலும் ஒருங்கு கூறுவது காண்க.

குழவி - உமது நாமம் - குழவிக்கு உமது நாமம் இட்டிருக்கின்றேன் என்று வருவித்துக் கொள்க. விரைவின் அறிவிக்க வேண்டிப் பேச்சு வழக்கு முறையில் கூறிய அமைதி காண்க.

முன் பணிந்து - திருமுன்னர் என்றும், அவர் வணங்கத் தொடங்கு முன்பு என்றும் இடத்தாலும் காலத்தாலும் முன் என்க.

வீழ்ந்தான் - என்ற சொல்லாற்றலால் வேறு செயலறியாது அச்சம் மிகுதியினுல் அடியற்ற மரம்போல விழுந்தான் என்று உணர்த்தியபடி. 45

1762. (இ-ள்.) கணவர்...நிற்ப - தம் கணவர் தம்மை வணங்கியது கண்ட அழகிய பூங்கொடி போன்ற புனிதவதி யம்மையாரும் பக்கத்தே பொருந்தி நின்ற சுற்றத்தார்களிடம் அச்சத்துடனே ஒதுங்கி நிற்க; உணர்வுறும்...என்ருர் - உணர்வு பொருந்தும் சுற்றத்தார்கள் வெட்கமுற்று, "மணமிகுந்த மாலை யணிந்த நீ உன் திருமனைவியை வணங்குவதென்னை?" என்று கேட்டனர்.

(வி-ரை.) கணவர்தாம் - புனிதவதியம்மையார் தமது திருமனத்தினுள் வணிகனைக் கணவன் என்ற முறையில் அமைத்து "மன்னிய கற்பினேடு மனையறம் புரிந்து வைகியதனுல்" (1755) அவரது மனநிலைக் கேற்பப் பன்மையாற் கூறினுர். ஆதலின் முன் எல்லாம் வணிகனை ஒருமையாற் கூறியதுடன் முரணுமை யறிக. இம் மனநிலை மாறியபோது அம்மையாரும் "இவன்" (1765) என ஒருமையாற் கூறுவதும் சிந்திக்க.

காமர் பூங்கொடி அன்ஞர் - காமர் - அழகிய. **பூங்கொடி - பூக்கொடி** என்பது மென்மைபற்றி மெலிந்து வந்தது. முகமுங் கண்ணும் கையும் முதலிய பலவும் பல வேறு அழகிய பூக்களை ஒத்து விளங்குதலால் பல வேறு பூக்கள் மலரவுள்ளதொரு கொடி உண்டேல் அதுபோன்ருர் என்க. இல்பொருளுவமை. "திருவளர் தாமரை" என்ற திருக்கோவையார்த் திருப்பாட்டு ஈண்டுச் சிந்திக்கத் தக்கது.

கொடி அன்ஞர் - சுற்றத்தார்பால் - ஒதுங்கி நிற்ப - தனித்து நில்லாது ஒரு கொழு கொம்பினைப்பற்றி நிற்கும் தன்மையுடையது கொடி. இதுவரை கணவன் என்ற பற்றுக்கோடு கொண்டிருந்த அம்மையார் ஈண்டு அப்பற்றைப் பற்றுதல் இயலாமை காண நிகழ்ந்தபோது அணைவுறும் சுற்றத்தார் தாம் அடுத்த பற்றுக்கோடாக நின்ருராதலின், வணங்கி அவனை விட்டு இவர்கள்பால் ஒதுங்கி நின்றனர். இந்த நிலை குறிக்க ஈண்டுக் **கொடியினை** உவமித்தார்.

1763. மற்றவர் தம்மை நோக்கி, "மானுட மிவர்தா மல்லர்;
நற்பெருந் தெய்வ மாத ஞனறிந் தகன்ற பின்பு
பெற்றவிம் மகவு தன்னைப் பேரிட்டே; னுத லாலே
பொற்பதம் பணிந்தே; னீரும் போற்றுதல் செய்மின்" என்ருன். 47

முன்னர் **மயில் அன்னர்** என்றது மணக்கோலம் பற்றியும், **தனித்திரு** என்றது கணவர்க்கும் உலகுக்கும் முத்திநெறி தரச் செல்லும் நிலை பற்றியும், **மானிளம்பிணை** என்றது மருண்ட நோக்கம் பற்றியும் அவ்வத் திறத்துக்கேற்றபடி உவமித்த நயமுங் காண்க. "அடுகளிறு" (584) என்றவிடத்துரைத்தவை பார்க்க.

அச்சமோடு - அச்சம் உலக நிலை பற்றிய இல்லறத்தின் உடலின் தொடர்பு பற்றி வந்தது. "அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை" என்றது அடியவர் நிலையாதலின், உயிர்த் தொடர்புபற்றி இறைவனது சார்புகொண்ட நிலை வந்தபோது இவ்வச்சம் முதலிய யாவும் அறவே ஒழிந்துவிட்டமை மேல் 1765 - 1770 பாட்டுக்களிற் காண்க.

உணர்வு உறு கிளைஞர் - உணர்வு - ஈண்டுக் குலப்பெருமைபற்றிய உணர்ச்சி குறித்தது. அதுபற்றி வணிகனது தகாத ஒழுக்கம் கண்டும் இவர்கள் அம்மையாரை உடன்கொண்டு சேர்த்தனர். இங்கும் அவனது தகுதியற்ற செயலைக் கண்டு வெள்கி வினவினர்.

திருமனைவி - கற்பு நிலையின் மேம்பட்டவராதலின் உனது ஏவல் வழி நிற்பவர் என்றது குறிப்பு. **திரு** - ஈண்டுக் கற்பு நிலையின் மேன்மை குறித்தது.

மணமலி தாரினுய் - மணமலி தார் - தார் - வணிகர்க்குரிய அடையாள மாலை - **மாலை** - கீர்த்தியும் மேம்பாடும் கொற்றமும் குறிக்கும் தசாங்கங்களுள் ஒன்று. அப்பெற்றியினுல் மாலையினையும் எடுத்துப் போற்றுதல் மரபு. "மந்தார மாலையே பாடுதுங்கா ணம்மானுய்" (திருவா.) முதலியவை காண்க. **தாரினுய்** என்றது அங்ஙனம் கொற்றங் குறிக்கும் அங்கம் பழுது குறிக்கும்படி செய்துவிட்டனை என்ற குறிப்பு. **மணமலி** - என்றது புகழ் பரவிய; என்ற பொருட் குறிப்புப்பட நின்றது.

மனைவி தன்னை - நீ வணங்குவதென்னை - உன்னை மனைவி வணங்குதல் நெறியாயிருப்ப, நீ வணங்குவதென் என்பது குறிப்பு.

அச்சத்தோடு - மணமரு - என்பனவும் பாடங்கள். 46

1763. (இ-ள்.) வெளிப்படை. (வணிகன்) மற்றும் அவ்வாறு வினவிய சுற்றத்தாரைப் பார்த்து, "இவர் தாம் மானுடப் பிறவியல்லர்; நற்பெருந் தெய்வமேயாவர்; அவ்வாறு தெய்வமாதலை நான் அறிந்து அவரை நீங்கி வந்த பின்பு பெற்ற இம்மகவுக்கு அவர் பெயரை இட்டேன்; ஆதலாலே அவருடைய பொற்பாதங்களை வணங்கினேன்; அதுபோலவே நீவிரும் போற்றுங்கள்" என்று சொன்னுன்.

(வி-ரை.) வணிகன் - என்ற எழுவாய் மறைந்து நின்றது. வணிகனும் இதனேடு இவ்வரலாற்றினின்று மறைந்துபடுகின்ருன் என்ற குறிப்பும் காண்க. மேல்வரும் பாட்டில் வரும் **வணிகன்** என்றது அவனது மாறிய நிலை குறித்தது.

1764. என்றலுஞ் சுற்றத் தாரு"மிதுவென்கொ"லென்று நின்றார்;
மன்றலங் குழலி னாரும் வணிகன்வாய் மாற்றங் கேளாக்
கொன்றைவார் சடையி னார்தங் குரைகழல் போற்றிச், சிந்தை
யொன்றிய நோக்கின் மிக்க உணர்வுகொண் டுரைசெய் கின்றார். 48

மானுடம் - மனிதப் பிறப்பு. சுற்றத்தாரை நோக்கி நீங்கள் எண்ணுகின்றது போல இவர் வெளியில் காணுகிறபடி மனிதப் பிறவியில் வந்தவர் என்றும், எனது மனைவியாரென்றும், அதனால் நான் அவரை வணங்குவது தகாதென்றும் உள்ளநிலை பொருந்தா தென்பான் "இவர்தாம் மானுடம் அல்லர்" என்று சுருங்கக் கூறினான். அச்சம்பற்றிச் சொல்லாற்றல் சுருங்கியதென்க. மேலும் இவ்வாறே காண்க.

நல் பெரும் தெய்வம் - மானுடமல்லாராயின் பின் என்னை? எனின், தெய்வப் பிறப்பு ஆவர்; அதுவும், மக்களை அச்சுறுத்தித் தீமைசெய்துழலும் சிறுதெய்வங்கள் போலன்றி, நன்மைசெய்யும் பெருந்தெய்வமாவர்; அதனை நான் அறிந்தேன் என்பதாம்.

மகவுதன்னைப் பேரிட்டேன் - மகவுக்கு அத்தெய்வத்தின் பேரை இட்டேன்.

ஆதலாலே பொற்பதம் பணிந்தேன் - "வணங்குவதென்கொல்" என்று கேட்ட வினாவுக்கு விடையாக வணங்கியதற்குக் காரணம் கூறியவாறு.

நீரும் போற்றுதல் செய்மின் - நீவிர்களும் இவரை மானுடம் என்று எண்ணி ஏமாறாது உரியபடி வழிபட்டுய்யுங்கள். நான் வணங்கியதுபற்றி வெள்கி அது தகாதென்று நீங்கள் கருதியது தகாது. நான் அறிந்து ஒழுகிய ஒழுக்கத்தை உரைத்தேன். நீவிர் இதுகாறும் அறியாமலும் வழிபட்டு நன்மை பெறாமலும் இருந்ததுதான் தவறு. இனியாவது அறிந்து வழிபட்டு உய்யுங்கள் - என்று அவர்களை வழிப்படுத்தியவாறு. இவ்வாறு தன்னை அறியாமலே அவர்களுக்கு விடை சொல்லும் முகத்தால் அவர்களையும் வழிப்படுத்தினான் என்க.

இப்பாட்டினால் வணிகன் தன் சிந்தனையில் வஞ்சனையாகப் பல காலம் பொதிந்து வைத்த கருத்தை முதல் முதல் உலகறிய வெளியிட்ட நிலை கூறப்பட்டது. அம்மையார்பால் வணிகனது உலகத்தொடர்பு வணிகனளவில் கனி கண்டு மறைந்த அன்றே நீங்கினும், அம்மையார் அவனது மனநிலை அறியாராதலின் அவரது திருமனங்கொண்ட அளவில் உலகநிலைக் கற்பு ஒழுக்கம்பற்றி இதுவரை நிலவிற்று. இச்செய்தி கேட்டவுடன் அது நீங்கும்நிலை மேல்வரும் பாட்டாற் கூறுவார்.

நானறிந்தகன்று - என்பதும் பாடம். 47

1764. (இ-ள்.) என்றலும்...நின்றார் - என்று இவ்வாறு வணிகன் சொல்லக் கேட்டலும், சுற்றத்தார்கள் "இது என்னை கொல்லோ?" என்று ஒன்றும் தோன்றாது நின்றனர்; மன்றல்...கேளா - மணந் தங்கிய கூந்தலையுடைய அம்மையாரும் வணிகன் சொல்லிய மாற்றத்தைக் கேட்டு; கொன்றை...போற்றி - கொன்றையணிந்த நீண்ட சடையினையுடைய சிவபெருமானது சத்திக்கின்ற கழலினையணிந்த திருப்பாதங்களைத் துதித்து; சிந்தை...கொண்டு

- மனம் ஒன்றிய அகநோக்கின் மிக்க உள்ளுணர்ச்சியினை மேற்கொண்டு; உரைசெய்கின்றார் - உரை செய்வாராகி.

(வி-ரை.) வணிகன் மாற்றங் கேட்ட பின்பு சுற்றத்தார், அம்மையார் என்ற இருதிறத்தாரும் நின்ற நிலையினை இவ்விரண்டு பாட்டானும் கூறுகின்றார். அவன் சொல்லுமுன்பு அவனது ஒழுக்கங் கண்டவுடன் இவ்விருதிறத்தவர் நிலையினை முன் (1762) உரைத்தாங்கே இதனையும் கூறிய நயம் காண்க. வணிகனது தொடர்பு முன் பாட்டோடு ஒழியச், சுற்றத் தொடர்பு இதனோடு சுருங்கி யொழிந்தது. அம்மையாரது சிவனருட்டொடர்பும் "உறவாவா ருருத்திரபல் கணத்தினோர்கள்" (தேவா) "உற்றாரை யான் வேண்டேன்" "வேண்டேன் சுற்றம்" (திருவா) என்றபடி உருத்திர பல்கணத்தின் தொடர்பும் இனிப் பெருகி என்றும் நிகழத் தொடங்குகின்றமை குறிக்க. இங்குச், சுற்றத்தார் நிகழ்ச்சியைச் சுருக்கியும் அம்மையாரது அருட்டொடர்ச்சி நிலையினைப் பெருக்கியும் கூறிய நயமும் காண்க. **என்று நின்றார்** - (1764); **என்று பரவி நின்றார்** - என்று இருதிறத்தின் நிகழ்ச்சியும் குறித்த நயமும் காண்க.

இது என் கொல் என்று - இன்னதென்று தெளிய வாராது கொண்ட மயக்கநிலை சுற்றத்தார் கொண்டது. இதனை "**ஈங்கிவன்......பாங்குற வேண்டும்**" என்ற மேல்வரும் பாட்டிற் கூறும் வண்ணம் அம்மையார் அடைந்த தெளிந்த சிவநெறி நிலையுடன் ஒப்பிட்டு உண்மை கண்டுகொள்க.

மன்றல் அம் குழலினார் - "பூப்பயின் மென்குழல் மடவார்" (1737) என்ற விடத்துரைத்தவை பார்க்க.

வணிகன் வாய் மாற்றம் - மாற்றம் - 1760-ல் உரைத்த குறிப்பு. அம்மையார் அணைந்த செய்தி வணிகனுக்கு மாற்றம் விளைத்தாங்கே, வணிகன் சொன்ன செய்தி அம்மையாருக்கு மாற்றம் விளைத்தது என்பார் ஈரிடத்தும் ஒரு சொல்லாற்கூறிய நயமும் காண்க. கேளா - கேட்டு.

கொன்றைவார்.....போற்றி - வணிகன் உற்ற சுற்றமாகி நிற்க, இதுவரை இறைவரைக் காணும் உயிர்ச் சுற்றமாகக் கொண்டொழுகிய அம்மையார், இப்போது உடற்சுற்றம் உயிர்ச்சுற்றம் என்ற இருநிலையினும் கண்டுகொண்டு வேண்டுகின்றார்.

சிந்தை ஒன்றிய நோக்கின் மிக்க உணர்வு - "ஒன்றியிருந்து நினைமின்கள்" என்றபடி வேறெங்கும் செல்லவிடாது, சிந்தையினை இறைவர்பாலே ஊன்ற வைத்து உள்ளே அழுந்திய வுணர்வு. "விளக்கைப் பிளந்து விளக்கினை யேற்றி, விளக்கினுக்குள்ளே விளக்கினைத் தூண்டி, விளக்கில் விளக்கை விளக்கவல்லார்க்கு, **விளக்குடையான் கழல் மேவலு மாமே**" (திருமந் - 9 - 168) என்று ஞானோதயம் என்ற பகுதியில் திருமூலதேவர் அருளியபடி, பாச ஞானம், பசு ஞானம் இரண்டினையும் அறவே களைந்து பதி ஞானமொன்றிலே ஒன்றி உள்ளே ஊன்றிப் பார்க்கின்ற நிலை.

உரை செய்கின்றார் - உரை செய்கின்றாராகி; முற்றெச்சம். உரைசெய்கின்றார் - என்று - பரவி - என மேல்வரும் பாட்டின் வினை எச்சத்துடன் கூட்டுக.

1765. "ஈங்கிவன் குறித்த கொள்கை யிது; வினி யிவனுக் காகத்
தாங்கிய வனப்பு நின்ற தசைப்பொதி கழித்திங், குன்பால்
ஆங்குநின் ருள்கள் போற்றும் பேய்வடி வடியே னுக்குப்
பாங்குற வேண்டு" மென்று பரமர்தாள் பரவி நின்றார். 49

1765. (இ-ள்.) ஈங்கு இவன் குறித்த கொள்கை இது - இங்கு இவ்வணிகன் உட்கொண்டு குறி வைத்த கொள்கை யிதுவாகும்; இனி - இனிமேல்; இவனுக்காகத் தாங்கிய வனப்பு நின்ற தசைப்பொதி இங்குக் கழித்து - இவன் பொருட்டுத் தாங்கிக்கொண்டு நின்ற அழகு நிற்றற்கிடமாகிய தசை பொதிந்த சுமையினை இங்குக் கழித்துவிட்டு; உன்பால்...வேண்டும் - உன்னிடத்து அவ்வுலகத்தில் நின்பாதங்களைப் போற்றுகின்ற பேய்வடிவத்தை அடியேனுக்கு நற்பாங்கு பொருந்த அருளவேண்டும்; என்று...நின்றார் - என்று வேண்டிப் பரமருடைய திருவடிகளைத் துதித்து நின்றனர்

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை.) ஈங்கு - இந்நிலை - இப்பக்கம் என்ற பொருளில் வந்தது.

இவன் - இவனுக்காக - கணவன் என்ற தொடர்பு அற்று விட்டதாகவே, சிவனையும் அவனடியார்களையும் அன்றி வேறொன்றனையும் பொருளாக எண்ணி மதியாத உயர்நிலையில் நின்றபடியால், பொருளல்லாத வேறு சாதாரண உயிர் வருக்கத்துள் ஒருவனாகவே அம்மையார் வணிகனை வைத்து ஒருமையிற் கூறும் உண்மை நிலை கண்டுகொள்க. ஆசிரியர் அந்நிலை பற்றியே இச்சரித முழுமையும் வணிகனை ஒருமையில் வைத்துக் கூறிய அமைதியும் காண்க.

இது - *1763*-ல் வெளிப்படக் கூறியதும், *1761*-ல் செயலாற் காட்டியதும், பரிந்து உறைந்ததும் ஆகிய இவற்றின் தொகுதியாகிய கருத்து.

இனி - மேல்வரும் வாழ்வின் பகுதி.

தாங்கிய வனப்பு நின்ற தசைப்பொதி - தாங்கிய - பொதி - என்றமையால் அம்மையார் இவ்வுடற் பகுதியை ஒரு பொருட்பற்றாத சுமையாகக்கொண்டே தாங்கி வந்தார் என்பது. **வனப்பு நின்ற தசை** - உடலின் வனப்பு என்ற தசையினைப் பற்றியே நிற்பதொன்று. தசையின் பற்று வற்றியபோது உடலை வறிதாகிய ஆபாச எலும்புக்கூடாகவே உலகம் கருதுவது காண்க.

இவனுக்காகத் தாங்கிய வனப்பு நின்ற தசைப் பொதி - மகளிர், தமது உடல் வனப்பும், அதுபற்றிச் சித்தரித்தும் கத்தரித்தும் செய்துகொள்ளும் பல்வகை ஆடை அணி முதலிய கோலங்களும் தம் நாயகனின் அனுபவத்திற்கென்றே மேற்கொள்வர் என்ற நம் முந்தையோர் கொண்ட உயர்ந்த முறையினை அம்மையாரது அருட்டிருவாக்கின் உண்மையாற் கண்டுணரலாம். **தசையும்**, அது பற்றுக்கோடாக நின்ற **வனப்பும்** அம்மையார் இதுகாறும் கணவன் பொருட்டே தாங்கி நின்றார் என்பதாம். தளர்நடைப் பருவத்தே பணியணிவார் கழற்கடிமை பழகிவரும் பாங்கின் மொழி பயின்றும், வண்டல்

பயில்வன எல்லாம் சிவபெருமான் திருவார்த்தை பயின்றும், தொண்டர்வரிற் றெழுதும் அவ்வியல்பின் வந்தாராதலின் அம்மையார் இங்குத் தமது உடல் வனப்பினை இதுவரையும் தாங்கிய நிலை பற்றிக் கூறுவதியல்பே யென்க.

இங்குக் (கழித்து) - ஆங்கு - என்பன மாயை உருவாகிய இவ்வுலக நிலையும், மாயை கடந்து சிவமே பற்றிய அவ்வுலக நிலையும் குறித்தன. இங்கு என்ற மாத்திரைச் சுருக்கமும் ஆங்கு என்ற நெருக்கமும் கருதத்தக்கன.

நின் தாள் போற்றும் பேய் வடிவு - வனப்பு நின்ற தசைப்பொதியின் வடிவு உலகத்தைப் போற்றி நின்றது. கணவனுடனிருந்தபோது "மனையறத்தின் பண்பு வழாமைப் பயின்று" (1730), கடப்பாட்டினூட்டுவார் (1738) என்றது முதல் "ஆங்கவன் கை கொடுத்தலுமே" (1746) என்பது வரை கூறிய அம்மையாரது நிகழ்ச்சிகளும், அவனைப் பிரிந்துறைந்தபோதும் "மன்னிய கற்பினோடு மனையறம் புரிந்து வைகியதும்" (1755), பின்னர் அவனிலை கேட்டு அவனிடம் சார அணுகியதும் ஆகிய இவ்வளவும் உலகத்தைப் போற்றிய நிலையாம். இங்கு அம்மையார் வேண்டியது, இனி, அவ்வாறன்றிச் சிவன் தாள்களையே போற்றும் சிவகண உருவாகிய பேய் வடிவு வேண்டுமென்பதாம். **நின்றூர்கள் போற்றும்** - என்பது பாடமாயின் சிவகணத்துள் சார்ந்து நிலை பெற்றவர்கள் உம்மைப் போற்ற மேற்கொண்ட என்றுரைத்துக் கொள்க.

பேய்வடிவு - வாயுவுடம்புடன் கூடித் திரிந்து மக்களை அலைத்து வரும் பேய் வடிவமன்று. அவை, ஐம்பூதச் சேர்க்கையாலாகிய உடற்கூட்டில் ஏனைப்பகுதிகள் மறைய, வாயு ஒன்றுமே மிகுத்துக் கண்ணுக்குத் தோன்ரு வகை திரியும் பாசவுடம்புகள். இங்கு அம்மையார் வேண்டிப் பெற்றது, மானிட உடம்பினுள் ஏனையவை ஒழித்து எலும்புக்கூடு ஒன்றுமே காணப்பெற்றதும், காற்றுப்போற் கடிது செல்லும் தன்மை வாய்ந்ததும், மண் என்ற ஒரு பூதச்செயல் மிகுந்த எலும்பு வடிவாயினும், களிம்பு நீங்கிப் பொன்னுன செம்புபோலப் பாசநீக்கித் தூய்மையாக்கப்பட்ட சுத்தமாயாவுருவம் வாய்ந்ததும், ஆனுல் மக்கள் கண்ணுக்குப் புலப்படுவதுமாகிய ஓர் ஒளிபெற்ற திருவுடம்பு என்க. அதனைக் கண்டு சுற்றத்தாரும் தொழுதஞ்சினர் (1767); ஏனை உலகவருள்ளும் கண்டவர் வியப்புற்றஞ்சிக் கையகன்ருேடி அவ்வேடத்தன்மை உள்ளவா கூறினுர்கள்; (1770) அவ்வுருவுடன் அம்மையார் வடதிசைத் தேயமெல்லாம் மனத்தினுங்கடிது சென்றருளினர்; திருக்கயிலைமலையின் மேல் ஏறும்போதும், திருவாலங்காடணையும்போதும் காலினுல் நடை தவிர்த்துத் தலையினுல் நடந்து சென்றருளினர்; அதனை இறைவர் **"பெருமைசேர் வடிவு"** என்று உமையம்மையாருக்கு எடுத்துரைத்தருளினர்; அவ்வடிவுடன் திருவாலங்காட்டில் இறைவரது மேல் நோக்கி எடுத்த திருவடியின் கீழே அமர்ந்து என்றும் ஆனந்தம் சேர்ந்து கீதம் பாடிக்கொண்டு அம்மையார் அமர்ந்துள்ளார்; அவ்வடிவில் அமைந்து அம்மையார் திருப்பதிகங்களையும் இரட்டைமணிமாலை திருஅந்தாதி என்ற திருவாக்குக்களையும் அருளிச் செய்தனர்; **எனவே இயலும் இசையும் பாடுதற்குரிய வாக்கு முதலிய புறக் கரணங்களையும் மனம் முதலிய உட்கரணங்களையும் உடைய திருவடிவம் அவ்வடிவம் என்பது பெறப்படும்.** அது தத்துவ காரிய மாயா உடலொழிந்த ஞானவடிவமென்று இங்கு விசேடவுரை காண்பாருமுண்டு. அது பொருந்தாமையறிக. ஆளுடைய நம்பிகளும்

*1766. ஆனவப் பொழுது, மன்று ளாடுவா ரருளி ஞலே
மேனெறி யுணர்வு கூர, வேண்டிற்றே பெறுவார் மெய்யி
லூனடை வனப்பை யெல்லா முதறியெற் புடம்பே யாக
வானமு நிலனு மெல்லாம் வணங்குபேய் வடிவ மானுர். 50

கழறிற்றறிவார் நாயனுரும் திருக்கயிலைக்குச் சென்றபோது அவர்களுடைய திருமேனிகள் அடைந்த ஒளியுருவமாகிய "மானவயாக்கை"யின் தன்மை இங்கு வைத்துக் காணத்தக்கது. அவர்களும் பாடிக்கொண்டு சென்றதும், **கணநாதர்களாகித் தம் தொழிற்றலை நின்றதும்** அவர்களது திருமேனியின் ஒளி, ஆயிர ஞாயிறு பொங்கு பேரொளியாகிய முனிவர்களாற் காணப்பெற்றதும் கருதுக. "**பேயாய நற்கணத்தி லொன்ருய நாம்**" (திரு அந்தாதி - *86*) "காரைக்காற் பேய்" (பதிகங்கள்) என்று தமது திருவாக்கினுல் அறிவிக்கின்றதும், அதுபற்றியே திருத்தொண்டத் தொகையினுள் "**பேயார்**" என்றே போற்றப்பட்டதும் இக்கருத்துப்பற்றியன. (**நற்கணம்** - சிவபூதகணம்). அம்மையார் கண்டதும் கொண்டதுமாகிய இப்பேய் வடிவம்பற்றிக் I "கொங்கை திரங்கி நரம்பெழுந்து குண்டுகண் வெண்பற் குழிவயிற்றுப், **பங்கி சிவந்திரு பற்கணீண்டு பாடுயர் நீள்கணைக் காலோர் பெண்பேய்**"; **செடிதலைக்** காரைக்காற்பேய் (*11*); II (*6*); "**காடு மலிந்த கனல்வா யெயிற்றுக்** காரைக்காற் **பேய்**" (*11*) என்றிவ்வாறு பலவும் திருப்பதிகங்களுள் அம்மையார் தாமே அருளிச் செய்பவற்றையும் கருதுக. இப்பெருமைகள் பற்றியே இதனை "வானமு மண்ணுமெல்லாம் வணங்குபேய் வடிவம்" (*1766*) என்று விதந்து கூறுவது காண்க. இங்கு, இம்மாயையுடல் மயக்கஞ்செய்யாது பகல் விளக்குப்போல அருண்மயமானது. "அங்கண் மாயை யாக்கையின் மேலளவின் றுயர்ந்த சிவமயமாய்" (*1260*).

பாங்குற அடியேனுக்கு வேண்டும் என்க. **பாங்கு** - அடிமைத்திறத்தினின்றும் மாருது இடையருது நிற்கும் நிலை.

பரமர் - பரமதத்தன் என்ற இதுவரையும் கொண்ட உடல்நாயகன் விட்டபோது பரமனுகிய நீங்காத உயிரின் நாயகர் என்ற குறிப்புப்பட **பரமர்** என்ற சொல்லாற் கூறினுர்.

பரமனை - என்றதும் பாடம். *49*

1766. (இ-ள்.)ஆன...கூர - இவ்வாறு பரவி நின்ருராயின அப்பொழுது, அம்பலத்தில் அருநட்டம் ஆடுகின்ற இறைவரது திருவருளினுலே, மேலாகிய நெறிதரும் உணர்வு மிகுதலாலே; வேண்டிற்றே பெறுவார் - தாம் வேண்டிய அதனையே பெறுவாராகி; மெய்யில்...ஆக - உடம்பில் தசையும் அதனை இடமாகக்கொண்டு அடைந்த அழகுகளும் ஆகிய இவை எல்லாவற்றையும் உதறி, எலும்புக்கூடாகிய உடம்பே தமது திருமேனியாகியிட; வானமும்...ஆனுர் - மேலுலகமும் மண்ணுலகமும் எல்லாம் வணங்கத்தக்க பேயாகிய சிவகணநாதரது வடிவம் உள்ளவராயினர்.

(வி-ரை.) மேல் நெறி உணர்வு கூர - "சிந்தை ஒன்றிய நோக்கின் மிக்கவுணர்வுகொண்டு" (*1764*) என்ற கருத்து. **கூர** - கூர்தலாலே. **கூர்தல்** - உள்ளது சிறத்தல்; மேனெறி உணர்வினுலே இவ்வரம் வேண்டினர் என்பது.

1767. மலர்மழை பொழிந்த தெங்குங்; வானதுந் துபியி ஞெதம்
உலகெலா நிறைந்து விம்ம வும்பரு முனிவர் தாமுங்
குலவினர்; கணங்க ளெல்லாங் குணலையிட்டன;முன் னின்ற
தொலைவில்பல் சுற்றத் தாருந் தொழுதஞ்சி யகன்று போனர். 51

வேண்டிற்றே பெறுவார் - மேனெறி உணர்வின் மிகுதியால் வேண்டியதனை வேண்டியவாறே வேண்டிய அப்பொழுதே பெறுவாராகி.

பெறுவார் - உதறி - ஆக - ஆனுர் என்று முடிக்க.

ஊன் - அடை வனப்பை எல்லாம் உதறி - ஊன் பொதியும், அதனைப் பற்ருக இடம் பெற்றிருந்த வனப்பின் பகுதிகளும் ஆகிய இவற்றையெல்லாம். "வனப்பு நின்ற தசைப்பொதி கழித்து இங்கு" (*1765*) என்று வேண்டும் அதுவே வரமாக. **உதறுதல்** - சிந்திவிடச் செய்தல்.

எற்பு உடம்பே ஆக - எலும்புக்கூடாகிய உடம்பே வடிவம் ஆக.

வானமும் நிலனும் எல்லாம் வணங்கும் - மேல் நடுக் கீழ் என்ற மூவுலகத்துயிர்களும் போற்றும். கீழ் உலகத்தை, **எல்லாம்** என்று மங்கலமரபாற் கூறினுர். "மூவுலகிற் பெறற் கரிதால்" (*1742*) என்று முன்னர் வணிகன் கூறிய குறிப்பும் காண்க.

பேய் வடிவம் - அம்மையார் தாம் வேண்டிய சிவபூதகண வடிவம்.

ஊனுடை - என்பதும் பாடம். 50

1767. (இ-ள்.) வெளிப்படை. எங்கும் தெய்வப் பூமழை பொழிந்தது; தெய்வதுந்துபி முழக்கம் உலகெலாம் நிறைந்து பெருகத் தேவர்களும் முனிவர்களும் குலாவி மகிழ் சிறந்தனர்; சிவகணங்கள் எல்லாம் குணலைக்கூத்தாடின; முன்னே நின்ற குறைபாடில்லாத பல சுற்றத்தார்களும் தொழுது பயந்து நீங்கிப் போயினர்.

(வி-ரை.) அம்மையார் பேய் வடிவங் கொண்டவுடன் நிகழ்ந்தவற்றை இப்பாட்டாற் கூறுகின்ருர்.

வான துந்துபியின்...விம்ம - சிவனருள் வெளிப்பாடு பெறும் காலங்களில் தேவ துந்துபி முழக்கம், இயக்குபவரின்றியும் முழங்குவது ஓர் உண்மை, ஆளுடைய பிள்ளையார் திருவவதார நிகழ்ச்சிகளை இங்கு வைத்துக் காண்க.

குலவினர் - கலந்து மகிழ்ந்தனர்.

குணலை - மகிழ்ச்சி மிக்கபோது ஆடும் பாட்டுடன் கூடிய ஒருவகைக் கூத்து. குணலை என்பதும் வழக்கு.

முன் நின்ற தொலைவில் பல் சுற்றத்தாரும் - முன் நின்ற - காலத்தானும் இடத்தானும் முன் நின்ற. சுற்றமாகிய இவர்கள் முன் நின்றாராயினும் முன் கண்டாராயினும், சிறப்பின்மை

1768. உற்பவித் தெழுந்த **ஞானத் தொருமையி** னுமைகோன் றன்னை
யற்புதத் திருவந் தாதி யப்பொழு தருளிச் செய்வார்
"பொற்புடைச் செய்ய **பாத புண்டரீ கங்கள் போற்று**
நற்கணத் தினிலோன் றானே ன"னென்று நயந்து பாடி, 52

பற்றியும், பயன்பெறுது அகன்றமை பற்றியும் இறுதியில் வைத்துக் கூறப்பட்டனர்.

சுற்றத்தாரும் - இவர்கள் அம்மையாருடன் காரைக்காலினின்றும் போந்தவர்களும், வணிகனது பின்மனைவியின் தொடர்பினுல் அவனுடன் போந்தவர்களுமாம். இருதிறமும் இருவழியும் சார்தலின் **பல் சுற்றத்தார்** என்று பொதுப்படக் கூறினுர். அம்மையாரின் நலம் பற்றிப் பயன்பெறு தகன்று ராயினும் அவரது முன்னைநிலை உடற்சார்பு பற்றிய தொடர்ச்சியை விடாது கொள்ளுதல்பற்றித் தொலைவில் என்றுர்.

வாணிகனது நிலைபற்றிக் கூறுததென்னை? எனின், அவன் அம்மையாரை நற்பெருந் தெய்வமாகக் கொண்டு வழிபடும் நிலையை முன்னரே கொண்டொழுகியமையால் மேலும் கூறவேண்டா என்க. அவன் அந்நிலையே பின்னும் ஒழுகி நலம்பெற்றுன் என்பது கருதப்படும். அன்றியும் கணவன் என்ற நிலை நீங்கிய வழி அவனைச் சுற்றத்தாருள் ஒருவனுகவே வைத்து அடக்கிக் கூறினுர் என்றலும் பொருந்தும்.

குலவிய - தொலை பல - என்பனவும் பாடங்கள். *51*

1768. (இ-ள்.) உற்பவித்து...ஒருமையின் - உள்ளே தோன்றி மேல் எழுந்த ஒருப்பட்ட ஞானத்தினுலே; உமைகோன்...அருளிச்செய்வார் - உமைபங்கராகிய சிவபெருமானைத் துதித்து அற்புதத் திருவந்தாதியினை அப்பொழுதே அருளிச் செய்வாராகி; "பொற்புடை...நான்" என்று நயந்துபாடி - அழகியசிவந்த பாததாமரைகளைப் போற்றுகின்ற நல்ல சிவபூத கணங்களுள் நானும் ஒன்றுயினேன்" என்று விரும்பிப் பாடி,

(வி-ரை.) உற்பவித்து எழுந்த ஒருமை ஞானத்தின் என்க. **ஒருமை ஞானம்** - சிவனையன்றி வேறென்றும் புலப்படாது முழுதும் சிவமயமாகி நிறைவுற்ற ஞானம். **உற்பவித்து** - தோன்றி; **பவம்** - தோற்றம்; **உத்** என்றது பகுதிப் பொருளை மிகுதிப்படுத்தும் உபசர்க்கம் என்பது வடவர் வழக்கு. ஒருமையாவது அறிவு, அறிபவன், அறியப்படுவோன் (ஞானம் - ஞாதுரு - நேயம்) என்று மூன்றுகப் புலப்படாது சிவனறிவு மாத்திரையேயாகித் தோன்றித் தானற்று நிற்குநிலை. முன்னர் "மெய்ம்மறந்து...தம் மனங்கொண் டுணர்தலுமே" (*1741*) என்றதும், "சிந்தை ஒன்றிய நோக்கின் மிக்க வுணர்வு கொண்டு" (*1764*) என்றதும் இத்தன்மையின் தொடக்கங்களேயாயினும், அங்குத், தாம் என்றும், தம் கணவன் என்றும் இவ்வாறு உள்ள பிற பொருள்களும் மனத்தில் இடம் பெற்றன; இங்குச் சிவனையன்றி அவ்வாறு வேறென்று மிடம்பெறுமையின் **ஞானத்து ஒருமை** என்றுர். இங்கு, "நற்கணத்தினில் ஒன்றுனேன் நான்" என்ற விடத்து வரும் **நான்** என்பது தம் ஆன்ம வுணர்ச்சி யற்றுச் சிவனிறைவுட்பட்ட அனுபவ முறையில் கண்டது. முன்னர் "என்னுரை

பொய்யாம்'' (*1746*) "இவனுக்காகத் தாங்கிய'' (*1765*) என வந்த இடங்களிற் கண்ட **நான்** என்ற உணர்ச்சி வேறு. அவை உலகம்பற்றிய நினைவுடன் கூடி எழுந்தன. "இப்பிறப்பினி லிணைமலர் கொய்துநா னியல்பொடு மஞ்செழுத்தோதித் தப்பி லாதுபொற் கழல்களுக்கிடாது **நான்...''** என்ற திருவாசகத்தில் வரும் **நான்** என்னுமிரண்டன் வேறுபாடு போலக் காண்க. ஒருமை - ஒன்றே நினைந்திருந்தே னொன்றே துணிந்தொழிந்தேன், ஒன்றேயென் னுள்ளத்தி னுள்ளடைத்தேன்...ஆளா மது (அந்தாதி - *11*).

அப்பொழுது - பேய்வடிவம் பெற்ற அப்பொழுதே. பேய் வடிவம் பெற்ற அதனையே விதந்து "பேயாய நற்கணத்தி லொன்ருய'' என்றதனுல் அப்போதே என்ருர்.

பாத புண்டரீகங்கள் - பாததாமரைகள். உருவகவணி. புண்டரீகப் பாதம் என்று மாற்றி உவமைத் தொகையாக்கி உரைப்பினுமாம்.

போற்று நற்கணத்தினில் ஒன்ருனேன் நான் - திருவடி மறவாது போற்றுதலன்றி வேறொன்றுஞ்செய்யாத சிவகணங்களுள் நானும் ஒருத்தியாயினேன் என்க. "பேயாய, நற்கணத்தி லொன்ருய நாம்'' (*86*) என்ற அம்மையாரது அற்புதத் திருவந்தாதிக்கு ஆசிரியர் உரை செய்து காட்டியவாறு. "**நாம்**'' என்றது "இரு மாந்திருப்பன் கொலோ வீசன், **பல்கணத் தெண்ணப்பட்டுச்**, சிறுமா னேந்தி தன் **சேவடிக் கீழ்ச்சென்றங்கு**'' (திருவங்கமாலை) என்றபடி. "அடியார்க்கும் அடியேன்'' என்று அடியார்க்குள்ள பெருமைபற்றி வந்த பன்மை. அதனை "நான் நற்கணத்தில் ஒன்ருனேன்'' என்று அம்மையார் தமக்குக் கிடைத்த பேற்றினைப்பற்றி மகிழ்ந்து கொண்ட கருத்தாக ஒருமையில் பொருள் கொள்க என்று ஆசிரியர் கண்டு காட்டுகின்றவாறு. "அத்தனெனக் கருளியவா ருர்பெறுவா ரச்சோவே'' (திருவாசகம்); "சிவலோக நாயகன் சேவடிக்கீ, ழாரும் பெருத வறிவு பெற்றேன் பெற்றதார்பெறு வாருலகில்'' (சேந்தனுர் - திருப்பல்லாண்டு - *7*) முதலிய திருவாக்குக்களின் கருத்துக் காண்க. "**யானே** தவமுடையேன்...அம்மானுக் காளாயி னேன்'' (*7*); "உண்டே யெனக்கரிய தொன்று'' (*10*); "அடிமை கொண்டாடப் பெற்ருே, மினியவல முண்டோ வெமக்கு'' (*69*); "எந்தையார்க் காட்செய்யப் பெற்ற விது கொல்லோ, **சிந்தையார்க் குள்ள செருக்கு**'' (*79*); "காலனையும் **வென்ருேம்**...சரணர விந்தங்கள் சார்ந்து'' (*81*) முதலியனவாய் வரும் அற்புதத் திருவந்தாதியின் அம்மையாருடைய கருத்துக்களைப்பற்றி இவ்வாறு ஆசிரியர் காட்டியவாறு காண்க. அற்புதத் திருவந்தாதியின் கருத்து இவ்வாறு அடிமைத்திறத்தில் திளைத்ததாம் என்பது.

அற்புதத்திருவந்தாதி - என்று அத்திருப்பாட்டின் பெயர் குறித்தவாறு. அற்புதம் என்றது அடிமைத்திறத்தினை வியந்தது. **அற்புதம்** - ஞானம் என்றலுமாம். 52

1769. (இ-ள்.) ஆய்ந்த...பாடி - (அதன்மேல்) ஆய்ந்த சீருடைய இரட்டை மணிமாலையினையும் அந்தாதித் தொடையாக எடுத்துப் பாடிப், (பின்னர்); ஏய்ந்த...பொங்க - பொருந்திய பேருணர்வு மேன்மேலும் பொங்கி யெழுதலால்; எயிலொரு மூன்றும்...கூர

1769. ஆய்ந்தசீ **ரிரட்டை மாலை யந்தாதி** யெடுத்துப் பாடி,
யேய்ந்தபே ருணர்வு பொங்க வெயிலொரு மூன்று முன்னாட்
காய்ந்தவ ரிருந்த வெள்ளிக் **கயிலைமால் வரையை** நண்ண
வாய்ந்தபே ரருண்முன் கூர **வழிபடும் வழி**யால் வந்தார். 53

- மதில்களையுடைய மூன்று புரங்களையும் முன்னுளில் எரித்தவராகிய சிவபெருமான் எழுந்தருளியிருந்த பெரிய கயிலாய மலையினைச் சென்றடையும் பொருட்டு வாய்ந்த பேரருள் முன்னே கூடுதலால்; வழிபடும் வழியால் வந்தார் - வழிபடுகின்ற வழிக்கொண்டு வந்தனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை.) சீர் ஆய்ந்த என்க. **சீர்** - சிவபெருமானுடைய சிறப்புக்கள். அவை பலவும் கூறி "நெய்யாடி தன்றிறமே, கேளாழி நெஞ்சே கிளர்ந்து" என்று முடிக்கும் திறம்பற்றி இவ்வாறு கூறினர்.

இரட்டை மாலை - இது திருவிரட்டைமணிமாலை எனப் பெயர் பெறும். **பேய் வடிவம் பெற்றவுடன் அத்தன்மையின் திறத்தினைப் புகழ்ந்து திருஅந்தாதியருளினர். அதனை அடுத்து அத்தன்மை ஆக்கிய இறைவனுடைய சிறப்புக்களைப் புகழ்ந்து திருஇரட்டைமணிமாலை யருளினர்.** இவை யிரண்டும் வணிகனைச் சென்று கண்ட பாண்டிநாட்டுப் **பட்டினத்தின் மருங்கிற்** (1759) பாடப்பட்டன. **எடுத்து** - சீர்களை விதந்து எடுத்துப் போற்றி. **அந்தாதியை நயந்து பாடி என்றதும், மாலையை எடுத்துப் பாடி என்றதும் கருதுக.**

ஏய்ந்த பேருணர்வு பொங்க - உற்பவித் தெழுந்த ஞானத் தொருமை (1763) என்றபடி வந்து பொருந்திய ஞானம். **பொங்க** - மேன்மேலும் பெருகுதலினுல்; காரணப் பொருட்டால் வந்த வினையெச்சம். **பொங்க** - நண்ண - கூர - **வந்தார்** என்று முடிக்க. பேருணர்வு பொங்கியதனுல் கயிலை நண்ண, அருள் முன் கூர்தலும், அதனுல் வழிபடும் வழி வருதலும் காரண காரியத் தொடர்பாய் வந்தன.

வழிபடும் வழியால் வந்தார் - வெள்ளிக் கயிலை வரையை வழிபட நண்ணும் வழிக்கொண்டு சென்றனர்.

பேருணர்வு பொங்க - அருள்கூர வழிபடும் வழியால் வந்தார் - திருநாவுக்கரசு நாயனுர் திருக்காளத்தி மலையிற் ருள்பணிந்த குறிப்பினுற் - கயிலைமலை காணுமது காதலித்து வழிக்கொண்டார் (1612); இங்கு அம்மையார் சிவபூத கணமாகிய பேய் வடிவம் வேண்டிப் பெற்று அந்தாதியும் மாலையும் பாடிப் பேருணர்வு பொங்கக் கயிலை நண்ண அருள் கூர்தரப்பெற்று வழிக்கொண்டார் - (2) திருநாவுக்கரசரை இறைவர் தீந்தமிழ் புவியின் மேற் பின்னையும் வழுத்துதற்காகக் கயிலையை அணைவதற் கருளாராகித் (1626) திருவையாற்றிற் காட்சி காணப் பணித்தருளினர்; அம்மையார் கயிலை நண்ண அருள் முன் கூர வழிக்கொண்டாராதலின், கயிலைக் காட்சி கண்டு வரம் வேண்ட, அதன்படி வரம்பெற்று

ஆணையின்படி திருவாலங்காட்டில் எழுந்தருளினர் - (3) அப்பர் பெருமான் தாம் கொண்ட மானுட வடிவத்தோடு வழிக்கொண்டு நடந்து சென்றருளியதும், அம்மையார் பேய் வடிவுடன் மனத்தினுங் கடிது சென்றருளியதும் கயிலையைத் தலையால் நடந்துசென்றதும் காணப்படும் - (4) அப்பர் பெருமான் கயிலையில் முனிவராய் வந்த இறைவரது ஆணையால் வாவியில் மூழ்கியவுடன் சுவடுபடாமல் திருவையாற்றில் வாவியில் வந்தேறியதும் கண்டோம்; அம்மையார் இறைவரது ஆணைப்படி மீண்டும் வந்து கயிலை சென்றவாறே தலையினுல் நடந்து திருவாலங்காட்டை அடைந்தனர் - (5) வரங் கேட்டுப்பெற்ற அருள் ஆணையின்படி (1777) திருவாலங் காட்டில் திருவடிக்கீழ் **என்றும் இருக்கப் பெறுகின்றனர்** அம்மையார்; திருவையாற்றில் வந்தெழுந்த அப்பர் பெருமான் பின்னர்த் திருப்புகலூரில் சிவானந்தஞான வடிவேயாகித் திருவடிக்கீழ் எய்தினர் (1692) - என்று இவ்வாறு திருக்கயிலை சென்று அப்பரும் அம்மையாரும் கண்டு மீண்டருளிய வரலாறுகளை ஒப்பிட்டு வணங்கி உய்தல் நமது கடன் என்க. **பேருணர்வு** - சிவஞானம். "பேருணர்விற் பொலிகின்ற பிள்ளையார்" (திருஞான - புரா - 72).

வாய்ந்த பேரருள் - ஏய்ந்த பேருணர்வு பொங்க, அதற்கேற்றவாறு வாய்ந்த பேரருள் என்க.

முன்கூர - முன்னே அருள் கூர்தலால் நண்ண வழிபடும் வழியால் வந்தார் என்க. "அவனருளாலே அவன்றாள் வணங்கி" (திருவா.) **கூர்தல்** - மிகுதல். 53

திருச்சிற்றம்பலம் அற்புதத் திருவந்தாதி - வெண்பா

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் - நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
யெஞ்ஞான்று தீர்ப்ப திடர். 1

வானத்தா னென்பாரு மென்க;மற் றும்பர்கோன்
றானத்தா னென்பாருந் தாமென்க; - ஞானத்தான்
முன்னஞ்சத் தாலிருண்ட மொய்யொளிசேர் கண்டத்தான்
என்னெஞ்சத் தானென்பன் யான். 6

யானே தவமுடையே; னென்னெஞ்சே நன்னெஞ்சம்;
யானே பிறப்பறுப்பா னெண்ணினேன்; - யானேயக்
கைம்மா வுரிபோர்த்த கண்ணுதலான் வெண்ணீற்ற
வம்மானுக் காளாயி னேன். 7

ஒன்றே நினைந்திருந்தே; னொன்றே துணிந்தொழிந்தேன்;
ஒன்றேயென் னுள்ளத்தி னுள்ளடைத்தேன்; - ஒன்றேகாண்
கங்கையான் றிங்கட் கதிர்முடியான் பொங்கொளிசேர்
அங்கையாற் காளா மது. 11

அறிவானுந் தானே; யறிவிப்பான் றனே;
யறிவா யறிகின்றுன் றனே; - யறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே; விரிசுடர்பா ராகாசம்
அப்பொருளுந் தானே யவன். 20

மறித்து மடநெஞ்சே வாயாலுஞ் சொல்லிக்
குறித்துத் தொழுதொண்டர் பாதங் - குறித்தொருவர்
கொள்ளாத திங்கட் குறுங்கண்ணி கொண்டார்மாட்
டுள்ளாதார் கூட்ட மொருவு. 40

அன்றுந் திருவுருவங் காணதே யாட்பட்டேன்;
இன்றுந் திருவுருவங் காண்கிலேன்; - என்றுந்தான்
எவ்வுருவோ னும்பெருமா னென்பார்கட் கென்னுரைக்கேன்;
எவ்வுருவோ நின்னுருவ மேது? 61

காலையே போன்றிலங்கு மேனி; கடும்பகலின்
வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு; - மாலையின்
றங்குருவே போலுஞ் சடைக்கற்றை; மற்றவற்கு
வீங்கிருளே போலு மிடறு. 65

கண்டெந்தை யென்றிறைஞ்சிக் கைப்பணியான் செய்யேனேல்
அண்டம் பெறினு மதுவேண்டேன் - றுண்டஞ்சேர்
விண்ணளுந் திங்களாய்! மிக்குலக மேழினுக்குங்
கண்ணளா! வீதென் கருத்து. 62

கண்ணாரக் கண்டுமென் கையாரக் கூப்பியும்
எண்ணார வெண்ணத்தா லெண்ணியும் - விண்ணேன்
எரியாடி யென்றென்று மின்புறுவன் கொல்லோ
பெரியானைக் காணப் பெறின். 85

பெறினும் பிறிதியாதும் வேண்டேட நமக்கீ
துறினு முருதொழியு மேனுஞ் - சிறிதுணர்த்தி
மற்றொருக ணெற்றிமேல் வைத்தான்றன் பேயாய
நற்கணத்தி லொன்றுய நாம். 86

உரையினு லிம்மாலை **யந்தாதி வெண்பாக்**
கரைவினுற் **காரைக்காற் பேய்சொற்** - பரவுவார்
ஆராத வன்பினோ டண்ணலைச்சென் றேத்துவார்
பேராத காதல் **பிறந்து.** 101

திருச்சிற்றம்பலம்

திருவந்தாதியின் தொகைக் குறிப்பு:-இறைவரைச் சூழ்ந்து போற்றி நிற்கும் பூத கணங்களின் வடிவம் வேண்டியபடியே கிடைக்கப் பெற்றமைக்கு மகிழ்ந்தும், அந்தப் பேய் வடிவோடு கண்டுகொண்ட இறைவரது அருட்கோலங்களின் காட்சிகளிற் றிளைத்தும், வியந்தும் பாடியது. அந்தாதிக் கருத்தினைப் "பொற்புடைச் செய்ய பாத புண்டரீ கங்கள் போற்று, நற்கணத் தினிலொன் றானே னானென்று நயந்து பாடி"யதாம் என்று, (திருவந்தாதி-86) ஆசிரியர் கண்டுகாட்டியவாறு காண்க.

திருவந்தாதிப் பாட்டுக் குறிப்பு - பிற்சேர்க்கையிற் காண்க.

திருச்சிற்றம்பலம் **திருவிரட்டைமணிமாலை**

(கட்டளைக் கலித்துறை)

கிளர்ந்துந்து வெந்துயர் வந்திடும் போதஞ்சி நெஞ்சமென்பாய்
தளர்ந்திங் கிருத்த றவிர்திகண் டாய்தள ராதுவந்தி
வளர்ந்துந்து கங்கையும் வானத் திடைவளர் கோட்டுவெள்ளை
யிளந்திங் களுமெருக் கும்மிருக் குஞ்சென்னி யீசனுக்கே. 1

வெண்பா

தலையாய வைந்தினையுஞ் சாதித்துத் தாழ்ந்து
தலையா யினவுணர்ந்தோர் காண்பர் - தலையாய
வண்டத்தா னாதிரையா னாலால முண்டிருண்ட
கண்டத்தான் செம்பொற் கழல். 10

கழற்கொண்ட சேவடி காணலுற் றார்தமைப் பேணலுற்றார்
நிழற்கண்ட போழ்தத்து நில்லா வினை;நிக ரேதுமின்றித்
தழற்கொண்ட சோதிச்செம் மேனியெம் மானைக்கைம் மாமலர்தூய்த்
தொழக்கண்டு நிற்கிற்கு மோதுன்னி நம்மடுந் தொல்வினையே. 11

தொல்லை வினைவந்து சூழாமுன் றாழாமே
யொல்லை வணங்கி யுமையென்னு - மெல்லியலோர்
கூற்றானைக் கூற்றுருவங் காய்ந்தானை வாய்ந்திலங்கு
நீற்றானை நெஞ்சே நினை. 12

உத்தமராய் வாழ்வா ருலந்தக்கா லுற்றார்கள்
செத்த மரமடுக்கித் தீயாமு - னுத்தமனாய்
நீளாழி நஞ்சுண்ட நெய்யாடி தன்றிறமே
கேளாழி நெஞ்சே கிளர்ந்து. 20

திருச்சிற்றம்பலம்

1770. கண்டவர் வியப்புற் றஞ்சிக் கையகன் றோடு வார்கள்
கொண்டதோர் வேடத் தன்மை யுள்ளவா கூறக் கேட்டே
"அண்டர்நா யகனா ரென்னை யறிவரே லறியா வாய்மை
யெண்டிசை மாக்க ளுக்கியா னெவ்வுரு வாயென்?" என்பார், 54

இரட்டைமணிமாலைத் தொகைக் குறிப்பு - ஆய்ந்த சீர் என்று, இறைவரது சீர்களைப் பாடும் பொருளைக் கொண்டது இம்மாலை என்று ஆசிரியர் அறிவித்தது காண்க. *1768*ல் உரைத்தவை பார்க்க. மலங்களைக் களைந்து உயிர்களைக் காக்கும் கருணையாளன் சிவபெருமான்; அவரை அடைந்து உய்தல் கடன் என்று தமது நெஞ்சுக்கு உபதேசிக்கும் முறையால் உலகுக்கு அறிவுறுத்தியது இம்மாலையின் தொகைப் பொருளாம். "துயர் வந்தடும்போது **நெஞ்ச** மென்பாய்... தளராது வந்தி - ஈசனுக்கே" (*1*) என்று தொடங்கி, "நெய்யாடிதன் றிறமே கேளாழி **நெஞ்சே** கிளர்ந்து" (*20*) என்று முடித்தது காண்க.

இரட்டைமணிமாலைப் பாட்டுக் குறிப்பு பிற்சேர்க்கையிற் காண்க.

1770. (இ-ள்.) கொண்டதோர் வேடத்தன்மை - தாம் விரும்பவேண்டிப் பெற்றுக்கொண்ட ஒப்பற்ற (பேயாய) திருவேடத்தின் தன்மையை; கண்டவர்... ஓடுவார்கள் - கண்டவர்கள் வியப்படைந்து அச்சமுற்று அங்கு நின்றும் நீங்கி ஓடுவார்களாகி; உள்ளவா கூறக்கேட்டே - அவ்வேடத்தினைத் தாம் கண்டவாறே உள்ளபடி சொல்லக்கேட்டே; "அண்டர் நாயகனார்...என்?" என்பார் - "எல்லாத் தேவர்களுக்கும் நாயகராகிய சிவபெருமான் என்னை அறிவாராகில், உண்மையறியா நிலையில் உள்ள எண் திசையின் ஐயறிவுடைய மாக்களுக்கு நான் எந்தவுருவத்தைத் தாங்கினதாகக் காணப்பட்டாலும் அதனாலாவதென்னை? ஒன்றுமில்லை" என்பாராய்;

(வி-ரை.) கண்டவர் - ஓடுவார்களாகிக் கூற என்று கூட்டுக. கண்டவர் - அங்கு நின்ற இருதிறச் சுற்றத்தாரும் வணிகனும் பிறரும்.

கையகன்று - அவ்விடத்தை விட்டு நீங்கி. **கை** - இடம் என்ற பொருளில் வந்தது. கைகூடும் என்பதுபோலக் கை என்பது பகுதியின் பொருளை உறுதிப்படுத்த வருவதோர் முன் ஒட்டுமொழி என்பதுமாம்.

வியப்பு உற்று அஞ்சி ஓடுவார்கள் - கண்டவர்களது மனத்தில் முதலில் எழுந்தது **வியப்பு**; அது அச்சத்தை விளைத்தது; அச்சம் உண்டாகவே தம்மைப் பற்ற வரும் அபாயத்தினின்றும் தப்புவார்கள் போல அவ்விடத்தை விட்டு நீங்கி ஓடுவாராயினார்கள்.

கொண்டது - வேண்டிப் பெற்றுக் கொண்டது. "பேய்வடி வடியே னுக்குப் பாங்குற வேண்டும் என்று பரமர் தாள்பரவி" (*1765*) என்றதும், "மற்றிப் பெருமைசேர் வடிவும் வேண்டிப் பெற்றனள்" (*1774*) என்பதும் காண்க.

உள்ளவா - தாம் தாம் கண்டு தத்தம் மனத்திற் கொண்டுள்ளபடி. தன்மை உள்ளவாறு என்றுரைப்பாருமுண்டு. அது பொருந்தாமை அறிக. அவ்வேடத்தின் உண்மைத்

தன்மையை அவர்கள் உணர்ந்திலர் என்பதும், அவர் கூறியதும் அதன் உண்மைத் தன்மையன்று என்பதும் "அறியா வாய்மை எண்டிசை மாக்களுக்கு யான் எவ்வுருவா யென்?" என்று அம்மையார் கூறுவதினாலும் விளங்கும்.

கூறக் கேட்டே - ஓடுகின்றவர்கள் வேடத்தன்மையைப் "பேய்!" என்று கூறிக்கொண்டு செல்ல, அதனை அம்மை கேட்டு என்க. அவர்கள் கூறியது உண்மைதானே? எனின், அற்றன்று; அம்மையார் கொண்ட பேய் வடிவத்தின் உண்மைத் தன்மைபற்றி 1765 உரைத்தவை பார்க்க. **அது யாவரும் வந்து வணங்கிப் பயன்பெறும் "பேயாய நற்கணங்"களின் வடிவமேயின்றி அவர்கள் எண்ணி அகன்று ஓடுமாறு மக்களை அலைத்துத் துன்புறுத்தித் தாமும் நரகத்தில் இடர்ப்படும் அலகைகளாகிய பேய்வடிவமன்று என்பது.** அதுபற்றியே அம்மை "மாக்களுக்கு யான் எவ்வுருவாய் என்?" என்றருளினர். "பத்த னென்றெனை யுலகவர் பகர்வதோர்" "எவரும் தத்த மனத்தன பேச" என்ற திருவாசகக் கருத்துக்கள் ஈண்டுச் சிந்திக்கத் தக்கன.

"அண்டர் நாயகனார்...என்?" என்பார் - என் தன்மையை இறைவர் அறிந்தாற்போதும்; அறியா மாக்களுக்கு எவ்வுருவாய்க் காணினும் அதனால் எனக்காவதொன்றில்லை என்பாராகி. **என்பார்** - முற்றெச்சம்.

அறியா வாய்மை "இன்றும் கட்டு" - (சிவஞானபோதம் 1 வெண்பா); "அருங்கேடன்" (குறள்) என்பவை போல நின்றது. வாய்மை யறியா என்பது பொருள். **வாய்மை யறிவு** - உண்மை நாடி யறியும் அறிவு என்ற பொருளில் வந்தது. அஃதாவது ஆறுவது அறிவு எனப்படும். அவ்வறிவின்மைபற்றியே இவர்கள் ஆறறிவின் **மக்க**ளுருவினரேயாயினும், ஐயறிவுடைய **மாக்களே** யாவர் என்பார் **மாக்களுக்கு** என்றதும் காண்க. என்பார் (1770) - சென்று - அணைந்து - நடந்து - சென்றார் - (1771) என மேல்வரும் பாட்டுடன் கூட்டி முடிக்க.

அண்டர் நாயகனார் - மேல் நடு கீழ் என்ற அண்ட வானவர்கள் யாவர்க்கும் தலைவர். தேவதேவர். அறிவுடைய தேவர்கள் அறிவார்கள்; அறிவில்லா மாக்கள் அறியாவிடின் என்? என்பது குறிப்பு. 54

1771. (இ-ள்.) வடதிசை...சென்று - வடதிசையில் உள்ள தேசங்களையெல்லாம் மனவேகத்தின் மேலும் அதிகவேகமாய்க் கடந்துபோய்; தொடையவிழ்...பாங்கு அணைந்து - தொடைபோல அலர்கின்ற கொன்றைமாலை யணிந்த சூலமேந்திய திருக்கையினையுடைய சிவபெருமான் பொருந்தி எழுந்தருளியிருக்கும் படரும் ஒளியினையுடைய திருக்கயிலை மலையில் பாங்கு அணைந்து; ஆங்கு...சென்றார் - அங்குக் காலால் நடந்து செல்லுதலை விட்டு நிலத்தின்மேல் தலையினால் நடந்து சென்றனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

1771. வடதிசைத் தேய மெல்லா மனத்தினுங் கடிது சென்று,
தொடையவி ழிதழி மாலைச் சூலபா ணியனுர் மேவும்
படரொளிக் கயிலை வெற்பின் பாங்கணைந் தாங்குக் காலி
னடையினைத் தவிர்ந்து பார்மேற் றலையினு னடந்து சென்ருர். 55

(வி-ரை.) வடதிசை...சென்று - வெள்ளிக்கயிலை வரையை நண்ண வழிப்பட்டு வந்தாராதலின் வடக்கு நோக்கிச் செல்வாராகி, வடதிசைத் தேயங்களை மிக விரைவாகக் கடந்து சென்றனர். அத்தேயங்களும், வழிகளும், அவற்றின் தன்மையும் திருநாவுக்கரசு நாயனுர் புராணத்துள் (1613 - 1625) விரித்துக் கூறினுராதலின் இங்குத் **தேயமெல்லாம்** என்று சுருங்கக் கூறி யமைந்தனர். முற்றும்மை தொக்கது. அவை திருப்பருப்பத முள்ளிட்ட மலைகளடர்ந்த நாடு, தெலுங்கு, கன்னடம், மாளவம், இலாடம், மத்திமபைதிரம், கங்கை நாடு, கற்சுரம் முதலியன.

மனத்தினுங் கடிது சென்று - திருநாவுக்கரசு நாயனுர் பலநாள் திருமேனி முழுதும் வருந்த வழி நடந்து கடந்து சென்ற நிலையினையும், இங்கு அம்மையார் மனத்தினும் **கடிது** சென்று, இங்கு நீங்கியவுடன் அங்குக் கயிலையின் பாங்கணைந்த விரைவும் காண இஃதெவ்வாருயிற்ருே?, எனின், அம்மையார் கொண்ட பேயாய வடிவத்தின் பெற்றியால் ஆகியதென்க. அதுபற்றியே அப்பர்பெருமானது கயிலையாத்திரையைப் பத்துத் திருப்பாட்டுக்களால் அறிவித்த ஆசிரியர் அம்மையார் செய்த அதே கயிலை யாத்திரையினைப் பாதி விருத்தத்தால் அருளிக் காட்டிய அழகும் காண்க. **மனத்தினுங் கடிது செல்லுதல்** - அன்பு மிகுதிப் பாட்டினுல் உளதாகும் ஓர் உண்மை நிகழ்ச்சி. "பூதநா யகன்பால் வைத்த மனத்தினுங் கடிது சென்று" (820) என்ற திருக்கண்ணப்ப நாயனார் செயல் ஈண்டுச் சிந்திக்கற்பாலது. ஆண்டுரைத்தவை பார்க்க. **இன்** - உவமவுருபு. உம்மை சிறப்பும்மை. **கடிது** - விரைவு - **இல்** - உருபு தொக்கது. **கடிதில்** என்பதும் பாடம்.

தொடை அவிழ் இதழி மாலை - தொடை அவிழ் - தொடைபோல அலர்கின்ற என்க. **இன்** என்ற உவமவுருபு தொக்கது. "செய்தவிரைத் தாமமென மன்றன் மலர்த் துணர்தூக்கி (946) என்றது காண்க. இதழ்களின் சுருள் அவிழ்ந்த என்பாரும், கொத்தாக விரிந்த என்பாருமுண்டு. அவை ஏனைய மலர்களுக்கும் ஒத்தலின் சிறப்பின்றென்க.

இதழிமாலைச் சூல பாணியனார் - கொன்றையும் சூலமும் சிவபெருமானுக்கே சிறப்பாயுரியவை.

படர் ஒளி - நெடுந்தூரம் சென்று பரவி வீசும் ஒளி. இங்கு ஞான ஒளியும் கொள்ளப்படும்.

ஆங்குக் காலின் நடையினைத் தவிர்ந்து - ஆங்கு - கயிலையின் பாங்கு அணைந்தவுடன் மலையின்மேல் ஏறத் தொடங்கிய இடத்து. **காலின் நடை** - காலினால் நடந்து செல்லுதல். **ஆங்குத் தவிர்ந்து** என்றதனால் அதுவரை பாண்டிநாட்டோர்

பட்டினத்திலிருந்து கயிலை அடிவாரம் வரை உள்ள நாடும் வழிகளும் எல்லாம் காலினால் நடந்து சென்றனர் என்பது பெறப்படும். ஆயின் இவ்வாறு நினைந்த விரைவின்படியே காலினால் எவ்வாறு சென்று, சோர்வும் ஊறும் இன்றிக் கடிது சேர்ந்தனர்? எனின், அம்மையார் கொண்ட பேயாய உருவம் அதற்கேற்றதென்பதாம். **பேய்வடிவம் ஏனை உடற்கள்போல மண்ணின் (பிருதுவி) பகுதி விஞ்சாமல் காற்றுப்பகுதி (வாயு) விஞ்சியுள்ளது. ஆதலின் ஊறுபாடு பெறுதற்கு இயைபின்மையோடு, வாயு வேகம் மனோவேகம் என்றபடி, மிக்க விரைவாகவும் செல்லும் தன்மையுடையது. காலின் நடை தவிர்தல்** - புண்ணிய தலமாதலின் காலால் மிதித்தல் தகாதென்று கருதித் தலையினால் நடந்தனர். கயிலை சிவபெருமான் எழுந்தருளியுள்ள மலையாகலின் அதன் அடிவாரமானது சிவனது அடியே எனக் கருதப்படும். அவனது திருவடியில் தமது தலை பொருந்த நடத்தலே தகுதி என்று, "தாடலை" என்ற சாத்திரக் கருத்துக்கிசைய, அம்மையார் தலையினால் நடந்தனர் என்றலுமாம். புண்ணிய தலத்திற் காலால் மிதித்தலாகாது என்பது விதி. திருவாலங்காட்டிலும் இவ்வாறே அம்மையார் காலால் நடவாதது காண்க. திருநாவுக்கரசர் கைத்தொண்டு செய்த புண்ணிய தலமாகிய திருவதிகையை மிதிக்க அஞ்சி, ஆளுடைய நம்பிகள், புறத்தே சித்தவட மடத்துத் தங்கிய வரலாறும், அம்மையார் தலையால் நடந்த பதியாகிய திருவாலங்காட்டினுள்ளே மிதித்தடைய அஞ்சி ஆளுடையபிள்ளையார் புறத்துத் தங்கிய வரலாறும், அங்கங்கும் அவ்வரிய செயல்களை உலகுக்கறிவுறுத்த இறைவர் கனவில் அவ்விருவர்க்கும் அருளிய அருளிப்பாடுகளும் இங்கு நினைவு கூர்தற்பாலன. 229-ல் உரைத்தவை பார்க்க.

தலையினால் நடந்து செல்லுதல் - இருகைகளையும் தரையில் ஊன்றித் தலைகீழாய் நடத்தல்.

இதழிமாலை - சூலபாணி - இங்கு இவ்விரு தன்மையாலும் இறைவரைச் சுட்டியது என்னை? எனின், **கொன்றை** - பிரணவ உருவமைந்து இறைவன் அதனுள் அமர்ந்திருப்பதை "நறுங்கொன்றைப் போதினுள்ளான்" (தேவா) என்றபடி விளக்கி நின்றது; **சூலம்** - "மும்மலஞ் சிதைக்கும் வடிச்சூலம் வெயிலெறிப்ப" (சிறுத். புரா - 35) என்றபடி மும்மலமும் போக்கி முழுஞானந் தரும் முதல்வர் இவர் எனக் காட்டி நின்றது; இதுவரை அழுந்தியறியும் அறிவு மாத்திரையிற் புலப்பட அறிந்து, தொண்டு செய்து "அன்றுந் திருவுருவங் காணாதே யாட்பட்டேன், **இன்றுந்** திருவுருவங் காண்கிலேன் - என்றுந்தான், **எவ்வுருவோ னும்பெருமா னென்பார்கட் கென்னுரைக்கேன், எவ்வுருவோ நின்னுருவ மேது?**" (61) என்று பாடி, வேண்டியவாறே, இங்கு அம்மையார் இறைவரைக் கட்புலப்படக் காண்கின்ற இந்நிலையில் காணும் ஞான அடையாளங்களுள் இவை சிறந்தன என்க. 55

1772. (இ-ள்.) தலையினல்...போது - தலையினல் நடந்துபோய்ச் சங்கரன் எழுந்தருளியிருந்த வெள்ளிமலையாகிய கயிலைமலையின் மேலே ஏறும்போது; மகிழ்ச்சியால் அன்பு பொங்க - மகிழ்ச்சி மீக்கூர்தலினல் அன்பு மேன்மேல் அதிகரிக்க; கலை...நோக்குற்றது அன்றே - ஒரு கலையுடன் நின்ற இளமை பொருந்திய பிறைச் சந்திரனகிய கண்ணியை

1772. தலையினு னடந்து சென்று, சங்கர னிருந்த வெள்ளி
மலையின்மே லேறும் போது மகிழ்ச்சியா லன்பு பொங்கக்
கலையிளந் திங்கட் கண்ணிக் கண்ணுத லொருபா கத்துச்
சிலைநுத லிமய வல்லி திருக்கணோக் குற்ற தன்றே. 56

அணிந்த கண்ணுதலின் ஒரு பாகத்தில் அமர்ந்த வில்லைப்போன்ற நெற்றியினை உடைய பார்வதியம்மையாரது திருக்கண் பார்வை யப்போதே பொருந்தியது.

(வி-ரை.) தலையினால் நடந்துசென்று - வெள்ளி மலையின்மேல் ஏறும்போது மகிழ்ச்சியால் அன்பு பொங்க - என்றது எந்த மலையாயினும் காலினால் ஏறும்போது அயர்ச்சி தரும்; அவற்றுள்ளும் வெள்ளிமலை மிக வருத்தந் தருவ தொன்றும். "மனித்தராற் போகலா நெறியன்றியும்" (*1619*) "மானுடப் பான்மையோர் அடைவதற் கெளிதோ?" (*1630*) என்றவற்றையும், அப்பர் பெருமான் சென்றுபட்ட அல்லல் நிலைகளையும் காண்க. இவ்வாறாகவே, காலினாலும் கடந்து செல்லுதற்கரிய இதனைத் தலையினால் நடந்து சென்று ஏறுவதென்னின் வேறு யாவர்க்கும் அரிதேயாம். ஆனால் அம்மையார் அதனை எளிதின் இயற்றினதோடும், **மகிழ்ச்சியால் அன்பு பொங்கவும்** நின்றனர் என்றால் அவரது பேரன்பின் திண்மையும், பெற்றுக்கொண்ட பேயுருவின் திறமையும் இனிது புலனாகும்.

தலையினால் நடந்து சென்று - இது மிக அரியதொன்றென்பார் இங்கும் முன்பாட்டிலும் மேல்வரும் பாட்டிலுமாக மூன்று முறையும் கூறினார் ஆசிரியர். ஒருமுறை கூறிய செய்தியை அவ்வாறே பின்னும் கூறாத நிலையுள்ள ஆசிரியரது இயல்பினையும் உன்னுக. இறைவர் தமக்குச் செய்த பேரருளினைப்பற்றிப் பெருங் களிப்பினாலே தலையால் நடந்துசென்றார் என்பதுமொன்று. "புலையனேனையும் பொருளென நினைந்துன் னருள்புரிந்தனை; புரிதலுங் **களித்துத், தலையினால் நடந்தேன்** விடைப்பாகா! **சங்கரா!**" (செத்திலாப் பத்து - *3*) என்ற திருவாசகக் கருத்துக் காண்க.

சங்கரன் - இன்பஞ் செய்பவன். அவன் செய்வது இணையற்ற பேரின்பமாதலின் அதன் முன்பு வெள்ளி மலையின்மேல் தலையினால் நடந்துசென்று ஏறும் பெருந்துன்பமும் ஒரு பொருளாய்ச் சிறிதும் முன்நில்லா தொழியும் என்பது கருத்து. மேற்காட்டிய திருவாசகத்தினையும் இக்கருத்துப்படச் **சங்கரா** என்பது காண்க.

மகிழ்ச்சியால் அன்பு பொங்க - இது வெள்ளிமலையின்மேல் தலையினால் நடந்து ஏறும்போது அம்மையாரின் மனநிலை. மேற்காட்டிய திருவாசகத்தினும் "களித்து" என்பது காண்க.

கலை...கண்ணுதல் - திங்கட்கண்ணியும், நுதற்கண்ணும் இறைவரது அருளின் திறங்களைக் காட்டின. **திங்கட்கண்ணி** - பிறையாகிய கொண்டை மாலை.

திருக்கண் நோக்கு உற்றது - பார்வை சேர்ந்தது. உமையம்மையார் பார்த்தருளினர் என்க. உமையம்மையார் இறைவரது அருள். அம்மையப்பர் இருவருள் உமை அம்மையாரது நோக்கம் முதலில் அம்மையார்மேல் உற்றது என்பது அருள் சேர்ந்தது

1773. அம்பிகை திருவுள் ளத்தி னதிசயித் தருளித் தாழ்ந்து
தம்பெரு மானை நோக்கித் "**தலையினு னடந்திங் கேறும்**
எம்பெரு மானே ரெற்பின் யாக்கையன் பென்னே?" யென்ன,
நம்பெரு மாட்டிக் கங்கு நாயக னருளிச் செய்வான். 57

என்பதாம். "அவன் அருளாலே அவன்றுள் வணங்கி" என்றபடி அருள் சேர்ந்த பின்னரே சிவனைக் காணுதல் கூடுமாதலின் முதலில் அருட்சத்தி பதிந்தது என்க. **அன்றே** - அப்போதே. அசையென்பாரு முண்டு. *56*

1773. (இ-ள்.) அம்பிகை...நோக்கி - பார்வதியம்மையார் தமது திருவுள்ளத்தில் அதிசயம் கொண்டருளி, விரும்பித், தம் பெருமானை நோக்கி; "தலையினல்...என்னே?" என்ன - "தலையினலே நடந்து இம்மலைமேல் ஏறிவரும் ஓர் எலும்பு உடம்பு பெற்ற இதன் அன்பு என்னே?" என்று கேட்க; நம் பெருமாட்டிக்கு அங்கு நாயகன் அருளிச் செய்வான் - நம் பெருமாட்டியாகிய பார்வதியம்மையாருக்கு நாயகர் அருள்செய்வாராகி,

(வி-ரை.) அதிசயித் தருளி - ஒருசொல் நீர்மைத்தாய் அதிசயங் கொண்டு என்ற பொருள் தந்து நின்றது. "திருக்கண்ணுேக் குற்ற" தனல் தாம் கண்டதோர் அதிசயத்தை வினவுகின்றுர். "அதிசயம் கண்டாமே" திருவாசகம்.

தாழ்ந்து - தாழ்தல் - விரும்புதல். இறைவனைப் பணிந்து என்றலுமாம்.

எம்பெருமான் - விளி. **ஏறும் - எற்பின் யாக்கை** - என்றும், **ஓர் யாக்கை** என்றும் கூட்டுக.

ஓர் - தனித்தன்மையுடைய. இதுவரை காணப்படாத ஒன்று என்பது குறிப்பு.

ஓர் எற்பின் யாக்கை - "எற்புடம்பே யாக" (*1766*) என்ற பேய்வடிவம். இன் - இனிய என்றலுமாம். **ஓர்தல்** - நினைத்தல் என்றலுமாம்.

அன்பு என்னே? - வடிவோ எலும்பு யாக்கையாகிய பேய் வடிவம்; ஆயின் செயல், கயிலைத் திருமலையின்மேல் தலையால் ஏறி வழிபடும் அதிசயச் செயல். இதன் அன்பின்றிறம்தான் என்னே? என்று அதிசயம்கொண்டு வினாவியருளியது. இறைவர் திருவாக்கின் மூலம் உலகமறிந்து அம்மையாரின் பெருமையைப் போற்றி யுய்யச் செய்யும் காரணம்பற்றி உமையம்மையார் வினாவியருளிய தென்க. இறைவர் அருள, ஆகமத் திறனெலாந் தெரியக் கேட்டு இறைவரைத் தாம் பூசைசெய்து உலகுய்ய வைத்துத் திருக்காமக்கோட்டத்திற் றவம்புரியும் உமையம்மையாரது கருணை போலவே இதனையுங் கண்டு கொள்க; (*1126-1128*). இக்கருத்தை "அம்மையே! என்னும் செம்மை ஒருமொழி **யுலகமெல்லா** முய்யவே அருளிச் செய்தார்" என்று மேல்வரும் பாட்டில் ஆசிரியர் விளக்கியருளுதல் காண்க.

நம் பெருமாட்டிக்கு அங்கு நாயகன் அருளிச் செய்வான் - இமயவல்லியார் வினாவியதும் அதற்கு இறைவர் அருள் செய்ததும் உயிர்களாகிய நம்

1774. "வருமிவ ணம்மைப் பேணு மம்மைகா ணுமையே! மற்றிப்
பெருமைசேர் வடிவும் வேண்டிப் பெற்றன" ளென்று, பின்னை
யருகுவந் தணைய நோக்கி, "யம்மையே!" யென்னுஞ் செம்மை
யொருமொழி யுலக மெல்லா முய்யவே யருளிச் செய்தார். 58

பொருட்டேயாமென்பர் "**நம்பெருமாட்டிக்கு**" என்றார். "உள்ளவாறு கேட்டருளினாள் **உலகை யாளுடையாள்**" (*1127*) என்ற கருத்து. **நாயகன் - நடத்துபவன் என்பது பொருள்.** உலகை நடத்தும் தலைவராதலின் அருளிச் செய்வார் என்பது குறிப்பு. **அங்கு** - அப்போது. அவ்விடத்து என்றலுமாம். **அருளிச் செய்வானாகி** - உலகமெல்லாம் **உய்யவே அருளிச் செய்தார்** (*1774*) என்று முடித்ததும் கருதுக. *57*

1774. (இ-ள்.) வெளிப்படை. "உமையே! (நீ சொல்லிய அவ்வாறு) வரும் இவள் நம்மைப் பேணுகின்ற அம்மையே யாவள்; மற்றும், இந்தப் பேய்வடிவாகிய பெருமைசேர் வடிவத்தையும் நம்மிடம் வேண்டிப் பெற்றுக்கொண்டனள்" என்று சொல்லியதுடன், பின்பு அம்மையார் பக்கத்தில் வந்து அணையவே, அவரை நோக்கி "நம் அம்மையே!" என்கின்ற செம்மைதரும் ஒப்பற்ற ஒருமொழியினை உலகமெல்லாம் உய்யும்பொருட்டே அருளிச் செய்தார்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

(வி-ரை.) பேணும் அம்மை - பேணுதல் - ஊட்டிக் காத்தல் என்றும், அன்பு மிகுதியாற் பாராட்டிப் போற்றுதல் என்றும் இரு பொருளும்பட உரைக்க நின்றது.

பேணும் அம்மை - ஊட்டும் தாய் என்றது "தாயுமிலி தந்தையிலி தான்றனியன் (*திருவாசகம்*) என்றும், அன்னையிலா வுனக்கிவளோ ரன்னையாய் வந்தாளோ" (*திருவிளை-புரா*) என்றும் கூறியாங்கு, அம்மையில்லாத இறைவர்க்கு இவர் அம்மை போலப் பாராட்டிக் காத்தனர்; அம்மையின் அன்புபோன்ற அன்பு பூண்டவர் என்பது. இவ்வாறு பேணியமை "தொண்டர்வரிற் றொழுது" (*1721*). "நம்பரடி யாரணைந் தானல்லதிரு வமுதளித்தும்... வேண்டுவ கொடுத்தும்" (*1731*); "நாதன்ற னடி யாரைப் பசிதீர்ப்பேன்" (*1734*) என்றும் போந்த தன்மைகளாலறிக. என்னை? **நடமாடுங் கோயி னம்பர்க்கொன் றீயிற், படமாடுங் கோயிற் பரமர்க்க தாமே" (திருமந்) என்றபடி** அவை யாவும் இறைவரைப் பேணியபடியேயாம் என்க. அடியவர்க்குள்ளே நின்று இறைவர் உண்டனர் என்பது. அம்மையார் இறைவரிடத்துத் தாயினது அன்பின்றன்மையே கொண்டனர் என்பது திருவந்தாதி, திருஇரட்டைமணிமாலைத் திருவாக்குக்கள் பலவற்றின் அகச்சான்றானும் அறியப்படும்.

பேணித் துதித்துப் பாராட்டுந் திறமும் அவ்வாறே அறியப்படும். அவற்றுட் சில ஈண்டுத் தரப்படுகின்றன; "உரைக்கப் படுவது மொன்றுண்டு கேட்கிற்செவ் வான்றொடைமே, லிரைக்கின்ற பாம்பை யென்றுந் தொடேல்" (*திருஇரட்-7*); "அரவமொன் றாகத்து நீநயந்து பூணேல், பரவித் தொழுதிரந்தேன் பன்னாண் - முரணழிய, வொன்னாதார் மூவெயிலு

மோரம்பா லெய்தோனே, பொன்னார மற்றொன்று பூண்" (திருவந் - 27); "இவரை யிகழ்வதே கண்டீர் - இவர் தமது, பூக்கோல, மேனிப் பொடிபூசி யென்பணிந்த, பேய்க் கோலங் கண்ட பிறர்" (மேற்படி 29); "திங்க ளதுசூடிச் சில்பலிக்கென் றூர்திரியேல்" (மேற்படி 43); "குழலார் சிறுபுறத்துக் கோல்வளையைப் பாகத், தொழிலாக வைத்தேக வேண்டா - கழலார்ப்பப், பேரிரவிலீமப் பெருங்காட்டிற் பேயோடு, மாரழல்வாய் நீயாடு மங்கு (51); .... "விண்ணோர் பணிந்து, பசும்பொன் மணிமகுடந் தேய்ப்ப - முசிந்தெங்கு மெந்தாய் தழும்பேறி யேபாவம் பொல்லாவா, மந்தா மரைபோ லடி (76); முதலியவை கருதுக.

அம்மை காண் - காண் - கண்டுகொள்க என உறுதிப்பொருள் தந்து நின்றது. இவ்வாறு உமை யம்மையாருக்கு அருளியதன்றியும், உடனே அங்குவந் தணைந்த அம்மையாரை அத்தன்மை பற்றியே "**அம்மையே!**" என்று அப்பனுர் தமது திருவாக்கினுல் அழைத்தருளியதும் காண்க, அதனேடமையாது, ஆசிரியர் தாமும் மேல் **அங்கணன் "அம்மையே" என் றருள்செய** (1775) என்று தமது திருவாக்காலும் அழைத்துக் காட்டிய கவி நயமும் கண்டுகொள்க. முன்பு "தலையினுல் நடந்து" என்ற சிறப்பினை மும்முறை கூறி அதன் பெருமையை விளக்கினபடியே, ஈண்டு "அம்மை" என்ற சிறப்பினை இப்பாட்டினும் வரும் பாட்டினும் மும்முறை கூறித் தேற்றிய திறமும் காண்க. மேலும், "**வேணியினுர் அம்மை என மதுர மொழி கொடுத்தருளப் பெற்ருர்**" (1781) என்று அதன் சிறப்பினை எடுத்து முடித்துக் காட்டியும், "கீதமுன் பாடும் **அம்மை** கிளரொளி மலர்த்தாள் போற்றி" (1782) என்றும் புராண நிறைவாக்கியதும், இப்புராணத்துக்கு அம்மையார் புராணம் எனப் பெயரிட்டதும் காண்க.

உமையே! - உமையம்மையார் வினவியதன்கண், "**எம்பெருமான்**" என்ற விளி இடையில் வைத்ததற்கேற்ப ஐயன் அருளிய விடையினும் "உமையே!" என்று இடையில் வைத்துக் கூறிய நலம் சிந்திக்க. அம்மையாரது பெருமையின் நடுவுள் சிவமும் சத்தியுமாக இருவோரும் பதிந்து இருப்பதாகும் நிலைக்குறிப்பு. "பளிங்கிற் பவளம் பதித்தான் பதியே" (திருமந்.) "அடியே னடுவு ளிருவீரு மிருப்பதானுல்" (திருவா.)

மற்று இப்பெருமை சேர்வடிவு - "எற்பின் யாக்கை" (1773) என்று உமையம்மையார் கூறியதனை நோக்கி, இவ்வடிவு ஏனை எற்பின் யாக்கைகளுடன் வைத்து எண்ணத் தக்கதன்று; மிகப் பெருமை சேர்ந்த வடிவாகும் என்பார் **மற்று** என்ருர். வினைமாற்றுப் பொருளில் வந்தது. **பெருமை சேர் வடிவு** என்றது பூதகணங்களின் வடிவு. பெருமையானது இதனைத் தேடி வந்து அடையும் நிலையில் உள்ள வடிவம் என்ற குறிப்புமாம்.

வேண்டிப் பெற்றனள் - 1765 பார்க்க.

அருகு வந்த அணைய - மலையின்மேல் ஏறும்போது மேற்கண்டவாறு இமயவல்லி நோக்கியதும், வினவியதும், ஐயன் அருளியதும் நிகழ்ந்தன. இதனிடையில் அம்மையாரும் அருகு வந்தணைந்தனர்; அவ்வாறு அணைய என்பதாம். அணைந்தது இமயவல்லியார்

1775. அங்கண "னம்மை யே!" யென்றருள்செய, "வப்பா!" வென்று
பங்கயச் செம்பொற் பாதம் பணிந்துவீழ்ந் தெழுந்தார் தம்மைச்,
சங்கவெண் குழையி னுருந் தாமெதிர் நோக்கி, "நம்பால்
இங்குவேண் டுவதென்?" னென்ன விறைஞ்சிநின் றியம்புகின்றூர், 59

கூறியவாறு ஏற்பின் யாக்கையோ? அன்றி, இறைவர் கூறியவாறு பெருமைசேர் வடிவமோ? இவற்றுள் இன்னது அணைந்தது என்னுது பொதுப்படக் கூறிய திறம் சிந்திக்க. பாண்டி நாட்டுப் பதியில் வணிகன் வாய் மாற்றங் கேட்கும் அவ்வளவுவரை "மன்றலங் குழலினுர்" *(1764)* என்று குறித்தார். அதன்மேல் பேய் வடிவம் ஆனுர் *(1766)* என்றபோது, அவ்வாறு ஆயினவர் இன்னுர் என்னுது, எழுவாய் தொக வைத்தார். அதன்பின் அருளிச் செய்வார் - பாடி - *(1768)*, எடுத்துப் பாடி - வழியால் வந்தார் *(1769)* - என்பார் *(1770)*; சென்றுர் *(1771)*; ஏறும்போது என்ற வினைகளுக் கெல்லாம் எழுவாய் புலப்படாது வைத்துக் கூறினுர். இமயவல்லிக்கு இறைவர் "அம்மை" என ஈண்டு அறிவித்த நிலை தொடங்கி மேல்வரும் இயம்புகின்றுர் *(1775)*, என்றுர் *(1776)*, போற்றி நண்ணும் *(1779)*, பாடினுர் *(1780)* என்ற வினைகளுக்கெல்லாம் "அம்மை" *(1778)* என்ற எழுவாய் ஒன்றே வைத்த அமைதியும் கண்டுகொள்க.

"அம்மையே!" என்னும் **செம்மை, ஒருமொழி** - அம்மை என்பது செம்மை செய்யும் ஒரு மொழி என்பது. **செம்மை** - செம்பொருள். *"சிவத்தன்மையை ஆக்கிக் கொடுக்கும் சிறந்த சாதனமாகிய மொழி"* என்க.

உலகமெல்லாம் உய்யவே - இவ்வொரு மொழியாகிய அம்மையாரின் திருப் பெயர் ஒன்றினை வழிபடுதலாலே உலகம் உய்யப்பெறும் என்பது. **மொழியை வழிபடுதல்** - மனம் வாக்குக்களால் சிந்தித்தலும் சொல்லுதலும், ஏகாரம் தேற்றம். *58*

1775. (இ-ள்.) அங்கணன்... அருள்செய - இறைவர் "அம்மையே!" என்று அருளிச் செய்ய; "அப்பா" ...தம்மை - "அப்பா!" என்று ஆர்வம்படச் சொல்லிக்கொண்டு தாமரைபோன்ற அழகிய பொன்போன்ற பாதங்களில் பணிந்து வீழ்ந்து எழுந்து நின்ற அவரை; சங்கவெண்...நோக்கி - சங்கினுலாகிய வெள்ளிய குழையை யணிந்த சிவபெருமானும் எதிர்நோக்கி; "இங்கு...என்ன - இங்கு நம்மிடம் நீ வேண்டும் வரம் என்னை?" என்று அருள; இறைஞ்சி நின்று இயம்புகின்றுர் - பணிந்து நின்று சொல்வாராகி,

(வி-ரை.) அங்கணன் - இமயவல்லி திருக்கண்ணேக்கில் "எற்பின்யாக்கை யன்பு" என்னே? என்றமைய, இறைவரது திருக்கண் நோக்கில் "நம்மைப் பேணும் அம்மை" என்றமைந்து அவ்வாறே அழைக்கப்பெறும் சிறப்பு நோக்கி அங்கணன் என்றதாம். அருட்பார்வை செய்து என்றபடி. **அங்கண்மை** - அருள் நோக்கம். **அருள்செய** என்ற குறிப்புமது (*742* பார்க்க).

"அப்பா" என்றது உலகமெலாம் தோன்றி நின்றெடுங்குதற்குக் காரணமானவன் என்ற பொருள் தந்து நின்றது. "ஒடுங்கி மலத்துளதாம்" (சிவஞான போதம் *1* சூ); "உலகமெலாம்

1776. **இறவாத வின்ப வன்பு வேண்டிப்பின் வேண்டு கின்ருர்**
"பிறவாமை வேண்டு; மீண்டும் பிறப்புண்டே லுன்னை யென்றும்
மறவாமை வேண்டு; மின்னும் வேண்டுநான் மகிழ்ந்து பாடி
யறவாநீ யாடும் போதுன் னடியின்கீ ழிருக்க" வென்ருர். 60

ஈன்றவனே" (நம்பி - தேவா - வெண்பாக்கம்); "யாவர்க்குந் தந்தைதா யெனுமவர்" (திருஞான - புரா - 69) முதலிய திருவாக்குக்கள் காண்க. உனது படைப்பிலே வந்து நின்று மீள உன்னிடம் வந்து ஒடுங்குகிறேன் என்றது குறிப்பு. தம்மைப் பேணிய அன்பின் தன்மைபற்றி அம்மை என்று இறைவர் அருள, அத்தன்மையும் நீ தரவந்தது; நீயே முதல்வன் என்று அம்மையார் கூறிய குறிப்பும் காண்க. தம்மை அடிபணிந்த திருநாவுக்கரசு நாயனரை ஆளுடைய பிள்ளையார் எடுத்திறைஞ்சி "அப்பரே" என, அவரும் "அடியேன்" என்ருர் (1447) என்ற கருத்தை இங்கு வைத்துக் காண்க.

அம்மையே என்று அருள் செய்ய அப்பா! என்று பாதம் பணிந்து வீழ்ந்தெழுந்தார் - அம்மையார் கூறுவதன் முன் ஐயன் அருளியது கருணைப் பெருக்கினைக் காட்டும். அன்றியும் அருட்டிரு மொழி பெற்ற துணையானே, அப்பா என்ற அருள்மொழி பிறந்து, பின்னர்ப் பெறும் பேறுகள் நிகழ் வனவாயின என்பதும் கருதத்தக்கன. "திங்கள்சேர் சடையார் தம்மைச் சென்றவர் காணுமுன்னே, அங்கணர் கருணை கூர்ந்த வருட்டிரு நோக்க மெய்த" (752) என்றதும், ஆண்டுரைத்தவையும், ஆண்டும் அங்கணர் என்றருளியதும் காண்க.

தம்மை - எதிர்நோக்கி - மீண்டும் நோக்கி, இப்பாட்டில் முன் **அணையநோக்கி** (1774) என்றது அருள் செய்தற்குச் செய்யும் சாதனமாகிய நோக்கம். ஈண்டு **எதிர்நோக்கி** என்றது அவர் கேட்கும் வரம் அருளித் திருவடிக்கீழ் நீங்காதுவைத்தற்குச் செய்யும் சிறப்பு நோக்கம். "வேண்டி நீயாதருள்செய்தா யானு மதுவே வேண்டி னல்லால்" என்ற திருவாசகம் ஈண்டு வைத்துக் கருதற்பாலது.

நம்பால் இங்கு வேண்டுவதென் என்றது, பாண்டி நாட்டினின்றும் வடதிசைத் தேயமெல்லாம் கடிது சென்று கயிலை வந்தடைந்தமையின் இங்கு எதனை வேண்டி வந்தது? என்ருர்.

இயம்புகின்ருர் - இயம்புகின்ருராகி. முற்றெச்சம். இயம்புகின்ருர் - என்ருர் என வரும்பாட்டுடன் முடிக்க.

இறைஞ்சி நின்றிது புகன்ருர் - என்பதும் பாடம். 59

1776. (இ-ள்.) இறவாத...வேண்டுகின்ருர் - என்றும் கெடுதலில்லாத இன்ப அன்பினை வேண்டிக்கொண்டு, பின்னும் வேண்டுவாராய்; "பிறவாமை வேண்டும்...இருக்க" என்ருர் - "இனிப் பிறவாதிருக்கும் வரம் வேண்டும்; ஆனல் மீண்டும் பிறவி உளதாயின் உன்னை என்றும் மறவாதிருக்கும் வரம் வேண்டும்; அறவா! மேலும் வேண்டுவது தேவரீர் அருட்கூத்து ஆடுகின்றபோது மகிழ்ச்சியுடன் பாடிக்கொண்டு உமது திருவடியின் கீழே இருக்கும் பேறு ஆகும்" என்றனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை.) இறவாத இன்ப அன்பு - இறவாத இன்பம் - இறவாத அன்பு என்று ஈரிடத்தும் கூட்டுக. இறவாத - அழிதலில்லாத - கெடாத - நித்தமாகிய. உறுதிப் பொருள்பற்றி எதிர்மறையாற் கூறினர். இன்பமும் அன்பும் பிரிக்க முடியாதபடி இணைந்த இருதன்மைகள். "இன்பமே என்னுடையன்பே" (திருவா); "அன்பினு லின்ப மார்வார்" (342); "இன்ப மான வன்பினை யெடுத்துக் காட்ட" (751) முதலியவை காண்க. **அன்பு வேண்டி** என்றது அன்புதானே எல்லாப் பேற்றுக்கும் அடிப்படையாதல் குறித்தது. **பின்** என்ற குறிப்புமது.

பிறவாமை வேண்டும் - பிறவியில் வந்த வாதனைபடும் மக்கள் வேண்டிக் கொள்ளத்தக்க வரமாவது பிறவாமை யொன்றேயாம் என்பது அறிந்த பெரியோர் எல்லாரும் ஒப்பக்காட்டிச் சென்றதோ ருண்மையாம். "செடிகொணோய் வடிவொன் றில்லா, யூத்தையைக் கழிக்கும் வண்ண முணர்வுதா வுலக மூர்த்தி" (தனி நேரிசை - 1); "அவிநாசியே, யெங்கோனே யுனைவேண்டிக் கொள்வேன் பிறவாமையே" (நம்பி - புக்கொளியூர் - அவிநாசி - 3); "மீட்டேயும் பிறவாமல் காத்தாட் கொண்டான்", "மீட்டிங்கு வந்த வினைப்பிறவி சாராமே" "பாழ்த்த பிறப்பறுத்திடுவான் யானுமுனைப் பரவுவனே" (திருவாசகம்); இன்னம் "பிறக்க விசைவையோ நெஞ்சமே" முதலிய எண்ணிறந்த திருவாக்குக்கள் காண்க. "வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை; மற்றது, வேண்டாமை வேண்ட வரும்" (குறள்) என்ற திருக்குறள் இதனைத் தேற்றப்பட எடுத்துக் கூறியது காண்க. "கண்டெந்தை யென்றிறைஞ்சிக் கைப்பணியான் செய்யேனேல், அண்டம் பெறினும் மதுவேண்டேன்" என்றும், "யானே பிறப்பறுப்பா னெண்ணினேன்" என்றும் வரும் அற்புதத் திருவந்தாதித் திருவாக்குகளும், "வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை யென்றமையால் வேண்டி னஃதொன்றுமே வேண்டுவது" (களிறு - 40) முதலியவையும் காண்க.

மீண்டும் பிறப்புண்டேல் - பிறவாமை அம்மையார் வேண்டிக்கொள்ள இறைவரும் வேண்டுவார் வேண்டியதே ஈவோராதலின்அவ்வாறே தந்தருளுவாராகவும், அது காலத்தானன்றிக் கைவரப் பெறுதாதலின், பெறும் காலம் வரை முன் வினைக் கழிவுக்காகப் பிறந்தே வரவேண்டுமாகலின் அவ்வாறு பிறக்க நேர்ந்தால் என்றபடி. வீடுபேறு வேண்டிய அருச்சுனனுக்கு அதுவும் கொடுத்து, அது பெறும் முன்னர்ப் பிறவியுங் கொடுத்த வரலாறு இங்குச் சிந்திக்கத்தக்கது. அநுபவிக்க வேண்டி எஞ்சி நிற்கும் கன்மப் பகுதியின் கணக்கு உயிர்களுக்கு அறியவாராமையின் பிறப்பு உண்டேல்? என்ற ஐயப் பாட்டில் வைத்தோதினர். **பிறப்பு** - எவ்வகைப்பட்ட பிறப்பும் உள்ளடக்கி வாளா பிறப்பென்றார். மக்களாய் வந்தோர் பின்னரும் வேறு வகை அடைதல் கூடும் என்பது அறிஞர் துணிபு.

உன்னை என்றும் மறவாமை வேண்டும் - என்றும் - இடரினும் தளரினும், வாழினும் சாவினும் இவை முதலாக எந்நிலையினும் எனவும், எப்பிறப்பிலும் எனவும், எக்காலத்தும் எனவும் எல்லா வகையும் கொள்க. **மறவாமை வேண்டும்** - "புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி யென்மனத்தே, வழுவா திருக்க வரந்தர வேண்டும்" (திருப்பாதிரிப்புலியூர் - திருவிருத்) என்ற அப்பர் பெருமான் திருவாக்கின் கருத்தே இங்கு

அம்மையாரிடத்தும் ஒப்ப நிகழ்வதாயிற்று. மறவாநிலை இறைவர் தர வருவதொன்றும் என்பது "மாயங் காட்டிப் **பிறவி காட்டி மறவா மனங்காட்டிக்**, காயங்காட்டி" (நம்பி - ஆரூர் - செந்துருத்தி - 7) என்றதனாலும் அறிக.

மீண்டும் பிறப்பு உண்டேல் மறவாமை வேண்டும் - அப்பிறப்பு இன்னதாக வேண்டுமென்று கேட்டாரலர், அது அவ்வவர் வினைக்கீடாகத் தரப்படுதலான். ஆனால் நினைப்பும் மறப்பும் எல்லாப் பிறவிகளிலும் நிகழும்; மறவாமை ஒன்றே ஏனைத் தவப் பயனாகிய நலங்களையெல்லாம் விளைவிக்கும் என்பது.

இன்னும் வேண்டும்......அடியின் கீழ் இருக்க - இது முடிந்த முடிபாக அம்மையார் வேண்டியது. முன் வேண்டிய பிறவாமையும், பிறப்பின் மறவாமையும் என்ற இருநிலையும் கடந்து, வினைக் கழிவின்பின் முடிவில் பெறவுள்ளதனையும் ஈண்டே வேண்டிக் கொள்கின்றார். பிறவாமையே பெறினும், அன்றிப், பிறந்து மறவாமையே பெறினும் இறுதியில் பாடிக்கொண்டு திருவடியின்கீழ்த் தங்குதல் வேண்டும் என்பது. இதனையும் ஈண்டே வேண்டிக் கொள்ளும் அவசியமும் இயைபும் என்னை? எனின், தாம் வேண்டியவாறு பிறவாமையைப் பெறுவதும், அது பெறாது எப்பிறப்பாயினும் பெற்று மறவாமையைப் பெறுவதும் தம் வயத்தனவல்ல; அவை இறைவன் வயத்தனவாம். இவற்றுள் எதுவரினும் திருவடிக்கீழ் என்றும் நீங்காது பாடிக்கொண்டிருக்கப் பெறுவதனையே தாம் சிறந்த முடிபாகிய வரமாகக் கொண்டனர். அது கிடையாவிடின் மேலிரண்டு நிலையும் முற்றுப் பெற்றனவாகா என்பது கருத்து. "முத்திதனின் மூன்று முதலு மொழியக்கேள், சுத்தவநு போகத்தைத் துய்த்தலனு" (உண்மை விளக்கம் - 50) என்றும், "உயிர்தானுஞ் சிவாநுபவ மொன்றினுக்கு முரித்தே" என்றும் வரும் உண்மை நூல்களின் முடிபுகளின்படி **இறைவரது திருவடிக்கீழ் நின்று ஆனந்தமுறுதலே ஆன்மா பெறத்தக்கது என்க.**

அறவா - **அறம் இறைவனது உருவம். ஈண்டு அறம் என்றது எல்லா உயிர்கள் மேலும் வைத்த அருளும், அவ்வருளை அவ்வவற்றுக் கேற்றவாறு செலுத்தும் நியதியுமாம்.** "நீதிபலவும் தன்னதுரு வாமென" (பிள் - தேவா); "**அறவனை**" (நம் - தேவா).

"**நான்......இருக்க**" என்று வேண்டும் வரத்தினிடையே, "அறவா" என்று வைத்தது நீ என் நடுவுள் இருத்தல் வேண்டும் என்ற குறிப்பும்பட நின்றது. **பாடுதல்** - சங்காரத்திலும் ஐயன் திருநடத்தில் உடனிருந்து பாடும் பூதங்களின் செயல். அம்மையாரது பதிகங்கள் பார்க்க. மிக அருமையான அவ்வரங்களை வேண்டும் இத்திருப்பாட்டினை யாவரும் பயின்று ஓதி வருதல் நலம் தரும். 60

1777. (இ-ள்.) கூடுமாறு அருள் கொடுத்து - தமது திருவடிக்கீழ்க் கூடியிருக்கும் நெறியினை அருளி; பரவுவார் பற்றாய் நின்றான் - பரவுகின்றவர்களுக்குப் பற்றுக் கோடாய் நிற்கும் இறைவர்; "குலவுதென்......நம்மை" என்றான் - "விளக்கமுடைய தெற்குத் திசையில் எப்போதும் அழியாது வாழ்வுதரும் பழையனூர் என்னும் பழம் பதியில் நிலவிய திருவாலங்காட்டில் நாம் ஆடுகின்ற பெருநடனத்தையும் நீ கண்டு, எப்போதும்

1777. கூடுமா றருள்கொ டுத்துக் "குலவுதென் றிசையி லென்றும்
நீடுவாழ் பழன மூதூர் நிலவிய வாலங் காட்டில்
ஆடுமா நடமு நீகண் டானந்தஞ் சேர்ந்தெப் போதும்
பாடுவாய் நம்மை" யென்றான் பரவுவார் பற்றாய் நின்றான். 61

ஆனந்தத்துடன் கூடி எப்போதும் நம்மைப் பாடிக் கொண்டிருப்பாயாக" என்று அருளிச் செய்தார்.

(வி-ரை.) கூடுமாறு - அம்மையார் முடிந்த முடிபாகக் கேட்ட மூன்றாவது வரத்தின்படி தமது திருவடிக்கீழ் இருக்கும் நிலை கூடும்படி என்க. இதற்குப் பிறர் எல்லாம் கேட்ட வரம் பொருந்தும்படி என்றுரைத்தனர்.

தென் திசையில் - இவ்வரம் வடகயிலையில் தரப்படுகின்றபடியால் தென்றிசையில் என்றார்.

என்றும் நீடு வாழ் - அழியா வாழ்வினைத் தருதற்குக் காரணமாகிய இடத்து நிகழ் பொருளின்றன்மை இடத்தின்மேல் ஏற்றப்பட்டது. இறைவரது நடனம் அழியாது நித்தமாவதுபோல, அது நிகழ்தற் கிடமாகிய ஊரும் நித்தமென்பதாம்.

பழனம் மூதூர் - பழையனூர் என்ற பழவூர். **பழனை** என்பது பழனம் என நின்றது. *1606 - 1607* பாட்டுக்களும் தலவிசேடமும் பார்க்க.

பழன மூதூர் நிலவிய ஆலங்காடு - பழையனூர்த் திருவாலங்காடு என்று சேர்த்துத் தேற்றமாய் அறியப்படுவது. "பழனை மேய, அத்தா ஆலங்காடா" முதலியவை காண்க.

மா நடம் - திருவடியை மேலே தூக்கி ஆடும் அருட்கூத்து; ஊர்த்துவ தாண்டவம் என்பர் வடவர்.

ஆனந்தம் சேர்ந்து - முடிவிலாத பேரின்பமாகிய எமது தன்மையிற்கூடி.

எப்போதும் பாடுவாய் - சிவ பூதகணங்கள் இறைவர் திருக்கூத்தினுடன் இலயம்பட ஆடியும், பாடியும், இயங்கள் முழக்கியும், இன்பமார்ந்திருப்பன என்பது அம்மையார் திருப்பதிகங்களாலும், "கோடி கோடி குறட்சிறு பூதங்கள் பாடி யாடும் பரப்பது பாங்கெலாம்" *(16)* என்பது முதலிய திருவாக்குக்களாலும் அறியலாம். "பப்பனை யிட்டுப் பகண்டை பாட" I *(11)*; "பேய், கொட்ட முழவங் கூளி பாட" II *(1)*; முதலியனவாய் வரும் அம்மையார் திருவாக்குக்களும் காண்க. **எப்போதும்** - என்றும் மீளாது நிலைபேறு பெற என்றபடி "பலவாறே தொழும்பாகும் அங்கு" "ஆளாநா மங்கு" என்றபடி பாடுதல் அடிமைப்பட்டுத் தொழும்பு செய்யும் முறைகளுள் ஒன்று என்க. **எப்போதும்** என்றதனால் மீளாநிலையாகிய வீடுபேறு குறிக்கப்பட்டது.

பரவுவார் பற்றாய் நின்றான் - ஆதலின் இவ்வாறருள் செய்தனர் என்று காரணம் குறிப்புப்பட உடம்பொடு புணர்த்தி ஓதினர்.

1778. அப்பரி சருளப் பெற்ற வம்மையுஞ் செம்மை வேத
மெய்ப்பொரு ளானுர் தம்மை விடைகொண்டு, வணங்கிப்போந்து,
செப்பரும் பெருமை யன்பாற், றிகழ்திரு வாலங் காடா
நற்பதி தலையி னுலே நடந்துபுக் கடைந்தா ரன்றே. 62

நடமும் கண்டு......பாடுவாய் - என்றது ஆடும்போது உன் அடியின்கீழ் இருக்க என்று வேண்டிய வரம் தந்த வகை. காணுதலும் பாடுதலும் அநுபவ வகைகளாம்.

ஆர்த்தி செய்தே யெப்போதும் - என்பதும் பாடம். *61*

1778. (இ-ள்.) அப்பரிசு.....விடைகொண்டு - அவ்வாறு வரம் அருளப் பெற்றவராகிய அம்மையாரும் வேதங்களில் செம்பொருள் என்றும் சத்து என்றும் சொல்லப்படும் இறைவரிடம் விடைபெற்றுக்கொண்டு; வணங்கிப் போந்து - வணங்கிச் சென்று; செப்பரும் பெருமை அன்பால் - சொல்லுதற்கரிய பேரன்பினுல்; திகழ்.....அடைந்தார் - விளங்குகின்ற திருவாலங்காடாம் நல்ல திருத்தலத்தைத் தலையினுலே நடந்துசேர்ந்து கோயிலுட்புகுந்து திருமுன்பு அடைந்தனர்; அன்றே - அப்பொழுதே.

(வி-ரை.) அப்பரிசு - பரிசு - தன்மை. மேற்கூறிய அவ்வாறு. அகரம் மேற்கூறிய என முன்னறி சுட்டு. அம்மையார் நான்காக வகைப்படுத்திக் கேட்டதனை ஒன்ருகப் பெறுந் தன்மை. "**எப்போதும் ஆனந்தம் சேர்ந்து**" என்றதனுல் இறவாத இன்பமும் - மாநடங் கண்டு என்றதனுல் **இறவாத** அன்பும், **எப்போதும்** (மாநடங் கண்டு) என்றதனுல் பிறவாமையும், **எப்போதும் பாடுவாய்** என்றதனுல் மறவாமையும், **ஆலங்காட்டில் ஆடும் மாநடம் கண்டு** என்றதனுல் ஆடும் போது அடியின் கீழிருத்தலும் பெறவைத்த பரிசு கண்டுகொள்க. **எப்போதும்** என்றதனை முன்னும் பின்னும் தனித்தனி கூட்டிவைத்து உரைத்துக்கொள்க.

அப்பரிசு - பரிசு - வரம். அன்புக்குரிய சன்மானம் என்று கொண்டுரைத்தலுமாம்.

செம்மை வேத மெய்ப்பொருள் ஆனுர் - வேதச் செம்மைப் பொருளும் மெய்ப்பொருளும் ஆனுர் என்று கூட்டுக. **பொருள்** என்றது செம்மை என்றதனேடும் சென்று இயைந்து செம்பொருள் என்ற பொருள்தர நின்றது. **செம்பொருள்** - சிவம். "வாய்மைச் செம்மைப் பொருளும் தருவார்" (*974*); **மெய்ப்பொருள்** - "அதுவே சத்தாயுள்ள சிவம்" (சிவஞானபோதம் - *6* சூத்.) என்று ஞான சாத்திரத்தினுள் பேசப்படுவது.

விடைகொண்டு - அம்மையார் "அப்பா" என்றவாறும், ஐயன் "நம்பால் வேண்டுவதென்?" என்றவாறும், அம்மை வரங் கேட்டவாறும், ஐயன் கொடுத்தவாறும், அதன்மேல் அம்மை விடைகொண்டவாறும் ஆகிய இவையெல்லாம் வாக்கு மனுதீத கோசரமாகிய சிவத்தினிடத்து எவ்வாறு நிகழ்ந்தன என்னின்? பசு ஞான பாச ஞானங்களைக் கடந்து பதி ஞானமாகிய சிவானுபவத்தினுள் நின்று சிவன் உணர்த்தக் கண்டதனுல் இந்நிலைகள் கூடின என்க. சிவசங்கற்பம் உணர்த்தப் பெற்றதனுல் இந்நிலை விளைந்ததாம் என்பதும் "அங்கணன் அம்மையேயென் றருள்செய" (*1775*) என்றதனுல் காண்க. **இதனுனே இஃது உலகர்க்கு விளங்காமையும் அறியப்படும்.**

1779. ஆலங்கா டதனி லண்ட **முறநிமிர்ந் தாடு கின்ற**
கோலங்காண் பொழுது "**கொங்கை திரங்கி**"யென் றெடுத்துத் தங்கு
மூலங்காண் பரியார் தம்மை மூத்தநற் பதிகம் பாடி
ஞாலங்கா தலித்துப் போற்று நடம்போற்றி வாழு நாளில், 63

செப்பரும் பெருமை அன்பால் என்றதனை "வணங்கிப் போந்து" என்பதனுடனும், "நடந்துபுக்கு அடைந்தார்" என்பதனுடனும் முன்னும் பின்னும் கூட்டுக. **பெருமை அன்பு** - பேரன்பு; சிவனிறைவுட்பெறும் அன்பாதலின் பவநிறைவுட்பட்ட எவரும் பேசலாகாத பெருமை என்க. சிவனிறைவுட் பட்டோரும் பேசலாகாப் பெருமை என்பதும் ஆளுடைய பிள்ளையார் இவ்வன்பின் பெருமையை உட்கொண்டு திருவாலங்காட்டினை மிதித்தற் கஞ்சிப் புறம்பே எழுந்தருளியிருந்த வரலாற்றினுல் அறிதற்பாலது.

திருவாலங்காடாம்.... அடைந்தார் அன்றே - திருக்கயிலையில் வேண்டிய வரத்தினை இத்தலத்திற் பெறும்படி அருளப் பெற்றாராதலின், இதுவும் கயிலையோ டொப்பதாம் என்றுட்கொண்டு, கயிலையை அடைந்த அவ்வாறே இங்கும் அடைந்தனர் என்க. அங்கு ஐயனது அண்டத்தின் பெருமை பற்றி அவ்வாறு அடைந்தனர் என்றலுமாம். "அண்ட முறநிமிர்ந்தாடு கின்ற கோலம்" (*1779*) என்று தொடர்ந்து கூறுவதனாலும், "ஆதியோ டந்த மில்லான் அருணட மாடும் போது" (*1782*) என்று முடித்துக் கூறுவதனாலும் ஆசிரியர் இக்குறிப்புப் பெற வைத்தமையும் காண்க.

அன்றே - அப்பொழுதே. வழிபடும் அன்பினாற் கயிலையினை அடைவதற்கு மனத்தினுங் கடிது சென்று (*1771*) புகுந்த அம்மையார், அங்கு அருளப்பெற்ற பேற்றைப் பெறுவதற்கு அதனினும் கடிது சென்றடைதல் இயல்பாதலின் அப்போதே அடைந்தனர் என்க.

அன்றே அடைந்தார் - என்றதனை முறைமாற்றி உரைத்த குறிப்புமது. "திருக்கண்ணோக் குற்ற தன்றே" (*1772*) என்றபடியே இங்குக் கூறிய கருத்தும் அது. **அன்றே** - அசை என்றொதுக்குவாருமுளர்.

புக்கு - திருக்கோயிலினுள் முறைப்படி புகுந்து என்றும், **அடைந்தார்** - திருமுன்பு அடைந்தனர் என்றும் வருவித்துக்கொள்க. அம்மையார் பேரன்பின் ஆர்வ மிகுதிப் பாட்டால் விரைந்து புகுந்தாராதலின் வணங்குதல், வலம் வருதல் முதலிய செயல் முறைகளை விரித்துக் கூறாது வினை முடிபுகளாற் பெறவைத்த நயமும் காண்க. கயிலையில் விடைகொண்ட அம்மையார் போதலும், இங்கு நடந்து புகுந்து திருமுன் அடைதலும் ஆகிய இவற்றை இவ்வொரு திருப்பாட்டிற் பெறவைத்த குறிப்பும் அவ்விரைவு மிகுதியினைக் குறிப்பாலுணர்த்தியதுடன் அவ்விரண்டு தலங்களின் ஒப்புமை குறித்ததுமாம். *62*

1779. (இ-ள்.) ஆலங்காடதனில்.... காண்பொழுது - மேல் அண்டங்களிற் பொருந்தத் திருவடியை மேல் நிமிர்த்தி ஆடுகின்ற கூத்தின் திருக்கோலத்தைக் காணப்பெற்ற அப்பொழுது, "கொங்கை திரங்கி" என்று எடுத்து - கொங்கை திரங்கி என்று தொடங்கி;

தங்கும்... பாடி - தாம் தங்கும் மூலத்தைக் காண்பதற்கு அரியவராகிய இறைவரை நன்மையுடைய மூத்த திருப்பதிகத்தைப் பாடி ஞாலம்... நாளில் - உலகம் காதல்கொண்டு போற்றும் திருக்கூத்தைப் போற்றிக்கொண்டு எழுந்தருளியிருக்கும் நாளில்,

(வி-ரை.) ஆலங்காடதனிற் - காண்பொழுது - என்று இயையும். இறைவன் ஆடும் கோலம் எங்கும் உள்ளதாகவும் அதனை வெளிப்படக் கண்டு பயன்பெறவுள்ள தலங்கள் சிலவே. அவற்றுட் சிறந்ததொன்று திருவாலங்காடு என்பதும், அங்குக் காணப்பெறுவது அண்டமுற நிமிர்ந்தாடும் கோலமாம் என்பதும் கூறப்பட்டன.

அண்டம் உற நிமிர்ந்து ஆடும் கோலம் - அண்டம் - மேலண்டம். நிமிர்த்து என்பது நிமிர்ந்து என நின்றது. மேலண்டத்துள்ளார் மாட்டுக் கருணையினால் அவர்களுக்கு அருள்செய்யத் தூக்கியது போல என்பது குறிப்பு. "விண்செலன் மரபனையர்க் கேந்திய தொருகை" (முருகு) என்பது காண்க. காளியுடன் செய்த கூத்தில் அவள் கூத்தினுக்கு மேற்பட்டிருக்கும் நிலையைக் காட்டித் தூக்கியதென்பது வரலாறு. "காளியோ டாடிக் கனகா சலத்தாடிக், கூளியோடாடிக் குவலயத்தே யாடி" (9-98) என்பது திருமந்திரம். **கனகாசலம்** - பொற்பொதுவாகிய சிதம்பரம்; **குவலயம்** - மண். (ஆலங்காட்டினைத் தழுவுவது). குவலயத்தே கூளிகளோடு ஆடுதலின் பேய் வடிவம்பெற்ற அம்மையார்க் கருளும் இடமாக அருளினர் என்பதாம்.

ஆலங்காடதனிற் கோலம் காண்பொழுது - ஆலங்காடு காண்பொழுதும், கண்டபின் அதனுட் புகுந்து அங்கு ஆடும் கோலம் காண்பொழுதும் என்று தனித்தனி கூட்டுக. "ஆடும் எங்கள் அப்பனிடம் திருவாலங் காடே" (மூத்த திருப்பதிகம் 1) என்று பாட்டுத்தோறும் முடிப்பதனால் இடத்தையும், அதனுட் கோலத்தையும் கண்ட அப்பொழுது இரண்டினையும் சேர்த்துப் பாடியருளியதென்க. **காண்பொழுது** - கண்ட அப்பொழுது. இதனால் இத்திருப்பதிகம் முதலிற் பாடியருளப்பட்டதென்பது விளங்கும்.

"**கொங்கை திரங்கி**" என்று எடுத்து - **எடுத்தல்** - தொடங்குதல். "கொங்கை திரங்கி...பெண் பேய்" என்ற அளவு அம்மையார் தமது பேய் வடிவத்தை விரித்துக் கூறுதல் காண்க.

மூலம் காண்பரியார் தம்மை - காண்பொழுது - "வாக்கு மனாதீத கோசரமாய் நின்ற அதுவே" என்றும், "இரண்டு வகையின்...உலகு" (சிவஞானபோதம் - 6 சூத்.) என்றும் கூறியபடி, பசுபாச ஞானங்களாற் காண்பரியாராகியும் சிவஞானத்தாற் காணவுள்ள வராதலின் அவ்வாறு கண்டனர் என்பது. இரட்டுற மொழிதலால் **ஆடுகின்ற - காண்பரியார்** என்று கூட்டி உரைக்கவும் நின்றது.

மூத்த பதிகம் - அம்மையாரது திருப்பதிகங்கள் இவ்வாறு வழங்கப்படுதல் மரபு. பதிகம் என்ற அமைப்பில் வரும் அருளிப்பாட்டுக்களுக் கெல்லாம் காலத்தால் மூத்தவை இவை என்ற காரணத்தாற் போந்த பெயர். **கோயின் மூத்த பதிகம்** என்ற திருவாசகப் பகுதி இதுபோலவே கோயிலில் முதலிற் பாடப்பெற்ற பதிகங்கள் இரண்டனுள் முதலிற் பாடப்பட்ட காரணத்தாற் பெயர் பெற்றதும் கருதுக.

1780. மட்டவிழ்கொன் றையினார்தந் திருக்கூத்து முன்வணங்கும்
இட்டமிகு பெருங்காத லெழுந்தோங்க வியப்பெய்தி
"யெட்டியில வம்மீகை" யெனவெடுத்துத் திருப்பதிகங்
"கொட்டமுழ வங்குழக னாடு"மெனப் பாடினார். 64

நற் பதிகம் - நல் - "இடைப் பிற வரலுமா மேற்பன" என்பவாகலின், நன்மை இப்பதிகங்களின் பயனுய் ஏற்ப வரும் என்பது; "தொண்டை நன் ஞடு" (*1078*) என்புழிப் போல.

ஞாலம் காதலித்துப் போற்றும் நடம் - ஞாலம் - அறிவோர். "இசைக்குமன்னுலகே" (போதம் *6*) என்புழிப்போல.

நாளில் - காதல் - ஓங்க - எய்திப் - பாடினுர் - (*1780*) என்று வரும் பாட்டுடன் கூட்டிமுடிக்க.

என்றெடுத்தே - மூலங்காணுதார் - என்பனவும் பாடங்கள். *63*

1780. (இ-ள்.) மட்டு அவிழ்... எழுந்து ஓங்க - மணம் விரிகின்ற கொன்றை மலர் மாலையினையுடைய சிவபெருமானது திருக்கூத்தினை நேரே வணங்கப்பெற்ற விருப்பம் மிகும் பேராசையானது மேன்மேலும் பொங்கி மிக்கதாக; வியப்பு எய்தி, வியப்படைந்து; "எட்டி இலவம்" என எடுத்து - "எட்டி இலவம்" என்று தொடங்கி; "கொட்ட முழவம் குழகன் ஆடும்" எனத் திருப்பதிகம் பாடினுர் - "முழவம் கொட்டக் குழகன் ஆடும்" என்ற முடிபினையுடைய திருப்பாட்டுக்களால் திருப்பதிகத்தினைப் பாடியருளினுர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை.) மட்டவிழ் கொன்றையினுர்தம் - திருக்கூத்து - என்றது கொன்றை, திருவடையாள மாலையாமா றுணர்த்தியதுடன் பிரணவ வடிவினதாதலும், ஐயன் திருக்கூத்து அவ்வடிவே யாதலும் குறிப்பாலுணர்த்தியவாறு.

முன் வணங்கும் - முன் - நேர்பட்டு. நேரே ஏனைக்கணத்தவர்க்கு முன் என்றலுமாம். **முன்** என்றதனை முன்காலத்திலெல்லாம் என்ற பொருள்படக் கொண்டு, முன்னெல்லாம் இக்கூத்தினை வணங்கும் இட்டம் மிகக்கொண்ட காதல் இப்போது மேலும் எழுந்தோங்க என்றுரைத்தலுமாம். "மொழிபயின்ற பின்னெல்லாம் காதல் சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன்" (அற் - அந். *1*) என்றது காண்க.

வியப்பெய்தி - வியப்பாவது பெருங்காதல் எழுந்தோங்கிய தற்கேற்ப ஆடலை முன் வணங்கத் தாம் பெற்ற பெரும் பேற்றினைக் கருதி எழுந்த மனநிலை. இது தம்மை யுள்ளிட்ட பேய்க்கணம் முழவம் கொட்டவும் பாடவும் அதற்கிசையக் குழகன் ஆடும் என்றதனுல் அறியப்படும். வியப்பெய்தி என எடுத்து ஆடும் என்று பாடினுர் என்றது இக்கருத்தை விளக்கியது.

"**எட்டி யிலவம் ஈகை**" - இது திருப்பதிகத்தின் தொடக்கம். எட்டியும் இலவும் ஈகையும் பாலைக் கருப்பொருள்கள். **ஈகை** - இண்டு. **ஆடும்** - பேய் முழவங்கொட்டக் குழகன் அதற்கிசைய ஆடும். **குழகன் - குழகு** - பேரழகு. அன்பிற்குக் குழைபவன் என்றலுமாம்.

எழுந்தோங்க வியப்பெய்த - என்பதும் பாடம். *64*

திருச்சிற்றம்பலம் அம்மை மூத்த திருப்பதிகம் பண் - நட்டபாடை

கொங்கை திரங்கி நரம்பெழுந்து குண்டுகண் வெண்பற்குழி வயிற்றுப்
பங்கி சிவந்திரு பற்க ணீண்டு பரடுயர் நீள்கணைக் காலோர் பெண்பேய்
தங்கி யலறி யுலறு காட்டிற் றாழ்சடை யெட்டுத் திசையும் வீசி
யங்கங் குளிர்ந்தன லாடு மெங்க **ளப்ப னிடந்திரு வாலங்காடே.** *1*

ஒப்பனை யில்லவன் பேய்கள் கூடி யொன்றினை யொன்றடித் தொக்க லித்துப்
பப்பனை யிட்டுப் பகண்டை பாடப் பாடிருந் தந்நரி யாழ மைப்ப
வப்பனை யணி**திரு வாலங் காட்டு ளடிகளைச் செடிதலைக் காரைக் காற்பேய்**
செப்பிய செந்தமிழ் பத்தும் வல்லார் சிவகதி சேர்ந்தின்ப மெய்து வாரே. *10*

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :- திருக்கயிலையிற் பெற்ற அருளாணையின்படி திருக்கூத்துக் கண்டுகொண்டு திருவடிக்கீழ்ப் பாடிக்கொண்டு இருக்கும்பொருட்டு அம்மையார் திருவாலங்காட்டினைத் தலையால் நடந்து சேர்ந்தனர்; ஆலமரங்கள் நிறைந்த பெருங்காடாயிருந்த அத்தலத்தைக் கும்பிட்டனர்; அதனுள் பேய்கள் பலவாறும் பாடியும் ஆடியும் முழக்கியும் களித்து இருக்கக் கண்டனர்; அவை காண இறைவர் மேலண்டமுறத் திருவடியை நிமிர்த்து ஆடும் திருக்கூத்தையும் காட்டக் கண்டனர்; இவ்வாறு கண்ட இடமாவது திருவாலங்காடேயாம் என்று **தலத்தைப் பற்றிப் போற்றியது** பதிகக் கருத்து. "கடுவிடமுண் டிருண்டமணி கண்டத்தோன் கருதுங்கோயில்...கழுமலமே" (*1*); "ஆறு சமயங்கட் கொருதலைவன் கருதுமூர்...முதுகுன்றமே" (*1*); முதலிய தேவாரங்கள் காண்க. திருக்கூத்தை முன் வைத்துத் **தலத்தைப்** போற்றுதல் குறிப்பு. தலத்தை வணங்கிப் போற்றுதல் வழிபாட்டு முறைகளுள் ஒன்று. இக்கருத்துப் பற்றியே ஆலங்காடதனில் - ஆடுகின்ற கோலங்காண் பொழுது **பாடி - நடம்போற்றி** - என்று ஆசிரியர் அறிவுறுத்தியருளினர்.

பதிகப் பாட்டுக் குறிப்பு :- (1) கொங்கை திரங்கி...பெண் பேய் - அம்மையார் தம்மைப் பற்றிச் சொல்லிக் கொண்டது. கொங்கை திரங்குதல், நரம்பெழுதல், குண்டு கண்ணுடைமை, வெண்பல்லுடன் பற்கணீண்டிருத்தல், குழிந்த வயிறும் சிவந்த பங்கியும் நீண்ட பறடும் நீள்கணைக்காலும் உடைமை முதலிய இவை எலும்புகளே உடம்பாயமைந்த பேய் வடிவத்தை அம்மையார் பெற்ற நிலையினைக் குறிப்பன. **பெண் பேய்** - பேய் வடிவினிலும் பால்வகைப் பகுபாடு காணப்படும் உண்மை காண்க. "வருமிவள் நம்மைப் பேணும் அம்மை" (*1775*) என்றதும் காண்க. "ஆங்கு நின்றார்கள்...பேய் வடிவு" (*1765*)

வேண்டிப்பெற்று, "நற் கணத்தி னொன்றாய நாம்" (அற் - அந் - 86) என்ற நிலையடைந்தமையால், அம்மையார் ஐயனது திருக்கூத்தை நேரே காண்பதும், உடனிருந்து ஆடியும் பாடியும், முழக்கியும் களித்த பேய்க் கணங்களுடன் கூடி வழிபடப் பெற்றதும் கைகூடினர். இப்பதிகத்தினும், மேல்வரும் பதிகத்தினும் பேய்க் கணங்களின் செயலினையே பற்றியும், அவை வாழுமிடமாயும் ஐயன் அருட் கூத்தியற்றும் ஆடரங்காயும் உள்ள சங்காரக் காட்டினைப் பற்றியும் பாடியருளுதல் காண்க. பெண் பேய் தங்கி அலறி உலறு காட்டில் - என்றதனால் கயிலையில் நின்றும் போந்த அம்மையார் ஆலவனங் கண்டு அங்குத் தங்கிக் கூத்துக்காண அலறி உலற, ஐயன் ஆடல்காட்டி யருளினர் என்பது பெறப்படும். சடை எட்டுத்திசையும் வீசுதல் - எல்லாத் திக்குக்களிலும் ஆடல் நிரம்புதல். அங்கங் குளிர்ந்து அனலாடுதல் - அனலாடல் - சங்காரமும், அங்கங் குளிர்ந்து ஆடுதல் - புனருற்பவத்தின் பொருட்டு மேற்கொள்ளும் அருளும் குறித்தன. எங்கள் - தம்மையும் கணங்களையும் ஏனை உலகினையும் உளப்படுத்தியது. அப்பன் - "அப்பா" என்று (1775) இடம் திரு ஆலங்காடே - தலச்சிறப்புப்பற்றித் துதித்தது - (2) காலைநீட்டி - வாங்கி - மசித்து - எழுதி - நக்கு - வெகுண்டு - பார்த்து - துள்ளி - சுளிந்து - என்ற வினையெச்சங்கள் அவிக்க என்ற வினையெச்சத்தின் பகுதியுடன் முடிந்தன. இவ்வினை களுக்குப் பேய்க்கணம் என்ற எழுவாய் தொக்கு நின்றது. மசித்து மையை எழுதி - மசித்தல் - குழைத்தல். அரைத்தல் - மை எழுதல் - "மையினாற் கண்ணெழுதி" (அப். தேவா.) பேய்களின் செயல்கள் விரிக்கப்பட்டன. - (3) வாகை...ஒலிப்ப - வாகை - பாலைக்குரியதோர் பெருமரம். வெண் நெற்று ஒலிப்ப - வாகையின் நெற்றுக்கள் வெண்மை நிறமுடையவை - விரிந்து இலகுவாய்க் கொத்தாய் நின்றிருப்பன. ஒலித்தல் - காற்றில் சல சல என்று ஒலித்தல். "வாகை வன்னெற் றொலிப்ப" (ஞானமிர்தம்). மயங்கிருள் கூர் நடு நாள் - அறிவை மயக்கும் திணிந்த இருளின் செறிவுடைய நடுயாமம். நடு நாள் - நடு இரவு. இஃதருகிய வழக்கு, நள்ளிருள் என்னும் வழக்கும், நாள் தொடக்கத்தை நள்ளிரவு தொடங்கிக் கணிக்கும் முறை வழக்கும் காண்க. கூகை - ஆண்டலை - ஆந்தை - பாட - குதிக்க என்றதனால் நடுநாள் என்பது இரவு என்ற பொருள் கொண்டுரைக்கப்பட்டது. கூகை முதலியன இரவிற் சரிக்கும் இயல்பன; இவை பாலைநிலப் புட்கள். ஆண்டலை - கூகை - ஆந்தை - இனத்தைச் சார்ந்ததோர் வகைப் புள். ஆண் தலை போன்ற வடிவுடைமையாற் பெற்ற பெயர். பாட என்றும், குதித்தோட என்றும் அவ்வளவிற் கூறிய அதனால் நடுநாளை என்பதற்குப் பாலைக்குரிய பொழுதாதல் பற்றி நண்பகல் என்று கொள்ளுதல் பொருந்தும். இங்குக் குறித்தது சங்கார நிலையாதலின் அதனை நடு இரவு என்றும் நடுப்பகல் என்றும் இருவழியும் கூறுதல் இயையும் என்க. **ஈகைபடர் தொடர் - கள்ளி நீழல்** - இண்டு கொடிபோற் படர்வது; அதனைத் தொடர்ந்து கள்ளியும் நிற்பது சுடலையாகிய பாலையினியல்பு. இவை பாலைக்கருப்பொருள்கள். - (4) குண்டில் ஓமக்குழி - ஆழ்ந்து உள்ள ஓமகுண்டம். **குண்டு** - ஆழம். வட்டம் எனினுமாம். **நரி** - பாலைக்குரிய மாக்களுள் ஒன்று. ஓமக்குழிச் சோற்றை நரி தின்ன இதனை முன்னே நாம் கண்டிலமே என்று பேய்கள் கைகொட்டி ஓடுகின்றன என்று கூறியது ஈமங்களின் பொது இயல்பு பற்றியது. **மண்டலம் நின்று** - பிரணவமாகிய வளைவுக்குள் நின்று, **உளாளம் இடுதல்** - வளைந்து சுற்றி வருதல். **வாதித்தல்** - மாறி வருதல். - (5) **கழுது** - பேய். பெண் பேய் என்று பேய் இனத்திற் பால்பகுத்துக் கூறியதற்கேற்ப இங்குப் பிள்ளைப் பேயும் கூறினர். காளி - பாலையின் தெய்வம். பிள்ளைப் பேய் பற்றிக் கூறியதும் ஈமங்களின் பொது இயல்பு. - (6) **அணங்காடுதல்** - வெறியாடுதல். அணங்கு - தெய்வம் - கொண்டாற்

போன்ருடுதல் - தெய்வத்தை முன்னிட்டு ஆடுதல்; **புரட்டி ஆங்கே** - புரட்டியிடும் அவ்விடத்து. புரட்டி என்பது வரை பேய் முதலியவற்றின் செயல்கள். **அட்டமே பாய** - குறுக்காக (725). எட்டுத்திசையும் என்றலுமாம். (7) **கொள்ளிவாய்ப் பேய்** - பேயின் வகை, வாயினில் எரிகொள்ளிபோலப் புகையும் எரியும் உமிழவரும் வடிவுடையது. **அழல் விழி** - அழல்போலச் சிவந்த ஒளி வீசும் கண். **துணங்கை** - கூத்துவகை; **பிணத்தை வாங்கி** என்பது சுடுகாட்டின் பொதுவியல்பு. **வட்டணை** - சுழற்சி. கூத்தின் வகை. **ஓரி** - கிழ நரி; **கதிக்க** - ஆட. - (8) நாடும்......சூழ - பொது இயல்பு. உலக வாழ்வு நிலையாமைக் குறிப்பு. நன்னெறி நாடி நயந்திறந்தவர்களைச் சூழும் பேய்க்கணத்தால் சூழப்பட இறைவர் ஆடுவர் என்பது. **சூழச்சுழ - சூழ** - இரண்டனுள் முன்னையது பணத்தின் மாடே சூழ என்றும், பின்னையது சூழ ஆடும் என்றும் கூட்டியுரைக்க நின்றன. காடும் - கடலும் - மலையும் - மண்ணும் என்பன முறையே முல்லை - நெய்தல் - குறிஞ்சி - மருதம் என்ற நானிலமுங் குறித்தன. விண்ணும் என்றது இறைவர் அண்டமுற நிமிர்ந்தாடும் குறிப்புத் தருவது. **அனல் கையேந்தி ஆடும்** - என்றது சங்காரக் குறிப்பும், **சுழல** என்றது மீளப் புனருற்பவக் குறிப்பும் தருவன. - (9) **துத்தம்......ஓசை** - துத்தம், கைக்கிளை, விளரி, தாரம், உழை, இளி, ஓசை - இவை ஏழிசைகள். தமிழ் இசையியலில் அறியப்படுவன. **பண்** - இசை யமைதி. 221-ன் கீழ் உரைத்தவை பார்க்க. **சச்சரி.....மொந்தை** - இயங்களின் வகை. எல்லாப் பண்களையும், எல்லா இயங்களையும் முழக்கி வாசித்தல் சூழவுள்ள பேய்க் கணங்களின் செயல். **அத்தனை விரவினோடு** - இவ்வகைகள் எல்லாம் பொருந்தியிருக்கும் அத்தன்மையோடு. **அத்தனை** என்பது இவையெல்லாம் பொருந்த வைத்து ஒன்ற ஆடுதல் பிறர்க்கரிது என்ற குறிப்புப்படநின்றது. ஏழிசைகளின் பெயர்களையும் பற்பலவாம் இயங்களின் பெயர்களையும் அடைமொழிகளுமின்றி அடுக்கி யாப்பமைதிக் கொப்பக் கூறிய தமிழ்க் கவிநயம் காண்க. இயங்களுள் நரம்புக்கருவி, தோற்கருவிகளும், ஒருமுகம் இருமுகம் முதலாகவுடையவை முதலியவையும் அடங்கும். - (10) **புத்தி கலங்கி...இட்டசெந்தீ** - இறந்தவர்க்கு உலகோர் செய்யும் ஈமச்சடங்கு. பொது இயல்பின் உலகநிலை பற்றி உரைத்தவாறு. **புத்தி கலங்கி மதிமயங்கி - கடமை செய்து** - என்று கூட்டுக. இறந்தமை குறித்துச் சுற்றம் துயருறுதல் குறித்தது. இவை கடமை செய்யும் அளவுதான் உள்ளதென்பதும், "நீரினின் மூழ்கி நினைப்பொழிந்தாரே" (திருமந்திரம்) என்றபடி பின்னர் மறத்தலியல் பென்பதும் குறிப்பு. **மதிமயங்கி இறந்தவர்** என்று கூட்டிப், புலனைந்தும் பொறி கலங்கி நெறி மயங்கி யறி வழிந்திட் டைமே லுந்தி, யலமந்த போது" (தேவா) என்ற கருத்துக்கொண்டு உரைப்பினுமாம். **புறங்காடு** - ஈமத்தின் புறத்தின் உள்ள தனியிடம். சிறு விறகின்மேல் இடுதலின்முன் இங்கு இறந்தவரை வைத்துக் கடைமுறையாகச் சடங்கு செய்யும் வழக்குப்பற்றிப் **புறங்காட்டிலிட்டுச் சந்தியில் வைத்துக் கடமைசெய்து** என்ருர். **கடமை** - உடலைப்பற்றிக் கடைசியாகச் செய்யும் ஈமச்சடங்கு. **தக்கவர்** - ஈமச்சடங்கு செய்யும் உரிமையுடையார். **கதுவ** - நிறைய. **ஆர்க்க ஆர்க்க** -அடுக்குப் பன்முறையும் நடத்திச் சத்திக்கும் இயல்பு குறித்தது. **அந்தி** - சங்காரம் - (11) **ஒக்கலித்தல்** - களிப்பு மிகுதியால் ஆரவாரித்தல். **பப்பனையிடுதல்** - இசைவகை. **நரி யாழமைப்ப** - நரி கூவுதல் பகண்டை பாடுதலுக்கேற்ப யாழ் வாசித்தல்போல ஒலிக்க. **செடிதலை** - முடிக்கப்படாது செடிபோல விரித்த மயிருடைய தலை. **காரைக்காற் பேய்** - அம்மையார். **சிவகதி சேர்ந்தின்ப மெய்துவர்** - பதிகப் பயன் கூறியபடி. அற்புதத் திருவந்தாதியினும் இறுதிப்பாட்டில் இவ்வாறே தமது

பெயரைப் பொறித்தும் பயன்கூறி யருளியும் முடித்தது காண்க. இம்மரபு அம்மையார் காட்டியருளியபடி பின்னர்த் திருப்பதிகங்களின் வழங்கலாயிற்றுப் போலும்.

இப்பதிகத்தாற் போந்த தொகைப் பொருளாவது :- கயிலேயினின்றும் அம்மையார் தாம் பெற்ற பேய் வடிவுடன் ஆணையின் வழியே திருவாலங்காட்டின வந்தணைகின்ருர்; அங்கு அந்தக் காட்டினையும் அங்கு ஐயன் பேய்க்கணஞ் சூழ்ந்து இசையும் இயமும் முழக்க இலயம்பட ஆடும் கூத்தினையும் காண்கின்ருர்; அந்த இடத்தைப் பற்றி ஐயன் காட்டத் தாம் கண்ட நிலையை உள்ளவாறே உலகறியப் பாடியருளுகின்ருர்; ஐயன் சங்கார காரணனுகிய முதல்வன்; "நற்கணத்தி லொன்ருய" பேய் வடிவுடையராதலின் பேய்க்கணஞ் சூழ ஆடும் நிலையினையே காண்கின்ருர்; ஆடும் இடம் சுடலைக் காடு; அங்கு வாகை - கள்ளி - ஈகை முதலியவை செறிந்தன; அங்கு வாழும் பேய்களுள்ளே தாயும் சேயும் உண்டு; நரிகளும் அங்கு வாழும்; கூகை - ஆந்தை முதலியன பாடும்; இறந்தவரை இட்டுச் சடங்கு செய்து மூட்டிய செந்தீயே அங்கு விளக்காக உதவும்; பேய்க்கணம் பலவாறு கூடியும் ஓடியும் ஆடியும் பாடியும் களிக்கும்; ஏழிசையும் பாடும்; இயங்கள் பலவற்றையும் முழக்கும்; இவ்வாறு வெப்ப மிக்க சுடலையில் நடுநாளையில் அங்கங்குளிர்ந்து அருளுடன் எங்கள் அப்பன் ஆடும்; அவ்விடம் திருவாலங்காடேயாம். மேல்வரும் பதிகத்தும் இவ்வாறே கண்டுகொள்க. இப்பதிகம் **தலம்** பற்றியதும் மேல்வருவது நடம் பற்றியதும் ஆம்.

II திருச்சிற்றம்பலம் **பண் - இந்தளம்**

எட்டி யிலவ மீகை சூரை காரை படர்ந்தெங்குஞ்
சுட்ட சுடலை சூழ்ந்த கள்ளி சேர்ந்த குடர்கௌவப்
பட்ட பிணங்கள் பரந்த காட்டிற் பறைபோல் விழிகட்பேய்
கொட்ட முழவங் கூளி பாடக் **குழக ளுடுமே.** 1

சூடு மதியஞ் சடைமே லுடையார் சுழல்வார் **திருநட்ட**
மாடு மரவ மரையி லார்த்த **வடிக ளருளாலே**
காடு மலிந்த கனல்வா யெயிற்றுக் **காரைக் காற்பேய்தன்**
பாடல் பத்தும் பாடி யாடப் பாவ நாசமே. 11

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- முன் பதிகத்துக் கூறப்பட்ட குறிப்புக்கள் காண்க. ஐயனது "திருக்கூத்துமுன் வணங்கும் பெருங் காதல் எழுந்தோங்க வியப்பெய்திப் பாடினர்" என்று ஆசிரியர் காட்டியருளியதும் காண்க.

பதிகக் குறிப்பு:- (1) எட்டி - இலவம் - ஈகை - சூரை - காரை - கள்ளி - இவை சுடுகாடாகிய பாலையின் கருப்பொருள்களாகிய மரமுஞ் செடிகளும். **குடர் கௌவப்பட்ட பிணங்கள்** - கழுகுகளாற் குடர் கௌவப்பட்ட பிணங்கள். **பறைபோல்** - பரந்து வட்ட வடிவமுடைமை உவமம். **பேய் முழவங்கொட்டக் கூளிபாட** என்க. **கூளி** - பேயின் ஒருவகை. - (2) **நிணம்தான் உருகி** - தசையின் இழுது தீயினல் உருகி. கழுது குடர்

1781. மடுத்தபுனல் வேணியினு "ரம்மை"யென மதுரமொழி
கொடுத்தருளப் பெற்ருரைக், குலவியதாண் டவத்திலவர்
எடுத்தருளுஞ் சேவடிக்கீ ழென்றுமிருக் கின்ருரை
யடுத்தபெருஞ் சீர்பரவ லாரளவா யினதம்மா? 65

கௌவப்படுதல் (1), நிணம் உருகி நிலத்துப்பாய்தல் (2), புட்கள் பொதுத்த புலாலுடைமை (3), என்றிவ்வாறு வருவன அப்பிணங்களைப் பேய்கள் மாந்தும் தருணங் குறித்தன. இவ்வாறன்றி உள்ள முழுப் பிணங்களைப் பேய் பற்றப் பின்வாங்குவன என்பது "செத்த பிணத்தைத் தெளியா தொருபேய்...கடக்கப் பாய்ந்து போய்" (4) என்பதனுலும் அறிக, **அணங்கு** - அணங்காடும் (3) **பொதுத்த** - கொத்தித் தின்னுதலால் பொத்தல் செய்த. **ஆந்தை - கூகை - ஊமன்** - பாலையின் கருப்பொருள்களாகிய புள் வகைகள். கதித்து - பெருங் குரலால் கூவ. - (4) செத்த பிணம் - இயற்கை யடைமொழி - செத்தாரது பிணம் என்றலுமாம். தெளியாது - செத்ததென்று தெளியாது. **பத்தல் வயிறு** - ஒட்டி உலர்ந்து உள் வற்றிய வயிறு. - (5) **முள்ளி** - முள் மரம் - வேல் முதலியன. **பியல்** - சிறுபுறம். - (6) **தாளிப்பனை** - நீண்டு அகலமுடைய இலைகளையுடைய பனை வகை. கூளி - பேய் வகை. -(7) **நொந்தி** - கிளறி - புழுதிபட்டு, **தடவி** - அரித்துத் தேடி. **புழுக்கு** - சோறு - உணவு. **சிரமம்** - துன்பம். **முறைமை** - தாளம் முதலிய ஒற்றுமை. இலயம் -(8) **வேய்** - மூங்கில் வகை. திணை மயக்கத்தினுற் பாலையிற் காண வருவது. **அணங்கு** - பிணங்கி ஆடும். **மாயன்** - மாயையின் முதல்வன் சிவன். - (9) **கடுவன்** - பெண் குரங்கு, மூங்கிலைப்போலத் திணைமயக்கத்தினுல் பாலைக்கு வந்த மாக்களின் வகை. **கழையும்** (மூங்கிலும்) உடன் கூறியது காண்க. கழுகு - பாலைப் புள். பிணங்களைக் கழுகு முன்னும், பேய் பின்னுமாய் உண்பன என்று குறிக்க அவ்வரிசையில் வைத்து எண் உம்மையும் தந்தோதினுர். - (10) பேய்களின் பல வடிவங்களும் வகைகளும் குறித்தார். - (11) **அருளாலே பாடல்** - இத்திருப்பாடல்கள் திருவருளே துணையாக எழுந்தன என்பது. **குறிப்பு** - நாட்டுச் சுடலை யியல்பு காட்டி நாதன் ஆடும் சங்காரப் பெருஞ்சுடலையினை நயந்தபடி என்க. "தாதையா ரெதிர்தொழுவா, ரவர்சார்வு கண்டருளித் திருத்தோணி யமர்ந்தருளிப், பவபாச மறுத்தவர்தம் பாதங்கணிணைவுற்ருர்" (திருஞான - புரா- 879) என்று கருத்துக் காண்க.

1781. (இ-ள்.) மடுத்த புனல்......பெற்ருரை - கங்கை வெள்ளத்தைத் தங்க வைத்த சடையினையுடைய சிவபெருமான் "அம்மையே!" என்று இனிய மொழியினைக் கொடுத்தருளும் பேறுபெற்றவரை; குலவிய..... இருக்கின்ருரை - அண்டமுற விளங்கிய அவரது திருக்கூத்தில் அவரது எடுத்தருளுகின்ற சேவடியின் கீழே என்றும் நீங்காது எழுந்தருளியிருக்கப் பெற்றவரை; அடுத்த......ஆர் அளவாயினது? - பொருந்திய பெருஞ் சிறப்பினை எடுத்துப் போற்றும் செயல் யாவருடைய அளவுள்ளே படுவது? ஒருவரளவிலும் படாது; அம்மா - ஈது அற்புதம்;

(வி-ரை.) புனல் மடுத்த - என்க. **மடுத்தல்** - உள் அடக்குதல். **புனல்** ஈண்டு இட நோக்கிக் கங்கையை உணர்த்திற்று. மடுத்தலாவது பெரு வெள்ளத்தைச் சிறு பனிபோலாகச் செலுத்தல்.

அம்மை என மதுரமொழி கொடுத்தருளப் பெற்றமை - முன் 1774-ல் உரைக்கப்பட்டது.

குலவிய தாண்டவம் - குலவுதல் ஈண்டு - இடநோக்கி அண்டமுற நிமிர்ந்த நிலை குறித்தது.

எடுத்தருளும் சேவடி - உயிர்களை ஆணவச் சேற்றிலிருந்தும் மேல் எடுத்துத் தன் கீழ் வைத்து இன்பமருளும் திருவடி. "எடுத்த பொற்பாதம்" (தேவா); "எடுக்கு மாக்கதை" (3) முதலியவை காண்க. ஊன்றிய திருவடியின் வேறாய் எடுத்த திருவடி என்றலுமாம். "முத்தி, நான்ற மலர்ப்பதத்தே நாடு" என்றபடி அருளைத் தருவது என்பார் அருளும் என்றார். இங்கு அம்மையாருக்கு அந்த மீளா நிலை தந்த திருவடி என்பது குறிப்பு. "சேவடிக்கீழ் என்றுமிருக் கின்றாரை" என்றதும் காண்க. "என்னை யிப்பவத்திற் சேராவகை யெடுத்து" (சித்தி).

சேவடிக்கீழ் என்று மிருக்கின்றார் - இந்நிலை திருவடிக்கீழ் அடைந்திருக்கும் எல்லாருக்கும் ஒப்ப நிகழ்வதாம்; எனினும். "ஆடும்போது உன் அடியின்கீழ் இருத்தல் வேண்டும்" என்று வேண்டிப் பெற்ற சிறப்புடையது அம்மையார் பெற்ற நிலையென்பது தோன்ற விதந்து கூறினார். "பூமல ரடிக்கீழ்ப் புராண பூதங்கள் பொறுப்பரென் புன்சொலின் பொருளே" என்ற திருவிசைப்பாவும் ஈண்டுக் கருதத்தக்கது.

அடுத்தசீர் - பெருஞ்சீர் என்று தனித்தனி கூட்டி, அம்மை என மதுரமொழி கொடுத்தருளப் பெற்றதனை (இவரை வந்து) **அடுத்தசீர்** என்றும், சேவடிக்கீழ் என்று மிருக்கின்றமை **பெருஞ்சீர்** என்றும் நிரனிரையாகக் கூட்டுக. **அடுத்தல்** - தாம் வேண்டாது தானே வந்து பொருந்துதல். **பெருமை** - கேட்டது கேட்டவாறே பெறுதல்.

ஆர் அளவாயினது? - வினா இன்மை குறித்தது. நம்மளவின் அமையாதது மட்டுமன்று; எவர்க்கும் அமையாதது - அளவுபடாது; என்று முடித்துக் காட்டியவாறு. "எவர்க்கு முடியாதால்" என்று இசை ஞானியாரையும், "செப்புவதி யாமென்னறிந்து" என்று மங்கையர்க்கரசியாரையும் கூறுவன ஈண்டுச் சிந்திக்கத் தக்கன.

என்றும் இருக்கின்றார் - என்பது அம்மையாரது பெருஞ் சீராகும் என்பதனை மேலும் வலியுறுத்தவார், அடிக்கீழ் இருத்தல் மட்டுமன்று - ஆடும்போது கீதம் முன் பாடிக் கொண்டிருத்தலுமாம் என்று மேல்வரும் பாட்டில் விதந்துரைத்தலும் காண்க. 65

1782. (இ-ள்.) ஆதியோடு......போற்றி - ஆதியோடு அந்தமும் இல்லாத இறைவன் அருட்கூத்து ஆடும்போது கீதத்தை முன்பாடும் அம்மையாரது ஒளி கிளரும்மலர் போன்ற பாதங்களைத் துதித்துக்கொண்டு (அத்துணையானே); சீதநீர்......புகலலுற்றேன் - குளிர்ந்த நீர்வளமுடைய வயல்கள் சூழ்ந்த திங்களூரில் வாழ்ந்த அப்பூதியாராகும் ஞானப் பெரு முனிவர் செய்த திருத்தொண்டினைச் சொல்லத் தொடங்குகின்றேன்.

(வி-ரை.) இப்பாட்டான் ஆசிரியர், இதுவரை கூறிப்போந்த சரிதத்தினை முடித்துக் காட்டி, இனி, மேற் கூறப்புகும் சரிதத்துக்குத் தோற்றுவாய் செய்கின்றனர்.

வேறு

1782. ஆதியோ டந்த மில்லா னருணட மாடும் போது
கீதமுன் பாடு "மம்மை" கிளரொளி மலர்த்தாள் போற்றிச்
சீதநீர் வயல்சூழ் திங்க ளூரினப் பூதி யாராம்
போதமா முனிவர் செய்த திருத்தொண்டு புகல லுற்றேன். 66

ஆதியோடு.........பாடும் - இறுதியாய் முடிந்த முடிபாக வைத்து அம்மையார் கேட்டுப் பெற்ற வரமாகலானும், இஃதொன்றே ஏனைய வரங்களை உள்ளடக்கி நிற்குமாகலானும், இஃதொன்றினைக் கூறுந்துணையே அதனைப் பாடும் முறையிற் பயப்பித்த ஏனைச் சரித வரலாறுகள் எல்லாம் நினைக்க வருமாகலானும், இது பற்றியே சரித முழுதும் முடித்துக் காட்டினுர், இஃதொன்றுனே சரித முழுமையும் நினைக்க வருமாறு; **ஐயன் நடமாடும் போது கீதம் முன்பாடுதல் சிவ பூதங்களாகிய பேய்க்கணங்களுக்கே இயைவது**; ஆதலின் அம்மை அவற்றுள் ஒன்றுகிய பேய் வடிவம் பெற்றனர்; அதனை வேண்டிப் பெற்றனர்; மாங்கனி இறைவன் தரப்பெற்றதனுல் கணவன் தெய்வமென்று கருதித் தொடர்பு விட்டானுக, அம்மையார் உலக நிலையின் முன்னைய அவ்வுடம்பு விட்டு இவ்வடிவம் வேண்டலாயினர்; கணவன் வைக்க என அளித்த மாங்கனிகள் இரண்டினில் ஒன்றனை அடியார்க்கு இட்டு அமுதூட்டினபின் அதனையும் அவன் கேட்க இது நிகழலாயிற்று; அம்மையார் பிறந்து மொழிபயின்றபின்னெல்லாம் அடியாரிடத்தும் ஐயனிடத்தும் காதல் சிறந்து ஒழுகிய நலத்தால் ஒருநாள் வந்த அடியார்க்கு அமுது ஊட்டத் திருவமுது மட்டும் கைகூடக், கறியமுது அங்கு உதவாதபடியால், மாங்கனிகள் இரண்டினில் ஒன்றை அம்மையார் படைக்க நேர்ந்தது என்றிவ்வாறு கண்டு கொள்க.

கீதம் - இறைவன் புகழோடு கூட்டிப் பாடும் இசைப் பாட்டு. "இறைவனது தன்மை பாடிக், கருந்தடங்கண் ணூர்கழல்பந் தம்மானைப் பாட்டயருங் கழுமலமே" (தேவா). இறைவன் புகழுடன் கூடாத வெற்றிசையில் இந்நாள் மாக்கள் பெரு மயக்கமுற்றுக் கழிந்து கேடுறுதல் வருந்தத் தக்கதொன்றும். வெற்றிசை வறிய புலனின்பங்களுள் ஒன்றுய்க்கழிந்து, நன்மை தாராமை மாத்திரையேயன்றிப், புலனின்பத்துக்கடிமைப் படுத்துதலின், தீமையும் பயப்பதாகலின் பெரியோர் இதனை ஒதுக்குவர். "பூதப்படையாளி யெழுத்தஞ்சும் வழுத்தி" (947); "சடை முடியா ரஞ்செழுத்தி னிசை பெருக" (950); திருவாள னெழுத்தஞ்சுந் தூய விசைக்கிளை கொள்ளும் (551) "குழலுதைத் தஞ்செழுத்தாற் றமைப்பரவும் இசை விரும்புங் கூத்தனுர்" (964) என்று ஆனுயர் புராணத்துட் கூறியனவும், ஆண்டுரைத்தனவும் நினைவு கூர்க. "......பேயாரிம் மூவர் கற்குமிய லிசைவல்லோர்" (புராண வரலாறு - 36) என்றபடி அம்மையார் இயல் இசை என்ற இருதிறத் தமிழும் வல்லாராதலின் இங்குக் **கீதம்** என்பது இறைவன் புகழமையப்பாடும் இசை என்பதாம்.

முன்பாடும் - இறைவர் திருமுன்பு என்றும், பிறருக்கெல்லாம் முன்னே என்றும் உரைக்க நின்றது.

ஒளிகிளர் என்க. ஒளியாவது ஞானவொளி. **போற்றி** - (அத்துணைகொண்டு) **புகலலுற்றேன்** என்று முடிக்க. அத்துணை கொண்டு என்பது இசையெச்சம்.

அப்பூதியாராம் போதமாமுனிவர் - ஆம் என்ற ஆக்கச் சொல் உண்மை குறித்து நின்றது; "**நிர்க்குணனுய் நின்மலனுய் நித்தியா னந்தனுய்**" (போதம் - 9. சூ. உதாரண வெண்பா 3) என்புழிப்போல.

போத மா முனிவர் - ஞானப் பெருமுனிவர். "தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்தவிட், டன்னிய மின்மையி னரன்கழல் செலுமே" (போதம் - 8 சூ) என்றபடி, குருவை உபாசித்துப்பெற்ற முதல்வனது திருவடி ஞானத்தாலே பதியை நாடிக் கண்டு பாசம் நீங்கப்பெற்றவராதலின் ஞானப்பெருமுனிவர் எனப்பட்டார். பாச நீங்கப்பெற்றவரென்பது, விடத்தினுல் மகன் வீந்தவழி மனம் துளங்குதலின்றித் திருத்தொண்டின் முயன்றும், மகன் உயிர் பெற்றெழுந்த வழி மகிழ்தலின்றித் தொண்டினுக்குச் சிறிது இடையூறு செய்தானென்று வழி நொந்தும், **வேருெரு பேர்** எனக் கேட்டபோது சிந்தை முனிவு கொண்டும் இவ்வாறு வரும் வரலாறுகளா லறியப்படும். மனைவி மக்களோடு இல்லறத்தில் வாழ்ந்தாராயினும் அப்பூதியார், அப்பற்றில்லாது மனத்தின்கண் ஞானத்துறவு பூண்ட **பெருமுனிவர்** என்றும், அக்கண்கொண்டு அவரது சரிதம் காணப் புகுதல் வேண்டுமென்றும் உலகரை வழிப்படுத்தியது ஆசிரியரது தெய்வக்கவிநலமாம். **முனிவர்** என்றலே அமைவுடைத்தாயினும், **போதம்** என்றது "தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்தப் பெற்ற" போதத்தினை உடையவர் என்றும், மா என்றது அதனில் உறைப்புப் பெற்று நின்ற சிறப்புடையவர் என்றும் விளக்கியவாறு.

செய்த திருத்தொண்டு புகலலுற்றேன் - அவரது பண்பும் தொண்டின் வரலாறும் ஒருவகையால் திருநாவுக்கரசு நாயனுர் புராணத்தினுள் (1465 - 1477) பாடினும், அந்நாயனுர் செய்த அளவே அதனுள் விரித்தும் இவர் செய்த அளவு சுருக்கியும் பேசப்பட்டன என்பதும், இனி, ஈண்டு, இந்நாயனுர் அதனிற் **செய்த** திருத்தொண்டு விரித்துப் பேசப்படும் என்பதும் கருத்தாகக் கொள்க. **அப்பூதியாராம் போதமாமுனிவர் செய்த** என்று உடம்பொடு புணர்த்தி ஓதியதும் அக்கருத்தைக் குறிப்பாலுணர்த்துவதுடன், முனிவராதலிற் செய்த எனக் காரணக் குறிப்பும் சரிதத் தோற்றுவாயாகும் குறிப்பும்பட நின்றது.

முன்பரவும் - என்பதும் பாடம். 66

....

சரிதச் சுருக்கம்:- காரைக்கால் என்பது கடல் துறைமுகப் பட்டினம். கடலலைகள் சங்குகளைச் சுமந்து கரையேறி அவற்றைக் கழிகளில் இட, அதனுல் வளம் பெருக நிகழ்வ தவ்வூர். அவ்வூரில் **வணிகர்** குலத்தலைவர் **தனதத்தனுர்** என்பவர். அவர் செய்த தவத்தினுல் அவரிடமாகத் திருமடந்தை வந்து அவரித்தாள் என்று சொல்லும்படியாகப் **புனிதவதியம்மையார்** வந்தவதரித்தனர். தளர்நடைப் பருவத்திலேயே சிவபெருமானது அடிமைப்பாங்கு பெறும் காதல் சிறக்கும் குதலை மொழிகளையே பயின்றனர்; சிவனிடத்தன்புடன் அழகின் கொழுந்து வளர்வதுபோல வளர்கின்றுராய்ச்; சிறுமியருடன் வண்ட லாட்டயரும் போதெல்லாம் சிவபெருமானைப் பற்றிய மொழிகளையே பயின்று வளர்ந்து பெண்டன்மை யறியும் பருவமுற்றனர்.

இவர்களது மரபுக்கேற்கும் தொல்குலத்தில் வந்த நாகப்பட்டினத்து நிதிபதி யென்பாருடைய மைந்தன் **பரமதத்த**னுக்கு மணம் பேசிக் கலியாணம் செய்தனர். தம் குடிக்கு ஒரு புதல்வியாதலினுல் புனிதவதியாரைக் கணவனோடு நாகப்பட்டினத்துக்கு போகாமல் காரைக்காலிலேயே வாழ்ந்திருக்கும்படி அழகிய மாடம் ஒன்றைப் பக்கத்தில் அமைத்து அளவற்ற நிதிகளையும் கொடுத்துத் தனதத்தன் அமைவு செய்தனன். பரமதத்தனும் அவ்வாறே பெருங்காதல் சிறக்க வாழ்ந்து, மனைவளம் பெருக்கி, வாணிகத்துறையில் மேம்பட்டனன். அவனது இல்வாழ்க்கையின் அருந்துணைவியாராகிய புனிதவதியாரும் சிவபெருமானது திருவடியின் கீழே அன்பு பெருங்காதலாக விளையும்படி ஒழுகி, அதனுடனே மனையறத்தின் பண்பும் வழாது பயின்றுவந்தனர்; சிவனடியார்கள் வந்தணைந்தால் நல்ல திருவமுது அளித்தும், பொன்னும் மணியும் துகிலும் முதலியவற்றையும் தமது அன்பு மிகுதியினால் அவ்வடியவர் தகுதியின்படி வேண்டுவனவற்றைக் கொடுத்தும், சிவபெருமான் திருவடிக்கீழே உணர்வு மிகும் வண்ணம் ஒழுகிவந்தனர்.

இவ்வாறு வாழுநாளில் அங்குத், தொழில் நிமித்தம் வந்தணைந்த சிலர் பரமதத்தனுக்கு ஓரிரண்டு மாங்கனிகள் கொடுத்தனர். அவன் அவற்றை முன் வாங்கி, அவர்கள் வேண்டியவற்றை முடித்து, அக்கனிகளை வீட்டிற் கொடுக்கச் சொல்லினான். அவ்வாறு கணவன் வரவிட்ட இரண்டு மாங்கனிகளையும் புனிதவதியார் வீட்டில் வாங்கிவைத்த பின், சிவனடியார் ஒருவர் மிகுந்த பசியுடையவராகி மனையின்கண் வந்து புகுந்தனர். அவரது நிலையினைக் கண்டு "இவ்வடியார் பசியைத் தீர்ப்பேன்" என்று அம்மையார் அமுதூட்டத் தொடங்கினர். அதுபோழ்து கறியமுது உதவாது திருவமுது மட்டும் கைகூட, இப்போது அடியவரைப் பசிதீர உண்பிப்பதன் மேல் பேறு வேறு இல்லை என்று துணிந்து, பரிகலத்தில் திருவமுது படைத்துக், கணவன் வைக்கச் சொல்லி அனுப்பிய அந்த மாங்கனிகள் இரண்டினில் ஒன்றைக் கொண்டு வந்து படைத்து, மகிழ்வோடும் அமுது செய்வித்தனர். மூப்பின் தளர்ச்சியினாலும் முதிர்ந்து முடுகிய பசிநோயினாலும் அயர்ந்தணைந்த அத்திருத்தொண்டர், அம்மையார் அன்புடன் அளித்த அத்திருவமுதினை மாங்கனியோடு உண்டு அவரது செயலினை உவந்து சென்றனர். அதன்பின் பெரும்பகலில் வணிகனும் மனையில் வந்து நீராடி உண்ணப்புக, அம்மையார் கடப்பாட்டின் ஊட்டுவாராகி, அடிசிலும் கறிகளும் உரிய முறையாற் படைத்து, அவன் வைப்பித்தவற்றுள் எஞ்சியிருந்த மாங்கனியினையும் பரிகலத்தில் இட்டனர். அவ்வாறு மனைவியார் படைத்த மதுரமிக்க கனியினை உண்ட சுவை யாராமையால் வணிகன், "இதுபோன்ற பழம் இன்னுமொன்றுளது அதனையும் இடுக" என்று கேட்க, அம்மையார், அதனைக் கொண்டுவர அணைவார் போல அவ்விடத்தினின்று நீங்கிச் சென்று, வேறு செயல் காணாது மெய்ம்மறந்து, உற்றவிடத்து உதவும் சிவபெருமான் திருவடிகளைத் தம் கையால் பொருந்த உணர்ந்தனர். உடனே அவரது கையினுள் அதிமதுரக்கனி ஒன்று வந்திருந்தது; அதனைக் கொடுவந்து மகிழ்ந்து கலத்திட்டனர்; அதனை வணிகன் உண்ணவே அதன் சுவை அமுதினும் மேற்பட உளதாயிட, "இது முன் தரும் மாங்கனியன்று மூவுலகினும் பெறுதற்கரிது இதனைப் பெற்றது வேறெங்கு?" என்று அம்மையாரைக் கேட்டனன்; அம்மையார், இறைவர் தமக்குச் செய்த பேரருளின் திறம் பிறர் அறியும்படி எடுத்துச்

சொல்லத்தக்கதன்று என்று அதனை உரை செய்யவும் மாட்டாது - கற்பின் நெறியினால் கணவன் கேட்டதற்கு உண்மை உரையாமை மெய்வழியன்று என்று அதனை உரை செய்யாதுவிடவு மாட்டாது - கலங்கி நடுங்கி, எவ்வாறாயினும் செய்தபடி சொல்லுவதே கடன் என்னும் சீலத்தினாலே, இறைவரை வணங்கிக்கொண்டு, கணவனுக்குக் கனி புகுந்தபடியினை விரித்துக் கூறினார். அதுகேட்ட கணவன் அதன் உண்மையினைத் தெளியாதவனாய், இது சிவன் திருவருளாயின், இன்னமும் ஒரு கனி அவனருளால் அழைத்து அளிப்பாய் என்றனன். அம்மையார் அங்கு நின்றும் அகன்ற இறைவரைப் பரவி "ஈங்கு இதனை அருள் செய்யாவிடில் என் உரை பொய்யாகும்" என்று வேண்ட. அவரருளாலே ஒரு மாங்கனி வந்து எய்திற்று; அதனைக் கணவன் கையிற் கொடுத்தனர்; அவன் அதனை அதிசயித்து வாங்கினான். ஆனால் வணிகன் அவ்வாறு தன் கையிற் புக்க மாங்கனியைப் பின்னைக் காணாதபடிஅது மறைந்து விட்டது. அவன் பயந்து, மனந்தடுமாறி, அம்மையாரை ஒரு தெய்வம் என்று கருதி, அவரைவிட்டு நீங்கிவிடுதல் வேண்டுமென்று மனத்துள் துணிந்து கொண்டான். ஆனல் அதனை எவர்க்கும் சொல்லாது தொடர்வின்றி ஒழுகிவந்தனன்.

அம்மையாரை விட்டுச் செல்வதே எண்ணமாக முயற்சி செய்வானுய், அவ்வணிகன் "நான் இனிக் கடல்மீது கப்பலிற்சென்று அயல்நாட்டில் வாணிகம் செய்து நெடுநிதி கொணர்வேன்" என்று சொல்லக், கிளைஞர்கள் அவ்வாறே மரக்கலம் சமைப்பித்தனர். அதற்கு வேண்டிய கம்மியர்களையுமுடனே கொண்டு, தான்செல்லும் அயற்புலங்களில் விரும்பும் பண்டங்களை நிறைய ஏற்றி, நல்ல நாளில் கடற் கடவுளைப் போற்றிக், கப்பல் ஏறிச் சென்று, தான் கருதிய தேயத்தில் சேர்ந்து, அங்கு வாணிபத்துறையில் பெரும் பொருள் ஈட்டி, மீண்டும் அந்தக் கப்பலிலேறிப் பாண்டிநாட்டில் *ஓர் பட்டினத்தைச் சேர்ந்தனன். அங்குத் தான் கொணர்ந்த பொருள்களை யெல்லாம் ஒருவழிப்படுத்திப் பெருகும்படி சேர்த்து, அவ்வூரில் ஒரு வணிகனது மகளை மணஞ்செய்து கொண்டனன்; முன்னை மனைவியாராகிய அம்மையாரிடத்துத் தான் செய்த வஞ்சனை வெளித்தோற்ருத வண்ணம் மனத்துள்ளே மறைத்துவைத்து, வெளிக்காட்சிக்கு முகமலர்ந்து ஒழுகினுன்; இவ்வாறு மிகுந்த செல்வம்பெருக வாழுநாளில் ஒரு பெண் மகவைப் பெற்றனன்; தனது முன்னை மனைவியாரைத் தான் தொழும் குலதெய்வமென்றே கொண்டு அவர் பெயரையே அம்மகவுக்குப் பேர் இட்டனன்.

இவன் இவ்வாறு இங்குத் தங்கினுகை, இப்பால், காரைக்காலில் அம்மையார் கற்பு நிலையினேடு மனையில் தங்கி அறம்புரிந்து வைகினர். அந்நாளில் வணிகன் பாண்டி நாட்டுப் பட்டினத்தில் பெருஞ்செல்வஞ் செய்தமர்ந்த செய்தியை அம்மையாரின் கிளைஞர் கேள்வியுற்றுத், தம் உற்ற கிளைஞரை அனுப்ப அச் செய்தியின் உண்மையினை அறிந்துகொண்டு, அவ்வணிகனிருந்த இடத்தில் அம்மையாரைக் கொண்டுபோய் விடுவதே கருமம் என்று துணிந்தனர். அவ்வாறே சிவிகையில் அவரை ஏற்றித் திரையான் மூடித், தோழியரும் சுற்றத்தாருமாகச் சில நாள் நடந்து கடந்து போய், அந்தப் பட்டினத்து மருங்கு

*இது பொருநையாறு கடலொடு கலக்குமிடத்தில் உள்ள கனகலம் என்ற ஊர் என்று வடமொழிப் பிரமாண்ட புராணம், பூர்வ பாகம் 12-ம் அத்தியாயம் கூறுமென்ப.

சார்ந்து, மனைவியாரைக் கொண்டுவந்தணைந்த தன்மையை அக்கணவனுக்கு முன் சொல்லிவிடுத்தனர். அதனைக் கேட்டலும் வணிகன் பயங்கொண்டு, பின்னர் மணஞ்செய்த மனைவியையும் பெற்ற மகவையும் உடன்கொண்டு வந்து, அங்கு மானிளம் பிணைபோல் நின்ற அந்த மனைவியார் அடியில் தாழ்ந்து, "யான் உமது அருளினால் வாழ்வேன்; அப்பான்மை பற்றி இவ்விளங் குழவிக்கு உமது நாம மிட்டுள்ளேன்" என்று முன்பு பணிந்து வீழ்ந்தான். கணவன் வணங்கக் கண்ட அம்மையார் அச்சமோடு சுற்றத்தார்பால் ஒதுங்கி நிற்க, அவர்கள் வெள்கி, அவனை நோக்கி, "உன் மனைவியை நீ வணங்குவதென்னை?" என்றனர். அவன், "இவர் மானிடம் அல்லர்; நற்பெருந் தெய்வமே யாவர்; அதை நான் அறிந்து நீங்கிய பின் பெற்ற இம்மகவுக்கு அவர் பெயரை இட்டுள்ளேன்; ஆதலாலே அவரை அடிவணங்கினேன்; நீங்களும் பணிமின்கள்" என்று சொன்னான். "சுற்றத்தாரும் இதுவென் கொல்?" என்று நின்றனர்.

வணிகன் சொன்ன மாற்றம் கேட்டு அம்மையார், இறைவன் திருவடியைத் துதித்துச், சிந்தை ஒன்றிய வுணர்வுகொண்டு, "இங்கு இவன் குறித்த கொள்கை இது; இனி, இவன் பொருட்டு இதுவரை தாங்கிநின்ற அழகு தங்குதற்கிடனாகிய தசைகளின் சுமையை இங்குக் கழித்து, உம்மிடம் அங்கு உள்ள பூத கணங்கள் போற்றும் பேய் வடிவம் அடியேனுக்குப் பாங்குபெற அருளுதல் வேண்டும்" என்று பரமரைப் போற்றி நின்றனர். அப்பொழுதே இறைவருடைய திருவருளினாலே, வேண்டியவாறே பெறுவாராகி, உடம்பில் அழகு இடமாகப் பொருந்திய ஊனை எல்லாம் உதறிவிட்டு எலும்பு சேர்ந்த உடம்பேயாக, விண்ணும் மண்ணும் போற்றும் பேய்க் கண வடிவமாயினார். மலர்மழை எங்கும் பொழிந்தது; தேவ துந்துபிகள் முழங்கின; தேவரும் முனிவரும் ஆர்த்தனர்; பூதகணங்கள் குணலையிட்டாடின; சுற்றத்தார்கள் தொழுதஞ்சி அகன்று போயினர்.

அப்பொழுது உண்டான ஒருமை ஞானத்தினால் இறைவனைப் பாடி, அம்மையார் "திருவடி போற்றும் நற்கணத்தினி லொன்றானேன் நான்" என்ற கருத்துடன் அற்புதத் திருவந்தாதி பாடியருளினர்; இறைவரது சீர்ப்பாடுகளை ஆய்ந்த திருவிரட்டை மணி மாலையினையும் அருளிச்செய்து, ஞானப் பேருணர்வு பொங்கத் திருவருள் கூர்தலால் திருக்கயிலையை வழிபடும் வழியால் வடதிசை நோக்கிச் செல்வாராயினர்.

அவரைக் கண்டவர்கள் வியப்புற்று அஞ்சி அவ்விடத்தைவிட்டு ஓடுபவர்களாய் "பேய்! பேய்!" என்று தாந்தாம் கண்ட அக்கோலத்தின் தன்மையை உள்ளவாறே கூறுவதனைக் கேட்ட அம்மையார், "இறைவர் என்னை அறிவாராயின், அதுவே சாலும்; அறியா நிலையின் மாக்களுக்கு நான் எவ்வுருவாகக் காணப்பட்டாலென்னை?" என்று செல்வாராயினர். வடதிசைத் தேயங்களை யெல்லாம் மனவேகத்தினும் மிக்க வேகத்தாற் சென்று திருக்கயிலையின் அருகு அணைந்தனர்; அங்குக் காலினாற் செல்லுதலைத் தவிர்ந்து. தலையினால் நடந்து, மலை மீதேறி, மகிழ்ச்சிமீதூரச் சென்றனர். அப்போது இமயவல்லியாரது திருநோக்கு இவர்மேற் பதிந்தது. அம்பிகை அதிசயித்து இறைவரை நோக்கித் "தலையினால் நடந்து இங்கே ஏறிவருகின்ற எலும்புடம்பின் அன்பு என்னே?" என்று வினவ, இறைவர்

"வருகின்ற இவள் நம்மைப் பேணும் அம்மையே யாவள்; இந்தப் பெருமைசேர் வடிவத்தினையும் வேண்டிப் பெற்றுக் கொண்டனள்" என்றருளினர். அப்போது அம்மையாரும் அருகு வந்தணைய, "**அம்மையே!**" என்ற ஒரு மொழியினை உலகமெல்லாமுய்ய இறைவர் அருளிச் செய்தனர். அதுகேட்டு அம்மையார் "அப்பா!" என்று அலறி, அவருடைய திருவடிகளில் வீழ்ந்து எழுந்து நின்றனர். இறைவர் "இங்கு நம்மிடத்து வேண்டும் வரம் யாது?" என்று கேட்க, "என்றும் மாருத இன்ப அன்புவேண்டும்; பிறவாமை வேண்டும்; அன்றி மீண்டும் பிறப்பு உளதாயின் உன்னை என்றும் மறவாமை வேண்டும்; இன்னும்; நீ ஆடுகின்றபோது நான் மகிழ்ந்து பாடிக்கொண்டு உன் திருவடியின் கீழே இருத்தலும் வேண்டும்" என்றனர். இறைவர் அதனைக் கூடும்படி அருள் செய்வாராகித், "தென்றிசையிலே நீடும் வாழ்வினைத் தரும் பழையனூர்த் திருவாலங்காட்டில் நாம் ஆடும் பெரு நடனத்தை நீ கண்டு ஆனந்தத்துடன் எப்போதும் நம்மைப் பாடிக்கொண் டிருப்பாயாக" என்றருளிச் செய்தனர். அம்மையாரும் இறைவரை வணங்கிக் கயிலையினின்றும் போந்து பேரன்போடும் திருவாலங்காட்டினைத் தலையினுல் நடந்து அப்போதே சேர்ந்தனர்.

அங்கு அண்டமுற நிமிர்ந்தாடுகின்ற ஐயனது பெருங் கோலத்தினைக் காணும் பொழுது "கொங்கை திரங்கி" என்று தொடங்கி மூத்த திருப்பதிகத்தினை அத்திருத் தலத்தினைச் சார்ந்து திருக்கூத்தைப் பாடியருளிப் போற்றி, அங்கு எழுந்தருளினர். அந்நாளில் "எட்டி யிலவம்" என்னும் பதிகத்தினைக் "குழகன் ஆடும்" என்ற கருத்துடன் திருநடனம் பற்றிப் பாடியருளினர். இவ்வாறு ஐயனது எடுத்தபாத நிழலின் அம்மையார் என்றுமிருக்கும் பேறு பெற்றனர்.

....

கற்பனை:- 1. தருமத்தின் வழி நின்று வாய்மையில் ஊனமில்லாத சிறப்புப் பெருவணிகரது குடிகளி னியல்பு.

2. வணிகர் வாழும் கடற்கரைப் பட்டினங்களில் கடலலைகள் சுமந்து கரைக்கேற்றக், கழிகளில் தங்கும் சங்குகளினால் வளம் பெருகும் வகையால் வாணிகத்தினியல்பைக் கடலலைகள் காட்டும்.

3. பெறற்கரிய பெண்மகப் பெறுதல் முன்னைத் தவத்தா லாவதொன்று.

4. தளர்நடைப் பருவத்தே அடிமைப் பண்பிற் பழகிவரும் மொழி பயிலுதலும், மொழி பயின்றபின் எல்லாம் வண்டலாட்டயரும் பருவத்தேயும் இறைவர்பால் காதல் சிறந்த திருவார்த்தை பயில்வதும் முன்னைத் தவப் பேற்றாலாவது.

5. ஒருகுடிக் கொருபுதல்வியா யமைந்தபோது கலியாணம் முடிந்தபின் அப்பெண் பிறந்த நகரைவிட்டு மணமகனது நகருக்குச் செல்லாது பெற்றோர்களிருக்கும் நகரில் தனம் பெருகக் கொடுத்து வேறு குடிவாழ்க்கையாக வாழ வைப்பதும் வணிகர்பால் முந்தையோரால் நிகழ்ந்த ஒரு வழக்கு.

6. மனையறத்தினின்றபடி வளம் பெருக்கி இல்லினை நீங்கி வெளிநாடு செல்லாது செய்யப்படுவதும்; கப்பலோட்டிக் கடல்மீது வேற்று நாடு சென்று செய்யப்படுவதும் என வாணிபத்துறை பண்டை நாளிலும் இருவகையாயியன்றது.

7. மனை அறத்தில் வழா தொழுகும் மாதர்கள், அந்நிலைக்கண் ணின்றே, தமது மனையின் வந்தணையும் அடியார்க்கு அன்புடன் அமுதமூட்டியும், பொன் - மணி - துகில் முதலியவற்றில் வேண்டுவனவற்றை அளித்தும் இறைவன் றிருவடிக்கீழ் உணர்வு முதிரும்படி ஒழிகிச் சிவநெறி நிற்றலும் கூடும்.

8. ஒருவரிடத்துக் குறை வேண்டுவோர் மாங்கனி முதலிய இனிய பண்டங்களைக் கையுறையாக வைத்துக் கண்டு குறைதீரப் பெறுதல் முன்னாளினின்று வரும் வழக்கு.

9. உடல் நாயகனாகிய கணவன் தம்மிடம் சேர்த்து வைப்பித்த பண்டங்களை அவன் இன்னதற்குப் பயன்படுத்துக என்று பணிக்கப் பெறாதபோது, மனைவியார் அவற்றை ஏற்றவாறு உயிர் நாயகராகிய இறைவர்பால் ஏற்பித்துப் பயன்படுத்துதலும் கற்புநெறி நிற்கும் மனைவியர்க்கு இல்லறத்திற்குரிய வழக்காகும்.

10. சிவன் அடியவர்கள் பசித்து அணைந்தால் அவரை உடனே பசி தீர்த்தல் கடன். கறியமுது முதலியவை அது போழ்து உதவா விடினும் திருவமுது கனி முதலியவற்றுடன் விரைந்து அளித்து உண்பித்து அவரது மகிழ்ச்சி காணுதல் அன்பு நெறிக்குரிய வழக்கு.

11. இனிய உணவுப் பண்டம் பெற்றபோது அவற்றுள் ஒரு பங்கு மனைவிக்குமுண்டு என்றெண்ணாது, நாவின் சுவைப் புலனுக்கு ஆளாகித் தானே முழுதும் உண்டுவிடுதல் நல்ல கணவனுக்குப் பாங்கன்று.

12. மனைவியினிடத்து இவ்வாறு ஒழுகுகின்றவர் உலகில் வேறுயாவர்க்கு என்ன நலன் விளைக்க வல்லார்?

13. பிறர்க்கு கொடுத்து அவரது இன்முகங்கண்டு மகிழும் இன்பம் அறியாதார், தமது உடைப் பொருள்களை இழந்தவரேயாவர்.

14. சிவனடியாரை ஊட்டும் உணவு இறைவன் உண்டதாகும். அடியாரை ஊட்டிய மாங்கனி, இறைவரை வேண்டத் தரப்பட்ட நிகழ்ச்சி இவ்வுண்மையை நன்கு விளக்குவது (1741).

15. இறைவர் ஒருவனுக்குச் செய்யும் பேரருள் பிறர் அறிய விளம்பும் தகைமைத்தன்று (1743).

16. கணவன் வினவிய செய்திக்கு உண்மையைச் சொல்லாது விடுதல் கற்பு நெறிக்கு இழுக்காகும்.

17. இறைவரது திருவருள் நிகழ்ச்சி பக்குவமுடையோர்க்கு விளங்குவதன்றி ஏனைச் சாமானியர் தெளிந்தறிதற் பாலதன்று (1745).

18. இருவேறு தருமங்கள் தம்முள் முரண்பட்டபோது உண்மையை ஒளியாது உரைத்து விடுதலே சிறந்த தருமமாம் (1744).

19. எல்லாம் சிவனிடத்தே ஒப்புவித்த அன்பு நிலையில் உள்ளார்க்கு வரும் துன்பே கவலையே முதலியவற்றைத் தானே தாங்கி நிற்பது சிவனது செயல் (1745-1746).

20. அன்பு நெறியிற் றெளியாதார்க்கு அருள் வெளிப்பாட்டு நிகழ்ச்சிகள் அச்சமே விளைப்பன. (1747)

21. மரக்கலம் செய்தல், மரக்கலத்திற் கடல் கடந்து வேற்றுப் புலங்களில் விரும்பும் பண்டம் கொண்டு சேர்த்து வாணிபம் செய்தல் என்றிவை பல்லாயிரம் ஆண்டுகளின் முன்னரே நமது முன்னோர்கள் அறிந்து கையாண்டுவந்து பழக்கத்தில் வந்தவையாம். அந்தத் தொழில்களும் அயல் நாட்டு வாணிபமும் அறவே ஒழிந்த நிலையில் நமது நாடு இப்போது காணப்படுவது நம் நாட்டின் தாழ்ந்த நிலையினைக் காட்டுவது (1748-1749).

22. மனைவியை வஞ்சித்துப் பொய்ப்போக்குக் காட்டி நீத்துச் சென்று விடுவது கணவன்பால் நல்லொழுக்கமன்று (1748-1752).

23. (குல) தெய்வத்தின் பெயரை இட்டழைத்ததனால் அத்தெய்வத்தை மகிழ்விப்பது கருதி, மகவுக்குப் பெயராக இடுவது முந்தைநாள் வழக்கு (1754).

24. மனைவியைக் கணவன் புறக்கணித்து நீத்து அகன்று விடினும் அதுபற்றி மனைவியின் சுற்றத்தார் பூசல்செய்யாது, எவ்வாற்றாலும் மனைவி கணவனுடன் வாழ வேண்டியது கற்பு நெறியெனக்கொண்டு, மனைவியைத் தாமே கொண்டு போய்க் கணவனிடம் சேர்த்துவிட முயல்வது நல்ல சுற்றத்தாரின் செயல். (1757).

25. கணவன் பிரிந்தொழுகி நீத்த மனைவியை அவனிடம் சேர்த்துவிடக் கொண்டுபோம் பொழுது திரையிட்ட சிவிகையிற் கொண்டு செல்வது முந்தைநாட் பழம்பெருங் குடிகளின் வழக்கு. *(1758)*

26. மனைவியாரைத் தெய்வமென்று எண்ணித் துணிந்துகொண்ட கணவன் அத்துணிபு பற்றி நிலமுற வீழ்ந்து பலருங் காண வணங்குதலு மோரியல்பாகும். *(1761)*

27. உடலின் நாயகனாற் கைவிடப்பட்டபோது அவனை விட்டொழிந்து, உயிரின் நாயகனாகிய சிவன்பாலே சித்தம் வைத்து அவனுடைய சார்பே சார்பாக அடைந்து விடுவது உண்மையறிந்த பெண்ணியல்பு. *(1765)*

28. சிவபூதங்களின் வடிவாகிய பேய் வடிவம் உயர்வுடையது; ஆனந்த மயமானது; இறைவர் திருக்கூத்தாடும்போது பாடியும் ஆடியும் மகிழ்ந்து வருவதற் கியைபுடையது. *(1765-1768)*

29. தாம் வேண்டிப் பெற்றுக்கொண்ட பேய் வடிவத்தினைக் கண்டு உலகர் இகழ்ந்தும் பயந்தும் ஓடினும், அம்மையார் "அறியா மாக்களாகிய உலகர்க்கு நான் எவ்வுருவமாய்த் தோன்றினும் என்னை?; எனது இறைவன் என்னை அறிகுவரே!" என்று அமைந்தனர். இது உண்மை யுணர்ந்தோரது நிலை. உலகர் அறியாது கூறும் புகழ்ச்சி இகழ்ச்சிகளைப் பொருட்படுத்தாது, இறைவன் றிருவுள்ளம் நேர்படு தலையே வேண்டி அமைந்து ஒழுகுவர் அறிவுடையோர். *(1770)*.

30. அடியார்கள் அவதரித்துப் பணி செய்த புண்ணியத் தலங்களைக் காலால் மிதித்து நடத்தற்கும் அஞ்சுவர் பெரியோர். *(1771 - 1778)*.

31. இறைவரிடம் வேண்டிப் பெறும் நல்வரங்களாவன பிறவாமையும் அவரை மறவாமையுமேயாம். என்றும் மீளாது சிவனது ஆனந்த நிறைவினுள் அடங்கி அம்மகிழ்ச்சியினுள் அமிழ்ந்து கிடத்தல் முத்தி நிலையாம். அதனையே குறிக்கொண்டு பெற முயலுதல் அறிவு பெற்ற உயிர்களின் கடமை.

32. அடியார்களிடத்தும் சிவலிங்கத்தினிடத்தும் தம்மைக் கண்டு மறவாது பேணுபவர்களை இறைவர் காத்து இறவாத இன்பம் தந்து தம் மலரடிக்கீழ் வைப்பர்.

....

தலவிசேடம்

1. காரைக்கால் - இத்தலம் அம்மையார் அவதரிக்கப் பெற்ற பெருமையுடையது. இது சாகம்பரி தேவியின் பெருமை விளங்கும் தலமாதலின் சாகம்பரி புரம் எனப்படும் என்றும், சுவாமி கைலாசநாதர் எனப் பெயர் பெறுவர் என்றும் வடமொழிப் பிரமாண்ட புராணம் கூறும். இவ்வடமொழிப் புராணம் திருத்தொண்டர் புராணத்தின் பின்னர் அதிற்கூறும் சரிதத்தைச் சிறப்பற்ற சில மாறுதல்களுடன் மொழி பெயர்க்கப்பட்டதென்று கருத இடமிருக்கின்றது. அதனுள் தனதத்தன் மனைவியின் பெயர் தருமவதி என்றும், அம்மையார் பெயர் பூதவதி யென்றும், அவர் கணவன் சென்று சேர்ந்த பாண்டி நாட்டுப் பட்டினம் தாமிரபன்னி யாறு கடலொடு கூடுமிடத்துக்கு அணிமையில் உள்ள **கனகலம்** என்னும் தலமென்றும் கூறப்படும். இன்னும் சில விவரங்களும் காணப்படுகின்றன.

காரைக்கால் சோழ நாட்டுத் தலம். பிரெஞ்சு அரசாங்கத்தைச் சேர்ந்தது கடற் றுறைமுகப் பட்டினம். அம்மையார் கோயிலும் திருவுருவங்களும் புதுமையும் அழகும்பெற அமைக்கப்பட்டுள்ளன. அம்மையார் பூதகணமாகிய பேய் வடிவம் பெற்றுச் கயிலாயம் சென்ற தலம் பாண்டி நாட்டில் ஓர் பட்டினமாதலின், காரைக்கால் நகரில் அத்திருநாள் அதிகமாகக் கொண்டாடப்படாமல் அவர் அடியார்க்கு மாம்பழத்தோடு அமுதருந்தியபின் கணவன் கேட்டபடி திருவருளால் அதிமதுரக்கனியை அளித்துக் கொடுத்துத் தெய்வத் தன்மை விளங்க நின்ற திருநாள் **மாம்பழத் திருநாள்** என்ற பெயராற் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

இது மாயவரம் (மாயூரம்) - தரங்கம்பாடி இருப்புப்பாதை வழியில் காரைக்கால் என்ற நிலயத்தினின்றும் ½ நாழிகை யளவில் அடையத்தக்கது. மாயூரத்தினின்றும் மோட்டார் பஸ் வசதியும் உண்டு.

2. திருவாலங்காடு - பழையனூர்த் திருவாலங்காடு என்ற தலைப்பில் 1607ஆம் பாட்டின்கீழ் தலவிசேடம் பார்க்க.

....

சேர்க்கை - 1

உ

சிவமயம்

அற்புதத் திருவந்தாதி

காரைக்காலம்மையார் அருளிச் செய்தது

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் - நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
யெஞ்ஞான்று தீர்ப்ப திடர். *1*

பிறந்து மொழி சொல்லத் தொடங்கிய காலம் முதல் **எக்காலமும்** உனது திருவடியினையே சேர்ந்தேன்; இறைவரே! எனது துன்பந் தீர்ப்பதுதான் எப்போது? - இவ்வாறு துணிந்து சொல்லுதல் வேறு யாவர்க்கும் அரிது. இது முன்னைத் தவத்தால் ஆவது. "அடிதளர்வுற் றசையுநடைப் பருவத்தே... பணியணிவார் கழற்கடிமை பழகி... காதல் ததும்பவரும் மொழி பயின்றார்" (*1719*) என்றும், "வண்டல் பயில்வனவெல்லாம் வளர்மதியம் புனைந்தசடை யண்டர்பிரான் றிருவார்த்தை யணைய வருவன பயின்று" (*1721*) என்றும் வரும் புராணத் திருவாக்குக்கு இது (அம்மையார் திருவாக்காகிய) அகச்சான்றாகும். **சேர்ந்தேன் -** இடைவிடாது மனம் மொழி மெய்களாற் சார்ந்தேன் என்ற பொருளில் வந்தது. **இடர் -** பிறவித்துன்பம். அம்மையார் திருவருளை வேண்டிப் பேய்வடிவம் பெற்றவுடன் முதலிற் பாடியருளிய இத்திருவந்தாதியில் இது முதல் திருவாக்கு. "பிறவாமை வேண்டும்" (*1776*) என்ற கருத்தை ஈண்டுக் கருதுக. **மைஞ்ஞான்ற... பெருமான் -** வானோரைக் காத்தது போல எனக்கு மருள்வான் என்பது குறிப்பு.

இடர்களையா ரேனு மெமக்கிரங்கா ரேனும்
படரு நெறிபணியா ரேனுஞ் - சுடருருவில்
என்பறாக் கோலத் தெரியாடு மெம்மானார்க்
கன்பறா தென்னெஞ் சவர்க்கு. *2*

எமது பெருமான் எனக்குப் பிறவித்துன்பத்தை நீக்கலாம் - அவ்வாறு நீக்காவிடினும் விடுக; என்மேல் இரக்கம் வைக்கலாம் - அது செய்யாவிடினும் விடுக; செல்லும் நெறியினையேனும் பணிக்கலாம் - அதுவும் செய்யாவிடினும் விடுக; என் நெஞ்சு அவர்பால் அன்பு நீங்காது.

இடர்களைதல் முதலிய பயன் கருதி, யான், அன்பு செய்யவில்லை என்பது, அன்பு செய்தலே அதற்குப் பயனாம்; வேறில்லை என்பதாம். "வீடும் வேண்டா விறல்" என்பது திருக்கூட்டச் சிறப்பு. **எமக்கு -** உயிர்களை உள்ளடக்கிய உளப்பாட்டுத் தன்மைப் பன்மையாதலின் **என்நெஞ்சு** என்பது ஒருமைப்பன்மை மயக்கமன்று. **அவர்க்கு -** குவ்வுருபு ஏழனுருபின் பொருளில் வந்தது; கிழங்கு மணற்கீன்றமுளை என்பது போல.

*அவர்க்கே யெழுபிறப்பு மாளாவோ; மென்றும்
அவர்க்கேநா மன்பாவ தல்லாற் - பவர்ச்சடைமேற்
பாகாப்போழ் சூடு **மவர்க்கல்லான் மற்றொருவர்க்**
காகாப்போ மெஞ்ஞான்று மாள். *3*

---

*இக்குறிப்பிட்ட பாட்டுக்கள் பாடஞ் செய்யத்தக்கவற்றுட் சில.

சடைமேற் பிறைசூடும் அச்சிவபெருமானுக்கே பிறப்பு ஏழினும் நாம் ஆளாவோம்; அதுவல்லால், மற்றொருவர்க்கும் எஞ்ஞான்றும் ஆளாகாமலுமிருப்போம்.

சடைமேற் பாகாப்போழ் சூடும் அவர்க்கே என்றும், **அவர்க்கல்லால்** என்றும் முன்னும் பின்னும் கூட்டி யுரைக்கும்படி நின்ற இடைநிலைத் தீபம். சிவபிரானே முழுமுதற் றனிப்பெருங்கடவுள் என்றபடி. **எஞ்ஞான்றும்** - பெத்த முத்தி யிரண்டிலும். **எழுபிறப்பு** - எழுவகைப்பட்ட பிறவிகள். **ஆளாவோம் - ஆகாப்போம்** - என்று உடன்பாட்டானும் எதிர்மறையானும் கூறியதும்; அவர்க்கல்லால் மற்றொருவர்க்கு என்று எதிர்மறையாற் கூறியதும் உறுதி குறித்தன. **ஒருவர்க்கும்** - எனும் முற்றும்மை தொக்கது. **பாகா** - பகா என்றது முதனீண்டது. **பாகாப்போழ்** - பகுதியில்லாத - குறைந்த - சந்திரன்; **ஆகாப்போம்** - ஆகோம். "அயரா வன்பினரன்கழல் செலுமே" (போதம் - *11*) என்றபடி சிவப்பேறு கை வரப்பெற்ற நிலையினின்று அம்மையார் கூறும் கூற்று.

ஆளானோ மல்ல லறிய முறையிட்டாற்
கேளாத தென்கொலோ? கேளாமை - நீளாகஞ்
செம்மையா னாகித் திருமிடறு மற்றொன்றாம்
எம்மையாட் கொண்ட விறை. 4

ஆட்பட்ட நாங்கள் எங்கள் துன்பத்தை அறியும்படி முறையிடினும் எங்களை ஆளாகக் கொண்ட இறைவர் கேளாத காரணம்தான் என்னையோ? நீண்ட திருமேனி முழுதும் செம்மை நிறமேயாயினும் திருமிடறுமட்டில் கரியதாய் வேறு நிறமாயிருக்கும். (கேளாமையும் அது போன்றதேயாம்.)

திருமேனி முழுதும் செந்நிறமாக, மிடறு ஒன்றுமே கரிதாயிற்று; ஆயினும் அது அருளின் வண்ணமே யாதல்போல, முழுதும் தலைவராந் தன்மையுடைய இறை, எமது முறையீட்டைக் கேளார் போன்றிருத்தலும் அருளின் வண்ணமேயாம். அருளாமை யன்று **கேளாமை** - கேட்டருளாமை. இவ்வாறன்றிக் கேளாமைக்கு மிடற்று மறுவே காரணம் என்றுரைப்பாருமுண்டு. **இறைக்கு** - என்பதும் பாடம்.

*இறைவனே யெவ்வுயிருந் தோற்றுவிப்பான்; தோற்றி
யிறைவனே யீண்டிறக்கஞ் செய்வா - னிறைவனே
"யெந்தா!" யெனவிரங்கு மெங்கண்மேல் வெந்துயரம்
வந்தா லதுமாற்று வான். 5

சிவபெருமானே எல்லா வுயிர்களையும் பிறவியிற் சேர்த்துவான்; அவ்வாறு தோற்றுவித்த உயிர்களை இறக்கும்படி செய்பவனும் அவ்விறைவனே; எமது "தந்தையே!" என்று அவரை நோக்கி இரங்கி நிற்கும் எங்கள்மேல் வெவ்விய துயரம் வந்தால் அதனை மாற்றுபவரும் அவ்விறைவனேயாவன்.

இறக்கம் - இறப்பு - நீக்கம்; **இரங்குதல்** - துன்பத்தைச் சொல்லிப் பிரிந்து நிற்றல். உயிர்கள் நித்தியமாதலில் அவற்றைத் தோற்றுவித்தலாவது இறப்பித்தலாவது இல்லை. அவற்றை உடல் முதலியவை கொடுத்துப் பிறப்பித்தலும், பிறப்பினின்றும் இறக்கச் செய்தலும்; பிறப்பித்து அறிவு விளக்குதலும், இறக்கச் செய்து மறப்பித்தலும் என்ற இவையே **தோற்றுவிப்பான்** என்பனவாதியாகச் சொல்லப்படுவன.

எவ்வுயிரும் - பிரளயாகலர் - விஞ்ஞானகலர் - சகலர் என்ற மூவகையாருயிர்களையும். **இறையவனே** - என்பதும் பாடம்.

*வானத்தா னென்பாரு மென்க ;மற் றும்பர்கோன்
றானத்தா னென்பாருந் தாமென்க; - ஞானத்தான்
முன்னஞ்சத் தாலிருண்ட மொய்யொளிசேர் கண்டத்தான்
என்னெஞ்சத் தானென்பன் யான். 6

ஞானமே உருவாயினவரும் திருநீலகண்டருமாகிய சிவபெருமானை, வான் முதலாக வைத்தெண்ணப்பட்ட இவ்வுலகத்தவர் என்று கூறுவார் கூறுக; தேவேந்திரனுடைய விண்ணுலகத்தவர் என்று கூறுவாருங் கூறுக; நான் அவர் என் நெஞ்சையே இடமாகக் கொண்டு நீங்காது வீற்றிருப்பவர் என்று கூறுவேன்.

இவ்வாறன்றி, **வான்** என்றதனை விண்ணுலகமென்றும், **தானம்** என்றதனை அதனின் வேறாகிய மண்ணுலகமென்றும், கொண்டு, **உம்பர்கோன்** - தேவதேவனாகிய - கண்டத்தான் என்று கூட்டியுரை கொள்வாருமுண்டு. **ஞானத்தால்** - திருவருள் ஞானத்தால் என் நெஞ்சத்தான் என்றுரைப்பர். எனது நெஞ்சினிலே பெற்று நீங்காமலிருப்பன் சிவன் என்றிறுமாந்து கூறும் அநுபவ நிலை. "இறு மாந்திருப்பன் கொலோ வீசன், பல்கணத் தெண்ணப்பட்டு" (திருவங்கமாலை); "நாடி நாரண னுன்முக னென்றிவர், தேடி யுந்திரிந் துங்காண வல்லரோ.......தில்லை அம்பலத், தாடி பாதமென் னெஞ்சு ளிருக்கவே!" (குறுந்); "திருமாலொடு நான்முகனுந் தேடித் தேடொணாத் தேவனை யென்னுள்ளே தேடிக் கண்டு கொண்டேன்" (திருவங்கமாலை); "அத்தனெனக் கருளியவா றார்பெறுவார்?" (திருவா) முதலிய கருத்துக்கள் கருதுக. மேல்வரும் திருப்பாட்டும் இக்கருத்து.

***யானே தவமுடையே**; னென்னெஞ்சே நன்னெஞ்சம்;
யானே பிறப்பறுப்பா னெண்ணினேன்;- யானேயக்
கைமா வுரிபோர்த்த கண்ணுதலான் வெண்ணீற்ற
வம்மானுக் காளாயி னேன். 7

பிறப்பறுப்பான் எண்ணிச் சிவபெருமானுக்கு ஆளாயினேன்; (ஆதலின்) யானே தவமுடையேன்; என் நெஞ்சமே நன்னெஞ்சம்.

முன்பாட்டின் கருத்தினைத் தொடர்ந்து கூறியது. பிறப்பறுப்பான் எண்ணினேனாய் ஆளாயினேன் என்று கூட்டுக. **அறுப்பான்** - அறுக்கும் பொருட்டு. **அக் கைமா** - அகரம் உலகறிசுட்டு. கைமா - யானை. ஏகாரங்கள் தேற்றம். இவ்வாறு எண்ணி ஆளாகார் தவமுடையரல்லர்; அவர்களது நெஞ்சு வேறு எதனை நினையினும் நன்னெஞ்சன்று என்பதும் பெறப்படும். ஆளாதலே பிறப்பறுக்கும் வழி என்பதாம்.

ஆயினே னுள்வானுக் கன்றே பெறற்கரியன்
ஆயினே னஃதன்றே யாமாறு - தூய
புனற்கங்கை யேற்றானோர் பொன்வரையே போல்வான்
அனற்கங்கை யேற்றா னருள். 8

ஆள்வானுக்கு ஆள் ஆயினேன்; அன்றே சிவமாந்தன்மை பெற்றேன் ஆயினேன்; சிவனுக்கு ஆளாயினபோதே பெரும்பேறு பெற்றவளாயினேன்; அதுவன்றே அவனருள்!

பெறற்கரியன் ஆயினேன் - சிவத்தன்மை பெற்றேன். **பெறற்கரியன்** - சிவன் "சிவமானவாபாடி"; "சிவமாக்கி" (திருவா). **அன்றே** - ஏகாரம் முன்னையது தேற்றம்; பின்னையது வினா, **அனற்கு** - அனலை; குவ்விகுதி இரண்டனுருபின் பொருளில் வந்தது; உருபு மயக்கம். அங்கையில் அனலை ஏற்றான் சிவன். சிவனுக்காட்படுதலே சிவமாந்தன்மை தரும் என்பது. **அனற்கங்கை** - அனலும் கபாலமும் என்றுரைப்பாருமுண்டு. அஃது அருள் அன்றே என்க.

அருளே யுலகெலா மாள்விப்ப தீசன்
அருளே பிறப்பறுப்ப தானல் - அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையே னெஞ்ஞான்றும்
எப்பொருளு மாவ தெனக்கு. 9

ஈசனது **அருளாகிய சிவசக்தியே தனது கூறுகளாகிய பல்வேறு சக்திகளாலே உலகுயிர்களை ஆள்விப்பது**; அவ்வருளே அவ்வாறு ஆள்விப்பதும் உயிர்களின் பிறப்பறுக்கும் பொருட்டேயாம். இவ்வாறு உளதாகும் மெய்ப்பொருளின் தன்மையை அருளாலே நோக்கியறிந்து நிற்கும் விதியுடையேன் ஆயினல், எக்காலத்தும் எப்பொருளும் எனக்கு அதுவேயாகும்.

விதியுடையேனானல் - என்க. **அருளாலே மெய்ப்பொருளை நோக்கும் விதி** யுடைமையாவது, அவனருள் காட்டிக் கண்டு நிற்க, அந்நிலையின் மெய்ப்பொருளைக் காணும் பக்குவமுடைமை. "அவனருளே கண்ணாகக் காணி னல்லால்" (தேவா). **விதியுடையேனானல்** என்பது அதன் அருமை குறித்தது. **மெய்ப்பொருள்** - "ஞானத்திரளாய் நின்ற பெருமானல்ல வடியார்மேல், ஊனத் திரளை நீக்கு மதுவு **முண்மைப் பொருள்போலும்**" (அண்ணாமலை - பிள்ளையார் தேவா). **அருளே - ஆள்விப்பது; அருளே - பிறப்பறுப்பது** என்றது மெய்ப் பொருள்; இதனைத் தெளிதல் அருளாலே நோக்கும் விதியுடைய வழியே கைகூடும் என்பது. **அருளே** - ஏகாரம் இரண்டும் பிரிநிலை. ஆவது - "அவனருளா லல்லது ஒன்றையுஞ் செய்யானாகவே, அஞ்ஞான கன்மம் பிரவேசியா வாகலான்" "இறைபணி வழுவாது நிற்க" என்றபடி உளவாம் நிலையும், அதுபற்றி வரும், "அயரா அன்பின் அரன்கழல் செல்லும்" நிலையும் கைவரப் பெறுதல். **ஆவது** - அருளே - ஆவது என்க. **எப்பொருளும் ஆவது** - எப்பொருளும் கிடைக்கும் என்பாருமுண்டு.

*எனக்கினிய வெம்மானை யீசனையா னென்றும்
மனக்கினிய வைப்பாக வைத்தேன்;- எனக்கவனைக்
கொண்டேன் பிரானாகக்; **கொள்வதுமே யின்புற்றேன்;**
உண்டே யெனக்கரிய தொன்று? 10

ஈசனை மனத்துக்கு இனிய வைப்பு நிதியாக வைத்தேன்; அவரை எனது தலைவனாகக் கொண்டேன்; இனி எனக்கரிய பொருளுமுண்டோ?; (இல்லை).

வைப்பு - சேமநிதி; **பிரான்** - தலைவன்; **வைப்பாக** வைத்தலாவது நிதியைப் பொதிந்து சேமித்து இடைவிடாது பாதுகாத்திருத்தல் போல மனத்தினுள் இடைவிடாது வைத்திருத்தல். "புறம் போகவொட்டேன்" "வைப்பு மாடென்றும்" (திருவா.)

*ஒன்றே நினைந்திருந்தே னொன்றே துணிந்தொழிந்தேன்;
ஒன்றேயென் னுள்ளத்தி னுள்ளடைத்தே;- னொன்றேகாண்
கங்கையான் றிங்கட் கதிர்முடியான் பொங்கொளிசேர்
அங்கையாற் காளா மது. *11*

சிவனுக்கு ஆளாகும் அது ஒன்றே நினைந்தேன்; துணிந்தேன்; உள்ளத்தினுள் அடைந்தேன்.

ஒன்றே - ஏகாரங்கள் முன்னைய மூன்றும் பிரிநிலை; பின்னையது தேற்றம். இப்பாட்டு, பூட்டுவிற் பொருள்கோள். **ஒன்றே** என்ற மூன்றுக்கும் **நினைதல்** முதலிய மூன்று செயல்களும் **கங்கையான்** முதலிய மூன்றிடங்களும் வகுத்தார். **நினைந்திருத்தல்** - கேட்டல் சிந்தித்தலும்; **துணிதல்** - தெளிதலும், **உள்ளடைத்தல்** - நிட்டை - கூடலுமாம். **ஒளி** - ஒளியுடைய தீ.

அதுவே பிரானுமா றாட்கொள்ளு மாறும்
அதுவே யினிதறிந்தோ மானால் - அதுவே
பனிக்கணங்கு கண்ணியா ரொண்ணுதலின் மேலோர்
தனிக்கணங்கு வைத்தார் தகவு. *12*

பிரான் ஆம் ஆறு அதுவே; ஆட்கொள்ளும் ஆறும் அதுவே; இனி அறிந்தோமானால் அவர் தகவு அதுவேயாம்.

பிரான் ஆம் ஆறு - தலைவராகும் திறம்; **ஆட்கொள்ளும் ஆறு** - உயிர்களை ஆளாகக்கொண்டு அருள்செய்யும் வழி; **தகவு** - தன்மை; **இனி** - மேலும்; **அறிதல்** - ஆராய்தல். **பனிக்கு அணங்கு கண்ணி** - கார்காலத்தில் மலர்கின்ற கொன்றை மலர்மாலை; **பனி** - குளிர்ச்சி பொருந்திய காலம். கார்காலம். ஆகுபெயர். **அணங்குதல்** - விரிதல், மலர்தல். **அணங்குதல்** - வருந்துதல் என்று கொண்டு, கங்கையின் குளிர்ச்சிக்கு வருந்தும் கொன்றைஎன் றுரைகொண்டனர் முன் உரைகாரர். **ஒள் நுதலின் மேல் ஓர் தனிக்கண்** - அழகிய நெற்றிக் கண். **தகவு** - தகுதி. தலைவராகும் தன்மை இவர்க்கே உரியது என்பது குறிப்பு. நெற்றித் **தனிக்கண்** பற்றி யுரைத்ததும் அக்கருத்து. பிரானுதலன்றியும் தம்மை உயிர்கள் வந்தடையும் அறிவு பெற்றில் ஆதலின் தாமே அருளி அவற்றை ஆளுங் கொள்கின்றார் என்பது.

கண்ணி - தலைமாலை. ஈண்டுக் கொன்றைக் கண்ணி குறித்தது. "கண்ணி கார்நறுங் கொன்றை" (புறநானூறு). "புனத்தகத்த நறுங் கொன்றைப் போதினுள்ளான்" என்றபடி மறைமூலமாகிய முதன்மையையும், **நெற்றித் தனிக்கண்** "நெற்றியிற் கண்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்ப தென்னே?" என்றபடி ஆட்கொள்ளும் அங்கண்மைத் திறமும் குறித்தன. வலிந் தாட்கொள்ளுதல் (தலைவராதலின்) அவர் தகவு என்பதாம். ஏகாரங்கள் தேற்றம்; உம்மை இறந்தது, தழுவியது.

தகவுடையார் தாமுளரேற் றாரகலஞ் சாரப்
புகவிடுதல் பொல்லாது கண்டீர் - மிகவடர
வூர்ந்திடுமா நாக மொருநாண் மலைமகளைச்
சார்ந்திடுமே லேபாவந்தான். 13

இறைவரே! நீர் தகைவுடையாராக உள்ளவராகில் மாநாகத்தை மாலையாக மார்பிற் புரளவிடுதல் பொல்லாது! மிகவும் கொலைசெய்ய வூர்ந்திடும் அது ஒருநாள் அம்மார்பிற் பங்குடைய மலைமகளைச் சார்ந்திடுமாகில் பழியா மன்றே (ஆதலின் மாநாகத்தை அணியா தொழிக!).

தகவுடைய நீர் என்று முன்னிலை முன்பாட்டிலிருந்து வருவிக்க; **உளரேல்** - உள்ளீரே யாகில்; **தார் அகலம் சார** - தாராக மார்பிற் பொருந்த; **மிக அடர ஊர்தல்** - ஊர்தலாற் கொலை மிகவும் செய்தல்; **சார்ந்திடுமேல்** - சார்ந்திடுமாகில்; **ஏ?** - அந்தோ என்ற அச்சக் குறிப்புப்பட நின்ற இடைச்சொல்; **பாவம்** - பழி என்ற பொருளில் வந்தது. இறைவர் பாம்பு அணிதலை விலக்குதற்கு ஒரு காரணங் கற்பித்தவாறு; விலக்குதல் தாய் என்ற நிலையில் அம்மையாரது அன்பின் திறம். "நம்மைப் பேணு மம்மைகாண்" (*1774*) என்று இறைவர் கூறியதற்கும், "அம்மையே" என்று அழைத்ததற்கும் உரிய தன்மை காட்டும் அகச்சான்று. "பணியணிவார்" (*1719*) என்ற விடத்துரைத்தவை பார்க்க.

தானே தனிநெஞ்சந் தன்னை யுயக்கொள்வான்
தானே பெருஞ்சேமஞ் செய்யுமாற் - றானேயோர்
பூணாகத் தாற்பொலிந்து பொங்கழல்சேர் நஞ்சுமிழு
நீணாகத் தானை நினைந்து. 14

தன்னை உய்யக்கொள்ளும் பொருட்டு நாகத்தானை நினைந்து தானே பெரும் சேமம் செய்யும்; அதுதானே (எனது) தனி நெஞ்சம்.

பெருஞ் சேமஞ் செய்தல் - பெரிய காவலைச் செய்துகொள்ளுதல். **ஆகம்** - உடம்பு. ஆகத்தால் பூண் ஆகப் பொலிந்து - நஞ்சுமிழும் நீண் நாகத்தான் என்க. நஞ்சு உமிழுமாயினும் ஆகத்தால் பூணாகப் பொலியும் நாகம் என்றபடி. **தானே** - சொற்பொருட்பின் வருநிலை. தனக்குப் பெருங்காவலைத் தானே நினைந்து செய்து கொண்டதனால் **தனி நெஞ்ச**மென்றார். **கொள்வான்** - கொள்ளும்படி.

நினைந்திருந்து வானவர்க ணீண்மலராற் பாதம்
புனைந்து மடிபொருந்த மாட்டார் - நினைந்திருந்து
மின்செய்வான் செஞ்சடையாய்! வேதியனே! யென்கின்றேற்
கென்செய்வான் கொல்லோ வினி. 15

வானவர்கள் நினைந்து இருந்தும் பாதங்களில் மலர்புனைந்தும் திருவடி சேரமாட்டாது அலைகின்றனர்; ஆதலின் அவ்வாறே நினைந்தும் துதித்தும் நிற்கும் எனக்குச் சிவன் இனி என்செய்வானோ? அறியேன்.

தவத்திற் சிறந்த வானவர்கள் தாமும் அடிசேரமாட்டாது அலைகுவாராயின், நான் எதனைப் பெற உள்ளவள்? என்செய்வான் என்பதற்கு அவன் என்ற எழுவாய் அவாய்நிலையான் வந்தது. **மின்செய்வான் செஞ்சடை** - மின்போன்ற பெரிய சிவந்த சடை. **செய்** - உவம உருபு.

இனியோ நாமுய்ந்தோ; மிறைவன்றாள் சேர்ந்தோம்
இனியோ ரிடரில்லோ நெஞ்சே! - யினியோர்
வினைக்கடலை யாக்குவிக்கு மீளாப் பிறவிக்
கனைக்கடலை நீந்தினோங் காண். *16*

நெஞ்சே! நாம் இறைவன் தாள் சேர்ந்தோம்; ஆதலின் அவருக்கு இனியராயினோம்; இனி ஓர் இடருமில்லோம்; பிறவிக்கடலை நீந்தினோம்; இனி இதனை ஓர் வாயாகிக் (நினைவாயாகிக்) காண்க.

இனியோம் - இனியாராயினோம். பிற அடியாரையும் உளப்படுத்திய உளப்பாட்டுத் தன்மைப் பன்மை. **ஓர் இடரும் இல்லோம்** - முற்றும்மை தொக்கது. **கடல்** - உட்புகுந்தாரை ஆழ்ந்து அமிழ்த்திவிடும் தன்மை குறித்த உருவகம். **கனைகடல்** எனற்பாலது எதுகை இசையின்ப நோக்கி வல்லொற்று மிக்கது. நெஞ்சே! நாம் இனியோம்; உய்ந்தோம்; சேர்ந்தோம்; நீந்தினோம்; இனி - ஓர் - காண் - என்று கூட்டுக. "இனி என்செய்வான்?" என்று முன்பாட்டிற் கேட்ட வினவுக்கு விடை கூறுவார்போலக் கூறியது; அடி பொருந்தமாட்டாது அலையும் வானவர்போலன்றி நாம் பிறவிக்கடல் நீந்தினோம் என்று தாம்பெற்ற பேற்றினை வியந்து கூறியது. **இறைவனருள்** - என்பதும் பாடம்.

காண்பார்க்குங் காணலாந் தன்மையனே கைதொழுது
காண்பார்க்குங் காணலாங் காதலாற் - காண்பார்க்குச்
சோதியாய்ச் சிந்தையுளே தோன்றுமே தொல்லுலகுக்
காதியாய் நின்ற வரன். *17*

குருவையே சிவமாகக் காண்பார்க்கும், இலிங்கத்தைக் கைதொழுது சிவமாகக் காண்பார்க்கும் அவனை அங்கங்கும் காணல் ஆகும்; **பத்தரது திருவேடத்தைக் காதலாற் சிவனெனவே காண்பார்க்குச் சிந்தையுள்ளே சோதியாய்த் தோன்றும்;** உலகுக்கு முதற் கடவுளாய் நின்ற அரன்.

அரன் - தன்மையன்; (அவனைக்) காணலாம்; தோன்றும் என்க. **காண்பார்க்கு** என்ற மூன்றினையும் முறையே குரு, இலிங்கம், சங்கமம் என்ற மூன்றிடத்தும் சிவனைக் காண்பவர்க்கு என்று பொருள் கொள்க. **உலகுக்கு ஆதியாய் நிற்றல்** - உலகம் தன்னிடத்தில் ஒடுங்கி மீள உளதாக நிற்றல். **அரன்** - சங்காரகாரணனாய் நின்ற முதற்கடவுள். சிவஞானபோதம் 12ஆம் சூத்திரத்தும், முதற் சூத்திரத்துங் கூறும் பொருள்கள் காண்க. தான் தானாச் செய்த குருவைச் சிவமாகக் காண்பது என்பார் அடைமொழியின்றிக் **காண்பார்க்கு** என்றும். புறத்தில் சிவலிங்கத் திருமேனியிற் காண்பவர் என்பார் **கைதொழுது** என்றும், திருவேடத்திற் காண்பார் ஆசையொடு மரனடியா ரடியாரை யடைந்திட்டு வழிபட்டும்

அத்திருவேடத்திற் கண்ட திருநீறு கண்டிகை யிவற்ருல் வசீகரிக்கப்பட்டும் நிற்பாராதலின் **காதலாற் காண்பார்** என்றும் கூறினுர். **ஆதியாய்** - புனருற்பவத்துக்குக் காரணராய். **நின்ற** - சர்வசங்கார காலத்தில் தான் அழியாது எஞ்சிநின்ற. இனி, இவ்வாறன்றிக் **கைதொழுது காண்பார்** என்றது புறப்பூசையினையும், **காதலாற் காண்பார்** என்றது அகப்பூசனையினையும் குறிப்பன எனவும், **காண்பார்க்கும் காணலாம்** என்றது இவ்விரு நிலையும் இன்றித் தத்தம் இயல்பாற் சமய கோடிகளிற் காண்பார் அவ்வவர் தகுதிக்கேற்பக் காண்பார் என்றும், உரைப்பதுமாம். இப்பொருளில், அன்பு நிலையில்லார் என்பார் அடையின்றிக் கூறினுர் என்க. இவ்வாறன்றி வேறு பொருள் கொண்டனர் முன் உரைகாரர்.

அரனென்கோ? நான்முக னென்கோ? வரிய
பரனென்கோ? பண்புணர மாட்டேன் - முரணழியத்
தானவனைப் பாதத் தனிவிரலாற் செற்ருனை
யானவனை யெம்மானை யின்று. 18

உருத்திரனென்பேனே? பிரமதேவன் என்பேனே? அப்பிரமனுக்கு அப்பாற்பட்ட விட்டுணு என்பேனே? எம்மானை இன்னபண்புடையவன் என்று உணரமாட்டேன்.

அரன் - அழித்தல் செய்யும் காலருத்திரன்; **அரிய பரன் - பரன்** - அப்பாற்பட்டவன்; **அரிய** - அந்நான்முகனுக்கு அரிய; மூவருமாகி, மூவருக்குள்ளும் நிறைந்து, அவ்வவர் தொழில்களைச் செய்வித்தும் அதற்கப்பாற்பட்டும் அறியமுடியாது நிற்பவர் சிவபெருமான் என்பது கருத்து. **முரண்** - கயிலைமலையைப் பேர்த்து விடுவேன் என்று அசைவித்த மாறுபாடு. **தானவன்** - இராவணன்.

இன்று நமக்கெளிதே மாலுக்கு நான்முகற்கும்
அன்று மளப்பரிய ஞனை - என்றுமோர்
மூவா மதியானை மூவே ழுலகங்கள்
ஆவானைக் காணு மறிவு. 19

இறைவன் மாலுக்கும் பிரமனுக்கும் அளத்தற்கரியவனானான்; ஆயினும் இன்று அவனைக் காணும் அறிவு நமக்கெளிதேயாயிற்று.

அன்றும் - இன்றும் மீட்டுமேயன்றி அன்றும் என்று உம்மை இறந்தது தழுவியது; **என்றும் ஓர் மூவாமதியான்** - வளராத பிறை. உலகங்களாவான் - வியாபகனாய் எங்கும் நிறைந்தும் கடந்து நின்றவன். விசுவாந்தர்யாமி - விசுவரூபன் - விசுவசேவியன் - விசுவாதிகன் என்று மறைகளாற் றுதிக்கப்படும் நிலை குறித்தது. **நமக்கெளிதே - அளப்பரியன்** - பெருந் தேவர்க்கும் அரியனாயினும் அடியார்க்கெளியன். **அறிவு எளிதே - நாம் அடிமைத் திறத்தினின்றோம்; அவர் அவ்வாறு நில்லாதவர் என்று குறிப்பு.** இலிங்க புராணக் குறுந்தொகை பார்க்க.

***அறிவானுந் தானே; யறிவிப்பான் றானே;**
யறிவா யறிகின்றான் றானே;- யறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே; விரிசுடர்பா ராகாயம்
அப்பொருளுந் தானே யவன். 20

இறைவன் தானே அறிவான்; அறிவிப்பானும் தானே; அறிவுக்கறிவாய் நின்று அறிகின்றானும் தானே; அறியப்படும் மெய்ப்பொருள்களும் தானே; சுடர் - நிலம் - ஆகாயம் முதலிய பொருள்களும் தானே.

உயிர்கட்குக் காட்டியுங் கண்டுமுபகரிப்பவன் எவற்றினும் அத்துவிதமாய்க் கலந்து நிற்கும் இறைவன்; **அறிவான்** - காண்பவன்; **அறிவிப்பான்** - காட்டுபவன்; **அறிவாய் அறிகின்றான்** - அறிவினுள்ளே அத்துவிதமாகக் கலந்து நின்று உயிர்கள் அறியும்படி தானும் அறிபவன்; **அறிகின்ற - படு** விகுதி தொக்கு நின்ற செயப்பாட்டு வினை - அறியப்படுகின்ற. **சுடர்** முதலியன சிவனது எட்டுத் திருமேனிகள். "அங்கியும் ஒன்றிற் றங்கிநின் றல்லது தன்றொழி னடத்தா தாகலின், அதுபோல முதல்வனும் உயிரை யதிட்டித்து நின்று எத்தொழிலுஞ் செய்வனென்றுணர்க. உயிர் ஒன்றனை யறிதல் முதல்வன் உடனின் றறிதலையின்றி அறிவித்தன் மாத்திரையான் அமையாதென்பது "தொண்டனே னினையுமா நினையே", "விரும்புமா விரும்பே", "தொடருமா தொடரே", "நுகருமா நுகரே" என்றிவ்வாறு முத்திநிலைபற்றி யோதிய திருவாக்குக்களானுமறிக. இவ்வியல்பு நோக்கியன்றே "**அறிவானுந் தானே யறிவிப்பான் றானே**" என்றோதிய அம்மை, "**அறிவா யறிகின்றான் றானே**" எனவு மோதியதூஉமென்க. "**முன் அறிதல்** அறிவித்தற் பொருட்டெனவும், பின் அறிவாயறிதல் விடயத்தின் அழுந்துவித்தற் பொருட்டெனவும் கொள்க" எனவரும் சிவஞான முனிவர் உரை காண்க. (போதம் - 11 - சிற்றுரை).

அவனே யிருசுடர்தீ யாகாச மாவான்
அவனே புவிபுனல்காற் றாவா - னவனே
யியமான னாயட்ட மூர்த்தியுமாய் ஞான
மயனாகி நின்றானும் வந்து. 21

அவனே, ஞாயிறு, திங்கள், நிலம், நீர், நெருப்பு, காற்று, விசும்பு, உயிர் என்ற அட்ட மூர்த்தியுமாய், இவற்றுக்கு வேறாய் ஞானமயனாய்வந்து நின்றானும் ஆம்.

அவனே - முன்பாட்டில் "அறிவானும்" என்பது முதலாகச் சொல்லிய தன்மைகளை உடைய அவனே; முன்னறி சுட்டு; இருசுடர் - ஞாயிறு - திங்கள். இயமானன் - உயிர்; அட்டமூர்த்தியுமாய் - இவை எட்டும் திருமேனிகளாகக் கொண்டவனுமாய்; "நிலநீர்... எண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்" - (திருவா). **மூர்த்தியுமாய்** - உம்மை இவையன்றி வேறு திருமேனியும்கொண்டு என்று எதிரது தழுவிய எச்சவும்மை. வேறு திருமேனியாவது **ஞானமயனுகி** என்று பின்னர்க் கூறப்படுவது. "உண்மையறி வானந்த வுருவாகி" எட்டுஞ் சொல்லி மேலும் "**அட்டமூர்த்தியு**மாய்" என்றது அவ்வெட்டினையும் அதிட்டிக்கும் மூர்த்திகள் எட்டாதல்பற்றி என்றும், **இயமானனு யட்ட மூர்த்தியுமாய்** என்றதனுல் இவ்வெட்டினும் அதிட்டித்து நிற்றலே யன்றி அவ்வெட்டினும் வியாபித்து நிற்கு முறைமையினும் கூறியவாறு என்றும், இவ்வெட்டும் சகளம் - ஞானமயன் என்றது நிட்களம் என்றும், உரைப்பர் **முன்** உரைகாரர்.

வந்திதனைக் கொள்வதே யொக்குமிவ் வாளரவின்
சிந்தை யதுதெரிந்து காண்மினே - வந்தோர்

இராநீ ரிருண்டனைய கண்டத்தீ ரெங்கள்
பிரானீருஞ் சென்னிப் பிறை. 22

கண்டத்தீர்! பிரானீர்! சென்னிப் பிறை இதனை வந்து கொள்வதுபோலும், இப்பாம்பின் சிந்தைதனைத் தெரிந்துகொள்ளக் கடவீர்.

ஆதலின் பாம்பை யணிதலைத் தவிர்மின் என்று பிறையினுக்குப் பரிந்து கூறுவார் போன்று விலக்குதல். பிறை தேய்ந்து இறந்துபடாமல் வளரும்படி வாங்கிவைத்த உமது அருளுக்கு மாறாக அதனை மறைக்கும் அரவின் சிந்தை என்றபடி. **நீர் இரா இருண்டனைய** என்க. **நீர்** - மேகம் - வந்து - இராப்போல இருண்டனைய கண்டம் என்க. இருண்டால் அனைய இருண்டனைய என நின்றது. வந்துபிறையிதனை என்று கூட்டுக. நீர் - இருளுதல் - மேகமாய் உருவாதல் கருமை மிகுதியை உணர்த்திக் கருணை மிகுதி காட்டிற்று. 13ஆம் பாட்டின் கருத்தும் காண்க.

பிறையும் புனலு மனலரவுஞ் சூடும்
இறைவ ரெமக்கிரங்கா ரேனுங் - "கறைமிடற்ற
வெந்தையார்க் காட்பட்டே" மென்றென் றிருக்குமே
யெந்தையா வுள்ள மிது. 23

இறைவர் எமக்கு இரங்காராயினும் எம் அன்புடைய உள்ளம் அவர்க் காட்பட்டே மென்றென்று மகிழ்வுட னிருக்கும்.

2ஆம் பாட்டின் கருத்துக் காண்க. தயாவுள்ளம் என்பது **தையா**வுள்ளமென நின்றது. "அ ஐ முதலிடை யொக்குஞ் சஞய முன்" என்பதால் ஐ போலி. **தயா** - அன்பு.

இதுவன்றே யீசன் றிருவுருவ மாமா!
றிதுவன்றே யென்றனக்கோர் சேமம்! - இதுவன்றே
மின்னுஞ் சுடருருவாய் மீண்டாயென் சிந்தனைக்கே
யின்னுஞ் சுழல்கின்ற திங்கு! 24

மின்னும் சுடர் உருவமாகி மீண்டு, ஆகி, என் சிந்தையின்கண் இன்று சுழல்கின்றதாகிய இத்திருவுருவமே ஈசன் திருவுருவம் ஆம்; இதுவே எனக்கு ஒப்பற்ற பெருஞ் சேமஞ் செய்வதாம்.

சுழல்கின்றது இதுவன்றே - என்று கூட்டுக. **அன்றே** என்பன சொற்பொருட் பின்வருநிலை. ஏகாரங்கள் - தேற்றம். உறுதிப் பொருள் தந்து எடுத்துக் காட்டுதற்கண் வந்தன. **சேமம்** செய்வதனைச் சேமம் என்றுபசரித்தார். **மின்னும் சுடர் உருவாய்** - இறைவரை உட்பூசையில் கோடி சூரியனுடைய ஒளியுடையதொரு மின்னல்போலத் தியானிக்கும் முறை காண்க. **ஆய் - ஆகி. இன்னும்** எப்போதும்.

இங்கிருந்து சொல்லுவதெ னெம்பெருமா னெண்ணுதே
யெங்கும் பலிதிரியு மெத்திறமும் - பொங்கிரவில்
ஈமவனத் தாடுவது மென்னுக்கென் றுராய்வோம்
நாமவனைக் காணலுற்ற ஞான்று. 25

அவரைக் காணாத நிலையில் இவ்விடத்திருந்து இவ்வாறு சொல்லுவதெவன்? எம்பெருமான் எண்ணாமல் எவ்விடத்தும் பலிதிரியும் எல்லாத் திறங்களும் இரவில் சுடுகாட்டில் ஆடுவதும் எதன்பொருட்டு என்று அவனைக் காணும் பொழுது ஆராய்வோம்.

இங்கு - தவக்குறைவினால் அவன் காட்டப்பெறாத இந்தப் பெத்த நிலையில்; சொல்லுவதெவ்வாறு? வினா இவ்வாறு என்று இன்மை குறித்தது; **எண்ணாதே** - தமது பெருமையினையும் உயிர்களது சிறுமையினையும் ஒரு சிறிதும் எண்ணாமல்; **எத்திறம்** - அவ்வவர் தகுதிக்கேற்ப என்றபடி; **இரவு** - சங்கார காலம். **ஈமம்** - உலகம் சங்கரிக்கப்பட்ட இடம். **ஆடுதல்** - உலகம் மீள உளதாதற் பொருட்டுச் செய்யும் நடனம். "வருங்கடன் மீளநின் றெம்மிறை நல்வீணை வாசிக்குமே" (தேவா). **பலிதிரிதல் - வினைப் பயன்களைச் சிவனுக்கென்று கொடுக்க ஏற்றல். காணலுற்ற ஞான்று** - அவன் கண்டு காட்டக் கண்ட முத்தி நிலையில். "காணவுள்ளத்தைக் கண்டு காட்டலின்" **ஆராய்தல்** - அநுபவத்தில் அழுந்தியறிதல். "**அயரா அன்பின்** அரன் கழல் செலுமே".

ஞான்ற குழற்சடைகள் பொன்வரைபோன் மின்னுவன
போன்ற கறைமிடற்றான் பொன்மார்பன் - ஞான்றெங்கும்
மிக்கயலே தோன்ற விளங்கி மிளிருமே
யக்கயலே தோன்று மரவு. *26*

(உமையம்மையாரது) தொங்கும் குழற் சடைகள் பொன்னாலியன்ற வரைபோல மின்னுவனபோன்று உள்ள சிவபெருமானது அழகிய மார்பினிடத்து, எங்கும் மிக்கு அயலில் எலும்பு மாலைகளின் பக்கத்தில் தோன்றும் அரவு விளங்கும்.

குழற்சடைகள் - குழலாற் பின்னி யியன்ற சடைகள்; இவை உமையம்மை யாருடையவை; **போன்ற** - போன்றமைந்த; **போன்ற** - **மார்பு** - என்று கூட்டுக. **பொன்வரை** - பொன்னின்மேற் கீறிய கீற்றுக்கள்; **பொன்மார்பு** - அழகிய மார்பு. பொன்போன்ற மார்பு என்றலுமாம். குழற்சடைகள் பொன்வரைகள் போல மின்னுதற் கிடமாகிய மார்பில் அவற்றுக்கு அயலில் அக்கும் அரவும் மிளிருமே என்க.

சடைகள் - உமையம்மையார் - கங்கையம்மையா ரிருவரது குழலும் சடையும் என்றும், ஒருமைப் பன்மை மயக்கென்றுகொண்டு உமையம்மையாரது சடை என்றும் கொள்ளலாம்.

சிவபெருமானது பொன்மார்பில் உமையம்மையாரது குழற்சடைகள் பொன்னின்கண் திரித்து வரை கீறியனபோல மின்னி அழகு செய்தமர்ந்தன; அதற்கயலில் எலும்புமாலையின் பக்கத்துவைத்த பாம்பு மிக்குத் தோன்றும்படி விளங்கி ஒளிவீசும் மிடற்றானது மார்பில் குழற்சடைகள் மின்னுவன. ஆயினும் அவற்றின் மிக்குத் தோன்ற அக்குமாலையின் பக்கம் உள்ள அரவு விளங்கி மிளிருமே என்க. அம்மையாரது கவின்விளக்கம் ஐயனது அழகினுள் அடங்கும்படி அவ்வழகு மேல் விளங்கும். தோன்ற - தோன்றும்படி. குழற்சடையைக் கரும்பாம்புக்கு உவமிப்பது மரபு. பொற்பாம்பணிகள் குழலில் சூட்டுவதும் மரபு: 49, 50, 58 பாட்டுக்கள் பார்க்க.

அரவமொன் ருகத்து நீநயந்து பூணேல்;
பரவித் தொழுதிரந்தோம் பன்னுண்; - முரணழிய
வொன்னுதார் மூவெயிலு மோரம்பா லெய்தானே!
பொன்னுர மற்ரென்று பூண். 27

முப்புரமெரித்த இறைவரே! உம்மைப் பலநாளும் இரந்து வேண்டிக் கொள்வது ஒன்றுண்டு; உமது திருமேனியில் ஒரு பாம்பினை நீர் பூணுதல் வேண்டா!; வேருெரு பொன்னுரம் பூண்டுகொள்வீராக.

8 - 22 பாட்டுக்களிற் குறிப்பிற்கூறிய பொருளை வெளிப்பட வேண்டுகையாகக் கூறியது. பிரானுக்கும் அம்மை என்ற அன்பின்றிறம் வெளிப்படக் காண்பதாம். மேல்வரும் பாட்டும் பார்க்க.

பூணுக வொன்று புனைந்தொன்று பொங்கதளின்
நாணுக மேன்மிளிர நன்கமைத்துக், - கோணுகம்
பொன்முடிமேற் சூடுவது, மெல்லாம் **பொறியிலியேற்**
கென்முடிவ தாக விவர்? 28

இவர் ஒரு நாகத்தைப் பூணுக அணிந்தும், ஒன்றைப் புலித்தோலின்மேற் கச்சாகக் கட்டியும் ஒன்றைத் திருமுடிமேற் சூடியும் இவ்வாறு நாகங்களை எங்கும் அணிந்து கொண்ட இச்செயல் ஏழையாகிய எனக்கு என்ன விளைவிப்பதற்கோ அறியேன் என்று, தாயின் இரக்கத்துடன் கூறியது.

இவர், நாகம், ஒன்று பூணுகப் புனைந்ததும், ஒன்று புலி அதளின் நாணுக அமைத்ததும், (ஒன்று) முடிமேற் சூடுவதும் **எல்லாம்** எனக்கு என் முடிவதாகவோ என்க. எல்லாம் - இவையும் மற்றும் இவைபோல்வனவும். **அதளின் நாண்** - இடையிற் கட்டிய புலித்தோல் நழுவாமல் இறுகக் கட்டும் கயிறு.

பொறியிலி - பொறி -கண்டு நன்மையிற் றங்கும் ஊழ் என்ற பொருளில் வந்தது. பாம்புகளினுல் அவர்க்கு வரும் கேடு தமக்கேயாம் என்ற பதைப்புடன் கூறியது.

*இவரைப் பொருளுணர மாட்டாதா ரெல்லாம்
இவரை யிகழ்வதே கண்டீர் - இவர்தமது
பூக்கோல மேனிப் பொடிபூசி யென்பணிந்த
பேய்க்கோலங் கண்ட பிறர். 29

பொடிபூசி எலும்பணிந்த இவரது பேய்க்கோலம் கண்ட பிறர் இவரைப் பொருள் உணரமாட்டாதார் எல்லாம் இவரை இகழ்வதே!; இகழலாமோ? (இகழ்தல் செய்யத் தக்கதன்று).

பொருள் உணர்தலாவது பொடிபூசுதலால் என்றும் அழிவில்லாதவர் என்றும், **பேய்க்கோலத்தால்** ஆனந்தம் தருபவர் என்றும் காணும் உண்மைப் பொருளை அறிதல்;

பூக்கோல மேனி - தாமரைபோலும் அழகிய சிவந்த திருமேனி; **பிறர்** - இகழ்வாராதலின் நமரல்லாது புறம்பாயினர்; "உணரா ருணரார்......கேளாம் புறன்" (போதம்). பொருளுணர்ந்தவர் இகழாது போற்றுவர் என்பதாம். **இவர்** - என்றது தாம் நேரிற் கண்டு நின்ற பெருமான் என்ற அணிமைச் சுட்டு.

*பிறரறிய லாகாப் பெருமையருந் தாமே!
பிறரறியும் பேருணர்வுந் தாமே! - பிறருடைய
வென்பே யணிந்திரவிற் றீயாடு மெம்மானர்
வன்பேயுந் தாமு மகிழ்ந்து. 30

(அருட்கண்ணல் காட்டப் பெருத) பிறர் எவராலும் அறியப்படாத பெருமையுடையவரும் தாமே; அவர்களிற் பிறராகிய அருட்கண்ணுடையோரது பேருணர்விற் கண்டு அனுபவிக்கப்படுகின்றவரும் தாமே; (அவர் யாவர் எனில்?) தம்முடனே மூவர் என்றே எண்ணி ஏமாந்து காலாந்தரத்திற் கழிந்த பிறராகிய பிரமவிட்டுணுக்களுடைய எலும்பை அணிந்து இரவில் தீயில் நின்று வலிய பேயும் தாமும் மகிழ்ந்து ஆடும் எம்மானேயாவர்.

பிறர் அறியலாகா - "அருட் கண்ணல் நோக்காதார் அல்லாதாரே" (தேவா) என்ற பிறர்; பிறர் அறியும் - அவரல்லாத பிறர். உலகத்தோடிருந்தும் அவர்களாலறியப்படாத பிறர் என்றலுமாம். அருள் காட்டாகக் காணும் முத்தர்; பிறருடைய "மூவ ரென்றே யெம்பிராளெடு மெண்ணி விண்ணுண்டு மண்மேற், றேவ ரென்றே யிறுமாந்து" திரிபவர்; பிரம விட்டுணுக்கள். "பிரமனும் போயிருங்கடன் மூடியிறக்கு மிறந்தான் களேபரமுங் கருங்கடல் வண்ணன் களேபர முங்கொண்டு கங்களாராய்" (தேவா) பேயும் தாமும் மகிழ்ந்து ஆடும் எம்மானர் - பெருமையருந்தாமே; பேருணர்வும் தாமே என்று கூட்டுக. உலகம் சங்கரிக்கப்பட்டபோது என்பேயணிந்து ஈமத்தில் ஆடுதலால் என்றும், பேயும் தாமும் மகிழ்ந்து ஆடுதலால் என்றும், பிறர் அறியலாகாமைக்கும் பிறர் அறிய வுணர்வினுள் நிற்றலுக்கும் முறையே காரணங்கள் கூறியவாறு. பேருணர் வென்றூர் முத்த நிலையில் அனுபவிக்கும் முற்றுணர்வாதலின்.

மகிழ்தி மடநெஞ்சே!; மானுடரி னீயுந்
திகழ்தி; பெருஞ்சேமஞ் சேர்ந்தா;- யிகழாதே;
யாரென்பே யேனு மணிந்துழல்வார்க் காட்பட்ட
பேரன்பே யின்னும் பெருக்கு. 31

நெஞ்சே! மகிழ்வாயாக; மானுடர்க்குள் நீ மிக்கு விளங்குகின்றாய்; சிவனுக்காட்பட்ட பேரன்பினலே பெருஞ்சேமம் பெற்றாய்; அதனேடமையாது அந்தப் பேரன்பினையே இன்னும் பெருகச் செய்வாயாக.

சேமஞ் சேர்ந்தா யாதலின் மகிழ்தி; திகழ்தி; பெருக்கு என்று முடிக்க. **பெருஞ்சேமம்** - பெருங்காவல். "பெருங்காவல் பெற்றூராய்" (திருஞான - புரா - 60). திகழ்தல் - மிக்கு

விளங்குதல். மேம்படுதல். "உலகத் தொருநீ யாகத் தோன்ற" (முருகு). இகழாதே அணிந்து உழல்வார் என்க.

பெருகொளிய செஞ்சடைமேற் பிள்ளைப் பறையின்
ஒருகதிரே போந்தொழுகிற் றெக்குந் - தெரியின்
முதற்கண்ணன் முப்புரங்க ளன்றெரித்தான் மூவா
நுதற்கண்ணன் றன்மார்பி னூல். 32

நுதற் கண்ணையுடைய சிவபெருமானது மார்பிற் புரளும் பூணு நூல்அவரது சடைமேல் உள்ள பிறையின் ஒரு கதிரே போந்து ஒழுகியது போன்றிருக்கின்றது.

பெருகொளிய என்பதனை **மார்பின்** என்றதனுடனும் கூட்டுக. சடையிற் பிறையின் கதிர் அச்சடைபோல விரிந்து செவ்வொளி வீசும் மார்பினும் போந்து ஒழுகியது போல என்க. பிள்ளைப் பிறையாதலின் போந்து ஒழுகிற்றே போலும் என்று தற்குறிப்பேற்றக் குறிப்பும் காண்க. **ஒரு கதிரே** - பிள்ளைப் பிறையானமையின் ஒரு கதிரே கொண்டது. **முதற்கண்ணன்** - எல்லார்க்கும் முன்னேயுள்ளவன். "அந்த மாதி" என்றும் "ஈறே முதல்" என்றும் கூறுமாற்றால், சங்கார காரணனுதலில் முதன்மையிடம் பெற்றவன். "மூவாத்தானை யெல்லார்க்கு முன்னே" (தேவா). முதன்மை - உலகிற்கு நிமித்த காரணனுதல். சங்காரத்தையும், புரம் எரித்தலையும், நுதற்கண்ணையும் சுடுந் தன்மைபற்றியே கூறியது பிறையின் கதிர்போந்து ஒழுகியதற்குத் தற்குறிப்பேற்றம்பற்றிக் காரணம் கற்பித்தவாறுமாம். முத்தொழில் எனவும், முப்புர மெனவும். முக்கண் எனவும் மும்மூன்றாய்க் கூறியது மார்பின் நூலும் மும்மூன்றாய்ப் பிரித்த மூன்று நூல்களாய் ஒன்பது இழைகளையுடைமைக் குறிப்புப் பட நின்றது. "ஒன்பதுபோலவர் மார்பினூலிழை".

நூலறிவு பேசி நுழைவிலா தார்திரிக!
நீல மணிமிடற்ற னீர்மையே - மேலுலந்த
தெக்கோலத் தெவ்வுருவா யெத்தவங்கள் செய்வார்க்கு
மக்கோலத் தவ்வுருவே யாம். 33

தாம் தாம் கற்ற நூலான் அறிந்த அளவில் அமைந்து தாங்கண்டதே காட்சியென்று பேசி அன்பின் றிறத்தின் நுழையும் திறமில்லாதவர் அவ்வாறு தத்தமக்குக் கேற்றபடி திரிந்திடுக!. திருநீலகண்டராகிய சிவனது தன்மையே எல்லாவற்றையும் கீழ்ப்படுத்தி மேல் நின்றது; எவ்வாறெனின், எந்தக்கோலத்தில் எவ்வுருவத்தால் எத்தவங்கள் செய்பவர்க்கும் அவ்வவர் தன்மையேயாகி நிற்கும்.

நூலறிவு - பசு ஞானத்தா லறியப்பட்ட அளவுட்படும் அறிவு. **நுழைவு** - பதி நிறைவினுள் நிற்கும் அனுபவ நுழைவு. "சாத்திரத்தை யோதினர்க்குங் சற்குருவின் றன்வசன, மாத்திரத்தே வாய்த்த நலம் வாய்க்குமோ" (களிறு . 6.) **மேலுலத்தல்** - தானே மேலாய் நிற்றல்; **அவ்வுருவேயாம்** - "ஆரொருவ ருள்குவா ருள்ளத்துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற வருள்" (தேவா); "யாதொரு தெய்வங் கொண்டீரத்தெய்வ மாகி யாங்கே, மாதொரு பாகனார்தாம் வருவர்" (சித்தி.) "ஓவாதே, யெவ்வுருவில் யாதொருவ ருள்ளத்து,

எவ்வுருவாய்த் தோன்றி யருள் கொடுப்பா - னெவ்வுருவுந், தானேயாய் நின்றளிப்பான் றன்னிற் பிறிதுருவ, மேனோர்க்குங் காண்பரிய வெம்பெருமான்" (ஞானவுலா.) தவங்கள் நினைக்கும் முறைகள் அமைந்து பயன்பெறுது அலைவராதலின் திரிக என்ருர். "அறுவகைச் சமயத் தோர்க்கு மவ்வவர் பொருளாய்" (சித்தி); "ஆறொன் றியசம யங்களினவ்வவர்க் கப்பொருள்கள், வேறென்றிலாதன" (தேவா - திருவிருத்தம்) என்ற கருத்தை ஈண்டு வைத்துக் காண்க.

ஆமா றறியாமே வல்வினைக ளந்தரத்தே
நாமாளென் றேத்தார் நகர்மூன்றும் - வேமா
றொருகருணையாற் செற்றானை யுள்ளத்தா லுள்கி
யருகருணையா தாரை யடும். 34

சிவபெருமானை நினைந்து அணையாதாரை வல்வினைகள் அடரும்; அவை ஆமாறு அறியாவேனும் அது செய்வது இறைவனாணையாலாம்.

அணையாரை வினைகள் - அடும்; அறியாவேனும் ஆணையாற் செய்யவல்லன. அறியாமேயும் என்று இழிவு சிறப்பும்மை தொக்கது. "ஆணையின், இருவினையின்" (போதம் - 2); ஏத்தார் நகர் செற்றானுடைய ஆணையால், அணையாதாரை வினைகள் அடும் என்று அவனுடைய ஆணையினாலே வினைகள் வந்திடும் என்றபடி. ஆம் ஆறு - வினை விளையும் கதி நிமித்தம்பற்றி யுளதாம் நெறி. அடுதல் - இங்குத் தீவினைப் பயனாகிய துன்ப நுகர்விக்கும் செயல் குறித்தது. "சேராதார் தீநெறிக்கே சேர்கின்றாரே" (தேவா).

அறியாவே - என்பதும் பாடம்.

அடுங்கண்டாய் வெண்மதியென் றஞ்சி யிருள்போந்
திடங்கொண் டிருக்கின்ற தொக்கும் - படங்கொள்
அணிமிடற்ற பேழ்வா யரவசைத்தான் கோல
மணிமிடற்றி லுள்ள மறு. 35

இறைவரது மிடற்றில் உள்ள விடத்தினது கறுப்பு, தன்னை மதி அடருமென்று அஞ்சி இருள் புகலடைந்து தங்குமிடம் போன்றது.

இருள் அஞ்சிப்புகலடைந்தது போலும் என்பது தற்குறிப்பேற்ற உவமை அணி. **இடங்கொண்டிருக்கின்றது** - புகலடைந்தது; **மறு** - மறுப்போன்ற விடத்தின் கருநிறத்தை; மறு என்றதுபசாரம். **கண்டாய்** - அசை.

மறுவுடைய கண்டத்தீர்! வார்சடைமே னாகந்
தெறுமென்று தேய்ந்துழலு மாவா! - வுறுவான்
றளரமீ தோடுமேற் றானதனை யஞ்சி
வளருமோ பிள்ளை மதி. 36

திருநீலகண்டரே! உமது சடையின்மே லிருக்கும் அரவு தன்னை வந்தடர்க்கு மென்று எண்ணித், தேய்ந்து, பிள்ளைமதி வருந்தும்; அதன் மேலும்அது தளரும்படி மேல் வந்து ஓடுமாகில் மதி வளர்தலும் கூடுமோ?

தற்குறிப்பேற்ற அணி. இறைவரது சடைமேற்றாங்கிய பிறை வளராது ஒரே தன்மையதாய் நிற்றலுக்குக் காரணங் கற்பித்தபடி; **ஆ ஆ!** - இரக்கக் குறிப்பு; அம்மையார் தாயாந்தன்மையிற் **பிள்ளைமதி**க் கிரங்கிய நிலை; **பிள்ளை** - என்ற குறிப்புமது.

மதியா வடலவுணர் மாமதின்முன் றட்ட
மதியார் வளர்சடையி னானை - மதியாலே
யென்பாக்கை யாலிகழா தேத்துவரே லிவ்வுலகில்
என்பாக்கை யாய்ப்பிறவா ரீண்டு. 37

சடையினானை யிகழாது ஏத்துவரேல் உலகில் உடம்பெடுத்துப் பிறவார்.

என்பு ஆக்கையால் - எலும்புகளை மாலையாகக் கோத்து அணிதலால்; இகழ்தற்குக் காரணம் கூறியபடி. **மதியாலே ஏத்துவரேல்** - என்று கூட்டுக. "அயர்வாள் **மதியினாலே** சென்னியிளம் பிறையணிவார் கோயில் வாயிற் றிசைநோக்கிக் கைதொழுதாள்" (திருஞான - புரா - 475); **என்பு ஆக்கையாய்** - எலும்பினால் தாங்கப்பட அமைந்த உடம்புடையராய். இனம்பற்றி எலும்பில்லாத உடம்பும் கொள்க. **ஈண்டு** - இவ்வுலகமேயன்றிப் பிறவி சேரும் எவ்வண்டமும் கொள்க. சிவனை ஏத்துவோர் பிறவாமை பெறுவர் என்பது.

ஈண்டொளிசேர் வானத் தெழுமதியை வாளரவந்
தீண்டச் சிறுகியதே போலாதே - பூண்டதோர்
தாரேறு பாம்புடையான் மார்பிற் றழைந்திலங்கு
கூரேறு காரேனக் கொம்பு. 38

சிவபெருமான் மார்பில் விளங்கும் பன்றிக் கொம்பு சந்திரனை அரவம் தீண்டச் சிறுகியது போலும்.

வெள்ளியதாய் வளைந்துள்ள பன்றிக்கொம்பு சிறுகிய பிறைபோன்றது என்பதும், பிறை சிறுகியதற்குக் காரணம் அரவந்தீண்டியது போலும் என்பதும் ஆம். தற்குறிப்பேற்றத்தை உள்ளுறுத்த உவமையணி. **ஒளிசேர்வானம்** - பரந்து சிவந்த மார்புக்கும் **பிறை** - எனக்கொம்புக்கும் உவமை. **போலாதே** - ஏகாரம் எதிர்மறை. போலும் என்றபடி. **கார் - ஏனக்கொம்பு** - கரியவிட்டுணு வராக அவதாரத்தில் அர்ப்பணம் செய்த கொம்பு. "ஐயிரு பிறப்பினு மரியருச் சித்தலின்" (சுலோக பஞ்சகம்). தாரேறு - மாலை போலும். ஏறு - உவம உருபு. "ஏன முளைக்கொம்பவை பூண்டு" (தேவா.)

கொம்பினையோர் பாகத்துக் கொண்ட குழகன்றன்
அம்பவள மேனி யதுமுன்னஞ் - செம்பொன்
அணிவரையே போலும் பொடியணிந்தான் வெள்ளி
மணிவரையே போலு மறித்து. 39

உமை அம்மையாரை ஒரு பாகத்திற் கொண்ட ஐயனது பவளம் போன்ற திருமேனி முன்னர்ப் பொன்மலை போலவும், திருநீறு பூசினால் மீண்டும் வெள்ளி மலை போலவும் இருக்கும்.

கொம்பு - பூங்கொம்பர் போன்ற உமையம்மையார். உவம ஆகுபெயர். **செம்பொன் அணிவரை** - அணிமிகுதியு மணிந்த அம்மை பாகம் பொன்மலை போலும் என்பதும் குறிப்பு. திருமேனி ஒன்றே பவளமலையும் பொன்மலையும் வெள்ளிமலையும் போல உள்ளது என வியந்து கூறியது.

மறித்து மடநெஞ்சே வாயாலுஞ் சொல்லிக்
குறித்துத் தொழுதொண்டர் பாதங் - குறித்தொருவர்
கொள்ளாத திங்கட் குறுங்கண்ணி கொண்டார்மாட்
டுள்ளாதார் கூட்ட மொருவு. *40*

மடநெஞ்சே! தொண்டர் பாதம் மறித்துக் குறித்து வாயாலும் சொல்லித் தொழு; சிவனை நினையாதவர் கூட்டத்தை நீங்கு.

மடநெஞ்சமே! உனது அறியாமை நீங்க உபாயம் சொல்கின்றேன் என்பது; உபாயமாவது தொண்டர் பாதம் தொழுவதும் அல்லாதார் கூட்டம் ஒருவுதலுமாம். **ஒருவுதல்** - நீங்குதல்; தொண்டர் பாதம் தொழுதலே யமையும்; ஒருவுதல் எற்றுக்கு எனின், "அல்லாதார் அஞ்ஞானத்தை யுணர்த்து வாராதலான்" என்பது சிவஞானபோதம். "மறப்பித்துத், தம்மை மலங்களில் வீழ்க்கும், சிறப்பில்லாத தந்திரத்துச் சேர்வை - யறப்பத்துப், பத்த ரினத்தாய்ப் பாணுணர்வீ ஞலுணரும், மெய்த்தவரை மேவா வினை" (*12* சூத்.); "தொண்டர் வரிற்றொழுது" (*1721*); "நம்பரடி யாரணைந்தானல்ல திருவமுதளித்தும்....... வேண்டுவ கொடுத்தும்" (*1731*) என்றுவரும் புராண வரலாற்றுக்கு அகச்சான்று. மறித்தும் - மீண்டும் மீண்டும் எப்போதும்; **குறித்து** - குறிவைத்து; குறிக்கோளாகக் கொண்டு; **தொழு** - கைகூம்பச் செய்து முக்கரணங்களாலும் தொழுதல் கூறப்பட்டது.

ஒருபா லுலகளந்த மாலவன மற்றை
யொருபா லுமையவளா மென்றால் - இருபாலும்
நின்னுருவ மாக நிறந்தெரிய மாட்டோமால்
நின்னுருவோ மின்னுருவோ நேர்ந்து. *41*

ஒரு பாகத்தில் திருமாலும் மற்றை ஒரு பாகத்தில் உமையம்மையாரும் இருப்பர்; ஆதலின் இருபாலும் உனது தனி உருவம் இன்னவாறு என்று நிறத்தால் தெரியமாட்டோம்; ஆதலால் திருமால் உமது உருவமா? உமை உமது உருவமா? என்று வினவியபடி.

"பிரிவிலா வமரர்கூடிப் பெருந்தகைப் பிரானென் றேத்தும், அரியாலாற் றேவியில்லை யையனை யாறனூர்க்கே" (நேரிசை) என்றபடி திருமால் இறைவனின் சத்தியாதலின் ஒரு பாகத்துக்குரியவர்; சங்கரநாராயணர் கோயிலில் இத்திருவுருவம் தேற்றமாய் வழிபடப்படுகின்றது. **இருபாலும்..... நிறந்தெரிய மாட்டோம்** - "விரைக்கம லத்தோன் மாலு மேவலான் மேவி னோர்கள், புரைத்ததி கார சத்தி புண்ணிய நண்ணலாலே" (சித்தி. *34*); அரியர்த்த வடிவம் முதலான இருபத்தைந்தும் சத்திவடிவங்களே. அச்சத்தியின் கூறுகிய ரோதயித்திரி சத்தி, திருமாலை அதிட்டித்து நின்று காத்தற்றொழிலை நடாத்துதலின் அச்சத்திக்கு

அதிட்டானமா யமைந்த திருமாலின் வடிவமும் இறைவனுக்குச் சத்திவடிவமாக உபசரித்து வழங்கப்படும். திருமால் வடிவம் பிரதிட்டா கலையின்பால தாகலின், சாந்திகலையின் பாலுள்ள மகேசுர வடிவத்துள்ளதாகக் கூறல் அதிட்டிக்கும் சத்தியி னியைபாலேயாம் என்பது உய்த்துணர்ந்து கொள்ளப்படும். அயன் திருமால் வடிவங்கள் பிராகிருதமாகலின் அவை சிவதாதன்மிய சத்தி வடிவமாதல் பொருந்தாமையும் அறியற்பாற்று. சிவபிரான், சனனி - ரோதயித்திரி - ஆரணி என்னும் சத்திகள் மூன்றினாலும் தோற்றம் - நிலை - இறுதி என்றும் முத்தொழில் செய்யும் வடிவங் கொண்டருளி மகேசுர தத்துவத்தில் வைகுவன். அவ்வடிவங்கள் போலவே, பிராகிருத புவனத்து முத்தொழில் செய்யும் முச்சத்திகளால் அதிட்டிக்கப்படும் அயன் அரி அரன் என்போர்க்கும் வடிவங்கள் உளவென்பது "புவம்வளி புனல்" என்னும் ஆளுடைய பிள்ளையாரது சிவபுரம், பண் - நாட்டபாடைப் பதிகத்தின் முதன் மூன்று திருப்பாட்டினுங் காணலாம்.

கருத்துக்கேற்ப இப்பாட்டிலும் இறைவரது பெயர் மறைந்து அவாய் நிலையாற், பொருள் செய்ய நிற்பதும் காண்க.

நேர்ந்தரவங் கொள்ளச் சிறுகிற்றோ? நீயதனை
யீர்ந்தளவே கொண்டிசைய வைத்தாயோ? - பேர்ந்து
வளங்குழலித் தாய்வளர மாட்டாதோ? வென்னோ?
விளங்குழவித் திங்க ளிது. 42

இளம்பிறை யிதுதான், பாம்பு கவர்ந்ததனாற் சிறுகியதோ?; அன்றி, நீ பிளந்து அதனை அவ்வளவிற் பொருந்த வைத்தனையோ? வளமுடைய மிக்க இளமையால் வளரமாட்டாதோ?; என்னோ?

திங்கள் விரிதல் சுருங்குதல் முதலியன இன்றி என்றும் ஒரு தன்மைத்தாகி இறைவரது சடையில் மூன்றாம்பிறையா யிருப்பதற்குத் தற்குறிப்பேற்ற அணி வகையால் பல காரணங்களைக் கற்பித்தவாறு. இது அம்மை நேரில் அணிமையிற் கண்ட செய்தி குறித்தது. 22ஆவது பாட்டும் பிறவும் பார்க்க. என்னோ? - இரக்கக் குறிப்பு.

திங்க ளிதுசூடிச் சில்பலிக்கென் றூர்திரியேல்;
எங்கள் பெருமானே யென்றிரந்து - பொங்கொளிய
வானோர் விலக்காரேல் யாம்விலக்க வல்லமே?
தானே யறிவான் றனக்கு. 43

எமது இறைவரே! திங்களைச் சூடிக்கொண்டு, சிறு பலிக்கு ஊரூர் திரிய வேண்டாம் என்று ஒளியுடைய தேவர்கள் விலக்காவிட்டால் இயல்பாகவே எல்லா அறிவுமுடைய பெருமானை யாமே விலக்க வல்லோம்?

திங்களிது சூடி - உலகத்தை விளக்கி யமுது அளிக்கும் திங்களைச் சூடியவர் பலி திரிதல் வேண்டா என்பது குறிப்பு; **சில்பலி** - சிறு பிச்சை; **ஊர்** - ஊர்தோறும்; **ஒளிய வானோர்** -

ஒளியுடையமையால் தேவர் எனப்படுவார். **திவ்** - ஒளி; ஒளியாவது தவ வலிமையும் அறிவுடைமையும். **யாம்** - ஒளியும் அறிவும் இல்லாத யாம்; **தானே அறிவான்** - இயல்பாகவே முற்றறிவுடையவர்; **தனக்கு** - தன்னை. நான்க னுருபு இரண்டனுருபாய் வந்த உருபு மயக்கம்; தாமே இயல்பாகவே முற்றறிவுடையாரைத் தெருட்ட வல்லவர் யாவர்? என்பது; **என்றறிந்து** - என்பதும் பாடம்.

தனக்கே யடியனாய்த் தன்னடைந்து வாழும்
எனக்கே யருளாவா றென்கொன் - மனக்கினிய
சீராளன் கங்கை மணவாளன் செம்மேனிப்
பேராளன் வானோர் பிரான். 44

தமக்கே யடியனாய்த் தம்மையே தஞ்சமாக அடைந்து வாழும் எனக்கு இறைவர் அருளாதவாறு என்னே!

தனக்கே - வேறொருவர்க்குமின்றி என ஏகாரம் பிரிநிலை. 3ஆவது பாட்டுப் பார்க்க. "பொதுநீக்கித் தனைநினைய வல்லார்க் கென்றும் பெருந்துணையை" (தேவா); **தன்னடைந்து** - இரண்டனுருபு தொக்கது. தஞ்சமாக அடைந்து; **எனக்கே** - ஏகாரம் அசை. **கொல்!** இரக்கக் குறிப்புத் தரும் அசை நிலை; **மனக்கு** - அத்துச்சாரியை புணர்ந்து கெட்டது.

பிரானவனை நோக்கும் பெருநெறியே பேணிப்
பிரானவன்றன் பேரருளே வேண்டிப் - பிரானவனை
எங்குற்றா ? னென்பீர்க ?; ளென்போல்வார் சிந்தையினும்
இங்குற்றான்; காண்பார்க் கெளிது. 45

சிவனையே குறிக்கொள்ளும் சிவநெறியினையே விரும்பி அவனது அருளினைப் பெறுதலன்றி வேறொன்றும் கருதாது அவன் எங்குற்றான் என்று காணும் தீவிர எண்ணமுடையீர்களே! காண்பார்க்கு அவ்வாறு எளியனாய் என்போல்வார் சிந்தையினும் விளங்கி இங்குற்றான்.

பிரான் - சொற் பொருட் பின் வருநிலை. மும்மையினும் சிவனே பெருமான் என்றது குறிப்பு. இவை முறையே முழுமுதற்றன்மை, பேரருளுடைமை, எங்கு நிறைதல் என்ற இயல்புகளின் குறிப்புமாம்: "மன்னு சிவன்" (போதம். 5 வெண்) சிற்றுரை பார்க்க. **நோக்குதல்** - அழுந்தியறிதல்; **பெருநெறி** - ஒளி நெறி, சிவநெறி என்றறியப்பட்டது. ஏனை எல்லா நெறிகளும் தன்னுள் வந்து கூடுதலால் பெருநெறி எனப்பட்டது. "பெருநெறிய பிரமாபுரம்" (தேவா). "**எங்குற்றான்?**" என்பீர்கள்! - விளி; என்பீர்களே; "சிவன் எவ்விடத்தான்? எவர் கண்டனர்? என் றோடிற்றிலேன்" (திருவா). **எளிது - அன்பர் சிந்தையில் அரன் விளங்க வீற்றிருத்தலின், அங்கு அவனைக் காண்பதெளிது என்பது குறிப்பு. என்போல்வார் சிந்தையினும்** - உம்மை இழிவு சிறப்பு. "என்போ லிகள்பறித் திட்ட இலையு முகையுமெல்லாம், அம்போ தெனக்கொள்ளும்" (திருவிருத்).

எளிய திதுவன்றே! யேழைகாள்! யாதும்
அளியீ! ரறிவிலீ! ராவா - வொளிகொண்மிடற்
றெந்தையரராப் பூண்டுழலு மெம்மானை யுண்ணினைந்த
சிந்தையராய் வாழுந் திறம். 46

சிவபெருமானை உள்ளே நினைந்துள்ள சிந்தையுடையவராகவே வாழ்கின்ற திறமானது எளிதன்றே! ஏழை மக்களே! சிறிதும் அளியற்றிருக்கின்றீர்கள்! அறிவில்லாதிருக்கின்றீர்களே! ஆ! ஆ!.

இறைவரைப் பற்றிய சிந்தை நீங்காது வாழும் திறம் எளிதிற் கூடுவதன்று; அளி பெருக்கினால் அது கூடுவது. இது எளிதேயாம் என்றலுமொன்று. **அளி** - கருணை. **அளியீர்** - அளியில்லாதீரே! அளிவள ருள்ளத் தானந்தக் கனியே (திருவிசைப்பா). **யாதும் அளியீர்** - அடியார்க்கு ஒன்றும் தரமாட்டீர் என்றலுமாம். **ஆ! ஆ!** இரக்கக் குறிப்பு.

திறத்தான் மடநெஞ்சே சென்றடைவ தல்லாற்
பெறத்தானு மாதியோ பேதாய் - நிறத்த
விருவடிக்க ணேழைக் கொருபாக மீந்தான்
றிருவடிக்கட் சேருந் திரு. 47

உமையம்மையாருக்கு ஒரு பாகம் ஈந்த இறைவரது திருவடியின் கண்ணே சேர்கின்ற முத்தித் திருவானது, இடைவிடாது சிந்திக்கத் தரும் திருவருளின் திறத்தானன்றி, மடநெஞ்சே. வேறு உனது ஆன்மபோத முயற்சி விதத்தாற் பெறுதற்குரிமையுடையை யாவையோ? (ஆகாய்);

திறம் - அருட்டிறம்; ஏகனாகி யிறைபணி நிற்றலும், சிவனருள் கண்டுகாட்டக் காண்டலுமாகிய தன்மைகள். **நிறத்த** - நிறம் பொருந்திய; **இரு-வடி-கண்-ஏழை** - பெரிய கூர்மையுடைய கண்களையுடைய உமையம்மையார்.

திருமார்பி லேனச் செழுமருப்பைப் பார்க்கும்;
பெருமான் பிறைக்கொழுந்தை நோக்கும் - ஒருநாள்
இதுமதியென் றொன்றாக வின்றளவுந் தேரா
ததுமதியொன் றில்லா வரா. 48

மதியில்லாத அரவு, இறைவரது மார்பில் அணிந்த பன்றிக் கொம்பினைப் பார்க்கும்; சடையிற் சூடிய பிறைக் கொழுந்தினைப் பார்க்கும்; இவ்வாறு இன்றுவரை இவ்விரண்டனுள் இதுதான் மதி என்று தேறாது நிற்கும்.

மதி - சந்திரன்; இதுதான் என்று தெளிந்து நிச்சயிக்க லாகாமையின் பிறையினைத் தீங்கு செய்து மறைக்க முடியாது நிற்கின்றது என்று காரணங் காட்டிய தற்குறிப்பேற்ற அணி. **மதியிலாமையின் - தேராது** என்று தேராமைக்குக் காரணங் காட்டும் வகையால் உடம்பொடு புணர்த்தி ஓதினார். மயக்கவணி. **மதியொன்று** - ஒன்றும் - ஒரு சிறிதும். "ஓர் ஊனுமுறக்கமுமின்றி" (பொன் வண் - அந் - 34) **ஒருநாள்** - ஒரு நாளேனும்.

அராவி வளைத்தனைய வங்குழவித் திங்கள்
விராவு கதிர்விரிய வோடி - விராவுதலாற்
பொன்னோடு வெள்ளிப் புரிபுரிந்தாற் போலாவே?
தன்னோடே யொப்பான் சடை. 49

இளம் பிறையின் வெள்ளிய கதிர்கள் விரிய ஓடிப் பொருந்துதலால் பொன்னிழையோடு வெள்ளியிழை புரிந்தாற் போலிருக்க மாட்டாவோ? தனக்குவமை யில்லாத இறைவரது சடை.

அராவி வளைத்தனைய - வெள்ளியை அராவி வளைத்தது போன்றது பிறையின் வடிவம். சடைகள் - செக்கர் வானத்தின் வடிவம்போன் றிருத்தலின் அவற்றின் மேல் பிறையின் வெண்கதிர் தோயப் பொன்னும் வெள்ளியும் சேர்த்துத் திரித்துப் புரிந்ததுபோலும். **தன்னோடே ஒப்பான்** - தன்னைத்தானே ஒப்பான். தன்னை ஒப்பார் வேறில்லாதவன்; இறைவரது சடையினை இப்பாட்டாற் கூறிய அம்மை, இணைந்த உமை யம்மையாரது குழற்சடையினை வரும்பாட்டிற் கூறும் இயைபு காண்க.

சடைமேலக் கொன்றை தருகனிகள் போன்று
புடைமேவித் தாழ்ந்தனவே போலும் - முடிமேல்
வலப்பாலக் கோலமதி வைத்தான்றன் பங்கிற்
குலப்பாவை நீலக் குழல். 50

இறைவரது வலப்பாகத்தில் சடைகளிற் சூடிய கொன்றை மலர்கள் தந்த கனிகள் தொங்குவன போன்றுள்ளன அவரது இடப்பாகத்தில் அமரும் அம்மையாரது கரிய நீண்ட கூந்தலின் சடைகள்.

பூவும் கனியும் ஒருங்கே காணவுள்ளது கொன்றையின் இயல்பு; அதன் கனிகள் கரியனவாய் நீண்டு தொங்குபவை உமை அம்மையாரின் குழற்சடை போன்றன என்பது. கொன்றை, ஐயன் சடைமேற் சூடும் சிறப்பாயுரிய திருவடையாள மாலை. குழற்சடை கொன்றைக் கனிபோன் றமைதலுக்குரிய உமைக்குப் பொருத்தம் கற்பித்தவாறு. முன் பாட்டில் ஐயனது சடைச்சிறப்புக் கூறிய அம்மையார் இப்பாட்டில் அயலே உள்ள உமை அம்மை குழற்சடையினை அணிந்து போற்றுகின்ற இயைபும் காண்க. **அக்கோலமதி** - முன்பாட்டிற் சடையினை அணிசெய்வதாய்க் கூறிய அந்த மதி என அகரம் முன்னறிசுட்டு.

குழலார் சிறுபுறத்துக் கோல்வளையைப் பாகத்
தெழிலாக வைத்தேக வேண்டா - கழலார்ப்பப்
பேரிரவி லீமப் பெருங்காட்டிற் பேயோடும்
ஆரழல்வாய் நீயாடு மங்கு. 51

நள்ளிரவில் ஈமப்பெருங்காட்டில் தீயினடுவில் பேயோடும் நீ ஆடும் அங்கும் இறைவரே உம்முடைய பாகத்தில் உமையம்மையாரை வைத்துக்கொண்டு செல்லவேண்டா.

பேரிரவு - நள்ளிரவு: **ஈமப்பெருங்காடு** - உலகம் சங்கரிக்கப்பட்ட இடம். சங்காரத்தின் பின்னும் புனருற்பவத்தின் முன்னும் உள்ள காலமும் இடமும் இவ்வாறு குறிக்கப்படுதல் மரபு. **ஆர் அழல்** - உலகை அடும் தீப்பெருக்கு. காலமும் இடமும், தீச்சூழலும், பேய்ச்சுற்றமும் பெண்ணினல்லாள் உடனிருத்தற்கு ஏற்றதன்று என்பதாம். **அங்கு** - மேற்குறித்த அவை எல்லாவற்றினிடை எனப் பொருள் தந்தது. **ஆடும்** - என்பது புனருற்பவங் கருதிய அருட்கூத்து. சங்காரக் கிரமத்தில் சிவத்தில் ஒடுங்கிய சத்தி, சிருட்டிக் கிரமத்தில் வெளிப்படுங்காலம் இத்திருக்கூத்தின் பின் உளதாதலின், ஒடுங்கிய சத்தியுடன் தனிநின் றுடுதலாயிற்று அதனைப் **பாகத்தெழிலாக வைத்து ஏகவேண்டா** என்றுபசரித்துக் கூறினர். அம்மையாரது தாய்போன்ற அன்பின்றிறமும் காண்க.

அங்கண் முழுமதியஞ் செக்க ரகல்வானத்
தெங்கு மினிதெழுந்தா லொவ்வாதே - செங்கட்
டிருமாலைப் பங்குடையான் செஞ்சடைமேல் வைத்த
சிரமாலை தோன்றுவதோர் சீர். 52

ஐயனது செஞ்சடைக் கற்றையின்மேல் வைத்த சிரமாலை தோன்றும் அழகிய சிறப்பானது அகன்ற செவ்வானத்தில் அழகிய முழுமதியம் எங்கும் எழுந்தாற் போலும்.

செக்கர் அகல்வானம் - சிவந்து நீண்டு விரிந்த சடைக்கற்றைக்கும், **சிரமாலை** - முழுமதியங்கள் பலவற்றின் கோவைக்கும் உவமை. "செஞ்சடைக் கற்றை முற்றத்திளநிலா வெறிக்குஞ் சென்னி" (கோயில் - நேரிசை); சிரமாலையின் ஒவ்வொரு சிரமும் ஒவ்வோர் முழுமதிபோன்று விளங்கும் என்பது. **ஒவ்வாதே** - செக்கரில் முழுமதியம் பல கோத்து எழுந்தாலும் இதன் சீருக்கு ஒப்பாகாது; ஏகாரம் தேற்றம். **எழுந்தாலும்** - இழிவு சிறப்பும்மை தொக்கது. **செங்கண் திருமாலைப் பங்குடையான்** - 41ஆவது பாட்டுப் பார்க்க. **சீர்** - அழகு. **சீருக்கு** - என நான்கனுருபு தொக்கது. **இனிது எழுதல்** - கதிர்ப்பரப்பி விளங்குதல்.

சீரார்ந்த கொன்றை மலர்தழைப்பச் சேணுலவி
நீரார்ந்த பேரியாறு நீத்தமாய்ப் - பேரார்ந்த
நாண்பாம்பு கொண்டசைத்த நம்மீசன் பொன்முடி தான்
காண்பார்க்குச் செவ்வேயோர் கார். 53

கொன்றை மலர்கள் தழைத்தலாலும், பேராறு பெருக்கெடுத்தலாலும் இறைவரது திருமுடி கார்காலத்தை ஒக்கும்.

கொன்றை மலரும் பருவமும், நதிகள் பெருகுங் காலமுமாதலின் கார்காலம் உவமையாயிற்று. **மலர் தழைத்தல்** - பூத்தல்; **பேரியாறு** - கங்கை; **ஒக்கும்** என்ற பயனிலை தொக்குகின்றது. **முடி ஓர் கார்** எனப் பெயர்ப் பயனிலைகொண்டு முடிந்தெனினுமாம். **பாம்பு நாண்கொண்டு** என்க. **அசைத்தல்** - விரிந்த சடையைக் கட்டுதல்.

காருருவக் கண்டத்தெங் கண்ணுதலே! யெங்கொளித்தாய் ?
ஓருருவாய் நின்னோ டுழிதருவான் - நீருருவ
மேகத்தாற் செய்தனைய மேனியா னின்னுடைய
பாகத்தான் காணுமே பண்டு. 54

கண்ணுதலே! உம்மோடு ஒருருவாய் ஒரு பாகத்தில் உள்ள திருமால் காணு வகை பண்டொரு காலத்து எங்கு ஒளித்தாய்?

கார் உருவத்து - விடம், இறத்தல் செய்யும் தனது தீங்கு நீங்கிக், காத்தல் செய்யும் காரினது உருவத்தில் அமர்ந்த; **காணுமே - எங்கு ஒளித்தாய்** - என்று கூட்டுக. **பண்டு** - அடிதேடி அறியமுடியாத அந்நாளில். **நின்னோடு உழிதருவான்** - பாகத்தானும் காணுமே என்க. **ஒருருவாய் நின்னோடு உழிதருவான்** - ஒருரு - என்றது தாருகவனத்தில் பிச்சைக்கு நீ உழிதரும்போது அதற்கொத்தபடி கொண்ட மோகினி உருவத்தை. இதற்கு ஒருடம்பு என்றுரைத்தனர் முன்னுரைகாரர்; அது **பாகத்தான்** என்றதனுற் பெறப்படுகின்றமையிற் கூறியது கூறலாய் வழுவாம் என்க. **நீருருவ மேனியான்** - காரினது நீல நிறமுடையவன்; விட்டுணு; நீர் வெண்ணிறமாதலின் பண்டை வெண்ணிறமுடைய விட்டுணு என்றலுமாம். அப்பு தத்துவ நிலையராதலும் குறிப்பு. **பாதத்தான்** - என்பதும் பாடம்.

பண்டமர ரஞ்சப் படுகடலி னஞ்சுண்டு
கண்டங்க றுத்ததுவு மன்றியே - யுண்டு
பணியுறுவார் செஞ்சடைமேற் பான்மதியி னுள்ளே
மணிமறுவாய்த் தோன்றும் வடு. 55

பணி உறுவார் - பாம்புகளை அணிந்த இறைவர்; பண்டு - முன் ஒரு காலத்தில்; அமரர் அஞ்சக் கடலிற் படும் நஞ்சுண்டு - தேவர்கள் அஞ்சும்படி கடலில் எழுந்த நஞ்சினை உண்டதனுல்; கண்டம் கறுத்ததுவும் அன்றியே - மிடறு கறுத்ததுவுமல்லாமல்; செஞ்சடைமேற் பால் மதியினுள்ளே மணி மறுவாய்த் தோன்றும் வடு உண்டு - சிவந்த சடையின் மேலே சூடும் பால்போல வெள்ளிய மதியினுள்ளே வடுவும் உண்டு.

நஞ்சம் உண்டதனுல் இறைவரது கண்டம் கறுத்தது; அதனோடு அமையாது சடையிற் சூடிய பிறையினும் மறுவாகிய வடு வுண்டாயிற்று. விடத்தின் கொடுமை யுணர்த்திய உயர்வு நவிற்சி யணி. யாழ் இயற்று வோர்பாற் சார்ந்த சீதம் யாழினையும் தாக்கி, யாழ் வீக்கழியும் என்று யாழ்ப்பாணர்க்கு இறைவர் பலகையிட்ட வரலாறு இங்கு நினைவு கூர்தற்பாலது; "பாணர் பாடுஞ், சந்தயாழ் தரையிற் சீதந் தாக்கில் வீக்கழியுமென்று, சுந்தரப் பலகை முன்னீ ரிடுமெனத் தொண்ட ரிட்டார்" (திருநீலகண்ட யாழ்ப்பாணர் புராணம் 6.) பணியுறும் - வார்-(நீண்ட) சடை என்று கூட்டி உரைப்பாருமுண்டு. **பான்மதி - பால்** - பான்மை. நல்லூழ் - உடைய என்று கொண்டு உரைத்தலுமாம். **மணி மறுவாய்** - வடுவாயினும் அழகாய்த் தோன்றும் என்றபடி. **வடுவுந் தோன்றும்** என உம்மை விரித்துரைக்க.

வடுவன் றெனக்கருதி நீமதித்தி யாயிற்
சுடுவெண் பொடிநிறத்தாய் சொல்லாய் - படுவெண்
புலாற்றலையி னுள்ளுண் புறம்பேசக் கேட்டோ
நிலாத்தலையிற் சூடுவாய் நீ. 56

திருநீறணிந்த மார்பனையுடையவரே! இறந்த பிரமனது மண்டை யோட்டில் பலி ஏற்று உண்டது குற்றமென்று புறத்தினுள்ளார் பேசக் கேட்டோ நீ நிலாவைத் தலையிற் சூடுவாய்; அது (கபாலத்திற் பலி உண்ணுதல்) குற்றமன்றென்று நீர் கருதுவீராகில் சொல்லுவீராக!

நிலாவைச் சூடுதல். மண்டையோட்டிற் பலி ஏற்றுண்டதற்கு ஒரு பரிகாரம் போல வுள்ளதென்று கற்பனை செய்தபடி. **புறம்** - புறத்தார் பேசும் ஏச்சு. **நீ** - முன்னையது, வடுவன்று என மதித்த நிலைக்கும், பின்னையது, வடுவாமென்று கொண்டு பரிகாரம் செய்தல் போன்று செயல் செய்த நிலைக்கும் வந்தன. **நிறம்** - மார்பு; **படு தலை** - இறந்த பிரமனது தலை ஓடு. **தலை - தலை** ஒட்டினுக்கு ஆகு பெயர்; **ஊண்** - உண்ணுதலை; இரண்டனுருபு விரிக்க. **ஊண்** -முதனிலை நீண்ட தொழிற்பெயர்.

நீயுலக மெல்லா மிரப்பினு நின்னுடைய
தீய வரவொழியச் செல்கண்டாய் - தூய
மடவரலார் வந்து பலியிடா ரஞ்சி
விடவரவ மேலாட மிக்கு. 57

இறைவரே! நீர் உலகமெங்குஞ் சென்றிரந்தாலும், உம்முடைய தீய பாம்பை விட்டுச் செல்வீராக; பாம்பு மேலே படம் விரித்தாடக் கண்டாற் பயந்து தூய பெண்கள் வந்து பலியிட மாட்டார்.

பாம்பினை அணியாதிருக்க மற்றுமொரு காரணங் கூறியபடி. 27, 28 முதலிய பாட்டுக்களில் முன் உரைத்தவையும் பிறவும் பார்க்க. அம்மையாரது தாயாகிய தலையன்பின் றிறத்தால் தெருட்டியவா றமைந்தது இத்திருப்பாட்டு. தூய - பலியிடுதலாற் றூய்மை யாதலை விரும்பிய நீர் பலிக்குச் செல்வது பலியிடும் அவரைத் தூய்மையாக்கும் அருளின் பொருட்டே யாதலின் அக்காரியத்தின் பொருட்டேனும் பாம்பினை அணிந்து, செல்லாதீர் என்றபடி. “தலத்துத் தன்னுழைத், துன்னிய யாவையுந் தூய்மை செய்வது” (375) என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க. (திருநீல - புரா. 16); மிக்கு மேலாட அஞ்சி - வந்து பலியிடார் என்க. **பலி யிட்டார்** - என்பதும் பாடம்.

மிக்க முழங்கெரியும் வீங்கிய பொங்கிருளும்
ஒக்க வுடனிருந்தா லொவ்வாதே - செக்கர்போல்
ஆகத்தான் செஞ்சடையு மாங்கவன்றன் பொன்னுருவிற்
பாகத்தான் பூங்குழலும் பண்பு. 58

இறைவரது செஞ்சடையும் உமையம்மையாரது கரிய குழலும் உடனிருத்தலுக்கு எரியும் இருளும் ஒன்று போலவே உடனிருந்தாலும் ஒப்பாகாது.

மிக்க முழங்கு - என்றும், **வீங்கிய பொங்கு** - என்றும் வரும் அடைமொழிகள் மிகுதியும் செறிவும் திணிந்த தன்மையும் குறித்தன. இல்பொரு ளுவமை. **உரு** - திருமேனி; மார்பு என்றலுமாம். 26-ம் பிறவும் பார்க்க. **ஒவ்வாதே** - ஏகாரம் தேற்றம். **பூங்குழல்** - அழகிய கரிய குழற்சடை - கூந்தல்; **கரிய** என்பது உவமைக்கேற்ப அவாய்நிலையான் வந்தது. **செம்மயிர்** - உயர்சாதிப் பெண்க ளிலக்கண மன்று என்பது நமது நாட்டு மரபு.

பண்புணர மாட்டேனு; னீயே பணித்துக்காண்
கண்புணரு நெற்றிக் கறைக்கண்டா! - பெண்புணரும்
அவ்வுருவோ? மாலுருவோ வானேற்ருய்! நீறணிவ
தெவ்வுருவோ நின்னுருவ மேல். 59

நுதலிற் கண்ணும், கழுத்திற் கறையுங்கொண்டு விளங்கும் இறைவரே! நீறு அணிவது நின்னுருவமாயின், அக்கூறு உமையம்மையாருடன் கூடிய உருவா? அன்றித் திருமாலுடன் கூடியவுருவமா? இதன் பண்பினை யான் உணருமாற்ருல் இல்லேன்; நீயே பணித்தருள்வாயாக.

உணரமாட்டேன் - உணர வலியில்லேன்; **பணித்துக் காண் - காண்** - உடன்பாட்டு வியங்கோள் விகுதி. இனி, காட்டிக் காண்பாயாக. "காண வுள்ளத்தைக் கண்டு காட்டலின்" (போதம் - 11. சூ.) என்றபடி நான் உணரும்படி நீ உணர்வாயாக என்றலுமாம் **கண் புணரும் நெற்றி** - நெற்றிக்கண் வேண்டும் போது திறப்பதாதலின் புணரும் என்ருர். **பெண் புணரும் அவ்வுரு** என்றது சங்காரத்தின்பின், சத்தியுடன் கூடிய நிலையைக் குறித்தலின், புணரும் - சேரும் என்ருர். தோற்றும் முறையில், முன்னர்க் கூடுவது சத்தியும், பின்னர்க் கூடுவது மாலும் ஆதலின் அம்முறையில் வைத்தார். **நீறு அணிவது - நின்னுருவமேல்** என்று கூட்டுக. நின் உருவமே நீறணிவது என்று மறைகள் முழங்கும். அற்ருயின் என்க. ஏல் - அயின் என்ற பொருள்படவரும் வினையெச்ச விகுதி. மேல் என்று கொண்டு ஏழனுருபாக வைத்து உருவத்தினிடத்து என்று கூட்டி உரைப்பாருமுண்டு.

மேலாய மேகங்கள் கூடியோர் பொன்விலங்கல்
போலா மொளிபுதைத்தா லொவ்வாதே - மாலாய
கைம்மா மதகளிற்றுக் காருரிவை போர்த்தபோ
தம்மான் றிருமேனி யன்று. 60

பெருமேகங்கள் ஏழும் சேர்ந்து ஒரு பொன்மலையினது ஒளியைத் தமக்குள் அடங்கப் புதைத்தாலும் அக்காட்சி இறைவன் அன்று யானைத்தோலைத் திருமேனி மேற் போர்த்தபோது கொண்ட காட்சிக்கு ஒப்பாகாது.

மேலாய மேகங்கள் கூடி என்றும், **ஓர்** என்றும், கூறிய இலேசால் மேகங்கூடி மறைப்பினும் பொன் ஒளியே மிக்கு மேலெழும் என்பது கருத்து. **காருரிவை** - கரியதோல்; உவமையிற் கூறிய அக் கார்போன்ற உரிவை என்றலுமாம். **அன்று போர்த்தபோது** என்க. **அன்று** என்பது யானையின் சங்காரகாலத்தையும், **போது** என்றது இதனுள் தோல் போர்த்த நிலையையும் குறித்தன. மேகங்கள் நீர் பெய்தல் போலக் களிறு மதம் பெய்தது என்பார் **மதகளிறு** என்ருர். பண்பும் உருவும் தொழிலும் பற்றிய உவமை. **உரிவை** - உரித்தலாற் பெறப்படுவது என்ற காரணம் பற்றித் தோலுக்குப் போந்த பெயர்; அறுவை - தறியினின்றும் அறுத்தலாற் பெறப்படுவது பற்றித் துணிக்கு வந்தது போல ஐகாரம் செயப்படு பொருளுணர்த்தும் விகுதி. **புதைத்தல்** - தனக்குள் ஆக்கி மூடுதல்.

*அன்றுந் திருவுருவங் காணுதே யாட்பட்டேன்
இன்றுந் திருவுருவங் காண்கிலேன் - என்றுந்தான்

எவ்வுருவோ னும்பிரா னென்பார்கட் கென்னுரைக்கேன்!
எவ்வுருவோ நின்னுருவ மேது? 61

அன்றும் உமது திருவுருவைக் காணுதே ஆட்பட்டேன்; இன்றும் அதனைக் காண்கில்லேன்; உமது பெருமான் எவ்வுருவினன் என்று கேட்பார்க்கு என்ன சொல்லுவேன்? உமது உருவந்தான் யாதோ? பணிப்பீராக.

அன்று - அருள் விளக்கம் பெருது உலகில் நின்று ஆட்செய்த நிலை; **இன்று** - அருள்பெற்றுச் சிவபூத நற்கணத்தி லொன்ருகப்பெற்று அதனுல் உலகை விட்டுத் திருக்கயிலையை அடையச் செல்லும் நிலை. முன்னது பெத்த நிலையும், பின்னது முத்தநிலையுமாம். முன்னர்த் தன்னையும் உலகையும் கண்டமையின் இறைவனுருக் காணுதாயிற்று; பின்னர் உலகையும் தன்னையும் காணுமையின் இறைவனுருவத்தை வேறு காணவியலாதாயிற்று; "பெத்தத்துந் தன்பணியில்லை பிறத்தலால், முத்தத்துந் தன்பணி யில்லை முறைமையால், அத்தர்க்கிரண்டு மருளா லளித்தலாற், பத்திப்பட் டோர்க்குப் பணியொன்று மில்லையே" (திருமந். 2628) என்ற கருத்து இங்குக் கருதுக. என்பார் என்றது உடனணைந்த அன்பர் கூட்டம். "குறித்துத் தொழுதொண்டா பாதம்" (40); ஏனை, அறியா வாய்மை எண்டிசை மாக்களின் பேச்சினை அம்மையார் பொருட்படுத்தாராதல் காண்க. அன்பர் கூட்டத்துள் "திரண்டு திரண்டுன் திருவார்த்தை விரிப்பார் கேட்பார் மெச்சுவார்" (திருவா) என்றபடி இறைவரது தன்மைகளே பேசப்படுதல் வழக்கு. ஏது - எத்தன்மையது.

ஏதொக்கு? மேதொவ்வா? தேதாகு? மேதாகா
தேதொக்கு மென்பதனை யாரறிவார்?- பூதப்பால்
வில்வேட ஞகி விசயனே டேற்றநாள்
வல்வேட ஞன வடிவு. 62

முன்னுளில் வில் ஏந்திய வேடராகி வந்து விசயனுடன் போர் செய்த அந்நாளில் வலியவேடனுகிய வடிவு எதனை ஒத்திருக்கும்? எதனை ஒத்திராது? அதற்குப் பொருந்துவது எது? பொருந்தாதது எது? எதனேடு பொருந்து மென்பதனை அறிவார் யாவர்? (ஒருவருமிலர்).

வேடனுக வந்த கிராதவேடம் இழிந்ததாதலின் உயர்ந்தவற்ருேடு பொருந்துமா? என்பனவாதி வினுக்கள் கிளம்ப நியாயமில்லை; இறைவர் இழிந்தவும் தாமே உயர்ந்தவும் தாமே என்று இதனுற் காட்டி நின்ருராதலின் என்பது. "ஏதவனூ ரேதவன்பே ராருற்ரு ராரயலார், ஏதவனைப் பாடும் பரிசு?" (திருவா. திருவெம் - 10) என்பதும் "கிராத வேடமொடு கிஞ்சுகவாயவள், விராவு கொங்கை நற்றடம் படிந்தும்", "கேவேட ராகிக் கெளிறது படுத்தும்" (திருவாசகம்) என்று மறைகளாற் போற்றப்படுதலும் காண்க. **பூதம்** - சென்ற காலம். **பூதப்பால்** - பூதகணங்களுள் ஒன்ருக வைத்து என்றலுமாம்.

வடிவுடைய செங்கதிர்க்கு மாருய்ப் பகலே
நெடிதுலவி நின்றெறிக்குங் கொல்லோ? - கடியுலவு
சொன்முடிவொன் றில்லாத சோதியாய் சொல்லாயால்
நின்முடிமேற் றிங்க ணிலா. 63

சோதியாய்! நின்முடிமேல் உள்ள பிறை செங்கதிரவனுக்கு மாறாகப் பகலிலே கதிர் வீசுமோ? சொல்க.

திங்கள் நிலாவை எறிக்குமோ என்க; **நிலா** - ஈண்டு மதியின் கதிர் குறித்தது; **வடிவுடைய செங்கதிர்** - ஞாயிறு; இறைவரது வலதுகண். குறைந்து இற்றொழியாது வளர்ச்சி பெறும் பொருட்டுத் தலையிற் சூடியபடியால் பகலிலும் எறிக்குமோ என்று வினவியபடி. **சோதியாய்** என்றதனால் அலகில் சோதியாகிய உமது திரு முன்பு ஞாயிறு முதலிய எச்சுடரும் அடங்கித் தோன்றுவதுபோல இத் திங்களும் அடங்கியே நிலா எறிக்கும்; ஆயினும் வளர்ச்சியும் பெறும் என்றது குறிப்பு. **ஓ - ஆல்** - அசைகள். **சொன்முடிவு ஒன்றில்லாத** - உணர்ந்தோதற்கரியவன்.

நிலாவிலங்கு வெண்மதியை நேடிக்கொள் வான்போல்
உலாவி யுழிதருமா கொல்லோ - நிலாவிருந்த
செக்கரவ் வானமே யொக்குந் திருமுடிக்கே
புக்கரவங் காலையே போன்று. 64

செவ்வானமே போன்ற திருமுடிக்குள் புக்கு, அரவம், ஒளி வீசும் பிறையினைத் தேடிப் பற்றும் பொருட்டுக் காற்றேபோல உலாவித் திரிதருமே?

நேடிக்கொள்வான் - தேடிப் பற்றும் பொருட்டு; மதியைப் பற்றுதல் பாம்பின் இயல்பாதலின் அதுபற்றி மதியிருந்த சடைமுடியில் பாம்பும் இயங்கும் காட்சிக்கு எடுத்த தற்குறிப்பேற்ற அணி; **அரவம் முடிக்கே - புக்கு - காலையே போன்று - உலாவி உழிதருமா?** என்று கூட்டுக. **முடிக்கு** - உருபு மயக்கம். **கால்** - காற்று; பாம்பு செல்லும் வேகத்தைக் குறிக்க வினைபற்றி வந்த உவமம். **நிலா** - முன்னையது கதிரையும், பின்னையது மதியையும் குறித்தன. **அந்த நிலா இருந்த** - என்று சுட்டு விரித்துக் கொள்க.

*காலையே போன்றிலங்கு மேனி; கடும்பகலின்
வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு; - மாலையின்
றாங்குருவே போலுஞ் சடைக்கற்றை; மற்றவற்கு
வீங்கிருளே போலு மிடறு. 65

அவருக்கு, உதய காலம்போன்று திருமேனி சிவந்து விளங்கும்; நடுப்பகல் போன்று அத்திருமேனியில் உள்ள வெண்ணீறு வெள்ளிதாய் விளங்கும்; அந்திமாலை மேற்கொண்ட இனிய உருவம் போன்று சடைக் கற்றை பொன்னொளியின் விளங்கும்; அதன்மேல் வேறு திணிந்த இருளே போன்று திருமிடறு விளங்கும்.

நாளின் பல கூறுகளாகவே இறைவனது திருமேனிப் பகுதிகளைக் கண்டு போற்றியது. நாள் முழுதும் சிவனாகவே கண்டு திளைக்கும் தன்மை. இது "பரமே பார்த்திருப்பர் - பதார்த்தங்கள் பாரார்" என்றும் "பார்த்த விடமெல்லாம் பரவெளியாய்த் தோன்ற" என்றும் உள்ள பெரியோர் இயல்பு. "நெருநலையாயின்றாகி நாளை யாகி நிமிர்புன் சடையடிக ணின்ற வாறே" என்று நின்ற திருத்தாண்டகத்துள் போற்றப்பட்ட உண்மையும், திருவுருத்திரத்தின் கருத்துமாம். காலதத்துவத்துள் இறைவனைக் கண்ட காட்சியுமாம். **அவற்கு - அவன்**

எவ்வுருவோ னும்பிரா னென்பார்கட் கென்னுரைக்கேன்!
எவ்வுருவோ நின்னுருவ மேது? 61

அன்றும் உமது திருவுருவைக் காணுதே ஆட்பட்டேன்; இன்றும் அதனைக் காண்கில்லேன்; உமது பெருமான் எவ்வுருவினன் என்று கேட்பார்க்கு என்ன சொல்லுவேன்? உமது உருவந்தான் யாதோ? பணிப்பீராக.

அன்று - அருள் விளக்கம் பெருது உலகில் நின்று ஆட்செய்த நிலை; **இன்று** - அருள்பெற்றுச் சிவபூத நற்கணத்தி லொன்ருகப்பெற்று அதனுல் உலகை விட்டுத் திருக்கயிலையை அடையச் செல்லும் நிலை. முன்னது பெத்த நிலையும், பின்னது முத்தநிலையுமாம். முன்னர்த் தன்னையும் உலகையும் கண்டமையின் இறைவனுருக் காணுதாயிற்று; பின்னர் உலகையும் தன்னையும் காணுமையின் இறைவனுருவத்தை வேறு காணவியலாதாயிற்று; "பெத்தத்துந் தன்பணியில்லை பிறத்தலால், முத்தத்துந் தன்பணி யில்லை முறைமையால், அத்தர்க்கிரண்டு மருளா லளித்தலாற், பத்திப்பட் டோர்க்குப் பணியொன்று மில்லையே" (திருமந். 2628) என்ற கருத்து இங்குக் கருதுக. என்பார் என்றது உடனணைந்த அன்பர் கூட்டம். "குறித்துத் தொழுதொண்டா பாதம்" (40); ஏனை, அறியா வாய்மை எண்டிசை மாக்களின் பேச்சினை அம்மையார் பொருட்படுத்தாராதல் காண்க. அன்பர் கூட்டத்துள் "திரண்டு திரண்டுன் திருவார்த்தை விரிப்பார் கேட்பார் மெச்சுவார்" (திருவா) என்றபடி இறைவரது தன்மைகளே பேசப்படுதல் வழக்கு. ஏது - எத்தன்மையது.

ஏதொக்கு? மேதொவ்வா? தேதாகு? மேதாகா
தேதொக்கு மென்பதனை யாரறிவார்?- பூதப்பால்
வில்வேட ஞகி விசயனே டேற்றநாள்
வல்வேட னை வடிவு. 62

முன்னுளில் வில் ஏந்திய வேடராகி வந்து விசயனுடன் போர் செய்த அந்நாளில் வலியவேடனுகிய வடிவு எதனை ஒத்திருக்கும்? எதனை ஒத்திராது? அதற்குப் பொருந்துவது எது? பொருந்தாதது எது? எதனேடு பொருந்து மென்பதனை அறிவார் யாவர்? (ஒருவருமிலர்).

வேடனுக வந்த கிராதவேடம் இழிந்ததாதலின் உயர்ந்தவற்ருேடு பொருந்துமா? என்பனவாதி வினுக்கள் கிளம்ப நியாயமில்லை; இறைவர் இழிந்தவும் தாமே உயர்ந்தவும் தாமே என்று இதனுற் காட்டி நின்ருராதலின் என்பது. "ஏதவனூ ரேதவன்பே ராருற்ரு ராரயலார், ஏதவனைப் பாடும் பரிசு?" (திருவா. திருவெம் - 10) என்பதும் "கிராத வேடமொடு கிஞ்சுகவாயவள், விராவு கொங்கை நற்றடம் படிந்தும்", "கேவேட ராகிக் கெளிறது படுத்தும்" (திருவாசகம்) என்று மறைகளாற் போற்றப்படுதலும் காண்க. **பூதம்** - சென்ற காலம். **பூதப்பால்** - பூதகணங்களுள் ஒன்ருக வைத்து என்றலுமாம்.

வடிவுடைய செங்கதிர்க்கு மாருய்ப் பகலே
நெடிதுலவி நின்றெறிக்குங் கொல்லோ? - கடியுலவு
சொன்முடிவொன் றில்லாத சோதியாய் சொல்லாயால்
நின்முடிமேற் றிங்க ணிலா. 63

சோதியாய்! நின்முடிமேல் உள்ள பிறை செங்கதிரவனுக்கு மாருகப் பகலிலே கதிர் வீசுமோ? சொல்க.

திங்கள் நிலாவை எறிக்குமோ என்க; **நிலா** - ஈண்டு மதியின் கதிர் குறித்தது; **வடிவுடைய செங்கதிர்** - ஞாயிறு; இறைவரது வலதுகண். குறைந்து இற்ருெழியாது வளர்ச்சி பெறும் பொருட்டுத் தலையிற் சூடியபடியால் பகலிலும் எறிக்குமோ என்று வினவியபடி. **சோதியாய்** என்றதனுல் அலகில் சோதியாகிய உமது திரு முன்பு ஞாயிறு முதலிய எச்சுடரும் அடங்கித் தோன்றுவதுபோல இத் திங்களும் அடங்கியே நிலா எறிக்கும்; ஆயினும் வளர்ச்சியும் பெறும் என்றது குறிப்பு. **ஓ** - **ஆல்** - அசைகள். **சொன்முடிவு ஒன்றில்லாத** - உணர்ந்தோதற்கரியவன்.

நிலாவிலங்கு வெண்மதியை நேடிக்கொள் வான்போல்
உலாவி யுழிதருமா கொல்லோ - நிலாவிருந்த
செக்கரவ் வானமே யொக்குந் திருமுடிக்கே
புக்கரவங் காலேயே போன்று. 64

செவ்வானமே போன்ற திருமுடிக்குள் புக்கு, அரவம், ஒளி வீசும் பிறையினைத் தேடிப் பற்றும் பொருட்டுக் காற்றேபோல உலாவித் திரிதருமே?

நேடிக்கொள்வான் - தேடிப் பற்றும் பொருட்டு; மதியைப் பற்றுதல் பாம்பின் இயல்பாதலின் அதுபற்றி மதியிருந்த சடைமுடியில் பாம்பும் இயங்கும் காட்சிக்கு எடுத்த தற்குறிப்பேற்ற அணி; **அரவம் முடிக்கே - புக்கு - காலேயே போன்று - உலாவி உழிதருமா?** என்று கூட்டுக. **முடிக்கு** - உருபு மயக்கம். **கால்** - காற்று; பாம்பு செல்லும் வேகத்தைக் குறிக்க வினைபற்றி வந்த உவமம். **நிலா** - முன்னையது கதிரையும், பின்னையது மதியையும் குறித்தன. **அந்த நிலா இருந்த** - என்று சுட்டு விரித்துக் கொள்க.

*காலேயே போன்றிலங்கு மேனி; கடும்பகலின்
வேலேயே போன்றிலங்கும் வெண்ணீறு; - மாலேயின்
ருங்குருவே போலுஞ் சடைக்கற்றை; மற்றவற்கு
வீங்கிருளே போலு மிடறு. 65

அவருக்கு, உதய காலம்போன்று திருமேனி சிவந்து விளங்கும்; நடுப்பகல் போன்று அத்திருமேனியில் உள்ள வெண்ணீறு வெள்ளிதாய் விளங்கும்; அந்திமாலே மேற்கொண்ட இனிய உருவம் போன்று சடைக் கற்றை பொன்னெளியின் விளங்கும்; அதன்மேல் வேறு திணிந்த இருளே போன்று திருமிடறு விளங்கும்.

நாளின் பல கூறுகளாகவே இறைவனது திருமேனிப் பகுதிகளேக் கண்டு போற்றியது. நாள் முழுதும் சிவனுகவே கண்டு திளேக்கும் தன்மை. இது "பரமே பார்த்திருப்பர் - பதார்த்தங்கள் பாரார்" என்றும் "பார்த்த விடமெல்லாம் பரவெளியாய்த் தோன்ற" என்றும் உள்ள பெரியோர் இயல்பு. "நெருநலேயாயின்ருகி நாளே யாகி நிமிர்புன் சடையடிக ணின்ற வாறே" என்று நின்ற திருத்தாண்டகத்துள் போற்றப்பட்ட உண்மையும், திருவுருத்திரத்தின் கருத்துமாம். காலதத்துவத்துள் இறைவனேக் கண்ட காட்சியுமாம். **அவற்கு - அவன்**

பண்டறி சுட்டு. மற்று **வீங்கும் - மற்று** என்பது முன் சொன்ன காலை - நண்பகல் - மாலை என்ற மூன்றற்கும் வேறுபட்ட என வினை மாற்றின்கண் வந்தது.

மிடற்றில் விடமுடையீ! ரும்மிடற்றை நக்கி
மிடற்றில் விடங்கொண்ட வாறே? - மிடற்றகத்து
மைத்தா மிருள்போலும் வண்ணம் கரிதாலோ?
பைத்தாடு நும்மார்பிற் பாம்பு. *66*

திருநீலகண்டரே! உமது மார்பிற் படம் விரித்தாடும் பாம்பு உமது மிடற்றை நக்கி மிடற்றில் விடங்கொண்டு கரிதாயினவாறே? அன்றி அதன் வண்ணந்தான் உமது மிடற்றினது மைபோன்ற இருளைப் போலக் கரியதா? (அறிகிலம்).

இறைவரது மார்பிற் புரளும் பாம்பிற்குக் கருமை போந்தது என்ன காரணம் என்று வினவியபடி. **மிடற்றை நக்கி விடங்கொண்டவாறே** என்றது தற்குறிப்பேற்றம். **மைத்தாம் இருள்** - மை குழைத்தது போன்ற இருள். "கருகு மையிருளின் கணம்" (இளையான் - புரா - 15). **விடங்கொண்டவாறே** - விடங்கொண்டு அதனாற் கரியதாயினவாறே என்றபடி. விடந்தீண்ட மேனி கருகும். "எயிறுங் கண்ணுமேனியங் கருகி" (அப்பூதி - புரா. 29). இப்பாட்டுக்கு இவ்வாறன்றி, நஞ்சை யடைந்ததனாலோ? இருளையொத்த நிறத்தைத் தான் பெற்றுக் கொண்டதனாலோ? பாம்பு ஆடும் - என்று பொருள் கொண்டனர் முன் உரைகாரர்.

பாம்பு மதியு மடமானும் பாய்புலியுந்
தாம்பயின்று தாழருவி தூங்குதலால் - ஆம்பொன்
உருவடிவி லோங்கொளிசேர் கண்ணுதலான் கோலத்
திருவடியின் மேய சிலம்பு. *67*

பாம்பும், மதியும், மானும், புலியும் பயின்று, கங்கையாறும் இழிதலால் இறைவரது திருவடியில் தரிக்கப்பெற்ற வீரக்கழல் அவர்க்கு உரியதாம்.

"பாம்போடு திங்கள் பகை தீர்த்தாண்டாய்" (தேவா) என்ற பகையுடைய பாம்பும் மதியும் பகையின்றி நன்றாகவிருக்க வைத்தலானும், அவ்வாறே மானும் புலியும் இருக்க வைத்தலானும், உலகை அழிக்கும் பெருக்குடன் ஆர்த்துவந்த கங்கையின் மிகை தணித்து உலகை ஆக்கும் வகையால் இழிய வைத்தலானும், பேராற்றலும் பேரருளும் உடைய இறைவராதல் தெரித்தலால் வீரக்கழல் பிறர்க்கன்றி இவர்க்கே உரியது. இவ்வாறு அருள் அடையாளங்களைத் தாங்கியவர் பிறர் இலர் என்பது. சிலம்பு ஈண்டுக் கழலை யுணர்த்தி நின்றது. **சிலம்பு - ஆம்** - என்றது கூட்டி முடிக்க. **தாங்குதலால்** - என்பதும் பாடம்.

சிலம்படியா ளூடலைத் தான்றவிர்ப்பான் வேண்டிச்
சிலம்படிமேற் செவ்வரத்தஞ் சேர்த்தி - நலம்பெற்
றெதிராய செக்கரினு மிக்கோலஞ் செய்தான்
முதிரா மதியான் முடி. *68*

உமையம்மையாரது ஊடலைத் தவிர்க்கவேண்டி அவரடிமேலிட்ட செம்பஞ்சைச் சேர்த்து இறைவர் தமது முடியை எதிராய செக்கரினும் நலம்பெற்ற இக்கோலம் செய்தான்.

ஊடலில் நாயகியின் அடியை நாயகன் பணிதலுமுரித்து என்ற அகப்பொருட் கருத்தைப்பற்றி உமை அம்மையாரையும் ஐயனையும் ஒருங்கே போற்றியது இத்திருப்பாட்டு. **சிலம்படியாள்** - உமையம்மையார். பெயர்மாத்திரையாய் நின்றது. சிலம்படி மேல் உள்ள செவ்விய அரத்தத்தைச் சேர்த்தியதனுல் முடியைக் கோலஞ் செய்தான் என்பது. **நலம் பெற்ற** - **இக்கோலம்** என்று கூட்டுக. **செவ்வரத்தம்** - செம்பஞ்சு. சேர்த்தல் ஒன்றினுல் ஊடல் தவிர்த்ததுடன் செக்கரினு மிகுத்தலுமாகிய இரு பயன் போந்தன என்ருர். எதிராதல் - ஒன்றினையொன்று இகலுதல். **முதிராமதி** - என்றும் மூன்ரும் பிறையாயிருத்தல். "வளராத பிறையும்" (தேவா); சத்தி தத்துவத்தினின்றும் அதன் கீழுள்ள சிவதத்துவங்கள் தோன்றும் முறைமை குறிப்பு.

முடிமேற் கொடுமதியான் முக்கணு னல்ல
வடிமேற் கொடுமதியோங் கூற்றைப் - படிமேற்
குனியவல மாமடிமை கொண்டாடப் பெற்ருேம்
இனியவல முண்டோ வெமக்கு. 69

இறைவரது திருவடியை முடிமேற்கொண்டு, அதனுலே கூற்றை மதியோம்; அத்திருவடிக் கடிமை செய்ய நிலந்தோய வணங்கப் பெற்ருேம்; ஆதலின் இனி நமக்கு அவல முண்டோ? (இல்லை).

கொடுமதி - வளைந்த பிறைமதி! **அடிமேற் கொடு கூற்றை மதியோம்** என்க. கொண்டு என்றது **கொடு** என இடை குறைந்து வந்தது. **படிமேற்குனிய** - நிலத்தின் வீழ்ந்து வணங்க. **வலமாம் அடிமை** - வல்லோமாகும் அடிமைத் திறம். வலஞ் சூழ்ந்து என்றலுமாம். **அவலம்** - பிறவித் துன்பம்; **கூற்றை மதியோம்** என்றது இப்பிறப்பின் துன்பத்திற் காட்படோம் என்றபடி; "வஞ்சநமன் வாதனைக்கும் வன்பிறவி வேதனைக்கும், அஞ்சி யுனையடைந்தே னையா பராபரமே" (தாயுமானுர்).

எமக்கிதுவோ பேராசை? யென்றுந் தவிரா;
தெமக்கொருநாட் காட்டுதியோ? வெந்தாய்! - அமைக்கவே
போந்தெரிபாய்ந் தன்ன புரிசடையாய்! பொங்கிரவில்
ஏந்தெரிபாய்ந் தாடு மிடம். 70

எந்தையே! இரவில் நீ எரிபாய்ந் தாடுமிடம் எமக்கொருநாட் காட்டுவாயோ? என்று வேண்டுகின்ருேம்; இந்தப் பேராசையோ எமக்கு என்றும் தவிராது.

இது - இந்த என்ற சுட்டுப் பொருள் தந்து நின்றது; இப்பேராசையோ தவிராது என்றும் ஓகாரம் பிரித்துக் கூட்டி முடித்துக்கொள்க; **ஆடும்: இடம் காட்டு தியோ** - என்றவாற்ருல் நடம் காணக் காட்டுதி என்றது குறிப்பு. **பாய்ந்தாடுதல்** - குதித்து ஆடுதல். **ஏந்து எரி** - பொங்கி மேலெரியும் தீ.

இடப்பால வானத் தெழுமதியை நீயோர்
மடப்பாவை தன்னருகே வைத்தால் - இடப்பாகங்
கொண்டாண் மலைப்பாவை கூருென்றுங் கண்டிலங்காண்
கண்டாயே முக்கண்ணுய் கண். 71

இடமகன்ற வானிடத்தே எழுகின்ற மதியினை இரு பெண்களுள் ஒருவராகிய கங்கை நங்கையிடத்து வைத்துவிட்டாயானல் மற்றெருவராகிய இடப்பாகத்தில் உள்ள பார்வதியம்மையாருடைய கூறு ஒன்றினையும் காண்கின்றிலோம்; மூன்று கண்ணுடையவரே! இதனை எண்ணித் தெளிவீராக!

இடப்பால வானம் - மேல் இடமகன்ற ஆகாயம். வானத்துள் மதி எழுந்தால் எல்லாப் பொருள்களையும் விளக்கும்; அவ்வாறன்றி ஒரு பொருளைச் சாரவைப்பின் சார்ந்துள்ள மற்ற பொருளை அதுவே மறைக்கும்; ஆதலின் முடியின் ஒருபால் உள்ள கங்கையை மதி சார வைத்தால் முடியின் கீழ்த் திருமேனியில் ஒரு பாகங்கொண்ட பார்வதியை மறைக்கும் என்பது கருத்து; **முக்கண்ணாய்** - என்றது மூன்று கண்ணுடையீ ராதலின் உமக்கு ஒரு கண்ணும், இரு தேவியர்க்கும் ஏனை யிரண்டு கண்ணும் சமமாக வைக்க வேண்டியவர் என்ற குறிப்புடன் நின்றது; **கண்டாயே** - தெரிவீர்; **கண்** - எண்ணுக; **கண்ணுதல்** - எண்ணுதல்; **காண்** - அசை; சடையினையும் மதியினையும் ஒருங்கே கண்ட காட்சியை நயம்படக் கூறி ஐயனை இரண்டு தேவிமாருடன் போற்றிய வகை. **முக்கண்ணாய்க் காண்** - என்பதும் பாடம்.

> *கண்டெந்தை யென்றிறைஞ்சிக் கைப்பணியான் செய்யேனேல்
> அண்டம் பெறினு மதுவேண்டேன் - றுண்டஞ்சேர்
> விண்ணாளுந் திங்களாய்! மிக்குலக மேழினுக்குங்
> கண்ணாளா! வீதென் கருத்து. 72

இறைவரே! உம்மை என் மனத்தினுள் கண்டு, எந்தையே என்று துதித்து வணங்கிக், கைத்திருத்தொண்டு செய்யப் பெற்றிலேனேயாகில், வீடு பெறுவதாயினும் அதனை நான் வேண்டேன்; இதுவே எனது கருத்து.

கண்டு - என்றதனால் மனத்தினுட் காண்பதும், **எந்தை என்று** - என்றதனால் வாக்கினாற்றுதிப்பதும், **கைப்பணி** - என்றதனால் மெய்யினால் பணி செய்தலும், என்று மனம் வாக்குக் காயம் என்ற மூன்றானும் ஒருங்கு பணி செய்தல் பெறப்பட்டது. கண்டு - இறைஞ்சி - செய்யேனேல் - என ஒரு வினை முடிபு கொள்ள வைத்தமையால் இவை ஒருங்கே நிகழும் தன்மை கூறப்பட்டது. **அண்டம்** - மேலாகிய பரமுத்தி; **அண்டம்** என்பது ஆகுபெயராய் அண்டங்களின் ஆட்சி என்று கொண்டு எவ்விதமாகிய ஏனைப் பதமுத்திகளும், போகங்களும் என்றுரைப்பினுமாம். முத்தியினும் உயிர் சிவானுபவம் பெற்றும் ஆளாதலுடைமை சாத்திரங்களுட் பெறப்படும். "ஆளாநா மங்கு" என்பது ஞானசாத்திரம். "வீடும் வேண்டா விறலின் விளங்கினார்" "பார மீசன் பணியல தொன்றிலார்" என்று இது பற்றியே அடியார் திறங்களை வடித்து எடுத்து ஆசிரியர் சேக்கிழார் பெருமான் திருகூட்டச் சிறப்பினிற் போற்றி யருளினர். சீவன்முத்தர்களாகிய எந்தம் பெருமக்களே இவ்வாறு பெருமிதத்துடன் போற்றத்தக்கவர்கள்; ஏனையோர் சொல்வது பொய்யேயாகும். **உலகமேழினுக்கும் என்றது** - "அவர்க்கே யெழுபிறப்பு மாளாவோம்" என்றபடி எழுவகைப் பிறப்பின் நிலையும், **கண்ணாளா** - என்றது அருள்கொண்ட தலைவனுடைய அருமைப்பாடும் குறித்தன. **தொண்டின்றி வீடுபெற வரினும் வேண்டேன் எனத் தொண்டினது சிறப்புக் கூறப்பட்டது**. "போகம் வேண்டி வேண்டிலேன்"; (திருவாசகம்) "கோல நீடிய நிதிபதி வாழ்க்கையுங் குறியேன்" (கந்தபுராணம்) முதலிய கருத்துக்கள் காண்க.

*கருத்தினா னீகருதிற் றெல்லா முடனே
திருத்தலாஞ் சிக்கெனநான் சொன்னேன் - பருத்தரங்க
வெள்ளநீ ரேற்றா னடிக்கமல நீவிரும்பி
யுள்ளமே யெப்போது மோது. 73

மனமே! நீ சூழ்ந்து கருதியவை எல்லாவற்றையும் சிறப்புப் பெற உறுதியாக அடையலாம்; நான் உறுதியாகச் சொன்னேன்; (அதற்கு வழியாவது இதுவே;) இறைவரது திருவடித்தாமரைகளை எப்போதும் நீ விருப்பத்துடனே ஓதுவாயாக.

கருத்தினல் கருதிற்று - பலகாலும் சிந்தித்துச் சூழ்ந்த; **திருத்தலாம்** - திருந்தப் பெறலாம்; **சிக்கென** - உறுதியாக; **பரு - தரங்க - நீர்** - பெரிய அலைகளையுடைய கங்கை; **எப்போதும்** - பெத்த முத்தி யிரண்டிலும்.

ஓத நெடுங்கடல்க ளெத்தனையு முய்த்தட்ட
வேது நிறைந்தில்லை யென்பராற் - பேதையர்கள்
எண்ணு திடும்பலியா லென்னே நிறைந்தவா
கண்ணார் கபாலக் கலம். 74

கபாலமாகிய பலிப்பாத்திரம், பெருங்கடல்களை யெல்லாம் கொண்டு பெய்தாலும் சிறிதும் நிறைந்த தில்லை என்று கூறுவர்; அற்றாயின், தாருகாவன இருடிகளின் பெண்கள் எண்ணாது இடுகின்ற பலியுணவினல் நிறைந்தவாறு என்னே? (அதிசயம்!)

கடல்கள் எத்தனையும் - கடல்கள் முழுமையும்! ஏழு கடல்களையும்; **உய்த்து அட்ட** - கொண்டு பெய்யவும்; சிறப்பும்மை தொக்கது; **ஏதும்** ஒரு **சிறிதும்**; நிறைந்ததில்லை என்பது **நிறைந்தில்லை** என நின்றது; **பேதையர்கள்** - தாருகாவனத்து இருடியர்களின் மனைவியர்கள்; **எண்ணாது** - பலிக்கு வந்தவர் இறைவர் என்றும், தம்மைக் கற்பழித்த நிலை கண்டு முனிவர்களுக்கு நல் உணர்வு ஊட்ட வந்தவர் என்றும் எண்ணாது; பேதையர்களாதலின் எண்ணாராயினர் என்ற குறிப்புப்பட உடம்பொடு புணர்த்தி ஓதினர்; **கண்ணார்** - கண்கள் பொருந்திய கபாலமாதலின் கண்களின் துவாரங்களுடையது. திறத்தலும் மூடுதலுமாகிய இமைகளையுடையவை கண்; இவை மதகுபோன்று மூடியபோது கலம் நிறைந்தது. திறந்திருந்தபோது கலம் நிறைந்தில்லை. **கண் ஆர்** - இடம் அகன்ற என்பதுமாம். கபாலக்கலத்தைப் போற்றியது.

*கலங்கு புனற்கங்கை யூடாட லாலு
மிலங்கு மதியியங்க லாலு - நலங்கொள்
பரிசுடையா னீண்முடிமேற் பாம்பியங்க லாலும்
விரிசடையாங் காணில் விசும்பு. 75

கங்கை ஒடுங்கலாலும், மதி யியங்குதலாலும், பாம்பு இயங்குதலாலும் விசும்பு இறைவரது சடைபோன்றது. சடை - விசும்பு போன்றது என்றும் இயைக்கலாம்.

விசும்பு - ஆகாயம் - வானம்; விசும்பிற் கங்கை என்றது ஆகாயத்தினின்றும் வந்த நிலை; **மதி** - சந்திரன்; வானிற் சரிப்பது; **பாம்பு** என்றது இராகு, கேதுக்கள்; இறைவர் சடையில் கங்கையினையும் பிறையினையும் பாம்புகளையும் தரித்த தன்மை பற்றிச் சிலேடைவகையராய்ப் போற்றியது. "கலை நிரம்பாத், திங்கட்கு வானந் திருவொற்றி யூரர் திருமுடியே" (திருவிருத்); **காணில்** - கருதுமிடத்து; இறைவர்க்கு வியோமகேசி என்றதொரு திருப்பெயர் கூறும் மரபும் ஈண்டுக் கருதத்தக்கது.

விசும்பில் விதியுடைய விண்ணோர் பணிந்து
பசும்பொன் மணிமகுடந் தேய்ப்ப - முசிந்தெங்கும்
எந்தாய் தழும்பேறி யேபாவம் பொல்லாவாம்
அந்தா மரைபோ லடி. 76

எந்தையே! உம் திருவடிகள் தேவர்கள் பணியும்போது அவர்களுடைய பொன்மணிக் கிரீடங்கள் உரிஞ்ச அதனால் தழும்பேறித் தாமரைபோலச் சிவந்தன! அந்தோ!

விசும்பில் விதியுடைய - விண்ணுலகத்தில் வாழ்தற் கேதுவான ஊழினையுடைய; **பாவம்** - இரக்கக் குறிப்பு; **தாமரைபோல் பொல்லா ஆம்** என்க - தாமரை போலச் சிவந்தன. பொல்லா என்றதனால் இயல்புக்குமேன் மிகச் சிவந்தன என்பது. "நின்போ லமரர்க ணீண்முடி சாய்த்து நிமிர்ந்துகுத்த, பைம்போ துழக்கிப் பவளந் தழைப்பன..." (திருவிருத்) என்ற கருத்துக் காண்க. விண்ணோர் வீழ்ந்து பணியுந் தன்மைபற்றித் திருவடியைப் போற்றியது.

அடிபேரிற் பாதாளம் பேரு; மடிகண்
முடிபேரின் மாமுகடு பேருங்; - கடக
மறிந்தாடு கைபேரில் வான்றிசைகள் பேரு;
மறிந்தாடு மாற்றா தரங்கு. 77

இறைவரே! உம் திருஅடி பெயர்ந்தால் பாதலமேழும் பெயரும்; திருமுடி பெயர்ந்தால் பெரிய அண்டமுகடு பெயரும்; கைகள் பெயர்ந்தால் பெரிய எட்டுத் திசைகளும் பெயரும்; இவ்வாறு சபை தாங்கமாட்டாது; அதனை அறிந்து திருக்கூத்தை ஆடுவீராக!

திருக்கூத்தின் பெருமையைப் போற்றிய கருத்து. எங்கும் நிறைந்த தன்மையினையும் குறித்தபடி.

அரங்கமாப் பேய்க்காட்டி லாடுவான் வாளா
விரங்குமோ வெவ்வுயிர்க்கு மேழா - யிரங்குமேல்
என்னாக வையான்றா னெவ்வுலக மீந்தளியான்
பன்னா ளிரந்தாற் பணிந்து. 78

இறைவர் எவ்வுயிர்க்கும் வறிதே இரங்குவாரா?; பன்னாளும் பணிந்து இரந்தால், அது காரணமாக இரங்குவர்; அவ்வாறிரங்குவாராயின் எவ்வித மேன்மையுடைத்தாகத்தான் வைக்கமாட்டார்?; எவ்வுலகத்தைத்தான் கொடுத்துக்காவார்? (எல்லாந் தந்து எவ்வித மேன்மையிலும் வைப்பர்).

பணிந்து பன்னாளிரந்தால் இறைவர் இரங்கி எல்லா நலங்களும் ஈவர் என்பது. ஏழாய்! ஏழையே. ஏழை - **அறிவினால் ஏழைமை குறித்தது. அரங்கமாப்பேய்க்காடு** - பேய்கள் தம் அரங்கமாகக் கொள்ளும் காடு. **அரங்கமாய்** - என்பதும் பாடம்.

பணிந்தும் படர்சடையான் பாதங்கள் போதால்
அணிந்து மணிந்தவரை யேத்தத் - துணிந்தென்றும்
எந்தையார்க் காட்செய்யப் பெற்ற விதுகொலோ
சிந்தையார்க் குள்ள செருக்கு. 79

இறைவரைப் பணிந்தும் திருவடிகளில் மலர் கொண்டணிந்தும், அவ்வாறு அடிமை செய்கின்ற அடியவர்களைப் பணியத் துணிந்தும் என்றிவ்விதமாக இறைவர்க்கு ஆட்செய்யப் பெற்ற இதுவே எமது சிந்தைக்குள்ள பெருமிதமாம்.

ஏத்தத் துணிந்தும் - என்று ஆட்செய்ய - என்று கூட்டுக. **பணிந்தும்** - மனம் வாக்குக்களால் பணிந்தும்; **அணிந்தவர்** - அவ்வாறு அணிந்தவர்கள்; அவ்வாறு என்பது இசையெச்சம்; **என்று (இவ்வாறு) ஆட்செய்யப்பெற்ற** என்க. அடியாரை ஏத்துதலும் இறைவர்க்கு ஆட்செய்தலேயாம் என்பது. **சிந்தையார்** - சிந்தை; உவப்பின்கண் வந்த உயர்திணைப் பன்மை. **செருக்கு** - பெருமிதம்; இறுமாப்பு. இது நன்மையின் வருவது; அறுவகைக் குற்றங்களுட் பட்டதன்று. **கொலோ** - தேற்றக் குறிப்புப்பட வந்த அசை. புராணம் 1734-1735 - பாட்டுக்கள் பார்க்க.

செருக்கினுல் வெற்பெடுத்த வெத்தனேயோ திண்டோள்
அரக்கனேயு முன்னின் றடர்த்த - திருத்தக்க
மாலயனுங் காணு தரற்றி மகிழ்ந்தேத்தக்
காலனேயும் வென்றுதைத்த கால். 80

இறைவரது கால்கள் கூற்றுவனேயும் வென்றுதைத்தன; அரக்கனேயும் அடர்த்தன; அக்கால்கள் மாலயனும் காணுதரற்றி மகிழ்ந்தேத்தப்படுவன.

கால் - உதைத்த(ன); அடர்த்த(ன) என்க. எத்த - உதைத்தன என்று கூட்டுக. **திருத்தக்க** - என்பது அடிமைப் பண்பின் வந்த என்ற பொருள் தந்து நின்றது. **எத்தனேயோ** - எண்ணின் பெருக்குக் குறித்த மட்டில் வந்தது. அரக்கன் தன் மனத்தில் தனது தோள்களின் பெருமை கருதி வெற்பெடுத்தா ஞதலின் அச்செருக்கிற் கொண்டபடி எத்தனேயோ - என்றதாம். இருபது என்பது கருத்து. திருவடிப் பெருமையும் ஆற்றலும் துதித்தல் கருத்து. உதைத்து வென்ற கால் என்றும் இயைக்கலாம்.

காலனேயும் வென்ருேங்; கடுநரகங் கைகழன்ருேம்;
மேலே யிருவினேயும் வேரறுத்தோங் - கோல
வரணு ரவிந்தழிய வெந்தீயம் பெய்தான்
சரணு ரவிந்தங்கள் சார்ந்து. 81

முப்புரமெரித்த இறைவரது திருவடித் தாமரைகளேச் சார்ந்ததனுல் காலனேயும்

வென்றேம்; கடு நரகங்களின் அனுபவங்களை முன்னமே நீத்து விட்டோம்; மேலை யிருவினைகளையும் வேரோடு களைந்துவிட்டோம்.

அரணர் - முப்புர வாணர்; இகழ்ச்சி குறித்த பான்மை எனினுமாம். **அவிந்தழிய** - **அவிதல்** - சாதல்; **அழிதல்** - சாம்பரா யொழிதல்; ஒரு பொருட் பன்மொழி யெனினுமாம். **தீ அம்பு** - தீயாகிய அம்பு; **சார்ந்து** - சார்பாகப் பற்றுதலால்; காரணப் பொருளில் வந்த வினையெச்சம்; சார்ந்து வென்றேம்; கழன்றேம்; அறுத்தோம் என்று கூட்டுக; **காலனையும்** - நரகங் கழலுதலும், வினை வேரறுத்தலுமன்றி என எதிரது தழுவிய எச்சவும்மை பிறிதோராற்றல் வெல்ல மாட்டாத காலனையும் என வுயர்வு சிறப்பும்மை எனினுமாம். இதனால் மரணந் தவிர்த்தல் கூறப்பட்டது. **நரகங் கழலுதல்** - வினைக்கீடான துன்பானுபவங்கள் ஒழிதல்; இதனால் சஞ்சிதங்கள் ஒழிதல் குறிக்கப்பட்டது. **கைகழலுதல் - கை** - பகுதிப் பொருளை மிகுதிப்படுக்கும் முன்னொட்டு; கைகூடும் என்புழிப்போலே; **மேலை யிருவினை** - பிறவிக் கேதுவாகிய சஞ்சித கன்மங்கள்; இதனாற் பிறவி யறுதல் கூறப்பட்டது. இறப்பும் பிறப்பு மின்மையின் திருவடிச் சார்பினிற்றல் கூடியதென்க. எனவே **சார்தல்** முத்தி சாதனமாதலுடன் பயனுமாய் விளைந்த தென்க. அடியின்கீழ் இருக்கும் பேறுபெற அம்மையார் செல்லும் நிலை குறிக்க.

சார்ந்தார்க்குப் பொற்கொழுந்தே யொத்திலங்கிச் சாராது
போந்தார்க்குத் தீக்கொடியின் பெற்றியவா - நேர்ந்துணரிற்
றாழ்சுடரோன் செங்கதிருஞ் சாயுந் தழல்வண்ணன்
வீழ்சடையே யென்றுரைக்கு மின். *82*

உணரின் இவை மின் அல்ல சடைகளே என்று விளங்கும் ஐயனது சடைகள் அவரடிச் சார்ந்தவர்க்குப் பொற்கொழுந்து போல்வன; அடி சாராது பிறிது சார்ந்து செல்வோர்க்குத் தீக்கொடி போலும் தன்மையுடையனவாம்.

சார்ந்தார் - சாராது போந்தார் - அடி சார்ந்தார்களும், சாராது பிறிது சார்பு கொண்டொழுகுவோரும். உணரில் இவை மின் அல்ல; சடையே என்றுரைக்கும் தன்மை வாய்ந்த சடைகள். "மின்வண்ண மெவ்வண்ணம் மவ்வண்ண வீழ்சடை" (பொன் -அந் - *1*). சடையே என்னும் **மின்னல்கள்** - அடிச்சார்புடையோர்க்குப் பொற்கொழுந்துபோலக் குளிர்ந்து பயன் செய்வன; சாராதார்க்கு அவையே தீக்கொடிபோலக் கனன்று அழிவு தருவன என்க. **தாழ்சுடரோன்** - தங்கி வீழும் கதிர்களை யுடையவன்; ஞாயிறு : **சாய்தல்** - தோல்வி யுறுதல்; ஞாயிற்றினது செங்கதிர்கள் இறைவரது செம்மேனிக்கு ஒப்பாகா என்பது; **தழல்வண்ணன்** - என்றதனால் வண்ணம் மட்டில் தழல் போல்வது; தன்மை அருளுடையது என்றபடி; **வீழ்சடை** - தழல் வண்ணனது திருமுடியிலிருந்து வீழ்ந்தது போலும் வளரும் நீண்டசடை; இப்பாட்டுச் சடையினைப் போற்றியது. இதற்கு இவ்வாறன்றிச், சார்ந்த மகளிர்க்குப் பொற்கொடிபோல் விளங்கி, அடையாது நீங்கின மகளிர்க்கு அனற்கொடிபோன்று வருத்து மியல்பினையுடைத்து சடை என்று, என் மகள் கூறுவாள் என்று பொருள் கொண்டனர் ஸ்ரீ ஆறுமுகத் தம்பிரானர்; இப்பொருளில் மீன் - மகள் என்றுகொண்டு, என்று மின் உரைக்கும் எனக் கூட்டி உரைத்தனர்.

மின்போலுஞ் செஞ்சடையான் மாலோடு மீண்டிசைந்தால்
என்போலுங் காண்பார்கட் கென்றிரேற் - றன்போலும்
பொற்குன்று நீல மணிக்குன்றுந் தாமுடனே
நிற்கின்ற போலு நெடிது.

83

சிவபெருமான் திருமாலோடும் இசைந்த கோலம் காண்பார்க்கு எதுபோன்றிருக்கு மென்று கேட்பீராகில் பொற்குன்றமும் நீலக்குன்றமும் உடன் சேர்ந்து நீண்டு நிற்கின்றன போலும்.

இசைந்தாற் காண்பார்க்கு என் போலும்? என்றீரேல் குன்றும் குன்றும் உடனே நெடிது நிற்கின்ற போலும் என்க. சடையானுக்கும் மாலுக்கும் பொற்குன்றும் நீலக்குன்றும் நிரனிறையாகக் கூட்டுக. "அரியலாற் றேவி யில்லை யையனை யாறனார்க்கே" (நேரிசை); 41ஆவது பாட்டுப் பார்க்க. மாலோடு கூடிய கோலத்தைப் போற்றியது; **பொற்குன்றம்** - மேருமலை; **நீலமலை** - இந்திர நீல பருப்பதம் என்ப.

நெடிதாய பொங்கெரியுந் தண்மதியு நேரே
கடிதாங் கடுஞ்சுடரும் போலும் - கொடிதாக
விண்டார்கண் மும்மதிலும் வெந்தீ யினிலழியக்
கண்டாலு முக்கண்ணாங் கண்.

84

எரியாகிய தீக்கண்ணும் ஏனைக் கண்களாகிய மதியினையும் ஞாயிற்றினையும் ஒக்கும்; திரிபுரங்களைத் தீக் கண்ணினால் வேவச் செய்தாலும் அவற்றுள் மூவரை உளராக்கிக் காத்தலின் அது முக்கண்ணன் தன்மை வாய்ந்தது.

தீயினால் வேவச் செய்த காரணத்தால் பிரானார்க்குக் கண் ஒன்றே என்னலாகாது; ஞாயிறுந் திங்களும் சேர்ந்து அவரது கண் மூன்றுமென்க; ஞாயிறாகிய கதிர் உதிப்பித்தலும், திங்கள் குளிரச் செய்து வளர்த்தலும் செய்தலின் தீக்கண்ணின் செயலில் இம்மூன்றும் விரவியன. எனவே முக்கண் என்க என்பதாம். எரித்தல் செய்த ஒரு தொழிலே மூவரை உள்ளவராக்கிக் காவல் செய்ததாகலின் இவ்வாறு கூறினார் இப்பாட்டால் இறைவரது நெருப்புக் கண்ணைப் போற்றினார். இதுபற்றியே "நெற்றியிற் கண்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே" என்றருளினார் அப்பர் பெருமான்.

*கண்ணாரக் கண்டுமென் கையாரக் கூப்பியும்
எண்ணார வெண்ணத்தா லெண்ணியும் - விண்ணோன்
எரியாடி யென்றென்று மின்புறுவன் கொல்லோ
பெரியானைக் காணப் பெறின்.

85

யாவரினும் பெரியானாகிய சிவபெருமானை நான் காணப் பெற்றால், என் கண்ணாரக் கண்டும், கைகளாரக் கூப்பித்தொழுதும் மனமார எண்ணியும், வாயார ஏத்தியும் எப்போதும் இன்பமடைந்திருப்பன்.

காணப்பெறின் - கயிலையில் இறைவரைக் காணச் செல்கின்றாராதலின் இவ்வாறு அருளிச்செய்துகொண்டே செல்கின்றார். அம்மையாரது ஆர்வத்தின் அதிதீவிர நிலை

யுணர்த்திற்று. **ஆர்தல்** - நிறைவு பெறுது பல முறையும் மீண்டும் மீண்டும் அவ்வச் செயலே செய்ய முயலும் மன எழுச்சி முற்றும் பெறுதல்; ஆராமை என்பர். "**விண்ணேன்! எரியாடி!** என்று" என்றதனுல் வாயாரஎன்று கொள்ளப்பட்டது. பெரியான் - தமக்குமேற் பெரியாரில்லாதவன்; சிவன். "பிறவா யாக்கைப் பெரியோன்" (சிலப்.) இப்பாட்டால் இறைவர் திருமுன் வழிபட்டிருக்கும் நிலை கூறப்பட்டது. இதனை யாவரும் பயின்று அவ்வாறு ஒழுகின் நலம் தரும்.

பெறினும் பிறிதியாதும் வேண்டேட; நமக்கீ
துறினு முருதொழியு மேனுஞ் - சிறிதுணர்த்தி
மற்றெருக ணெற்றியின்மேல் வைத்தான்றன் **பேயாய**
நற்கணத்தி லொன்ருய நாம். 86

சிறிதே அறிவு விளங்கப் பண்ணி, அனற் கண்ணை நெற்றியினிடத்தே வைத்த இறைவரின் பூத கணங்களுள் ஒன்ருகிய நாம், இந்நிலை வந்துறினும் வந்துரு தொழியினும், இஃதொன்றனையே வேண்டுவதன்றி வேறெது பெற்ருலும் வேண்டோம்.

கணத்தி லொன்ருய நாம் - ஈதுறினும் - உருதொழியினும் - பிறிது யாது பெறிதும் - வேண்டோம் என்று வினை முடிபு செய்க. **உறினும் - உருதொழியினும்** என்றது கணத்தின் நிலையில் இனிப் பெற எண்ணிய இன்பமும் வரமும் ஆகிய பேருணர்வு குறித்தன. **ஈது** - நினைத்த இந்நிலை. **பிறிது யாதும் பெறினும் வேண்டோம்** என்க. **பிறிது** - ஈதன்றிப் பிறிது. இறைவருக் காட்செய்யும் நிலையன்றி வீடும் வேண்டா விறல் **சிறிதுணர்த்தி** - பக்குவத்துக்கும் வினைநுகர்ச்சிக்கும் எற்றபடி உணர்த்துதல். **சிறிதுணர்த்தி** - என்றதனுல் ஈது - என்றது இனித்தாம் வேண்டிய பேருணர்வின் வரும் இன்பம் என்றபடி. **மற்றெரு கண் - மற்று** வேறு எவர்க்கு மில்லாத என்பது குறித்து நின்றது. **சிறிதுணர்த்தி நெற்றியில் கண்வைத்தான்** - உணர்வு தருவது அஞ்ஞானத்தை எரித்துப் போக்கும் நெற்றிக்கண் என்பது. இதுபற்றி யன்றே ஒளி யுருவமாக இறைவரைப் புருவ நடுவில் அழுந்தியறியும்படி ஆகமங்கள் விதித்தன. **பேயாய் நற்கணத்தி லொன்ருய நாம்** - தாம் வேண்டிப் பெற்ற பேய்ப் பூதகண வடிவத்தில் இறுமாந்து நின்று கூறியது. இதனை ஆசிரியர் சரித அகச்சான்ருக எடுத்துக் காட்டி விதந்து கூறிப், "பொற்புடைச் செய்ய பாத புண்டரீகங்கள் போற்று, நற்கணத் தினிலொன் ருனே னென்று நயந்து பாடி" (*1768*) என்றருளியது காண்க.

நாமாலை சூடியு நம்மீசன் பொன்னடிக்கே
பூமாலை கொண்டு புனைந்தன்பாய் - நாமோர்
அறிவினையே பற்றினு லெற்றே தடுமே
யெறிவினையே யென்னு மிருள். 87

நாவின் மாலையும் பூவின் மாலையும் அன்பினெடும் நம் ஈசனுக்குப் புனைந்து ஓர்கின்ற அறிவினுள் அறிவாகி நிற்கும் அவனைப்பற்றினுல் எறியும் தீவினையாகிய இருள் எவ்வாறு வருத்தும்? (ஒருவாற்ருலும் வருத்தாது).

நா மாலை - நாவினுல் புனையும் பாமாலை; இதனுல் வாக்கின் பணியும், **பூமாலை** - புனைந்து என்றதனுல் கையின் (உடல்) பணியும், **அன்பாய் - ஓர்** - என்றதனுல் மனத்தின் பணியும்

என முக்கரணங்களும் ஒன்றுபட்ட வழிபாடு குறிக்கப்பட்டது. **அறிவினையே** - பேரறிவாகிய சிவம் "அறிவே யுன்னை யல்லா லறிந்தேத்த மாட்டேனே" (நம்பி - காளத்தி - 4); "அறிவி லறிவை யறியு மவர்கள், குறியுள் புகுதுங் குணவன்" (நெஞ்சுவிடுதூது), "அறிவுக் கறிவாகி" (கந்தர்கலி). ஓர் அறிவினையே - ஓர்கின்ற அறிவையே என்றலுமாம். எறிவினை - தன்னைப் பற்றியும் பிறவுயிரைப் பற்றியும் தெய்வத்தைப் பற்றியும் வரும் மூவகையான துன்பங்கள். 79, 85 முதலிய பாட்டுக்கள் பார்க்க.

இருளி னுருவென்கோ? மாமேக மென்கோ?
மருளின் மணிநீல மென்கோ? - வருளெமக்கு
நன்றுடையாய்! செஞ்சடைமே னக்கிலங்கு வெண்மதிய
மொன்றுடையாய் கண்டத் தொளி. 88

நன்மைகள் எல்லாமுடைய இறைவரே! உமது கழுத்தில் உள்ள கருமை ஒளியை இருளின் உருவமென்று சொல்வேனோ? மாமேகத்தின் நிறமென்பேனோ? குற்றமற்ற நீலமாகிய மணிநிறமென்பேனோ? (இன்னதென்று சொல்ல அறிகிலன்) தேவரீர் அருள்புரிவீராக!

திருநீலகண்டத்தைப் போற்றியது; நிறத்தால் ஒற்றுமையாயினும் இருள் - ஒளிக்கு வேறுபாடாகிக் குணத்தால் மாறுபடுதலால் அதன் உருவத்தால் ஒப்புக் கூறவியலாதென்று, உருவும் பயனும் ஒத்திருத்தலின் மாமேக மென்கோ? என்றார்; இனி, அம்மேகந்தானும் பெய்யாத காலமுமுண்மையாலும், வெண்மேகமுமுண்மையாலும், அதனையும் கூறலாகாதென்று, எஞ்ஞான்றும் மாறாது ஒளியும் குற்றமின்மையும் அழகுடைமையும் கொண்டிருத்தலின் **மருளின் மணி நீலமென்கோ?** என்று பின்னர்க் கூறினார். அதுவும் ஒரு புடையே ஒப்பாமென்று **என்கோ?** என ஐயப்பட்டாற் கூறினர். **மருள்** - மணிக்குற்றம்; "அரன் கண்டத்தொளி விட்டோங்கு மிந்திர நீலம்" (திருவிளை - மாணிக் - 69); **நக்கிலங்கு** - நகுதல் உபசாரம். **நகுதல்** - விளங்குதல் எனக்கொளின் ஒரு பொருட்பன்மொழி.

ஒளிவிலி வன்மதனை யொண்பொடியா நோக்கித்
தெளிவுள்ள சிந்தையினிற் சேர்வாய்! - ஒளிநஞ்ச
முண்டவா யஃதிருப்ப வுன்னுடைய கண்டமிருள்
கொண்டவா றென்னிதனைக் கூறு. 89

ஒளி பொருந்திய வில்லையுடைய வலிய மன்மதனைச் சாம்பராகும்படி பார்வை செய்து, தெளிவுள்ளாரது சிந்தையில் சேர்பவரே! நிறமுடைய விடத்தை உண்ட உமது திருவாய் நிறம் மாறுபடாதிருப்பவும், கண்டம் இருணிறங் கொண்ட வகைதானென்? இதனைக் கூறுவீராக.

ஒளியாவது தேவத்தன்மை. வில்லி - என்பது **விலி** என வந்தது. மரமறைவில் ஒளித்து நின்ற என்றலுமாம். **வன்மை** - சிவபெருமானை யொழித்தொழிந்த உயிர்வருக்கம் யாவையும் மயக்கம் செய்து நிற்கும் ஆண்மை; **பொடியா நோக்கி சேர்வாய்** - இறைவரது கோபப் பிரசாத வியல்பு குறித்தது. **தெளிவு** - சிவனே முதல்வர் என்று தெளிந்து அடையும் அறிவின்றிறம். கடுவுண்ட வாய் கருமை கொள்ளாது கடுவிருக்கும் கண்டம் கருத்தது

என்னை? என்றது. கருணை விடத்தின் சார்பினுல் வந்ததன்று - நீவிர் உலகம் காணக் காட்டும்படி வைத்த கருணை இயல்புபற்றி வந்தது என்ற குறிப்பு. இது இறைவரது முழுமுதற்றன்மையைப் போற்றியது.

கூறெமக்கீ தெந்தாய்! குளிர்சடையை மீதழித்திட்
டேற மிகப்பெருகி னென்செய்தி - சீறி
விழித்தூறும் வாளரவும் வெண்மதியு மீர்த்துத்
தெழித்தோடும் கங்கைத் திரை. 90

எம்பெருமானே! பாம்பினையும் மதியினையும் ஈர்த்து இரைத்து ஓடும் கங்கை அலைவெள்ளம் உமது சடைக்கற்றையை மிக்குப் பெருகி ஓடுமாயின் என்ன செய்வீர்? எமக்குச் சொல்வீராக.

கங்கைப் பேரியாற்றின் பெருக்கையும், அது சடைக்குள் அடங்கி நிற்கும் இறைவராணையினையும் வேற்றுமுகத்தாற் பராவியது.

திரைமருவு செஞ்சடையான் சேவடிக்கே யாளாய்
உரைமருவி யாமுணர்ந்தோங் கண்டீர் - தெரிமினே
லிம்மைக்கு மம்மைக்கு மெல்லா மமைந்தோமோ;
யெம்மைப் புறனுரைப்ப தென்? 91

சிவபெருமானது திருவடிக்கே ஆளாகியும் துதித்தும் தியானித்தும் வாழ்கின்றோம்; அதுதான் இம்மைக்கும் அம்மைக்கும் ஆமாறு அமைந்து நின்றோம்; எம்மைப் புறங்கூறுவதென்னை?

புறன் - "புறச்சமயம் பற்றி இகழ்ந்துரைக்கு மொழியும் புறங்கூற்றுமொழியு" மென்பது. (போதம் - உரை); ஈண்டு அறியாதார் கூறுங் கூற்று என்ற பொருளில் அமைந்தது. "அறியா வாய்மை எண்டிசை மாக்களுக்கு யான் எவ்வுருவாயென்?" (1770) என்றது இக்கருத்தினைப் பற்றியது. **உரை மருவி** -வாக்கின் பணி. **உணர்ந்தோம்** - மனத்தில் எஞ்ஞான்றும் மறவாது வைத்து ஒழுகுதல் குறித்தது; "மொழி பயின்ற பின்னெல்லாங் காதல் சிறந்து" (4) என்றது. அம்மை - முத்திநிலை. **உரை மருவி** என்றது சிவனுரையாகிய ஆகம அளவையின் நின்று, அதன்படி வழிபட்டு - என்றலுமாம். **அமைதல்** - ஒருப்பட்டு நிற்றல்.

*என்னை யுடையானு மேகமாய் நின்றானுந்
தன்னை யறியாத தன்மையனும் - பொன்னைச்
சுருளாகச் செய்தனைய தூச்சடையான் வானோர்க்
கருளாக வைத்த வவன். 92

வானோர்க்கருளாக வைத்த தூய சடையுடையானாகிய அவனே என்னை உடைப் பொருளாக வுடையவன்; ஏகமாய் நின்றவன்; தன்னை இன்ன தன்மையனென் றறியலாகாதவன்.

என்னை உடையான் - தனக்கு அடிமையாக என்னை உடைய தலைவன்; **ஏகமாய் நின்றான்** - உயிர்களேயாய்க் கலந்து நிற்பினும், அவற்றின் வேறாய்த் தானேயாய் நிற்பான்.

ஒன்றே பதி; இரண்டில்லை என்ன நிற்பவன் என்றலுமாம். அறியாத - இன்னன் என்றறியவொண்ணுத; "இன்ன தன்மைய னென்றறி யொண்ணு எம்மானை" (நம்பி - ஆரூர்); "அவையே தானேயாய்" (போதம் - 2.) என்றபடி. **"என்னை யுடையான்"** என்றது உயிரேயா யிருத்தலையும், **"ஏகமாய் நின்ருன்"** என்றது தானேயா யிருத்தலையும், **"தன்னையறியாத தன்மையன்"** என்றது அவையே தானேயா யிருத்தலையும் குறித்தன என்பதும் காண்க. ஈண்டுத் **தன்னையறியாத தன்மை** என்றது "தாவியவ னுடனிருந்துங் காணாத தற்பரனை" (பிள்ளை - தேவா. கோளிலி) என்றபடி உள்ளநிலை. **வானோர்க் கருளாக** - என்றது சந்திரனைத் தாங்குதல் முதலிய அருள்களுக்கு இடமாதல் குறித்தது. சடையான் - அவன் உடையான் - நின்றான் - தன்மையன் என்று முடிக்க. **தன்னையறியாத** - சுட்டுணர்விறந்த என்றுரைப்பாருமுண்டு. "ஏகமாய் நின்றே" (சி.போ. வெ.)

அவன்கண்டாய் வானோர் பிரானாவா னென்றும்
அவன்கண்டா யம்பவள வண்ணன் - அவன்கண்டாய்
மைத்தமர்ந்த கண்டத்தான்; மற்றவன்பா னன்னெஞ்சே
மெய்த்தமர்ந்தன் பாய்நீ விரும்பு. 93

அவன் என்று விதந்து பேசப்படும் சிவனே தேவர்கள் பெருமான்; பவள வண்ணமுடையவன்; கரிய கண்டமுடையவன்; நெஞ்சமே! அவனை மெய்யன்பால் விரும்புவாயாக.

கண்டாய் - என்பன "கள்ளி முதுகாட்டி னாடி கண்டாய்" என்புழிப்போலக் கண்டு கொள்க! என, ஏவற்பொருள்தந்து உறுதிதரும் உபதேசமொழிகளாய் நின்றன. அசையென்பாருமுண்டு. **அவன்** - அசுரச்சுட்டுகள் அகரவுயிர்போல் நின்றவன் என்ற குறிப்புத்தந்தன. மும்மலத்தார்க்குப் படர்க்கையிற் கூறும் குருவின் உபதேசமுமாம். **மெய்த்த** - மெய்யாகிய.

விருப்பினா னீபிரிய கில்லாயோ? வேறா
விருப்பிடமற் றில்லையோ? வென்னோ? - பொருப்பன்மகண்
மஞ்சுபோன் மால்விடையாய் நிற்பிரிந்து வேறிருக்க
வஞ்சுமோ? சொல்லா யவள். 94

இறைவரே! அம்மையாரிடத்து நீர் வைத்துள்ள விருப்பத்தினால் பிரியாதிருக்கின்றீரோ?; அல்லது அவருக்குத் தனியிருப்பிட மொன்றுமில்லையோ? அன்றி அவர் உம்மைப் பிரிந்து தனியிருக்க அஞ்சுவரோ? சொல்வீராக.

அம்மையோடு பிரிவின்றி இயைந்து ஐயன் எஞ்ஞான்றும் அம்மையப்பராக வீற்றிருக்கும் நிலையினைப் புரிந்து போற்றியது. **விருப்பு** - உயிர்களுக்கு அருள் புரியும் கருணை; உயிர்க்கருளும் இறைவரது நினைப்பாகிய அதுதான் அம்மை என்று உபசரிக்கப் படுதலாலும், அது இறைவரது குணமாக எஞ்ஞான்றும் உடனிருத்தலாலும், அந்நிலையை **விருப்பினாற் பிரியகிலாயோ?** என்று உரைத்தார்; குணத்திற்குக் குணிப்பொருளையன்றி வேறிருப்பிடமில்லை; குணத்தைக் குணியினின்றும் இடவகையாற் பிரித்தலாகாது; இறைவருக்குச் சத்தி அருட்குணம் என்பதனை **வேறோர் இருப்பிடமற்று இல்லை** என்று

உரைத்தார். **அஞ்சுமோ** என்றதுபசாரம். முன்பாட்டு **அவனது** பெருமையை மூன்று வகையாலும், அதனை அடுத்து இப்பாட்டு **அவளது** பெருமையை மூன்றுவகையாலும் போற்றிய அமைதியும் அழகும் காண்க. அம்மையப்பரே யுலகுக் கம்மையப்ப ரென்றறிக (களிறு), தோடுடைய செவியன் (தேவா) முதலிய திருவாக்குக்களும் கருதுக. **பொருப்பன் மகள்** - னகர வொற்று நீக்கிக் காய்ச்சீராக்கி வகையுளி செய்துகொள்வது புறனடையாம். **மஞ்சு போல் மால்** என்க. விடைக்கு ஆக்கின் **மஞ்சு** வெண்மேக மென்க.

அவளோர் குலமங்கை பாகத் தகலாள்;
இவளோர் சலமகளு மீதே; - தவளநீ
றென்பணிவீ ரென்றும் பிரிந்தறியீ ரிங்கிவருள்
அன்பணியார் சொல்லுமினிங் கார். 95

குலமங்கையாகிய அந்த உமையம்மையார் ஒரு பாகத்தினின்றும் பிரியாதிருப்பார்; ஓர் சலமகளாகிய இந்தக் கங்கையம்மையாரும் இங்குச் சடையினின்றும் நீங்கார்; வெள்ளிய நீற்றினையும் எலும்பினையும் அணியும் இறைவரே! நீவிரும் இவர் இருவரையும் பிரியமாட்டீர்; இங்கு இவ்விருவருள்ளே உமக்கு அன்பினுல் அணிமையுடையார் யாவர்? சொல்லுமின்.

அவள் - இவள் - என்பன வாளா பெயராய் நின்றன; **ஈதே** - அகலாமையின் இவ்வாறே; **நீறு - என்பு - அணிவீர்** - சங்காரத்தில் இவ்விரண்டும் ஓரிடத்து ஒரு காலத்தில் வருவன; இவற்றை ஒன்றுபோலத் தாங்குதல்போல இவ்விருவரையும் வைத்தீர் என்பதும் குறிப்பு. **நீறு** - பரையின் உருவம்; "பாராவண மாவது நீறு" என்பதும் கருத்து. "**இவருள் இங்கு அன்பு அணியார் ஆர்; சொல்லுமின்**" என்று முடிக்க. **அன்பு** - அன்பினுல்; மூன்றனுருபு தொக்கது. சத்திகளிரண்டையும் போற்றியது.

ஆர்வல்லார் காண அரன்அவனை யன்பென்னும்
போர்வை யதனுலே போர்த்தமைத்துச் - சீர்வல்ல
தாயத்தா னுமுந் தனிநெஞ்சி னுள்ளடைத்து
மாயத்தால் வைத்தோ மறைத்து. 96

நாமும் அரனை, அன்பென்னும் போர்வையினுல் மூடி வைத்து நமக்குச் சிறப்பாகிய உரிமையினுல் பிறரறியா வண்ணம் தனியாக நமது மனத்தில் அடைத்து மறைத்து வைத்தோம்; ஆதலினுல் யார் அவரைக் காணவல்லார்கள்? (ஒருவருமிலர்).

மாயத்தால் **மறைத்**தலும், போர்வையாற் **பொதி**தலும், **உள்ளடைத்த**லும் என்று மூன்று கோட்டைகளுள் சிறை வைத்தோம் என்பது. ஏகதேச உருவகம். **ஆர்** - எம்போல்வாரன்றி வேறு யாவர் என்பதாம். **நாமும்** - பிற கணங்களேயன்றி நாமும் என இறந்தது தழுவிய எச்சவும்மை. **அன்பென்னும் போர்வை - போர்வை** - இங்குப் பொதிதற்குபகரிக்கும் சாதனம் என்ற பொருளில் வந்தது. **தாயம்** - பிறப்புரிமை. அறிவுடையுயிர்க்கெல்லாம் பொதுவுரிமையாதலன்றிப், "பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம் காதல் சிறந்து" சேர்ந்த உரிமை என்று அம்மையார்க்குச் சிறப்பாயுரியது. நெஞ்சினுள்

தனியடைத்து - என்க. தனியடைத்தல் காவல் சிறந்ததொரு சிறைவிசேடம். தனிக்காவல். Solitary confinement என்பர் நவீனர். **மாயம்** - பிறரறியாமற் செய்யும் உபாயம் என்ற பொருளில் வந்தது. "நாடி நாரண னுன்முக னென்றிவர், தேடி யுந்திரிந் துங்காண வல்லரோ? மாடமாளிகை சூழ்தில்லை யம்பலத், தாடி பாதமென் னெஞ்சுளிருக்கவே" (குறுந்.); "சிறையிடல்போல்" (காஞ்சிப் புரா.) அடிமைத் திறத்தின் பெருமிதம் கூறியது.

மறைத்துலக மேழினிலும் வைத்தாயோ? வன்றேல்
உறைப்போடு முன்கைக்கொண் டாயோ? - நிறைத்திட்
டுளைந்தெழுந்து நீயெரிப்ப மூவுலகு முள்புக்
களைந்தெழுந்த செந்தீ யழல். *97*

(இறைவரே) நீர் எரிப்ப உளைந்து எழுந்து மூ உலகும் நிறைத்திட்டு அளைந்து எழுந்த செந்தீ அழல் - நீர் எரிக்கும்போது சுழித்து முண்டெரிந்து உள்ளே புகுந்து விரவி எழுந்த சிவந்த தீயினை; உலகம் ஏழினும் மறைத்து வைத்தாயோ? - ஏழுலகங்களிலும் அறியாதபடி மறைத்து வைத்தீரோ?; அன்றேல்...கொண்டாயோ? - அன்றி, வலிமையுடனே உமது கையினிற் பொதிந்து வைத்துக் கொண்டீரோ?

நீ என்ற முன்னிலை தொக்கு நின்றது. இதனால் இறைவர் ஆடும்போது இடக்கையிலேந்திய தீயைச் சிந்தித்துப் போற்றியது. **உலகமேழினும் வைத்தல்** - கடலினுள் மறைந்து நின்று ஊழியில் பெருகிக் கடலைச் சுவற்றி உலகை எரிக்கும் வடவையை உலகினுள் பொதிந்து வைத்தல் உயிர்த்தன்மை காக்கும் சாடராக்கினி என்றலுமாம். **ஏழுலகம்** என்றது மேல் கீழ் உள்ள ஏழு என்ற எண் கொண்ட உலகம்; பின்னர் **மூவுல**கென்றது மேல் கீழ் நடு என்ற மூவகை குறித்தது; **உலகம் ஏழு** என்றது உயிர்கள் வரும் ஏழு பிறப்பு என்ற குறிப்புமாம். தீயின் கூறே உயிர்களின் உடலுக்குள் நின்று வளர்த்தல் காண்க. **உறைப்பு** - என்றது தீயைக் கை ஏந்தும் அருமை குறித்தது. **வைத்தாயோ? கைக் கொண்டாயோ?** என்றது, சங்காரத்தில் நீ எரிக்கும் அத்தீ, உலகில் முன்னரே வைப்பாக வைத்த தீயை வளர்த்தபடியோ? அன்றி, உன்கையில் கொண்ட தீயைக் கொளுவியபடியோ? என்றதாம். **உளைதல்** - சுழித்து மேலெழுதல்; **அளைதல்** - உள் விரவுதல்; **செவ் - வழல்** என்ற கூட்டுக. **தீ அழல்** - தீய்க்கின்ற அழல்; வினைத் தொகை. ஒரு பொருட் பன்மொழியுமாம்.

அழலாட வங்கை சிவந்ததோ? வங்கை
யழகா லழல்சிவந்த வாறோ? - கழலாடப்
பேயாடு கானிற் பிறங்க வனலேந்தித்
தீயாடு வாயிதனைச் செப்பு. *98*

பேய்கள் ஆடுகின்ற காட்டினிடமாக வீரக் கழல் ஆடும்படி தீவினைக் கையிலேந்தித் தீயினடுவே ஆடுகின்றவரே! தீயினிடை ஆடுதலினால் உமது திருக்கை சிவந்ததோ? அன்றேல் கையின் அழகினால் அழல் சிவப்பாயிற்றோ? சொல்வீராக.

அனலேந்தி - தீயாடுவாய் என்பவற்றை எதிர் நிரனிறையாக. **அழல் சிவந்தவாறோ கை சிவந்ததோ?** என்றவற்றுடன் கூட்டுக. நீர் நின்று ஆடுகின்ற அனலால் கை சிவந்ததோ? ஏந்துகின்ற அனல் கையினாற் சிவப்புப் பெற்றதோ? என்க. அழல் வண்ணன் - அனலேந்தி

- அனலாடும் திறத்தை, முன் பாட்டில் கருத்தைத் தொடர்ந்து கொண்டு போற்றியது. **அழல் ஆட** - அட என்றது ஆட என நீண்டதென்று கொண்டு கையில் ஏந்திய அழல் வெதுப்ப என்றலுமாம்.

செப்பேந் திளமுலையாள் காணவோ? தீப்படுகாட்
டப்பேய்க் கணமவைதாங் காணவோ? - செப்பெனக்கொன்
றுகத்தா னங்காந் தனலுமிழு மைவாய
நாகத்தா யாடுன் னடம். *99*

ஐந்தலை நாகத்தையுடையவரே! நீர் ஆடுகின்ற நடனம் உமையம்மை காணவோ சுடுகாட்டில் பேய்க் கணங்கள் காணவோ? எமக்கு ஒன்றுகச் சொல்வீராக.

முன் பாட்டில் தீயாடும் திறம் போற்றியதனைத் தொடர்ந்து, அக்கூத்தில் இரண்டு திறங்களையும் போற்றியது. **அம்மைகாண ஆடுதல் புனருற்பவத்தின் பொருட்டும், பேய்க்கணங் காணச் சுடுகாட்டில் ஆடுதல் சங்காரத்தின்** பொருட்டுமாதல் குறிக்க **ஒன்றுகச் செப்பு** என்றார். சங்காரம் மீளச் சிருட்டித்தற் பொருட்டாதலின் இவை தம்முள் வேற்றுமையின்மையும் குறிப்பாலுணர்த்தி யருளியபடி. **அனலுமிழ்தல்** - அணுகியாரைத் தீப்போல வெதுப்பும் விடத்தைக் கக்குதல்.

நடக்கிற் படிநடுங்கு; நோக்கிற் றிசைவேம்;
இடிக்கி லுலகனைத்து மேங்கும் - அடுக்கற்
பொருமேறோ? வானேறோ? பொன்னெப்பாய்! நின்னே
றுருமேறோ? வொன்று வுரை. *100*

பொன்னார்மேனி இறைவரே! உமது இடப ஏறு நடந்தால் உலகம் நடுங்கும்; உருத்துப் பார்த்தால் அத்திசை வெந்துபோம்; உங்காரம் செய்தால் உலகெல்லாம் அஞ்சும்; அதனால், அது சிங்கம் தானே? இடபம் தானே? இடி ஏறோ? இதனை ஒன்றுக உரைப்பீராக.

அடுக்கல் பொரும் ஏறு - மலையில் சரித்து எல்லா மிருகங்களையும் பொருது வெல்லும் சிங்கம். **உரும் ஏறு** - ஆண்இடி. **நோக்கில்** - கனன்று பார்க்கில்; கனன்று என்பது ஆற்றலால் வந்தது. **கனலுதல்** - பகையாளரைப் பார்த்து அழித்தல். "அண்ண லரண் முரண் ஏறும்" (தேவா) என்றபடி அடைந்தாரைக் காக்கும் பொருட்டு இவ்வாறு நோக்குதல். **திசை** - பார்த்த அத்திசை. **பொருமேறு** முதலிய மூன்றினையும் **நடக்கில்** முதலிய மூன்றுடனும் நிரனிறையாகக் கூட்டிக்கொள்க. இப்பாட்டால் இறைவர் அடியார்க்கு அருள, ஊர்ந்துவரும் இடபத்தைப் போற்றியபடி. இதனோடு அந்தாதி நிறைவுறுதலின் ஊர்தியை வாழ்த்தி முடித்தபடியாம். "தோடுடைய செவியன்" என்று இறைவரைப் போற்றிய ஆளுடைய பிள்ளையார் அதனை அடுத்து "விடையேறி" என்று வைத்துப் போற்றிய குறிப்பும் காண்க. **ஒன்று** - இம்மூன்றும் வேருகக் காணப்படினும் ஒரு தன்மையே குறிப்பன என்பது குறிப்பு. "ஆய பசுவு மடலே றெனநிற்கும்" (திருமந்திரம்) என்றபடி இடபப் பசுவைக் குறிப்பதாம். பதியின் ஆணையின் வழியே அது நடத்தல் நோக்கல் இடித்தல் என்று தொழிற்படுங்காலத்து "மாயை தனையுதறி வல்வினையைச் சுட்டுமலம், சாய அமுக்கி" (உண்மை விளக்கம் - 36) என்றபடி மும்மலங்களையுங் களைந்து அருள்பெற்று ஆனந்த வாரிதியில் மூழ்கும் என்ற பொருளும்தொனிப்பது காண்க.

உரையினு லிம்மாலை யந்தாதி வெண்பாக்
கரைவினுற் **காரைக்காற் பேய்**சொற் - பரவுவார்
ஆராத வன்பினோ டண்ணலைச் சென் றேத்துவார்
பேராத காதல் **பிறந்து**. 101

அன்பினுல் இந்த வெண்பாக்களாகிய மாலையை அந்தாதியாகக் காரைக்காற் பேயினுல் தொடுக்கப்பட்ட சொல்லினுற் சொல்லி ஏத்துவார்கள் பெயராத காதல் பிறந்து ஆராத அன்பினோடும் சிவபெருமானைச் சென்றேத்துபவராவர்.

அந்தாதி, நூறு பாட்டுக் கொண்டதாதலின் அதற்கு மேல் உள்ளது இப்பாட்டென்று கருதியோ இதற்கு உரை எழுதாது விடுத்தனர் முன் உரைகாரர். அம்மையாரது இரண்டு பதிகங்களிலும் பத்துப் பாட்டுக்கு மேலே பலன் கூறிப் பெயரையும் இலச்சினையிட்ட பதினொன்ருவது பாட்டும் சேர்த்துப் பதிகம் என்ருற்போல, இதுவும் பயனும் பெயரும் கூறி முடித்தலாலும்; முன் பாட்டில் **உரை** என்ற அந்தத்தையே ஆதியாக **உரையினுல்** என்று வைத்துத் தொடங்கி, முதற்பாட்டில் "**பிறந்து** மொழி பயின்ற" என்ற ஆதியைக் "காதல் **பிறந்து**" என அந்தமாகக்கொண்டு வைத்து மண்டலித்து முடித்தலாலும் இது இத்திருவந்தாதியின் பகுதியேயாகும். இவ்வந்தாதியைப் பரவுவார்கள் சிவபெருமானிடம் சேர்ந்து துதித்து நித்தியமாய் வாழ்வார்கள் என்றபடி. **வெண்பா அந்தாதி மாலை** என்க. **வெண்பா** - இதன் யாப்பும், **அந்தாதி** - ஒரு பாட்டின் முடிபு அடுத்த பாட்டின் முதலாகவரும் கோவையும், மாலை - முதற்பாட்டும் இறுதிப் பாட்டும் முன் சொன்னபடி சேர்ந்து முடிந்து, நூறு பாட்டுக்கள் இருபுறமுள்ள மணிகளாகவும் ஒன்று நடுமணியாகவும் ஆக 101 மலர் மணிகள் கொண்ட தொடரும் குறித்தன. **கரைவு** - பேரன்பினுல் உள்ளங் கரைந்து பாட்டாக மேல் எழுதல். **சொல் - உரையினுல்** - பரவுவார் என்க. **சொல்லிய உரை** என்பது. **பரவுவார் - ஏத்துவார்** (ஆகுவர்) என்று ஆக்கச் சொல் வருவித்துப் பெயர்ப் பயனிலை கொண்டு முடிக்க. **பேராத** - பெயராத - மாருத. **காதல்** - அன்பின் மேனிலை. 101

திருச்சிற்றம்பலம்

அற்புதத் திருவந்தாதி உரை முற்றும்.

திருவந்தாதியைப் பற்றிய சில குறிப்புக்கள்

இயற்றமிழ்

திருத்தொண்டத் தொகையினுள் ஆரூர் நம்பிகளாற் போற்றப்பட்ட உண்மை நாயன்மார்கள் அறுபத்து மூவர்களுள், பெண்ணடியார்கள் மூவருள், இசைத்தமிழும் இயற்றமிழும் வல்ல பெருமை காரைக்காலம்மையாருக்கேயுரியது. இதுவன்றித் தமிழுலகிலும், இப்பெருமை அம்மையாருக்கே உண்டு. அம்மையாரது இயற்றமிழ் மிகச் சிறந்த எளிய இனிய நடையிலமைந்தது; ஆயினும் ஆழ்ந்து அகன்ற நுண்ணிய கருத்துக்களை கொண்டுள்ளன இவர்தம் இப்பாட்டுக்கள். இவை **வெண்பா** என்ற

பெயருக்கேற்ற எல்லா நலன்களையும் கொண்டு விளங்குகின்றன. யாப்புக்காகச் சொல்லை சிதைவு படுத்தாது, சொல்லும் பொருளும் ஒத்தியலும் பெருங்கவியிலக்கணம் வாய்ந்தன.

ஆட்படுதல்

சிவபெருமானுக்கு ஆளாகிப் பணி செய்திருப்பதுவும் அவரது அடியார்க்கடிமை செய்திருப்பதுவுமே தமது பிறவிப் பயன்; அவையே உயிர்க்கெல்லாம் உறுதியாவது என்பது அம்மையார் கொண்டொழுகிய துணிவும் வாழ்க்கைத் திறமுமாவன என்பது இப்பாட்டுக்களால் நன்கு விளங்கும். அவர்க்கே எழு பிறப்பு மாளாவோம் (3); யானே தவமுடையேன்...ஆளாயினேன் (7); ஒன்றே நினைந்திருந்தேன்...ஆளாமது (11); ஆட்பட்ட, பேரன்பே யின்னும் பெருக்கு (31) குறித்துத்தொழு தொண்டர் பாதம் (40); பணியான் செய்யேனேல், அண்டம் பெறினு மதுவேண்டேன் (72); உள்ளமே எப்போது மோது (73); சிந்தையார்க் குள்ள செருக்கு (79); நற்கணத்தி லொன்றாய நாம் (86) சேவடிக்கே யாளாய் (91); என்னெஞ்சத் தானென்பன் யான் (6); நெஞ்சினுள் ளடைத்து...வைத்தோம் (96) முதலியவை பார்க்க.

தாயின் அன்பு

பெருமானிடத்தும் பிராட்டியிடத்தும் அம்மையார் தாயாந் தன்மை நிலையில் தலையன்புகொண்டு பேணினராதலின் "தாயுமிலி தந்தையிலி தான்றனியனா"கிய இறைவரால் "அம்மையே!" என்றழைக்கும் சிறப்புடையவராயினர். பாம்புகளை அணியாதீர் - பொன்னாரம் மற்றொன்று பூண் - இரந்துண்ண வேண்டா - இடுகாட்டில் ஆடும்போது பிராட்டியைக் கூடவைக்க வேண்டா என்றிவ்வாறு வரும் பற்பல பாட்டுக்களும் இத்தன்மையை நன்கு விளக்குகின்றன. வளராத இளம் பிறையைப்பற்றி வரும் பாட்டுக்கள் அம்மையாரது பேரிரக்கம் மிக்க திருவுள்ள நிலையை மேலும் காட்டுவனவாம்.

பெருமானைப் பல வகைகளாலும் பாராட்டுதல்

இறைவரது திருவுருவ இயல்களையும், அங்கங்களையும், அவர் ஏந்துவன பூண்பனவற்றையும், ஊர்தியையும் தனித்தனி பலபல கூறுகளாகப் பாராட்டும் பாட்டுக்கள் அம்மையார் இறைவரை எவ்வளவு மனத்துள் அழுந்தியறிந்து நின்றனர் என்பதை விளக்குவன. பூணாகக் கொண்ட பாம்புகளைப் பற்றிய பல சுவைத் திறத்துப் பல பாடல்கள் (55, 57, 64, 66 முதலியன) - சிலம்பு (67) - ஆடுமிடம் (70 - 77) - சடை 75) - கபாலப் பலிப்பாத்திரம் (74) - திருவடி (80) - திருமிடறு (88) - கங்கை (90) - சிரமாலை (52) - அம்மையப்பராகிய கோலம் (39 - 58 -94) - திருமால் பாகம் (41 - 54) ஏந்திய அனல் (97 - 98) - ஏறு (100).

இறைவரது தத்துவ நிலைகள்

அவனே யிருசுடர் தீயாகாசமாவான் (21) - அறிவாயறிகின்றானன்றானே (20) - அருளே உலகெலா மாள்விப்பது (9) - எவ்வுருவோ நின்னுருவம் (61) - காலையே போன்றிலங்கு மேனி (65) - ஏகமாய் நின்றாலும் தன்னை யறியாத தன்மையானும் (92) எக்கோலத் தெவ்வுருவி லெத்தவங்கள் செய்வார்க்கும், அக்கோலத் தவ்வுருவேயாம் (33),

பிறரறியலாகாப் பெருமையரும் தாமே, பிறரறியும் பேருணர்வுந் தாமே (30) - அரனென்கோ நான்முகனென்கோ வரிய, பரனென்கோ பண்புணர மாட்டேன் (18) - இறைவனே யெவ்வுயிருந் தோற்றுவிப்பான் (5) - தொல்லுலகுக் காதியாய் நின்றவரன் (17) முதலிய பாட்டுக்கள் சிவபெருமானது முழுமுதற் றன்மைகளைக் கூறி விளக்கும்முகத்தால் பதியிலக்கணம் பற்றிப் போற்றுகின்றன.

அன்பையும் அருளையும் விளைக்கும் தன்மை,

அம்மையாரது பாடல்களுள் ஒரு சிலவற்றையேனும் பயின்று சிந்தித்தார்க்கு அன்பும் அருளும் பெருக விளையும் என்ப தொருதலை. "பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல், சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன்" (1) என்று உண்மையாய்க் கூறத்தக்க நிலை வேறு யாவர்க்குக் கூடும்? இடர் களையா ரேனும் எமக்கு இரங்காரேனும் - என் நெஞ்சு அவர்க்கு அன்பு அறுது. (2); அவர்க்கே எழுபிறப்பு மாளாவோம் - அவர்க்கல்லால் மற்றொருவர்க்கு என்ஞான்றும் ஆள் ஆகோம் (3) என்று கூறும் துணிபு பெறின் உயிர்கள் உய்ந்துவிடுமன்றோ? வானத்தான் என்பாருமென்க...என் நெஞ்சத் தான் என்பான் யான் (6), யாமுந் தனிநெஞ்சி னுள்ளடைத்துச் சிவனை மறைத்து வைத்தோம். ஆதலின் யாவர் அவனைக் காணவல்லார் (96) என்று கூறும் பெருமிதம் கண்டு துதிக்கற்பாலது. இம்மாலையால் ஏத்துவார் மாறுத காதலுடன் அண்ணலைச் சென்றேத்துபவராகும் நிலை யடைவர் என அம்மையார் இதற்குப் பயன் உரைத்தது முழு உண்மையேயாகும் என்ப தனுபவத்திற் காணப்பெறும்.

இறைவரைப் போற்றும் அருமைப்பாடு

நிறந்திகழு மைஞ்ஞான்ற கண்டத்துவானோர் பெருமானே! 1) என்பறுக்கோலத் தெரியாடு மெம்மானூர் (2) இறைவனே! எந்தாய்! (5) முன்னஞ்சத்தாலிருண்ட மெய்யொளி சேர்கண்டத்தான் (6); வெண்ணீற்ற அம்மான் (7); எனக்கினிய வெம்மானை யீசனை (10); கங்கையான்றிங்கட் கதிர்முடியான் பொங்கொளிசே ரங்கையான் (11); மின்செய்வான் செஞ்சடையாய்! வேதியனே! (15); சீராளன் கங்கை மணவாளன் செம்மேனிப் பேராளன் வானோர் பிரான் (44) சொன்முடிவொன் றில்லாத சோதியாய் (63); மிக்குலக மேழினுக்குங் கண்ணாளா! (72); முதலியவை அம்மையார் இறைவரைப் பாராட்டிப் போற்றும் அருமைப் பாட்டினால் அன்பு ததும்பி நிற்கும் நிலை கண்டு போற்றத்தக்கன.

கயிலையை நோக்கிச்செல்லும் வழியில் அருளியது

இவ்வந்தாதியும், திருவிரட்டை மணிமாலையும் அம்மையார் பேய்க்கண வடிவம் வேண்டிப் பெற்றுத் திருக்கயிலை காண வழிப்பட்டுச் செல்லும் வழியில் அருளப்பட்டன. இவ்வாறே ஆளுடைய நம்பிகளும் கழறிற்றறிவாரும் வழியில் அருளிய திருப்பாட்டுக்களும் காண்க. வழிப்படுவோர் துதித்தல் வேண்டும் என்பதும் காணக்கிடக்கின்றது.

திருவிரட்டைமணி மாலை

திருச்சிற்றம்பலம்

கட்டளைக் கலித்துறை

கிளர்ந்துந்து வெந்துயர் வந்தடும் போதஞ்சி நெஞ்சமென்பாய்
தளர்ந்திங் கிருத்த றவிர்திகண் டாய்தள ராதுவந்தி
வளர்ந்துந்து கங்கையும் வானத் திடைவளர் கோட்டுவெள்ளை
யிளந்திங் களுமெருக் கும்மிருக் குஞ்சென்னி **யீசனுக்கே.** 1

(இ-ள்.) நெஞ்சமே! வெவ்வியதுயர் வந்து அடுகின்ற காலத்து அஞ்சித் தளர்ந்து வாளா வாடி யிங்கு இருக்கும் நிலையினை விட்டுவிடு; கங்கையும் திங்களும் எருக்குமலரும் இருக்கும் சென்னியினையுடைய ஈசனையே தளர்ச்சி யடையாமல் வந்திப்பாயாக!

நெஞ்ச மென்பாய்! துயர்வந்து அடும்போது இங்குத் தளர்ந்திருத்தல் தவிர்தி; தளராது ஈசனுக்கே வந்தி என்று கூட்டி முடிக்க. **கிளர்ந்து உந்து வெம் துயர்** - முன் வினை தூண்ட அதுகாரணமாக வெங்கும்பிக் காயத்துள் வந்து சேரும் பிறவித் துன்பம். ஏனைய எல்லாத் துன்பங்களும் இதனுள் அடங்கும்; **அடும் போது** - அடர்த்து வருத்தும் காலம். "சுழலார் துயர்வெயிற் சுட்டிடும் போதடித் தொண்டர்துன்னு, நிழலாவன; வென்று நீங்காப் பிறவி நிலைகெடுத்துக், கழலாவினைகள் கழற்றுவ...ஐயாறன் அடித்தலமே" (தேவா); **நெஞ்சமென்பாய்** - என்றதனால் நினைத்துத் தக்கது செய்யும் கருவியாகி **நெஞ்சம்** எனப் பெயர் பெற்றும் அது செய்யாது வாளா துன்பத்துட் கழியும் என்பதும் குறிப்பு. **எருக்கு** - துன்பநீக்கமும், **கங்கை - திங்களும்** இன்ப ஆக்கமும் குறித்தன. **வளர்ந்து - வளர்** என்ற அடைமொழிகள் குறிக்க. **ஈசனுக்கே** - ஈசனையே வந்தி என்க; உருபு மயக்கம். திருக்கயிலைக்குச் செல்லும் வழியில் நெஞ்சத்தை வழிப்படுத்திச் சென்ற அமைப்பும் காண்க. இறைபணி நிற்றல் பாசநீக்கத்துக்குக் காரணம் என்பதாம். "ஏகனாகி இறைபணி நிற்க மலமாயை தன்னொடு வல்வினை யின்றே" (சூ - 103 - போதம்). அவ்வாறு நிற்பாரைத் துயரம் வாதியா வென்பதாம்.

வெண்பா

ஈச னவனலா தில்லை யெனநினைந்து
கூசி மனத்தகத்துக் கொண்டிருந்து - பேசி
மறவாது வாழ்வாரை மண்ணுலகத் தென்றும்
பிறவாமைக் காக்கும் பிரான். 2

(இ-ள்.) முதல்வன் சிவனல்ல தில்லை என்று நினைந்து கூசி மனத்துள் நிலையாக வைத்துப் பேசியும் மறவாமல் வாழ்வாரை அப்பெருமான் இவ்வுலகிற் பிறவாமல் காப்பார்.

மறவாது வாழ்வாரைப் பிரான் பிறவாமைக் காக்கும். **கூசுதல்** - சிவனது மிக்க உயர்வும், தமது மிகத் தாழ்ந்த இழிபும் கருதி அவரை நினைத்தற்கும் அடிமை செய்தற்கும் தமக்கு எட்டுணையும் தகுதியில்லை என்று ஒதுங்குதல். "விண்ணோர்க ளேத்துதற்குக் கூசு மலர்ப்பாதம்" (திருவா - திருவெம் - 2). உலகியலிலும் பெரியோர் பெயரைச் சொல்லுதற்கு

வாய் கூசும் ஒழுக்கம் காண்க. சிவனை மறவாதிருத்தல் வீடு பெறுதற்குக் காரணமாம் என்பது. **அவனலாதில்லை** என்று எதிர்மறையாற் கூறியது உறுதிப் பொருள் தருதற்கு. **மறவாது வாழ்வார்** - மறவாமையே வாழ்வாவது; **மறத்தல்** பிழையும் தாழ்வுமாம் என்பதும் பெறப்படும். **என்றும் பிறவாமை** - நித்தியமாகிய வீடுபேறு. அம்மையாரது சரிதவரலாறும் காண்க.

பிரானென்று தன்னைப்பன் ணுள்பர **வித்தொழு வாரிடர்கண்**
டிரானென்ன நிற்கின்ற வீசன்கண் டீரின வண்டுகிண்டிப்
பொராநின்ற கொன்றைப் பொதும்பர்க் கிடந்துபொம் மென்றுறைவா
யராநின் றிரைக்குஞ் **சடைச்செம்பொ னீண்முடி யந்தணனே.** 3

(இ-ள்.) தம்மையே தலைவர் என்று கொண்டு பலநாளும் தொழுவார்களது துயரைக் கண்டு தீர்த்தருளாமலிருக்காதவர் தாமே என்று நிற்கும் ஈசராவார் நீள் சடைமுடி அந்தணராகிய சிவபெருமானேயாம்.

"தொழுவார் இடர்கண்டு இரான்" என நிற்கின்ற ஈசன் - அந்தணன் என்க. **கண்டு இரான்** - தரியான் - கண்டு தீர்த்தருள் செய்யாமலிரான். **நிற்கின்ற** - முக்காலத்தும் நிலைபெறும்; **ஈசன்** - தலைவன். இம்மூன்று பாட்டுக்களிலும் **ஈசன்** என்ற நாமத்தாலே போற்றியது, சிவனது முழுமுதலாகிய தலைவராந் தன்மையினையும் ஐந்தொழிற் கருத்தனாய் அருள் புரியும் சிறப்பியல்பினையும் அவனையே பிரானென்று வழிபட்டுத் தாம் பெற்ற பேற்றினை உலகுக்கு உறுதி கூறி வழிப்படுத்தும் திறனையும் குறித்தது. **பொரா நின்ற...சடை** - வண்டுகள் ஒலிக்கும் கொன்றைச் சூழலில் பாம்புகள் நின்று சீறும் சடை. **உறைவாய்** - நச்சுப் பையினையுடையவாய். உறை - (உறு - பகுதி) பை. **அரா - பொம்மென்று இரைக்கும்** என்க. **அந்தணன்** - அந்தண்மை ; பேர் அருள் - உடையவன் ஆதலின் **இடர்கண்டு இரான்** என்று காரணப் பொருள்பட நின்றது. ஏகாரம் - ஈசனவனலாதில்லை - மறையோன் சிவனே - பிறரில்லை என்று பிரிநிலையோடு தேற்றமுமாம். இறைவரது பேரருளுடைமை குறித்தது. 3

அந்தணனைத் தஞ்சமென் றுட்பட்டா ராழாமே
வந்தணைந்து காத்தளிக்கும் வல்லாளன் - கொந்தணைந்த
பொன்கண்டாற் பூணாதே கோணாகம் பூண்டானே
யென்கண்டாய் நெஞ்சே யினி. 4

(இ-ள்.) அந்தணனாகிய தன்னையே தஞ்சமென்று அடைந்து ஆட்பட்டவர்கள் பிறவிக் கடலில் ஆழ்ந்துவிடாதபடி காத்து அருளவல்லவராகிய இறைவர் திரண்டபொன் பூண்டுகொள்ளாது கோளிழைக்கும் நாகத்தைப் பூண்டாரே! இனி என்னோ? நெஞ்சமே.

நெஞ்சமே இனி என் (ஆமோ) கண்டாய் என்க. இரக்கமும் அச்சமும் குறித்தது தாயின் அன்பு. **அந்தணனை** - அந்தணனாகிய தன்னை; **ஆழாமே** - குறிப்புருவகம். **ஆழாமே** என்றதனால் பிறவிக் கடல் என்பதும் பெறப்படும். **வல்லாளன்** - எல்லையில்லாத சத்தியுடையவனாதலால் அடைந்தாரை எல்லாம் காக்க வல்லவன்; அது பிறர்க்கு அரிது என்றபடி,

இனிவார் சடையிற் கங்கையென் பாளையங் கத்திருந்த
கனிவார் மலைமங்கை காணிலென் செய்தி ?கை யிற்சிலையான்
முனிவார் திரிபுர மூன்றும்வெந் தன்றுசெந் தீயின்மூழ்கத்
தனிவார் கணையொன்றி னன்மிகக் கோத்தவெஞ் சங்கரனே. 5

(இ-ள்.) ஒரு கணையினால் திரிபுரங்கள் மூன்றும் வேவக் கோத்த எம் சங்கரரே! உமது சடையிற் சூடிய கங்கை என்னும் அம்மையை உமது ஒரு பங்கில் உள்ள உமையம்மை கண்டுகொண்டாராகில் என்ன செய்வீர்?

"கங்கை சடையிற் கரந்தாயக் கள்ளத்தை மெள்ளவுமை, நங்கை யறியிற்பொல்லாது கண்டீர்" (தேவா, அப்பர் - நாகை) - இப்பாட்டு உமையம்மையைப் போற்றியது. கண்டால் மலைமங்கை ஊடல் கொள்வார் என்பது. உமை அம்மையார் ஊடலைப்பற்றித் திருவந்தாதி 68ஆவது பாட்டுப் பார்க்க. கோத்த - அன்பு எய்யப்படாமல் கோத்த மட்டிலே நிற்கப், புரங்கள் தீ மூழ்கியன என்பது குறிக்க, எய்த என்னாது கோத்த என்றார்.

சங்கரனைத், தாழ்ந்த சடையானை, யச்சடைமேற்
பொங்கரவம் வைத்துகந்த புண்ணியனை; யங்கொருநாள்
ஆவாவென் றாழாமைக் காப்பானை யெப்பொழுதும்
ஓவாது நெஞ்சே! யுரை. 6

(இ-ள்.) சங்கரனை - சடையானை - புண்ணியனை - காப்பானை நெஞ்சே! ஓவாது எப்போது முரைப்பாயாக.

ஆ! ஆ! - இரக்கக் குறிப்பு. **ஒருநாள்** - கூற்றுவன் வந்து வேதனைகள் செய்து உயிர் கொண்டுபோகும் நாள் - "உற்றா ராருளரோ உயிர் கொண்டு போம் பொழுது, குற்றா லத்துறை கூத்தனல் லானமக்கு" (அப்பர். அங்கமாலை), "அலமந்த போதாக வஞ்சேலென் றருள் செய்வான்" (திருஞான - ஐயாறு); "சாதனாள்" "துஞ்சும்போது" (தேவா. அப்பர்) **ஆழாமல் காப்பான்** - துன்பக் கடலினுள் மூழ்கி வருந்தாது நினைப்பித்தல் - ஆழ்ந்து மறந்து படாமல்; "நெஞ்சுளே புகுந்து நின்று நினை தரு நினைவினனே" (திருநே) எப்பொழுதும் - என்றது எக்காலத்தும் என்றும், ஓவாது என்றது இடைவிடாது என்றும் உரைக்க. இவை முறையே காலத் தொடர்ச்சியும் செயலின் றொடர்ச்சியும் குறித்தன.

உரைக்கப் படுவது மொன்றுண்டு கேட்கிற்செவ் வான்றொடைமேல்
இரைக்கின்ற பாம்பினை யென்றுந் தொடேலிழிந் தோட்டந்தெங்குந்
திரைக்கின்ற கங்கையுந் தேனின்ற கொன்றையுஞ் செஞ்சடைமேல்
விரைக்கின்ற வன்னியுஞ் சென்னித் தலைவைத்த வேதியனே. 7

(இ-ள்.) கங்கையினையும் கொன்றையினையும் வன்னியினையும் சென்னியில் வைத்த வேதியரே! உம்மிடம் சொல்லப்படும் செய்தி உண்டு; அஃதியாது? என்று வினவுவீராகில் செவ்வானம் போன்ற உமது சடையின்மேல் சீறுகின்ற பாம்பினை என்றைக்கும் தொடாதிருப்பீராக!

இப்பாட்டுத் தாய்போன்ற அன்பினை விளக்குவது. இதுபற்றித் திருவந்தாதியில் உரைத்தவை பார்க்க. **செவ்வான் தொடை** - செவ்வானத்தை கற்றையாகத்

தொடுத்ததுபோன்ற தொகுதி. இதற்கு இவ்வாறன்றிச் செவ்வானி லுதிக்கும் பிறை என்றுகொண்டு, தொடேல் என்பதற்கு வையாதிரும் என்றுரைத்து மதிபாம்பைக் கண்டஞ்சும் என்று கருத்துரை கூறுவார் முன்னுரைகாரர், **இரைத்தல்** - சீறுதல்; **விரைக்கின்ற** - மணம் வீசுகின்ற; **ஓட்டந்து** - ஓட்டம் தந்து என்பது ஓட்டந்து என நின்றது; ஓடி; **தலை** - ஏழனுருபு; **வேதியன்** - ஞானத்தலைவர்; வேதங்களாற் போற்றப்பட்டவன் என்றலுமாம். ஞானத் தலைவராதலின் பாம்பு உம்மைத் தீங்கு செய்யாமல் வைக்க வல்லவர் என்பதனை நான் அறியேன்; ஆயினும் எனது அன்பினால் பாம்பினைத் தொடாதீர் என வேண்டிக்கொண்டேன் என்பது குறிப்பு. "ஓடுநீ ருடன்செ லாது நிற்குமோ வோலை யென்பார், நீடிய ஞானம் பெற்றார் நிறுத்தவும் வல்ல ரென்பார்" (திருஞான - புரா - 807); இக்கருத்துப் பற்றியே எம் பொருட்டால் "உரைக்கப்படுவது ஒன்றுண்டு கேட்கில்" என்று தொடங்கினர்.

வேதியனை வேதப் பொருளானை வேதத்துக்
காதியனை யாதிரைநன் னாளானைச் - சோதிப்பான்
வல்லேன மாப்புக்கு மாலவனு மாட்டாது
கில்லேன மாவென்றான் கீழ். 8

(இ-ள்.) ஞானத் தலைவரும், மறைகளுக்குப் பொருளாவாரும், மறைகள் தோற்றுதற்குக் காரணரும், திருவாதிரையாகிய நன்னாளினை யுடையவரும் ஆகிய சிவபெருமானை அளவு காண்பேன் என்று வலிய பன்றியுருவம் எடுத்து மண்ணைத்தோண்டி உள்ளே புகுந்து அளவு காணமாட்டாது திருமாலும் "நான் அறியகில்லேன் போற்றி" என்று கீழ்வீழ்ந்து வணங்கினான்.

வேதியன் என்றது முதலாகச் சொல்லிய மூன்றாலும் ஞானப்பொருளாய்ப் பசு ஞானத்துக் காப்பாற்பட்டு நின்ற நிலையுடையவராதலின் அவருடைய சகளத்திருமேனிதானும் அறிதற்கரிது என்பதாம். **வேதப்பொருள்** - வேதத்தால் நுவலப்படுபொருள். "ஞானத்திரளாய் நின்ற பெருமான்" (தேவா - பிள் - அண்ணா). **ஆதிரை நாளான்** - "ஆதிரை நாளுகந் தானு மாரூ ரமர்ந்தவம் மானே" (காந்தாரம் - அப்பர்) **சோதிப்பான்** - சோதித்தற்பொருட்டு. **சோதித்தல்** - அடிசெல்லுமளவுகாண்டல். **கில்லேன்** - அறிய மாட்டேன். **கில்** - ஆற்றலுணர்த்தும் இடைச்சொல்; **நமா** - போற்றி - வந்திக்கின்றேன். **கீழ்** - வணங்குதலின் கண். **கில்லேன் - அம்மா** - என்றுரைத்தனர் முன் உரைகாரர்.

கீழா யினதுன்ப வெள்ளக் கடற்றள்ளி யுள்ளுறப்போய்
வீழா திருந்தின்பம் வேண்டுமென் பீர்!விர வார்புரங்கள்
பாழா யிடக்கண்ட கண்டனெண் டோளன்பைம் பொற்கழலே
தாழா திறைஞ்சிப் பணிந்துபன் னாளுந் தலைநின்மினே. 9

(இ-ள்.) துன்ப வெள்ளமாகிய கடலினுள்ளே தள்ளப்பட்டு வீழாமல் மேலிருந்து இன்பம் பெறவேண்டுமென்று விரும்புகின்றவர்களே! சிவபெருமானின் பாதங்களைத் தாமதியாமல் வணங்கிப் பணிந்து பலகாலமும் தலைப்பட்டு அந்நிலையில் உறைத்து நில்லுங்கள்.

என்பீர்! நின்மின் - என்க; **என்பீர்** - விளி. **துன்பக்கடல்** - பிறவி. **இன்பம்** - வீடுபேறு. **இறைஞ்சுதல்** - மனத்தாலும் வாக்காலும் வணங்குதல் குறித்தது. **தலை நிற்றல்** - சலியாது சிறந்து நிற்றல்; **தாழாமல்** - பொழுது போக்காமல். "தாழாதறஞ் செய்மின்" (தேவா - நம்பிகள்). **பன்னாளும்** - எக்காலமும்.

தலையாய வைந்தினையுஞ் சாதித்துத் தாழ்ந்து
தலையா யினவுணர்ந்தோர் காண்பர் - தலையாய
வண்டத்தா னாதிரையா னாலால முண்டிருண்ட
கண்டத்தான் செம்பொற் கழல். 10

(இ-ள்.) தலைமையாகிய திருவைந்தெழுத்தினையும் சாதித்து வணங்கித் தலையாயினவற்றை உணர்ந்தவர்கள் மேலாகிய சிவபுவனத் திறைவரும் திரு ஆதிரைநாளுகந்தவரும் திருநீலகண்டரும் ஆகிய சிவபெருமானது செம்பொற்கழலினைக் காண்பர்.

தலையாய ஐந்து - "ஆதிமந்திரம் அஞ்செழுத்து" (திருஞான - புரா - 698); முத்திபஞ்சாக்கரம்; சாதித்தல் - "அஞ்செழுத்தாலுள்ள மரனுடைமை கண்டரனை, யஞ்செழுத்தாலர்ச்சித் திதயத்தில் - அஞ்செழுத்தாற், குண்டலியிற் செய்தோமங் கோதண்டஞ் சானிக்கில், அண்டனாஞ் சேடனா மங்கு" என்ற "விதியெண்ணு மஞ்செழுத்தே" என்ற சிவஞானபோதம் 9-ம் சூத்திரத்தின் உதாரண வெண்பாவும், பிறவும் காண்க. 1391 - 1394 பாட்டுக்களும் அவற்றின் கீழ் உரைத்தனவும் இங்குச் சிந்திக்க. **தலையாயின உணர்ந்தோர் - தலையாயின** - சாதனமாகிய சிவஞானத்தினையும், சாதிக்கு முறையினையும், சாதித்தற்கண்வரும் இடையூறுகளை நீக்குமுபாயங்களையும்; **உணர்ந்தோர்** - குருவருளால் அறிந்தோர்; **தலையாய அண்டம்** - ஏனையண்டங்கள் அனைத்துக்கும் சிரத்தானமாய்ச் சிவபோக வாழ்வுதரும் சிவபுவனம். கழல் - **காண்பர்** - என்க. **தலையாயின உணர்ந்தோர்** - என்றதற்கு "இறை சத்தி பாச மெழின்மாயை யாவி, யுறநிற்கு மோங்காரத்துள்" (திருவருட்பயன் - அஞ்செழுத்தருணிலை - 2) என்றபடி வரும் பொருளை உணர்தல் என்பாருமுண்டு. **கழல் காண்டலாவது** - வீடுபே றெய்துதல்.

கழற்கொண்ட சேவடி காணலுற் றார்தமைப் பேணலுற்றார்
நிழற்கண்ட போழ்தத்து நில்லா வினைநிக ரேதுமின்றித்
தழற்கொண்ட சோதிச்செம் மேனியெம் மானைக்கைம் மாமலர்தூய்த்
தொழக்கண்டு நிற்கிற்கு மோதுன்னி நம்மடுந் தொல்வினையே. 11

(இ-ள்.) சிவபெருமானது திருவடியைக் கண்டுகொண்டிருக்கும் அடியார்களைப் பேணுகின்ற அடியவர்களது நிழலைக் கண்டபோதே தீவினைகள் நிற்கலாற்றாது நீங்கும்; அற்றாகவே, தமக்கொப்பில்லாத செம்மேனி யெம்பெருமானைக் கையின் மலர் கொண்டு தொழுதலைக் கண்டும் நமது அடும் தொல்வினைகள் நிற்கவல்லனவா? (அல்ல).

காணலுற்றார் பேணலுற்றார் - காணுதல் பேணுதல் என்ற செயல்கள் இடையறாது நிகழ்தல் குறித்தன. **காணல்** - உள்ளே கண்டுகொண்டிருத்தல். **பேணுதல்** - பலவாற்றாலும்

வழிபடுதல். அம்மையார் புராணம் 15ஆவது பாட்டு (1731) பார்க்க. **பேணலுற்றுர் நிழல்** - ஆறனுருபு விரிக்க. **நிழற்கண்ட போழ்தத்து** - நிழலைத் தானும் கண்டபோதே; வினை நீங்கும் எளிமை குறித்தது. அடியாரடியாரது நிழலைக் கண்டவிடத்தே நீங்கும் வினை, சிவனைத் தொழுவார்பால் நில்லாது அகலும் என்பதும் சொல்லவும் வேண்டுமோ? என்றபடி. அடியாரைப் பேணுதலும் சிவனைத் தொழுவதுமே வினை நீங்குதற்குரிய உபாயம் என்பதும் உடனே விளக்கப்பட்டன. இப்பாட்டு அம்மையார் சரித அகச்சான்று. 11

தொல்லை வினைவந்து சூழாமுன் ருழாமே
யொல்லை வணங்கி யுமையென்னு - மெல்லியலோர்
கூற்ருனைக் கூற்றுருவங் காய்ந்தானை வாய்ந்திலங்கு
நீற்ருனை நெஞ்சே நினை. 12

(இ-ள்.) தொல்லைவினை வந்து சூழ்ந்துகொள்வதற்கு முன்னமே தாமதியாமல் விரைந்து வணங்கி, நெஞ்சமே! உமையொரு பாகரும், இயமனைக் காய்ந்த வரும், வாய்ந்து விளங்கும் திருநீற்றினையுடையவரும் ஆகிய சிவபெருமானை நினைப்பாயாக.

வினைவந்து சூழாமுன் - பழவினை வந்து சூழ்தல் உறுதி; சூழ்ந்தபின் நினைத்தல் இயலாது; ஆதலின் வினை விளையும் அக்காலத்திற்கு முன்பே நினை என்பது. **தொல்லை வினை** - முற்செய் வினை; நினையவொட்டாது தொல்லை செய்யும் வினை என்றலும் குறிப்பு. **வந்து** - சேரும் பருவத்தால் வந்து. **தாழாமே - ஒல்லை** - ஒரு பொருட் பன்மொழி மிகுதி குறித்தன. "உலைவின்றித் தாழாது" (குறள்). உமை கூறு - கருணையினையும், **கூற்றம் காய்தல்** - ஆற்றலையும், நீறு - அழியாமையையும் குறித்தன. கூற்று - என்னுது கூற்று **உருவம்** - என்றது வினை தடுக்கலாகாமையின் அதன் வேதனை யில்லாமற் செய்பவன் என்பதாம். "உப்பக்கம் காண்பர்" (குறள்) **நினைத்து வணங்கு** என்றது - நினையா நின்று வணங்குக என்றதாம். ஒன்றுபட்ட நினைவு.

நினையா தொழிதிகண் டாய்! நெஞ்ச மே!யிங்கொர் **தஞ்சமென்று**
மனையா ளையுமக்க டம்மையுந் தேறியொ ராறுபுக்கு
நனையாச் சடைமுடி நம்பனந் தாதைநொந் தாதசெந்தீ
யனையா னமரர் பிரானண்ட வாண னடித்தலமே. 13

(இ-ள்.) நெஞ்சமே! மனையாளையும் மக்களையும் இங்கு ஒரு தஞ்சமென்று தேறிக்கொண்டு, (அதனல்) நம்பன் - தாதை - தீ அனையான் - பிரான் - அண்டவாணன் அடித்தலமே இங்கு ஒரு தஞ்சமென்று நினையாமல் விட்டுவிடாதே!

நினையாது ஒழிதி! - நினையாமல் விட்டுவிடாதே. "விடுதி கண்டாய் - விடிலோ கெடுவேன்" (திருவா - நீத் - விண் - 23). **ஒழிதி** - ஒழியாதே. ஒழிதியோ? என்ற வினுக் குறிப்புமாம். **இங்கொர் தஞ்சமென்று** என்பதனைச் சிங்கநோக்காக வைத்து, இங்கொர் தஞ்சமென்று - நினையா தொழிதி என்றும், இங்கொர் தஞ்சமென்று - தேறி என்றும் முன்னும் பின்னும் கூட்டுக. **தேறி** - பொய்யை மெய்யென்று தெளிந்து; எண்ணும்மைகள் இழிவுச் சிறப்பின் கண்ணும் வந்தன. **ஆறுபுக்கும் நனையாச் சடை** - உயர்வு சிறப்பும்மை தொக்கது.

நனைதல் - ஈரம் தெவிட்டி வழிதல்; **நம் தாதை** - கயிலையில் இறைவரை அம்மையார் **அப்பா!** என்ற சரித அகச்சான்று. **அடித்தலமே - இங்குத் தஞ்சம் என்று** என்க. ஏகாரம் பிரிநிலை. **நினையா தொழுதி** என்று பாடங்கொண்டு நினைந்து வணங்கு என்று பொருள் கொண்டும், **தேறி** - என்பது தெறு என்னும் பகுதி விகாரப்பட்ட முன்னிலை வினைமுற்று என்று கொண்டு நீக்கு என்று பொருள்கொண்டும் முடிப்பர் முன் உரைகாரர். அதன் பொருத்தம் ஆராயத் தக்கது.

அடித்தலத்தி னன்றரக்க னைந்நான்கு தோளு
முடித்தலமு நீமுரித்த வாறென்? - முடித்தலத்தில்
ஆருடி! யாரு! வனலாடி! யவ்வனலில்
நீருடி! நெய்யாடி! நீ. 14

(இ-ள்.) இறைவரே! அன்று அரக்கனது இருபது தோள்களையும் பத்துத் தலைகளையும் உமது திருவடியினால் மிதித்து முரித்தவாறு என்னே?

நீ முரித்தவாறு என்றவிடத்து **நீ** என்பது அரக்கனைத் திருவடியால் அடர்த்த அவசரத்திற்கும், பின்வந்த நீ என்பது ஆருடுதல் - அனலாடுதல் முதலாகவுள்ள பேராற்றல் படைத்த தம் இயல்பாகிய அவசரத்திற்கும் வந்தன. பின்வந்த **நீ** என்பது வேறு பொருள் குறியாது நிற்றலின் அசைபோலும் என்றுரைத்தனர் முன் உரைகாரர். **ஆருடுதல்** - முதலாகவரும் சங்கற்ப மாத்திரையானே சிருட்டி சங்கார முதலியன செய்யும் பேராற்றலுக்கு இருப்பிடமாகிய உமக்கு அரக்கனை அடர்த்தலுக்கு அடித் தலத்தால் அமிழ்த்த வேண்டிய சிறு செயல் தானும் வேண்டற்பாலவன்றே என்பார் **அடித் தலத்தில் முரித்தவாறு என்?** என்றார். **ஆறு** - கங்கை. **ஆறு ஆடுதல்** - கங்கை சடையிற்றோய நிற்றல்; **ஆரு அனல்** - நித்திய சங்காரம். **நீருடுதல்** - மகா சங்காரத்தையும், நெய்யாடுதல் புனருற்பவத்தையும் குறித்தன.

நீநின்று தானவர் மாமதின் மூன்று நிரந்துடனே
தீநின்று வேவச் சிலைதொட்ட வாறென் றிரங்குவல்வாய்ப்
பேய்நின்று பாடப் பெருங்கா டரங்காப் பெயர்ந்துநட்டம்
போய்நின்று பூதந் தொழச்செய்யு மொய்கழற் புண்ணியனே. 15

(இ-ள்.) பேய் பாடவும் பூதந் தொழவும் பெயர்ந்து பெருங்காடு அரங்காக நட்டம் செய்யும் மொய் கழலையுடைய புண்ணியரே! அரக்கர்களுடைய மூன்று புரங்களும் உடனே வேகும்படி நீர் நின்று வில்லும் அம்பும் தொடுத்தவாறு என்னே?

இதுவும் மேற்பாட்டின் கருத்தினையே திரிபுரங்களையும் எரித்தவாற்றால் விளங்க அருளியது. **தானவர்** - அரக்கர்கள், முப்புர வாணர்கள். **வேவச் சிலை தொட்டவாறு என்?** - அம்பு எய்யாமலே! தொடுத்த மாத்திரத்தில் தீப்பற்றி வேகும்படி. **சிலைதொட்ட** என்றதனால் அம்பும் உடன் கொள்ளப்படும். **தொட்ட** - தொடுத்த; கோத்த; கையால் தீண்டிய அளவு என்று இலேசுபடக் கூறியதும் காண்க. தொடுத்தல் தானும் வேண்டப்படுவதன்று என்பது. பேய் பாட - பூதம் தொழ - நட்டம் செய்தல் சங்காரம் குறித்தது. **திரங்கு வல்வாய்** - திரங்கிய

பெரிய வாயினையுடைய. **நட்டம் - செய்யும்** - என்று கூட்டுக. **நிரந்து** - என்ற குறிப்பினால் முப்புரங்களிலுள்ளார் எல்லாரும் வேவ, அவற்றுள், அன்புடையார் ஒரு மூவர் வேவாதிருக்க என்பதும் பெறப்படும்.

புண்ணியங்கள் செய்தனவும் பொய்ந்நெறிக்கட் சாராமே
எண்ணியோ ரைந்து மிசைந்தனவாற் - றிண்ணிய
கைம்மாவி னீருருவை மூவுருவும் போர்த்துகந்த
வம்மானுக் காட்பட்ட வன்பு. 16

(இ-ள்.) முன் பல காலங்களிலும் செய்தனவாகிய சிவ புண்ணியங்களும், பொய்ந்நெறிக்கண் சாராது எண்ணி ஓர்கின்ற திருவைந்தெழுத்தும் பொருந்தியமையினாலே சிவபெருமானுக்கு ஆட்பட்ட அன்பு விளைந்தது.

விளைந்தது என்பது இசை யெச்சம். **அன்பினால்** என்று மூன்றனுருபுகூட்டியும், **ஐந்து** என்பதற்கு ஐம்புலன் என்று கொண்டும், ஆட்பட்ட அன்பினால் புலனொருப்பட்டதே யன்றிச் சிவ புண்ணியமும் பயனாயின என்று உரைப்பர் முன் உரைகார். **மூவுரு** - அயன் - அரி - அரன் என்ற மூன்று நிலையும் கூடிய முதல் உருவம். "மூவுருவின் முதலுருவாய்" (தேவா). திருமாலும் உமையும் தாமும் என்ற மூன்றென்பர் முன் உரைகாரர்.

அன்பா லடைவதெவ் வாறுகொல்? மேலதோ ராடரவந்
தன்பா லொருவரைச் சாரவொட் டாதது வேயுமன்றி
முன்பா யினதலை யோடுகள் கோத்தவை யார்த்துவெள்ளை
யென்பா யினவு மணிந்தங்கொ ரேறுகந் தேறுவதே. 17

(இ-ள்.) மேலே சீறிக் கிடக்கின்றது ஓர் ஆடும் பாம்பு; அது தன் பக்கத்தில் ஒருவரையும் சார வொட்டாது; அது வல்லாமல், முன்பு தலை ஓடுகள் கோத்து அணிந்ததுண்டு; வெள்ளை எலும்பு மாலையும் அணிந்துகொண்டு ஓர் இடப ஏற்றினை ஏறி வருவதுமுண்டு; இறைவரே அன்பினாலே உம்மிடம் வந்து அடைவது எவ்வாறு?

பாம்பு ஆடிச் சீறி அடைபவரை அடைய வொட்டாது; இடபம் பாயும்; தலையோடுகளைக் கோத்த மாலையும் எலும்பு மாலையும் அனுசிதம் என்பது. விடங்கவேடம் உள்ளங் கவர்ந்து ஆட்கொள்ளவல்ல சிறப்பினைப் போற்றியது; ஆளுடைய நம்பிகளது "அடிகே ளுமக் காட்செய வஞ்சுதுமே" என்ற திருக்கோத்திட்டை என்னும் பதிகக் கருத்துக்கள் இங்குச் சிந்திக்கத் தக்கன.

ஏறலா லேறமற் றில்லையே யெம்பெருமா
னேறெலாம் பாயு மவிர்சடையார் - வேறோர்
படங்குலவு நாகமுமிழ்பண்டமரர் சூழ்ந்த
தடங்கடனஞ் சுண்டார் தமக்கு. 18

(இ-ள்.) எமது பெருமானும், அவிர் சடையாரும், நஞ்சுண்டவரும் ஆகிய சிவபெருமானுக்கு இடப ஏற்றினையன்றி ஏறிவருவதற்கு வேறு ஊர்தியில்லையே.

"கடகரியும் பரிமாவுந் தேருமுகந் தேருதே, யிடபமுகந் தேறியவா றெனக்கறிய வியம்பேடீ" (திருச்சாழல்) என்ற திருவாசகக் கருத்துச் சிந்திக்க. இல்லையே - இல்லை என்று உடன்பாடும், இல்லையோ? என்று வினவுமாகப் பொருள்கொள்ள நின்றது. **ஆறு எலாம்** - கங்கையாறு முழுமையும்; சூழ்ந்த - சூழ்ந்து கடைந்த; நாகம் - வாசுகி; அடியவரை ஆட்கொள்ள வெளிப்படுங் காலத்துப் புண்ணிய வடிவாயுள்ள இடபத்தினையே மேற்கொண்டு இறைவர் எழுந்தருளுவர் என்பது.

தமக்கென்று மின்பணி செய்திருப் பேமுக்குத்தாமொருநா
ளெமக்கொன்று சொன்ன லருளுங் கொலாமிணை யாதுமின்றிச்
சுமக்கின்ற பிள்ளைவெள் ளேறெப்ப தொன்றுதொண் டைக்கனிவாய்
உமைக்கென்று தேடிப் பெறுதுட னேகொண்ட வுத்தமரே. *19*

(இ-ள்.) ஒப்பாக ஒரு பொருளுமின்றித் தம்மைச் சுமக்கின்ற வெள்ளை மழவிடையினைப்போல வேறொன்றைத் தம் தேவியாராகிய உமையம்மையாருக்கென்று தேடிக்கொள்ளாமல் அவரைத் தம் இடப்பாகத்தில் வைத்துக்கொண்ட உத்தமராகிய சிவபெருமான் தமக்கு எந்நாளும் இனிய பணிகளைச் செய்துகொண்டிருக்கின்ற எங்களுக்காக ஒன்று வேண்டிக்கொண்டால் அருளுவாரா?

நிந்தைத் துதியாக வைத்த வேற்றுப்பொருள் வைப்பணி. அருள் வடிவாகிய அம்மையாரை எஞ்ஞான்றும் பிரியா நிலைமையில் ஏற்றின்மேல் உடனே வைத்தனர் என்பது **உத்தமர்** என்றதன் குறிப்பு. **இணையாதுமின்றி** என்றதனால் **வேறு இது ஒப்பதொன்று தேடிப்பெற இயலாது** என்பது குறிப்பு; **என்றும் - ஒருநாள்** - பல காலமும் பணிசெய்து கிடப்பன் ஒருநாள் வெளிப்பட்டருளுவர் என்பது குறிப்பு. "பன்ன ளழைத்தால்...எதிர்ப்படுமே" (தேவா). ஒருநாள் - வினை நீங்கிப் பக்குவமாகும் காலம். உமையைத் தம்மோடு வேற்றுமையின்றி அபேதமாக்கியது போல எம்மையும் தம்முளடக்கிப் பிறிதொன்றுங் கொடாது அபேதமாய் வைப்பாரென்பது கருத்து என்றுரைப்பர் முன் உரைகாரர்.

உத்தமராய் வாழ்வா ருலந்தக்கா லுற்றார்கள்
செத்த மரமடுக்கித் தீயாமு - னுத்தமனாய்
நீளாழி நஞ்சுண்ட நெய்யாடி தன்றிறமே
கேளாழி நெஞ்சே கிளர்ந்து. *20*

(இ-ள்.) செல்வம் முதலிய சிறப்புடனே வாழ்வார்களும் ஒருநாள் இறந்து போவார்கள்; அப்படி இறந்து போனால், அவர்களுடலைச் சுற்றத்தார்கள் காய்ந்த விறகடுக்கிச் சுட்டு விடுவார்கள்; (அதுபோல் நீயும் ஒருநாள் இறந்துபட) உன் உடம்பையும் சுடுவதற்கு முன்னே, சர்வ உத்தமராகக் கடல் நஞ்சுண்ட நெய்யாடியாகிய சிவபெருமானது திறத்தினையே, ஆழ்ந்த கருத்துடைய மனமே! நீ விரும்பிக் கேட்பாயாக.

உத்தமர் - செல்வம் குணம் முதலிய சிறப்புடையவர்கள். **வாழ்வார்களும்** என்று சிறப்பும்மை தொக்கது. **உலந்தக்கால்** - தீய்ப்பார்; அவ்வாறு உலந்தால் அக்காலத்து என்க.

தீய்த்தல் - சுடுதல் சிறப்புடையார்களதுடல் என்றெண்ணி அந்த உடம்பை வைத்திருக்காமல், சுட்டு விடுவார்கள். **முன்** - அதுபோல் உன் உடலையும் சுடுவதற்கு முன். **செத்த மரம்** - உலர்ந்த விறகு. ''சிறுவிறகாற்றீமூட்டிச் சொல்லா நிற்பர்'' (தேவா). **உத்தமராய் வாழ்வார் உலந்தக்கால்** என்றும், **உத்தமனாய்...நெய்யாடி** என்றும் கூறியவதனால் உத்தமர் என்றிருக்கின்ற ஏனை யாவரும் இறந்துபட உத்தமனாகிய சிவபிரான் ஒருவரே நஞ்சுண்டும் இறவாமல் என்றுமிருப்பவர் என்பதும், அவன் **திறமே கேள்** என்றதனால் அதனால் நீயும் இறவாமையும் பிறவாமையுமாகிய நிலைபெற்ற இன்பம் பெறலாம் என்பதும் குறிப்பு. **கிளர்ந்து** - அன்புடனே. ''**கிளர்ந்துந்து**'' என்று தொடங்கிய இம்மாலையின் ஆதியினையே அந்தாதித் தொடையாக அந்தத்தில் வைத்து முடித்தவாறும், அம்முதற்றிருப்பாட்டின் கருத்தினையே தொடர்ந்து முடிவுபடுத்திக் காட்டியவாறும் கண்டுகொள்க.

திருவிரட்டைமணி மாலை உரை முற்றிற்று

அம்மை மூத்த திருப்பதிகம் - 1

திருவாலங்காடு (திருத்தலத்தைப் போற்றியது) பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

கொங்கை திரங்கி நரம்பெ ழுந்து குண்டுகண் வெண்பற் குழிவ யிற்றுப்
பங்கி சிவந்திரு பற்க ணீண்டு பரடுயர் நீள்கணைக் காலொர் பெண்பேய்
தங்கி யலறி யுலறு காட்டிற் றாழ்சடை யெட்டுத் திசையும் வீசி
யங்கங் குளிர்ந்தன லாடு மெங்க ளப்ப னிடந்திரு வாலங் காடே. 1

கள்ளிக் கவட்டிடைக் காலை நீட்டிக் கடைக்கொள்ளி வாங்கி மசித்துமையை
விள்ள வெழுதி வெடுவெ டென்ன நாக்கு வெருண்டு விலங்கு பார்த்துத்
துள்ளிச் சுடலைச் சுடுபி ணத்தீச் சுட்டிட முற்றுஞ் சுளிந்து பூழ்தி
யள்ளி யவிக்கநின் றாடு மெங்க ளப்ப னிடந்திரு வாலங்காடே. 2

வாகை விரிந்துவெண் ணெற்றொ லிப்ப மயங்கிருள் கூர்நடு நாளை யாங்கே
கூகையொ டாண்டலை பாட வாந்தை கோடதன் மேற்குதித் தோட வீசி
யீகை படர்தொடர் கள்ளி நீழ லீம மிடுசுடு காட்ட கத்தே
யாகங் குளிர்ந்தன லாடு மெங்க ளப்ப னிடந்திரு வாலங் காடே. 3

குண்டிலோ மக்குழிச் சோற்றை வாங்கிக் குறுநரி தின்ன வதனை முன்னே
கண்டிலோ மென்று கனன்று பேய்கள் கையடித் தோடிடு காட ரங்கா
மண்டல நின்று குணலை மிட்டு வாதித்து வீசி யெடுத்த பாத
மண்ட முறநிமிர்ந் தாடு மெங்க ளப்ப னிடந்திரு வாலங் காடே. 4

விழுது நிணத்தை விழுங்கி யிட்டு வெண்டலை மாலை விரவப் பூட்டிக்
கழுதுதன் பிள்ளையைக் காளி யென்று பேரிட்டுச் சீருடைத் தாவளர்த்துப்
புழுதி துடைத்து முலைகொ டுத்துப் போயின தாயை வரவு காணா
தழுதுறங் கும்புறங் காட்டி லாடு மப்ப னிடந்திரு வாலங் காடே. 5

பட்டடி நெட்டுகிர்ப் பாறு காற்பேய் பருந்தொடு கூகை பகண்டை யாந்தை
குட்டி யிடமுட்டை கூகைபேய்கள் குறுநரி சென்றணங் காடு காட்டிற்
பிட்டடித் துப்புறங் காட்டி லிட்ட பிணத்தினைப் பேரப் புரட்டி யாங்கே
அட்டமே பாயநின் றாடு மெங்க ளப்ப னிடந்திரு வாலங் காடே. 6

சுழலு மழல்விழிக்கொள்ளி வாய்ப்பேய் சூழ்ந்து துணங்கையிட் டோடியாடித்
தழலு ளெரியும் பிணத்தை வாங்கித் தான்றடி தின்றணங் காடு காட்டிற்
கழலொலி யோசைச் சிலம்பொ லிப்பக் காலுயர் வட்டணை யிட்டு நட்ட
மழலுமிழ்ந் தோரி கதிக்க வாடு மப்ப னிடந்திரு வாலங் காடே. 7

நாடு நகருந் திரிந்து சென்று நன்னெறி நாடி நயந்த வரை
மூடி முதுபிணந் திட்ட மாடே முன்னிய பேய்க்கணஞ் சூழச் சூழக்
காடுங் கடலும் மலையு மண்ணும் விண்ணுஞ் சுழல வனல்கை யேந்தி
ஆடு மரவப் புயங்க னெங்க ளப்ப னிடந்திரு வாலங் காடே. 8

துத்தங் கைக்கிளை விளரி தார முழையிளி ஓசைபண் கெழுமப் பாடிச்
சச்சரி கொக்கரை தக்கை யோடு தகுணிதந் துந்துபி தாளம் வீணை
மத்தளங் கரடிகை வன்கைமென்றோற் றமருகங் குடமுழா மொந்தை வாசித்
தத்தனை விரவினோ டாடு மெங்க ளப்ப னிடந்திரு வாலங் காடே. 9

புந்தி கலங்கி மதிம யங்கி யிறந்தவ ரைப்புறங் காட்டி லிட்டுச்
சந்தியில் வைத்துக் கடமை செய்து தக்கவ ரிட்டசெந் தீவி ளக்கா
முந்தி யமரர் முழவி னோசை திசைகது வச்சிலம் பார்க்க வார்க்க
அந்தியின் மாநட மாடு மெங்க ளப்ப னிடந்திரு வாலங் காடே. 10

ஒப்பினையில்லவன் பேய்கள்கூடி யொன்றினை யொன்றடித் தொக்கலித்துப்
பப்பினை யிட்டுப் பகண்டை பாடப் பாடிருந் தந்நரி யாழ மைப்ப
வப்பனை யணிதிரு வாலங் காட்டெம் மடிகளைச் செடிதலைக் காரைக்காற்பேய்
செப்பிய செந்தமிழ் பத்தும் வல்லார் சிவகதி சேர்ந்தின்ப மெய்து வரே. 11

திருச்சிற்றம்பலம்

அம்மை மூத்த திருப்பதிகம் - 2

திருவாலங்காடு (நடனத்தைப் போற்றியது)பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

எட்டி யிலவ மீகை சூரை காரை படர்ந்தெங்குஞ்
சுட்ட சுடலை சூழ்ந்த கள்ளி சோர்ந்த குடர்கௌவப்
பட்ட பிணங்கள் பரந்த காட்டிற் பறைபோல் விழிகட்பேய்
கொட்ட முழவங் கூளி பாடக் குழக னாடுமே. 1

நிணந்தா னுருகி நிலந்தா னனைப்ப நெடும்பற் குழிகட்பேய்
துணங்கை யெரிந்து சூழ நோக்கிச் சுடலை நவிழ்த்தெங்கும்
கணங்கள் கூடிப் பிணங்கண் மாந்திக் களித்த மனத்தவா
யணங்கு காட்டி லனல்கை யேந்தி யழக னாடுமே. 2

புட்கள் பொதுத்த புலால்வெண் டலையைப் புறமே நரிகவ்வ
வட்கென் றழைப்ப வாந்தை வீச வருகே சிறுகூகை
யுட்க விழிக்க வூமன் வெருட்ட வோரி கதித்தெங்கும்
பிட்க நட்டம் பேணு மிறைவன் பெயரும் பெருங்காடே. 3

செத்த பிணத்தைத் தெளியா தொருபேய் சென்று விரல்சுட்டிக்
கத்தி யுறுமிக் கனல்விட் டெறிந்து கடக்கப் பாய்ந்துபோய்ப்
பத்தல் வயிற்றைப் பதைக்க மோதிப் பலபே யிரிந்தோடப்
பித்த வேடங் கொண்டு நட்டம் பெருமா னாடுமே. 4

முள்ளி தீந்து முளரி கருகி மூளை சொரிந்துக்குக்
கள்ளி வற்றி வெள்ளில் பிறங்கு கடுவெங் காட்டுள்ளே
புள்ளி யுழைமான் றோலொன் றுடுத்துப் புலித்தோல் பியற்கிட்டுப்
பள்ளி யிடமு மதுவே யாகப் பரம னாடுமே. 5

வாளைக் கிளர வளைவா ளெயிற்று வண்ணச் சிறுகூகை
மூளைத் தலையும் பிணமும் விழுங்கி முரலு முதுகாட்டிற்
றூளிப் பனையி னிலைபோன் மயிர்க்கட் டழல்வா யழல்கட்பேய்
கூளிக் கணங்கள் குழலோ டியம்பக் குழக னாடுமே. 6

நொந்திக் கிடந்த சுடலை தடவி நுகரும் புழுக்கின்றிச்
சிந்தித் திருந்தங் குறங்குஞ் சிறுபேய் சிரமப் படுகாட்டின்
முந்தி யமரர் முழவி னோசை முறைமை வழுவாமே
யந்தி நிருத்த மனல்கை யேந்தி யழக னாடுமே. 7

வேய்க ளோங்கி வெண்முத் துதிர வெடிகொள் சுடலையு
ளோயு முருவி லுலறு கூந்த லலறு பகுவாய
பேய்கள் கூடிப் பிணங்கண் மாந்தி யணங்கும் பெரும் காட்டின்
மாய னுட மலையான் மகளு மருண்டு நோக்குமே. 8

கடுவ னுகளுங் கழைசூழ் பொதும்பற் கழுகும் பேயுமா
யிடுவெண் டலையு மீமப் புகையு மெழுந்த பெருங்காட்டிற்
கொடுவெண்மழுவும் பிறையும் புனலுந் ததும்பக் கொள்ளென் றிசைபாடப்
படுவெண் டுடியும் பறையுங் கறங்கப் பரம னுடுமே. 9

குண்டை வயிற்றுக் குறிய சிறிய நெடிய பிறங்கற்பே
யிண்டு படர்ந்த விருள்சூழ் மயானத் தெரிவா யெயிற்றுப்பேய்
கொண்டு குழவி தழுவ வெட்டிக் கொள்ளென் றிசைபாட
மிண்டி மிளிர்ந்த சடைக டாழ விமல னுடுமே. 10

சூடு மதியஞ் சடைமே லுடையார் சுழல்வார் திருநட்ட
மாடு மரவ மரையி லார்த்த வடிக ளருளாலே
காடு மலிந்த கனல்வா யெயிற்றுக் காரைக் காற்பேய்தன்
பாடல் பத்தும் பாடி யாடப் பாவ நாசமே. 11

திருச்சிற்றம்பலம்



அப்பூதியடிகள் நாயனார் (தை - சதயம்)

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

25. அப்பூதியடிகணாயனார் புராணம் (45 திருப்பாடல்கள்)

தொகை

"ஒருநம்பி யப்பூதி யடியார்க்கு மடியேன்" - திருத்தொண்டத்தொகை *(4)*

வகை

"தனமா வதுதிரு நாவுக் கரசின் சரணமென்னு
மனமார் புனற்பந்தர் வாழ்த்திவைத் தாங்கவன் வண்டமிழ்க்கே
யினமாத் தனது பெயரிடப் பெற்றவ னெங்கள்பிரான்
அனமார் வயற்றிங்க ளூரினில் வேதிய னப்பூதியே"- திருத்தொண்டர் திருவந்தாதி *(29)*

விரி

1783. தாண்டவம் புரிய வல்ல தம்பிரா னுருக் கன்பர்
ஈண்டிய புகழின் பாலா; ரெல்லையி றவத்தின் மிக்கார்;
ஆண்டசீ ரரசின் பாத மடைந்தவ ரறியா முன்னே
காண்டகு காதல் கூரக் கலந்தவன் பினரா யுள்ளார். 1

புராணம்: அப்பூதியடிகள் என்னும் பெயருடைய நாயனரது சரித வரலாறும் பண்பும் கூறும் பகுதி. இனி நிறுத்த முறையானே, திருநின்ற சருக்கத்துள் ஐந்தாவது அப்பூதியடிகணுயனரது சரிதங் கூறத் தொடங்குகின்ருர்.

தொகை: ஒரு நம்பியாகிய அப்பூதியடிகளுடைய அடியார்களுக்கும் நான் அடியேன்.

அடியார்க்கும் என்ற உம்மை முன்கூறிய பெரியார்களுடன் இவர்களுக்கும் என்றும், அப்பூதியாருக்கேயன்றி அவரது அடியார்க்கும் என்றும், கொள்ள நின்றமையின் இறந்தது தழுவிய எச்சவும்மை. ஒரு ஒப்பற்ற. **நம்பி - நன்மையுடைமையும் தீமையிலாமையும் சார்ந்த ஆடவருட் சிறந்தவர்.** *1783, 1784* பார்க்க. இக்காரணம்பற்றியே மணமகனை **நம்பி** என்று வழங்கியது முன்னுள் தமிழ் வழக்கு. "திலத நுதலுமை நங்கைக்கும் திருவாவடுதுறை நம்பிக்கும்" (சேந் - திருவிசைப் - 5); "நங்கையவ டனை நயந்த நம்பி யோடு" (திருஞான - புரா - 483); திருநாவுக்கரசு நாயனுரின் திருவடிகளே உறுதியாவன என்ற ஒரு **நம்பிக்கை**யினை மேற்கொண்டவர் என்ற சரிதக் குறிப்பும்பட நின்றது. **அப்பூதி** -நாயனுரது பெயர்.

வகை : அழியாப் பெருஞ்செல்வமாவது திருநாவுக்கரசு நாயனுருடைய இனிய திருவடிகளே என்று மனமார்ந்த தண்ணீர்ப்பந்தல் முதலிய அறங்களை அத்திருவடிகளை வாழ்த்தி அப்பெயராற் செய்துவைத்து, அதனுலே அவரது வளப்பமிக்க தமிழாகிய தேவாரத் திருவாக்கினில் தமது பெயரை வைக்கப் பெற்றவர்; எங்கள் தலைவர்; அன்னங்கள் பொருந்திய வயல்கள் சூழ்ந்த திங்களூரில் அவதரித்த அந்தணராகிய அப்பூதியடிகள்.



அப்பூதியடிகள் நாயனார் (தை - சதயம்)

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

25. அப்பூதியடிகணாயனார் புராணம் (45 திருப்பாடல்கள்)

தொகை

"ஒருநம்பி யப்பூதி யடியார்க்கு மடியேன்" - திருத்தொண்டத்தொகை *(4)*

வகை

"தனமா வதுதிரு நாவுக் கரசின் சரணமென்ற
மனமார் புனற்பந்தர் வாழ்த்திவைத் தாங்கவன் வண்டமிழ்க்கே
யினமாத் தனது பெயரிடப் பெற்றவ னெங்கள்பிரான்
அனமார் வயற்றிங்க ளூரினில் வேதிய னப்பூதியே"- திருத்தொண்டர் திருவந்தாதி *(29)*

விரி

1783. தாண்டவம் புரிய வல்ல தம்பிரா னருக் கன்பர்
ஈண்டிய புகழின் பாலா; ரெல்லையி றவத்தின் மிக்கார்;
**ஆண்டஅசீ ரரசின் பாத மடைந்தவ ரறியா முன்னே
காண்டகு காதல் கூரக் கலந்தவன் பினரா** யுள்ளார். 1

புராணம்: அப்பூதியடிகள் என்னும் பெயருடைய நாயனாரது சரித வரலாறும் பண்பும் கூறும் பகுதி. இனி நிறுத்த முறையானே, திருநின்ற சருக்கத்துள் ஐந்தாவது அப்பூதியடிகணாயனாரது சரிதங் கூறத் தொடங்குகின்றார்.

தொகை: ஒரு நம்பியாகிய அப்பூதியடிகளுடைய அடியார்களுக்கும் நான் அடியேன்.

அடியார்க்கும் என்ற உம்மை முன்கூறிய பெரியார்களுடன் இவர்களுக்கும் என்றும், அப்பூதியாருக்கேயன்றி அவரது அடியார்க்கும் என்றும், கொள்ள நின்றமையின் இறந்தது தழுவிய எச்சவும்மை. ஒரு ஒப்பற்ற. **நம்பி - நன்மையுடைமையும் தீமையிலாமையும் சார்ந்த ஆடவருட் சிறந்தவர்.** *1783, 1784* பார்க்க. இக்காரணம்பற்றியே மணமகனை **நம்பி** என்று வழங்கியது முன்னாள் தமிழ் வழக்கு. "திலத நுதலுமை நங்கைக்கும் திருவாவடுதுறை நம்பிக்கும்" (சேந் - திருவிசைப் - 5); "நங்கையவ டனை நயந்த நம்பி யோடு" (திருஞான - புரா - 483); திருநாவுக்கரசு நாயனாரின் திருவடிகளே உறுதியாவன என்ற ஒரு **நம்பிக்கையினை** மேற்கொண்டவர் என்ற சரிதக் குறிப்பும்பட நின்றது. **அப்பூதி** -நாயனாரது பெயர்.

வகை : அழியாப் பெருஞ்செல்வமாவது திருநாவுக்கரசு நாயனாருடைய இனிய திருவடிகளே என்று மனமார்ந்த தண்ணீர்ப்பந்தல் முதலிய அறங்களை அத்திருவடிகளை வாழ்த்தி அப்பெயராற் செய்துவைத்து, அதனாலே அவரது வளப்பமிக்க தமிழாகிய தேவாரத் திருவாக்கினில் தமது பெயரை வைக்கப் பெற்றவர்; எங்கள் தலைவர்; அன்னங்கள் பொருந்திய வயல்கள் சூழ்ந்த திங்களூரில் அவதரித்த அந்தணராகிய அப்பூதியடிகள்.

தனம் - ஏனைச் செல்வங்களெல்லாம் பெற்றதன் பயனாகிய பெருஞ்செல்வம். "பெற்றநீடு பயன் கொள்வார்" (441); "வளத்தினால் வரும்பயன் கொள்வார்" (504) என்பவை காண்க. **என** - என்று தெளிந்து. **மனமார்** - தாம் மனமார மகிழ்ந்து வைத்த என்றும், அடைந்தோர்களது மனங்குளிர - மகிழ - என்றும், அத்திருநாவுக்கரசினது மனமும் பொருந்தும் என்றும் உரைக்க நின்றது. **புனற் பந்தர்** - இனம்பற்றி ஏனைய அறங்களையும் கொள்க; திருநாவுக்கரசரது திருமனம் பொருந்திச் சரித விளைவுக்குக் காரணமாய் நின்ற சிறப்புப்பற்றி இதனை எடுத்துக் கூறினார். **வாழ்த்தி வைத்தல்** - வாழ்த்தும் வகையாலே வைத்தல்; வாழ்க! என்று எழுதி வைத்தல் என்றலும் அமையும்; **வைத்துப் பெற்றவன்** - என்க. **வைத்து** - வைத்ததன் பயனாக என்று காரணப் பொருளில் வந்தது. **தண்ணீர்ப் பந்தரில் அரசுகளின் திருப்பெயர் இட்டதனால் அரசுகளது தமிழில் தமது பெயரை இடப்பெற்றவர். வண்தமிழ்** - தேவாரம். **வண்மை** - கேளாமலே உயிரையும் மீட்டுத்தரும் வள்ளன்மை. விடந்தீர்த்து மகனை மீட்ட சரித வரலாற்றுக் குறிப்பு ஏகாரம் பிரிநிலை. குவ்வுருபு ஏழன் பொருளில் வந்தது. **இடுதல்** - பொறித்து வைத்தல். **பெற்றவன்** - பெரும்பேறு என்பது குறிப்பு. **தமிழ்** - திருப்பழனத் திருப்பதிகத்தினுள் "அஞ்சிப் போய்க் கலிமெலிய வழலோம்பு மப்பூதிக், குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய்" என்றது. 1476 பாட்டும் ஆண்டுரைத்தவையும் பார்க்க. **திங்களூர்** - அப்பூதியாரது தலம். **வேதியன்** - அவரது மரபு. **இனமா** - அடியார் இனத்தவராக வைத்து; "பித்துப் பத்தரினத்தாய்" (போதம்).

பெயரும் சரித வரலாற்றுக் குறிப்பும் தொகை நூல் காட்டிற்று; ஊரும், மரபும், பேரும், செய்த திருத்தொண்டுகளின் வரலாறுகளும், பெற்ற பேறும் வகைநூல் வகுத்துக் காட்டிற்று; இவை விரிந்தபடி விரிநூலுட் கண்டுகொள்க. அவற்றுள் ஊரும் மரபும் சில சிறப்புயல்புகளும் முன்னரே திருநாவுக்கரசு நாயனார் புராணத்துள் 200ஆவது திருப்பாட்டு முதல் 211 ஆவது திருப்பாட்டு வரை (1465 - 1476) உள்ள பதினொரு பாசுரங்களில் விரிக்கப்பட்டன; ஏனையவை இப்புராணத்தினுள் விரித்துரைக்கப் பெற்றன. முன் உரைத்தவை ஆளுடைய அரசுகளின் சரிதச் சார்பும், ஈண்டுரைப்பவை அப்பூதியார் சரிதச்சார்பும் பெரும்பான்மைத் தொடர்புபற்றி முறையே அங்கும் இங்குமாக விரிக்க வைத்தவாறும் கண்டு அமைத்துக்கொள்க.

1783. (இ-ள்.) தாண்டவம்...அன்பர் - பெருங்கூத்து இயற்றுதலில் வல்லவராகிய தம்பெருமானுக்கு அன்புடையவர்; ஈண்டிய புகழின் பாலார் - பொருந்திய புகழினையுடையவர்; எல்லையில் தவத்தின் மிக்கார் - அளவில்லாத தவத்தினால் மிக்கவர்; ஆண்டசீர் அரசின் பாதம் அடைந்து - சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்ட சிறப்பு மிக்க திருநாவுக்கரசு நாயனாரின் பாதங்களையே சார்பாக அடைந்து; அவர்...உள்ளார் - அவர் தம்மை அறியா முன்னே காணத்தக்க காதல் மிக்கதனால் உள்ளங் கலந்த அன்பு கொண்டவராக வுள்ளவர்.

(வி-ரை.) தாண்டவம் - ஐந்தொழில் அருட்கூத்து. **வல்ல** - ஏனை எவர்க்கும் இயலாதது என்றதும், சிவபெருமானுக்கு எளிய விளையாட்டாவது என்றதும் கருத்து;

தம்பிரானார்க்கு அன்பர் - அப்பூதியார் திருநாவுக்கரசு நாயனார்பாற் கொண்ட அன்பின் திறம்பற்றி முன் (1465 - 1476) அறிவித்த ஆசிரியர், அவ்வாறு அவரது அடியார் பத்தியினால்

1784. களவு பொய் காமங் கோப முதலிய குற்றங் காய்ந்தார்;
வளமிகு மனையின் வாழ்க்கை நிலையினார்; மனைப்பா லுள்ள
அளவைக ணிறைகோன் மக்க ளாவொடு மேதி மற்று
உளவெலா மரசி னாமஞ் சாற்றுமவ் வொழுக்க லாற்றுார்; 2

அறியப்பட்ட இறைவன்பாலன்புடைமையினை ஈண்டுமுதற்கண் எடுத்துக்கூறினார். "அடியவர்க் கன்பில்லார் - ஈசனுக் கன்பில்லார்" (11ஆவது சூத் - சித்தி) என்பது சாத்திரம். அவரது இவ்வியல்பு பற்றி "அப்பூதிக் குஞ்சிப்பூவாய் நின்ற சேவடியாய்" என்று தேவாரத்திற் போற்றப்பட்டது மிக்கருத்து.

ஈண்டிய புகழின் பாலார் - **ஈண்டுதல்** - அணுகுதல். **புகழ் இவரை நோக்கி வந்து ஈண்டிற்று என்க. "ஆக்க மதர்வினாய்ச் செல்லும்"** என்புழிப்போல.

எல்லையில் தவத்தின் மிக்கார் - அளவில்லாத முற்செய்தவங்களான் மேம்பட்டவர். தவம் - முற்செய் தவம். **"மேரு வரையின் மேம்பட்ட தவத்தான்"** (ஏயர்கோ - புரா - 239); "ஒப்பரிய தவஞ்செய்தே னுதலினா லும்மடிகள், இப்பொழுது தாங்கிவரப் பெற்று" (திருஞான - புரா - 935). **எல்லையில்** - என்பது பெருமையாலும் தொகுதியாலும் அளவில்லாமையினையும் **மிக்கார்** - என்பது அவை இவரிடத்து நின்ற மிகுதிப்பாட்டினையும் குறித்தன. தவத்தின் மிக்காராதலின் அரசின் பாதம் அறியாமுன்னே அடைந்து அன்பினரானார் என்று காரணங் கூறியபடி. சரித விளைவுக்குக் காரணமாயின சிறப்பினால் **கலந்த அன்பினர்** என்று எடுத்துக்கூறிய இயைபும் காண்க.

ஆண்ட அரசு - என்க. **ஆண்ட** - ஆளுடைய இறைவரால் ஆட்கொள்ளப்பட்ட என்பது. இச் சரிதவிளைவுக் குறிப்பும் ஆம். **அரசு** - திருநாவுக்கரசு.

அடைந்து - வழிபாட்டினாற் புகலாக அடைந்து. அடைந்து - கலந்த - அன்பினராய் - என்று கூட்டுக. **கலத்தல்** - உணர்வு வகையினால் ஒன்றுபடுதல்.

அவர் அறியாமுன் - தம்மை அவர் அறியாத முன்பு.

காண்டகு காதல் - உள்ளடங்காமல் வெளிப்பட்டுப் பிறர் கண்டுகொள்ளத் தக்கதாய். **அறியா முன்னேயும் வாக்கின் வேந்தர் காண்டகு காதல்** என்று கூட்டி, வேந்தர் காணத்தக்க அடிமைத்திறம் என்பதுமாம். இப்பொருளில், **காதல் கூரும்படி கலந்த** என்று முடிக்க. நாயனாரது நாடும் நகரமும் முதலியவை முன்னர்க் (1465) கூறியமையின் இங்குக் கூறுமலே தொடங்கினார்.

குணத்தின் மிக்கார் - என்பதும் பாடம். 1

1784. (இ-ள்.) களவு...காய்ந்தார் - களவும், பொய்யும், காமமும், கோபமும் முதலாகிய எல்லாக் குற்றங்களையும் ஒழித்தவர்; வளமிகு...நிலையினார் - வளம் மிகுந்த இல்லற வாழ்க்கையில் நின்றவர்; மனைப்பால்...ஆற்றுார் - **வீட்டினிடத்துள்ள முகத்தல் - நீட்டல் - முதலிய அளவுக் கருவிகளும், துலைக்கோல் போன்ற எடுத்தலளவைக் கருவிகளும், மக்களும்; பசுக்களுடனே எருமைகளும், மற்றும் உள்ள எல்லாமும் திருநாவுக்கரசு நாயனாருடைய திருநாமம் சூட்டி அழைக்கும் அவ்வொழுக்க நெறியின் நின்றவர்;**

(வி-ரை.) களவு...காய்ந்தார் - முன்பாட்டிற் குணத்தால் மிக்கார் என்றுரைத்த தன்மையினைத் தொடர்ந்து, நற்குணங்களை மிக்குடையோரும் தீக்குணங்களையும் ஒரோவழி உடையவராயிருப்பக் காண்டுமாதலின் அவ்வையப்பாட்டினை நீக்குதற்கு, ஈண்டு இவ்வாறு தீக்குணங்களையெல்லாம் அறவேயொழித்தவர் என்றுறுதி கூறினர். **குணத்தின்** என்று வாளா கூறியதுபோலன்றி, **களவு - முதலிய** என்று எடுத்துக்காட்டியும், முற்றும்மை தந்தும், **காய்ந்தார்** என்று வலியுறுத்தியும் கூறினர். **ஒரு நம்பி** என்ற முதனூற் கருத்தை விரித்தவாறு.

களவு - பொய் - முதலிய குற்றம் - "அறவிது தெரியா வண்ணம் அமுது செய்விப்போம்" (*1811*); "இப்போ திங்கவ னுதவான்" (*1814*) எனவரும் பிற்சரித விளைவுகளில் உலகநிலையின் நிகழக்கூடிய ஐயப்பாடுகளைக் குறித்தன என்று இங்கு ஆராய்ச்சி செய்வாருமுண்டு. அவ்வாறல்லாமை மேல்ஆண்டு விளக்கப்படும்.

களவு - பிறன் பொருள் வெளவுதல்; **பொய்** - மெய்ம்மையின் மாறுகோள்; **கோபம்** - தகாத சினம்; **காமம்** - தீயவற்றில் விருப்பம்.

நிறைகோல் மக்கள் - "தக்கார் தகவில ரென்ப தவரவ, ரெச்சத்தாற் காணப்படும்" (குறள்) என்றபடி தமது தகவினை அறிதற்குத் துணைசெய்யும் துலாக்கோல் போன்ற மக்கள் என்பதும் குறிப்பு. இச்சரிதவினை வினுள்வரும் அப்பூதியாருடைய முதல் மகனது தன்மைகளைக் குறிப்பினு ளறிவித்தபடியுமாம்; (*1806 - 1809* பாட்டுக்கள் பார்க்க); அளவைகளாகிய நிறைகோல் என்று கூட்டியுரைப்பர் முன் உரைகாரர். அளவைகள் என்றமையால் அக்கருவிகள் எல்லாம் அடங்குமாதலானும், நிறைகோலினை வேறு எடுத்துக்காட்டச் சரித இயைபும் சிறப்புமின்மையானும் அது பொருந்தாமை யறிக. அளவைகளுக்கு இவ்வாறு உயர் பெயரிடும் வழக்கு முற்காலக் கல்வெட்டு முதலிய சரிதச் சான்றுகளாலறிக.*

மக்கள் ஆவொடு மேதி - இவை உயிர்ச் சார்புகள். (முன் சொன்ன அளவை முதலியவை உயிரில் பொருட் சார்புகள்.) சிறப்புப்பற்றி **மக்களை** முதலில் வைத்தார். **ஆவொடு மேதி** - என்று ஒடு வுருபை **ஆ**வுடன் சேர்த்தியதும் சிறப்புப்பற்றி.

மற்றும் உள ஏனைப் பொருட் சார்புகள். "திருநாவுக்கரசு திருவீதி" என்ற ஒரு கல்வெட்டுச் செய்தியால் இவ்வாறுள்ள வழக்கு உறுதிப்படுகின்றது. (*403 21* : திருவதிகை வீரட்டானம்).

அரசு - திருநாவுக்கரசு.

நாமம் சாற்றும் - நாமத்தை இட்டு அழைக்கும். அவையெல்லாம் நாமத்தை எடுத்துச் சொல்லும் என்ற குறிப்புமாம்.

ஒழுக்கல் ஆறு - ஒழுகும் நெறி. **ஆற்றுார்** - நெறியின் நின்றவர்.

---

*"...**தக்ஷிணமேரு விடங்கன்** என்னும் கல்லால் நிறை எடுத்தும், **பொன் ஆடவல்லான்** என்னும் கல்லால் நிறை எடுத்தும்" (S.I.I.Vol. II. No. 38 1014 A.D.) இராசராசர் காலத்துக் கல்வெட்டு முதலியவை காண்க.

1785. வடிவுதாங் காணு ராயு மன்னுசீர் வாக்கின் வேந்தர்
அடிமையுந் தம்பி ரானு ரருளுங்கேட் **டவர்நா மத்தாற்**
படிநிகழ் மடங்க டண்ணீர்ப் பந்தர்கண் முதலா யுள்ள
முடிவிலா வறங்கள் செய்து முறைமையால் வாழு நாளில்; 3

குற்றம் காய்ந்தார் - குணத்தின் மிக்காராதலின் அதன் பயனுகக் குற்றங் காய்ந்தனர் என்றும், **அன்பினராயுள்ளாராதலின்** அரசினுமம் சாற்றும் அவ்வொழுக்க நெறியினின்றூர் என்றும் முன் பாட்டுக் காரணமும், இப்பாட்டுக் காரியமும் ஆக நின்றமுறை காண்க. **குணம்** - குற்றம் காய்வதனையும், **கலந்த** அன்பு - நாமமே சாற்றுவதனையும் விளேத்தன.

சாத்துமிவ் வொழுகலாற்றூர் - என்பதும் பாடம். 2

1785. (இ-ள்.) வடிவுதான் காணுராயும் - திருவடிவத்தினைத் தானும் காணாதவராயினும்; மன்னுசீர்...கேட்டு - நிலைபெற்ற சிறப்பினையுடைய திருநாவுக்கரசு நாயனுருடைய திருத்தொண்டின் திறத்தினையும், பெருமானுர் வைத்த திருவருளினையும் கேட்டு; அவர் நாமத்தால்...செய்து - அவரது திருப்பெயரால் படி நிகழும் திருமடங்களும் தண்ணீர்ப்பந்தர்களும் முதலாக உள்ள முடிவில்லாத அறங்களைச் செய்து; முறைமையால் வாழும் நாளில் - அந்நியதியின் அமைந்து வாழ்கின்ற நாளிலே.

(வி-ரை.) வடிவுதான் காணுராயும் - தான் - தானும். உம்மை வடிவும் கூட எனச் சிறப்பின்கண் வந்தது. **காணுராயும் - கேட்டு** - உம்மை எச்சவும்மை.

அடிமையும் - அருளும் கேட்டு - (அதனுல்) என்க. "ஆட்பா லவர்கட் கருளும் வண்ணமு மாதி மாண்பும்" (திருப்பாசுரம்.) **அடிமை** - அடிமைத்திறம். அடிமை செய்யும் பண்பும் தன்மையும்; **அருள்** - அவ்வடிமைத் திறத்திற்கு ஏற்றவாறு அருள் வைக்கும் இறைவனது அருட்பண்பு, **அடிமை - அருள்** - என்பன ஈண்டு முறையே உலகர் புறத்துக் காண நிகழ்ந்த புற நிகழ்ச்சிகளைக் குறித்தன. **கேட்டு** - அடியார் சொல்லக் கேட்டு; **அடிமையும் அருளுமாகியவற்றைப் பேசுதலும் பிறவற்றைப் பேசாமையும் அடியார் செய்கை;** ஆதலின் "என்னை யாண்ட நிகரிலா வண்ணங்களும், சிட்டன் சிவனடியாரைச் சீராட்டுந் திறங்களுமே சிந்தித்து" (திருப்பல்லாண்டு) என்றபடி அவற்றைப் பேசக் கேட்டலும், பிறவற்றைக் கேளாமையுமுடைய அடியார்கள் அவற்றைக்கேட்டு ஈடுபட்டு மனமுருகுவர் என்க.

கேட்டு - அவர் நாமத்தால் அறங்கள்செய்து - முன்னர், அளவைகள்...மேதி மற்றும் அரசின் நாமம் சாற்றும் அவ்வொழுகலாறு விளைந்தது முன்னைத் தவத்தாலும் பொதுக் கேள்வியாலும் ஆயிற்று என்றும், இங்கு நாமத்தால் அறங்கள் செய்து வாழ்ந்தது அடிமையும் அருளும்பற்றிய சிறப்புக் கேள்வியால் என்றும் கொள்க. **முன்னர் விளைந்த அன்பு மேன்மேலும் கேட்கக் கேட்க முதிர்ந்து மேலும் மேலும் பத்திச் செயல்களுக்குக் காரணமாயிற்று என்பதாம்** - "முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்...." (தாண்) என்ற நாயனுரது திருவாக்கே இவ்வாறு அன்புக் கேள்வியால் அன்பு பெருகி முதிரும் நிலையினை விளக்குதல் காண்க. முன்னர், உயிர்ச் சார்பு பொருட் சார்புகளுக்கு அரசுகளின் நாமஞ் சாற்றி அழைத்தல் **தாம்** பலகாலும் சொல்லிப் பயன்பெறும் பொருட்டும், அத்திருநாமத்தால்

வேறு

1786. பொருப்பரையன் மடப்படியி னுடன்புணருஞ் சிவக்களிற்றின்
திருப்பழனம் பணிந்துபணி செய்திருநா வுக்கரசர்
ஒருப்படுகா தலிற்பிறவு முடையவர்தம் பதிவணங்கும்
விருப்பினொடுந் **திங்களூர் மருங்குவழி மேவுவார்;** 4

அறங்கள் செய்தல் தன்போற் பிறரும் பயன்பெறுதற் பொருட்டும் என இவ்வாறு அன்பு விரிந்து செல்லும் நிலையும் காண்க. **நாமத்தாற் செய்தலாவது** - அவரது திருநாமத்தை அறச்சாலையில் எங்கும் எழுதி இஃது அவரது தருமம் என வழங்க வைத்தல்.

மடங்கள் - தண்ணீர்ப் பந்தர்கள் - முதலாவுள்ள முடிவிலா அறங்கள் - நிலைபெற்ற அறங்கள். நிலைபேறுவது சிவனடிச்சார்பாகிய நிலைத்த பயனைத் தந்து நிற்றல். மடங்கள் - அடியார் இரவில் தங்குதற்கும், **தண்ணீர்ப்பந்தர்** வெயிலில் இளைப்பாறுதற்குமாம். திருநாவுக்கரசர் பெயரால் திருமடங்களைப் பலர் அமைத்தது பழங் கல்வெட்டுக்களால் அறியப்படும். (திருச்சி 644; தஞ் - 843; செங் (1131 தஞ்-219-17, அப்பர் புரா - சரித ஆராய்ச்சிக் குறிப்பு பார்க்க) - மடங்கள் - தண்ணீர்ப் பந்தர்கள் - சாலை - குளம் - சோலை முதலியவை பசு புண்ணியங்களாகிச் சுவர்க்காதி போகங்களைப் பயப்பித்துப் பின்னும் பிறவிக் கேதுவாவன; ஆனால் இங்கு அவை **வாகீசராகிய குரு வழிபாட்டின் பாற்பட்டுச் சிவனடிமைத்திறத்தினிற் செய்யப்பட்டமையால் அவ்வாறு ஏனையோர் செய்வன போலப் பசுபுண்ணியமாயொழியாது பதிபுண்ணியங்களாக மாறி முத்திக் கேதுவாயின.** ஆதலின் **முடிவிலா அறங்கள்** என்றார்.

முறைமையால் - ஆண்டானடிமைத் திறத்தினிற்கும் அம்முறைமையால்.

அன்பர் - வாழுநாளில் - திருநாவுக்கரசர் - திங்களூர் - மருங்கு - வழி மேவுவாராய்த் - தண்ணீர்ப் பந்தர் வந்தணைந்தார் - என்று இம்மூன்று பாட்டுக்களையும் தொடர்ந்து முடித்துக்கொள்க. *3*

1786. (இ-ள்.) பொருப்பரையன்...திருநாவுக்கரசர் - மலையரசன் மகளாராகிய இளம்பிடி போன்ற பார்வதியம்மையாருடனணையும் சிவக்களிற்றினது திருப்பழனம் என்னும் தலத்தினைப் பணிந்து திருப்பணிசெய்யும் திருநாவுக்கரசர்; ஒருப்படு...விருப்பினொடும் - உடைய பெருமானது பிற பதிகளையும் ஒன்றுபட்ட காதலினால் வணங்கும் விருப்பினோடும் திங்களூர் மருங்கு வழி மேவுவார் - திங்களூரின் பக்கத்தில் வழி வருவாராகி;

(வி-ரை.) திருநாவுக்கரசு நாயனார் புராணத்தினுள் அப்பெருமான் திங்களூருக்கு எழுந்தருளும் சரிதப்பகுதி கூறும், "நாவினுக்கு வேந்தர்தா மேவினார், செப்பருஞ்சீ ரப்பூதி யடிகளூர் திங்களூர்" (1465) என்ற, 200ஆவது பாட்டினைத் தொடர்ந்து எடுத்து அச்சரிதத்தினையே அப்பூதியார்பாற் சரித விளைவினை விரிப்பதாதலின் அந்த யாப்பினையே தொடர்ந்து எடுத்துக்கொண்ட கவிநயமும் அமைதியும் காண்க.

1787. அளவில்சனஞ் செலவொழியா வழிக்கரையி **லருளுடையார்**
உளமனைய தண்ணளித்தா யுறுவேனிற் பரிவகற்றிக்
குளநிறைந்த நீர்த்தடம்போற் குளிர்தூங்கும் பரப்பினதாய்
வளமருவு நிழறருதண் ணீர்ப்பந்தர் வந்தணைந்தார். 5

பொருப்பரையன் மடப்பிடி - பார்வதி. பிடி - பெண் யானை. பிடி போன்றார். விநாயகரது திருவவதாரத்தின் பொருட்டுச் சித்திரமாக எழுதப்பட்ட பிடிவடிவ ஓங்காரத்தை அம்மையார் திருநோக்கம்பற்றிய வரலாறு காண்க. "பிடியத னுருவுமை கொள" (தேவா). **சிவக் களிறு** - **களிறு** - ஆண் யானை. பிடி - என்றதற் கேற்பக் **களிறு** என்றார். பிடி வடிவ ஓங்காரத்தினின்று திருநோக்கருளினால் விநாயகரை வரவருளினார் "வழிபடு மவரிடர் கடிகண பதிவர அருளினன்" என்ற பயன் குறிப்பாலுணர்த்தியது காண்க.

பணி செய் - கைத்திருத்தொண்டும் சொன்மாலை புனைதலும் செய்த.

ஒருப்படு காதலில் - பதி - வணங்கும் - ஒருப்படுகாதல் - மன வொருமைப்பாடு வருவதற்குக் காரணமான காதல். ஒருப்படுதற்குப் பதி வணங்குதல் சாதனமாம் என்பதும் குறிப்பு. **உடையவர்** - தலைவர்.

திங்களூர் மருங்கு - திங்களூரின் பக்கத்து.

வழி மேவுவார் - வழியிற் செல்வாராகி; முற்றெச்சம். மேவுவார் - அணைந்தார் என மேல்வரும் பாட்டுடன் முடிக்க. உடையவர் பதி வணங்கும் கருத்தினொடு வழி மேவினாரேயன்றித் திங்களூர் மேவுங் கருத்திலர் என்பதும், ஆயினும் அங்குச் சேர்ந்து நிகழ்ந்தபின் வரலாறுகள் உடையவ ரருளின்வழி நிகழ்ந்தன என்பதும் குறிப்பு. 4

1787. (இ-ள்.) அளவில் சனம் செலவு ஒழியா வழிக்கரையில் - அளவில்லாத சனங்கள் சென்று கொண்டிருத்தலை நீங்காத நல்ல வழியின் கரையிலே; அருள் உடையார் உளம் அனைய தண் அளித்தாய் உறுவேனில் பரிவு அகற்றி - அருள் உடைய பெரியோர்களது உள்ளத்தைப்போலக் குளிர்ந்த கருணைத் தன்மையினையுடையதாய், உறும் வேனில் வெம்மையின் துன்பத்தையெல்லாம் போக்கி; குளம் நிறைந்த...பரப்பினதாய் - குளமும் நிறைந்த நீரினையுடைய தடமும் போலக் குளிர்ச்சி நீங்காது முழுதும் தங்கும் பரப்பினையுடையதாகி; வளமருவு நிழல்தரு தண்ணீர்ப்பந்தர் வந்து அணைந்தார் - வளம் பொருந்திய நிழலைத் தரும் தண்ணீர்ப் பந்தரினை வந்து அணைந்தனர்.

இந்த மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிவுபடுத்தி உரைக்கின்றன.

(வி-ரை.) இப்பாட்டு அப்பூதியடிகள் செய்த தண்ணீர்ப் பந்தரின் சிறப்பினை அவ்வாறே நம் கண்முன் தோன்றும்படி எழுதிக் காட்டுகின்ற ஓவியம். அன்றியும், அவ்வாறு தண்ணீர்ப் பந்தர் இயற்றுவோர் பார்த்துப் படியெடுத்தொழுக மனங்கொள்ளும் படிப்பினையும் கற்பிக்கின்றது.

அளவில் சனம் செலவு ஒழியா வழிக்கரையில் - தண்ணீர்ப்பந்தர் வைப்பதற்குத் தகுதியான இடம் தேடிக்கொள்ளுதல் முதலிற் செய்யவேண்டியதாதல் குறிப்பு. Site selection என்பர் நவீனர். நீரும் நிழலும் வேண்டுவார் வழி போவாராதலின் அவர் செல்லும் வழியில் இது செய்யத் தக்கது. **பெறுவோரிடத்தை நாடிச் செய்வோர் சென்று அறஞ் செய்தலும், கேளாமலே செய்தலும் அறத்தின் சிறப்பாம். அளவில் சனம்** - என்றதனுல் மக்கள் திரள் திரளாகச் செல்லுதலும், **செலவு ஒழியா** என்றதனுல் நாளில் எந்நேரமும் செல்லுதலும், **வழிக் கரையில்** என்றதனுல் அவ்வழியின் முன்புற மருங்கில் அமைதலும் பெறப்பட்டன. Much frequented public high way என்பர் நவீனர். இரவிலும் சனம் சென்றுகொண்டிருத்தல் நல்ல பெரிய சாலைகளில் காணப்படும் இயல்பு. அந்நேரத்திலும் வழி போவார் தங்கி இளேப்பாறு மிடமாய் இப்பந்தர் உதவுமென்பது. இங்கு அப்பூதியார் தாம் தங்கும் இடத்திற்கருகாக இடம் தேடாது அதற்குச் சில தூரத்தில் சனம் செலவொழியா வழிக் கரையை நாடிப் பந்தர் அமைத்தது இக்கருத்து. ஆனுல் அவரது திருமனேயை இதனே நணுக வைத்துப் பலவாறும் தாமே கண்காணித்து வந்தனர் என்பதும் (1790) அறியப்படும்.

வழிக்கரை - இவ்வழி திருநல்லூரிலிருந்து திருப்பழனம் வழியாகச்செல்லும் பெரும் பாதை என்பது கருதப்படும். காவிரிக்கு வடகரையில் இத்தண்ணீர்ப் பந்தர் இருந்த இடம் இன்றும் அறியப்பட்டு விழாக் கொண்டாடப்படுகிறது.

அருளுடையார் உளம் அனேய தண் அளித்தாய் - அகற்றி - என்க. **அருளுடையார்** - எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அறவோர். பரிவு அகற்றுதலில் நீர்ப்பந்தர் அருளுடைய பெரியோர்களது உள்ளம்போலக் குளிர்ந்த அளியுடன் விளங்கிற்று. பந்தர் அளியுடன் பரிவு அகற்றுதலாவது அங்குள்ள எல்லாப் பொருள்களும் வந்தடைந்தார்களது பரிவு மாற்றுதலில் ஒத்துக் குளிர்ச்சிசெய்து நிற்றல். அங்குள்ளாரது அளியுமாம். கருணையுள்ள பெரியோர் உள்ளம் பந்தரின் அளியினுக்கு உவமையாயிற்று. வினைபற்றி வந்த உவமம். "பெரியோ ருள்ளம் போல வோங்குநிலேத் தன்மையவாய்" (1165) என்ற விடத்துரைத்தவை என்க.

குளம் நிறைந்த நீர்த்தடம்போல் குளிர்தூங்கும் பரப்பினதாய் - குளமும் தடமும்போல என்க. **குளம் - இயற்கை யமைப்புகளுடைய பெரு நீர்நிலே; தடம் - அவ்வப்போது நீர் நிறைக்கப்படும் சிறு வாவி; குளம் - பயிர்களுக்கும், தடம் - ஏனே மக்கள் முதலிய உயிர்களுக்கும் ஆவன. குளிர்தூங்கும் பரப்பு** - குளிர்ச்சி நிலேத்துள்ள நீர்ப்பரப்பு. **குளம்** - வெல்லம் என்ற குறிப்பும் தந்து பானகம்போன்று இனிய நீர்கொண்டதோர் நீர் நிலே என்ற பொருளும்பட நிற்றல் காண்க. வெயிற் காலத்து நீர்ப் பந்தர்களில் வெல்லம் கலந்த பாகனம் அளிக்கும் வழக்கும் காண்க.

வளமருவு நிழல் தரு - தண்ணீர்ப் பந்தரினில், குளிர்ந்த நீரும் அதனேடொப்பக் குளிர்ந்த நிழலும் வேண்டப்படுவன. வழிவரும் தாகத்தைப் போக்க நீரும், வெப்ப விளேப்புப் போக்க நிழலும் உதவுவன.

தண்ணீர்ப் பந்தல் அறம் செய்வோர் இப்பாட்டிற் கண்ட இன்றியமையாத தன்மைகளேக் குறிக்கொண்டு அறமியற்றுவார்களாயின் நலம் தரும்.

1788. வந்தணைந்த வாகீசர் மந்தமா ருதசீதப்
பந்தருட னமுதமுமாந் தண்ணீரும் பார்த்தருளிச்,
சிந்தைவியப் புறவருவார், "**திருநாவுக் கர**"செ**னும்பே**ர்
சந்தமுற **வரைந்ததனை யெம்மருங்குந் தாங்கண்டா**ர். 6

வழிமேவுவார் - வந்தணைந்தார் - அவ்வழிச் செல்வார் இதனை வந்தணையாமல் விலகிச் செல்லலாகா வகையில் அமைந்தது என்பதாம்; பதிவணங்கும் விருப்பனுடன் செல்லும் நாயனுர் வழியில் தாகம் அயர்வு முதலியவற்றை நோக்காது செல்வது உணரப்படும் ஆதலின், 1569-வது பாட்டுப் பார்க்க. 5

1788. (இ-ள்.) வந்தணைந்த...பார்த்தருளி - அவ்வாறு அங்கு வந்து அணைந்த திருநாவுக்கரசு நாயனுர் தண்ணிதாய் மெல்லிதாய் வீசு மிளந்தென்றற் காற்றினையுடைய குளிர்ந்த பந்தருடனே அமுதமாகிய தண்ணீரும் பார்த்தருள்செய்து; சிந்தை வியப்ப உற வருவார்- திருமனத்தினுள் வியப்புப் பொருந்த வருவார் "திருநாவுக்கரசு" எனும்...கண்டார் - திருநாவுக்கரசு எனும் பெயரைச் சந்தம் பொருந்த எழுதியதனை அங்கு எப்பக்கத்திலும் தாம் கண்டருளினர்.

(வி-ரை.) மந்தமாருதம்...பார்த்தருளி - மந்தமாருதம் - மெல்லியதாய் வீசும் இளந்தென்றல். தண்ணீர்ப்பந்தர் நிகழ்வது வேனிற் காலமாதலால் அது இளந்தென்றல் வந்துலவும் காலமாம். "குளிர்சார லிடைவளர்ந்த கொழுந்தென்றல், அங்கணையத் திருவாரு ரணிவீதி யழகரவர், மங்கலநாள் வசந்தமெதிர் கொண்டருளும் வகை" (ஏயர் - புரா - 270). **சீதப்பந்தர்** - குளிர் நிழலுடைய பந்தர்.

அமுதமுமாம் தண்ணீரும் - அமுதமுமாம் - வேனிற் பரிவாகிய தாகம் தீர்த்து உயிரைக் காத்தலேயன்றிச் சுவையாலும் அமுதமாம் நீர் என்பார் **அமுதமுமாம்** என்ருர். உம்மை - பயனுலன்றிச் சுவையானும் என இறந்தது தழுவிய எச்சம். **தண்ணீரும்** - பந்தருடனே நீரினையும்; உம்மை எண்ணின்கண் வந்தது. **பார்த்தருளி** - காற்றும் நிழலும் நீரும் என்றவற்றைப் பொருளாகக் காணுராயினும் ஓரருளிப்பாட்டின் குறிப்பினுற் பார்த்தனர் என்பது.

சிந்தை வியப்பு உற - வியப்பாவது பந்தர் அமைந்த இடத்தின் தகுதியும், பிற அமைப்புக்களின் சீரும் நலமும், இத்துணையும் நாடிவைத்த கருத்தின் அகலமும், பிறவும் கண்டு களி கூரும் மன நிகழ்ச்சி.

எனும் பேர் எம்மருங்கும் சந்தமுற வரைந்ததனைத் தாம் கண்டார் - என்க.

எம்மருங்கும் - எல்லாப் பக்கங்களிலும் காணும்படியாக. **சந்தமுற** - சந்தம் பொருந்த - புகழ் விளங்க என்றலுமாம்.

வரைந்ததனைத்தாம் கண்டார் - வரைந்திருத்தலைத் தாமே கண்டனர். **தாம்** - பிறர் சொல்லக் கேட்டலன்றித் தாமே நேரில்; **தன்னை** என்பது தனை என நின்றதென்றுகொண்டு வரைந்ததன் பொருளாகிய தன்னையே தாம் கண்டனர் என்ற அரியதொரு பொருள் தர

1789. "இப்பந்த ரிப்பெயரிட் டிங்கமைத்தா ரியா"ரென்றூர்க்
கப்பந்த ரறிந்தார்க "ளாண்டவர செனும்பெயராற்
செப்பருஞ்சீ ரப்பூதி யடிகளார் செய்தமைத்தார்;
தப்பின்றி யெங்குமுள சாலேகுளங் கா"வென்றூர். 7

நிற்பதும் காண்க. "காண்பிட மேதெனிற், புண்ணியன் புகலூருமென் னெஞ்சுமே" (குறுந்); "அம்பலத் தாடி பாதமென் னெஞ்சுளிருக்கவே" (குறுந்); "தொண்ட ரகமலாற் கோயிலில்லை யையனை யாறனுர்க்கே" (நேரிசை); என்றபடி இறைவரை அடியார்கள் மனத்தினுட் காணுமாறுபோல, நாயனாரை அப்பூதியார் திருமனத்தினுள்ளும் அவரது தண்ணீர்ப் பந்தரினும் காணலாம் என்க. தம்மை மறந்து சிவனையே நினைக்கும் நாயனார் தம்மை ஈண்டுக் காணலாயினர் என்பதுமாம். "சிக்கெனப் பிடித்தேன்" "புறம்போக வொட்டேனே" என்பவை இங்குப் பொருந்துவன. 6

1789. (இ-ள்.) இப்பந்தர்...என்றூர்க்கு - "இந்தப் பந்தரை இந்தப் பெயரை இட்டு இங்கே அமைத்தவர் யாவர்?" என்று கேட்ட நாயனாருக்கு; அப்பந்தர் அறிந்தார்கள் - அந்தப் பந்தரின் வரலாற்றை அறிந்த அங்கு இருந்தவர்கள் - "ஆண்ட அரசு எனும் பெயரால்...கா" என்றூர் - ஆண்ட அரசு எனும் பெயரினாலே சொல்லுதற்கரிய சிறப்புப் பொருந்திய அப்பூதியடிகளார் செய்து அமைத்தனர்; தவறுதல் எதுவும் இன்றி இன்னும் இவ்வாறே சாலை, குளம், சோலை இவைகளும் எங்கும் உள்ளன என்றூர்.

(வி-ரை.) இப்பந்தர் இப்பெயரிட்டு இங்கு அமைத்தார் யார் - இப்பந்தர், இங்கு - இகரச்சுட்டுக்கள் பந்தரின் சிறப்பையும் இடவமைதியின் நலத்தையும் குறித்தன. **இப்பெயர்** - எதிர்பாராத இந்தப்பெயர் என்க. **யார்?** - இவ்வினா அங்குள்ளாரைப் பொதுப்பட நோக்கி அரசுகள் நிகழ்த்தியது. தமக்குள் தாமே வினவிக் கொண்டனர் என்றலுமாம். இகரச் சுட்டுக்கள் அரசு அப்பந்தரினுள் இருந்த அணிமை குறித்தன; "**மச்சிது** செய்தார் யாரோ?" (757) என்புழிப்போல, சிறந்த இந்த அறத்தினைச் செய்த நல்லோர் தமது பெயராற் செய்யாது வேறு பெயராற் செய்த கருத்தை அறிய விரும்பினரன்றித் தம்மைப் பற்றிய பெருமையாலன்று என்க. "இதற்கென்னோ கருத்து?" (1790) என்றதும்; "வேறொரு பேர் முன்னெழுத வேண்டிய காரணம் என்கொல்?" (1794) என்றதும் காண்க.

"**ஆண்டவரசு...கா" என்றூர்** - இது அங்கிருந்தார்கள் சொல்லியது. அவர்கள் அந்தப்பந்தரினை - அதன் வரலாற்றினை - அறிந்தவர்கள் என்பது. அவரைச் சார்ந்தார் புகழ்ச்சிமொழி யன்றி அப்பந்தர் முதலிய அறங்களை உள்ளவாறறிந்தோர் எடுத்துக்கூறிய உண்மை மொழி என்பார், அவரை அறிந்தார் என்னுது **அப்பந்தர் அறிந்தார்கள்** என்றூர்.

ஆண்ட அரசு என்னும் பெயரால் செய்தமைத்தார் - கா - என்று பிரித்து, "அரசே! உமது திருப்பெயரால் செய்தனர்; அவரைக் காப்பீராக" எனத் தம்மை அறியாமலே அவர்கள் வாக்கில் வந்த உண்மையின் தொனிக்குறிப்பும் காண்க. 702 - 715 முதலியவை காண்க. இவர்கள் திருநாவுக்கரசர் பெருமானை நேர்கண்டு பேசப்பெறும் பேறு பெற்ற பெரு மக்களன்றோ?

1790. என்றுரைக்க, வரசுகேட் "டிதற்கென்னோ கருத்"தென்று
நின்றவரை நோக்கி, "யவ ரெவ்விடத்தா" ரெனவினவத்,
"துன்றியநூன் மார்பருமித் தொல்பதியார்; மனையின்கட்
சென்றனரிப் பொழு;ததுவுஞ் சேய்த்தன்று; நணித்"தென்றூர். 8

அப்பூதியடிகளார் - முன்னர்த் திருநாவுக்கரசு நாயனுர் புராணத்தில் கூறியதன் தொடர்ச்சியாக இப்புராணங் கூறினூராதலின் நாயனுரது பெயர் தானும் இதுவரை கூறுது, இங்கு அப்பந்தர் அறிந்தார்களது வாக்கில் வைத்து அப்பருக்கு விடை கூறுமுகத்தால் முதன் முறையாகக் கூறிய சிறப்புக் கவிநயம் காண்க. ஏழாவது பாட்டில் அமைந்த தெய்விகச் சிறப்பும் கருதுக. "**யார்?**" என்ற வினுவுக்கு அவர் பெயரையும் பிற நலன்களையும் உடனே சேர்த்துக் கூறி மேல் வினுவுக்கு இடமின்றிச் சொல்லிய விடையின் அமைதியும் காண்க.

தப்பின்றி எங்கும் உள - வேண்டிய எவ்விடத்தும் தவறுதும், அமைக்க வேண்டிய முறைகளில் தவறுதும் உள்ளன.

சாலை - நிழல் அமைந்த வழிகள். **கா** - சோலைகள். **குளம்** - தண்ணீர்ப் பந்தரின் வந்து பரிவு தீர்ந்தார்களேயன்றி, மற்றும் எல்லாரும் எவ்வுயிரும் எக்காலத்தும் பிறிதொருவர் உதவி வேண்டாது தம்மிச்சையாற் பரிவு தீர்த்துக்கொள்வதற்கும் பயிர்களுக்கும் உதவும்பொருட்டும் காவும் குளமும் அமைத்தனர் என்க.

அறிவார்கள் - ஆண்டவரசின் பெயரால் - என்பனவும் பாடங்கள். 7

1790. (இ-ள்.) என்று உரைக்க அரசு கேட்டு - மேலே கண்டவாறு அவர்கள் சொல்ல அதை அரசுகள் கேட்டு; இதற்கு...வினவ - இதற்கு என்ன கருத்து என்று எண்ணிக்கொண்டு அங்கு நின்றவர்களை நோக்கி "அவர் எவ்விடத்துள்ளார்?" என்று கேட்க; துன்றிய...என்றூர் - "பூணுநூல் பொருந்திய மார்பினையுடைய அவரும் இந்தப் பழய பதியினராவர்; இப்பொழுதுதான் மனையின்கண்ணே சென்றனர்; அந்த மனை உள்ள இடமும் நெடுந்தூரமன்று; அணிமையிலுள்ளது" என்றனர்.

(வி-ரை.) இதற்கு என்னோ கருத்து - என்று - இவ்வாறு இப்பெயரால் இத்தருமங்களைச் செய்வதற்கு ஏதோ கருத்து இருத்தல்வேண்டும்; அது யாதுஎன்று தம்முள் எண்ணிக்கொண்டு. **என்று** - என்றெண்ணி.

எவ்விடத்தார் என வினவ - இடம் - இருக்கும் பதியும் மனையும் என்ற இருபொருளும் தருதலின் அவ்விரண்டும்பற்றி அவர்கள் விடை கூறினர்.

"துன்றிய...நணித்து" என்றூர் - "எவ்விடத்தார்?" என்ற வினுவினுல் அவரைக் காண விரும்பினர் இவ்வடியவர் என்றுகொண்ட அவர்கள் அவ்வினுவுக்கு உள்ள விடைமட்டி லமையாது அவர் சென்று காண்பதற்குரிய எல்லாச் செய்திகளையும் தொகுத்து மேல் வினுக்களுக்கு இடமில்லாதவாறு கூறிய அறிவுடை நயம் காண்க. அடியார்களிடத்துக் கொண்ட அன்பின் திறமும் குறிப்பு. *116*வது பாட்டில் மந்திரி கூறும் விடையின்

1791. அங்ககன்று முனிவரும்போ யப்பூதி யடிகளார்
தங்குமனைக் கடைத்தலைமுன் சார்வாக, வுள்ளிருந்த
திங்களூர் மறைத்தலைவர் "செழுங்கடையில் வந்தடைந்தார்
நங்கள்பிரான் றமரொருவ" ரெனக்கேட்டு நண்ணினார். 9

குறிப்புக்கள்போலக் கண்டுகொள்க. **துன்றியநூன் மார்பர்** - என்றதனால் அவர் மறையவர் மரபினர் என்ற அடையாளம் கூறியபடி; **இத்தொல்பதி** - இவ்வூரினர் என்றதனால் சென்று காணும் மனவெழுச்சியைப் பலப்படுத்தியபடி; **மனையின்கண் இப்பொழுது சென்றனர்** என்றதனால் இதுகாறும் இங்கிருந்து அடியவர்க்கு ஆவனவற்றைத் தாமே செய்தனர் என அவரது அறத்தின் இயல்பும், எளிமையும், அன்பும் புலப்படுத்தி அவரைக்காணும் ஊக்கத்தை மிகுதிப்படுத்தியபடி; **அதுவும் சேய்த்தன்று - நணித்து** - என்றதனால் அதனை விரைவுபடுத்திச் செல்லும் அடையாளங் காட்டி வழிப்படுத்தியபடி என்றிவ்வாறு கண்டுகொள்க.

என நிறைந்து - என நினைத்து - என்பனவும் பாடங்கள். *8*

1791. (இ-ள்.) அங்கு அகன்று...சார்வாக - அவ்விடத்தினின்றும் நீங்கி முனிவராகிய திருநாவுக்கரசு நாயனாரும் போய்அப்பூதி யடிகளார் வாழும் திருமனையின் முன் கடையிற் சார்ந்தாராக; உள்ளிருந்த திங்களூர் மறைத் தலைவர் - மனையினுள்ளே சென்று தங்கியிருந்த திங்களூர் வேதியர் தலைவராகிய அப்பூதியார்; செழுங்கடையில்...எனக் கேட்டு - செழிப்புடைய தமது மனை முன் கடையில் நமது சிவபெருமானின் அடியவர் ஒருவர் வந்து அணைந்தனர் என்று சொல்லக் கேட்டு; நண்ணினார் - மனையின் உள்ளிருந்து முன் கடையில் வந்து சேர்ந்தனர்.

(வி-ரை.) அங்கு - அங்கு நின்றும்; தண்ணீர்ப் பந்தரினின்றும்; ஐந்தனுருபு தொக்கது. **முனிவரும் - முனிவர்** - திருநாவுக்கரசர். "ஞானத் தவமுனிவர்" *(1266)* பார்க்க. இவ்வாறு தமது பெயரின் விளக்கத்தாற் போந்த புகழ்ச்சியின் விருப்பத்தாற் போந்தனர் என்று மக்கள் எண்ணி அபசாரப்பட்டு விடாதபடி, அற்றன்று; இவர் உலக நிலை எல்லாம் முனிந்த பெரு முனிவர்; சிவனை முன்னுதலேயன்றி, வேறொன்றும் முன்னாத பெரு முனிவர்; ஆதலின் அவர் சென்ற கருத்து வேறு; திருவருளும் அன்பின்றிறமும் வெளிப்படும்படி அருள் கூட்டச் சென்றனர் என்பார் **முனிவரும்** என்றார். உம்மையும் இச்சிறப்புக் குறித்தது. பின்னர் அப்பூதியார் முனிந்து சில கூறுதற் கிடமாக நிற்பவர் *(1795 - 1797)* என்றதும் குறிப்பு.

கடைத்தலை - முன்றில். இவரது கடை - கால்; அவரது தலை - முன் சார்வாக; திருவடி அவரது தலைமுன் சார்வாக அமைய என்ற குறிப்பும் காண்க

முன் சார்வு ஆக - கடைத்தலையின் முன்பு சார; முன்னரே சார்வாகக் கொண்ட நிலை இப்போது வெளிப்படக் கைகூடி உளதாக. **ஆக** - ஆக்கம் தருவதாக - என்பதும் தொனி.

உள்ளிருந்த - மறைத் தலைவர் - கேட்டு - நண்ணினார் - அப்போதுதான் மனைக்குட் சென்றமர்ந்த வேதியர் வெளியில் வந்தனர். இதுவரை உலகறியவாராது உள்ளே ஒடுங்கியிருந்தது அவரது பெருமை; இப்போது வெளிப்பட நண்ணலாயிற்று என்ற குறிப்பும் காண்க. **கேட்டு** - கேட்டலுமே; தாம் அப்போதுதான் மனையிற் போந்தனராயினும்

1792. கடிதணைந்து வாகீசர் கழல்பணிய மற்றவர்தம்
அடிபணியா முன்பணியு மரசினெதி ரந்தணனுர்
"முடிவிறவஞ் செய்தேன்கொன்; முன்பொழியுங் கருணைபுரி
வடிவுடையீ ரென்மனையில் வந்தருளிற் றென்!" னென்றுர். 10

வந்த காரியத்தையும் அயர்வையும் பாராது ஓர் அடியவர் வந்தார் எனக் கேட்டவுடன் வெளிப்போந்தமை **அவரது அடியார்க்கடியாராந் தன்மையின் உறைப்பினைக் காட்டுவதாம்.**

செழுங்கடை......என - அடியார்கள் போதருமிடமாதலின் **செழுங்கடை** என்றுர். **பிரான் தமர்** - அடியவர் : "எம்பிரான் றமரேயோ" (*318*) : பெருமானுல் தம்மவராக ஆட்கொண்டருளப் பெற்றவர். **ஒருவர்** - ஒப்பற்றவர் என்ற குறிப்புமாம்.

எனக்கேட்டு - அடிகளைச் சூழ இருந்தவர்களும் அன்பின்றிறத்தால் மேம்பட்டார்களாதலின் முனிவர் சார்ந்த செய்தியை உடனே அறிவிக்க அது கேட்டு என்க.

நண்ணினுர் - வெளியே மனைக்கடையில் வந்தனர். 9

1792. (இ-ள்.) கடிது...பணிய - (அப்பூதியார்) விரைவில் வந்தணைந்து வாகீசருடைய திருவடிகளை வணங்க; மற்றவர்...எதிர் - அவர் தமது திருவடிகளில் பணிந்து வணங்குவதற்கு முன்னமே தாம் பணிகின்ற திருநாவுக்கரசர் முன்பு; அந்தணனுர் - அந்தணராகிய அப்பூதியார்; முன்பொழியுங் கருணைபுரி வடிவுடையீர் ! - முன்னே பொழிகின்ற கருணை புரியும் திருவடிவினையுடைய பெரியீரே!; முடிவில் தவம் செய்தேன்கொல்! என் மனையில் வந்தருளிற்று - முடிவில்லாத தவத்தை முன்னம் செய்திருந்தேன் போலும் தேவரீர் அடியேனது மனையில் வந்தருளிச் செய்தது; என்? என்றுர் - தேவரீரது வருகை என்ன அதிசயம்! என்று கேட்டனர்.

(வி-ரை.) கடிது அணைந்து - அடியார் அடைந்ததனைக் கேட்டவுடன் விரைந்து வந்தணைந்தமை அன்பின் உறைப்பு.

கழல் பணிய - திருவேடத்தைச் சிவனெனவே கண்டு வழிபடும் தன்மை குறித்தது. "நேய மலிந்தவர் வேடமும்...அரனெனத் தொழுமே" (போதம் - *12* சூத்). "**வடிவுடையீர்!**" - என்றதன் கருத்துக் காண்க. ஆளுடைய பிள்ளையாரும் "தொண்டர் திருவேட நேரே தோன்றியதென்று தொழு"தனர் (திருஞான - புரா - *271*) என்பதும் ஈண்டுக் கருதுக. *1405*-ல் உரைத்தவையும் பார்க்க.

முன்பணியும் அரசு - "யாவர்க்கு நன்றாம் பணித லவருள்ளுஞ், செல்வர்க்கே செல்வந் தகைத்து" (குறள்) என்றபடி அடியார் யாவர்க்கும் பணிவுரியது. "தாழ் வெனுந் தன்மையோடு சைவமாஞ் சமயம் சாரும் ஊழ்" (சித்தி *2-91*). ஆனால் அடியவர்கட்கரசராகிய நாயனாருக்கு அது மிகவும் உரிமையுடையதாம் என்ற குறிப்புப்பெற "முன் பணியு மரசு" என்றார்.

அவர்தம் அடிபணியாமுன் பணியும் அரசு - திருவேடங் கண்டு அடியவரைப் பணிய அப்பூதியார் முற்பட்டனர்; அடியார்பால் அவரினும் அன்பு மிக்க அரசுகள் அவரைப் பணிய அதனினும் விரைந்தனர் என்க. ஒருவரை ஒருவர் ஒரே காலத்தில் பணிதல். இவ்வாறு

1793. "ஒருகுன்ற வில்லாரைத் திருப்பழனத் துள்ளிறைஞ்சி
வருகின்றேம்; வழிக்கரையி னீர்வைத்த வாய்ந்தவளந்
தருகின்ற நிழற்றண்ணீர்ப் பந்தருங்கண் டத்தகைமை
புரிகின்ற வறம்பிறவுங் கேட்டணைந்தோ" மெனப் புகல்வார், 11

பணிதலில் ஒருவரை ஒருவர் முற்படுதல் அடிமைத் திறத்தின்பால் வைத்த அன்பின் உறைப்பு. "முன் பிறைஞ்சின ரியாவரென் றறியா முறைமையால்" (244) என்றது காண்க. "தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியம்" என்பது நாயனரது மனநிலை. அப்பூதியாரது அன்பின்றிறம் அவரது வேடத்தாலும் அறியக் கிடப்ப தொன்றென்க.

முடிவில் தவஞ் செய்தேன்கொல்...மனை வந்தருளிற்று - மனையில் தாமே வந்தருளுதற்கு எல்லையில்லாத தவம் முன்பு செய்திருந்தாலன்றிக் கூடாது; அவ்வாறு தவஞ் செய்ததை யானறியேன்; ஆயினும் இப்பேறு கைகூடப் பெற்றமையால் யான் தவஞ் செய்தேனாகல் வேண்டும் என ஐயப்பாடும், அனுமானத்தாற் போந்த துணிபும் உடன் கூறுவார் **செய்தேன் கொல்?** என்று வினவகையாற் கூறினர். தாம் அவரைக் காணும் தன்மையானன்றி உணர்வு வகையாக தியானப் பொருளாகக் கொண்டு அவரது திருநாமத்தையே சிந்தித்திருந்ததுவே பெருந்தவமாக அத்தவப் பயனைக் கைகூடச் செய்தது என்ற உண்மை அவர் அறியாமலே அவர் திருவாக்கிற் போந்தது. **முடிவில் தவம்** என்றமையால் இனிச் சிவன் கழல் சேரும் நிலையினைப் பெறும் வரையில் அத்தவமே செய்து வருதலும் குறிப்பு.

"அறியா முன்னே" (1783) என்ற விடத்தில் போந்த முன்னைத் தவத்தின் குறிப்பும் கருதுக. இத்தவம், முன்னைப் பிறவியிற் செய்தனவும், இப்பிறவியிற் செய்தனவுமாம். இப்பிறவியிற் செய்தவை போதா; ஆதலின் முன்னும் செய்திருத்தல் வேண்டுமென்றது குறிப்பு. **முடிவில்** என்ற குறிப்புமது.

முன் பொழியும் கருணை புரி - முன் - முன்பாக. தேற்றமாக அறியும்படி என்றும்; கருணை பெறுவோர் வந்த அடைந்து கேட்பதன்முன் என்றும் உரைக்க நின்றது. அப்பூதியார் தேடிச் செல்லாது அரசுகள் தாமே மனைக் கடைத்தலையில் வந்தடைந்த அருளின் றிறம் பற்றிய உண்மைக் குறிப்பு. **பொழிதல்** - மிகுதியாக மாரி பொழிவது போல வழங்குதல் என்பது குறிப்பு. **புரிதல்** - "எப்பொழுதும் மேற்கோடல்"; "போக்கு வரவு புரிய" (போதம். 2 - சூத் - சிற்றுரை).

வடிவுடையீர் - அரசுகளது திருவடிவின் காட்சியின் றுணையாலே அப்பூதியார் இத்துணையும் போற்றி வழிபட்டது.

"பவனெனு நாமம் படித்துத் திரிந்துபன் னுளமைத்தால், இவனெனைப் பன்னுளமைப்பொழி யானென் றெதிர்ப்படுமே" (தனித்திருவி) என்ற அரசுகளது திருவாக்கின் இலக்கியமாகிய ஆண்டவரைப் போலவே அரசுகள் தாமும் விளங்கி யதெய்வவருட் கருணைத் திறம் ஈண்டுக் கருதிப் போற்றப்பாலது.

வந்தருளிற்று - தாமே வந்தது; **அருளிற்று** - என, இனிச் செய்ய நிற்பதாகிய பேரருளின் றிறத்தையும் விரைவுபற்றி இறந்த காலத்தாற் கூறிய குறிப்புமாம்.

என்! - வினா. அதிசயக் குறிப்புப்பட வந்தது. ஈதென்ன அதிசயம் என்க. அது **முடிவில் தவஞ் செய்தேன் கொல்?** என்ற ஐயப்பாட்டினைத் தொடர்ந்து கூறியதனாலும் அறிக. இனி, **என்?** என்றற்கு நீர் வந்த காரணம் என்னை? என்றுரைத்தலுமாம். *10*

1793. (இ-ள்.) ஒரு...வருகின்றோம் - ஒப்பற்ற மாமேருமலையை வில்லாகவுடைய சிவபெருமானைத் திருப்பழனம் என்னும் தலத்தில் வணங்கிக்கொண்டு வருகின்றோம்; வழிக் கரையில்...கண்டு - வரும் வழியின் கரையில் நீர் வைத்திருக்கும் வாய்ப்புடைய வளத்தைத் தரும் நிழலையுடைய தண்ணீர்ப் பந்தரினைக் கண்டும்; அத்தகைமை...கேட்டு - அத்தன்மையாற் புரிகின்ற அறங்கள் பிறவற்றையும் கேட்டும்; அணைந்தோம் எனப் புகல்வார் - இங்கு வந்தணைந்தோம் என்று சொல்வாராகி,

(வி-ரை.) ஒருகுன்ற...வருகின்றோம் - "என் மனையில் வந்தருளிற்று என்?" என்று அப்பூதியார் கூறியதனையே தொடர்ந்து கொண்டு வாகீசர் தம்மை இன்னவர் என்று அறியாமலேயே தாம் வந்த வரலாற்றையும், மனைக்கடைத் தலையிற் சார்ந்ததன் கருத்தினையும் அறிவிக்கின்றபடி.

குன்ற வில்லாரைத் திருப்பழனத்துள் இறைஞ்சி - பல தளிகளிலும் வேறு எங்கும் கயிலாயநாதனையே காணலாமே என்று நாயனார் தாம் அருளியவாறே பல தலங்களிலும் சென்று சிவபெருமானையே எங்கும் கண்டிறைஞ்சும் தன்மையாற் கூறினார். "ஆலயந் தானு மரனெனத் தொழுமே" (போதம் - *12*. சூத்.) என்றபடி நாயனார் சீவன்முத்த நிலையிற் சரித்தனர் என்க.

வருகின்றோம் - பன்மை இறைபணி நிற்றலின் பெருமை குறித்தது.

வழிக் கரையில் - வரும் வழியில் ஓரத்தில். "அளவில்சனஞ் செலவொழியா வழிக்கரையில்" (*1787*).

நீர் வைத்த - தண்ணீர்ப்பந்தர் என்க. **வைத்த** - வைப்பித்த என்க; பிறவினை விகுதி தொக்கது. **நீர்** - "அமுதமுமாம் தண்ணீரும்" என்றபடி தக்கவாறு அமைந்த நீர் என்ற குறிப்புப் பொருளும் தந்து நின்றது.

வாய்ந்த வளம் - வாய்ப்பாவதுமுன் *1787*-இல் உரைத்த நலங்களின் தொகுதி. **நிழல் தண்ணீர்ப்பந்தர்** - தண்ணீர்ப் பந்தருக்கு நீரினைப் போலவே குளிர் நிழலும் இன்றியமையாது வேண்டப்படுவதென்பது. முன் *1787*-இல் பந்தர், அமைப்பித்தவர் கொண்ட மனப்பான்மையின் சார்புபற்றிக் கூறினார்; இங்கு அதனை நுகர்ந்தவர்களின் சார்புபற்றிக் கூறினார்.

கண்டு - கேட்டு - எண்ணும்மைகள் தொக்கன. கண்டதனைக்கொண்டு, காணாதனவும் கேட்டனவுமாகிய பிறஅறங்களின் தன்மையினையும் தெரிந்து என்றபடி.

அத்தகைமை புரிகின்ற அறம் பிற - அது போலவே அரசுகளின் பெயராக செய்யப்பட்டனவும், உரியவாறு அவ்வவற்றிற்கு வாய்ந்த வளந்தருகின்றனவும் ஆகிய பிற அறங்கள். அவை, "சாலை-குளம்-கா" (*1789*) என்று முன் அங்கு அறிந்தார்பாற் கேட்டவை; கேட்டவையும், கண்ட அத்தகையனவே என்பது காண்டலும் கருதலுமாகிய இரண்டு அளவைகளாலும் அறிந்தன என்பார் கண்டு கேட்டு என இருவகையும் கூறினார்.

1794. "ஆறணியுஞ் சடைமுடியா ரடியார்க்கு நீர்வைத்த
ஈறில்பெருந் தண்ணீர்ப்பந் தரினும்பே ரெழுதாதே
வேறொருபேர் முன்னெழுத வேண்டியகா ரணமென்கொல்?"
கூறு"மென வெதிர்மொழிந்தார் **கோதின்மொழிக் கொற்றவனார்**. 12

புரிகின்ற - இடைவிடாது மேற்கொண்டு - விரும்பச் - செய்கின்ற.

அணைந்தோம் - வழியே சென்றுவிடாது, இந்த உமது மனைக்கடையின்கண் என்ற இசையெச்சம்.

புகல்வார் - மேலும் புகல்வாராகி; முற்றெச்சம், புகல்வார் - மொழிந்தார் என்று மேல்வரும் பாட்டுடன் முடிக்க. இதனால் "வடிவுடையீர் - என் மனையில் வந்தருளிற்று" என்ற பகுதிக்கு விடையாகத் தாம் வந்த வரலாற்றைக் கூறினார். இனி, "என்?" என்றதற்கு விடைபோலத் தாம் வந்த கருத்தினை வேறாக மேல்வரும் பாட்டாற் கூறுகின்றார். *11*

1794. (இ-ள்.) ஆறு அணியும்...எழுதாதே - கங்கையைத் தரித்த சடை முடியாரது அடியவர்களுக்காக நீர் வைப்பித்த முடிவில்லாத பெருமையுடைய தண்ணீர்ப் பந்தரில் உமது பெயரை எழுதாமல்; வேறொரு பேர்...என்கொல்; கூறும் என - வேறு ஒரு பெயரை முன் எழுத வேண்டிய காரணம் என்னை கொலோ? சொல்வீராக என்று; கோதின்மொழிக் கொற்றவனார் எதிர்மொழிந்தார் - குற்றமில்லாத மொழி வேந்தராகிய நாயனார் எதிர் மொழிந்தனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை.) அடியார்க்கு - அடியார்க்குதவும் பொருட்டு. "அளவில் சனஞ் செலவொழியா வழிக்கரையில்" (*1787*) அமைத்தபடியால் இது எல்லாருக்கும் பயன்படுமாயினும், சிறப்பும் தலையாகிய பயனும்பற்றி **அடியார்க்கு** என்றார். வணங்கி வழிபடத்தக்கார் அவர்களேயாம். அவர்களையே குறிக்கொண்டார் என்பது.

ஈறில் பெரும் என்றது தண்ணீர்ப்பந்தரின் சிறப்பு அமைதியும், முத்தி சாதனமாகும் பெருமையும் குறித்தது.

தண்ணீர்ப் பந்தரில் நும்பேர் - என்றும், **பந்தரினும் பேர் எழுதாதே** என்றும் உரைக்க நின்றது. **பந்தரினும்** - உம்மை உயர்வு சிறப்பு. பயன் பற்றாமலே பல இடத்தும் தம் பெயரை விளம்பரப்படுத்திக்கொள்வோர் நிற்க, நீர் அடியார்க்காக அமைத்த அரிய பந்தரில் தானும் எழுதாதே என்பது குறிப்பு.

முன் எழுத - முன்புறம் எழுத. முன்னால் விளக்கமாக எழுத என்றனுமாம். உமது பேர் எழுத வேண்டிய முன்பக்கத்து - முகப்பில் - என்பது.

எதிர் - எதிரில் என்றும், அப்பூதியார் கருதிய கொள்கைக்கு எதிர்மறையாக - மாறுபாடாக - என்றும் உரைக்க நின்றது.

1795. நின்றமறை யோர்கேளா நிலையழிந்த சிந்தையராய்
"நன்றருளிச் செய்திலீர்!; நாணிலமண் பதகருடன்
ஒன்றியமன் னவன்சூழ்ச்சி திருத்தொண்டி னுறைப்பாலே
வென்றவர்தந் திருப்பேரோ "**வேறொருபேர்?**" எனவெகுள்வார், 13

கோதில் மொழிக் கொற்றவனார் - இவர் கூறிய மொழிகள் அப்பூதியார் அன்பு பற்றி வெகுள்வதற்கு ஏதுவாயினவேனும், அவ்வாறு தீங்கு குறியாத மொழிகள் என்பது. தீமையில்லாத சொற்களையே சொல்லுதலில் வல்ல அரசர் என்க. **கோதுஇல் மொழி** - தீமையை - குற்றத்தை - இல்லையாகச் செய்யும் மொழி என்ற குறிப்பும், பின் *1798*-இல் கூறுவனவும், *1817*-இல் அருள் விளைப்பனவும் ஆகிய சரிதக் குறிப்பும் பட நின்றன.

வேறு ஒரு பேர் - "நாவுக்கரசு" என்று "உலகேழினுநின் னுமங்க ணயப்புற நண்ணுக" என்று இறைவர் ஏனையோரின் வேறாகத் தனிச் சிறப்புப்பெற வைத்த ஒப்பற்ற பெயர் என்ற வாய்மையும் காண்க.

எழுத வேண்டிய காரணம் என் கொல்? - "இதற்கென்னோ கருத்து" (*1790*) என்று உண்மை தெரியும் நோக்கத்துடன் சென்றமையால் இவ்வாறு கேட்டனர்.

என் கொல்? - அவ்வாறு எழுத வேறு இயைபில்லாமையும், ஆயினும் எழுதப்பட்டு இயைந்தமையால் காரணம் புலப்படாமையும் தோன்ற **என்கொல்?** என்று ஐயப்பாட்டிற் கூறினார். *12*

1795. (இ-ள்.) நின்ற...சிந்தையராய் - நின்ற அப்பூதி மறையவர் அதனைக் கேட்டுச் சிந்தைதன் னிலை யழிந்தவராகி; "நன்றருளிச் செய்திலீர்...வேறொரு பேர்?" என வெகுள்வார் - "நீர் நன்கான மொழிகளை அருளிச் செய்திலீர்! நாணமில்லாத சமணர்களாகிய சண்டாளர்களுடன் சேர்ந்த அரசன் செய்த சூழ்ச்சிகளையெல்லாம் திருத்தொண்டினது உறைப்பினையே துணையாகக் கொண்டு வென்ற அவரது திருப்பெயரோ வேறொரு பேர் என்று சொல்லத்தக்கது?" என்று வெகுள்வாராகி,

(வி-ரை.) நின்ற - அடியவர் ஒருவர் என்ற நிலையில் வரவேற்று உபசரிக்க, அரசுகளினெதிரில் மனைக்கடைத்தலையில் நின்ற.

மறையவர் - மறுத்துப் பேசவுள்ள குறிப்பு.

நிலையழிந்த சிந்தையராய் - உலகில் மக்கள் எவரேயாயினும் சிந்தையை நிறுத்த வேண்டிய பொறை முதலிய நிலையினின்றும் எக்காலத்தும் அழியலாகாது; அதிலும் **சிவனடியார்கள் சிறப்பாக எஞ்ஞான்றும் சிந்தைநிலை யழியலாகா மரபுடையோராதல் வேண்டும்;** "மலையே வந்து விழினு மனிதர்காள், நிலையினின்று கலங்கப் பெறுதிரேற், றலைவ னாகிய வீசன் றமர்களைக், கொலைகை யானை தான் கொன்றிட கிற்குமே" என்பது வாகீசர் திருவாக்கு (தனிக்குறுந்). மேலும், அடியவர்களின் திருமுன்பு, அன்பராயினோர் ஆசையொடும் அடைந்து, கூசி மொழிந்து கும்பிட்டு நிற்கக் கடவர்; இத்தன்மை யெல்லாம்விட இங்கு அப்பூதியார் சிந்தைநிலை யழிந்தமை என்னையோ? எனின்; "**மறைக ணிந்தனை சைவ நிந்தனை பொறு மனம்**" தரவேண்டும் மென்று நந்திதேவர் வரங்கேட்ட

படி, இங்குத் "திருநாவுக்கரசர்" என்ற திருப்பெயரை "வேறொரு பெயர்" என்றுசொன்னதைப் பெரு நிந்தனையாகக் கொண்டதனால் அப்பூதியார் மனம் நிலையழிந்ததென்க. சிவனையும் அடியாரையும் சிவ நூல்களையும் யாரேனும் நிந்தனை செய்வாராகில் அதைக் கேட்கலாகாது; கேட்டுச் சும்மா இருத்தல் பாவமாம். சத்திநாயனார் சிவ நிந்தனை புரிவோர்களது நாக்கை அறுத்தனர். இந்நாட் சைவ வுலகம் எனப்படுவது சிவ நிந்தனைகளை உளம் பதைக்காமல் வாளா கேட்டுச் சும்மா இருப்பதே யன்றித், தானும் பலவாற்றானும் சிவ நிந்தனைகளைச் செய்கின்றது; காலத்தின் கொடுமை! ஆதலின் அப்பூதியார் கொண்ட மனப்பான்மையின் தத்துவம் இந்நாளில் விளங்குதல் அரிது. தம்மையேனும், தம் உடலோடொழியும் மனைவி மக்கள் - சுற்றத்தார்களையேனும் ஒருவர் நிந்திக்கக் கேட்டால் எத்தனை கோபமும் கலகமும் விளைக்கின்றார்கள்? **அவ்வாறன்றி உயிரினுடன் வரும் இறைவனையும் நமது உயிரின் சுற்றமாகிய அவன் அடியார்களையும் நிந்திக்கக் கேட்டால் சிறிதும் எண்ணாது வாளா இருத்தல் எத்தனை மடமையும் பாவமுமாகும்! நிறையழிந்த** - என்பதும் பாடம். **நிறை** - காப்பன காத்துக் கடிவன கடிந்தொழுகும் சீலம்.

நன்றருளிச் செய்திலீர் - தீங்கு சொன்னீர் என்னாது இவ்வாறு சொன்னது நிலையழிந்த சிந்தையராகியபோதும் அடியார் திருவேடத்தின்கண் அப்பூதியார் வைத்த அன்பின் நிலை.

நாண் இல் அமண் பதகர் - நாணமில்லாமையாவது தாம் செய்த வஞ்சனை வெளிப்பட்டபோதும் அதனால் நாணித் தலை கவிழ்ந்து ஒழியாது பின்னரும் மேன்மேலும் ஒவ்வொன்றாகப் பொய் கூறி வஞ்சிக்க முற்படுதல். *1347 - 1367 - 1373 - 1385* (மானமழிந்து - புலம்ப) - *1389* முதலியவற்றிற் கூறப்பட்டவை.

சூழ்ச்சி - கொலை சூழ்ந்து செய்த உபாயங்கள்.

திருத்தொண்டின் உறைப்பாலே - சிவன் திருவடிகளிற் பதிந்த திருத்தொண்டின் அழுத்தமே துணையாகக்கொண்டு. **தொண்டாவது திருவடியிணையே பற்றிக் கிடத்தல்.** "என்கடன் பணிசெய்து கிடத்தல் - தன்கடன் அடியேனையுந் தாங்குதல்" (அப்பர்) என்ற மன உறுதி.

சூழ்ச்சிகளை வென்றமை நாயனார் புராணத்துள் விரிக்கப்பட்டன. இவற்றை அடியார்கள் சொல்லக் கேட்ட தன்மையால் அப்பூதியார்க்கு வாகீசர்பாற் பத்தி முதிர்ந்த தென்பதாம். **காரணம் என்?** என்றார்கள் ஒன்றாக முதலில் ஒரு காரணங் கூறியது காண்க.

திருப்பேரோ வேறொரு பேர்? - அப்பூதியார் வெகுண்டமைக்குக் காரணம் கூறியபடி.

வெகுள்வார் -விளம்பி இயம்பினார் என இம்மூன்று பாட்டுக்களையும் முடிக்க. *13*

1796. (இ-ள்.) நம்மை யுடையவர்... தெளிய - நம்மை யுடையவராகிய சிவபெருமானது திருவடிகளின் கீழ்ச் செய்யும் திருத்தொண்டினாலே இம்மையிலும் நாம் உய்தியைப் பெறுவது என்று என்போல்வார்களும் தெளியும்படி; செம்மைபுரி... எழுத - செம்மையைப் புரியும் திருநாவுக்கரசரது திருப்பெயரினை நான் எழுதிடவும்; வெம்மை... விளம்பினீர் என விளம்பி - வெவ்விய சொற்களை யான் கேட்கும்படி சொன்னீர்! என்று சொல்லி,

1796. "நம்மையுடை யவர்கழற்கீழ் நயந்ததிருத் தொண்டாலே
யிம்மையிலும் பிழைப்பதென வென்போல்வா ருந்தெளியச்
செம்மைபுரி திருநாவுக் கரசர்திருப் பெயரெழுத
வெம்மைமொழி யான்கேட்க விளம்பினீர்" எனவிளம்பி, 14

(வி-ரை.) நம்மை யுடையவர் - சிவபெருமான்; முன்னின்று இவ்வகை மொழிந்த உம்மையும் என்னையும் இன்னும் ஏனை எல்லா உயிர் வருக்கங்களையும் அடிமையாக உடைய தலைவர் என்க; **நம்மை** - உளப்பாட்டுத் தன்மைப் பன்மை.

நயந்த - அன்புடன் செய்த; **நயப்பு** - மனமுருகிய அன்பு.

இம்மையிலும் - அம்மை மறுமைகளிலேயன்றி யிம்மையிலும் என்று உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை, அம்மை மறுமைகளில் உடனிருந்து உய்தியைச் செய்பவர் என்பது மறுக்கலாகா உண்மையாதலின், அதுவேயன்றி, யிம்மையிலும் பிழைப்பது திருத்தொண்டின் காரணமேயாம் என்றார்.

என்போல்வாரும் தெளிய - மந்த மதிகளாய் அறிவு சுருங்கிய என்னைப் போன்றவர்களும். உம்மை இழிவுசிறப்பு. தன் முனைப்பு என்பது சிறிதுமின்றிச் சைவத்தின் "தாழ்வெனும் தன்மை"யை அணிகலமாப் பூண்டவர் அப்பூதியார் என்பது.

என் போல்வாரும் தெளியச் செம்மைபுரி - அறிவில்லா உலக மாக்களும் அறியும்படி செம்மை புரிந்த என்றது திருநாவுக்கரசர் சமணர்களின் தீய செயல்களையெல்லாம் சிவனடித்தொண்டின் திறம்போற்றியே வென்றுகாட்டிய செயல்களைக் குறித்தது. "ஈச னெந்தை யிணையடி நீழலே" என்றும், "ஒருவர் தமர்நா மஞ்சுவ தியாதொன்று மில்லை, அஞ்ச வருவது மில்லை" என்றும், "அடி பொருந்தக் கைதொழ, நற்றுணை யாவது நமச்சி வாயவே", "ஏத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே" என்றும், சொல்லியும் காட்டியும் செய்த செம்மைகளையே நினைவில் அழுந்தக்கொண்டு அப்பூதியார் கூறினர் என்க. மேல்வரும் பாட்டுப் பார்க்க. **செம்மை** - சிவமாம் தன்மை; **புரிதல்** இடைவிடாது மேற்கொள்ளுதல். "திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட திருநாவுக்கரையன்" என்று ஆளுடைய நம்பிகள் திருத்தொண்டத் தொகையினுள் இத்திறம்பற்றியே போற்றியதும் காண்க. (1266 உரை பார்க்க). **உலகம் கண்டுய்தற் பொருட்டே அரசுகளது வாழ்க்கை நிகழ்ந்தது என்பது.**

எழுத - எழுதியிடவும். வெம்மைமொழி - அதனை வேறொரு பேர் என்ற வெவ்விய மொழி.

யான் கேட்க - மறைவானன்றி எதிரில் நானே காதுகொள்ளக் கேட்கும்படியாக. கேட்க நின்றது தமது தீவினை - துர்ப்பாக்கியம் - என்பது குறிப்பு. 14

1797. (இ-ள்.) பொங்குகடல்...யாருளரே - பொங்கும் கடலினைக், கல்லே மிதப்பாகக் கொண்டு போந்து கரையேறிய அவர் பெருமையினைச் சிவபெருமானது புவனத்தில் அறியாதவர்கள் யாரேனு முளரோ?; மங்கலமாம்...மொழிந்தீர் - மங்கலமாம்

1797. **"பொங்குகடற் கன்மிதப்பிற் போந்தேறு மவர்பெருமை**
யங்கணர்தம் புவனத்தி லறியாதா ரியாருளரே!
மங்கலமாந் திருவேடத் துடனின்றிவ் வகைமொழிந்தீர்;
எங்குறைவீர்? நீர்தாமியார்? இயம்பு"மென வியம்பினர். 15

திருவேடத்துடன் நின்றும் இவ்வகையாக மொழிந்தீர்; எங்கு உறைவீர் - நீர் எவ்விடத்துள்ளவர்?; நீர்தாம் யார்? - நீர்தாம் யாவர்?; இயம்பும் - சொல்வீராக; என இயம்பினர் - என்று சொன்னர்.

இந்த மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

(வி-ரை.) **பொங்குகடல்** என்றும், **கல் மிதப்பில்** என்றும், **போந்து** என்றும், **ஏறும்** என்றும் தனித்தனி அச்செயலைப் பிரித்து எடுத்து விதந்து கூறியது ஒவ்வொன்றும் செயற்கரிய பெருஞ் செயல்களேயாக, அவையனைத்தும் ஒன்றுகச் சேர்ந்து நிகழச்செய்தது சொல்லற்கரிய பெருமையுடையதாகும் என்று காட்டுதற்கு. **அவர் பெருமை** என்றதனை விளக்கியவாறு. **மிதப்பு** - தெப்பம். **அறியாதார் யாருளரே** - இவ்வாறு தேற்றம்பட விளங்கும் மிகப் பெரிய தொன்றினை அறியாதார் ஒருவருமிலர் என்க. **உளரே** - வினு இன்மை குறித்தது. **யாரும்** என்ற முற்றும்மை தொக்கது. **உளரே** - உள்ளாராக இருக்க இயலாது என்பது. **அங்கணர்தம் புவனம்** - அங்கணராகிய சிவபெருமானல் உயிர்கள் ஈடேறும் பொருட்டுப் படைத்தளிக்கப்பட்ட 224 என்னும் புவனங்கள். **புவனம்** - சாதியொருமை. "உலகே ழினுநின் னுமங்க ணயப்புற நண்ணுக" (1339) என்று இறைவர் அருளியமையால் எல்லா வுலகங்களும் அறிந்ததொன்றும் என்பதும் குறிப்பு. சிவனடிமைத் திறத்தினில் வாராத வேற்றுப்புவனத்துள்ளாரே அவர் பெருமை யறியாதிருத்தல் கூடும் என்பதும் குறிக்க **அங்கணர்தம் புவனத்தில்** என்றுர்.

மங்கலமாம் திருவேடத்துடன் நின்று - உமது திருவேடம் நீர் வேற்றுப்புவனத்தவரல்லர் என்று அறிவியா நிற்பவும் என்பது. **நின்றும்** - என்று உயர்வு சிறப்பும்மை தொக்கது.

இவ்வகை - அத்திருவேடத்துடன் ஒவ்வாது அதற்கு மாறுகிய இவ்வாறு. **மங்கலமாம் திருவேடம்** என்றதனல், **மொழிந்தது** மங்கலத்துக்கு மாறுகியது. அமங்கல மொழி என்பது குறிப்பிற் பெறவைத்து அமங்கலத்தைத் திருவேடத்தார்பாற் சாரும்படி எடுத்துக் கூறுத மரபு காண்க. முன் "நன்றருளிச் செய்திலீர்" (1795) என்றதும் காண்க. ஏனுதியார் புராண உட்கிடையும் ஈண்டுக் கருதுக.

எங்கு உறைவீர் - அங்கணர்தம் புவனத்தில் அறியாதார் இலராதலின், நீர் உறைவது வேறு எங்கும் எவ்விடம் என்றபடி. **எம் குறைவு ஈர்** - எமது குறைகளைப் போக்கும் என்று விண்ணப்பிக்கும் உண்மை தொனிப்பதும் காண்க.

நீர் தாம் யார்? - எங்கு என்றதனல் ஊரும், **யார்** என்றதனல் பெயரும் வினவியபடி. "ஊரென்ன வென்னவும் வாய்திற வீரொழி வீர்பழியேற், பேரென்னவோவுரையீர்" (திருக்கோவையார் - 56) என்ற அகத்துறை வினக்களின் குறிப்பும் ஈண்டு வைத்துக் காண்க.

1798. திருமறையோ ரதுமொழியத், திருநாவுக் கரசரவர்
பெருமையறிந் துரைசெய்வார் "பிறதுறையி னின்றேற
அருளுபெருஞ் சூலையினு லாட்கொள்ள வடைந்துய்ந்த
தெருளுமுணர் வில்லாத சிறுமையேன் யான்" என்றார். 16

மங்கலமாம்...மொழிந்தீர் - எங்கு உறைவீர்? - நீர்தாம் யார்? - இயம்பும் - என்று பலவும் மேன்மேல் அடுக்கி வினவிக் கூறியது வெகுட்சி முடுகிய தன்மையாலாகியது. அவ்வளவிலும் அத்திருவேடத்திற் கொண்ட அன்பு மாறுது கூறும் திறமும் காண்க. *15*

1798. (இ-ள்.) திருமறையோர் அது மொழிய - திருவுடைய வேதியராகிய அப்பூதியார் அவ்வாறு சொல்லக் கேட்டு; திருநாவுக்கரசர்...உரை செய்வார் - அவர் பெருமையினை அறிந்து திருநாவுக்கரசர் விடை சொல்வாராகி; "பிறதுறையினின்று ஏற...யான்" என்றார் - "புறச்சமயத்துறையினின்று ஏறும் பொருட்டு அருளிச் செய்து பெருஞ்சூலை நோய் தந்து இறைவர் ஆட்கொள்ள அடைந்து உய்தி பெற்ற தெருட்சி கொண்ட வுணர்வில்லாத சிறுமையினை உடையேன் நான்" என்று சொன்னார்.

(வி-ரை.) திருமறையோர் - "நின்ற மறையோர்" (*1795*) என்றதனையே தொடர்ந்து கூறியது காண்க.

அது - நீர் கூறியது வெம்மை மொழி; நீர் யாவர்? என்றெல்லாம் கூறிய அவை. **அது** - அவ்வாறு என்ற பொருளில் வந்தது. **பெருமை** - அன்பின் பெருமை தம்மைப் பெருமைபடக் கூறியதனாலன்று; இறைவரது திருத்தொண்டில் ஈடுபட்ட பெருமையினையே கருதியபடி.

அறிந்து - கண்ட வெகுட்சியாகிய மெய்ப்பாட்டினின்றும், கேட்ட மொழிகளினின்றும் உள்ளிருந்த அன்பின் பெருமை அறியவந்தது என்பது.

உரை செய்வார் - அவர் கேட்ட வினவுக்கு விடை சொல்வாராகி. **உரை** - விடை. உரை செய்வாராகிய; முற்றெச்சம். உரை செய்வார் - என்றார் என முடிக்க.

பிறதுறை - "பொய்வாய்மை பெருக்கிய புன்சமயப் பொறையில் சமணீசர் புறத்துறையா, மவ்வாழ்குழி" (*1338*) என்ற புறச்சமயக் குழி. எல்லாச் சமயங்களும் அவ்வநிலைக்கேற்ற படித்துறைகளாக அமைந்தொழிவன ஆதலின் அதனையும் **துறை** என்றார்.

துறையினின் றேற - என்றதனால் அது கடைபோக ஈடேற்றிச் செலுத்தும் துறையன்று என்பது. **நின்று** - நிற்கவைத்ததும் அருளேயாம் என்பது.

ஏற அருளும் - ஏறும் பொருட்டுக் கொடுத்து அருளும்; **பெருஞ்சூலை** - அருளின் உருவம் என்றபடி. "வாழ்வு பெறத் தரு சூலை" (*1338*) என்று போற்றியது காண்க. **நோய் - நல்குரவு முதலிய துன்பங்கள் யாவையும் இறைவர் உயிர்களைத் தூய்மையாக்கி ஈடேற்றுதற்குச் செய்யும் அருளின் வண்ணங்களே என்று கொள்வது அறிவுடையோர் இயல்பு.**

1799. அரசறிய வுரைசெய்ய, வப்பூதி யடிகடாங்
கரகமல மிசைகுவியக், கண்ணருவி பாய்ந்திழிய,
வுரைகுழறி, யுடம்பெல்லா முரோமபுள கம்பொலியத்
தரையின்மிசை வீழ்ந்தவர்தஞ் சரணகம லம்பூண்டார். 17

ஆட்கொள்ள அடைந்து - அவன் அருளி ஆட்கொண்டதனல் வந்து அடைந்து.

அடைந்துய்ந்த - சிறுமையேன், உணர்வில்லாத சிறுமையேன் என்று தனித்தனி இயைக்க.

தெருளும் உணர்வில்லாத சிறுமை என்றது சைவத்திற் பிறந்தும் அதன் பெருமையை உணரமாட்டாது, சமயங்களின் நன்மை தீமைகளேயும் உணரமாட்டாது, புறச்சமயம் புக்குச் சிவனை இகழ்ந்த சிறுமை. ஏழைத்திருத்தாண்டகமும், திருவாரூர்த் திருவிருத்தமும், பிறவும் பார்க்க.

சிறுமையேன் யான் - அப்பூதியார் "அவர் பெருமை" (*1897*) என்று தமது தன்மையைப் பெருமையாகப் போற்றினும், தம்மைத்தாம் உணர்வில்லாத சிறுமையாராகவே உணர்ந்து ஒழுகினர் அப்பர்; இது அவர் பெருமை. அப்பூதியார் தமது பெருமையைக் கண்ட விடத்தில் தமது சிறுமையினையே கண்டனர் நாயனர். இது அவர் திருவாக்கிற் பலவிடத்தும் காணலாம். சிறுமையைப் பெருமையாகக் கொண்டது அப்பூதியாரது பெருமையாமென்று நாயனர் கொண்டனர். "அவர் பெருமை அறிந்து" என்றது இக்கருத்து.

இவ்வாறு **தத்தம் சிறுமை கண்டு ஒழுகுவது அறிவுடைமையும் ஈடேறும் நெறியுமாம்; இவ்வாறன்றி இது தம் பெருமை யென்றறிவது ஆணவத்தை மிகச் செய்து வீழ்ச்சிக்கே காரணமாகும்**. இவ்வுண்மையை இந்நாள் உலகம் சிறிதும் காணது ஒழுகுகின்றது கொடுமை! இதை அறிந்து தக்கவாறு ஒழுகின் உலகம் நலம் பெறும். இங்கு அப்பர் "சிறுமையேன் யான்" என்று தம்மை அறிவித்துக் கொண்டது அவையடக்கம் போன்ற உபசாரமன்றி, உண்மையிலே உணர்ந்து உள்ளூறி அப்பர் பெருமான் ஒழுகிய நெறியாகும் என்பதற்கு, "பித்தனேன் பேதையேன் பேயே னயேன் பிழைத்தனக ளெத்தனையும் பொறுத்தா யன்றே" என்று இறைவரிடத்து அவர் உள்ளங்கலந்து செய்யும் விண்ணப்பங்கள் பலவும் சான்றும்.

நின்றேற்ற - அருள் பெருகு - என்பனவும் பாடங்கள். *16*

1799. (இ-ள்.) அரசு அறிய உரை செய்ய - இவ்வாறு அரசுகள் அப்பூதியார் தம்மை அறியும்படி உரைத்தருளிச் செய்யவே; அப்பூதி அடிகள் தாம் - உண்மை அறிந்து கொண்ட அப்பூதியடிகள்; கரகமலம் மிசைக் குவிய - கைமலர்கள் தாமே தலையின்மேல் குவிந்துகொள்ளவும், கண் அருவி பாய்ந்து இழிய - கண்களினின்றும் நீர் அருவிபோலப் பாய்ந்து வழியவும்; உரை குழறி...பொலிய - மொழி தடுமாறி உடம்பு முழுதும் மயிர்க்கூச்செறிந்து விளங்கவும் (இவ்வண்ணம் மெய்ப்பாடுகள் உண்டாகும் நிலையினை அடைந்து); தரையின்...பூண்டார் - நிலத்தின்மேல் உடல் பொருந்தக் கீழே வீழ்ந்து அவரது திருவடித்தாமரைகளைத் தலையிற் பொருந்தப் பூண்டனர்.

1800. மற்றவரை **யெதிர்வணங்கி வாகீச ரெடுத்தருள**
அற்றவர்க ளருநிதியம் பெற்ருர்போ லருமறையோர்
முற்றவுளங் களிகூர முன்னின்று **கூத்தாடி**
உற்றவிருப் புடன்**சூழ வோடினுர் பாடினுர்.** 18

(வி-ரை.) தாம் எதிர்பாராமலும் அறியாமலும் இருந்த நிலையில் சடுதியில் தமக்கு வலியக் கிடைத்த பெரும்பேற்றினை அறிந்தபோது அப்பூதியார் அடைந்த மனநிலையும் மெய்ப்பாடும் ஆகிய செயல்களை அறிவிப்பது இத்திருப்பாட்டு.

1795 - 1796 - 1797 பாட்டுக்களில் அறியுமாறு அப்பூதியார் இருந்த நிலையினையும், இப்பாட்டினிற் றெரியுமாறு அவர் அடைந்த அதனின் முற்றும் மாறுபட்ட நிலையினையும் தெரிவிக்கும்படி சித்திரம் தீட்டுவதென்ருல் ஒரு பெரும் ஓவியப் புலவனுக்கும் அரிய வேலையாம். இவ்விரு பெருமக்கள் முதன் முறை சந்தித்த இந்நிலையினை நம் கண்முன் காணும்படி தீட்டுவது ஆசிரியரது தெய்வக் கவிநலத்திற்கே உரியதும் எளியதுமாம்.

அரசு - திருநாவுக்கரசர். முன் பாட்டில் கூறியபடி தம்மை அறிந்து அறிவித்துக் கொள்வது நாவுரசருக்கே இயல்பதாம் என்பார் **அரசு** என்ற தன்மையாற் கூறினுர். **அறிய** - அப்பூதியார் அறிந்துகொள்ளும்படி.

கர கமலம் மிசை குவிய - மனத்தின் தூண்டுதலாகிய முயற்சியின்றிக் கைகள் தாமே தலையின்மேல் ஏறக் கூப்புதல் நீண்ட பழக்கத்தலாவது. **குவிய** என்ற கருத்துமது. மேல் **சரண கமலம்** என்பதற்கேற்ப இங்குக் **கர கமலம்** என்ருர், ஓரினமாய்க் கூடும் ஒற்றுமை நயம்பற்றி. **கண் அருவி பாய்ந்து இழிய** - நீர் என்பது தொக்கி நின்றது. அன்பு வெளிப்பாட்டினுல் கண்ணீர் பாயும் மெய்ப்பாடு நிகழ்வதற்கு முன் கண்ணினுள் மறைந்து நிற்பது போல, அது குறிக்கும் சொல்லும் தொக்கி நின்ற நயம் காண்க.

பாய்தல் - கதுமென வெளிப்படுதல். **இழிதல்** இடைவிடாது பெய்தல்; வழிதல்.

உரை குழறுதலும், உரோம புளகம் பொலிதலும் அன்பு முதிர்ந்தபோது உளவாகும் மெய்ப்பாடுகளாம். **வீழ்ந்து** - அடியற்ற மரம் சாய்ந்து வீழ்வதுபோல் உடல் வசமற்று வீழ்ந்து.

பூண்டார் - அடிகளைக் கைகளாற்பற்றித் தலைபொருந்தவைத்து அணிந்து கொண்டார். "பொன்ன டிக்கம லங்களிற் பொருந்தமுன் வீழ்ந்தார்" (திருஞான - புரா - *671*); "புண்டரிகச் சேவடிக்கீழ்ப் பொருந்தநில முறவிழுந்தார்" (மேற்படி *729*), "சரண கமலம்பற்றி" (மேற்படி *730*) முதலியவை காண்க. *17*

1800. (இ-ள்.) மற்றவரை...எடுத்தருள - அவ்வாறு வீழ்ந்து திருவடி பூண்டுகிடந்த அப்பூதியாரைத் திருநாவுக்கரசர் தாமும் எதிர்வணங்கி அவரை எடுத்தருளவே; அருமறையோர் - அரிய வேதியராகிய அப்பூதியார்; அற்றவர்கள் அருநிதியம் பெற்ருற்போல் - வறியவர்களாயுள்ளோர் தேடிய பெருநிதியத்தைப் பெற்றது போல; முற்ற...பாடினுர் - மனமுழுதும் பெருமகிழ்ச்சி கூர்ந்து, அவர் முன்பு நின்று ஆனந்தக்கூத்தாடி மிகுந்த விருப்பத்துடனே அவரைச் சூழ்ந்து ஓடினுர்; பாடினுர்.

(வி-ரை.) முன் பாட்டிற் கூறியவை தமது மனத்தெழுந்த முயற்சியில்லாமலே தாமாகவே விளைந்த மெய்ப்பாடுகள்; Involuntary என்பர் நவீனர். இப்பாட்டிற் கூறியவை அறிந்து நிகழ்த்திய செயல்கள். **மற்று** - வினைமாற்றின்கண் வந்தது.

எதிர்வணங்கி - அவர் வீழ்ந்து வணங்கியதுபோலத் தாமும் அவரை வணங்கி, **எதிர்வணக்கமாவது** அவ்வணக்கம் போலத் தாமும் செய்தல். "**கழல் பணிய...பணியாமுன் பணியும்**" (1792) என்றது காண்க. முன்னர் நிகழ்ந்தவை ஒருவரை ஒருவர் முன்பு வடிவு காணுராயினும் அடியார் வேடம் என்ற மாத்திரையாற் செய்த பொது வணக்கம். இங்கு நிகழ்ந்தது ஒருவரிலொருவர் அன்பு விளங்கக் கண்டவிடத்துச் செய்த சிறப்பு வணக்கம்.

வணங்கி எடுத்தருள - கீழ்வீழ்ந்து வணங்கியவரை எடுத்தருளுவது முதற்காரியமாயிருக்க அதன் முன்பு எதிர்வணக்கத்தைச் செய்து பின் எடுத்தருளியது அன்புக்குத் தாழ்வது தலையாய கடமை என்ற உண்மை ஒழுக்கத்தில் நின்றமை குறித்தது.

அற்றவர்கள் - பொருளில்லாத வறியோர். **அருநிதியம்** - தாம் எவ்வகை யாற்றேடினும் பெறுதற்கரியதாயும் நிதியமெல்லாவற்றினும் அரியதாயும் உள்ளது. பெரும்புதையல் கண்டெடுத்தாற்போல. **உளம் முற்றக்களிகூர** - என்றது உள்ளம் எத்துணைக் களிப்புக் கொள்ளுமோ அத்துணையும் நிறைதல். இதனையே தமது வாழ்வின் பயனுகிய உறுதிப் பொருளாகக் கொண்டு அப்பூதியார் தவஞ் செய் திருந்தாராதலின், வாழ்க்கையின் பயன் கைகூடியபோது பெறவேண்டிய பேறு வேறின்மையின் அதுகாரணமாய் நிகழும் களிகூர்தலும் முற்றுப்பெற்றதாயிற்று.

முன் நின்று கூத்தாடி - ஆசையொடும் அரனடியா ரடியாரை யடைந்திட்டு.... கூசிமொழிந் தருண்ஞானக் குறியினின்று கும்பிட்டுத் **தட்டமிட்டுக் கூத்தாடித்** திரியே" (சித்தி - 12- 2) என்றது சாத்திரம். குருவருள் பெற்று, அணைந்தோர் தன்மையின் முற்றுப்பேறுடையராய்ச் சீவன்முத்த நிலையினை அடைந்தவர் அப்பூதியார் ஆதலின் தமது ஞான குருநாதரைக் கைவரப்பெற்றபோது அடியார் என்றும் குரு என்றும் இருதன்மையிலும் வைத்துத் திருநாவுக்கரசரை இறைவராகவே கண்டார். இறைவரருள் பெற்றபோது முன்பு நின்று செய்யும் ஆடுதல், பாடுதல் முதலியவை ஈண்டும் நிகழ்வனவாயின. "ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை யென்புருகிப் பாடுகின்றிலை" (திருவாசகம்) "மெய்விரவு பேரன்பு மிகுதியினா லாடுதலு, மவ்வியல்பிற் பாடுதலு மாய்நிகழ்வார்" (1055) முதலியவை காண்க.

உற்ற விருப்புடன் சூழ ஓடினார் - வலம் வந்தனர். ஆயின், வலம் வருவார் அதற்குரிய விதிப்படி அடியிட்டு மெல்ல நடந்து செல்லாமல் ஓடியது விருப்பமிகுதியினால் ஆகியது என்பார், உற்ற விருப்புடன் என்றார்; **உறுதல்** - மிகுதல்.

பாடினார் - நாயனாரது பெருமைகளையும், தாம் பெற்ற பேற்றினையும் பாட்டாகச் சொல்லுதலும், உவகை நிறைந்தபோது உள்ளங் கலந்து எழும் கீதம்பாடுதலுமாம். "திரண்டு திரண்டுன் றிருவார்த்தை விரிப்பார் கேட்பார் மெச்சுவார்" (திருவாசகம்). 18

1801. **மூண்டபெரு மகிழ்ச்சியினால் முன்செய்வ தறியாதே**
ஈண்டமனை யகத்தெய்தி யில்லவர்க்கும் மக்களுக்கும்
ஆண்டவர செழுந்தருளு மோகையுரைத் தார்வமுறப்
பூண்டபெருஞ் சுற்றமெலாங் கொடுமீளப் புறப்பட்டார், 19

1801. (இ-ள்.) மூண்ட.....அறியாதே - பெரு மகிழ்ச்சி மூண்டதனாலே முன்னர்ச் செய்யக் கடவ திது என்பதும் அறியாதவராகி; ஈண்டமனை அகத்து எய்தி - திருமனையின் உள்ளே விரைந்து சென்று; இல்லவர்க்கும்... உரைத்து மனைவியாருக்கும் மக்களுக்கும் வீட்டில் உள்ள ஏனைச் சுற்றத்தாருக்கும் ஆண்ட அரசுகள் எழுந்தருளும் உவகையைச் சொல்லி; ஆர்வமுற - ஆசை மிக; பூண்ட... புறப்பட்டார் - அன்பு பூண்ட அப்பெருஞ் சுற்றத்தார் எல்லாரையும் உடன்கொண்டு மீண்டு வெளியில் வந்தாராகி,

(வி-ரை.) பெருமகிழ்ச்சி மூண்டதனால் என்க. **மூண்டதனால் அறியாதே** என்பதாம். **முன் செய்வது** - மனைக்கடைத்தலையில் அணைந்து நிற்கின்ற அவரை உள்ளே எழுந்தருளச்செய்து ஆசனத் தமர்த்திப் பின் உபசரிக்க வேண்டிய முறைப்படி செய்வதற்கு முன்செய்யும் காரியங்கள். **முன்** - திருமுன்பு என்றலுமாம்.

அறியாதே - அவற்றைச் செய்யாது அவர் நின்றபடியே அங்குக் கடைத்தலையில் நிற்கும்படி விடுத்துத் தாம் மனையகத்து எய்தியதனால் அறியாது செய்தனர் என்பதாம். பத்தி முதிர்வின் மகிழ்ச்சியினுற் செய்யப்பட்டதாதலின் அஃது அபசாரமாகாது உபசாரமேயாயிற்று. "பத்தர் சொன்னவும் பன்னப் படுபவோ?" என்றது அவரது செய்கைக்குமாம்.

ஈண்ட - விரைவாக. அன்பு திரண்ட என்றுரைப்பாருமுண்டு. **மனையகத்து ஈண்ட எய்தி** என்க.

இல்லவர் - மனைவியார் அன்று மனையின்கட் குழுமியிருக்கும் பேறுபெற்ற சுற்றத்தாரையும் குறிக்க **இல்லவர்** என்றுர். **மனைவியாருடன்.... சுற்றத்தார்** (1802) என்று மேல்வரும்பாட்டில் இதனை இரட்டுறமொழிந்து கொண்டு விரித்தல் காண்க.

ஓகை - உவகை என்பது ஓகை என நின்று, உவகையாகிய செய்திக்கு வந்தது.

ஆர்வமுற - ஆர்வமுற உரைத்து என்றும், ஆர்வமுறக்கொ(ண்)டு என்றும், ஆர்வமுறப் புறப்பட்டார் என்றும் கூட்டி உரைக்க நின்ற இடைநிலைத் தீபம்.

பூண்ட பெருஞ் சுற்றம் - பூண்ட - அன்பு பூண்ட. **பெருஞ் சுற்றம்** - பெருமையாவது அப்பூதியாரது அன்பும் தம் அன்பும் ஆதரவுபட வந்து சுற்றிச் சூழ்தல். நாயனுர் எழுந்தருளும் பெரும்பேறு வாய்க்கப்பெற்ற அத்திருநாளில் அங்கிருக்கப் பெறுதலும் குறிப்பு. **சுற்றம் எலாம்** - சுற்றம் என்றது ஈண்டு மனைவியார் மக்கள் முதலிய அனைவரையும் குறித்தது. **எலாம்** என்றது தாதியர் ஏவலர் முதலிய அனைவரும் என்று பொருளும் தந்து நின்றது. "மனைவியாருடன்...**அனைவரையும்**" என்று மேல்வரும் பாட்டிற் கூறுதல் காண்க.

மீளப் புறப்பட்டார் - மனையினுட் புக்கவர் மீள வெளியில் வந்தார். **புறப்படுதல்** - புறத்தின் வருதல். **மீள** - முன்னர் "நங்கள்பிரான் றமரொருவர் எனக்கேட்டு நண்ணினுர்"

1802. மனைவியா ருடன்மக்கண் மற்றுமுள்ள சுற்றத்தோர்
அனைவரையுங் கொண்டிறைஞ்சி யாராத காதலுடன்
முனைவரையுள் ளெழுந்தருளு வித்தவர்தாண் முன்விளங்கும்
புனைமலர்நீர் தங்கண்மேற் றெளித்துள்ளும் பூரித்தார். 20

(*1791*) என்றது முதன்முறை மனையினின்றும் புறப்பட்டது. அது பொதுவகையால் அடியார் ஒருவரைக் காணப் போந்தது. இப்போது மீண்டும் போந்தனர் - இது சிறப்பு வகையாற் போந்தது. **மீள** - அரசினது திருவருள் பெற்று இப்பிறவியின்று மீட்சி பெற்று, "மான்மறிக் கையர் பொற்றுள்" பெறும் பேறு வாகீசரடைவாற் பெறுதற்கு (*1827*) என்ற குறிப்பும் காண்க. **புறப்பட்டாராகி - இறைஞ்சி** எனமேல்வரும் பாட்டினுடன் கூட்டுக. முற்றெச்சம். செய்யுளின் தொடர்ச்சி நோக்கி எச்சமாக்கி உரைக்கப்பட்டது. *19*

1802. (இ-ள்.) மனைவியாருடன்...இறைஞ்சி - மனைவியாருடன் மக்களும் மற்றும் உள்ள சுற்றத்தார்களும் முதலிய எல்லாரையும் கொண்டுவந்து வணங்கி; ஆராத காதலுடன் - தணியாத ஆசையோடு; முனைவரை.... பூரித்தார் - தலைவராகிய வாகீசரை உள்ளே எழுந்தருளச்செய்து முன் அவருடைய பாதங்களை விளக்கும் மலர்களிட்ட பாத்திய நீரைத் தங்கள்மேல் தெளித்துக்கொண்டு அத்தீர்த்தத்தை உள்ளேயும் நிறைத்தனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண் டுரைக்க நின்றன.

(வி-ரை.) மனைவியாருடன் - தம்மோடு ஒத்த பங்கு உடையவராதலானும், சுற்றத்துள் முதன்மை பெறுவாராதலானும், மனையின் வாழ்க்கைக்குரிமை யுடையவராதலின் நாயனாரை உபசரிப்பது அவர்பாலதே யாதலானும் அச்சிறப்புக்களை உணர்த்த முதற்கண் வைத்து ஓதியதுமன்றி, **உடன்** என்ற உருபையும் சார்த்தி ஓதினர். பின்னர்ச் சரித நிகழ்ச்சியினும் அரவினால் மகன் வீந்ததனை மறைத்து நாயனாரைத் திருவமுதூட்ட நினைந்து செய்த அன்பின் திறம் அப்பூதியர்பால் நின்றது போலவே மனைவியாரிடத்தும் நிறைந்து நிற்க உள்ளதும் குறிப்பு. அவர் திறம் அவ்வாறமையாவிடின் இச்சரித விளைவுக்கு ஏதுவில்லையாகு மென்பதும் உணர்க.

மக்கள் - "நிறைகோன் மக்கள்" (*1784*); "சேயவர் தம்மின் மூத்த" (*1805*); "இவர்க்கு மூத்த சேயையும் காட்டுக" (*1814*); "பிள்ளைகளுடனே நோக்கி யரும்புதல் வர்களும்" (*1822*); "மைந்தரும்" (*1823*); முதலியவற்றால் அப்பூதியார்க்கு மக்கள் பலரிருந்தனர் என்பதுணரப்படும். இவர்களுள் பெண் மக்களுமுண்டோ என்று ஈண்டு வேண்டப்படா ஆராய்ச்சியிற்புகும் ஆராய்ச்சியாளருமுளர்.

அனைவரையும் - சுற்றத்தோர் அனைவரையும் என்றும், மக்களும் சுற்றத்தோர்களும் ஏனை ஏவலர் முதலிய அனைவரையும் என்றும் உரைக்க நின்றது. தாதியர் ஏவலர் முதலியோரும் திருத்தொண்டிற் கலந்த வரலாறுகள் மெய்ப்பொருணயனார் புராணம், சிறுத்தொண்ட நாயனார் புராணம் முதலியவற்று லறியலாம்.

கொண்டு இறைஞ்சி - கூட அழைத்துக்கொண்டு போந்து எல்லாருமாகக் கூடிப் பணிந்து.

1803. ஆசனத்திற் பூசனைக ளமர்வித்து, விருப்பினுடன்
வாசநிறை **திருநீற்றுக் காப்பேந்தி, மனந்தழைப்பத்**
தேசமுய்ய வந்தவரைத் திருவமுது செய்விக்கும்
நேசமுற விண்ணப்பஞ் செய, வவரு மதுநேர்ந்தார். 21

முனைவர் - முதல்வர் - தலைவர்.

தாள் முன்விளக்கும் புனைமலர் நீர் - தாள் விளக்குதல், கை விளக்குதல், வாய்பூசுதல் என்றிவைகட்குத் தரப்படும் நீர். இவை பாத்தியம் ஆசமனம் அர்க்கியம் என்று பூசை முறையிற் பெயர்பெறும். **முன்** - இவற்றுள் முதலிற் றரப்படும் நீர்பாதம் விளக்குவது பாத்தியம் என்பது.

மலர்புனை நீர் என்க. இறைவருக்கும் பெரியோர்க்கும் பாத்திய முதலியவற்றுக்குப் பயன்படும் நீரில் புதிய மலர்களையும் வாசனைப் பண்டங்களையும் இட்டு மந்திரித்துப் பண்பு செய்தல் மரபு.

தங்கண்மேல் தெளித்து உள்ளும் பூரித்தார் - திருவடி விளக்கியது புனித தீர்த்தமாதலின் அதுகொண்டு தமது உள்ளும் புறம்பும் தூய்மையாக்கிக் கொண்டனர் என்க. **பூரித்தல்** - நிறைவித்தல்.

புனைமலி நீர் - என்பதும் பாடம். 20

1803. (இ-ள்.) ஆசனத்தில்... அமர்வித்து - ஆசனத்தில் எழுந்தருளுவித்துச் செய்ய வேண்டிய அருச்சனை தூப தீபம் முதலியவற்றை விதிப்படி விரும்பிச் செய்து; விருப்பினுடன் - மிக்க விருப்பத்துடனே; வாசநிறை திருநீற்றுக் காப்பு ஏந்தி - வாசமிக்க திருநீற்றுக்காப்பு நிறைந்த திருநீற்று மடக்கை அவர்க்கு உபசாரமாக அவர் திருமுன் ஏந்தி; மனம் தழைப்ப - மனம் தழைத்தோங்க; தேசம் உய்ய..நேசமுற - உலகம் உய்யும்படி திருவவதாரம் செய்த நாயனாரைத் திருவமுது செய்விக்கும் அன்பு மீக்கூர; விண்ணப்பம்...நேர்ந்தார் - அவர்பால் விண்ணப்பஞ் செய்தார்கள்; அவரும் அதற்கு இசைந்தருளினார்.

(வி-ரை.) ஆசனத்தில் பூசனைகள் அமர்வித்து - ஆசனத்தில் என்றது பூசை முறையில் முதலில் செய்யப்படும் அங்கமாகிய, ஆசனங்கற்பித்து உரிய மந்திரம் பாவனைகளால் மூர்த்தியை அந்த ஆசனத்தில் எழுந்தருளச் செய்யும் முறை குறித்தது. "கொண்டு வந்து மனைப் புகுந்து குலாவு பாதம் விளக்கியே, மண்டு காதலினாத னத்திடை வைத்த ருச்சனை செய்தபின்" (*443*); "கதுமெனக் கணவனாரைக் கண்ணுதற் கன்ப ரோடும் விதிமுறை தீப மேந்தி" (*951*) என்றவிடங்களில் உரைத்தவையெல்லாம் ஈண்டுக்கொள்க. **பூசனைகள்** - தூபம் தீபங்கள் காட்டுதல் அருச்சித்தல் முதலாக மாகேசுர பூசைக்கு விதித்தவை. **அமர்வித்தல்** - விருப்பத்துடன் அமையச் செய்தல்.

விருப்பினுடன் - அமர்வித்தல் என்றும், **விருப்பினுடன் ஏந்தி** என்றும் முன்னும் பின்னுமாகக் கூட்டியுரைக்க நின்ற இடைநிலைத் தீபம்.

வேறு

1804. செய்தவ ரிசைந்த போது திருமனை யவரை நோக்கி
"**யெய்திய பேறு நம்பா லிருந்தவா றென்னே!**" யென்று
"மைதிகழ் மிடற்றி னுன்ற னருளினுல் வந்த தென்றே,
"**யுய்து**"மென் றுகந்து கொண்டு திருவமு தாக்க லுற்ருர். 22

வாசநிறை திருநீற்றுக் காப்பு ஏந்தி -திருநீற்று மடக்கை ஏந்துதல். உபசாரங்களுள் ஒன்று. **நீற்றுக் காப்பு** - அதனைக் கொண்ட மடலுக்கு வந்தது. **காப்பு** - அணிந்தவரை இரட்சிப்பதனுற் போந்த பெயர்; இரட்சை என்னும் பெயரும் காண்க. **வாசம்** - இயல்பாய்த் திருநீற்றிற்குரிய மணம். அதனுள் இடப்படும் புனுகு, பசுங் கற்பூரம் முதலியவற்றின் மணம் என்றலுமாம்.

மனந்தழைப்ப - நேசமுற என்க. மனந் தழைத்தலாவது பெருப்பேறு பெற்றதனுல் மனமகிழ்ச்சி மிக்கோங்குதல். **நேசம்** - விருப்பம்.

நேர்தல் - இசைதல். அவர் இசைதல் அருமையாதலின் **விண்ணப்பஞ் செய்ய** என்று கூறி, இவரது அன்புக்குட்பட்டு இசைந்தமை குறிப்பித்தார். வரும் பாட்டும் பார்க்க. *21*

1804. (இ-ள்.) செய்தவர் இசைந்தபோது - தவத்திற் பெரியோராகிய திருநாவுக்கரசர் இசைந்தபோது; திருமனையவரை....என்னே என்று - திருமனைவியாரை நோக்கி அப்பூதியார் "நம்மிடத்துப் பொருந்தியபேறு இருந்தவாறுதான் என்னே!" என்று கூறிப், பின்னும்; மைதிகழ்....உய்தும் என்று உவந்துகொண்டு - விடம் விளங்கும் கண்டத்தையுடைய சிவபெருமானது திருவருளினுல் இது வந்ததென்று போற்றியே "நாம் உய்தி பெறுவோமாக" என்று தம்மில் மகிழ்ந்து கொண்டு; திருவமுது ஆக்கல் உற்ருர் - திருவமுதினை அமைக்கத் தொடங்கினுர்.

(வி-ரை.) செய்தவர் - தவஞ்செய்தவர் என்க. செய்தவத்தின் பேருகப் பெறப்பட்டவர் என்றலுமாம்.

இசைந்தபோது எய்திய பேறு - இருந்தவாறு - திருவமுது செய்ய இசைந்ததனைப் பெரும் பேருகக் கருதினர். **எய்திய பேறு இருந்தவா** - என்றதனுல், எய்தியது ஒரு பேறும், அமுது செய்ய இசைந்திருந்தது அதன்மேல் மற்றுமொரு பேறுமாக என்ற குறிப்புத் தரப்பட்டது.

மைதிகழ்..உய்தும் - இப்பெரும் பேறுகள் தாம் ஒரு சிறிதும் எதிர்பாராத நிலையில் பெற்றபடியினுல் திருவருளாலன்றி இவற்றைப் பெற இயலாதென்று சிவனருளை வழுத்தி யுய்வோம் என்றபடி. தாம் பல நாளும் தியானித்ததன் பயனுக இப்பேறு பெறலாயிற்று என்னும் தற்போத முனைப்புச் சிறிதும் இல்லாதவராதலின் சிவனருளால் வந்ததென்றே யுய்தும் என்ருர். (அரசுகள்) தமக்கு அருட்பெருமை உளதாயிற்று என்றும், தமது பெருமையை உலகறிந்தமையால் தம் பெயரால் அறங்கள் செய்யப்பட்டன என்றும், தற்போதம் சிறிதும் இல்லாது தமது பெயரை எழுதின காரணம் வினவிய திருநாவுக்கரசு

1805. தூயநற் கறிக ளான வறுவகைச் சுவையா லாக்கி
யாயவின் னமுது மாக்கி, யமுதுசெய் தருளத் தங்கள்
சேயவர் தம்மின் மூத்த திருநாவுக் கரசை "வாழை
மேயபொற் குருத்துக்கொண்டு வா"வென விரைந்துவிட்டார். 23

நாயனுரைப் போலவே, அவரைத் தியானப் பொருளாய்க்கொண்டு தாம் செய்த தவத்தின் பயனுக நாயனுர் தாமாகவே வந்து கிடைக்கப்பெற்றனர் என்று தற்போத நினைவு சிறிதுமிலராயினர் அப்பூதியார்; அதனுல் **திருவருளால் வந்ததென்று கொண்டனர். தவம் தானே பலன் றராது; செய்த தவத்தின் பயனை இறைவர் கூட்டுவித்தல் வேண்டும் என்ற ஞானசாத்திர உண்மை இங்கு உய்த்துணரக் கிடப்பதும் காண்க.** "செய்வினையு மதன்பயனுஞ் சேர்ப்பானும்" (சாக் - புரா) என்ற நுட்பம் கருதுக. "செய்தவ ரிசைந்த" என்று இத்திருப்பாட்டினைத் தொடங்கிக் காட்டிய குறிப்பும் இது. **வந்ததென்றே** என்ற பிரிநிலை ஏகாரமும் இக்குறிப்பு.

உவந்து கொண்டு - தாமும் மனைவியாரும் மனமுவந்த மகிழ்ச்சியால் நிறைந்து பாராட்டிக்கொண்டு.

திருவமு தாக்கலுற்ருர் - திருவமுது அமைத்தலில் இருவரும் தத்தமக் கேற்ற செயல்களைச் செய்தனர் என்பது. இளையான்குடிமாறர் புராணம் ஈண்டுச் சிந்திக்கற்பாலது. **திருவமுது** - ஈண்டு உணவுவகை முழுதும் குறித்து நின்றது. மேல்வரும் பாட்டுப் பார்க்க.

உய்தும் - உய்ந்திடுவோம், உய்வோமாக. மேற்சரித விளைவும் குறிப்பு. 22

1805. (இ-ள்.) தூய....ஆக்கி - தூய்மையுள்ள நல்ல கறி வகைகளை ஆறு சுவைகளும் பொருந்தும்படி சமைத்து; ஆய இன் அமுதும் ஆக்கி - ஆகிய இனிய திருவமுதினையும் சமைத்து; அமுது செய்தருள - அமுது செய்தருளுதற்குரிய பரிகலத்துக்காக; தங்கள்...திருநாவுக்கரசை - தம் மக்களுக்குள்ளே மூத்த திருநாவுக்கரசினை நோக்கி; "வாழை....வா"வென - "வாழையின் நல்லதொரு குருத்தை அரிந்துகொண்டு வா" என்று சொல்லி; விரைந்து விட்டார் - விரைவுபடுத்தி ஏவிவிடுத்தனர்.

(வி-ரை.) தூயநற் கறிகள் ஆன - தூயகறிகளாவன தூய நிலத்தில் விளைந்தவை; தூய்மையற்ற எரு - நீர் முதலியவற்ருல் விளைக்கப்படாதவை; அசுத்தமாகிய கொள் கலங்களிற் சேர்க்கப்படாதவை என்றிவ்வாறு சார்வன. **நற்கறிகளாவன** தாமத முதலிய குணபேதங்களை விளைக்காதவை, வாத பித்த ஐப் பகுதிகளுக்கு ஒவ்வாது நோய் செய்யாதவை, இலகுவில் சீரணிக்கத்தக்கவை, என்றிவ்வாறு உடற் சுகத்துக்கும் அறிவு விளக்கத்துக்கும் ஏதுவாயின கறிகள். **ஆன** - அத்தகையன பலவற்றுள்ளும் அந்த இடத்துக்கும் காலத்துக்கும் உண்பவர்க்கும் பொருத்தம் ஆயினவை.

அறுவகைச் சுவை - இனிப்பு - கார்ப்பு - புளிப்பு - உவர்ப்பு - துவர்ப்பு - கைப்பு என்பது. "உண்டி நாலு விதத்தி லாறு சுவைத்தி றத்தினில்" (443).

1806. **"நல்லதாய் தந்தை யேவ நானிது செயப்பெற் றே"**னென்
றெல்லையில் விரைந்து தோட்டத் துள்புக்குப் பெரிய வாழை
மல்லலங் குருத்தை யீரும் பொழுதினில் வாள ராவொன்
றல்லலுற் றழுங்கிச் சோர வங்கையிற் றீண்டிற் றன்றே. 24

ஆய இன் அமுது - ஆய - உணவினுள் முதலாகிய. **இன் அமுது** - செந்நெல் அரிசியினுலாயது. **அமுது** - பசியாற் சாவாமற் காப்பது. **தேவரமுதும்** இக்காரணத்தால் அப்பெயர் பெற்றது. இதுபற்றித் தேவாமிர்தம்போல்வதென உபசரித்துக் கூறப்படும். தேவாமிர்தத்துக்கும் அப்பெயர் உபசாரமேயாகும். சிவன் ஒருவரே அமுதமாவார்; என்றும் அழியாத அமுதமாவார். சுடுகை மாருது புதிதாய் இருத்தற் பொருட்டு கறிகளை முன்னரும் அமுதினைப் பின்னரும் சமைத்துவைக்கும் முறை குறிக்கக் கறிகளின்பின் அமுதமாக்கி என்று வைத்தோதினர். பரிகலத்திற் படைக்கு முறையும் காண்க.

அமுது செய்தருள - திருநாவுக்கரசு நாயனுர்அமுது செய்தற்குரிய பரிகலமாக.

சேயவர் - ஆண்மக்கள். **மூத்த திருநாவுக்கரசு** - மக்களுள் மூத்தவர்.

வாழை மேய பொற் குருத்து. "குருநாளக்குருத்து" (*1469*) என்றவிடத்துக் குருத்தின் பெருமையும், நீளமும், முற்றியும் மிக முற்ருமலும் இருக்கும் நிலையும் கூறப்பட்டன. ஆதலின் இங்கு அதன் அழகும் பொன்னிறமும் மட்டும் குறிக்கப்பட்டன. முதல் வாழையின் குருத்தே இத்தகைய தன்மைகளுடனிருக்கும். ஆயின் முதல் வாழையின் இலையை அரியின் பலன் குறையுமென்று உலகர் கொய்யமாட்டார். இங்கு அப்பூதியார் அவ்வாறு முதல்வாழை இலை அரியச் சொன்னமை அது பெற்ற பயனடைகிருேமென்ற கருத்து. இத்தன்மைகளை ஈண்டு விரிக்கவைக்காது முன் விரித்தது என்னையோ? எனின், மகனுக்கு இத்தன்மையுள்ள குருத்து அரிந்து வருக என அறிவுறுத்தி ஏவுதல் ஆண்டுக்கூறும் அமைதி பற்றி என்க.

விரைந்து வாவென விட்டார் என்க. ஆவல்மிகுதியால், தாயாரும் தந்தையாரும் மகனை ஏவிவிடுதலினும், அவன் மீண்டு வருதலினும், இருபாலும், விரைவு காணும் அமைதிபற்றி, **"விரைந்து"** என்பதனை விரைந்துவா என்றும், விரைந்துவிட்டார் என்றும் இருபாலும் கூட்டி யுரைக்குமாறு வைத்தார். வரும் பாட்டிலும் "விரைந்து புக்கு" என்பது காண்க. *23*

1806. (இ-ள்.) நல்ல..என்று - "நல்ல தாயும் தந்தையுமாகிய இருவரும் ஏவ, அதன்படி நான் இந்தத் திருப்பணியைச் செய்யும் பேறு பெற்றேன்" என்று மூத்த திருநாவுக்கரசு உள் மகிழ்ந்து; ஒல்லையில்....புக்கு - மிக விரைவில் சென்று தோட்டத்தினுள்ளே புகுந்து; பெரிய...பொழுதினில் - பெரிய வாழையின் செழிப்பாகிய அழகிய குருத்தினை அரியும்போது; வாளரா...அன்றே - ஒளியுடைய பாம்பு ஒன்று துயரமுற்று மயங்கி வீழும்படி அவனது அங்கையில் அப்போதே தீண்டிற்று.

(வி-ரை.) நல்ல....என்று - இது மூத்த திருநாவுக்கரசு தனக்குள் எண்ணி மகிழ்ந்துகொண்டு பணியிற் புகுந்த நிலை. **நல்ல** - நன்மை தருகின்ற - செய்கின்ற; நன்மை

செய்கின்றவர்களாதலின் என்னை இப்பணியில் ஏவி வழிப்படுத்தினர் என்பது குறிப்பு. **தாய் தந்தை** - மக்களை நல்வழிப்படுத்தும் கடமை தாய் தந்தையாரிடத்து முதலில் முன்னிற்பது; அவருள் தாய் முதற்கண் நிற்பவர் என்பது. "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பது நீதி நூல்; **ஏவ** - "ஏவா மக்கள் மூவா மருந்து" என்பது நீதி நூலாயினும் அது பொது விதி. ஈண்டு மக்கள் பலருள்ளும் காலமும் இடமும் தகுதியும் பிறவும் அறிந்து அவ்வவர்க் கேற்றபடி பணித்தல் தாய் தந்தையர் பாலதே யாதலும் அவர் ஏவலை எதிர்நோக்கி அவ்வழி நிற்றல் மக்கள் கடனாதலும் குறிக்க **ஏவ** என்றார்; **நான்** - மக்கள் பலருள்ளும் நானே இப்பணி பெற்றேன்; "அத்தனெனக் கருளியவா றார்பெறுவாரச்சோவே" என்றபடி உயர்வுடைய இறுமாப்பு; இது "**நான்**" என்றெழும் ஆணவ இறுமாப்பன்று; அவ்வாறன்றி அடிமையிற் சிறப்புடைமைபற்றி இறுமாத்தல் ஆணவத்தை வலியற்றதாகச் செய்யும்; **இது** - திருஅமுதுக்குப் பரிகலம் தேடிக் கொணர்தல் என்ற இப்பெரும் பணி; திருவமுது வகை எத்துணை உயர்வேயாயினும் அதற்கு ஏற்ற ஆசனமாகவும் ஆதாரமாகவும் உதவுவது பரிகலமேயாம். பூசைமுறையில் ஆசனமந்திரம் முதலில் வரும் கருத்தும் காண்க. "அமுது செய்தருள" (*1805*), (*1469*), (*1470*) என்பனவும் இதன் இன்றியமையாமையினையும் ஏற்றத்தையும் குறிப்பன. **செயப் பெற்றேன்** - பெரும்பேறு என்பது. - என்றிவை பலவும் கருதித் தன்னையே மகிழ்ந்து பணியிற் புகுந்தனன் என்ற நயமும், இதனால் அப்பூதியாரே யன்றி அவர் மக்களும் சுற்றமும் நின்ற அன்பு நிலையும் கருதுக.

ஒல்லையில் விரைந்து - ஒருபொருட் பன்மொழி மிகுதி குறித்தது.

தோட்டத்துள் - இது சோழ நாட்டிற் காணப்படும் அமைதியாக மனையை அடுத்து உள்ளது. இதனால் பரிகலக் குருத்து வாடுதலின்றிப் புதிதாய் இருக்கவேண்டுமென்ற கருத்துப்பற்றித் திருவமுது ஆக்கியபின் குருத்துக் கொண்டுவரவிட்டனர் என்பது கருதப்படும்.

பெரிய வாழை மல்லல் அம் - குருத்து - "குருநாளக் குருத்து" (*1469*) என்றதனை விரித்தபடி காண்க. முன் சொல்லியது தாய் தந்தையர் குறிப்பின் ஏவியதும், ஈண்டுக் கூறியது அதனை அதனின் மேலாய் மகன் நிறைவேற்றியதுமாம்.

வாள் அரா ஒன்று - வாள் - ஒளி - வாள் போன்று துன்பம்செய்து வதைப்பது என்றலுமாம். "சுடர்விடு நாகம்" (தேவா), "புற்றில்வா ளரவு மஞ்சேன்" (திருவா). அரவுக்கு ஒளியாவது கண்களினின்று வீசும் விடத் தன்மையுடைய ஒளி ஒன்று; "கண்ணெரி காந்துகின்ற பையரவு" (*1807*); இலங்கையில் உள்ள "திருஷ்டி விட"முடைய பாம்பு வகையினையும் காண்க. இனி, விடப் பல்லின் கூரிய வொளி மற்றொன்று; "கடுவோ டொடுங்கிய தூம்புடை வாலெயிறு" (முருகு); "அரவின் வாயின் முள்ளெயி றேய்ப்ப வரும்பீன்று குரவம்பாவை முருகமர் சோலைக் குற்றாலம்" (பிள். தேவா); இவையன்றி அரவுகளின் உடலில் பன்னிறமுடைய மேல் கீழ்த்தோலின் ஒளி மேலும் ஒன்று; மணிகளின் ஒளியும் குறிப்பு.

அல்லல் உற்று அழுங்கிச் சோர - விரைந்து ஏவப்பட்டுப் புக்கு அறிந்த மூத்த திருநாவுக்கரசு என்ற எழுவாய் மேம்பாட்டினின்றும் வருவிக்க; மேல்வரும் மூன்று பாட்டுக்களினும் இவ்வாறே எழுவாய் வருவித்துக் கொள்ள.

1807. கையினிற் கவர்ந்து சுற்றிக் கண்ணெரி காந்து கின்ற
பையரா வுதறி வீழ்த்துப் பதைப்புடன் "பாந்தள் பற்றும்
வெய்யவே கத்தால் வீழா முன்னம்வே கத்தா லெய்திக்
கொய்தவிக் குருத்தைச் சென்று கொடுப்பனென் றோடி வந்தான்; 25

அங்கையில் - குருத்தினை அரிந்த கையினில். குருத்தினைப்பற்றி அரியலுற்ற போது அவ்விடத்துத் தங்கிய அரவு கையினில் தீண்டுதல் இயல்பு. வாழைக் குருத்துக்களுள் இவ்வாறு சேரும் விடப்பிராணிகளின் தீமையும் நீங்கும் பொருட்டுப் பரிகல இலைகளை முன்னர் நீரால் கழுவியிடும் மரபு வழங்குவதாம். "நீரால் - விளக்கி" (*1821*) என்பது காண்க.

தீண்டிற்று - அரவு கொத்திக் கடித்தலுக்கு வழங்கும் மரபு வழக்கு.

அன்றே - அப்பொழுதே; அசை என்றுரைதுக்குவாறுமுளர்.

ஒல்லையிலணைந்து - அழுங்கி வீழ - என்பனவும் பாடங்கள். *24*

1807. (இ-ள்.) கையினில்....வீழ்த்து - கையினில் தீண்டிக், கையினையே சுற்றிக்கொண்டு கண்களில் எரியினை வீசுகின்ற நச்சுப்பையினையுடைய அந்த அரவைக் கையினை உதறி வீழ்த்திவிட்டு; பதைப்புடன் - உளம் மிகு பதைப்புடனே; "பாந்தள்....கொடுப்பன்" என்று - "பாம்பு தீண்டியதாலுளதாகிய கொடிய வேகத்தினால் நான் விழுவதற்குமுன்பே மிக வேகத்தாற்சென்று, அரிந்த இந்தக்குருத்தினைச் சென்று, கொடுப்பேன்" என்று தீர்மானித்து; ஓடிவந்தான் - ஓடிவந்தனனாகி;

(வி-ரை.) கையினில்...வீழ்ந்து - கையினில் தீண்டிய பாம்பு அதனோடு அமையாது கையினைச் சுற்றிக்கொண்டு கண்களில் கோபத்தீக் காலும்படி இருந்தது; **காந்துதல்** - தீயின் வெப்ப உணர்ச்சி அணிமையில் உள்ளார்பால் தாக்கும்படி வீசுதல்; **கண் எரி காந்துதலாவது** - கண்ணினின்றும் கோபத்தீயின் வெப்பம் தீக்காற்றுப்போலக் கொழுந்துவிட்டு வெளிவீசுதல். அந்தப் பாம்பு தன்னை ஊறு செய்ய முயன்றான் என்று நினைந்து அக்கோபத்தால் தீண்டினதுட னில்லாது கையினையும் சுற்றிக்கொண்டது. அதனோடு அக்கோபம் தணியாது மிகுந்து கண் எரிவீச நின்றது. தற்காப்புப் பயத்தாற் கோபத்தாலன்றிப் பாம்புகள் தீண்டி ஊறு செய்யா. அவற்றின் நச்சுப்பற்கள் தம்மியல்பில் மேல்வாயுடன் மடங்கிக் கிடப்பனவாதலின் கடிக்கும் இயல்பில்லாதவை. அச்சமும் சினமும் வந்தபோது அவை நிமிர்ந்துவிடும்; அப்போது குழாய் போல உள்ள அவற்றின் உட்டுளையின் வழி அவற்றின் அடியில் இருக்கும் நச்சுப்பையினின்றும் விடத்தைக் கூரிய பல்லினால் கொத்தி, உடம்பில் ஊறுபடுத்தி, அந்த ஊற்றின் வழி உடம்பிலுள் இரத்தத்தினுள் புகுந்து கலக்கும்படி உகுத்துவிடும். இது விடப்பாம்பின் பொது இயல்பு. தீண்டிய மட்டில் அகலாது சுற்றிக்கொள்ளுதல் ஒருவகை நச்சுப் பாம்புகளின் சிறப்பு இயல்பு.

பை அரவு - பையினை உடைய - நச்சுப் பாம்பு. **பை** - நச்சுப் பை. "பையஞ் சுடர்விடு நாகப்பள்ளி" (தேவா).

உதறி வீழ்த்துதல் - சுற்றிக்கொண்ட பாம்பினால் மேலும் தீங்கு விளையாமல் அகற்றும் உபாயம். உதறுதலின் விசையினால் வழுவழுப்பான அதன் உடல் நழுவி விழும்.

1808. பொருந்திய விடவே கத்திற் போதுவான் வேக முந்த
வருந்தியே யணையும் போழ்து,"மாசுணங் கவர்ந்த தியார்க்கும்
அருந்தவ ரமுது செய்யத் தாழ்க்கயா னறையே"னென்று
திருந்திய கருத்தி னேடு செழுமனை சென்று புக்கான்; 26

பதைப்பு - சடுதியில் சேர்ந்த அபாயத்தால் நிகழும் உடல் நடுக்கமாகிய மெய்ப்பாட்டுடன் கூடிய மனநடுக்கம். **பதைப்புடன் ஓடிவந்தான்** என்று கூட்டுக. **பாந்தள் பதைப்புடன் பற்றும்** என்று பாம்பின் செயலுக்கு கூட்டியுரைக்கவும் நின்றது.

பாந்தள் - பாம்பு. **பற்றும்** - தீண்டும். **பற்றும் வேகம்** - என்றது பற்றியதால் உளதாகும் விட வேகம்.

வேகத்தால் எய்தி - விரைந்து செல்லும் வேகத்தினுற் சேர்ந்து. "விடவேகத்திற் - போதுவான் வேகம் முந்த" என இதனை மேல் உரைப்பது காண்க. இங்குக் கூறியது மனத்துணிபு. மேல் உரைப்பது அதனைச் செயலில் நிகழ்த்துவது.

கொய்த - என்று இறந்த காலத்தாற் கூறியவதனுல் குருத்தரிந்த செய்கை முன்னர் முடிந்தமையும் கூறியபடி. குருத்தை ஈரும்போது அரவு கையில் தீண்டியதாயினும் அதனுல் அம்முயற்சியினைக் கைவிட்டுவிடாது, நிறைவேற்றி முடித்தான் என்பது குறிப்பாற் கூறப்பட்டது. இதனுனும் இப்பாட்டிற் கூறிய "சென்று கொடுப்பன்" என்ற மனத்துணிபானும், மேல்வரும் பாட்டிற் கூறுமாறு அதனைச் செயலில் நிறைவுபடுத்திய வகையானும் **மகனது வீரமும் மனத் திண்மையும் வினைத்திட்பமும் அன்பின் உறைப்பும் உணர்த்தப்பட்டமை காண்க.**

சென்று கொடுப்பன் - விடவேகத்தினையும் தான் செல்லும் வேகத்தினையும் சென்று சேரும் தூரம் நேரங்களையும் துணிந்து கூறிய மன உறைப்பு.

வீழாமுன் - விடவேகத்தால் தான் வீழ்த்தப்படுவது உறுதி யென்று துணிந்து மேற்செயலை நிச்சயித்தனன் என்க.

பையரா - என்பதும் பாடம். 25

1808. (இ-ள்.) பொருந்திய....முந்த - சேர்ந்த விடத்தின் வேகத்தினும், முன் சொல்லியவாறு ஓடிச்செல்கின்ற அவனுடைய வேகம் முந்தும்படி; வருந்தியே அணையும் போழ்து - வருத்தத்துடனே அணைகின்றபோது; "மாசுணம்....அறையேன்" என்று - "பாம்பு தீண்டிய செய்தியினை அருந்தவராகிய திருநாவுக்கரசர் திருஅமுது செய்வதற்கு இடையூறுகும்படி, நான் யாரிடமும் சொல்ல மாட்டேன்" என்று உட்கொண்டு; திருந்திய...புக்கான் - திருத்தமுற்ற கருத்தினுடனே செழிப்புடைய மனையின் கண்ணே சென்று புகுந்தனனுகி;

(வி-ரை.) பொருந்திய - அரவம் தீண்டியதனுற் றன்பால் வந்து சேர்ந்த இவர்க்கிது பொருந்தாதாயினும் குருவருள் வெளிப்பாடுற்றுப் பொருந்து தற்காக வந்து பொருந்திய என்பது குறிப்பு. **விடம் பொருந்திய வேகம்** என்று கூட்டியுரைத்தலுமாம்.

1809. எரிவிட முறையே யேறித் தலைக்கொண்ட வேழாம் வேகந்
தெரிவுற வெயிறுங் கண்ணு மேனியுங் கருகித் தீந்து
விரிவுரை குழறி யாவி விடக்கொண்டு மயங்கி வீழ்வான்
பரிகலக் குருத்தைத் தாயார் பால்வைத்துப் படிமேல்வீழ்ந்தான். 27

விடவேகத்தின் - வேகத்தினும். **இன்** - எல்லைப் பொருளில் வந்த ஐந்தனுருபு, **முந்த** - விடவேகத்தினும் போதும் வேகம் முற்பட; மிகுதியாக; இதற்குப் பிறர் வேறுரைத்தார்.

முந்த வருந்தியே - முந்துதலினால் வருத்தமுற்று - அஃதாவது வேகத்திற் செல்வதனால் இரத்தவோட்டம் மிகுதிப்பட அதனுட் கலந்த விடத்தின் கொடுமையால் வருத்தமும் மிகுதிப்பட.

அணையும் போழ்து...என்று - செல்கின்ற காலத்தில் இவ்வாறு எண்ணிக் கொண்டு, செல்லத் தொடங்கியபோது வீழுமுன் வேகமாய்ச் சென்று கொடுப்பேன் என்று துணிந்து ஓடத்தொடங்கினான்; ஓட்டத்தினால் வருத்தம் மிகுந்தது; அப்போது "இதனை ஒருவருக்கும் சொல்லமாட்டேன்" என்று எண்ணிக் கொண்டே சென்றனன்.

திருந்திய கருத்து - திருத்தமாவது - யான் இதனை அறைந்தால் அதுபற்றித் தீர்வுதேடப் பெற்றோர் முதலியவர் முயல்வர்; அதனால் காலந்தாழ்க்கும்; அதனால் அருந்தவர் அமுது செய்தலும் தாழ்க்கும்; அது அபராதமாகும்; ஆதலின், என் பொருட்டு அந்த அபராதம் நிகழாமல் நான் இதனை எவர்க்கும் சொல்லமாட்டேன் என்றிவ்வாறு அன்பு வழியிற் கருத்தை ஒருப்படுத்தியது.

செழுமனை - இந்நிகழ்ச்சியால் சிவனருளும் குருவருளும் திகழச் செழிக்கும் மனை. "அந்தமின் மனை" (458) என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க.

வேகத்தாற் போதுவான் - என்பதும் பாடம். *26*

1809. (இ-ள்.) எரிவிடம் முறையே ஏறி - அழிக்கும் விடமானது முறையிலே மேல் ஏறி; தலைக்கொண்ட ஏழாம் வேகம் தெரிவுற - தலைக்கொண்ட ஏழாம் வேகத்தை அடைந்த நிலையினைப் புறத்தோற்றத்தினும் தெரியும்படி; எயிறும்...தீந்து -பற்களும் கண்களும் மேனியும் கருகித் தீந்து; விரி வுரை குழறி - விரித்துக் கூறும் சொற்கள் தடுமாறி; ஆவி விடக்கொண்டு - உயிர் விடும் நிலை வரவும் அதைவிடாமற் றாங்கிக்கொண்டு; மயங்கி வீழ்வான்...வீழ்ந்தான் - மயங்கி வீழ்கின்ற மகன் பரிகலத்துக்காக அரிந்து கொணர்ந்த வாழைக் குருத்தினைத் தாயாரிடம் வைத்து நிலத்தில் வீழ்ந்தனன்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டுரைக்க நின்றன. செயலின் றொடர்பும் பொருளின் றொடர்பும் நோக்கி இவ்வாறுரைக்கப்பட்டது. தனித்தனி வினை முடிபு கொள்ளினு மிழுக்கில்லை.

(வி-ரை.) எரிவிடம் - எரிக்கும் விடம். **எரித்தல்** ஈண்டு உயிர்த்தன்மையைத் தாதுக்களினின்று அழித்தல் என்ற பொருளில் வந்தது. எரி போன்ற விடம் என்றலுமாம்.

முறையே ஏறி - என்பது இரத்தமுதலாக ஒன்றற்கொன்று தொடர்பாக அமைந்துள்ள தாதுக்களில் அத்தொடர்பு முறையிலே பரவி முதல் இரத்தத்திலும், பின்னர், அந்த இரத்தவோட்டம் இருதயத்துட் சென்று, அங்கு நின்றும் ஒருமுறை இருமுறை மும்முறை என்று உடல் முழுவதும் பரவும்போது, இறைச்சியிலும் மேதையிலும் எலும்பிலும் என்றிவ்வாறு ஒவ்வொரு ஓட்டத்தில் ஒவ்வொருதாதுவில் பரவுதல் என்றதாம்.

தலேக்கொண்ட - உச்ச நிலேயினை அடைந்த.

ஏழாம் வேகம் - இரத்தவோட்டம் இரத்தாசயத்தினிற் சுத்தி செய்யப்பட்டு உடலின் பல உறுப்புகளினும் சென்று பரவி மீள அங்குச் சேர்தல் ஒரு ஓட்டம் அல்லது **வேகம்** எனப்படும். இவ்வாறு ஒடிச்செல்லும் இரத்தத்தில் விடம் பொருந்த அதனுல் ஒரு முறை ஒடும்போது அது பரவப்பட்ட ஒரு தாது அழிவுபடும் அடுத்த முறை இன்னெரு தாதுவும் என்றிவ்வாறு ஏழு முறை செல்ல ஏழுதாதுவும் அழியும். இதனே "**ஏழாம் வேகம் தெரிவுற...கருகித் தீந்து**" என்ருர்.

ஏழாம் வேகம் தெரிவுற - கருகித் தீந்து - ஏழு வேகம் முற்றியதனுல் தாதுக்களேழும் விடத் தன்மையினேப் பற்றிக்கொண்டு கருமை நிறம் விளங்கி, வேக மேழும் முற்றிய தன்மை கரு நிறம் தோன்றியதனுல் வெளியில் தெரிய நின்றது ஆதலின் **தெரிவுற** என்ருர். **எயிறும் கண்ணும் மேனியும்** என்ற இவையே கரு நிறம் தோன்றவுள்ளன. **தீந்து** - எரிபட்டது போன்ற நிலேயடைந்து.*

1806 முதல் *1809* வரை நான்கு பாட்டுக்களினும் மகன் செயல் கூறப்பட்டது. அவனேப் பற்றிய விணையெச்ச முற்றுக்களுக்குத் தோன்ரு எழுவாயாய் வைத்தது தற்போத மிழந்து பணிசெய்த இவனதுயர்வு குறிப்பு.

விரி உரை குழறி - மனக் கருத்தை விரிக்கும் சொல் நேராய் ஒலிக்க வராது தடுமாற்றத்தை அடைதல் உயிர் போகும் நிலேயின் அணிமையை உணர்த்தும் ஓர்குறி; ஆதலின் **ஆவி விட** என்றதனே அடுக்கவைத்தார்.

ஆவி விடக்கொண்டு - உயிர் போகும் நிலே வரினும் அதனேப் போகவிடாது தன் உறுதியினுல் தடுத்து நிறுத்திக்கொண்டு. இது மிக்க வலிமையினுல் கூடுவதாம். "தீதிலா நெறியில் விட்ட, சொற்றிறங் கேட்க வேண்டிச் சோர்கின்ற வாவிதாங்கும், கொற்றவன்" (*486*) என்ற மெய்ப்பொருள் நாயனுர் வரலாறு ஈண்டு நினேவு கூர்தற்பாலது.

மயங்கி வீழ்வான் - வீழ்ந்தான் - உடலேத் தாங்கி நிற்கும் நரம்பு - முதலிய தாதுக்களின் இயல்பு அழிந்தமையின் மயக்கமும், அதனுல் உடல் வீழ்வதும் நேர்வன: **ஏறி - கருகி - தீந்து - குழறி - மயங்கி வீழ்வான்** - என்ற இவைகள் அவன் வீழ்ந்த நிலேயின் முன்னிகழ்ச்சிகளாய் **வீழ்ந்ததற்குக்** காரணமாயின என்று குறிக்க. **வீழ்வான் - வீழ்ந்தான்** என்று முடித்தார். வீழ்வானுகி - விழுந்தான் என்க.

***குறிப்பு:-** விடம் ஏறும் வேகம் என்பது பற்றியும், பாம்பு விடம் - தீர்வு - முதலியவை பற்றியும் **சேக்கிழார்** *101 - 103* பக்கங்கள் பார்க்க.

1810. தளர்ந்துவீழ் மகனைக் கண்டு, தாயருந் தந்தை யாரும்
உளம்பதைத் துற்று நோக்கி, **யுதிரஞ்சோர் வடிவு மேனி**
விளங்கிய குறியுங் கண்டு, "விடத்தினால் வீந்தா"னென்று,
துளங்குத லின்றித் தொண்ட ரமுதுசெய் வதற்குச் சூழ்வார், 28

பரிகலக் குருத்து - பரிகலமாகப் பயன்பட நின்ற வாழைக் குருத்து.

தாயார் பால் வைத்து - பால் - பாலாக; தாயார்பாற் **கொடுத்தான்** என்னாது **வைத்தான்** என்றார்; **வீழ்வா**னாகிய நிலையில் அவனது செயல் நிகழ்ந்த தாதலின், அவன் உரியபடி கொடுக்கவும் அம்மையார் வாங்கவும் செயல் முற்றுப் பேறுபெற இயலாமையால் **வீழ்வான் - வைத்து வீழ்ந்தான்** என்றார். முன்னர்த் "தெருமந்து, செழுங்குருத்தைத், தாயர்கரத் தினினீட்டித் தளர்ந்துதனைத் தழுவக, மேயபடி யுரைசெய்யான் விழக்கண்டு" (*1471*) என்றதும் காண்க. முன்னர்த் "**தாயர் கரத்தினி னீட்டி**" என்றது இங்குத் **தாயார்பால் வைத்து** என்றதனோடு மாறுபடுமே? என்னில் மாறுபடாதென்க. என்னை? வீழும் நிலையில் கையினி னீட்டிய அவன் அவர் வாங்குவதன்முன் நிலை தடுமாறி வீழ்வான் அவரிடத்து வைத்து வீழ்ந்து விட்டனன் என்க.

வைத்து வீழ்ந்தான் - தன் பணியை நிறைவாக்கி முடித்தனன் என்பது, அராவுதறி வீழ்த்து - என்று - ஓடி வந்தான் (*1807*), என்று - புக்கான் (*1808*), கருகித் தீந்து குழறி - ஆவி - விடக்கொண்டு - வீழ்வான் - வைத்து வீழ்ந்தான் (*1809*) என்று இம்மூன்று பாட்டுக்களையும் தொடர்பாக்கி முடித்துக் கொள்க. *27*

1810. (இ-ள்.) தாயரும் தந்தையாரும் - தாயாரும் தந்தையாரும்; தளர்ந்து வீழ் மகனைக் கண்டு - மேற்கூறியபடி தளர்ச்சி யடைந்து வீழ்ந்த மூத்த திருநாவுக்கரசு என்ற மகனைக் கண்டு; உளம் பதைத்து - உள்ளம் பதைப்பை யடைந்து; உற்று நோக்கி - அணுகிக் காரணத்தைக் காணக் கூர்ந்து நோக்கி; உதிரம்...கண்டு - உதிரம் சோர்ந்த வடிவத்தினையும் மேனியில் விளங்கிய பிற குறிகளையும் கண்டு; "விடத்தினால் வீந்தான்" என்று - "விடந் தீண்டியதனால் இறந்தான்" என்று துணிந்து கொண்டு; துளங்குதல்...சூழ்வார் - சிறிதும் மனத்துளக்கம் இல்லாமல், அடியவர் அமுது செய்வதற்கேற்ற உபாயத்தைத் தெரிந்து செய்வாராகி;

(வி-ரை.) தாயரும் தந்தையாரும் - அடியவரைத் திருவமுது செய்வித்துப் பூசிக்கும் பணியில் முதன்மைநிலை இங்குத் தாயார்பால் நின்றமை குறிக்க அவரை முன்வைத்துக் கூறினார். முன் "**தாய் தந்தை**" (*1806*) என்றதும் ஆண்டுரைத்தவையும் சிந்திக்க; அங்குக் கூறிய திருப்பணியில் ஏவியநிலை; இங்குக்கூறுவது, "எத்தீ புகினு மெமக்கொரு தீதிலை"; "வானந் துளங்கிலென்" (தேவா); "பூத மைந்து நிலையிற் கலங்கினும் மாதொர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார், ஓது **காத லுறைப்பி** னெறிநின்றார்" (*142*) என்றபடி மாயை வயப்பட்ட உலகர் கலங்கி நிலைதளரக்கூடிய எது வரினும் சிவனன்பிற் கலங்காத அதனினும் சிறந்த நிலை என்பது குறிக்க மீண்டும் **தாயரும் தந்தையாரும்** என்று எடுத்துக்கூறியதனுடன் **அர் - ஆர்** என்ற சிறப்புப்பன்மை விகுதிகளும் புணர்த்தி ஓதினார். மேலும் "பெற்ற மனம்

பித்து'' என்ற முதுமொழிப்படி உலக நிலையில் இவ்வாறு மகன் வீழக்கண்டபோது துளக்கமுறுவாரில் முன்னிற்பவர் தாயரேயாதலும் குறிப்பு. "தாய் பிடிக்க'' என்ற சிறுத்தொண்ட நாயனூர் புராணத்தினுள் வரும் இதன் முறுகி விளைந்த நிலையின் தன்மையும் ஈண்டு வைத்துக் கருதற்பாலது.

உளம் பதைத்து - இது மகன் மயங்கி வீழக்கண்டவுடன் உலக நிலையின் முதலில் அன்பு காரணமாக நிகழும் உள்ள நிகழ்ச்சியாயினும், அடியவர் திருப்பணியிற் புகுந்து பணி செய்தவனும், மேலும் செய்யவுள்ளவனுமாகிய ஒருவனுக்கு வந்த துன்பம் என்ற உணர்ச்சி அப்பதைப்பினை அதிகரிப்பித்து அதன் காரணத்தை உற்று நோக்கி யாராயத் தூண்டிற்று என்க. இல்லறத்தில் "வாழ்வாங்கு வாழ்ந்த'' எந்தம் பெருமக்களாகிய அடியார்களிடத்து இவ்வாறு உலக நிலையன்பு அங்கங்கும் காணப்படும். ஆயினும் உலகமே பொருளென மயங்கும் ஏனைய மாக்களிடத்துப் போல இவ்வன்பு சிவனடிமைத்திறச் செயல்களுக்கு இடையூறுக நில்லாமையோடு அதனுள் அடிப்பட்டுத் துணையாயும் நின்றது. இவ்வியல்பும் வேற்றுமையும் உணர மாட்டாத புல்லறிவாளர் தத்தம் நிலையே பற்றிப் பலவாறு பிதற்றுவர்.

உற்று நோக்கி - ஆராய்ந்து. காணப்பட்ட நிலைகளின் துணைகொண்டு காணப்படாத காரணத்தைக், கருதல் அளவையால் நிச்சயிப்பதற்காக ஆய்ந்து. **உற்று** - என்பது புறச்சோதனையினையும், **நோக்கி** - என்பது அதன் துணைகொண்டு கருதும் மன நிகழ்ச்சியையும் குறித்தன.

உதிரஞ்சோர் வடிவு - இது முதலில் தேற்றமாகக் கண்ணுக்குப் புலப்பட்ட தாதலின் முதற்கண் கூறப்பட்டது. வாழைக் குருத்துக் கொணர்ந்து வைத்த கையில் காணும் ஊறும், அதனில் சோரும் குருதியும் முன்னர்த் தோற்றப்பட்டன. மேல்தோலில் ஊசியாற் கொத்தப்பட்டன போன்ற இரட்டையாகிய ஓட்டைகளும் அவற்றினின்று சிறிதாகக் கசியும் இரத்தமும் என்ற இவையே மருத்துவ நூலோர் இது பாம்பின் கடியினுல் ஆயிற்று எனக் கருதித் துணியத் துணைசெய்யும் முதல் அடையாளங்கள் என்பர். இங்கு **வடுவும்** என்று பாடங்கொள்வாருமுண்டு.

மேனி விளங்கிய குறியும் - முன் பாட்டிற் (1809) கூறியவை. **குறி** - "உதிரஞ்சோர் வடிவு'' அன்றிப் பிற குறிகள்.

"விடத்தினுல் வீந்தான்'' என்று - உற்று நோக்கிக் கண்ட குறி முதலியவற்றுல் துணிந்த முடிபு. இது குறிகளாகிய காரியம், மேலே "புகைதன் ஞதியாய வனல்காட்டல்'' (சித்தி - அளவை - 10) போலக் காரணமாகி விடத்தினைக் காட்டியதனுற் றுணியச்செய்த காரிய ஏது எனப்படும். இதன் இயல்பெல்லாம் அளவை நூல்களுட் காண்க.

துளங்குதல் இன்றி - ஈண்டுத் **துளக்கம்** என்பது சிவனடிமைத்திறம் பற்றிய அன்பினிலையினின்று நிலைபெயர்தல் என்ற பொருளில் வந்தது. "துளங்காத சிந்தையராய்த் துறந்தோர்'' (திருத்தாண்டகம் - கோயில் - 7). **துளக்கம்** - மன வருத்தம் என்று பொருள்கொண்டு, வீந்தானென்று வருந்தாமல் என்றுரைப்பாருமுண்டு. எவ்வாறு கொள்ளினும், முன் "உளம்பதைத்து'' என்றது, நோக்கித் துணிவதன் முன்னர் முதற்கண் உண்டாகிய நிகழ்ச்சியாதலின் இதனேடு முரண்படாமை உய்த்துணர்ந்து கொள்க.

1811. **பெறலரும் புதல்வன் றன்னைப் பாயினுட் பெய்து மூடிப்,**
புறமனை முன்றிற் பாங்கோர் புடையினில் மறைத்து வைத்தே,
"**அறிவிது தெரியா வண்ண மமுதுசெய் விப்போ**" மென்று
விறலுடைத் தொண்ட ஞர்பால் விருப்பொடு விரைந்து வந்தார். 29

சூழ்வார் - சூழ்தல் - ஆராய்ந்து தகுதியானவற்றைச் செய்தல்; சூழ்வாராகி முற்றெச்சம். சூழ்வார் - பெய்து - மூடி - வைத்தே - என்று - வந்தார் - என்று மேல்வரும் பாட்டுடன் முடிக்க. *28*

1811. (இ-ள்.) பெறல் அரும்...மூடி - பெறுதற்கரிய புதல்வனைப் பாயினுட் பொதிந்து மூடி; புறமனை...வைத்தே - மனையின் புறத்தின் முற்றத்தினிடத்து ஒரு புடையில் மறைத்து வைத்தே; "அற இது...செய்விப்போம்" என்று - "இது சிறிதும் தெரியாத வண்ணமாக அவரை நாம் அமுது செய்விப்போமாக" என்று துணிந்து உறுதிகொண்டு; விறலுடை...வந்தார் - விறலுடைய தொண்டராகிய திருநாவுக்கரசரை நோக்கி விருப்பினோடும் விரைந்து வந்தார்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை.) பெறலரும் புதல்வன் - முன் பாட்டுக்களிலும் மேல் *1818*-லும் கூறும் அவனது பெருமைகள் எல்லாம் குறிக்கப் **பெறலரும்** என்றார். **பாயினுள்** - பெய்தல் - **மூடுதல் - புறமனை** முன்றிலின் பாங்கு **ஓர்புடை**யினின் வைத்தல் **மறைத்து** வைத்தல் என்ற இச்செயல்கள் ஒவ்வொன்றும் அத்தாயர் தந்தையார்களது அன்பின் உறைப்பினையும், உண்மை தெளிந்த வுணர்வின் சீலச்செம்மை ஒழுக்கத்தினையும் சிறக்க உணர்த்தின. ஏனையோக்கு இவை ஒரு சிறிதும் இயலாமையும் கருதுக. சிவன்பா லன்புச்செயல்களின் முன்னர் உலக மாயா காரியங்கள் யாவையும் ஒதுக்கி வைக்கத்தக்கன என்ற உண்மை விளக்கப்பட்டதும் காண்க.

அற - ஒரு சிறிதும். இது - மகன் விடத்தினால் வீந்ததும் தாம் அவனுடலை மறைத்து வைத்ததும் முதலிய இவற்றின் தொகுதி. புற நிகழ்ச்சிகளேயன்றித் தம் மன நிகழ்ச்சிகளும் குறிக்கப்பட்டன.

"இது அற தெரியாவண்ணம் அமுது செய்விப்போம்" என்று - இது அவர்கள் தொண்டரை அமுது செய்வித்தற்குச் சூழ்ந்து செய்துகொண்ட முடிபு. **தெரியா வண்ணம்** - புறத்திற் றோற்றுதபடி. சாவு நிகழ்ந்த மனையில் ஆசௌச முறைகள் கையாளப்படுதலான், இவ்வாறு நல்விருந்து அமுது செய்வித்தல் முதலியவை கூடா என்பது ஒழுக்க நூலுள் விதித்த மரபு. "அழலோம்பு மப்பூதி" (தேவா) என்றும், "அந்தணரின் மேம்பட்ட அப்பூதி அடிகளார்" (*1466*) என்றும் சிறப்பிக்கப்பட்ட வைதிக ஒழுக்கமுடைய அந்தணர் பெருமானாகிய அப்பூதியார், இவ்வாறு அன்று அந்நிலையில் அடியவரை அமுது செய்விக்கத் துணிந்தமை அவ்வொழுக்கத்துக்கு மாறுபாடன்றோ? எனின், அன்று; என்னை? அவ்விதிகள் எல்லாம் உலக நிலை நிறுத்தல் என்னும் பயனளவே தருவன; இங்கு மேற்கொண்டது உலகிறந்த நிலையில் அவற்றின் மேம்பட்டனவாய் உயிர்க்குறுதிதரும் சிவனடிமைத் திறத்தின்

1812. கடிதுவந் "தமுது செய்யக் காலந்தாழ்க் கின்ற"தென்றே
அடிசிலுங் கறியு மெல்லா மழகுற வணைய வைத்துப்,
படியில்சீர்த் தொண்ட னார்முன் பணிந்தெழுந் "தமுது செய்தெங்
குடிமுழு துய்யக் கொள்வீ" ரென்றவர் கூறக் கேட்டு, 30

நிகழ்ந்தன. உலக வொழுக்க விதிகள் இவற்றின்முன் நில்லாவாதலின் அவற்றைக் கொண்டு சிவனடிமைப் பண்பின் உறைப்பின் நிகழ்ச்சிகளை அளக்க முயலுதல் **அளவை மாறுபாடென் றொழிக. இதுஅற** - இந்நிலை தீரும்படி என்ற குறிப்பும் காண்க.

விறல் - மறைப்பினும் மனத்தினுட் புகுந்து அறிந்து கொள்ளும் தெய்வவிறலும், சிவனருளால் உயிரை மீட்பிக்கும் விறலும் உடையார் என்பது குறிப்பு. "இது வீடும் வேண்டா **விறல்**" (*143*) உடைமையினுல் வருவதென்க.

விருப்பொடு விரைந்து வந்தார் - விருப்பொடு - புதல்வன் செய்தி முற்றும் மறந்து மனத்தினுள் அடியாரை அமுது செய்விக்கும் விருப்பமே நிறைந்த நிலையில். **விரைதல்** - அடியவரைப் பசி தீர்த்தலின் விரைவு. "நாதன்ற னடியாரைப் பசி தீர்ப்பேனென" (*1734*) என்று அம்மையார் ஒரு மாங்கனியுடன் அமுது செய்வித்தமை கருதுக. "காலந்தாழ்க் கின்ற தென்றே...அணையவைத்து" என்று மேல்வரும் பாட்டிற் கூறுதல் காண்க.

வந்தார் - புதல்வனை மறைத்து வைத்த இடத்தினின்றும் தொண்ட ரெழுந்தருளியிருந்த இடத்தை நோக்கிவந்தார். *29*

1812. (இ-ள்.) கடிது வந்து - விரைவாக வந்து; அமுது... என்றே - அமுது செய்யக் காலதாமதம் நேரிடுகின்றதென்று உட்கொண்டு; அடிசிலும்...வைத்து - அடிசிலும் கறிகளும் முதலிய எல்லாவற்றையும் அணிபெற ஒழுங்காகப் பக்கத்தில் அமைத்துவைத்துக்கொண்டு அதன்பின்; படியில்... கூற - ஒப்பற்ற சிறப்புடைய தொண்டர்பெருமான் றிருமுன்பு விழுந்து பணிந்து எழுந்து நின்று, "திருவமுது செய்து எமது குடிமுழுதும் உய்யும்படி ஆட்கொண்டருள வேண்டும்" என்று அவர் சொல்ல கேட்டு - (திருநாவுக்கரசர்) அதனைக் கேட்டு,

(வி-ரை.) கடிது வந்த - என்றே எல்லாம் அணையவைத்து - "தொண்டனார்பால் - வந்தார்" என முன்பாட்டிற் கூறியது, புறமனை முன்றிற் பாங்கோர்புடையினின்று தொண்டரை நோக்கி வந்தமை குறித்தது. இங்கு **வந்து** என்றது மனையினுள் அடிசில் அமைத்த இடத்துக்கு வந்தமை குறித்தது.

"**அமுது.... தாழ்க்கின்றது**" **என்றே** - அரசுகளைக் கண்டுகொண்டு பின் இசைவு பெற்று அறுசுவை அமுது ஆக்கவும், பின்னர்ப் புதல்வனது நிகழ்ச்சி யமையவும் என்றிவ்வாறு பலவாற்றாலும் நெடுநேரம் சென்று விட்டமையால் மேலும் காலத் தாழ்வு நேரலாகாதென்று உட்கொண்டு, அரசுகள் வழிப்போந்த வேனி லிளைப்பையும் உடன் உட்கொண்டு என்க.

அடிசிலும்....வைத்து - அமுதும் கறிகளும் வேண்டும்போது கொணர்ந்து பரிமாறுதலில் மேலும் காலத் தாழ்வு நேராதபடி உணவுகொள்ளு மிடத்தின் அணிமையிற் பாங்குபெற

1813. அருந்தவ ரெழுந்து செய்ய வடியிணை விளக்கி, வேறோர்
திருந்துமா சனத்தி லேறிப், பரிகலந் திருத்து முன்னர்,
இருந்து,வெண் ணீறு சாத்தி, யியல்புடை யிருவ ருக்கும்
பொருந்திய நீறு நல்கிப் புதல்வர்க்கு மளிக்கும் போழ்தில், 31

அமைத்து வைத்துக்கொண்டு. **அழகுற** - வரிசைபெற வைத்தல், நல்ல பாத்திரங்களில் வைத்தல் என்றிவ்வாறெல்லாம் பொருந்த. **எல்லாம்** - தண்ணீர் முதலியனவும்.

படியில் சீர் - படி - ஒப்பு. இவரின்படி வேறொருவருமிலர். **சீர்** - திருநின்ற செம்மையே செம்மையாக்கொண்ட சிறப்பு.

அமுதுசெய்து எம் குடி முழுது உய்யக்கொள்வீர் - சிவஞானிகளாகிய மாகேசுரர்களை அமுது செய்விக்கும் பலன்பற்றித் திருமூலர் "படமாடக் கோயிற் பகவற்கதாமே", "உண்டது மூன்று புவனமு முண்டது", "பகரு ஞானி பகலூண் பலத்துக்கு, நிகரில்லை" என்று பலவாறும் விதந்தெடுத் தோதுதல் காண்க.

எம் குடி முழுது உய்ய - ஒரு குடியில் ஒருவர் செய்த சிவ புண்ணியம் அக்குடியில் இருபத்தொரு தலைமுறையளவும் ஏற்றவாறு பலன்றரும் என்பர். "மூவேழ் சுற்ற முரணுறு நரகிடை, யாழா மேயரு ளரசே போற்றி" (திருவாசகம்). "கண்டோர் கேட்டோர், கோத்திரத்தி லிருபத்தோர் தலைமுறைக்கு முத்திவரங் கொடுப்போம்" என்று இதுபற்றியே அருணசல புராணமும் கூறும். ஈண்டுக் **குடிமுழுது உய்யக்கொள்க** என்பதனல் வீந்துகிடக்கும் புதல்வன் உள்ளிட்ட என்குடி முழுதும் என்ற குறிப்பும் தருதல் காண்க. "நானு மறியேன்; அவளும் பொய் சொல்லாள்" என்ற பழமொழிப்படி அப்பூதியார் திருவாக்கினின்று அவரை யறியாமலே போந்த விண்ணப்பத்தின்படி சிவனருளால் "மூத்த சேயையும் காட்டும் முன்னே மேதரு பூதி சாத்த" (*1814*) என்று அப்போதே அரசுகள் அருளிச் செய்த திறமும் கண்டுகொள்க. *30*

1813. (இ-ள்.) அருந்தவர்.... ஏறி - அருந்தவராகிய அவர் எழுந்து செம்மை பொருந்திய திருவடிகளை விளக்கிக் கொண்டு மற்றொரு திருந்தும் ஆசனத்தில் ஏறி; பரிகலம் திருத்து முன்னர் - அவர்கள் பரிகலத்தைத் திருத்தி விதிப்படி அமைப்பதற்கு முன்னர்; இருந்து... போழ்தில் - அந்த ஆசனத்தில் அமர்ந்து தாம் திருவெண்ணீற்றினைச் சாத்தி, இயல்பின் நின்ற அப்பூதியாருக்கும் அவர் மனைவியார்க்கும் பொருந்திய திருநீற்றினை அளித்துப், புதல்வர்களுக்கும் திருநீற்றினை அளிக்கும் போது,

(வி-ரை.) செய்ய அடியிணை விளக்கி - முன்னமே அப்பூதியாரால் தமது திருவடிகள் விளக்கப்பட்டுஆசனத்தில் அரசுகள் எழுந்தருளி யிருந்தார் (*1802 - 1803*). ஆயினும் திருவமுதுசெய்வதற்குமுன் பாதம் விளக்கிக்கொள்ள வேண்டிய விதிபற்றி அடியிணையும் திருக்கைகளும் விளக்கினர்.

செய்ய - செம்மையுடைய. **செம்மை**யாவது, சிவநெறியிற் சரித்த தன்மை. **செய்ய** - சிவந்த என்றலுமாம்.

1814. ஆதிநான் **மறைநூல் வாய்மை யப்பூதி** யாரை நோக்கிக்
"காதலா லிவர்க்கு மூத்த சேயையுங் காட்டு **முன்னே**
மேதகு பூதி சாத்த" வென்றலும், விளைந்த தன்மை
யாதுமொன் றுரையா "**ரிப்போ திங்கவ னுதவா**" னென்றார். 32

வேறு ஓர் திருந்தும் ஆசனத்தில் ஏறி - வேறு - முன் அமர்ந்திருந்த (*1803*) ஆசனத்தில் வேறாகிய. ***திருந்தும் ஆசனம்*** - அப்போது பயன்படாது, இனிப் புதல்வன் உயிர் பெற்றெழுந்தபின் ஆசனமாகப் பயன்படவுள்ள தென்பது குறிப்பு. இவ்வாறன்றிச் **செல்ல *அடியிணை விளக்கி ஆசனத்திலேற்றி*** - என்று பாடங்கொண்டு அப்பூதியாரது உபசரிப்பாக உரைகொள்வாருமுண்டு. அவை முன்னரே நிகழ்ந்து விட்டமை *1802-1803*ல் கூறப்பட்டன.

பரிகலம் திருத்துதலாவது, இடம் தூய்மை செய்தலும், வாழைக் குருத்தைக் கழுவித் தூய்மை செய்தலும், உரியபடி அமைத்தலும் முதலியன.

இங்கு இவை முற்றுப்பெருமற் பின்னரே நிறைவெய்துதலின் பின்னர் (*1821*) விரிக்கப்படும்.

இருந்து - ஆசனத்தில் திருஅமுது செய்யும் பாங்கினில் அமர்ந்து.

வெண்ணீறு சாத்தி - அமுது செய்வதற்கு முன்னும், செய்த பின்னும் திரு நீறணிதல் வேண்டுமென்பது விதி.

இயல்புடை இருவர் - "இயல்பினு லில்வாழ்கை" என்ற திருக்குறள் காண்க. **இயல்பா**வது சிவனடிமைத் திறத்தை அடிப்படையாகக் கொள்ளுதல்.

நீறு நல்கி - அடியார்கள் மாகேசுவர பூசை கொண்ட ருளுமுன்பு இவ்வாறு நீறு நல்குதல் சைவ மரபின் நல்வழக்கு. இதுவே இங்குச் சரித மேல் நிகழ்ச்சிக்குக் காரணமாயினமை காண்க. இந்த நல்வழக்குக் கையாளப்படுதல் நலம் தரும்.

இல்லுடை இருவருக்கும் - என்பதும் பாடம். *31*

1814. (இ-ள்.) ஆதி... நோக்கி - ஆதி நான்மறைகளினும் நூல்களினும் பயின்ற வாய்மைச் சீலமுடைய அப்பூதியாரை நோக்கி; காதலால்.... என்றலும் - காதலினாலே இவர்க்கு மூத்த பிள்ளையையும் முன்னே மேதகு திருநீறு சாத்துதற்குக் காட்டுவீராக; என்று அரசுகள் சொல்லவும்; விளைந்த... என்றார் - நிகழ்ந்த செயல்களொன்றினையும் சிறிதும் வெளிப்பட எடுத்து உரையாதவராகி "இப்போது இங்கு அவன் உதவமாட்டான்" என்று சொன்னார்.

இந்த மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை.) ஆதி நான்மறை நூல் - எல்லாவற்றுக்கும் ஆதியாகிய மறை என்றும், ஆதியாற் றேற்றுவிக்கப்பட்ட மறை என்றும் உரைக்க நின்றது. **மறை நூல்** - மறைகளும் அவற்றின் வழிவந்த மிகுதி முதலிய நூல்களும்.

வாய்மை - வேதத்தினுள் சிறந்த அறமாகச் "சத்யம் வத" என்று விதிக்கப்பட்டது வாய்மை.

வாய்மை அப்பூதியார் - சிவனடிமைத் திறமாகிய அன்பு நெறியிற் பிறழாமை போல, வேத வாய்மையினும் பிறழாத பெருமை விளங்கும் இடம் இதுவாதலின் இங்கு இத்தன்மையாற் கூறினர்.

காதலால் - சாத்த என்க. **காதலால் - மூத்த சேய்** - என்று கூட்டி உமது காதல் செல்லும் வகையால் மூத்தவன் என்றலுமாம்.

முன்னே மேதகு பூதி சாத்த - சிறுவர்களுக்குப் பெரியோர் தாமே கரத்தால் நீறு சாத்தி ஆசிபுரிதல் மரபு. **முன்னே** - ஏனை இளைய பிள்ளைகளுக்கு அளிக்கும் முன்பு. **சேயையும்** - இவர்களைக் காட்டியதுபோல அவனையும் என்று உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை. **மேதகு** - மேன்மையுடைய. மேம்பாடாவது உயிர்க்கும் உடலுக்கும் ஒருங்கே உறுதி செய்யும் பெற்றி.

பூதி - திருநீறு. **சாத்த** - அளித்துச் சாத்துவிக்க - அணியச் செய்ய என்றலுமாம்.

யாதும் ஒன்று உரையார் - நிகழ்ந்தனவும் மேல் விளைந்தனவுமாகியவற்றுள் எப்பகுதியும் ஒரு சிறிதும் விரித்துச் சொல்லாதவராகி: **ஒன்று** - ஒன்றும் - ஒரு சிறிதும். உம்மை தொக்கது. **உரையார்** - உரையாராகி: முற்றெச்சம். **உரையார் - என்றூர்** என்று கூட்டி முடிக்க.

உரைத்தல் - ஈண்டு விரித்துக் கூறுதல் என்ற பொருளில் வந்தது. வரும் பாட்டில் "விரித்துரையும்" (*1815*) என்பது காண்க.

இப்போது இங்கு அவன் உதவான் - இஃது உண்மைக் கூற்றேயாதலை உணர்க. இங்கு அப்பூதியார் மெய் சொல்லாது மறைத்தது தகுதியாமோ? என்று ஆராய்ச்சி செய்யும் ஆராய்ச்சியாளருமுண்டு, இதனை நோக்கியே "**களவு பொய்க் காமங் கோப** முதலிய குற்றங் காய்ந்தார்" (*1784*) என்றும், "ஆதி நான் மறைநூல் **வாய்மை யப்பூதியார்**" (*1814*) என்றும் ஆசிரியர் காட்டி, உலகர் அபசாரப்படா வண்ணம் எச்சரித்தமை காண்க. இஃது உரைத்தபோது உண்மையாதல் மட்டுமன்றி **இப்போது - உதவான்** என்றமையால் பின்னர் உதவுவான் என்றும், **இங்கு** என்றமையால் இவ்விடத்தன்றிப் பின்னர்த் திருக்கோயிலில் உதவவுள்ளானன் என்றும், மேல்வரும் விளைவுபற்றிய உண்மையும் குறிப்பிற் பெறவந்த அழகும் அமைதியும் காண்க. **இப்போது - உதவான்** என்றமையால் **அழைக்க** வந்து உதவும் நிலையில் அவன் இல்லை என்ற உண்மை தானே போதருதலும் காண்க. "மெய் **விரித்து**ரையும்" (*1815*) என்றமையால் அரசுகள் இதனை "**மெய்**" என்றே கொண்டமையும் காண்க.

காதலரிவர்க்கு - என்பதும் பாடம். *32*

1815. (இ-ள்.) அவ்வுரை...நோக்கி - அந்த உரையினைக் கேட்டவுடனே, அன்பரது செம்மையுடைய திருவுள்ளத்தின் கண்ணே ஓர் தடுமாற்றம் சேர, அதனை நோக்கி, "இந்த உரையினை என் உள்ளம் பொறுக்கலாற்ருது; அவன் என்ன செய்தனன்; இதற்கெல்லாம்

1815. அவ்வுரை கேட்ட போதே யங்கண ரருளா, **லன்பர்**
செவ்விய திருவுள் ளத்தோர் தடுமாற்றஞ் சேர, நோக்கி
"யிவ்வுரை பொருதென் னுள்ள; **மென்செய்தா னிதற் கொன்"றுண்டால்**
"மெய்விரித் துரையு"மென்ன விளம்புவார் விதிர்ப்புற் றஞ்சி, 33

உள்ளுறை "ஒன்று" திண்ணமாக உண்டு; மெய்யினை விரித்துக் கூறுவீராக!" என்று அரசுகள் கூறுதலும் உடல் நடுங்கிப் பயந்து,

(வி-ரை.) அன்பர் - திருநாவுக்கரசர். அப்பூதியார் என்று கொண்டுரைத்தனர் முன் உரைகாரர்; அது பொருந்தாமை முன்னர் 1472-ஆம் திருப்பாட்டின் கீழ் விளக்கப்பட்டது. ஆண்டுக் கண்டு கொள்க.

செவ்விய - திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட என்க. சிவத்தன்மையில் அடங்கி நிற்றலின் எதுவரினும் துளங்காது தம்நிலை திரியாமல் நிற்குமென்பதாம்.

ஓர் தடுமாற்றம் திரு அருளால் சேர - என்க. தடுமாற்றமாவது நிலை கலங்கும் உள்ள நிகழ்ச்சி. **ஓர்** - ஓர்வதற் கேதுவாகிய. ஒரு என்றலுமாம். **சேர** - முன் இல்லாது உரை கேட்ட அப்போதே வந்துகூட. **நோக்குதல்** - கருதுதல்.

தடுமாற்றத்தின் விளைவினை அரசுகள் கூறுவது, தாமறிந்தவாறு அன்பின் பெருமையுடைய அப்பூதியார், கேட்கப்பொறு உரைகூறும் காரணம் யாது என்ற குறிப்புடையதாம்.

என் உள்ளம் இவ்வுரை பொறுது - அடியார்பால் அருட்பூதி பெறுதற்கு அனைவரும் முந்துகின்ற இச்சமயம் அவன் தானே முன்னிற்க வேண்டியவனுயிருந்தும், அரசுகள் "பூதி சாத்த அவனையும் காட்டுக" என்று தாமாகக் கேட்டருளிய போதும்; "இங்கு இப்போது அவன் உதவான்" என்றவுரை கேட்க உள்ளம் பொறுதாயிற்று.

என் செய்தான் - பூதி சாத்த உதவாமைக்குத் தக்க குறையாக என் செய்தான் என்க.

இதற்கு "ஒன்று" உண்டால் - இதற்கு - இவ்வாறு வாராமைக்கு. **ஒன்று** - ஏதோ ஒரு மறைவாகிய காரணம். **உண்டால்** - உண்டென்பது துணிபு. **இதற்கு "ஒன்று" உண்டு** - "இதற்குத் தீர்வாகத் திருவருள் ஒன்றும், "**ஒன்று கொலாம்**" என்ற மந்திர உருவாகிய திருப்பதிகமும் உறுதியாக உண்டு; நீர் அஞ்சவேண்டா" என்ற பிற்சரித விளைவின் உண்மைக் குறிப்பும்பட நின்றது காண்க.

மெய்விரித்து உரையும் - நீர் முன் உரைத்தது மெய்யே; ஆயினும் அது மறையாக இருத்தலின் அதனை விரித்துக் கூறுவீராக. **மெய் உரையும்** என்னது **விரித்துரையும்** என்றதனுல் அப்பூதியாரது வாய்மை தவருத வேத வொழுக்கம் அரசுகளால் போற்றப்பட்டது காண்க.

விதிர்ப்பு - உடல் நடுக்கமும் மன நடுக்கமும். **அஞ்சி** - அச்சத்தின் காரணம் "இதற்கு பெரியவர் அமுது செய்யும் பேறு பிழைத்துவிடுமோ?" என்பது என மேல்வரும் பாட்டிற் கூறுதல் காண்க.

1816. "பெரியவ ரமுது செய்யும் பேறிது பிழைக்க வென்னே
வருவ?"தென் றுரையா ரேனு, மாதவர் வினவ **வாய்மை
தெரிவுற வுரைக்க வேண்டுஞ் சீலத்தாற்**, சிந்தை நொந்து
பரிவொடு வணங்கி, மைந்தற் குற்றது பகர்ந்தா ரன்றே; 34

1816. (இ-ள்.) பெரியவர்... உரையாரேனும் - "பெரியவராகிய திருநாவுக்கரசர் திருஅமுது செய்தருளும் இப்பெரும் பேறு கிடையாமற் பிழைக்கும்படி இவ்வாறு வருவதும் என்னோ?" என்று உட்கொண்டு உரையாமல் இருப்பாராயினும்; மாதவர்... சீலத்தால் - பெருந்தவராகிய அவர் வினவும்போது வாய்மையை உள்ளவாறு தெரியும்படியாகச் சொல்லிவிட வேண்டும் என்ற செம்மை ஒழுக்க நிலையினாலே; சிந்தை நொந்து - மனம் உடைந்து வருந்தி; பரிவொடு வணங்கி - துயரத்தோடும் வணங்கி; மைந்தற்கு உற்றது பகர்ந்தார் அன்றே - மகனுக்கு நேரிட்டதனை உள்ளபடி அப்பொழுதே உரைத்தனராம்;

(வி-ரை.) பெரியவர்....உரையாரேனும் - விரித்துரையும் என்ற அரசுகளுக்கு, அவ்வாறு விரித்துரைப்பின் பெரியவர் அமுது செய்யார்; இறந்த மகனைப் பற்றிச் செய்ய வேண்டுவனவற்றின் முயல விடுப்பர்; அவரை அமுது செய்விக்கக் கிடைத்த இப்பேறு பிழைக்குமாதலின் விரித்துரையார் ஆயினும்;

மாதவர்....சீலத்தால் - பெருந்தவர் விரித்துரைக்க வினவும்போது அவ்வாறே உண்மையினை அவர் தெரியும்படி விளங்க உரைத்தல் வேண்டும் என்பது சீலம் - செம்மை ஒழுக்கவிதி - ஆதலினால்; இங்கு இரண்டு கடமைகள் அப்பூதியார் முன் நின்றன; பெரியவர் அமுது செய்தல் பிழைக்கும்படியாக விளங்கச் சொல்லாதிருத்தல் ஒன்று; அவர் கேட்க உண்மையே சொல்லும் சீல நெறி நிற்றல் மற்றொன்று; இவையிரண்டினும் சங்கடமுண்டாயினும் பிந்திய நெறி நிற்றலே இங்குச் செய் தக்கது; அவ்வாற்றினில்லாமை பாவம் எனத் துணிந்து என்க. இவ்வாறே இரண்டு தருமங்களினும் சங்கடங்களிடையே நின்ற நிலையில் காரைக் காலம்மையார் "செய்தபடி சொல்லுவதே கடனென்னுஞ் **சீலத்**தால்" *(1744)* நிகழ்ந்தபடியே கணவனிடம் மொழிந்த சரிதம் இங்கு நினைவு கூர்தற்பாலது.

உண்மைக்கு மாறு சொல்லாவிடினும், இவ்வாறு நிகழ்ச்சியை மறைவு செய்தலும், உண்மை தெரிந்தால் அமுது செய்யமாட்டார் என்றறிந்த அருந்தவரை உண்மை தெரிவிக்காமல் அமுது செய்விக்கத் துணிதலும், தாம் மனமறிந்தபடி மகன் இறந்த ஆசௌசமுடைய மனையில் அமுது செய்வித்தலும் அப்பூதியார் பால் தகுதியாமோ? இவை, தாம் வழிபடு கடவுளாகக்கொண்ட பெரியவரை வஞ்சித்த செயல்களாகாவோ? என்றின்ன பலவாறும் இங்கு ஆராய்வாருமுண்டு. அன்று அப்பூதியாரிருந்த சிவனடிமைத் திறத்தின் உறைப்பு நிலையினை உணர்ந்தால் இக்கேள்விகள்நிகழா; சிறந்த அடியவரை அமுது செய்வித்தல் சிவனை அமுதூட்டுதலாம். அது உயிர்க்குறுதி செய்யும் சிறந்த பதி புண்ணியச் செயல். ஆசௌசம் என்பது உடலைப்பற்றிது; மாயா சம்பந்தமானது. "யாவையும் சூனியஞ் சத்தெதி ராதலின்" (போதம்); "முனைத்திடா தசத்துச் சத்தின் முன்னிரு ளிரவி முன்போல்" *(சித்தி 7-1)*; "சத்தினிடத்து அசத்துப் பிரகாசியாது" என்ற இலக்கணத்தின்படி பதிபுண்ணியத் தன்மையே நிறைந்த உள்ளத்தினிடையே தாழ்ந்த பாசத் தன்மை பற்றிய நிகழ்ச்சிகள் எழா

1817. நாவினுக் கரசர் கேளா "நன்றுநீர் புரிந்த வண்ணம்!;
யாவரித் தன்மை செய்தார்?" என்றுமுன் னெழுந்து சென்றே,
யாவிதீர் சவத்தை நோக்கி யண்ணலா ரருளும் வண்ணம்
பாவிசைப் பதிகம் பாடிப் பணிவிடம் பாற்று வித்தார், 35

என்க; அஃதொக்கும்; ஆயின் அப்பூதியார் இதனை அரசுகள் அறியாது மறைத்த தென்னை? எனின், அப்பூதியார் உலகிறந்த ஞானநிலை பெற்ற மறையவர். "ஞானத்திருமறையோர்" (1469); ஆயினும் தாம் உலகிறந்த நிலையினைப் பெற்றவர் என்பதனைத் தாம் உணர்ந்தாரில்லை; அதுவே அவரது மேம்பாடு; அதனை அரசுகள் திருவருள் காட்ட உணர்ந்தனர். தம் பெருமை உணராமையும், அரசுகள் உணர்வார் என்பதனை உணராமையுமே மறைத்ததனுக்குக் காரணம் என்க. "அறிவரும் பெருமை யன்பர்" (1819) என்று, பின்னர் இதனை உணர்ந்து போற்றியமையும் காண்க. உலகநிலையில் தாமதகுணம் பற்றி வரும் வஞ்சனை, ஏமாற்றம் முதலில் தாழ்ந்த மனவெழுச்சிகளுக்கெல்லாம் இப்புண்ணிய சரித்திரங்களுள் இடமேயில்லை என்றொழிக. இங்கு உலகர் தத்தம் தாழ்ந்த நிலையினையே பற்றுக்கோடாகக்கொண்டு செய்யும் ஆராய்ச்சிகளால் அபசாரமே விளையுமன்றி உண்மை விளங்காது. இவற்றின் இயல்பெல்லாம் அனுபவமுடைய தேசிகர்கள்பால் அடங்கிக் கேட்டறிந்து கொள்ளற்பாலன. ஈண்டு விரிப்பிற் பெருகும்.

வாய்மை தெரிவுற உரைக்கவேண்டும் - முன்னர் உரைத்ததும் வாய்மையே; இப்போது உரைப்பது அதனை விளங்க உரைத்தலேயாம்.

சிந்தை நொந்து - இதனால் மாதவர் அமுது செய்யும் பேறு பிழைக்க நேருமோ என்று மன வருத்தம் கொண்டு.

பரிவு - துன்பம். துன்பமாவது மேற்சொன்ன காரணத்தால் விளைந்தது.

வணங்கி - முன் விளங்க உரையாமையால் நேர்ந்த அபராதத்தைப் பொறுத்தருளும்படி வணங்கி.

அன்றே - அப்போதே. "மெய் விரித்துரையும்" என்று வினவிய பொழுதே.

விதிர்ப்புற்று - அஞ்சி (1815) - சிந்தை நொந்து - பரிவொடு வணங்கி என்ற இவையெல்லாம் அரசுகள் அமுது செய்வதற்கு நேரநின்ற இடையூறு பற்றி வந்தன. 34

1817. (இ-ள்.) நாவினுக்கரசர் கேளா - திருநாவுக்கரசர் அதனைக் கேட்டு; நன்று நீர்...சென்றே - "நீர் மொழிந்த வண்ணம் நன்று! இத்தன்மை செய்தவர் இவ்வுலகில் யாவர் உள்ளார்?" என்று கூறி, முன்னாக எழுந்து சென்றே; ஆவி தீர் சவத்தை நோக்கி - உயிர் போயின அந்தப் பிள்ளையின் சவத்தினை நோக்கி; அண்ணலார்.....பாற்றுவித்தார் - பெருமையுடையாராகிய சிவபெருமான் அருள் செய்யும்படி பாவின் இசையுடைய திருப்பதிகத்தினைப் பாடிப் பாம்பின் விடத்தைப் போக்கியருளினார்;

(வி-ரை.) நாவினுக்கரசர் கேளா - இங்கு இப்பெயராற் கூறியது "நன்று நீர்

புரிந்த...செய்தார்" என்று கூறிய அருளிப்பாடாகிய மொழியும், இனிப் புதல்வன் விடம் நீங்கப் பாடியருளும் மந்திர மொழியும் வல்ல தன்மை குறிப்பதற்கு.

நன்று நீர் புரிந்த வண்ணம்! - அதிசயத்தின் வந்த புகழ்ச்சிக் குறிப்புமொழி.

யாவர் இத்தன்மை செய்தார்? - வினு ஒருவருமிலர் என்பது குறித்தது.

அப்பூதியார் இவ்வாறு செய்யாது முன்னரே பிள்ளையை அரசுகளிடம் காட்டிக், கூறி, வேண்டியிருந்தாராயினும் இப்பயன் பெற்றிருக்கலாமே? என்னின்! அற்றன்று: பிள்ளை உயிர் நீத்ததனை மறந்தும், மறைத்தும் அன்பினுல் அமுது செய்விக்கச் சூழ்ந்தமையே அவரது உலகிறந்த பெருமை; செயற்கரிய செயல்; அவ்வாறில்லையாயின் உலகரோடொப்ப நிகழும் பெருமையே யமைவதாம். இறத்தலும் பிறத்தலும் உலகியல்பே யாதலின் பிள்ளையை உயிர்ப்பிக்க அரசுகள் முற்பட்டிராது நின்றிடலும் கூடும். இவை பற்றி "அன்றவர்கண் மறைத்ததனுக் களவிறந்த கருணையராய்" (1473) என்ற விடத்துரைத்தவையும் பார்க்க. அடியார்கள், சிவநேசரது திறஞ் சொலக் கேட்டனர் ஆளுடைய பிள்ளையார்; **சிவநேசர்** தம் மகளை மீள உயிர்ப்பிக்கும்படி பிள்ளையார்பால் **வேண்டிஞரிலர்;** ஆயின் முன்னிகழ்ந்தது திருவுளத்தமைத்தும், பிள்ளையார், சிவநேசர் தஞ்செயல் வாய்ப்பவும், புறத்துறை யழியவும், வைத்த அப்பெருங் கருணை நோக்கான் மகிழ்ந்தருளிக் கபாலீசரை வழிபட்டுத், தாமாகவே, என்பு நிறைந்த குடத்தினைக் கொணரச் செய்து பாடியருளிப் பூம்பாவையை உற்பவிப்பத்தருளினர். திருப்புக்கொளியூரினும் மகனை இழந்தமை நினைந்து வருந்திய அந்தணரும் மனைவியும் ஆளுடையநம்பிகளிடம் தம் மகனை மீளத் தருவிக்கும்படி **வேண்டிஞரிலர்;** நம்பிகள் வரக்கண்டதும் தமது **சித்தசோகத்தினை முற்றும் மறந்து நம்பிகளை வணங்கினர்.** இந்நிகழ்ச்சிகளின் உள்ளுறைகளும் இங்கு வைத்துக் கருதத்தக்கன.

என்று - என்று கூறி - என்று கொண்டு.

முன் எழுந்து சென்றே - பிள்ளையைக் கோயிலின் முன்கொணர்வித்துத் திருமனையினின்றும் அங்கு எழுந்து சென்று. 1473-ம் ஆண்டுரைத்தவையும் பார்க்க. முன் உரைத்தமையால் ஈண்டு விரிக்கப் படவில்லை.

ஆவி தீர் சவம் - சவம் என்றலே அமையுமாயினும் **ஆவி தீர்** என் விசேடித்தது ஆவி தீர்ந்தும் தீர்ந்திலதாய் அந்த ஆவி மீண்டும் அவ்வுடலிற்போதும் குறிப்புப்பற்றி. **பிரிவுறும் ஆவி** - என மேலும் (1819) கூறுவது மிக்கருத்து. இக்குறிப்புப்பற்றி இங்குப் பிள்ளை ஆவி பிரிந்து விடவில்லை என்றும், ஆவிபிரிந்தாற் போன்ற மயக்க நிலையேயடைந்திருந்தனன் என்றும், ஆராய்ச்சி செய்வாருமுண்டு. **சவம்** - உயிர் நீங்கிய உடலின் பெயராதல் கருதுக. "பேரினை நீக்கிப் பிணமென்று பெயரிட்டு" (திருமூலர்); "தம் புதல்வன் சவ மறைத்து" (1472); வாகீசரின் ஞானப் பாடலுக்கு உயிரை மீளத்தருதல் ஒரு பெருங் காரியமன்று என்க.

அண்ணலார் அருளும் வண்ணம் - தற்போதமென்பது சிறிதுமின்றிச் சிவனருள் வழி நின்றே செயல் புரிவதும், தஞ்செயல் எல்லாம் அவன் செயலேயாக நிகழ்வதும் எந்தம் பெருமக்களியல்பு.

பா - இசை - பதிகம் - பாட்டுத்தோறும், அடிதோறும், சீர்தோறும், அசைதோறும் பரவும் இசையினையுடைய பதிகம். **பரவுதல்** - பரவிநிற்றல். **இசைப்பா** என்று கூட்டி,

1818. தீவிட நீங்க வுய்ந்த திருமறை யவர்தஞ் சேயும்,
மேவிய வுறக்க நீங்கி விரைந்தெழு வானைப் போன்று,
சேவுகைத் தவராட் கொண்ட திருநாவுக் கரசர் செய்ய
பூவடி வணங்கக் கண்டு புனிதநீ றளித்தா ரன்றே! 36

அடியடிதோறும் ஒன்று முதலாகப் பத்தீருகச் சிவபெருமானிசை களைப்போற்றும் பதிகம் என்று இப்பதிகச் சிறப்பியல்பு குறித்ததாகக் கூறுவதுமாம்.

பணி விடம் - பாம்பின் விடம். **பணி** - பாம்பு. சிவனடியார்களது ஏவலின் வழிப் பணிந்து நிற்கும் விடம் என்றதும் குறிப்பு.

பாற்றுவித்தார் - பாற்றுதல் - போக்குதல்; பிறவினையாற் கூறியது திருவருட் செயலால் நிகழ்ந்தது என்று குறிக்க.

மொழிந்த - செய்வார் - என்பனவும் பாடங்கள். 35

1818. (இ-ள்.) தீ விடம்....சேயும் - தீப்போன்ற விடம் இவ்வாறு நீக்கப் பெற்று உய்தியடைந்த திருமறையவராகிய அப்பூதியாருடைய புதல்வனும்; மேவிய...போன்று - பொருந்திய தூக்கத்தினின்றும் நீங்கி விரைவாக எழுவானைப் போல; சேவுகைத்தவர்....வணங்க - இடபத்தைக் கொடியாக உயர்த்த சிவபெருமானுல் ஆட்கொள்ளப்பெற்ற திருநாவுக்கரசருடைய செம்மையுடைய மலர் போன்ற திருவடிகளில் வணங்க; கண்டு - அதனைக் கண்டு; புனித நீறு அன்றே அளித்தார் - திருநாவுக்கரசர் புனிதத் திருநீற்றினை அன்றே அளித்தனர்.

இந்த நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டுரைக்க நின்றன. *1817 - 1818* திருப்பாட்டுக்கள் முன் பாட்டுக்களுடன் பொருட்டொடர்பும் சொற்றொடர்பும் கொண்டு விரைந்து தொடரும் ஒரு செயல் முடிபாகக்கொள்ள நின்றமையின் அவ்வாறு ஒரு முடிபாக்கி உரைக்கப்பட்டன. இவை யிரண்டினையும் இவ்வாறன்றித் தனி வினை முடிபாகவே கொண்டுரைப்பினு மிழுக்கில்லை. இவற்றின் பொருளனைத்தையும் திருநாவுக்கரசர் புராணத்தினுள் (*1473*) ஒரே பாட்டில் ஒரே முடிபாக வைத்துரைத்தமையும் காண்க.

(வி-ரை.) முன்பாட்டும் இத்திருப்பாட்டும் பொருட்டொடர்புபற்றி ஒரே எதுகையின் அமைந்தன.

உய்ந்த - சேய் - என்று கூட்டுக. *1816*-இல் அப்பூதியார் செய்கை கூறப்பட்டது; *1817*-இல் அரசுகளின் அருட்செய்கை கூறப்பட்டது; இப்பாட்டிற் **சேயின்** செய்கை கூறுவதனல், அவர்கள் செய்வதற்கேற்பச் **சேயும் - வணங்க** என்று உம்மை இறந்தது தழுவியது.

மேவிய...எழுவானைப்போன்று - *1473*-இன் கீழ் உரைத்தவை பார்க்க. **இறத்தல் உறக்கம் போன்றதென்பதும், பிறப்பு விழித்தெழுதுதல் போன்றதென்பதும் நீதிநூல் மட்டுமின்றி ஞான நூல்களும் கூறும் உண்மைகள்.** சிவன் இயற்றும் ஐந்தொழில்களுள்

1819. பிரிவுறு மாவி பெற்ற பிள்ளையைக் காண்பார் தொண்டின்
நெறியினைப் போற்றி வாழ்ந்தார்; நின்றவப் பயந்தார் "தாங்கள்
அறிவரும் பெருமை யன்ப **ரமுதுசெய் தருளு தற்குச்
சிறிதிடை யூறு செய்தா னிவ"னென்று சிந்தை நொந்தார்;** 37

அழித்தல் மறைத்தல் என்ற இவை இளைப்பாற்றலும், கன்ம ஒப்பு வருவித்து மலங்களை முதிர்வித்தலுமாகிய பயன்செய்வன என்பது ஞானநூல் முடிபு. உடல் நூலாரும் உறக்கத்தின் பயன் இளைப்பாறுதலே என்பர். **மேவிய** தன் முயற்சியாலன்றி வந்து பொருந்திய. **உறக்கத்தினின் றெழுதல்** என்ற உவமம், உவமான உவமேய மிரண்டினும் முன் குறித்த பயனேயன்றிச் செய்கை நிகழுமாறும் குறித்தது; வினையும் பயனும் பற்றி வந்த உவமம்.

ஆட்கொண்ட திருநாவுக்கரசர் - ஆளுடைய அரசுகள் பொது நீக்கித் தமக்கே ஆளாக அடிமை கொண்டருளியமையால், "சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடனுதல்" (போதம் - *10*) என்றபடி அவரருளும் வண்ணம் பாடியவாறே அருளினர் என்பது. *1795 - 1796* திருப்பாட்டுக்களில் எடுத்துக் காட்டியபடிசிவபெருமானுல் ஆட்கொள்ளப்பெற்றவர் என்ற நினைவில் ஊறி நின்ற புதல்வன் எழுந்தவுடன் அந்நினைவோடும் வணங்கினுன்.

செய்ய - செம்மையுடைய; **பூ** - பூப்போன்ற.

கண்டு புனித நீறு அளித்தார் - கண்டு "காட்டும்....பூதி சாத்த" (*1814*) என்று அப்பூதியார்பாற் கேட்டருளியபடி, இப்போது சிவனருளால் வந்து காட்டக் கண்டு என்க. **புனித நீறு** -உயிரின் மாசறுத்துத் தூய்மை செய்வது.

அன்றே - இறந்தான் என்று பாயினுட்பொதிந்து மறைத்த அன்றே. *36*

1819. (இ-ள்.) பிரிவு உறும்....வாழ்ந்தார் - பிரிந்த உயிரை மீளப்பெற்ற பிள்ளையைக் காண்பார்கள் எல்லாம் தெய்வத்திருத்தொண்டினது செந்நெறிச் சிறப்பினைப் போற்றி வாழ்வடைந்தனர்; நின்ற...நொந்தார் - அங்கு நின்ற, அப்பெற்ருேர்கள் "தாங்கள் அறிதற்கரிய பெருமையுடைய அன்பர் திருவமுது செய்வதற்கு இவன் சிறிது இடையூறு செய்தான்" என்று மனம் நொந்தார்கள்.

(வி-ரை.) பிள்ளையைக் காண்பார் - தொண்டின் நெறியினைப் போற்றி வாழ்ந்தார்! பயந்தார் - சிந்தை நொந்தார் - பிரியும் உயிரை மீளப் பெற்ற மகனை அந்நிலையிற் காண்பாராகிய பிற அடியார்களும் பெற்ருேரும் என்றிருதிறத்தினருடைய மனங்கள் ஒரு தன்மையான நிலையமையாது வெவ்வேறு நிலைகளை அடைந்தன; பிள்ளை உயிர்பெற்றெழுந்தது கண்டு மகிழ வேண்டிய பெற்ருேர் அதற்கு மாருக, வருந்தினர்; இவ் விருவேறு நிலைகளும் இப்பாட்டால் உணர்த்தப்பட்டன.

காண்பார் - கண்டார் என்னுது **காண்பார்** என்று எதிர்கால வினைப்பெயரால் கூறியதென்னையெனின்? காணுந்தொழில் முற்றுமுன் தொண்டினெறி போற்றுந் தொழில் முற்றியவிரைவு குறித்தற்கும், அங்கு அன்று கண்ணுற் காண்பாரேயன்றி இனிக் கருத்திற்காண்பாரும் இவ்வாறே வாழ்ந்தாராவர் என்று குறித்தற்குமென்க.

தொண்டின் நெறி - திருத்தொண்டின் நிலையும் அதற்குச் சிவன் அருளும் முறையும். 606 பார்க்க.

போற்றி வாழ்ந்தார் - போற்றுதலால் வாழ்வடைந்தனர். **வாழ்வாவது சிவனருள் பெறுதல். காண்பார் - வாழ்ந்தார்** - இறந்தகாலம் உறுதியும் விரைவும் குறித்தது.

பயந்தார் - (பிள்ளையைப்) பெற்றோர்கள். பயனை அடைந்தவர்கள் என்ற குறிப்பும் காண்க. பிள்ளையினால் அடியவர் அமுது செய்தற்குத் தாம் மறைத்தும் மறைக்கலாகாது நேர்ந்த இடையூறு கருதிப் பயமடைந்து நின்றவர்கள் என்ற குறிப்பும் தருவதாம்.

தாங்கள் அறிவரும் பெருமை அன்பர் - தாம் மறைத்தாலும் அறிந்துகொள்ளவும் இடையூறு நீக்கவும் அருளாற்றற் பெருமை படைத்தவர் அரசுகளாவார் என்றுணரா திருந்ததனை எண்ணினர்.

சிறிது இடையூறு - காலந் தாழ்க்கக் காரணமாயிருந்ததனை இடையூறு என்றார். **செய்தான் இவன்** - இடையூறாக அப்புதல்வன் ஒன்றுஞ் செய்தானலன்; அதுவன்றிக் காலந்தாழ்க்கலாகாதென்று உட்கொண்டு விடவேகம் பரவுமுன் ஓடிவந்து (1807) பரிகலக்குருத்தையும் சேர்ப்பித்தனன்; அதுவேயுமன்றி, அருந்தவர் அமுது செய்யத் தாழ்க்க இதனை யார்க்கும் அறையேன் என்று திருந்திய மனத்துடன் வந்து அவ்வாறே அமைந்தனன்; இவ்வாறாகவும், **இவன் இடையூறு செய்தான்** என்றது அவன் வழியாக நிகழ்ந்ததனை அவனால் நிகழ்ந்ததாக அப்பெற்றோர் அன்பு மேலீட்டினால் உபசரித்துக்கொண்டு வருந்தினபடி. உலகில் ஒரு குழந்தை பிறந்தபோது தாய் தந்தையோ அன்றி நெருங்கிய உறவினரோ இறந்துபட நேர்ந்தால் அவரிழக்கும்படி அக்குழந்தை ஒன்றுஞ் செய்யாதிருப்பவும், இவன் தாயைத் தொலைத்தவன், பிறக்கும்போதே தகப்பனை தொலைத்தவன் என்றிவ்வாறு கூறுவதும் அக்கருத்தோடு பின்னுளினும் அவனைக் காண்பதும் உலக வழக்கில் நிகழ்வது. இது அவ்விறந்தார்பால் வைத்த அன்பினால் ஆவதுபோல, இங்கு அருந்தவரை அமுதூட்டுதலில் வைத்த தீவிரதர அன்பினால் இவ்வாறு கூறியதும், அவன் உயிர் பெற்றமை பற்றி மகிழாது **சிந்தை நொந்த**மையும் நின்றனவாயின என்க.

சிந்தை நொந்தார் - இது உலகியல்புக்கு நேர்மாறாயது. இதனை அன்புநிலை இவ்வாறு கை வந்தாரே உணரத்தக்கார். "உலகியற் பகையார்" (405-410) என்றவிடத்தின் வரும் நிலைகளும், பிறவும் கருதுக. இவ்வாறு ஈண்டு "நொந்தமை"யும் முன்னர் "மறைத்தமை"யுமே பிறராற் செயற்கருஞ் செயல்களாய் அப்பூதியார் - மனைவியார் இவர்களது பெருமைகளாயின. இங்குச் "சிந்தை நோவாமே" மகிழ்ந்திருப்பாராயின் முன்னர் மறைத்தமை முதலியவை எல்லாம் பொருளற்ற அன்பாய்த் தாழ்ந்த உலக நிலையினையே தரும். நொந்தமை இச்சரிதத்துக்கு உறையாணி என்க. அவர்தம் வாட்டத்தை அறிந்தே அரசுகளும் அவர்கள் மீள அழையாமலே திருக்கோயிலினின்றும் விரைவில் மனையிலெய்தி அமுதுசெய்தருளும் பாங்கினிலமர்ந்தருளினர் (1820). 37

1820. (இ-ள்.) அங்கு...அறிந்து-அப்படி அவர்களது மனவாட்டத்தினை அறிந்து, (அதனால்); சொல்லரசர்....இருப்ப-திருநாவுக்கரசர் அவர்களுடனே கூட அவர்களது ஓங்கிய

1820. ஆங்கவர் வாட்டந் தன்னை யறிந்துசொல் லரசர் கூட
வோங்கிய மனையி லெய்தி யமுதுசெய் தருள வுற்ற
பாங்கினி லிருப்ப, முந்நூல் பயின்மணி மார்பர் தாமுந்
தாங்கிய மகிழ்ச்சி யோடுந் தகுவன சமைத்துச் சார்வார், 38

மனையின் கண்ணே சேர்ந்து, அமுது செய்தருளப் பொருந்திய பாங்கினில் இருக்க; முந்நூல்...சார்வார் - முப்புரிநூல் அணிந்த மார்பினையுடைய அப்பூதியாரும் மேற்கொண்ட பெருமகிழ்ச்சியோடு, அதற்குச் செய்யத்தக்கவற்றை யெல்லாம் அமைத்துச் சார்வாராகி,

(வி-ரை.) ஆங்கு - அவ்வாறாக. முன் பாட்டிற் கூறிய அக்கருத்தால் விளைந்த.

வாட்டந் தன்னை அறிந்து - மகிழாது சிந்தை நொந்தாராதலின், அந்த அகத்தின் குறி முகத்தில் தோன்றவே, அதனாலும் பிறவாற்றாலும் வாட்டம் அறியக்கிடந்தது. முன் "இப்போது இங்கவ னுதவான்" என்ற உரையினைக் கேட்டவுடன் திருவருளால் நிகழ்ச்சிகளை அறிந்த அரசுகள், இங்கு, அவர்களது வாட்டத்தினையும் அதன் காரணத்தையும் அறிதல் அரிதன்று.

கூட - அப்பூதியார் - மனைவியார் - புதல்வர் - முதலிய சுற்றமும், தொண்டர்களும் ஆகிய இவர்களுடன் கூட.

ஓங்கிய மனை - இந்நிகழ்ச்சி காரணமாகக் குருவருளால் முன்னையினும் பெருமை விளங்கிய திருமனை. "அந்தமின் மனை" (*458*) என்றதும் ஆண்டுரைத் தவையும் பார்க்க.

அமுது செய்தருள உற்ற பாங்கினில் இருப்ப - "அமுது செய்தெங் குடிமுழுதுய்யக் கொள்வீர்" (*1812*) என்று முன்னர் அப்பூதியார் விண்ணப்பிக்க எழுந்து போந்து அமுது செய்ய வேறோர் ஆசனத்தேறியருளிய அரசுகள், அவ்விண்ணப்பத்தின் தொடர்பாய் மேலும் வேண்டுதல் இல்லாது தாமே சென்று அமுது செய்யும் பாங்கினி லமர்ந்தருளினர். **பாங்கு** - பண்பு.

தருவன - பெரியவரை அமுது செய்வித்தற்குச் செய்யத்தக்க செயல்களுக்குரிய பண்டங்களும் பிறவும்.

சமைத்தல் - ஈண்டுக் கொணர்ந்து முறைப்பட அமைத்தல் என்ற பொருளில் வந்தது.

சார்வார் - அரசுகளைச் சிவனுகச் சார்வாராகி என்றதும் குறிப்பு.

அரசர் - இருப்ப -மார்பர் தாமும் - சார்பவராகிய (*1820*); நீவி - போக்கி - ஏற்றி - விரித்து - விளக்கி - மரபின் வைத்தாராய் (*1821*); அமுது செய்ய- நல்க - அடியாரோடும் - தமிழாளியார் - அமுது செய்தருளினர் (*1823*) என்று இந்நான்கு பாட்டுக்களையும் தொடர்ந்து முடித்துக்கொள்க. **வைத்தார்** (*1821*) என்றதனை வினைமுற்றாக வைத்து முடிபு கொள்ளினும் இழுக்கில்லை.

தருவன அமைத்து - என்பதும் பாடம். *38*

1821. புகழ்ந்தகோ மயத்தி னீராற் பூமியைப் பொலிய நீவித்,
திகழ்ந்தவான் சுதையும் போக்கிச், சிறப்புடைத் தீப மேற்றி
நிகழ்ந்தவக் கதலி நீண்ட குருத்தினை விரித்து நீரான்
மகிழ்ந்துடன் விளக்கி யீர்வாய் வலம்பெற மரபின் வைத்தார், 39

1821. (இ-ள்.) புகழ்ந்த....நீவி - புகழப்பட்ட கோமயங் கலந்த நீரினாலே நிலத்தை விளங்க மெழுகி; திகழ்ந்தவான் சுதையும் போக்கி - விளங்கும் வெள்ளிய சுண்ணச் சாந்தையும் கோலம்பெற இட்டு; சிறப்புடைத் தீபம் ஏற்றி - சிறப்பாகிய திருவிளக்கினையும் ஏற்றி; நிகழ்ந்த...வைத்தார் - சரித நிகழ்விற்குக் கருவியாக இருந்த அந்த வாழையின் நீண்ட குருத்தை விரித்து அதை நீரினாலே மகிழ்ச்சியுடனே விளக்கி, அரிந்த பக்கம் வலத்தில் இருக்கும்படி அதை முறைமையாக இட்டனராகி,

(வி-ரை.) புகழ்ந்த - வேதங்களாலும் நூல்களாலும் புகழப்பட்ட; புகழ்ச்சிக் கமைந்த தன்மைகளாவன: திருநீறு தரும் மூலமாயிருத்தலும், திருக்கோயிலினை விளக்கும் திருமெழுக்காதலும், ஆனைந்தின் ஒன்றாயிருத்தலும், பிறவுமாம். "நிருத்தர் சாத்து நீறுதரு மூல மவதாரஞ் செய்யும் மூர்த்தம்" (1266); "புத்தேளிர் கோமானின் றிருக்கோயி றூகேன் மெழுகேன்" (திருவா), "அலகிட்டு மெழுக்கு மிட்டு" (தேவா).

கோமயத்தின் நீர் - கோமயம் கலந்த நீர். **கோமயம்** - பசுச் சாணம். "ஆப்ப நீரோ டலகுகைக் கொண்டிலர்".

பூமியைப் பொலிய நீவி - பூமி - திருவமுது செய்யும் இடம்; **நீவுதல்** - துடைத்து மெழுகுதல். இது ஐவகைச் சுத்தியுள் "தான சுத்தி" என்றதன் பாற்படும். சிவபூசையின் அங்கத்தினைப் போன்று மாகேசுர பூசையினும் இன்றியமையாது செய்யத் தகுவது.

திகழ்ந்தவான் சுதையும் போக்கி - வெள்ளிய சுண்ணச் சாந்தினால் நேர்கோலமிட்டு. **சுதை போக்குதல்** - கோலமிடுதல். கரைத்த மாவினாற் கோலமிடுதல் என்றலுமாம்.

சிறப்புடைத் தீபம் ஏற்றி - ஒளி தரும் அவசியத்துக்காக அன்றிச் சிறப்புக்காக விதிக்கப்பட்ட தீபம். **தீபம்** - தம்பமாக நிற்பதும், பூசையில் ஏந்துவதுமாம். "விதிமுறை தீப மேந்தி" (851). சிவபூசையிற் போலத் தூப தீபங்கள் மாகேசுவர பூசைக்கும் உரியன. **சிறப்புடை - சிறப்பு** -விசேட பூசை. "சிறப்பொடு பூசனை" (குறள்). நைமித்திகம் என்பது ஆகமம். "பங்குனியுத் திரமாந் திருநாளுயர் சிறப்பு" (நமிநந்தியார் புரா - 20). **சிறப்புடை** - சிறப்புக்கு உரிய. அரசுகளது பூசைக்குதவும் பேற்றினால் ஏனைத் தீபங்களினும் சிறந்த என்றலுமாம்.

நிகழ்ந்த அக்கதலி நீண்ட குருத்து - நிகழ்ந்த - முன் சரித விளைவு நிகழ்ந்த; **அ** - முன்னறி சுட்டு; **நீண்ட குருத்து** - பொற்குருத்து (1805); "குருநாளக் குருத்து" (1469); **விரித்து** - விரியும் பருவத்தி லிருந்ததாயினும் முற்றும் விரியாத குருத்தாதலின் விரித்தல் வேண்டப்படுவது.

1822. திருந்திய வாச நன்னீ ரளித்திடத், திருக்கை நீவும்
பெருந்தவர் மறையோர் தம்மைப் பிள்ளைக ளுடனே நோக்கி,
"யரும்புதல் வர்களு நீரு மமுதுசெய் வீரிங்"கென்ன,
விரும்பிய வுள்ளத் தோடு மேலவ ரேவல் செய்வார், 40

நீரால் - விளக்குதல் - பரிகலக் குருத்தினைக் கழுவியிடுதல் சைவ மரபு விதி. தூய்மை செய்தலும், இங்கு நிகழ்ந்தது போல அரவு முதலிய விடப் பிராணிகளின் தொடக்கு நீக்குதலும் கருத்து.

ஈர்வாய் வலம்பெற மரபின் வைத்தார் - இலை அரிந்த பக்கம் உண்பவருக்கு வலப்புறமாக இருக்கும்படி இல்லை வைக்கப்பட வேண்டுமென்பது சைவ மரபுவிதி.

பூமியைக் கோமய நீரால் நீவுதல், சுதை போக்குதல், தீபம் ஏற்றுதல், பரிகலம் திருத்துதல், பரிகலம் இடுதல், கை நீவ நன்னீரளித்தல் முதலிய இவை எல்லாம் சைவ மரபில் மாகேசுரபூசைக்குரிய இன்றியமையாத அங்கங்கள் என்பதை விளக்கி வற்புறுத்தும் பொருட்டு இங்கு அப்பூதியார் செயலின் வைத்து, ஆசிரியர் விரித்துக் காட்டினார். மாகேசுர பூசை செய்யும் அன்பர்கள் புராணத்துள் அவ்விடத்து விரிக்காமல் இங்கு விரித்தது அக்குறிப்பும் தருவது. உண்ணும் மரபும், அடியார்க்கு மாகேசுர பூசை செய்யும் மரபும் சைவ வுலகில் மறந்து ஒதுக்கப்படும் இந்நாளில் இவற்றை எடுத்துக் காட்டுதல் மிகவும் இன்றியமையாததாகும்.

வலம்பட - என்பதும் பாடம். *39*

1822. (இ-ள்.) திருந்திய...அளித்திட - திருத்தமாகிய மணமுடைய நல்ல நீரைக் கொடுக்க; திருக்கை....என்ன - திருக்கரத்தைக் கழுவும் பெருந்தவராகிய திருநாவுக்கரசு நாயனார், அப்பூதியடிகளாரைப் பிள்ளைகளுடனே நோக்கி, "அருமையாகிய புதல்வர்களும் நீரும் இங்கு மருங்கிருந்து அமுது செய்வீராக" என்று சொல்ல, விரும்பிய....செய்வார் - விருப்பமுடைய உள்ளத்துடனே மேலவராகிய அவர் ஏவியபடி செய்வாராய்,

(வி-ரை.) திருந்திய....திருக்கை நீவும் - கை நீவும் - கை கழுவும்; உணவு கொள்ளும் முன்னர்க் கை கழுவுதல் வேண்டும் என்பது சமய வொழுக்க நெறியே யன்றிப் புறத் தூய்மைக்குரிய ஒழுக்கமுமாம். இல்லாவிடில் விரல் நுனிகளிலும் கையிலும் பற்றிய தூய்மையற்ற பொருள்கள் உணவுடன் கலந்து விடத்தன்மை விளைத்து நோய்க்குக் காரணமாகும். இவ்வொழுக்கந்தானும் இந்நாளில் கைவிடப் பட்டு மாக்கள் விலங்குத் தன்மையடைந்து வருதல் வருந்தத் தக்கது.

திருந்திய வாச நல் நீர் - அடைமொழிகள், கை நீவுதற்கும் உண்ணுதற்கும் உதவும் நீருக்கு அமைக்க வேண்டிய அமைதிகள் குறித்தன. **திருந்திய** - ஊற்று - கிணறு - ஆறு - குளம் முதலிய நீர்நிலைகளினின்றும் எடுக்கும் நீர், மண்ணிலும் காற்றிலும் படுதலாலும், ஏனைப் பிராணிகளின் தொடக்காலும், பிறவாற்றாலும் நுண்ணிய விடப் பொருள்களுடன் பொருந்தும். அதனை மணல் - துணி முதலியவற்றுட் செலுத்தி அசுத்தங்களைப் போக்குதலும்,

1823. **மைந்தரு மறையோர் தாமு மருங்கிருந் தமுது செய்யச்**
சிந்தைமிக் கில்ல மாதர் திருவமு தெடுத்து நல்கக்
கொந்தவிழ் கொன்றை வேணிக் கூத்தனு ரடியா ரோடும்
அந்தமி ழாளி யாரங் கமுதுசெய் தருளி னூரே. 41

பின்னர் வெயிலில் வைத்தாற்றுதலும், இவ்வாறு பிறவும் செய்து **திருத்தல்** வேண்டுமென்பது நமது முந்தையோர் கண்ட முறை. வெயிலின் வைத்தலால் நீரில் கண்காணுமல் உள்ள விடப்பூச்சிகள் ஒழிந்துபடும் என்பது உண்மை. இந்நாளில் நீரைக் காய்ச்சி ஆற வைத்தலும், மருந்துப் பண்டம் பல பெய்தலும், பிறவும் செய்தல் காண்க. இந்நாள் முறை முன்னுள் முறை போல நாட்டு நடப்புக்கேற்றவாறு எளிதின் அமையாது பொருட் செலவும் பயப்பதும் கண்டுகொள்க. **வாசம்** - நீரினுட் பெய்யும் விலாமிச்சை முதலிய வாசனை வேர்களும் மலர்களும் பசுங்கற்பூரம் குங்குமப்பூ முதலியனவும் ஆம். இவை வெறும் மணத்துக்காக அன்றிக் குணத்துக்காகவும் உதவுவன. **நல்நீர்** - நீரின் **நன்மை**யாவது தடிப்பல்லாது இலகுவான நீர் - உருசியுள்ள நீர் - சுத்த நிலத்தில் ஊறும் நீர் - மேனிலத்தும் பக்கங்களிலும் உள்ள அசுத்தங்களால் கெடாதவாறு அமைந்த நீர் என்றிவை முதலாயின. "வெயிலின்வைத் தாற்றிய தண்ணீர் நாற்றமிட் டிருப்ப" (திருவிடை - மும் - கோவை.16).

மறையோர் தம்மைப் பிள்ளைகளுடனே நோக்கி - கருணை நோக்க மளித்து என்க. அனைவரையும் அருட்கண்ணுற் பார்த்துச் சிவனருள் பெருகச் சிவதீக்கை செய்து மாகேசுரர்களாக்கி என்பதும் குறிப்பு. **நோக்குதல்** - அழுந்திய பார்வை.

அரும் புதல்வர்களும் நீரும் இங்கு அமுது செய்வீர் - அருமையாவது பெற்றோர்க் கேற்குமாறு சிவனடிமைப் பண்பின் அமைந்த சிறப்பு; **பெறலரும்** - (1811). சிறப்பு நோக்கி **நீரும்** என்பதனைப் பின் வைத்தார். அருமை நோக்கி **புதல்வர்** முன் வைக்கப்பட்டனர் என்பதுமாம். வரும் பாட்டில் "**மைந்தரு மறையோர் தாமும்**" (1823) என்பதும் காண்க.

இங்கு - இவ்விடத்து - எம்முடனே. இது அப்பூதியாருக் குரைத்தது.

விரும்பிய உள்ளத்தோடு மேலவர் ஏவல்செய்வார் - ஏவலினுல் விருப்பும் நிகழ்ந்தது என்பதாம். அவ்வாறு அவர் ஏவியிராவிடின் அரசுகளுடன் அமர்ந்து திருவமுது செய்யும் தகுதி தமக்கில்லை என்றும், அவர் உண்டபின் குருவின் பரிகல சேடமாகப் பின் உண்பதே தகுதி என்றும் கொண்டது அப்பூதியார் திருவுள்ளம் என்பதை அரசுகள் அறிந்தருளி இவ்வாறு ஏவியருளினர் என்பது ஈண்டுக் கருதக் கிடப்பதாம். **மேலவர் ஏவல்** என்ற குறிப்புமது. மாகேசுவரர்கள் இயல்பு பற்றி 851-ல் உரைத்தவை பார்க்க. **மேலவர்** - மேன்மையாவது திருத்தொண்டின் உறைப்பு. உத்தராபதியார் சிறுத்தொண்டரை உடனுண்ண ஏவியதும் காண்க. 40

1823. (இ-ள்.) மைந்தரும்...செய்ய - மைந்தர்களும் மறையவராகிய; அப்பூதியாரும் பக்கத்திலிருந்து அமுது செய்ய; சிந்தைமிக்கு......நல்க - மனமிக மகிழ்ச்சியுடன் மனைவியார் திருவமுது எடுத்துப்படைக்க; கொந்து அவிழ்.....அருளினர் - கொத்தாய் மலர்கின்ற

கொன்றை மலரை அணிந்த சடையினையுடைய அருட்பெருங் கூத்தனாகிய சிவபிரானது அடியார்களோடும் அழகிய தமிழ்ச் சிங்கம் போன்ற திருநாவுக்கரசு நாயனார் அங்குத் திருவமுது செய்தருளினார்.

இந்நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டுரைக்க நின்றன.

(வி-ரை.) மருங்கு - தம்மருகு. தம்முடனே. **மருங்கிருந்து அமுது செய்ய** - உடனிருந்து அமுது செய்ய. இவ்விடத்து அந்தணர் வேளாளர் முதலிய சாதி குலங்களின் நிலைபற்றியும், உடனுண்ணல் முதலிய சமூக ஒழுக்க வழக்க நிலைபற்றியும் பலவாறும் ஆராய்ச்சி செய்வார் பலர். இங்கு நிகழ்ந்தது சமய உயர்நிலைபற்றியது; சாதிகுலம் சமூக ஒழுக்க வழக்கங்கள் வேறு; அவை ஒழுக்க உலக நிலைபெறக்கருதியனவாய் உடம்பைப் பற்றியன. முன்னையன உயிரினைப் பற்றியவை. அரசுகள் "புதல்வர்களும் நீரும் இங்கு அமுது செய்வீர்" என்று ஏவியதனாலே, அந்த ஏவல் செய்வாராய் மைந்தரும் அப்பூதியாரும் மருங்கிருந்து அமுது செய்தனர் என்றதனால், இது அந்நாளில் சமூக வழக்கன்று என்பது போதரும். சிவனன்பு பற்றிய உயிரின் உயர்ந்த சமய வொழுக்கந் தலைப்பட்ட போது ஏனைய உலக வொழுக்கங்கள் முனைக்கமாட்டா. ஈண்டு அவற்றுக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. அந்நினைவுகள் தானும் எழாது உலக முன்னைச் சார்புகள் மறக்கப்படும். அவ்வாறன்றி உலகச் சூழலில் முழுதும் உழன்றுபடும் ஏனையோர் இந்நிகழ்ச்சிகள் பற்றி உலக மக்கட் கூட்டங்களின் நிலைபேறுபற்றிய சமூக ஒழுக்கங்களை நீத்து விடுதல் செல்லாது. அரசுகளும் அப்பூதியாரும் உடனிருந் துண்டமை பற்றி வேளாளராவாரெவரும் வேதியராவாரெவரும் உடனுண்ணுதற் குரியார் என்று முடித்தல் சாதி வேற்றுமையை ஒழிக்க உதவாது உறுதிப்படுத்துவதற்கே துணை செய்வதாகும். நந்தனார் ஒருவர் அன்பு நிலைபற்றித் திருஅருளின் படியே தீயின் மஞ்சனஞ்செய்து இறைவர் திருமுன்பு நேரே சென்றருளினார் என்ற அதனால் அவர் குலத்தவராவார் எவரும் எத்திறத்தினரேனும் குலவொழுக்கங் கடந்து நேரே கோயிலினுள் திருமுன்பு புகுதற்குரியார் என்று கூறுவோரும் இவ்வாராய்ச்சியாளரும் ஒப்பர். இங்குச் "சிந்தை மிக்கு இல்ல மாதர் திருவமு தெடுத்து நல்க" என்று மேற் கூறுதலானும் இஃது அந்நாள் வழக்கின்மையும் சிவனன்பு மீக்கூர்தலால் உலகிறந்த நிலையின் நிகழ்ந்தது என்பதும் புலப்படும் "அடியாரோடும் அமுது செய்தருளினர்" என்றது மேலும் அதனை வற்புறுத்தும்.

இல்ல மாதர் - திருவமுது எடுத்துச் - சிந்தைக்கு - நல்க - என்க. இவ்வாறு சிவன் அன்பு மேம்பாடில்லாத உலகநிலையில் இவ்வாறு இல்லமாதர் நல்குதல் நிகழ இயலாமையும் குறிப்பு. **இல்ல மாதர்** - மனைவியார்; இல்லத்திற்குரியவர்.

அடியாரோடும் - அரசுகள், அங்கு அப்பூதியாரும் மக்களும் என்ற இவர்களேயன்றி ஏனை அடியார்களுடனும் இருந்து மாகேசுவர பூசைகொண்டருளித் திருவமுது செய்தருளினர். குங்குலியக்கலய நாயனாரும் அடியார்களும் ஒருங்கு திருவமுது செய்யும்படி அவர்தம் திருமனைவியார் பூசித்தளித்தமை இங்கு நினைவு கூர்தற்பாலது (851). இந்த அடியார்கள் அரசுகளுடன் சென்றவர்களும் அங்குக் கோயிலின் முன் இந்நிகழ்ச்சி கண்டு போற்றி வாழ்ந்தார்களும், பிறருமாம் என்க. அடியார்களுடனன்றி அமுது செய்யலாகா வழக்குப்பற்றிச் சிறுத்தொண்ட நாயனார் புராணத்தினுள் உத்தராபதியார் கூறுதல் காண்க. (சிறுத். புரா - 76)

1824. மாதவ மறையோர் செல்வ மனையிடை யமுது செய்து
காதனண் பளித்துப் பன்னாள் கலந்துட னிருந்த பின்றை
மேதகு நாவின் மன்னர் விளங்கிய பழன மூதூர்
நாதர்தம் பாதஞ் சேர்ந்து, நற்றமிழ்ப் பதிகஞ் செய்வார், 42

மைந்தரும் மறையோரும் மருங்கிருந்து அமுது செய்யத் தமிழ் **ஆளியார், அடியாரோடும்** அமுது செய்தருளினார் என்ற கருத்தும் முன் உரைத்த கருத்துக்களை வலியுறுத்துவதாம்.

தமிழ் ஆளியார் - திருநாவுக்கரசர்; **ஆளி** - சிங்கம்; அது ஏனையவற்றுக்கரசாயிருக்கும் தன்மையும், பெருந்தன்மையும் குறித்தது. தமிழின் சிறப்பே அருள் வெளிப்பாட்டுக் கருவியானமை குறிப்பு. தமிழை ஆள்பவர் என்றலுமாம்.

அமுது செய்து அருளினார் - அருள் புரிந்தனர். அருள் புரிந்தது வரும்பாட்டிற் கூறுவார். *41*

1824. (இ-ள்.) மாதவ மறையோர்....அமுது செய்து - மாதவஞ் செய்த மறையோராகிய அப்பூதியாரது செல்வம் பொருந்திய திருமனையில் இவ்வாறு திரு அமுது செய்தருளி; காதல் நண்பு அளித்து - காதல் பெருகிய நட்பின் திறத்தை அளித்தருளி; பன்னாள் கலந்து உடன் இருந்த பின்றை - பல நாள்கள் மனங்கலந்த வொருமையோடு உடனாகி இருந்த பின்னர்; மேதகு....செய்வார் - மேன்மையுடைய திருநாவுக்கரசர் விளக்கமுடைய திருப்பழனம் என்னும் மூதூரில் அமர்ந்தருளி நாதருடைய திருவடிகளைச் சார்ந்து நல்ல தமிழ்ப் பதிகத்தை அருளிச் செய்வாராகி,

(வி-ரை.) மாதவ மறையோர் - முன்னர்ப் பெருந்தவங்கள் செய்ததன் பயனாகக் குருவருள் பெறும் இப்பெரும்பேறு பெற்றனர் என்பது குறிப்பு.

செல்வமனை - செல்வம் - முத்தித்திரு; "செல்வன் கழலேத்தும் செல்வ" முடைய செல்வராய்த் "திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட திருநாவுக்கரசர்" பெருமான்றாமே எழுந்தருளிக் கருணைசெய்தற் கிடமாய் நிகழ்ந்த செல்வம்.

காதல் நண்பு அளித்து - காதலாய் விளைந்த நண்பு. ஈண்டுக் காதல் என்றது அரசுகளினிடத்து "அறியா முன்னே, **காண்டகு காதல்** கூரக் கலந்தவன் பினராயிருந்த" (*1781*) அப்பூதியாரது மனக் காதல் குறித்தது. அக்காதலின் பொருளாவார் தமது நட்பினை அளித்து. **அளித்தல்** - கருணையுடன் தருதல்.

கலந்து உடனிருந்த - கலத்தல் - மன வொருமைப்பாடு பெற்றுச் சேர்தல் - மனங் கலந்து என்க. **உடனிருத்தல**ாவது இருவரும் ஒரு தன்மை பெற நிகழ்தல்; "உடனுறைவின் பயன் பெற்றார்" (*1509*) என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க.

பாதம் சேர்ந்து - அத்தலத்தை அடைந்து நாதருடைய திருவடிகளைச் சார்ந்து - பணிந்து என்ற பொருளில் வந்தது.

பதிகம் செய்வார் - பதிகத்தை அருளிச் செய்வாராகி: முற்றெச்சம்.

1825. **அப்பூதி யடிக ளார்தம் அடிமையைச் சிறப்பித்** தான்ற
மெய்ப்பூதி யணிந்தார் தம்மை விரும்பு"சொன் மாலை" வேய்ந்த
இப்பூதி பெற்ற நல்லோ ரெல்லையி லன்பா **லென்றுஞ்**
செப்பூதி யங்கைக் கொண்டார் திருநாவுக் கரசர் பாதம். 43

செய்வார் - வேய்ந்த - என்று வரும் பாட்டுடன் கூட்டுக. நாவின் மன்னர் - பழனநாதர்தம் பாதம் சேர்ந்து - பதிகம் செய்வார் (*1824*), அப்பூதியார் - அடிமையைச் சிறப்பித்துப் பூதியணிந்தார் தம்மைச் - "சொன் மாலை" வேய்ந்த(தாகிய) - இப்பூதி (*1825*) என்று கூட்டி வினை முடிபு கொள்க.

செய்தார் - என்ற பாடம் பிழை. **42**

1825. (இ-ள்.) அப்பூதி யடிகளார்தம்...சிறப்பித்து - அப்பூதியடிகளாருடைய திருத்தொண்டின் பெருமையினைச் சிறப்பித்து; ஆன்ற..... வேய்ந்த - பெருமையுடைய திருமேனியில் திருநீற்றை அணிந்த சிவபெருமானை விரும்பும் "**சொன்மாலை**"யினைத் தொடுத்துச் சாத்திய; இப்பூதி பெற்ற நல்லோர் - இந்தப் பெருஞ் செல்வத்தைப் பெறும் பேறு பெற்ற நல்லோராகிய அவ் அப்பூதியார்; திருநாவுக்கரசர் பாதம் எல்லையில் அன்பால் என்றும் செப்பு ஊதியம் கைக் கொண்டார் - திருநாவுக்கரசரது திருவடிகளே பொருள் என்று கொண்டு எல்லையில்லாத அன்பினாலே எப்போதும் எந்நாளும் சொல்லித் துதிக்கின்றதாகிய இந்த ஊதியத்தினைக் கைவரப் பெற்றனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை.) அப்பூதி - அடிமையைத் சிறப்பித்துச் "சொன் மாலை" வேய்ந்த - சொன் மாலை - இத் தொடக்கமுடைய திருப்பதிக முதற் குறிப்பு. "சொன் மாலை" என்று தொடங்கும் பதிகம் என்க. முன்னரும் இக் கருத்தே பற்றித் "தீந்தமிழின் தொடை மாலைச் "சொன்மாலை" பாடினார்" (*1476*) என்றமை காண்க. **சொன்மாலை** - பதிகத் தொடக்கத்துக்கும் பதிகத்துக்கும் இரட்டுற மொழிந்து கொள்க.

சொன் மாலை வேய்ந்த - பதிகத்தைத் தொடுத்துச் சாத்திய, **மாலை** என்றதற் கேற்ப வேய்ந்த என்றார்.

வேய்ந்த இப்பூதி - வேய்ந்ததாகிய இப்பெருஞ் செல்வம்.

நல்லோர் - அப்பூதியடிகள்.

பூதி பெற்ற நல்லோர் - பாதம் செப்பும் ஊதியம் கைக் கொண்டார் என்க. **பூதி பெற்ற** - பெற்றமையால் என்று காரணப் பொருட்டாகக் கொள்ள நின்றது. அரசுகள் திருப்பதிகத்தினுள் அடிமையைச் சிறப்பிக்கும் அருட் பூதியாகிய ஆசிபெற்றதனால் குருவருளை மறவாது சிந்திக்கும் ஊதியம் பெறலாயினர். "அவனருளாலே அவன்றாள் வணங்கி" என்றநிலை குருவினுக்கும் ஒக்கும். **ஊதியம் - பெருஞ் செல்வம்பெற்ற பயன்.** இப்பாட்டிற்குப் பிறர் எல்லாம் தத்தமக்கு வேண்டியவாறே யுரைத்தனர். **செப்புதல்** - போற்றுதல்; "ஏத்தி" (*1826*) என்பது காண்க.

1826. இவ்வகை யரசி ஞம மேத்தி,"**யெப் பொருளு நாளும்**
அவ்வருந் தவர்பொற் ருளே" யெனவுணர்ந் தடைவார், செல்லுஞ்
செவ்விய நெறிய தாகத், திருத்தில்லை மன்று ளாடும்
நவ்வியங் கண்ணுள் பங்கர் நற்கழ னண்ணி ஞரே. 44

கை கொள்ளுதல் - திண்ணமாக - உறுதியாகப் - படித்தல்; விடாது பற்றி ஒழுகுதல். **பாதம் - கைக்கொண்டார்** - என்ற நயமும் காண்க. 43

1826. (இ-ள்.) இவ்வகை...ஏத்தி - இவ்வகையாகத் திருநாவுக்கரசரது திருநாமத்தையே துதித்துக்கொண்டு; எப்பொருளும்....அடைவார் - "அடைய வேண்டிய உறுதிப்பொருள் எல்லாம் எந்நாளும் அந்த அருந்தவரின் பொற்பாதங்களேயாம்" என்று உணர்ந்து அவற்றையே அடைவாராகி; செல்லும் செவ்விய நெறி அது ஆக - செல்கின்ற செம்மையாகிய வழி அதுவேயாகக் கொண்டு, திருத்தில்லை.....நண்ணினுர் - திருத்தில்லை யம்பலத்தில் ஆடுகின்ற, மான் போன்ற அழகிய கண்களையுடைய உமாதேவியாரது பாகத்தை யுடையவரது நல்ல பாதங்களை அடைந்தனர்.

(வி-ரை.) அரசின் நாமம் இவ்வகை ஏத்தி என்க; **இவ்வகை** - எல்லையில்...பாதம் என்று முன்பாட்டிற் கூறியபடி; முன்பாட்டில் பாதம் செப்பும் ஊதியம் கைக் கொண்டார் என்றதனை **ஏத்தி** என்று விளக்கம் செய்தார்.

எப்பொருளும் - இறைவர் வழிபாடும், பாச நீக்கமும், சிவப்பேறுமாகிய வீடுபேறும் முதலிய எல்லா உறுதிப் பொருள்களும். நாளும் - எந்நாளும். இன்பிலும் துன்பிலும், வாழ்விலும் சாவிலும், முதலிய எக் காலத்தும்; விழிப்பு - உறக்கம் முதலிய எந்நிலையிலும்.

தாளே எப்பொருளும் - ஆவன - என்று ஆக்கச் சொல் வருவிக்க.

உணர்ந்து - உள்ளுணர்ச்சியிற் கை வரப் பெற்று, **அடைவார்** - தாளே புகலாக அடைவார். "அடைவால்" என வரும் பாட்டிற் கூறுதல் காண்க.

செல்லும் - நெறி - அது - ஆக - அதுவே நெறியாக - சாதனமாக - ஆருக. அரசுகளின் பாதமே எப்பொருளும் ஆவன என்று கடைப்பிடித்து அதுவே வழியாகச் சிவனடிசேரப் பெற்றனர். பற்ருகச் சார்ந்தது அரசுகள் பாதம்; அச்சார்வே வழியாகச் சேரப் பெற்றது சிவன் பாதம் என்க. வரும் பாட்டும் பார்க்க. 44

1827. (இ-ள்.) மான் மறிக்கையர்.....போற்றி - மான்மறியினைக் கையில் ஏந்திய சிவபெருமானுடைய பொற்பாதங்களைத் திருநாவுக்கரசரது அடைவினுலே பெற்ற மேன்மையுடைய அப்பூதியார் என்னும் வேதியர் பாதத்தைப் போற்றி செய்து (அத்துணையானே); கான் மலர்...நவிலலுற்றேன் - காடுபோல தாமரை மலர்களையுடைய வாவிகள் பொருந்திய வயல்கள் சூழ்ந்த திருச்சாத்தமங்கையில் அவதரித்த நான்மறை வல்ல திருநீலநக்கர் செய்த திருத்தொண்டினைச் சொல்லப் புகுகின்றேன்.

1827. **மான்மறிக் கையர் பொற்ருள் வாகீச ரடைவாற் பெற்ற
மேன்மையப் பூதி யாராம் வேதியர்** பாதம் போற்றிக்,
கான்மலர்க் கமல வாவிக் கழனிசூழ் சாத்த மங்கை
நான்மறை நீல **நக்கர்** திருத்தொழி னவில லுற்றேன், 45

(வி-ரை.) இப்பாட்டினுல் இதுவரை கூறி வந்த புராணத்தைச் சுருக்கி வடித்தெடுத்து முடித்துக் காட்டி, இனிக் கூறப்புகும் புராணத்துக்குத் தோற்று வாய் செய்கின்ருர் ஆசிரியர்.

வாகீச ரடைவால் மறிக்கையர் பொற்ருள் பெற்ற மேன்மை என்க. இஃது இப்புராணத்தின் சாரம். **வாகீசர் அடைவு** - வாகீசரது சார்பு - வாகீசரையே பொருளென அடைந்த நெறி. **வழி** வாகீசர் அடைவும், அவ் வழியே சென்று சேர்ந்த **இடம்** - சிவன் **பொற்ருளுமாம்**. "திருநாவுக்கரசெனுமோர், சொற்ரு னெழுதியுங் கூறியு மேயென்றுந் துன்பில்பதம், பெற்ரு '**ளொருநம்பி யப்பூதி**' யென்னும் பெருந்தகையே" என்று இக் கருத்தையும் திருத்தொண்டத்தொகை யாட்சியையும் சேர்த்துப் பாடினர் பின் வந்த பெரியராகிய சிவப்பிரகாசர்.

மலர்க்கமலக் கான் வாவி - என்க. மலர்களாகிய தாமரையைக் காடுபோல உடைய வாவி. இக் கருத்தைத் தொடர்ந்து மேல்வரும் புராணத்துள் முதற்பாட்டில் "பூத்த பங்கயப் பொகுட்டின்மேற் பொருகய லுகளுங், காய்த்த செந்நெலின் **காடு**சூழ் காவிரி நாட்டு" (*1828*) என்பது காண்க. சோழ நாட்டிற் கமலங்கள் இலையும் பூவுமாகக் காடாகத் தலை தடுமாறிக்கிடக்கும் வாவிகளைக் கண்ணுறுவார்க்கு இதனுண்மை விளங்கும். "கடிகமழ் கமலக் காடு பூத்தது" என்ற கம்பன் பாட்டும் காண்க. இனி, **கான்** - மணம் என்று கொண்டு, மணம் பொருந்திய மலராகிய கமலம் என்றும் கால் - தாள் - என்று கொண்டு தாளில் மலர் கமலம் என்றும் உரைத்தலுமாம். வாவிச் சிறப்புப் பற்றி இப்பாட்டிலும், வாவிகளைச் சென்று சென்று ஊட்டும் ஊற்றுச் சிறப்புப்பற்றி வரும் பாட்டிலுமாக நீர்வளம் பற்றி எடுத்துக்கொண்டது "ஒலிபுனல்சூழ் சாத்த மங்கை" என்ற முதனூற் கருத்தை விரித்துக் காட்டியபடி.

நான் மறை - மரபு அறிவித்தபடி, நான் மறை நீல நக்கர் என்றும், நீல நக்கர் நான் மறைத் திருத்தொழில் என்றும் கூட்டி உரைக்க நின்று, அவரது திருத்தொண்டினையும், அவர் ஆளுடைய பிள்ளையாரது திருமணத்தில் மறை வேள்விச் சடங்கெல்லாம் செய்து சேவித்து உடன் சிவன் திருவடி யடைந்த சரித வரலாற்றுக் குறிப்பும் தோற்றுவாய் முகப்பிற் காட்டி நின்றது. *45*

சரிதச் சுருக்கம்:- சோழநாட்டில் திங்களூரில் வேதியர் குலத்தில் அவதரித்தவர் **அப்பூதியார்**. அவர் சிவனுக்கன்பர்; நற்குணங்கள் நிறைந்தவர்; களவு பொய் கோபம் காமம் முதலாகிய குற்றங்களைக் காய்ந்தவர்; **திருநாவுக்கரசரைக்** கண்டறியா முன்னே அவர் பாதங்களில் மிக்க அன்பு கொண்டவர்; தமது திருமனையில் அளவைகள், மக்கள், முதலிய

எல்லாம் திருநாவுக்கரசர் பெயரிட்டழைப்பர்; தாம் அமைத்த தண்ணீர்ப்பந்தர், சாலை குளம் முதலிய அறங்கள் பலவற்றையும் திருநாவுக்கரசர் பெயராலே அமைத்து இயற்றி இவ்வாறெழுகி வந்தனர்.

அந்நாளில், திருப்பழனத்தை வணங்கிப் பிறதலங்களையும் வணங்கும் பொருட்டுத் திருநாவுக்கரசர் திங்களூரின் பக்கத்தே வழிச் சென்றனர். அங்கு அளவில்லாத சனம் எப்போதும் செல்கின்ற பெருவழிக் கரையில் அருளுடையார் உள்ளம் போன்று குளம் நிறைந்த தடம்போற் குளிர்ந்து நிழலைத் தரும் தண்ணீர்ப்பந்தரை வந்தடைந்தனர்; "**திருநாவுக்கரசர் தண்ணீர்ப் பந்தர்**" என்று சந்தம்பட அதனுள் எங்கும் வரைந்திருந்ததனைத் தாம் கண்டார். "இப்பந்தரை இப்பெயரிட்டு இங்கு அமைத்தார் யாவர்?" என்று கேட்டனர். அங்கு அதனை அறிந்தவர்கள் "ஆண்ட வரசெனும் பெயரால் அப்பூதியார் செய்தனர். இவ்வாறு எங்கு முள்ளன சோலை, குளம், கா" என்றார். "இதற்கு என்ன கருத்து என்றறிதல் வேண்டும்" என்று கொண்டு, அங்குள்ளாரை "அவர் எவ்விடத்தார்?" என்று கேட்க, அவர்கள் "அவர் இவ்விடத்தார்; இப்போது தான் மனையிற் சென்றனர்; அதுவும் நணித்து" என்னக் கேட்டு, அவரது திருமனைக் கடையிற் சென்று சேர்ந்தனர்.

ஓர் அடியவர் தமது முன்கடைத் தலையில் வந்தார் என்று கேட்டு மனைக்குள்ளிருந்த அப்பூதியார் வந்து அரசுகளை வணங்கா முன் அரசுகள் அவரை வணங்க, "அருள்முன் பொழியும் வடிவுடையீர்! தேவரீர் என்மனையில் வந்தருளஅடியேன் முன்னே முடிவில் தவஞ் செய்தேன்கொல்!" என்றனர் அப்பூதியார். அதற்குக் கோதில் மொழிக் கொற்றவனார் "யாம் திருப்பழனத்திற் சிவபெருமானைச் சேவித்து வருகின்றோம். வழிக் கரையில் நீர்வைத்த வளந்தரு தண்ணீர்ப் பந்தரைக் கண்டு, அவ்வாறே செய்கின்ற பிற அறங்களையும் கேட்டும் இங்கு அணைந்தோம்" என்று சொல்லி, "அத் தண்ணீர்ப் பந்தரில் நும்பேர் எழுதாதே **வேறொரு பேர்** முன் எழுத வேண்டிய காரணம் என்கொல்? கூறும்" என்று வினவினர் இதனைக் கேட்டவுடன் அப்பூதியார் சிந்தை நிலையழிந்தனர் நீர் நன்று கூறி யருளவில்லை; அமணர்களும் அரசனும் கூடிச் செய்த சூழ்ச்சிகளைத் **திருத்தொண்டின் உறைப்பினாலே** வென்றவர் தம் **திருப்பெயரோ வேறொரு பேர்** என்று சொல்லத் தகுவது? நம்மையுடைய வராகிய சிவபெருமானது திருவடிக்கீழ் அன்பினுடன் செய்யும் திருத்தொண்டினாலே இம்மையிலும் நாம் பிழைப்பது என்று என்போல்வார்களும் தெளியும்படி **செம்மைபுரி** திருநாவுக்கரசர் திருப்பெயரினை யான் எழுத, யான் கேட்கவே **வெம்மை** மொழி விளம்பினீர்; கடலைக் கல்லே மிதப்பாகப் போந்து கரையேறிய அவரது பெருமையினைச் சிவனது புவனத்தில் அறியாதார் யாவர் உளர்? மங்கலமாம் திருவேடத்துடன் நின்று இவ்வகை மொழிந்தீர் நீர் எங்குறைவீர் நீர் தாம் யார்? "இயம்புவீர்!" என்று கேட்டனர். அவரது பெருமையினை அறிந்து, திருநாவுக்கரசர், "பிறதுறையினின்றும் ஏறும்படி அருள்பெருகு சூலையினால் சிவபெருமான் ஆட்கொள்ள, வந்து அடைந்த, தெருளும் உணர்வில்லாத அந்தச் சிறுமையுடையவன் யான்!" என்றனர். இது கேட்டதும் அப்பூதியடிகளின் கைகள் சிரமேற் குவிந்தன; கண்ணீரருவி பொழிந்தது; உரை குழறிற்று; உடம்பெல்லாம் மயிர்க்கூச் செறிந்தது; அவர் தரையில் வீழ்ந்து அரசுகளது சரண கமலம் பூண்டனர், அவரை அரசுகள் எடுத்தருளினர். அற்றவர்கள் அருநிதியம் பெற்றாற் போல அப்பூதியார் மனமுற்றும்

களிப்படைந்து அவரது திருமுன்பு நின்று கூத்தாடினர்; சூழ ஓடினர்; பாடினர்; மூண்ட மகிழ்ச்சியினால் முன் செய்யத் தக்கது இன்னதென்று அறியாதே திருமனையினுட் சென்று மனைவியார் - மக்கள் - சுற்றத்தார் முதலிய எல்லாருக்கும் அரசுகள் எழுந்தருளும் மகிழ்ச்சியைச் சொல்லினர்; எல்லாரையும் உடன்கொண்டு வந்து அரசுகளை இறைஞ்சுவித்து மிக்க காதலுடன் அவரை உள்ளே எழுந்தருளுவித்தனர்; அவரது பாதங்களை விளக்கி அத்தீர்த்தத்தினை மேல் தெளித்து உள்ளும் கொண்டனர். ஆசனத்தமர்த்தினர்; உரிய பூசனைகள் எல்லாம் விரும்பச் செய்தனர்; திருவமுது செய்தருளும்படி அவரிடம் விண்ணப்பிக்க அவரும் இசைந்தருளினர்.

அவர் இசைந்ததனைச் சிவபெருமான் றிருவருளாற் பெற்ற பெரும்பேறு என மிக மகிழ்ந்து அப்பூதியார், திருமனைவியாரும் தாமும் திருவமுது ஆக்கும் முயற்சிகளில் ஈடுபட்டனர்; அறுவகைச் சுவையாலான தூய நற்கறிகளையும் திருவமுதையும் ஆக்கினர். அரசுகள் திருவமுது செய்தற்கு ஏற்ற பெரிய வாழைக்குருத்தைக் கொண்டு வரும்படி தம் மக்களுள்ளே **மூத்த திருநாவுக்கரசை** ஏவினர். "நல்ல தாய் தந்தையர்கள் என்னை இக்காரியத்தில் ஏவப் பெற்றேன்" என்று மகிழ்ந்து கொண்டு, அவன், தோட்டத்தினுட் புகுந்து செழிப்புடையதொரு குருத்தை அரியும்போது ஒரு பாம்பு அவன் வருந்திச் சோர்வடையும்படி அங்கையிற் றீண்டிக் கையினிற் சுற்றிக் கொண்டது. அவன் அதனை உதறி வீழ்த்திவீட்டுப் பதைப்புடனே, "இத்தீய விடத்தின் வேகத்தால் நான் வீழா முன்னர், அரிந்த இக்குருத்தைச் சென்று கொடுப்பன்; பெரியவர் திருவமுது செய்யத் தாழ்க்கும்படி நான் இச் செய்தியை யார்க்கும் சொல்ல மாட்டேன்" என்று திருந்திய மனத்தினுடன் செழுமனையிற் சென்று புக்கான்: விடம் முறையே ஏறி ஏழாம் வேகம் தலைக்கேறிற்று; பல் - கண் - மேனி - கருகின; உரை குழறிற்று; ஆவி விடும் நிலை வந்ததும் அதனை விடாமற் கொண்டு குருத்தைத் தாயர் கையில் நீட்டி நிலத்தினில் வைத்தான்; கீழே வீழ்ந்தான். பெற்றோர்கள் உளம்பதைத்து உற்று நோக்கினர்; உதிரம் சோரும் வடுவும் மேனியின் குறிகளும் கண்டு விடத்தினால் வீந்தான் என்று துணிந்தனர். அதனாற் சிந்தை சிறிதும் துளங்காதவர்களாகித் தொண்டர் அமுது செய்வதற் குரிய உபாயத்தை எண்ணினர். பெறலரும் புதல்வனைப் பாயினுட் பெய்து மூடினர். புறமனை முன்றிலில் ஒரு புடையில் மறைத்து வைத்தனர். "இது சிறிதும் தெரியா வண்ணம் அமுது செய்விப்போம்" என்று கொண்டு காலந் தாழ்க்காமல் அமுதும் கறிகளும் முதலியவை எல்லாம் அழகுற அணைய வைத்துத் தொண்டர் முன்வந்து பணிந்து "தேவரீர் திருவமுது செய்து எங்குடி முழுதும் உய்யக்கொள்வீர்" என்று வேண்டினர். அரசுகள் எழுந்து அடியிணை விளக்கி வேறோர் ஆசனத்தேறிப் பரிகலம் திருத்தும் முன்பு இல்லுடை யிருவருக்கும் திருநீறு நல்கி, ஏனைப் புதல்வர்க்கும் அளிக்கும்போதில், "இவர்க்கு மூத்த பிள்ளையையும் நீறு சாத்த அழையுங்கள்" என்றனர். அதுகேட்ட அப்பூதியார் விளைந்த தன்மை ஒன்றும் உரையாமல் "இப்போது இங்கு உதவான்" என்றனர்; அவ்வுரை கேட்டபோதே சிவபெருமான் றிருவருளால் அரசுகளது செவ்விய திருவுள்ளத்தில் ஒரு தடுமாற்றம் சேர்ந்தது; அது கருதி அவர் அப்பூதியாரை நோக்கி "இவ்வுரையினை என் உள்ளம் பொறுது; அவன் என்ன செய்தனன்; இதற்கொன்றுண்டு; உண்மையை விரித்துரையும்" என்றார். அதற்கு அப்பூதியார் மெய்விதிர்த்து அஞ்சி பெரியவர் அமுது செய்யும் இப்பேறு பிழைக்க வருமே என்று

விரித்துரையாராயினும், அப்பெரியோர் கேட்கும்போது உண்மையை விளங்க வுரைக்கவேண்டும் சீலத்தினுலே மனம் நொந்து மைந்தனுக்கு நேரிட்டதனே விரித்துரைத்தனர்.

அதைத் திருநாவுக்கரசர் கேட்டு "நீர் புரிந்த வண்ணம் நன்று; இத்தன்மை செய்தார் யாவர் உளர்?" என்றருளி, எழுந்துசென்று, அவ்வுடலேத் திருக்கோயிலின்முன் கொண்டுவரச் செய்து சிவபிரான் அருளும்படி அதனே நோக்கி, "ஒன்று கொலாம்" என்று தொடங்கித் திருப்பதிகம் பாடியருளினர். உறங்கி யெழுவானேப் போன்று பிள்ளே விடம் நீங்கி உயிர்பெற்றெழுந்து திருநாவுக்கரசர் திருவடிகளே வணங்கி நின்றனன்; அதுகண்டு அவர் அவனுக்குப் புனித நீறு அளித்தனர். இப்பெரு நிகழ்ச்சியைக் காண்பார் எல்லாம் சிவபெருமான் றிருத்தொண்டி னெறியினேப் போற்றி வாழ்ந்தனர்; ஆனல் அப் பயந்தவர்களோ தெரிவரிய பெருமையுடைய அன்பர் திருவமுது செய்தற்கு இவன் சிறிது இடையூறு செய்தனன் என்று சிந்தை நொந்தனர்.

அவர்களது மனவாட்டத்தை அறிந்த அரசுகள் அவர்களுடனே ஓங்கிய திருமனேயில் எய்தி அமுது செய்யும் பாங்கில் இருந்தனர். அதற்கு வேண்டிய எல்லாவற்றையும் அப்பூதியார் மகிழ்ந்து செய்தனர். நிலத்தைக் கோமயத்தால் மெழுகி வெண்சுண்ணக் கோலமிட்டனர். அதன்மேல் வாழையின் அக்குருத்தினை விரித்து நீரினுற் கழுவி ஈர்வாய் வலமுற மரபின் வைத்தனர்.

அரசுகளது ஏவலின்படியே அப்பூதியாரும் பிள்ளேகளும் அங்கு உடனே அமுது செய்ய இருந்தனர்; சிந்தை மகிழ்ந்து மனேவியார் திருவமுது எடுத்து நல்கினர்; அரசுகள் சிவனடியார்களுடனே திருவமுது செய்தருளி அப்பூதியார்க்குக் **காதல் நட்பின் உரிமையளித்தனர்.** அவ்வாறு பன்னுள் கலந்து உடனிருந்தருளினர். பின்னர்த் திருப்பழனம் சேர்ந்து நாதரைப் பாடிய **சொன்மாலேப்** பதிகத்தில் அப்பூதியாரது அடிமைத் திறத்தைச் சிறப்பித்துப் பாடியருளினர். இப்பேறுபெற்ற அப்பூதியார் தாம் அடையும் உறுதிப்பொருள் யாவும் திருநாவுக்கரசரது பாதமேயாம் என்று கொண்டு அவற்றை அன்புடன் துதித்திருந்து சிவபெருமான் றிருவருள் சேர்ந்தனர்.

கற்பனே :-1. காண்டலின்றியும், பெரியோர்களின் குணங்களேக் கேட்டதும் அவர்களிடம் அன்பு பூண்டு அவர்களே வழிபட் டொழுகுதல் சிறந்த குணமுடைமையாம்.

2. அன்பு முதலிய நற்குணங்களால் நிறைவுடைமை மட்டுமேயன்றிக் களவு பொய் கோப முதலிய தீக்குணங்களேக் காய்தலும் நன்மக்கள் இலக்கணம்.

3. பெரியோர்களது பெயரைத் தம் மக்களுக்கும் மற்றும் உடைமைகளுக்கும் இட்டு வழங்குதல் அப்பெரியோரை வழிபடும் முறைகளுள் ஒன்று.

4. தங்கள் தங்கள் பேர் எழுதித் தண்ணீர் பந்தர் முதலிய அறங்களே செய்தல் சாதாரண உலக வழக்கு. ஆனல் தாம் செய்யும் அவ்வகை அறங்களேத் தன் பெயர் எழுதாது தாம் வழிபடும் பெரியோர்கள் பெயரை எழுதி அப்பெயரால் செய்தல் உயர்ந்தோர் முறை.

5. தண்ணீர்ப் பந்தர்கள் அளவில்லாத சனம் எப்போதும் செல்லும் வழி கரையில் வேனில் வெப்பத்தை அகற்றுவதில் அருளுடைய பெரியோர்களது உள்ளம்போலக் குளிர்ச்சியுடையனவாய்க் குள நிறைந்த நீர்த்தடம்போல் குளிர்ந்து நிழல் தருவனவாய் அமைக்கப்படுதல் வேண்டும். அப்பூதி நாயனுர் இவ்வாறு திருநாவுக்கரசர் பெயரால் அமைத்த தண்ணீர்ப் பந்தல் ஏனை உலகவர் பார்த்துப் பின்பற்றத் தக்க இலக்கியமா யமைந்தது. *(1787)*

6. **பெரியவர்களைத் தியானப்பொருளாய்க் கொண்டு பல நாள் வழிபட்டு அழைத்து வந்தால், ஒருநாள் அவர்கள் அத்தவங் கூட்டிவைக்கத் தாமாக வந்து வெளிப்பட்டுக் கூடுவர் என்பது அப்பூதியாரது மனையின் முன் கடையில் அப்பர் சுவாமிகள் வந்து தாமாகச் சேர்ந்ததினின்று நன்கு அறியக்கிடக்கும் உண்மை.** சிவபெருமான் வெளிப்பட்டருளுவது மிவ்வாறேயாம். *(1787- 1791)*

7. வெளியிற் சென்றுவந்த உடலின் அயர்ச்சி தீருமுன், "அடியார் ஒருவர் மனைக்கடையில் வந்தனர்" எனக் கேட்டலும் உடனே வெளிவந்து அடியாரை வரவேற்றல் சிவனிடத்துக் கொண்ட அன்பின் திறம். *(1791)*

8. அடியவர் தம்மை வணங்கும் முன் தாம் வணங்குதல் அன்பின் தன்மை. அடியார்கள் தலைக் கூடியபோது இன்னுர் தாம் முன் வணங்கினர் என்றறியா முறைமையில் வணங்குதல் முறை. *(1792)*

9. சிவனடியாரை "**வேறொருவர்**" என்று கூறுதல் அடிமைத் திறத்தை நிந்தித்தலாகும். அது சிவ நிந்தனை - சைவ நிந்தனை - என்றதன்பாற்படும். அதனை யாரேனும் தம் முன் செய்யக் கேட்கில் சிவனிடம் அன்புடையோர் பொறுக்கலாற்ருது சினங்கொள்வார்; அது செய்தோரைத் தம்மால் இயன்றவாறு தண்டமும் இயற்றிடுவர். சத்தி நாயனுர் சிவ நிந்தனை செய்தோரது நாவை வலித்தரிந்து தொண்டு செய்தனர். தம்மால் அவ்வாறு ஒன்றும் செய்ய வியலாதபோது "சிவ சிவ" என்று காது பொத்திக்கொண்டு அவ்விடம் விட்டு நீங்கிவிட வேண்டும் என்பதும் விதி. சிவ நிந்தனை பொருது வரும் சினம் விலக்குதற்குரிய மனக்குற்றமாகாது. அறுவகைக் குற்றத்தினுட்பட்ட ஏனைச் சினம், பாவம் பயக்கும். இந்தச் சினம் சிவபுண்ணியமாய்ப் படிப்படி முத்திக் கேதுவாகும். அப்பூதியார் "களவு பொய் கோப முதலிய குற்றங் காய்ந்தார்" *(1784)* என்றதும், "கேளா நிலையழிந்த சிந்தையராய்" *(1795)* என்றதும் ஒப்பிடற்பாலன. "மறைகணிந்தனை சைவ நிந்தனை பொருு மனமும்" என்ற வரங்கேட்டுப் பெற்றனர் நந்தி பெருமான். உடலோடு ஒழிந்து விடக்கூடிய அளவில் பொருத்தமுடைய சாதாரணமான ஒரு நட்பினரையோ அன்றி, மனைவி மக்கள் முதலிய சுற்றத்தாரையோ ஒருவன் நிந்தை செய்தாற் பொருது சினந்து பகை மூண்டு தகாத பலவும் செய்தல் உலக வழக்கில் காண்கிரோம். ஆனல் உயிருடன் பொருந்திவரும் சிவனன்பின் திறத்தில் நிந்தை செய்யக் கேட்டால் வாளா விருப்பர். அது மட்டுமோ அந் நிந்தை செய்தாருடன் உறவும் கொண்டாடுவர்! இது என்ன கொடுமை! திருநாவுக்கரசரது பெயரை "வேறொரு பேர்" என்னக் கேட்டபோது அப்பூதியார் தமது சிந்தை

நிலையழிந்தார். எதிர்மொழிந்தவர் அடியார் திருவேடத்துடனில்லா திருப்பின் இயன்ற தண்டமுஞ் செய்திருப்பர்! இவ்வாறு திருசிந்தை நிலையிழியினும் அடியவரிடம் தாம் நடக்கும் முறையில் திரியாது (1795 - 1797) "நன்றருளிச் செய்திலீர்!" என்பது முதலாக அமைந்து நின்ற நேர்மை பெரியோராகிய அடியார்களது சிறப்பு.

10. தன்மைத், தத்தம் பெருமை பற்றித் தாமே அறிவித்துக் கொள்வது கீழோர் தன்மை; தமது சிறுமைபற்றி அறிவித்துக் கொள்வது அறிவுடைப் பெரியோர் தன்மை. (1798)

11. பெருமகிழ்ச்சி மூண்டபோது முன் செய்யத் தகுவனவாகிய வழிபாட்டு முறைகளும் மறந்து போய்ப் பித்தர்போல நிகழும் தன்மை வரும். (1801)

12. தமக்கு ஒரு நல்ல பேறு கிடைத்தபோது இது சிவனருளால் வந்த தென்று மகிழ்வது பெரியோரியல்பு. (1804)

13. தமது பெற்றோரும் பெரியோரும் தம்மை ஒரு காரியத்தில் ஏவிய போது அதனை மகிழ்ந்தன்புடன் ஏற்றுச் செய்வதும், "நல்ல தாய் தந்தை யேவ நானிது செயப் பெற்றேன்" என்று திருந்திய கருத்துடன் அதனுட் புகுவதும் மக்களியல்பு. (1806)

14. திருநாவுக்கரசர் அமுது செய்தற்குப் பரிகலக்குருத்தை அரியும் போது அல்லலுற்று அழுங்கிச் சோரக் கையினில் அரவந் தீண்டப்பெற்ற பிள்ளையாகிய மூத்த திருநாவுக்கரசு, "அரவின் வேகத்தால் யான் வீழா முன்னம் வேகத்தாற் சென்று இக்குருத்தைக் கொடுப்பன்; பெரியவர் அமுது செய்யத் தாழ்க்கும்படி இதனை யாரிடமும் சொல்லேன்" என்று ஓடிச்சென்று குருத்தைத் தாயார்பால் வைத்து மயங்கி வீழ்ந்தான். இதுவே சிவனன்பின் றிறத்துத் திருந்திய அம் மகனது சிறப்பு. இளைஞர்கள் இவ்வாறு சிவன்பால் அன்பு திருந்திய சிந்தையும் செயலும் பொருந்தப் பழகி ஒழுகுதல் உயிர்க்கு ஊதியம் தருவதாம். சைவ வுலகம் இதனைக் கண்டு திருந்த ஒழுகுவது நலம். (1808)

15. மயங்கி வீழ்ந்த மகனது உடலில் உதிரஞ்சோர்வடுவும், மேனியும், பல்லும் கண்ணும் கருகிய நிலையும் கண்டு விடத்தினுல் வீந்தான் என்று துணிந்த அப்பூதியாரும் மனைவியாரும் அதனுற் சிறிதும் துளங்காது திருத்தொண்டர் அமுது செய்யும் வகைகளைச் சூழ்ந்து செய்யலாயினர்; இது சிவனன்பின்றிறம், "மெய்ம்மையாம் பொருள் விவேகமும் வேறுபா டாய, பொய்ம்மை யாம்பொருள் விவேகமும் புந்தியுட்டோன்ற"த் தெளிந்து இம்மை மறுமையிரண்டின் ஆசையும் நீத்துச் சிவனடியாகிய வீடு பேற்றின் விருப்பமிக்கவரே இத்தன்மை செய்யவல்லவர். உலகர்க்கு இதன் உண்மை விளங்குதல் அரிது. (1810)

16. நீறு சாத்த உமது மூத்த பிள்ளையையும் காட்டும் என்று வாகீசர் சொன்னபோது அப்பூதியார் அவன் "இப்போது இங்கு உதவான்" என்றனர். அது கேட்டலும் அப்பரது செவ்விய திருவுள்ளத்து ஓர் தடுமாற்றம் சேர்ந்தது உண்மை விளங்கச்

செய்தது. இவ்வாறு திருவருள் தமது உள்ளத்தினின்று உண்மையுணர்த்த உணர்குவர் பெரியோர். *(1815)*

17. திருநாவுக்கரசர் சிவபெருமானைப் பாட, மகன் விடம் நீங்கி உயிர் பெற்றெழுந்தனன், அது கண்ட பெற்றோர்கள் மகிழாது, பெரியவர் அமுது செய்ய இவன் சிறிது இடையூறு செய்தனன் என்று சிந்தை நொந்தனர். இது உலகை உள்ளபடி தெளிந்த உண்மை யன்பின் திறம். *(1819)*

18. தாமும் அடியார்களும் அமுது செய்யும்போது அப்பூதியாரையும் மக்களையும் தம் உடனிருந்து அமுது செய்யும்படி ஏவினர் திருநாவுக்கரசர்; அவர்களும் அவ்வாறே செய்தனர். இஃது சிவனன்பின் றிறத்தால் உலகிய லுணர்வு தூர்ந்து சிவபோதம் வெளிப்படலால் நிகழ்ந்த செயல். சாதிநிலை மரபுகள் சமய நிலைகள் வேறு; சமயங் கடந்த சிவபோத நிலைவேறு. இந்நிகழ்ச்சியினின்று சாதி நிலை மரபுகள் இல்லை என்றுவது, அவை வேண்டப்படா என்றுவது கொள்ளும் முடிவுகள் போதரா. சாதி, சமய, மரபொழுக்கங்களை மனத்தினாலுங் கடத்தலாகா தென்பது தற்போத முடையார்க்கு விதித்த இறைவன் கட்டளை *(1822-1823)*

19. அப்பூதியாரது திருத்தொண்டினைச் சிறப்பித்துச் சிவபிரானைத் துதிக்கும் திருப்பதிகத்துட் பாடியருளினர் திருநாவுக்கரசர். **பெருமானது திருப்பாட்டினுள் வைத்துச் சிறப்பிக்கப்படுதல் அன்பின் மேன்மையாம்.** *(1825)*

20. அப்பூதியார் திருநாவுக்கரசரது திருநாமத்தைத் துதித்த வழியினாலே சிவன் கழல் நண்ணினார். இது அடியார் பெருமை. *(1826)*

தலவிசேடம்:- *(1)* **திங்களூர்** - சோழநாட்டில் தேவார வைப்புத் தலங்களுள் ஒன்று. III தொகுதி (I) பார்க்க. - 2. **திருப்பழனம்** - சோழநாட்டில் தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. திருவையாறுள்ளிட்ட ஏழு பெருந்தலங்களுள் ஒன்று. III தொகுதி (I) பார்க்க.


சில குறிப்புக்கள் - அப்பூதியார் சரித நிகழ்ச்சிகள் இப்புராணத்தினுள்ளும், திருநாவுக்கரசு நாயனார் புராணத்தி *(1465 முதல் 1476 வரை)* னுள்ளும் கூறப்படுகின்றன. இவ்வாறு ஒரே சரிதத்தை இரண்டு முறை கூற நேர்ந்த போது கூறியது கூறலாகா வண்ணமும், முன்பின் மலைவுபடா வண்ணமும் அவ்வவ்விடத்துக் கேற்ற அளவு மட்டில் அமைத்துக் கூறுவது ஆசிரியரது தெய்வக் கவிநலச் சிறப்புக்களுள் ஒன்று, திருநாவுக்கரசர் புராணத்தினுள் இது மிகச் சுருக்கியும், ஈண்டு அச்சுருங்கிய இடங்களை விரித்தும் சொல்லிப்போகும் அழகுகாணத் தக்கது.

"செப்பருஞ்சீர் அப்பூதியடிகள்" *(1465)* என்று முன்கூறிய அப்பூதியாரது சிறப்பை ஈண்டு "தாண்டவம் புரிய வல்ல தம்பிரா னுருக் கன்பர்" *(1783)*; "களவு பொய் காமங் கோப முதலிய குற்றங் காய்ந்தார்" *(1784)* "வடிவு தான் காணாராயும்" *(1785)* என்ற மூன்று பாட்டுக்களால் விரித்தனர். அவர் அரசுகளது திருநாமத்தாற் செய்த அறங்களை முன்னர் "அந்தணரின் மேம்பட்ட" *(1466)* என்றதொரு பாட்டாற் கூறியதனை, ஈண்டு *(1787 முதல் 1791 வரை)* 5 பாட்டுக்களாற் சிறப்பித்தனர். அரசுகளைத் தமது மனைக்கடைத் தலையில் அப்பூதியார் கண்டு அறிந்து வழிப்பட்டுத் திருவமுது கொள்ள விண்ணப்பித்து அவரிசைவு

பெற்றது வரை முன்னர், "மற்றவரு மனமகிழ்ந்து" (1467) என்ற ஒரு திருப்பாட்டிற் சுருக்கிக் கூறியருளிய ஆசிரியர். ஈண்டு 1792 முதல் 1803 வரை பன்னிரண்டு திருப்பாட்டுக்களால் விரித்துக்கூறினர். இவ்வாறே, பிள்ளை வாழைக்குருத்தரியப் புக்கபோது அரவந்தீண்ட அவன் அதனைப் பொருட்படுத்தாது மனைக்கு ஓடிவந்து குருத்தை வைத்து வீழ்ந்த நிகழ்ச்சியினை ஈண்டு, (1806 - 1809) நான்கு பாட்டுக்களாலும் புதல்வன் விடத்தினல் வீந்தான் என்றறிந்த அப்பூதியாரும் மனைவியாரும் மனத்திற் றடுமாற்றமில்லாது அவனுடலைப் பாயினுள் மறைத்து அரசுகள் திருஅமுது செய்வதற்குச் சூழ்ந்த செயல்களை 1812 முதல் 1816 வரை 5 திருப்பாட்டுக்களாலும் அரசுகளைத் திருவமுது செய்வித்த சிறப்பை 1818 முதல் 1824 வரை 7 திருப்பாட்டுக்களாலும் ஈண்டு விரித்தருளினர்; இப்பகுதிகள் முன்னர் ஒவ்வோர் பாட்டிற் கூறப்பட்டன. இவை அப்பூதியாரது தன்மைகளைச் சிறப்பிக்கும் பகுதிகளானமையால் இப்புராணத்தினுள் விரிக்கப்படும் தகுதியுடைமை காண்க.

புதல்வனது உடலை மனையிலிருந்து அரசுகள் திருக்கோயிலின்முன் கொணர்வித்து விடம் நீங்க அருளும்படி பாடினுர் என்றும், "ஒன்றுகொலாம்" என்ற பதிகம் பாடினர் என்றும் (1473) முன்னர் அரசுகளது புராணத்தினுட் கூறினர். அவை ஈண்டுக் கூருது குறிப்பிற்பெற வைத்தருளினர். இவை அரசுகளது செயல்களானமையின் ஆண்டுக் கூறப்படும் தகுதி யுடைமையுங் காண்க.

இவ்வாறே ஆளுடையபிள்ளையாரும் அரசுகளும் திருப்புகலூரில் ஒன்றுகூடித் திருமறைக்காட்டினின்று பிரியும்வரை சேர்ந்தே யாத்திரை செய்தனர். திருவீழிமிழலையில் அருட்காசு இருவரும் பெற்றனர். திருமறைக்காட்டில் கதவம் திறக்கவும் அடைக்கவுமாக இருவரும் அற்புதச் செயல்கள் நிகழ்த்தினர். இப்பகுதிகள் அவ்விருவர் புராணத்தினுள்ளும் உரைக்கப்படுவன. ஆயின் மேலே கூறிய தகுதி பற்றி அவ்வவரைப் பற்றிய பகுதிகள் அவ்வப் புராணத்தினுட் சிறப்பாகவும் விரிவாகவும் ஏனையவை பொதுவாகவும் சுருக்கமாகவும் பேசப்படும்முறை அவ்விரண்டு புராணங்களின் அவ்வப் பகுதிகளையும் ஊன்றி நோக்குவோர்க்குப் புலப்படும். ஆண்டும் இவ்வாறே ஒப்புநோக்கிக் கண்டுகொள்க. இவ்வாறு வரும் பிறவும் காண்க.



திருத்"திங்களூர்" (பாட்டு - 1786)
(இக்கோயிலின் முன்பு அப்பூதியாரது மகனுடலைக் கொணர்வித்துத் திருநாவுக்கரசர் திருப்பதிகம் பாடி விடம் தீர்த்தருளினர்)

தலவிசேடம்: திங்களூர் - III (I) - தொகுதி பார்க்க. கோயில் மிகப் பழுதாயும் வெளிமதில் இடிந்து தரைமட்டமாயும் உள் மதில் பழுதுபட்டும் கோபுரங்கள் சிகரமின்றியும் உள்ளன; படம் பார்க்க. இவ்வாலயத்திற்குரிய செப்புப்படிமங்களுள் சோமாஸ்கந்தர் திருவுருவம் மட்டும் பாதுகாவலின் பொருட்டுத் தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் வைக்கப்பட்டுள்ளதென்று கேள்வி; கோயிலைச் சுற்றும் நல்ல நன்செய் நிலங்களாயுள்ளன; அப்பூதியார் வாழ்ந்த திருமனையோ, அவரிருந்த இடமோ, அவர் அமைத்த குளமோ, அவர் தோற்றுவித்த சாலையோ சுவடும் காணக் கிடைத்தில. ஆலயத்துக்கு இரண்டு காலம் வழிபாட்டுக்காகச் செல்லும் ஆதிசைவராகிய அருச்சகரைத் தவிர வேறுயாரும் அக்கோயிக்குச் செல்வதாகக் காணவில்லை; தண்ணீர்ப் பந்தர் மட்டும் ஓர் இடங்குறித்து நீண்டகாலமாக நடந்துவருகிறது; அப்பூதியாரின் திருவுருவந்தானும் இத்திருக்கோயிலில் வைத்து வழிபடப்பெறவில்லை.

அரசுகள் அப்பூதியாரின் மகனரது உடலைக் கோயிலின் திருமுன்பு கொண்டுவரச்செய்து பதிகம் பாடி உயிர்ப்பித்த பாடற் சிறப்புடைய இத்திருக்கோயிலைப் புதுப்பித்தும், ஆளுடைய அரசுகள், அப்பூதியார் மகனர் மனைவியார் திருவுருவங்களைத்தாபித்தும், சோலை குளம் திருமடம் முதலியவை கண்டும் திருத்தொண்டு செய்தல் மிக மேலான சிவபுண்ணியமாகும்; சைவ மக்களின் சமய வாழ்க்கை நிலை இற்றைநாள் எத்துணைக் கீழ்நோக்கிச் சென்றுள்ளது என்பதற்கு இக்கோயிலின் நிலையும், இதனை அடுத்துத் திருப்பழனக் கோயிலின் நிலையும் சான்று பகர்கின்றன. இதனே டமையாது, திருப்பழனத்துள்ள திருக்கோயில் ஆதிசைவ மூர்த்திகள் அப்பூதியார் திருநாவுக்கரசரைக் குருவாக அடைந்து அவரால் ஆட்கொள்ளப் பெற்றுய்ந்த வரலாறுகளைப்பற்றி இழிவு தோன்றப் பேசியும், பற்பல பொய்க்கதைகளைப் புனைந்து பரப்பியும் வருகிற நிலைமை சைவ வுலகத்தின் இக்கால அலங்கோல நிலைமையினை நன்கு தெரிவிக்கிறது; இறைவனருள் பெருக நிகழ்ந்து "மன்று ளாரடி யாரவர் வான்புகழ், நின்ற தெங்கு நிலவி யுலகெலாம்" என வளர்க.


உரையாசிரியரின் கனவு நிறைவேறி இந்நாளில் (இருபத்தொன்றாம் நூற்றாண்டில்) திருப்பழனம், திங்களூர் ஆகிய இரண்டு தலங்களும் திருப்பணி, குடமுழுக்குகள் நிறைவு பெற்று புதுப்பொலிவுடன் விளங்குகின்றன. திங்களூர் திங்கள் பூசித்த நவகோள் தலமாக மிக்க சிறப்புடன் விளங்குகிறது.

சுவாமி - **கைலாசநாதர்.** அம்மை - **பெரியநாயகி யம்மையார்;** பதிகம் 1 பொதுப்பதிகம்; இத்தலம் தேவார வைப்புத்தலங்களுள் ஒன்ருகவும் கொள்வர்.

திருப்பழனத்தினின்றும் வடக்கில் மட்சாலை வழி ஒரு நாழிகை யளவில் அடையத்தக்கது; இப்பதியில் வைணவ ஆழ்வார்கள் பாடல்பெற்ற விட்டுணு கோயில் ஒன்று பழுதுற்ற நிலையில் ஊருக்கு மேல்புறம் உள்ளது.



திருநீலநக்க நாயனார் (வைகாசி - மூலம்)



சாத்தமங்கை - அயவந்தித் திருக்கோயில்
(பாட்டு - 1834)



திருநீலநக்கரும் மனைவியாரும்
(சாத்தமங்கையில் உள்ள திரு உருவங்கள்) (பாட்டு - 1847)

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

26. திருநீலநக்க நாயனார் புராணம் (38 திருப்பாடல்கள்)

தொகை

"ஒலிபுனல் சூழ் சாத்தமங்கை நீலநக்கர்க் கடியேன்"

- *திருத்தொண்டத்தொகை (4)*

வகை

"பூதிப் புயத்தர் புயத்திற் சிலந்தி புகலுமஞ்சி
யூதித் துமிந்த மனைவியை நீப்ப, "வுப் பாலவெல்லாம்
பேதித் தெழுந்தன கா"ணென்று பிஞ்ஞுகன் காட்டுமவன்
நீதித் திகழ்சாத்தை நீலநக் கன்னெனும் வேதியனே"

- *திருத்தொண்டர் திருவந்தாதி (30)*

விரி

1828. பூத்த பங்கயப் பொகுட்டின்மேற் பொருகய லுகளுங்
காய்த்த செந்நெலின் காடுசூழ் காவிரி நாட்டுச்
சாத்த மங்கையென் றுலகெலாம் புகழ்வுறுந் தகைத்தால்
வாய்த்த மங்கல மறையவர் முதற்பதி வனப்பு. 1

புராணம்: திருநீலநக்கர் என்னும் பெயருடைய நாயனாரது சரித வரலாறும் பண்பும் கூறும் பகுதி. இனி, நிறுத்த முறையானே, திருநின்ற சருக்கத்தில் ஆறுவது திருநீலநக்க நாயனாரது புராணங் கூறத் தொடங்குகின்றார்.

தொகை: ஒலிக்கும் நீர் சூழ்ந்த திருச்சாத்த மங்கையில் அவதரித்த திருநீலநக்கருக்கு நான் அடியேன். -நாயனாரது நகரத்தை நீர்வளத்தால் அறிவிக்கின்றார். இதனால் சோழநாடு என்பதும் குறிப்பித்தபடி. **ஒலி புனல்சூழ்** என்றது காவிரியினது கால்களினின்றும் வயல்களிற் பரந்து பாய்ந்து மெல்லென மிழற்றும் நீரின் ஒலியை. அயவந்தி நாயகரது திருமுன்பு அன்பின் மிகுதியினால் திருநீலநக்க நாயனார் அஞ்செழுத்துணர்வுறவிருந்து முன்னவின்றதும், அப்போது மனைவியார் பெருமானது திருமேனியில் விழுந்த சிலம்பியை வாய்நீர்பட ஊதித் துமிந்த அன்பின் நீர்மையும் கொண்ட சரிதக்குறிப்பு. அன்றியும் நடுமனை வேதியின் பாங்கர்த் திருநீலகண்ட யாழ்ப்பாணர் தேவியாருடன் பள்ளிகொள்ளச் செந்தீ வலஞ்சுழித் தெழுந்த சரிதப் பகுதியை அன்பின் நீர்மை கலந்தெழும் **யாழொலிக்** குறிப்பிற் பெற வைத்தமையுமாம். ஆளுடைய பிள்ளையாருக்கும் உடன் வந்த பல்லாயிரம் அடியவர்க்கும் வளம்பெறத் திருவமுதூட்டும் சிறப்பும் பெருஞ் சோற்றுக் கம்பலையும் வரும் சரித நிகழ்ச்சிக்கு **நீர்**வளம் சாதனமாதலும் குறிப்பு. ஓசை என்னாது **ஒலி** என்ற குறிப்புமது. **நீலநக்கர்** - நாயனாரது பெயர்.

வகை: திருநீற்றை அணிந்த புயங்களையுடையவராகிய சிவபெருமானது இலிங்கத் திருமேனிமேல் சுதைச்சிலம்பி வீழ, அது கண்டு அஞ்சி மனைவியார் அதனை வாய்நீர் பட ஊதித் துமிந்து தவிர்க்க, அதுகண்டு அனுசிதம் செய்தனர் என்று மனைவியாரைத் தாம் நீத்துவிட, இறைவர், (தம் கனவில்) "துமிந்தபாலொழியத் துமியாத பக்கமெல்லாம் சிலந்தியின் கொப்புள் காண்க" என்று காட்டும் பேறு பெற்றவர். வேத நீதியில் விளங்கிய சாத்தமங்கையில் அவதரித்த திருநீலநக்கர் என்னும் வேதியராவர்.

பூதி - திருநீறு - செல்வம் - ஐசுவரியம். விபூதி என்ப. **ஊதித் துமிதலாவது** - வாய்நீர் படப் பெருங் காற்றுடன் ஊதுதலால் விலக்குதல். "ஊதிமேற் றுமிந்தனர் போக" (*1839*); **நீப்ப** - "உன்னை யானினித்துறந்தன னீங்கு" (*1842*) என்று நீத்துவிடுதல். **உப்பால எல்லாம்** - ஊதித் துமியாத மற்றப்புறம் எங்கும். உகரச் சுட்டுச் சேய்மைக்கும் அண்மைக்கும் இடைநிற்கும் நிலை குறித்தது. "எமை பூதிமுன் துமிந்தபால் ஒழிய" (*1845*); **பேதித்து எழுந்தன** - மேனியின் இயல்பு வேறுபட்டுக் கொப்புள் எழுந்தன. "கொள்ளு மிப்புறஞ் சிலம்பியின் கொப்புள்" (*1845*); **காட்டும்** - கனவினில் காட்டும். "கனவில், வெள்ள நீர்சடை யொடுநின்று மேனியைக் காட்டி" (*1845*) **நீதி** - வேத நீதியும் வைதிக ஒழுக்கமும்; **நீதித் திகழ்சாத்தை** என்றும், **நீதித்திகழ் நீலநக்கன்** என்றும் ஈரிடத்தும் கூட்டியுரைக்க நின்றது. வேத நீதியாவன தர்மத்தில் நடத்தலும், சத்தியத்தைச் சொல்லுதலுமாம். வேதஒழுக்கம் முத்தீ வளர்த்தல். அந்நகரில் வேதநீதி விளங்குதல் *1830* ஆம் பாட்டிலும், நாயனார்பால் விளங்குதல் *1832*ஆம் பாட்டிலும் விரித்தல் காண்க. **நீதி** - சிவனருளிய வேதமே நீதிகட் கெல்லாம் மூலமாகலின் **நீதி** என்பது வேத நீதி என்பதாம். **நீதித்திகழ் - வேதியனே** என்பதனாலும் இது விளங்கும். "நீதியும் வேத நீதியாகியே நிகழ்ந்த தெங்கும்" (திருஞான - புரா - *858*); நாயனார் வேத நீதி நெறி நிற்றல் *1832*ம் பாட்டிலும், வைதிக ஒழுக்கமாகிய வேள்வி "ஆங்கு வேதியி லருதசெந் தீ" (*1858*) என்றதிலும் விரிக்கப்பட்டன. ஆளுடைய பிள்ளையாரது திருமண வேள்விச் சடங்குகளை இந்நாயனார் செய்தமை (திருஞான - புரா *-1239*) இங்குக் கருதுக. **பிஞ்ஞகன் காட்டுமவன் - வேதியனே** என்று முடிக்க. பிஞ்ஞகனாற் காட்டப் பெற்றவன் எனக் கொள்க. **வேதியன்** - இவர் மறையவர் குலத்தாராயினும் விதிப்படி சிவதீக்கை பெற்றுச் சிவனையே தமது ஆன்ம நாயகராகக் கொண்டு சிவாகம விதிவழி ஆன்மார்த்த பூசை செய்யும் **மகா சைவராகிய வேதியர்** என்பது "மெய்த்த வாகம விதிவழி வேதகா ரணரை, நித்தல் பூசனை புரிந்தெழு நியமமுஞ்செய்தே" (*1833*) என்று ஆசிரியர் விரித்தவாற்றாற் காண்க. இவர் அயவந்திநாயகரைத் திருக்கோயிலிற் பூசித்ததும் பரார்த்த பூசையின்றி அவ்வாறே ஆன்மார்த்த பூசை என்பதும் கருதப்படும். இது சிவதீக்கை பெற்றவழி விசேட விதியாற் கொள்ளப்படும். அற்றாகலின் "பேர்கொண்ட பார்ப்பான் பிரான்றனை யர்ச்சித்தால்" என்பது முதலாகத் திருமூலர் கூறும் சிவாகம விதிகளுடனும், பரார்த்த பூசை சிவவேதியர்களுக்குரியன என்று "வழிவழியே திருத்தொண்டின், விரும்பியவர்ச் சனைகள்சிவ **வேதியர்க்கே** யுரியன" (முப்-திரு-தீண்-புரா-*2*) என்னும் திருமுறைத் திருவாக்குடனும் முரண்படாமை யறிக.

ஊரும் பேரும் சரிதக் குறிப்பும் தொகைநூல் உணர்த்திற்று; அவற்றோடு புராணத்துக் காதரவாகிய சரித வரலாற்றுப் பகுதிகளும் வகைநூல் வகுத்தபடி மேற்காட்டப்பட்டது. இவை விரிநூலுள் விரித்தபடி பின்னர் மேலும் கண்டுகொள்க.

1828. (இ-ள்.) பூத்த...உகளும் - மலர்ந்த தாமரையினது பொகுட்டின் மேல் பொரும் கயல் மீன்கள் துள்ளுகின்ற; காய்த்த...சூழ் - விளைந்து முதிர்ந்த செந்நெற் பயிர்களாகிய காடு சூழ்கின்ற; காவிரி நாட்டு - காவிரி பாயும் சோழ நாட்டில்; மங்கலம் வாய்த்த மறையவர் முதற்பதி வனப்பு - மங்கலங்கள் வாய்க்கப்பெற்ற மறையவர்களுக் கிடமாகிய முதன்மையுடைய பதியின் சிறப்பு; சாத்தமங்கை...தகைத்தால் - திருச்சாத்தமங்கையின் அமைவது என்று உலகமெல்லாம் புகழ்கின்ற தகைமையுடையது.

(வி-ரை.) பொகுட்டு - கொட்டை. **பொருகயல்** - ஒன்றினே டொன்று பிறழ்ந்து தம்மிற் போர் செய்வனபோல உள்ள.

காய்த்த செந்நெலின் - செந்நெல் முதிர்ந்து விளைந்த பயிர்.

நெல் - நெற் பயிருக்கு வந்தது. **காடு** - மிகுதி யுணர்த்தியதன்றியும், மக்கள் கைவினைச் செயற்கையாலன்றித் தன்னியல்பின் வளைந்து தலைதடுமாறிக் கிடக்கும் நிலைபோன்ற தன்மையும் குறித்தது. Wild paddy என்பர் நவீனர். **காடு** - காடு போன்றதனைக் காடென்ற துபசாரம். "கமுகின் காடு" (*832*);

காவிரி நாடு. சோழநாட்டிலே : காவிரி பாயும் நாடு, என்ற சிறப்பினுற் சோழநாட்டின் பெயராய் வழங்குவதாயிற்று.

மங்கலம் வாய்த்த - என்க. மங்கலங்கள் எல்லாம் தாம் தங்குதற்கு வாய்ப்புடைய தக்க இடம் இதுவே யென்று கொண்ட என்பது குறிப்பு. மங்கலமாவது - சிவத்தன்மைச் சிறப்பு. இது மேல் *1830 - 1832* பாட்டுக்களில் விரிக்கப் படுவது. "நீதித்திகழ்" என்ற திருவந்தாதியினை விரித்தபடி;

பொருகயல் - "சேற்றயல் மிளிர்வன கயலிள வாளை செருச்செய" (பிள் - தேவா - குறிஞ்சி - இடைச்சுரம் - 2); **பொருதல்** - தாக்கி எழுவன போன்று துள்ளித் துள்ளி மேல் எழுதல். பொருதல் போன்றதை **பொரும்** என்ற துபசாரம். **உகளுதல்** - துள்ளிப் புரளுதல்.

பூத்த பங்கயம் - என்று மங்கல மொழிகொண்டு தொடங்கிய, **வாய்த்த மங்கலம்** என்று முடித்துக் காட்டியது ஆளுடைய பிள்ளையாரது திருமண மங்கலத்துடன் சிவமங்கலமாகிய முழு மங்கலத்தோடு முடிவுறும் இச்சரித வரலாற்றுக் குறிப்புத் தருவது. தாமரை, மறையவர்களுக்குரிய அடையாள மாலையாவதும் குறிப்பு. பங்கயங்கள் நெல்லின் இடையில் தோன்றுதல் மறையவர் வளர்க்கும் செந்தீ வேள்வித் தோற்றம் பெறும் குறிப்பு மேல் நமிநந்தியார் புராணத்தினுள் (*1868*) கூறுவதும் கருதுக. இத்தன்மை பற்றித் திருநாளைப் போவார் புராணத்தினுள் (*1024ன் கீழ்*) உரைத்தவையும் பார்க்க.

சாத்தமங்கை - உலகம் தூய்மை பெறப் பூப்போலச் சாத்திக் கொள்ளும் மங்கைபோல விளங்கும் ஊர் என்பது பொருளென்பர்.

காவிரி நாட்டில் - மறையவர் முதற்பதி வனப்புச் சாத்தமங்கையில் அமைவது என்று புகழ்வுறும் தகைத்து என்று கூட்டுக; இவ்வாறன்றிக் கிடக்கை முறைபற்றிக், காவிரி நாட்டுச் சாத்தமங்கை என்று உலகம் புகழுந் தன்மையுடையது மங்கல மறையவர் முதற்பதியாகிய சிறப்பு; எனப் புகழ் வுறுதற்குக் காரணம் மறையவர் முதற்பதி வனப்பு என்க - என்று

1829. நன்மை சாலுமப் பதியிடை நறுநுதன் மடவார்
மென்ம லர்த்தடம் படியமற் றவருடன் விரவி
அன்ன முன்றுறை யாடுவ; பாடுவ சாமம்
பன்ம றைக்கிடை யுடன்பயிற் றுவபல பூவை. 2

உரைத்தலுமாம். இனி இவ்விரண்டு வகையாலுமன்றி நாட்டில் வனப்பு வாய்த்த முதற்பதி சாத்தமங்கை என்று புகழ்வுறும் தகைத்து என்று கூட்டியுரைப்பர் இராமநாதச் செட்டியார்.

மறைப் பயனுகிய திருவைந்தெழுத்தினை யன்புசெய்தும் அத்திருவைந்தெழுத்தினையே கேட்டும் திருவடி சேர்ந்த இந்நாயனரது புராண முழுமையும் ஐந்து சீருடைய கலிநிலைத்துறை யொன்றினுலே பெற யாத்த கவித்திறமும் தகுதியும் சிந்திக்க.

பொருகயல் உறங்கும் - உலகெலா நிகழ்வுறும் - வாழ்பதி - என்பனவும் பாடங்கள். *1*

1829. (இ-ள்.) நன்மை சாலும் அப்பதியிடை - நலங்கள் பொருந்திய அந்தப் பதியில்; நறுநுதல்...படிய - நறிய நெற்றியினையுடைய பெண்கள் மெல்லிய மலர்களையுடைய தடாகத்திற் குளிக்க; மற்று அவருடன்...ஆடுவ - மற்று அவர்களுடன் ஒருங்கே முன் துறையில் அன்னங்கள் தாமும் தோய்ந்து ஆடுவன; பல் மறைக்கிடையுடன் சாமம் பாடுவ பல பூவை - வேதமோதும் சிறுவர்களது பல கூட்டங்களுடனே சாமம் பாடுவனவாகிய பல பூவைகள்; பயிற்றுவ - அவர்களை அவ்வேத பாடங்களைப் பிழை நீக்கிப் பயிலச்செய்வன.

(வி-ரை.) நன்மை சாலும் - சாலுதல் -மிகுதியும் பொருந்துதல். **நன்மை** - சிவ சாதனம்.

நறுநுதல் - நறுமை - மணம் - "தேங்கமழ் திருநுதல்" (முருகு); நுதலின் மணமாவது அதனில் தீட்டும் திலகம் சாந்து முதலியவற்ருலாவது, இயற்கை மணமுமாம். **மற்று அவருடன் - மற்று** - தம் இனமல்லாவிடினும் அவருடன் என்று வினை மாற்றின்கண் வந்தது.

விரவி - கலந்து. **விரவுதல்** பழக்கத்தாலும், இனம் போலும் என்றணைதலாலும், தமக்கு ஒரு தீமையும் செய்யார் என்ற உறுதியாலுமாம்.

முன் துறை - துறைமுன் - துறையில் முன்னிடம்; **மடவார்** நீரினுள் சிறிது ஆழத்தினுட் சென்று படிய, **அன்னங்கள்** அவ்வாறு செல்ல மாட்டாமையின் நீர்த்துறையின் ஆழமில்லாத முன் துறையில் ஆடுவ என்க. **ஆடுதல்** - நீராடுதல் - நீரினுள் தோய்தல். நடிப்பன என்றலுமாம். **முன்துறை** - இல் முன் என்பது முன்றில் என்று வருவது போல வந்தது.

சாமம் பாடுவ - பலபூவை (கிளி) என்க. **பாடுவ பூவை** - பாடுவனவாகிய பூவைகள்; **சாமம்** - வேதப் பொதுமை குறித்தது. சாமவேதம் என்றலுமாம். ஏழு சுரங்களும் பொருந்தப் பயிலப்படும் சிறப்பு அதற்குரியது. **கிடை** - மறை பயிலும் சிறுவர் கூட்டம்; பயிலுமிடமுமாம். "ஓது கிடைசூழ் சிறுவர்களும்" (*1208*); *81 - 1063 - 1222* முதலியவை பார்க்க. போதில் வந்து பயின்று தங்கிக் கிடத்தலின் **கிடை** எனப்படும்.

கிடையுடன் சாமம் பாடுவனவாகிய பூவை பயிற்றுவ - என்றது, கிடைகள் நகர்ப்புறத்தில் சோலை சூழ்ந்த இடங்களில் அமைவன; அங்குப் பூவைகள் தங்கும்; அவை

பெரியோர் பயிலும் மறைகளைக் கேட்டுப் பழகியிருத்தலால், சிறூர் பயின்று ஓதும்போதும் பிழைகண்ட விடத்துத் தாம் முன் கேட்டபடி பிழையின்றிப் பாடுதலால் சிறூர் திருந்துவர்; இதனை அவை சிறுரைப் பயிற்றுவதாக உபசரித்தார். "பாரிசையும் பண்டிதர்கள் பன்னுளும் பயின்ேறுது மோசை கேட்டு, வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள் பொருட்சொல்லு மிழலை யாமே" (மேகராகக் குறிஞ்சி); என்றும், "பெரிதிலங் கும்மறை கிளைஞரோ தப்பிழை கேட்டலாற், கருதுகிள்ளைக்குலந் தெரிந்துதீர்க் குங்கடற் காழியே" (5 - செவ்வழி) என்றும் வரும் ஆளுடைய பிள்ளையார் தேவாரக் கருத்துக்கள் இங்குக் கருதற்பாலன. இதற்கு இவ்வாறன்றிப் பூவைகள் தம் கிளைகளுக்குப் பயிற்றுவிக்கின்றன என்பர் ஆறுமுகத் தம்பிரானுர்; **பயிற்றுவ** என்பதனைத் தன்வினையாகக் கொண்டு பூவை பயில்வன என்பது இராமநாதச் செட்டியார் குறிப்புரை. **பல** - மறைப் பகுதி பலவற்றை என்றலுமாம்.

பாடுவ பல பூவை பயிற்றுவ - என்று கூட்டுக. **பாடுவ** - பாடுவனவாகிய. அகரவீற்றுப் பலவின்பாற் பெயர்; "கொம்புந்துவ குயிலாலுவ" (பிள் - நட்டபாடை - அண்ண - *11*) என்ருற்போல; பாடுதலினுலே பயிற்றுவன என்று காரணப் பொருள்படக் கொள்க. பாடுதலாகிய ஒரு செயலால் தம்மை யறியாமலே பயிற்றுதலையும் செய்தன;

தடம்படிய - கிடையுடன் பாடுவ - பயிற்றுவ - என்ற இவற்ருல் நகரச் சிறப்பு நகர்ப்புறத்து அமைதிகளாலும் நிகழ்ச்சிகளாலும் கூறப்பட்டது. மேல்வரும் பாட்டில் அகநகர் நிகழ்ச்சி பற்றி நகரச் சிறப்புக் கூறுவதும், முன் பாட்டில் ஆறு - நாடு - நகர் - குடி - வளங்கள் கூறியதும் ஆகிய அமைதிகள் காண்க.

தடமும் - கிடையும் - இவை நகர்புறத்தில் அமையும் முன்னுளின் நகர அமைப்பும் குறித்தன.

மடவார் மலர்த்தடம் படிய - *1210* ஆம் பாட்டுப் பார்க்க. பெண்கள் நகரின் புறத்துச் சென்று தடங்களின் நீர்மூழ்கி வருதல் - நகரச் சிறப்பாவதோடு, உடல் நலத்துக்குமுரியது. திருவாசகத்தினுள் திருவெம்பாவைப் பகுதியில் இது பற்றிச் சிறப்பித்துக் கூறியவை யெல்லாம் இங்குக் கருதத்தக்கன.

மறைக்கிடையுடன் பாடுவ பலபூவை பயிற்றுவ - சிறூர் கலை பயிலுதலும், குலவித்தை பயிலுதலும், ஞானக் கலை பயிலுதலும் வேண்டும் என்ற குறிப்பும் உடன் காண்க. இவை பற்றி முன் சண்டீசநாயனுர் புராணத்துட் கூறியவையெல்லாம் பார்க்க.

ஆடுவ - பாடுவ - பயிற்றுவ - மங்கலப்பொருள் முன்வைத்துத் தொடங்கியதற்கேற்ப, ஆடல் பாடலாகிய மங்கலச் செயல்களை அடுத்துவைத்த நயமும் காண்க. நீராடலும் மறை பயிலுதலும் ஆகிய மறையவர் ஒழுக்கக் குறிப்புமாம்.

அன்னம் ஆடுவ; பாடுவ பூவை பயிற்றுவ - நடையால் சிறந்த **அன்னம்** - அதன் மேலும் ஆடல் பயின்றது; பேச்சினுல் - பாடலால் - சிறந்த **பூவை** அதன்மேல் பயிற்றலையும் செய்தது என இவற்றின் சிறப்புப்பற்றி நகரச் சிறப்பும் கூறிய குறிப்பும் காண்க. இவை அறிவு நிரம்பாத ஏனைப் பிராணிகளால் காணும் சிறப்பு. அறிவுடை மக்களால் வரும் சிறப்பு மேற்பாட்டில் கூறுவார்.

1830. **"ஆய்ந்த மெய்ப்பொரு ணீ"றென வளர்க்குமக் காப்பில்**
ஏய்ந்த மூன்றுதீ வளர்த்துளா **ரிருபிறப் பாளர்;**
நீந்து நல்லற நீர்மையில் வளர்க்குமத் தீயை
வாய்ந்த **கற்புட னொன்கென வளர்ப்பர்கண் மடவார்.** 3

சாமம் பாடுவ - மறையவர் முதற்பதியாதலின் அவர்கள் ஓதுதல் கேட்ட பூவைகள் அக்கேள்வித் துணையாலே தாமும் சாமம் பாடின என்ற குறிப்பினால் மறையவர் ஒழுக்கமும் பெறவைத்த நயமும் காண்க. "தெள்ளுமோசைத் திருப்பதிகங்கள் பைங், கிள்ளை பாடுவ கேட்பன பூவைகள்" (*93*) என்ற கருத்தும் காண்க.

அன்னம் விரவி ஆடுவ; பூவை சாமம் பாடுவ - "அன்ன மாடு மகன்றுறைப் பொய்கை" (*69*) என்றபடி ஏனை **யன்னங்**களும் துறைகளில் ஆடினும், இவை மடவாருடன் விரவி ஆடுதலாற் சிறந்தன; ஏனைப் **பூ**வைகளும் பாடினும் இங்குச் சாமம் பாடுதலால் இவை சிறந்தன என்ற நயமும் காண்க. *2*

1830. (இ-ள்.) ஆய்ந்த...காப்பில் - ஆராய்ந்து தெளிந்த உண்மைப் பொருளாவது திருநீறேயாம் என்று கொண்டு வளர்த்து வருகின்ற காவலினுள்; ஏய்ந்த...இரு பிறப்பாளர் - இரு பிறப்பாளராகிய மறையவர் - பொருந்திய மூன்று தீயினையும் அத்தலத்தில் வளர்த்துள்ளார்கள்; நீந்து...தீயை - பிறவிக் கடலினின்றும் நீந்தத் துணைசெய்கின்ற நல்ல அறங்களின் தன்மையில் வளர்க்கும் அந்தத் தீயினை; வாய்ந்த...மடவார் - பொருந்திய கற்புத்தீயுடன் கூட்டி நான்கு தீயாகப் பெண்கள் வளர்ப்பார்கள்.

(வி-ரை.) ஆய்ந்த மெய்ப்பொருள் நீறு - ஆய்ந்த -ஆராய்ந்து துணிந்த ; **நீறு** - திருநீற் றன்பின் வழுவாத சிவன் அடிமைத்திறம். "இழைத்த வன்பினி லிறைதிரு நீற்றுமெய் யடிமை பிழைத்தி லோமெனில்" (*544*) என்றும், "பரவிய திருநீற்றன்பு" (*488*) என்றும் கூறியனவும், பிறவும் பார்க்க. மெய்ப்பொருளுநாயனார், ஏனாதிநாத நாயனார் சரிதங்களின் உள்ளுறைகளும் காண்க.

வளர்க்கும் அக்காப்பில் - நீறே பொருள் என்று விடாது பற்றும் அன்பும், அடிமைத் திறமுமே காவலாக அக்காவலுக்குள். **தீவளர்த்தல்** - சிவ வழிபாடு; சிவபூசை விதிகளுள், பூசிக்கும் இடத்தை இடையூறு வாராமற் காக்க மந்திரமயமாகிய மதிலும் அகழியும் காவலாக அமைப்பதொரு அங்கமாம் என்பது ஆகம விதி; *1164* பார்க்க. இங்கு மறையவர்களும் மடவாரும் வளர்க்கும் சிவமாகிய முத்தீயினுக்குக் காவலாக வகுத்தது திருநீற்றுக்காப்பு என்பதாம். காவல்களுக்கு சிறந்தது திருநீற்றுக் காப்பாகும். "**மந்திர**மாவது நீறு" என்ற தமிழ்மறைத் திருவாக்கும் நீறு காப்பாகும் தன்மை குறித்தது. திருநீற்றுக்**காப்பு** என்ற வழக்கும் காண்க. "வேறு பல காப்புமிகை யென்றவை விரும்பார், நீறுதிரு நெற்றியி னிறுத்திநிறை வித்தார்" (திருஞான - புரா - *43*), "இறைவர்திரு நீற்றுக்காப் பேந்தி முன்சென் றீந்த தாயார் சாத்தி" (மேற்படி *262*); திருநீற்றையே மெய்ப்பொருளாகத் துணிந்து அதனைக் காப்பாகக் கொள்ளாதார் எரிவளர்த்தல் - வேள்வி செய்தல் முதலியவை முதல்வராகிய சிவபெருமானையடையத் துணை செய்யாது பயனின்றிக் கழியும் என்பது குறிப்பு. திருநீறு **இரட்சை** என்று போற்றப்படுவதும் காண்க. **காப்பில்** - காவல் பொருந்திய அந்நகரத்தில்

என்றும், அத்திருநீற்றிற் பொருந்திய என்றும் உரைப்பாருமுண்டு.

மூன்று தீ - தட்சிணுக்கினி - காருகபத்தியம் - ஆகவநீயம் என்பன. 1287-ல் உரைத்தவை பார்க்க. **இருபிறப்பாளர்** வேதியர்; உபநயனச் சடங்கிற்பெறும் பிரமோபதேசத்தினுல் இவர்கள் வேறுமொரு பிறப்புப் பெறுகின்ருர் என்பது மரபு.

நீந்தும் - நல்லறம் - பிறவிக்கடல் நீந்தத் துணைசெய்யும் நல்ல சிவதன்மம். **நீந்தும்** - நீந்துவிக்கும் எனப் பிறவினைப் பொருளில் வந்தது. **பிறவிக்கடல்** என்பது இசையெச்சம். **நல்லறம்** - நல்ல சிவதன்மம்; "நல்லசிவ தன்மத்தால்...நானழிய - வல்லதனுல்" (களிறு).

வளர்க்கும் அக்காப்பு - ஈண்டு வளர்க்கும் என்றது விடாமற் படித்து வழுவாது ஒழுகிக் காக்கும் என்ற பொருளில் வந்தது. **வளர்க்கும் அத்தீ** - மந்திர வேள்வி வேட்டெரிக்கும் தீ வளர்க்கும் என்றும் பொருள். நாயனுரது சரிதக் குறிப்பும்பட நின்றது.

வளர்ப்பர்கள் மடவார் - தீயை அவியவிடாது பாதுகாத்தல் மனைவியர் கடனுதல் குறிப்பு; **மணஞ்செய் வேள்விச் சாலையில் அதற்கு வளர்த்த தீயினை இல்லறத்தில் நாடோறும் காத்து இறுதி நாளில் அதனுலே எரிக்கப்படும்வரை வளர்த்துவருதல் அந்தணர்க்கு விதித்த விதி.** "புகைவிடும் வேள்விச் செந்தீ வில்லுடன் கொண்டு போவார்" (திருஞான - புரா - 1202) என்பது காண்க. இச்சரிதத்தினுள் அம்மையார் வளர்த்த தீ நல்லூர்ப் பெருமணத்துக் கொண்டு போகப்பட்டு அங்கு எம்பிரானுகிய பெருந்தீயுடன் கூடி முடிந்ததும் காண்க. ஈண்டு **வளர்ப்பர்கண்** என்றது இரட்டுற மொழிதலால் அவியாது காப்பர் என்றும், மூன்றைக் கற்புத் தீயுடன் நான்காகப் பெருக்குவர் என்றும் உரைக்க நின்ற கவிநயம் காண்க. **கண்** - நினைத்தல் என்று கொண்டு, கண்ணும் - நினைக்கும் மடவார் என்றலும், **கண்** - முத்தீ வளர்க்கும் இருபிறப்பாளரின் கண் போன்ற மனைவியார் என்றும் உரைத்தலுமாம். நாயனுரது மனைவியார்க்கு இறைவர் அருளிய சரித வரலாறும் சிறப்பும் குறிப்பாலுணர்த்தப் பட்டன.

வாய்ந்த கற்புடன் நான்கென - வாய்ந்த - இயல்பின் வாய்க்கப்பெற்ற. முன்னர் "வாய்த்த மங்கல மறையவர்" (1828) என்பதனுடன் ஒப்புநோக்குக. **கற்பு** - "கற்பு" என்பது தீ எனப்படும். நளன் கதையில் தமயந்தியின் கற்பினுல் வேடன் எரிக்கப்பட்ட வரலாறும் அவ்வகையே பிறவும் காண்க. ஆயின் ஈண்டுக் கற்பென்பது கொழுநன் கற்பித்த வழிநிற்றல் என்ற சாதாரண உலகநிலைத் தன்மையேயன்றி மூலமாகிய சிவபெருமான் கற்பித்த வழிநிற்றல் என்ற உயர்ந்த கற்பினையும் குறிப்பித்து நின்றது. இப்புராணத்தினுள் நாயனுருடைய மனைவியாரது வரலாறும், காரைக்காலம்மையார் - மங்கையர்க்கரசி யம்மையார் வரலாறுகளும் ஈண்டுச் சிந்திக்கற்பாலன.

இருபிறப்பாளர் - மூன்று தீ வளர்த்துளார்; அத்தீயை அவர் மடவார் நான் கென வளர்ப்பர் - என்றது கணவர் தேடும் பொருளைக் குறைவுபடாது காப்பதும் வளர்ப்பதும் இல்லக்கிழத்தியர் கடமைகளுள் ஒன்று என்ற இல்லறநிலை விதிக்குறிப்பும்பட நின்றது. இரண்டு மூன்று நான்கு என்று (ஏறும்) எண்ணலங்காரச் சுவைபடவும் நின்றது காண்க.

மடவார் - மடமையாவது அறிந்தும் அறியாது போன்றிருத்தல் என்ப. மேற்கொள்ளப்பட்ட மடமைக்குணம்.

1831. சீல முய்த்தவத் திருமறை யோர்செழு மூதூர்
ஞான மிக்கநான் மறைப்பொருள் விளக்கிய நலத்தார்
ஆலம் வைத்தகண் டத்தவர் தொண்டரா மன்பர்
"**நீல நக்கனு**" ரென்பவர் நிகழ்ந்துளா ரானர். 4

1831. (இ-ள்.) *சீலம்...மூதூர்* - சிறந்த நல்லொழுக்கத்தை வழுவாது செலுத்திய அந்த மறையவர்கள் வாழும் செழிப்புடைய பழைய ஊரில்; *ஞாலம்...நலத்தார்* - இந்நிலவுலகத்தில் சிறந்த நான்மறைப் பொருளை விளக்கிய நன்மையையுடையவர்; *ஆலம்...அன்பர்* - விடத்தை வைத்த மிடற்றையுடைய சிவபெருமானுக்குத் தொண்டு பூண்டொழுகும் அன்புடையவர்; *"நீலநக்கனுர்" என்பவர்* - நீலநக்கர் என்று சொல்லப்பெறுவர்; *நிகழ்ந்துளார் ஆனுர்* - உலகம் புகழச் சிறந்து வாழ்வார் ஆயினுர்.

(வி-ரை.) சீலம் - நல்லொழுக்கங்களின் தொகுதி. உய்த்தல் - விடாது மேற்கொண்டு செலுத்துதல்.

மறையோர் - மூதூர். "மறையோர் விளங்குவது" *(1207)* என்ற விடத்துரைத்தவை பார்க்க. "மறையவர் முதற்பதி" *(1828).*

மிக்க நான்மறைப் பொருள் ஞாலம் விளக்கிய என்க. **மிகுதல்** - ஏனைய எல்லாவற்றினும் சிறப்புடையதாதல். **நான்மறைப் பொருள்** - "ஆய்ந்த சொல் பொருள் நீறு" *(1830)* என்று முன்னும், "வேத வுள்ளுறை யாவன" *(1832)* என்று பின்னும் வைத்து விளக்குதல் காண்க. **ஞாலம் விளக்கிய** - உலகத்தில் விளங்கச் செய்த. **விளக்குதல்** - தமது ஒழுக்கத்தினுல் உலகறியச் செய்தல்.

தொண்டராம் அன்பர் - அருளுடைமையும் அன்புடைமையும் குறிக்கப்பட்டன. தொண்டராந் தன்மை நாயனுர் சரிதத்து முற்பகுதியிலும், அன்புடைமை பிற்பகுதியிலும் விளங்கக் காண்க. **அன்பராம் தொண்டர்** என்னுது இவ்வாறு கூறிய கருத்துமது. மேல்வரும் பாட்டில் "நாதர் தம்மையும் அவரடியாரையும்...அர்ச்சனை புரிவதும் பணிவதும்" என்ற வைப்புமுறையும் காண்க.

நீலநக்கனுர் - நாயனுரது இயற்பெயர். ஒரு பாகம் நீலநிறமுடைய நக்கர் என்ற பொருள் தந்து சிவபெருமானது திருநாமங் குறிப்பது என்பர்.

என்பவர் - எனப்படுவர். "இல்வாழ்வா னென்பான்" (குறள்) என்புழிப் போலக் கொள்க.

நிகழ்ந்துளார் ஆனுர் - நிகழ்தல் - உலகம் தேற்றமாய் அறிந்து எடுத்துரைக்க விளங்குதல். **ஆனுர்** - "உளரானுர்" *(1281)*; **மூதூர் - நலத்தார் - அன்பர் - நீலநக்கனுர் - நிகழ்ந்துளார் -** நீலநக்கர் அன்புமிக்க சீலத்தாலும், மூதூர், அவராலும் உலகில் தேற்றம் பெற அறியப்பட்டு விளங்கிய உண்மை "நிறையினுர் நீலநக்கன்னெடுமா நகரென்று தொண்டர், அறையுமூர் சாத்தமங்கை யயவந்தி" - *(11)* என்ற ஆளுடைய பிள்ளையாரது திருவாக்கானு மறிக.

4

1832. **"வேத வுள்ளுறை யாவன விரிபுனல் வேணி**
நாதர் தம்மையு மவரடி யாரையு நயந்து
பாத வர்ச்சனை புரிவதும் பணிவது" மென்றே
காத லாலவை யிரண்டுமே செய்கருத் துடையார்;

1832. (இ-ள்.) வேத உள்ளுறை ஆவன - வேதங்களில் உள்ளுறை பொருளாகக் கிடைப்பன; விரிபுனல் வேணி... என்றே - விரிந்த புனலைத் தரித்த சடையினையுடைய தலைவராகிய சிவபெருமானையும் அவரடியார்களையும் அன்பினாலே பாத அருச்சனை செய்வதும் பணிவதுமேயாம் என்று தெளிந்து; காதலால்.... கருத்து உடையார் - காதல் மிகுதியினால் அவ்விரண்டு செய்கைகளையுமே செய்யும் கருத்தினை உடையவராய்;

(வி-ரை.) உள்ளுறை - உட்கருத்து; கருத்து என்றலே யமையுமாயினும் உள்ளுறை என்றது கருத்தினுள்ளும் நுழைந்து அழுந்திக் கண்டலான்றித் தோற்றப்படாததாய் உயிர்போல அமைந்துள்ளது. **உறை** - உறு பகுதி; பொருந்துதல்; ஐ - வினைமுதற்பொருள் விகுதி.

நாதர்... பணிவதும் - சிவனை அருச்சிப்பதும் அடியாரைப் பணிவதும் என்ற இவையே அனந்தமாய்ப் பரந்து செல்லும் வேதங்களின் உள்ளுறை என்பது. வேதங்களின் பயன் சைவமாம். என்னை? "வேதப் பயனும் சைவம்" (*1214*) என்பது சண்டீச நாயனார் புராணத்துள்ளே நாட்டப்பட்டது. சிவனை வேதம் தனது இருதயத்துள்ளே பொதிந்து வைத்துக் காத்து வருகின்றது என்பது "அருமறைப் பயனாகிய உருத்திரம்" (*1037*) என உருத்திர பசுபதி நாயனார் புராணத்துட் காட்டப்பட்டது. வேத இருதயத்துள் சிவன் விளங்குகின்றான். "வேதம் பசுவதன்பால் மெய்யாகமம்", "வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க" (திருஞான - புரா - *1*) என்பனவற்றால் வேதம் சைவ முடிபையே கருத்தாக வுடைய தென்பது விளங்கும். **வேதம் சிவத்தை முடிபாகக் காட்ட, அச்சிவத்தையடையும் வழிகளாகிய துறைகளை ஆகமங்கள் காட்டுவன; அவை சிவபூசையும் அடியார் பணியுமேயாம்** என்றிவையெல்லா காண "வேத உள்ளுறையாவன நாதர் அருச்சனையும் அடியார்களைப் பணிவதும்" என்றார்.

காதலால் - அன்பு மிகுதியின் விளைவு **காதல்** எனப்படும். சிவனையும் அவரடியார்களையும் எண்ணவரும் போது காதலிக்குக் காதலனிடம் வரும் அன்பு உளதாக வேண்டும் என்பது.

இரண்டுமே செய்கருத்து - ஏகாரம் பிரிநிலை; தேற்றமுமாம்.

செய்கருத்து - பிறவற்றை உலக நிலையிற் செய்ய நேர்ந்தபோதும் தமது கருத்து அவ்விரண்டும் செய்வதனையே விரும்பிற்று என்பது. திருஞானசம்பந்த நாயனார் புராணத்தினுள் திருமயிலாப்பூரில் பூம்பாவையாரின் எலும்பை நோக்கி "**மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் அடியாரை அமுது செய்வித்தலும் சிவன் திருவிழாக் காண்டலுமேயாம்** என்பது உண்மையாயின் நீ உயிர்பெற்று எழுந்துவா" என்று சூளுறவு சொல்லி ஆளுடைய பிள்ளையார் திருப்பதிகம் அருளியதும், அவ்வாறே அவ்வெலும்பு பெண்ணாக வந்ததுமாகிய வரலாறுகள் இங்கு நினைவு கூர்தற்பாலன.

1833. மெய்த்த வாகம விதிவழி வேதகா ரணரை
நித்தல் பூசனைபுரிந்தெழு நியமமுஞ் செய்தே,
யத்த ரன்பருக் கமுதுசெய் விப்பது முதலா
வெத்தி றத்தன பணிகளு மேற்றெதிர் செய்வார்; 6

இப்பாட்டினுல் இந்நாயனுர் உண்மையென்று தெளிந்து கருத்துட்கொண்ட கொள்கையும், மேல்வரும் பாட்டில் கருதிய அக் கொள்கையின்படி அவர் ஒழுகி நின்ற செயல்களும், அதன் மேல்வரும் பாட்டில் அவ்வொழுக்கத்தின் பயனுய் ஒருநாள் நிகழ்ந்த சரித வரலாறும் தொடர்ந்து கூறப்படுவன. 5

1833. (இ-ள்.) மெய்த்த... செய்தே - உண்மைப் பொருளைக் காட்டுகின்ற சிவாகமங்களின் விதிப்படி வேத முதல்வராகிய சிவபெருமானை நித்தமும் பூசை செய்தெழும் நியமங்களையெல்லாம் செய்து முடித்தும்; அத்தர்....செய்வார் - சிவனது அன்புடையார்களுக்குத் திருஅமுது செய்விப்பது முதலாக எல்லாத் தன்மையினுலும் கூடிய அடியவர் பணிகளையும் தாமே மேற்கொண்டு முன்பு செய்வாராகி;

(வி-ரை.) மெய்த்த ஆகம விதிவழி - மெய்த்த - உண்மைப் பொருளைக் காட்டும். **ஆகமம்** - சிவாகமங்கள். **விதிவழி** - ஆகமங்கள் விதித்துக் காட்டியபடியே. சிவனைப் போற்றுகின்ற வகையால் சிவனைப் பூசை செய்யவேண்டும் என்று குறிப்பிற் காட்டிநிற்பதொழியச் சிவபூசை செய்யும் முறையினையும் விதிகளையும் வேதங்கள் உணர்த்தா; அவை சிவாகமங்களிலே விரிக்கப்படுகின்றன. "வேதகாரணரை ஆகம விதிவழி நித்தல் பூசனைபுரிந்தெழு நியமம்" (1833) என்ற கருத்துமிது.

வேதகாரணர் - வேதஞ் சொன்னவர். வேதங்களால் உலகங்களின் நிமித்த காரணர் என்று அறிவிக்கப்பட்டவர் என்றலுமாம்.

நித்தல் பூசனை புரிந்தெழு நியமம் - சிவபூசை நித்தம் நியமமாகச் செய்ய வேண்டியது ஆன்மாக்களின் கடமை என்பது குறிப்பு. "அருப்போடு மலர்பறித்திட்டுண்ணு வூரும்" என்றும், "உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணு ராகில் - அளியற்றுர்பிறந்தவா றேதோ வென்னிற், பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப் பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின்றுரே" (தேவா) என்றும் வரும் திருவாக்குக்கள் இதன் இன்றியமையாமையை வற்புறுத்தற் கெழுந்தன.

புரிந்தெழு நியமம் - எழுந்து புரியும் நியமம் என்று மாற்றுக. சிவபூசனையாவது எழுந்தவுடன் முதற் கடமையாகச் செய்யற்பாலது என்பதும் குறிப்பு; **நியமம்** - கடமை; எக்காரணம் பற்றியும் கைவிடலாகாத ஒழுக்கம். "தொழுதெழுவாள்" (குறள்).

நியமமும் செய்தே...பணிகளும் ஏற்று எதிர்செய்வார் - அடியார் பணி செய்வார் பூசை நியமமும் செய்தார் என்ற உம்மை, இவ்விரண்டனுள் அடியார் பணியை முதன்மையாய்க் கொண்டார் என்பது குறித்தது.

1834. ஆய செய்கையி லமருநா **ளாதிரை நாளின்**
மேய பூசனை நியதியை விதியினுன் முடித்துத்
தூய தொண்டனுர் தொல்லைநீ டயவந்தி யமர்ந்த
நாய னுரையு மருச்சனை புரிந்திட நயந்தார். 7

அத்தரன்பருக்கு அமுது செய்விப்பது - அன்பர் - அடியவர். அன்பருக்கு என்றலே அமைவுடைத்தாயினும் அத்தர் அன்பருக்கு என்றது அன்பருள்ளிருந்து அத்தரும் அவ்வமுதினை உண்கின்றுர் என்று குறித்தற்கு. அத்தருக்கு என்று குவ்வுருபை முன்னும் கூட்ட நின்றது.

அமுது செய்விப்பது முதலா - தொண்டர் பணி பலவற்றுள்ளும் முதன்மை பெற்று விளங்குவது அவர்களை அமுது செய்விப்பதுவேயாம் என்பது.

முதலா எத்திறத்தன பணிகளும் - அவர் வேண்டும் பணிகள் ஏனை எத்தன்மையுடையவாயினும் அவற்றை யெல்லாம். **எத்திறத்தனவும்** என்றதனுல் அவை உலகியல்பிற் பொருந்துவனவும் பொருந்தாதனவும் என்று எவ்வியல்புடையன வாயினவும் என்பது குறிப்பு. உம்மை முற்றும்மை.

ஏற்று - பிறர்பால் விடாது தாமே மேற்பூண்டு. **எதிர்செய்தலாவது** குறிப்பறிந்து செய்தல் - முன்னே செய்தல் முதலாயின தன்மைகள்.

இப்பாட்டினும் முன்பாட்டினும் கூறிய இரண்டிற், சிவன்பூசை நியமம் ஒரு திருவாதிரைநாளில் தமது நித்த பூசை முடித்து அயவந்தி நாயனுரை அருச்சனை செய்யப்புக்க சரித விளைவினுலும், அடியார் பணி எத்திறத்தனவாயினும் ஏற்று எதிர் செய்தல் பின்னர்த் திருநீலகண்ட யாழ்ப்பாணரும் பத்தினியாரும் தமது நடுமனை வேதியின்பாங்கர்ப் பள்ளிகொள்ள வைத்த சரிதவிளைவினுலும் உலகறிய நிகழ்வன. 6

1834. (இ-ள்.) ஆய... நாள் - இவ்வாருகிய செய்கையில் வழுவாது அமர்ந்து ஒழுகிவரு நாளில்; ஆதிரை நாளின்.... முடித்து - ஒரு திருவாதிரை நாளிலே பொருந்திய சிவபூசை நியதியினை விதிப்படி முடித்துக்கொண்ட பின்னர்; தூய தொண்டனுர்....நயந்தார் - தூய தொண்டராகிய திருநீலநக்கனுர், பழமையாய் நீடியுள்ள அயவந்தி என்னும் திருக்கோயிலின் கண் விரும்பி எழுந்தருளிய தலைவராகிய சிவபெருமானையும் அருச்சனை விடாது செய்ய நினைந்தனர்.

இந்த மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டுரைக்க நின்றன.

(வி-ரை.) ஆதிரை நாளின் - திருவாதிரை சிவபெருமானுக் குகந்த நாள். "ஆதிரை நாளுகந் தானு மாரூ ரமர்ந்த வம்மானே" (தேவா). திருவாதிரை நாளில் சிவபெருமானுக்கு விசேட பூசை செய்தல் சிறந்த பயன்தரும். அந்நாளில் அடியார் பூசையும் செய்துவந்த நரசிங்கமுனையரைய நாயனுர் சரிதம் இங்கு நினைவுகூர்தற்பாலது.

ஆதிரை நாளில் - அருச்சனை புரிந்திட - நயந்தார் என்று கூட்டுக.

1835. உறையு ளாகிய மனைநின்று **மொருமையன் புற்ற**
முறைமை யால்வரு பூசைக்கு முற்றவேண் டுவன
குறைவ றக்கொண்டு மனைவியார் தம்மொடுங் கூட
இறைவர் கோயில்வந் தெய்தின ரெல்லையி றவத்தோர். 8

மேய பூசனை நியதி என்பது நித்தல் செய்த ஆன்மார்த்தமான சிவபூசைக் கடமை.

பூசனை நியதியை முடித்து - அருச்சனை - புரிந்திட - பூசனை நியதி என்பது நித்தியம் என்றும், **ஆதிரைநாளில் அருச்சனை** புரிந்திட என்பது நைமித்திகம் என்றும் கூறுவது மரபு. நைமித்திகமாவது நிமித்தம்பற்றிச் செய்யப்படுவது.

விதியினுல் - விதிப்படி. **விதி** - பான்மை - நியதி என்று கொண்டு, பின்வரும் விளைவு உண்டாகும் விதியினுல் என்று உரைத்தலு மொன்று.

தூயதொண்டனுர் - தூய என்பது பின் சரிதவிளைவினுள், மனைவியார் இறைவரது திருமேனியில் வாய் நீர்பட ஊதியதனை அனுசிதம் என்று அவரை நீத்த செய்திக் குறிப்புப்பட நின்றது.

அயவந்தி அமர்ந்த - அயவந்தி கோயிலின் பெயர். **அமர்தல்** - விரும்ப வீற்றிருத்தல்.

நாயனுர் - தலைவர். சிவபெருமான் ஒருவரே நாயனுராவர். "அழகிது நாயனீரே" என்ற கண்ணப்பர் புராணமும் பிறவும் காண்க. அத்தன்மையே தாமும் பெற்றுள்ளா ராதலின் அடியார்களும் நாயன்மார்கள் எனப்படுவர். "நாயன்மாரணைந்த போது" (470).

அருச்சனை புரிந்திட - ஈண்டு **அருச்சனை** என்பது பூசை அங்கமாகிய அர்க்கியம் - பாத்தியம் - மஞ்சனம் - நீறு - சாந்து - மாலை - புகை - ஒளி - அமுது - துதி - முதலிய எல்லாவற்றையும் உள்ளடக்கிய பூசை பொதுப் பெயராய் நின்றது. "முறைமையால் வரும் பூசைக்கு முற்றவேண்டுவன, குறைவறக் கொண்டு" (1835) என்று மேற்கூறுதல் காண்க.

நயந்தார் - அன்பினுல் நினைந்து மேற்கொண்டனர்.

நாயனுரையு மருச்சனை புரிந்திட - இங்கு நாயனுர் செய்ய மேற்கொண்டது சிவதீக்கை பெற்ற அந்தணர்களான மகா சைவர்கள் செய்யத்தக்க ஆன்மார்த்தமாகச் செய்யும் விசேட விதியாகிய சிறப்புப் பூசை. இது பரார்த்த விதியன்று. ஆதலின் "மாதொரு பாகனுர்க்கு வழிவழி யடிமை செய்யும் வேதியர்" என்ற ஆகமத்தொடு முரணுமை காண்க. 7

1835. (இ-ள்.) உறையுளாகிய மனை நின்றும் - இருப்பிடமாகிய தமது வீட்டினின்றும்; ஒருமை... கொண்டு - ஒன்றித்த அன்பு பொருந்திய முறையினுல் வரும் பூசையினைச் செய்வதற்கு வேண்டும் பொருள்களை யெல்லாம் குறைவில்லாமல் அமைத்துக் கொண்டு; மனைவியார் தம்மொடுங்கூட - மனைவியார் தம்முடனே; இறைவர்... தவத்தோர் - சிவபெருமானுடைய திருக்கோயிலின் வந்து எல்லையில்லாத தவத்தோராகிய நாயனுர் சேர்ந்தனர்.

(வி-ரை.) உறையுள் ஆகிய மனை - உறையுள் - உறையும் தன்மை பெற்ற பொருள்; இடம் குறித்தது; விளையுள் - கடவுள் என்புழிப்போல. உயிரின் மேம்பாட்டுக்கு

வேண்டப்படுவனவாகிய பொருள்கள் எல்லாம் நிலைபெற உறையும் என்பது குறிக்க **மனை** என்று வாளா கூறுது **உறையுளாகிய** மனை என்று விசேடித்தார். அப்பொருள்களாவன, "நித்தல் பூசனை புரிந்தெழு நியம"த்துக் (1833)குரிய இடமும், பிற சாதனங்களும், பூசனைக்குரிய நாயகரும், நடுமனை வேதியும், (1857), அதில் "அருத செந்தீயும்" (1858), அடியவர் கூட்டம் அமுது செய்து உறையும் இடங்களும், அடியவர் கூட்டங்களும் என்றிவை முதலாயின. இவை உறைதற்கு இடம் பெற்று அமைந்தனவே மக்களுக்கு உறையுள் ஆகிய மனைகள்; இவை ஒன்றுக்கும் ஒரு சிறிதும் இடம்பெறுது உடலுக்காவனவும் ஆகாதனவுமே யமையும் இந்நாள் "நாகரிகர்" இடம்பட அமைக்கும் மனைகள் மக்களுக்கு உறையுளாகா மனைகளேயாம் என்பது போதரும். "அவையெல்லாம் ஊரல்ல; அடவிகாடே" (தேவா); விலங்கு வாழ்வுக்குரியன என்பதாம். நாயனுரது மனையின் தன்மை இச்சரித விளைவுகள் பற்றியும் உணர்ந்துகொள்க.

ஒருமை அன்புற்ற பூசை என்றும், **முறைமையால் வருபூசை** என்றும் தனித்தனி கூட்டுக. **ஒருமை யன்பாவது** - பூசையினன்றிப் பிறிதொன்றினும் செல்லாதது; "பொது நீக்கித் தனைநினைய வல்லார்க்கு" (தேவா); மாறிமாறி வெவ்வேறு வழிகளால் வேறுவேறு பொருள்களிடத்துச் செல்லும் பொறிபுலன் கரணங்கள், அவ்வாறு செல்லாது ஒரு வழியே பூசையில் கலந்து நிகழ உள்ள அன்பு என்றலுமாம்.

முறைமையால் வருதலாவது ஆகமங்களுள் விதித்த முறையில் அமைவதும், முன் செய்தவத்தில் ஒருவர்க்கு முறையில் வந்து கிடைப்பதும் ஆம்.

முற்ற வேண்டுவன - பூசை முற்றுவிக்கச் சாந்தம் - மலர் முதலிய சாதனங்கள் யாவும்; **குறைவறக் கொண்டு** - சிறு முயற்சியாற் கிடைப்பனவற்றை மட்டும் கொண்டு, கிடையாதவற்றை அன்பினுல் நிரப்பி, என்றமையாது, எல்லாவற்றையும் பொருளானும் அளவானும் சிறிதும் குறைபாடின்றி அமைத்து, **கொண்டு** - எடுத்துக்கொண்டு, "தேடாதன அன்பினி னிரப்பி" (1242) என்று சண்டீச நாயனுர் புராணத்துட் கூறுவது ஒரு விதிதான்; ஆனுல் அது பூசைக்குரியனவாய் விதித்த சாதனங்கள் கிடையாதபோது அதுபற்றிப் பூசையை விட்டுவிடாது கிடைத்தனவற்றைக் கொண்டு ஏனையவற்றை அன்பினு னிரப்பிச் செய்தல் வேண்டுமென்னும் கருத்துக்கொண்டது. "போதும் பெருவிடிற் பச்சிலை யுண்டு புனலுண்டெங்கும், ஏதும் பெருவிடி னெஞ்சுண்டு" என்ற பட்டினத்துச் சுவாமிகள் திருவாக்குக் காண்க.

மனைவியார் தாம்மொடும் கூட - இல்லறத்தில் வாழ்வோர் உலக தர்மங்களைப் போலவே சிவ தருமங்களையும் மனைவியுடன் கூடியே செய்தல்வேண்டும். மனைவியுடன் கூடி நடத்தும் இல்லற தருமங்களின் கருத்தும் பயனும் ஆவது சிவதருமங்கள் செய்து வீட்டின்பம் பெறுவதேயாம். இப்புராணத்தினுள் இல்லறத்திலிருந்து முத்தியடைந்த சிறுத்தொண்ட நாயனுர், திருநீலகண்ட நாயனுர், இளையான்குடிமாற நாயனுர், இயற்பகை நாயனுர் முதலிய எல்லா நாயன்மார்களின் சரிதத்தாலும் இவ்வுண்மை பெறப்படுதல் காண்க. மனைவியார்க்கு இத்தருமங்களில் ஒத்த பங்குடைமையும் கருதுக. இவ்வாறன்றி நாயகன் ஒரு வழியும் மனைவி மற்றெரு வழியுமாகி, ஒருவர் செய்ய நேரும் சிறு வழிபாட்டிலும் மற்றவர்

1835. உறையு ளாகிய மனைநின்று **மொருமையன் புற்ற**
முறைமை யால்வரு பூசைக்கு முற்றவேண் டுவன
குறைவ றக்கொண்டு மனைவியார் தம்மொடுங் கூட
இறைவர் கோயில்வந் தெய்தின ரெல்லையி றவத்தோர். 8

மேய பூசனை நியதி என்பது நித்தல் செய்த ஆன்மார்த்தமான சிவபூசைக் கடமை.

பூசனை நியதியை முடித்து - அருச்சனை - புரிந்திட - *பூசனை நியதி* என்பது நித்தியம் என்றும், **ஆதிரைநாளில் அருச்சனை** புரிந்திட என்பது நைமித்திகம் என்றும் கூறுவது மரபு. நைமித்திகமாவது நிமித்தம்பற்றிச் செய்யப்படுவது.

விதியினுல் - விதிப்படி. **விதி** - பான்மை - நியதி என்று கொண்டு, பின்வரும் விளைவு உண்டாகும் விதியினுல் என்று உரைத்தலு மொன்று.

தூயதொண்டனுர் - தூய என்பது பின் சரிதவிளைவினுள், மனைவியார் இறைவரது திருமேனியில் வாய் நீர்பட ஊதியதனை அனுசிதம் என்று அவரை நீத்த செய்திக் குறிப்புப்பட நின்றது.

அயவந்தி அமர்ந்த - அயவந்தி கோயிலின் பெயர். **அமர்தல்** - விரும்ப வீற்றிருத்தல்.

நாயனுர் - தலைவர். சிவபெருமான் ஒருவரே நாயனுராவர். "அழகிது நாயனீரே" என்ற கண்ணப்பர் புராணமும் பிறவும் காண்க. அத்தன்மையே தாமும் பெற்றுள்ளா ராதலின் அடியார்களும் நாயன்மார்கள் எனப்படுவர். "நாயன்மாரணைந்த போது" (470).

அருச்சனை புரிந்திட - ஈண்டு **அருச்சனை** என்பது பூசை அங்கமாகிய அர்க்கியம் - பாத்தியம் - மஞ்சனம் - நீறு - சாந்து - மாலை - புகை - ஒளி - அமுது - துதி - முதலிய எல்லாவற்றையும் உள்ளடக்கிய பூசை பொதுப் பெயராய் நின்றது. "முறைமையால் வரும் பூசைக்கு முற்றவேண்டுவன, குறைவறக் கொண்டு" (1835) என்று மேற்கூறுதல் காண்க.

நயந்தார் - அன்பினுல் நினைந்து மேற்கொண்டனர்.

நாயனுரையு மருச்சனை புரிந்திட - இங்கு நாயனுர் செய்ய மேற்கொண்டது சிவதீக்கை பெற்ற அந்தணர்களான மகா சைவர்கள் செய்யத்தக்க ஆன்மார்த்தமாகச் செய்யும் விசேட விதியாகிய சிறப்புப் பூசை. இது பரார்த்த விதியன்று. ஆதலின் "மாதொரு பாகனுர்க்கு வழிவழி யடிமை செய்யும் வேதியர்" என்ற ஆகமத்தொடு முரணுமை காண்க. 7

1835. (இ-ள்.) உறையுளாகிய மனை நின்றும் - இருப்பிடமாகிய தமது வீட்டினின்றும்; ஒருமை... கொண்டு - ஒன்றித்த அன்பு பொருந்திய முறையினுல் வரும் பூசையினைச் செய்வதற்கு வேண்டும் பொருள்களை யெல்லாம் குறைவில்லாமல் அமைத்துக் கொண்டு; மனைவியார் தம்மொடுங்கூட - மனைவியார் தம்முடனே; இறைவர்... தவத்தோர் - சிவபெருமானுடைய திருக்கோயிலின் வந்து எல்லையில்லாத தவத்தோராகிய நாயனுர் சேர்ந்தனர்.

(வி-ரை.) உறையுள் ஆகிய மனை - உறையுள் - உறையும் தன்மை பெற்ற பொருள்; இடம் குறித்தது; விளையுள் - கடவுள் என்புழிப்போல. உயிரின் மேம்பாட்டுக்கு

வேண்டப்படுவனவாகிய பொருள்கள் எல்லாம் நிலைபெற உறையும் என்பது குறிக்க **மனை** என்று வாளா கூறுது **உறையுளாகிய** மனை என்று விசேடித்தார். அப்பொருள்களாவன, "நித்தல் பூசனை புரிந்தெழு நியம"த்துக் (1833)குரிய இடமும், பிற சாதனங்களும், பூசனைக்குரிய நாயகரும், நடுமனை வேதியும், (1857), அதில் "அருத செந்தீயும்" (1858), அடியவர் கூட்டம் அமுது செய்து உறையும் இடங்களும், அடியவர் கூட்டங்களும் என்றிவை முதலாயின. இவை உறைதற்கு இடம் பெற்று அமைந்தனவே மக்களுக்கு உறையுள் ஆகிய மனைகள்; இவை ஒன்றுக்கும் ஒரு சிறிதும் இடம்பெறுது உடலுக்காவனவும் ஆகாதனவுமே யமையும் இந்நாள் "நாகரிகர்" இடம்பட அமைக்கும் மனைகள் மக்களுக்கு உறையுளாகா மனைகளேயாம் என்பது போதரும். "அவையெல்லாம் ஊரல்ல; அடவிகாடே" (தேவா); விலங்கு வாழ்வுக்குரியன என்பதாம். நாயனரது மனையின் தன்மை இச்சரித விளைவுகள் பற்றியும் உணர்ந்துகொள்க.

ஒருமை அன்புற்ற பூசை என்றும், **முறைமையால் வருபூசை** என்றும் தனித்தனி கூட்டுக. **ஒருமை யன்**பாவது - பூசையினன்றிப் பிறிதொன்றினும் செல்லாதது; "பொது நீக்கித் தனைநினைய வல்லார்க்கு" (தேவா); மாறிமாறி வெவ்வேறு வழிகளால் வேறுவேறு பொருள்களிடத்துச் செல்லும் பொறிபுலன் கரணங்கள், அவ்வாறு செல்லாது ஒரு வழியே பூசையில் கலந்து நிகழ உள்ள அன்பு என்றலுமாம்.

முறைமையால் வருதலாவது ஆகமங்களுள் விதித்த முறையில் அமைவதும், முன் செய்தவத்தில் ஒருவர்க்கு முறையில் வந்து கிடைப்பதும் ஆம்.

முற்ற வேண்டுவன - பூசை முற்றுவிக்கச் சாந்தம் - மலர் முதலிய சாதனங்கள் யாவும்; **குறைவறக் கொண்டு** - சிறு முயற்சியாற் கிடைப்பனவற்றை மட்டும் கொண்டு, கிடையாதவற்றை அன்பினுல் நிரப்பி, என்றமையாது, எல்லாவற்றையும் பொருளானும் அளவானும் சிறிதும் குறைபாடின்றி அமைத்து, **கொண்டு** - எடுத்துக்கொண்டு, "தேடாதன அன்பினி னிரப்பி" (1242) என்று சண்டீச நாயனர் புராணத்துட் கூறுவது ஒரு விதிதான்; ஆனல் அது பூசைக்குரியனவாய் விதித்த சாதனங்கள் கிடையாதபோது அதுபற்றிப் பூசையை விட்டுவிடாது கிடைத்தனவற்றைக் கொண்டு ஏனையவற்றை அன்பின னிரப்பிச் செய்தல் வேண்டுமென்னும் கருத்துக்கொண்டது. "போதும் பெறுவிடிற் பச்சிலை யுண்டு புனலுண்டெங்கும், ஏதும் பெறுவிடி னெஞ்சுண்டு" என்ற பட்டினத்துச் சுவாமிகள் திருவாக்குக் காண்க.

மனைவியார் தாம்மொடும் கூட - இல்லறத்தில் வாழ்வோர் உலக தர்மங்களைப் போலவே சிவ தருமங்களையும் மனைவியுடன் கூடியே செய்தல்வேண்டும். மனைவியுடன் கூடி நடத்தும் இல்லற தருமங்களின் கருத்தும் பயனும் ஆவது சிவதருமங்கள் செய்து வீட்டின்பம் பெறுவதேயாம். இப்புராணத்தினுள் இல்லறத்திலிருந்து முத்தியடைந்த சிறுத்தொண்ட நாயனர், திருநீலகண்ட நாயனர், இளையான்குடிமாற நாயனர், இயற்பகை நாயனர் முதலிய எல்லா நாயன்மார்களின் சரிதத்தாலும் இவ்வுண்மை பெறப்படுதல் காண்க. மனைவியார்க்கு இத்தருமங்களில் ஒத்த பங்குடைமையும் கருதுக. இவ்வாறன்றி நாயகன் ஒரு வழியும் மனைவி மற்றொரு வழியுமாகி, ஒருவர் செய்ய நேரும் சிறு வழிபாட்டிலும் மற்றவர்

*1836. அணைய வந்துபுக் கயவந்தி மேவிய வமுதின்
துணைம லர்க்கழல் தொழுதுபூ சனைசெயத் தொடங்கி
இணைய நின்றங்கு வேண்டுவ மனைவியா ரேந்த
உணர்வின் மிக்கவ ருயர்ந்தவர்ச் சனைமுறை யுய்த்தார். 9

கூடாமலும் பிணங்கியும் சிவப்பணியில் மனஞ் சேராது இந்நாளில் நடைபெறும் இல்வாழ்க்கைகள் சிறிதும் பயன்பெறுது ஒழிவன என்க.

மனைவியார் தம்மொடும் கூட - தம்மொடும் என்றலே அமையுமானும் **கூட** என்றது சரித நிகழ்ச்சியில் அன்றிரவு "உன்னை யானினித் துறந்தன னீங்கு" (*1842*) என்று நீக்கப்பட்டுப், பின் மறுநாள் "மாத ராரையுங் கொண்டு" (*1847*) **கூடி** நிகழவுள்ள வரலாற்றுக் குறிப்புப்பெற வைத்ததாம்.

இறைவர் கோயில் - "அயவந்தி" என்ற கோயில்.

எல்லையில் தவத்தோர் - குரு, இலிங்கம், சங்கமம் என்று சிவம் விளக்கப்பெறும் மூன்றிடங்களுள் ஒன்றினிடத்துச் செய்யும் வழிபாடே சிவப்பேறு பெறுவிக்கவல்லது. இந்நாயனுர் இம்மூன்றிடங்களினும் வழிபாடு செய்யும் தவமுடையராதலும், அதன் பயனுக ஆளுடைய பிள்ளையாரது "திருக் கல்லியாணத்தினி லுடனே - நம்பர்தாள் சேர்ந்தார்" (*1864*) ஆதலும் குறிக்க **எல்லையில் தவம்** என்றுர். *8*

1836. (இ-ள்.) அணைய வந்துபுக்கு - திருக்கோயிலினுள்ளே அணையும்படி வந்து உட்புகுந்து; அயவந்தி...தொடங்கி - அயவந்தி யென்னும் அக்கோயிலின்கண் விளங்க வெழுந்தருளிய அமுதராகிய சிவபெருமானின் துணைமலர்க்கழல்களை வணங்கிப் பூசை செய்யத் தொடங்கி; இணைய நின்று...ஏந்த - தம்முடனே இணையாக நின்றுகொண்டு அவ்விடத்து வேண்டுவனவற்றை யெல்லாம் மனைவியார் எடுத்த ஏந்த; உணர்வின்...உய்த்தார் - உணர்வின் மிக்க அவர் உயர்வுடைய பூசனை முறைகளை யெல்லாம் செய்தனர்.

(வி-ரை.) அணைய வந்து புக்கு - அணைய - திருக்கோயிலின் உள்ளே இறைவர் எழுந்தருளியுள்ள இடத்தை அணையும்படி; **வந்து** - விதிமுறைப்படி வலம் செய்து வணங்கி வந்து; **புக்கு** - உள்ளே உரிய இடத்தினிற் புகுந்து.

அமுது - இறத்தலையும் பிறத்தலையும் போக்குதலின் அமுது என்றுர்.

அமிருதம் என்னுஞ் சொற்கு இறைவனே செம்பொருள். ஏனைய பொருட்கு உபசாரம். மிருதம் - அழிவு; அஃதில்லாதவன் - அழிவின்மையைத் தருபவன் - என்ற பொருள் சிவனுக்கே பொருந்துவதாம். தத்ப்ரஹ்ம ததோவாம்ருத முச்யதே - அது பிரமம் அதுவே சிவன் என்று கூறப்படுகின்றது என்பது முதலாக உபநிடதங்கள் கூறும்.

துணைமலர்க்கழல் - துணைக்கழல் - மலர்க்கழல் என்று தனித்தனி கூட்டுக. துணைக்கழல் - இரண்டு திருவடிகள். அடியவர்க்கு உற்ற துணையாகிய கழல் என்றலும் குறிப்பு.

1837. **நீடு பூசனை நிரம்பியு மன்பினு னிரம்பார்,**
மாடு சூழ்புடை வலங்கொண்டு, வணங்கிமுன், வழுத்தித்
தேடு மாமறைப் பொருளினைத் தெளிவுற நோக்கி,
நாடு **மஞ்செழுத் துணர்வுற விருந்துமுன் னவின்ருர்.** 10

தொழுது - இது பூசை தொடங்குமுன் செய்யவேண்டிய வணக்க விதி. "சுவாமி! அடியேனது பூசையினுள் விரும்ப வீற்றிருந்து அடியேன் செய்யும் பூசையினை யேற்றருளவேண்டும்" என்று வேண்டிக்கொண்டு பூசை தொடங்க வேண்டும் என்னும் ஆகமவிதி குறித்தது.

இணைய...ஏந்த இணைய நிற்றல் - பூசைத்துணையாய் உடன் நிற்றல். **நின்று** - கீழ் அமராது நின்றுகொண்டு. **அங்கு வேண்டுவ** - பூசையில் அவ்வப்பகுதிக்கு உரிய பொருள்களை அவ்வவ்விடத்திலும் அவ்வக்காலத்திலும்; **ஏந்த** - எடுத்த ஏந்தி நிற்க; கொடுத்தல் என்பதன்றி, ஏந்துதல் மரபு.

உணர்வின் மிக்கவர் - உணர்வின் மிகுதலாவது சிவபூசையே உறுதிப் பொருளாம் என்று உணர்ந்து அவ்வுணர்ச்சியில் உறைத்து நிற்றல்.

உயர்ந்த அர்ச்சனை முறை - உயர்ந்த - பிற எல்லாவற்றினும் உயர்ந்த; இயற்கை யடைமொழி; இவ்வியல்பெல்லாம் முன்னர்த் திருக்குறிப்புத் தொண்டநாயனர் புராணத்தும் சண்டீசர் புராணத்தும் விரித்து உரைக்கப்பட்டன. ஆண்டுக் கண்டுகொள்க.

உய்த்தல் - எவ்வாற்ருனும் குறைபாடின்றிக் கொண்டு செலுத்துதல். 9

1837. (இ-ள்.) நீடு...நிரம்பார் - நீடும் பூசனை முற்றுப்பெற்றதாயினும் அன்பினுல் நிரம்பாதவராய்; மாடு...வலங்கொண்டு - பரமனுர் எழுந்தருளிய உள்ளிடத்தைச் சூழ்ந்த பிரகாரத்தை வலமாக விதிப்படி சுற்றிவந்து; வணங்கி நிலமுறக் கீழே விழுந்து வணங்கி யெழுந்து; முன்வழுத்தி - திருமுன்பு நின்று துதித்து; தேடு...நோக்கி - பெரிய மறைகள் தேடுகின்ற பொருளைத் தெளியும்படி கூர்ந்து அழுந்திய பார்வை செய்து; நாடும் அஞ்செழுத்து உணர்வுற - நாடுகின்ற திருவைந்தெழுத்து உணர்ச்சியிற் பொருந்த; இருந்து முன் நவின்ருர் - திருமுன்பு இருந்து விதிப்படி எண்ணினுர்.

(வி-ரை.) நீடு பூசனை நிரம்பியும் - நீடு பூசனை - அன்பினுல் முற்றச் செய்து நீடிய பூசை. **நீடுதல்** - எவ்வகையாலும் குறைபாடின்றி நிறைதல். இடையருது என்றும் நீடும் என்றலுமாம். "மாறி லாதவிப் பூசை" (*1146*) "ஏத நீங்கிய பூசை" (*1145*) முதலியவை காண்க.

நீடுபூசனை நிரம்பியும் அன்பினுல் நிரம்பார் பூசனை - ஆகமங்களின் விதித்த அருச்சனை விதிமுறைகள் யாவும் அன்பினேடு நிறைவாக இயற்றிய பின்னும் அன்பினுல் நிரம்பாதவராய்; மனம் அமைதி பெருதவராய். **மாடுசூழ்புடை - மாடு** - இறைவர் எழுந்தருளிய இடத்தின் பக்கம். **சூழ்புடை** - அதனைச் சூழ்ந்த உட்பிரகாரத்தின்கண்.

1838. தொலைவில் செய்தவத் தொண்டனூர் சுருதியே முதலாங்
கலையி னுண்மையா மெழுத்தஞ்சுங் கணிக்கின்ற காலை,
நிலையி னின்றுமுன் வழுவிட நீண்டபொன் மேருச்
சிலையி னூர்திரு மேனிமேல் விழுந்ததோர் சிலம்பி. 11

ஏழனுருபு தொக்கது. **வணங்கி** - கீழ்வீழ்ந்தெழுந்து நின்று விதிப்படி மூன்று முறை, ஐந்து முறை முதலாக வீழ்ந்து வணங்குதல் குறித்தது.

முன் துதித்து - திருமுன்பு நின்று தோத்திரித்து.

தேடு மாமறைப் பொருளைத் தெளிவுற நோக்கி - தேடும் பொருள் - பெருமறை தேடும் பொருள் என்பது உலகமாயினுன், உலகங் கடந்து நின்றுன் என்று பல முறையாலும் பரப்பிரமத்தின் தன்மைகளைப் பேசுதல் குறித்தது. "தனி முதலாம் பரன் என்று பன்முறையாற் றுணிந்த மறைமொழி" *(789)* "அருமறைப் பயனுகிய வுருத்திரம்" *(1037)* என்ற விடத்துரைத்தவை பார்க்க. **தெளிவுற நோக்குதலாவது** பிற ஒன்றும் தோன்ருது அப்பொருளே கருத்தில் உரு வெளிப்படும்படி அழுந்தி யறிதல்; "உயிரா வணமிருந்து.... உற்றுநோக்கி"; (தேவா).

நாடும் அஞ்செழுத்து உணர்வுற இருந்து முன் நவின்ருர் - நாடும் - என்றதனை "எவ்வெவ் கோட்படு பொருளும்" என்ற பாட்டினுல் மாதவச் சிவஞான முனிவர் காஞ்சிப்புராணத்தினுள் விளக்கினமை காண்க. சமயாசாரியர்கள் அருளிய ஸ்ரீ பஞ்சாக்கரத் திருப்பதிகங்கள் நான்கினுள்ளும் காண்க. "அருளும் மெய்யஞ்செழுத்து" *(1395)* என்று முன் விதந்தோதியதும் கருதுக. **உணர்வு உற** - பொருள் தமது உணர்வில் முற்றும் பொருந்த. **முன் இருந்து** - என்க. திருமுன்பு விதித்த ஆசனநிலையில் அமர்ந்து. இங்கு **இருந்து** என்றதனுல் முன் சொன்ன **வலங்கொள்ளு**தலும் **வணங்கு**தலும் **வழுத்து**தலும் **நோக்கு**தலும் என்றவை இவ்வாறன்றி நடத்தல், கிடத்தல், நிற்றல் என்ற நிலைகளில் விதிப்படி இயற்றப்பட்டன என்பதும் பெறப்படும். **நவின்ருர் - நவிலுதல்** - கணித்தல் "கணிக்கின்ற" *(1838)* என்று மேல்வரும் பாட்டிற் கூறுதல் காண்க. "உருவெணத் தவமாமே" (தேவா); இது வெளிப்பட வாக்கினுற் சொல்லுதல் அன்று; மத்திமை வாக்கினுலே பிறர் கேட்காத வண்ணம் சொல்லுதல்.

இங்குக் கூறிய ஐந்தும் பூசைக்கங்கமல்லாவிடினும் பூசை நிரம்பியபின் இறுதியில் இயன்றவளவு செய்யத்தக்கன என்பது விதி. வாசிகம், காயிகம், உபாஞ்சு என்பவற்றுள் இஃது உபாஞ்சு ஆகும்; இவற்றை முறையே பிரதக்கிணம், நமக்காரம், தோத்திரம், தியானம், செபம் என்பர். "நான்செய்பூசை செபந்தபந் தியான ஞான, மெல்லா முடிந்தபின் கொல்லுகண்டா யிறைவா!" (பட்டினத்தார்). *10*

1838. (இ-ள்.) தொலைவில்....தொண்டனுர் - அளவில்லாத தவஞ்செய்த தொண்டனாராகிய திருநீலநக்கர்; சுருதியே...காலை - வேதங்களை முதலாகக் கொண்டு வரும் எல்லாக் கலைகளும் எடுத்துக்கூறும் உண்மைப் பொருளாகிய திருவைந்தெழுத்தினையும் எண்ணுகின்றபொழுது; நிலையின் நின்று.... சிலம்பி - ஒரு சிலந்திதான் நின்ற நிலையினின்றும்

1839. விழுந்த போதிலங் கயனின்ற மனைவியார் விரைவுற்
றெழுந்த **வச்சமோ டிளங்குழ வியில்விழுஞ் சிலம்பி
ஒழிந்து நீங்கிட வூதிமுன் றுமிப்பவர் போலப்
பொழிந்த வன்பினு லூதிமேற் றுமிந்தனர் போக.** 12

வழுவியதனுல் நீண்ட பொன் மேருமலையினை வில்லாக உடைய சிவபெருமானது அருட்குறியாகிய சிவலிங்கத் திருமேனியின் மேல் விழுந்தது.

(வி-ரை.) தொலைவு இல் - தொலைவு - ஈண்டு அளவு என்ற பொருளில் வந்தது.

தவம் செய் தொண்டனுர் - என்க. முன்பு செய்தவம் என்றலும் குறிப்பு. "தவமும் தவமுடையார்க் காகும்" (குறள்).

சுருதியே...எழுத் தஞ்சும் - சுருதியே முதலாம் - சுருதி - சிவன் அருளிய வேதம். ஏகாரம் தேற்றம். **முதலாம்** - முதலாகக் கொண்ட. **கலையின் உண்மை ஆம்** - சுருதியின் உண்மையைக் கலைகள் விளங்கி நிற்றலின் இவ்வாறு கூறினுர். **உண்மை** - ஈண்டுக் குறிக்கப்படும் உள்ளீடாகிய உறுதிப்பொருள் என்ற பொருளில் வந்தது. **எழுத்தஞ்சு** - சீபஞ்சாக்கரம்; **கணித்தல்** - எண்ணுதல். உண்மை விளக்கம் 30 - 44 திருப்பாட்டுக்களும்; பிறவும் பார்க்க. இதுபற்றி முன் ஆண்டாண்டுரைத்தவையும் கருதுக.

முன் நிலையினின்று வழுவிட - என்க. இருந்த நிலையினின்று வழுவியதனுல். **வழுவிட** - நிலைதவறியிட.

திருமேனி - இலிங்கத்திருமேனி; **சிலம்பி** - சிலந்திப்பூச்சி; **சுதைச்சிலம்பி** என்னும் இது. தீண்டிய இடமெல்லாம் கொப்புளாக்கும் விடத் தன்மையுடையதொரு வகைப்பூச்சி (*1840*).

11

1839. (இ-ள்.) விழுந்தபோதில் - அவ்வாறு சிலம்பி விழுந்தபோது; அங்கு...அச்சமோடு - அவ்விடத்துப் பக்கத்திலே நின்ற மனைவியார் விரைவாக எழுந்த பயத்துடனே; இளங்குழவியில்...போல - இளங்குழவியின்மேல் விழுந்த சிலந்தி ஒழியவும் அதன் விடத்தின் தீங்கு நீங்கவும் ஊதி முன் துமிக்கும் தாய்போல; பொழிந்த...போக - பொங்கிமேல் பொழிந்த அன்பினுலே ஊதித் திருமேனி மேனின்றும் அச்சிலம்பி போகும்படி மேலே துமிந்தனர்.

(வி-ரை.) அங்கு அயல் நின்ற - அவ்விடத்து நாயனுர் திருவைந்தெழுத்தை இறைவரை நோக்கியிருந்து கணிக்கின்ற அவ்விடத்தின் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த. **அயல் நிற்றல்** - நாயகர் செபிக்கின்றபோது தாம், இந்நாளிற் பலரும்செய்தல்போல, வேறிடத்தகலாமலும், வேறு செயல் செய்யாமலும், அச்செயலிலே பங்கு கொள்பவர்போல உடனே நின்று தாமும் இறைவரை நோக்கிக் கணித்து நிற்றலாம். இஃது அவர்க்குதவியாதலே யன்றித் தமக்கும் உறுதியாமென்க. செபமுற்றிய வழி அவர் வேண்டுவ செய்தற்கும் இது துணையாமென்க. **விரைவுற்று எழுந்த அச்சமோடு - போக - மேல் -ஊதித் துமிந்தனர்** - என்று கூட்டிமுடிக்க.

1840. பதைத்த செய்கையான் மனைவியார் முற்செயப், பந்தஞ்
சிதைக்கு மாதவத் திருமறை யவர்கண்டு, தங்கண்
புதைத்து, "மற்றிது செய்ததென்? பொறியிலா?" யென்னச்,
"சுதைச்சி லம்பிமேல் விழவூதித் துமிந்தன" னென்றார். 13

விரைவுற்று எழுந்த அச்சம் - சிலம்பியின் விடநீர் திருமேனியில் ஊறித் தீங்கு விளைக்கா முன்னர் அதனைப் போக்கவேண்டும் என்ற நினைவினால் **விரைவும்;** கொப்புள் உண்டாக்கித் தீங்குவிளைத்துவிடும் என்ற நினைவினால் **அச்சமும்** எழுந்தன.

இளங்குழவி...போல - துமிப்பவர் - துமித்துத் தீங்கு விளையாவண்ணம் நீக்கும் தாயர்போல. இறைவரை இளங்குழவி என்று எண்ணும் தாயின் பரிவுக் குறிப்பு. வினைபற்றி எழுந்த உவமம்.

பொழிந்த - உள்ளூறி மேலே எழுந்து வழிந்த.

துமிதல் - தீயை அவிப்பார் போன்று விசையால் ஊதுதலால் வாய்க்காற்று வாய் நீருடன் சேர்ந்து செல்லும்படி உமிழ்தல். **முன்** - தீங்குவிளையாமுன்.

மேல் - திருமேனியின்மேல். **போக** - சிலம்பியும் அதன் விடநீரும் போகும்படி. *12*

1840. (இ-ள்.) பதைத்த... முற்செய - உளம் பதைத்தலால் தூண்டப்பட்ட செய்கையினாலே மனைவியார் முன்னே இவ்வாறு செய்ய; **பந்தம்...கண்புதைத்து** - மலங்களை நீக்கும் மாதவஞ்செய்யும் அந்தணராகிய திருநீலநக்கனார் அதனைக் கண்டு, ஆற்றமாட்டாது தமது கண்களைப் பொத்திக்கொண்டு; "மற்றிது...பொறியிலாய்!" என்ன - "அறிவில்லாதவளே! தகாத இச்செயலைச் செய்தது என்ன காரணம்?" என்று வினவ; "சுதைச்சிலம்பி...துமிந்தனன்" என்றார் - "சுதைச்சிலம்பி திருமேனிமேல் விழுந்தபடியினால் அதனை நீக்க ஊதித் துமிந்தேன்" என்றனர்.

(வி-ரை.) பதைத்த செய்கை - இறைவரது திருமேனியிற் கொப்புள் உண்டாக்கிவிடுமே என்று உள்ளம் பதைத்ததனால் தூண்டப்பட்ட செயல். பதைத்ததனால் நிகழ்ந்த செய்கையைப் **பதைத்த செய்கை** என்றார்.

முற்செய - முன் - தமது முன்பு. சிலம்பியின் விடநீர் தீங்கு செய்யுமுன்பு என்றலுமாம்.

பந்தம் சிதைக்கும் மாதவம் - பந்தம் - மூலமலம் முதலியன. மேல் மனைவியாரையும் நீத்துச்செல்லும் சரிதவிளைவுக் குறிப்பு. **மாதவம்** - சிவபூசை.

கண் புதைத்து - கண்ணாற் காணத்தகாத அனுசிதமாகிய சிவாபராதத்தைக் காணநேர்ந்ததனாற் கண்களைக் கையினால் மூடிக்கொண்டு.

மற்று - இது - தகாத செயல் என்றதாம். மற்றதாகிய இது.

பொறி இலாய் - பொறி - தக்கதறியும் அறிவு என்ற பொருளில் வந்தது.

விழ - துமிந்தனன் - விழுந்ததனால் அத்தீங்கு நீங்கத் துமிந்தனன்.

1841. மனைவி யார்செய்த வன்பினை மனத்தினிற் கொள்ளார்,
புனையு நூன்மணி மார்பர்தம் பூசனைத் திறத்தில்,
"**இனைய செய்கையிங் கநுசித மா**"மென வெண்ணும்
நினைவி னாலவர் தம்மைவிட் டகன்றிட நீப்பார், 14

இப்பாட்டில் இவரது வெவ்வேறு நிலைகொண்ட அன்பின் செயலும் திறமும் ஒருங்கே காட்டப்பட்டன. *13*

1841. (இ-ள்.) மனைவியார்...கொள்ளார் - மனைவியார் செய்த அன்பினை மனத்துட் கொள்ளாதவராகி; புனையும் மார்பர் - பூணுநூல் புனைகின்ற அழகிய மார்பினையுடைய திருநீலநக்கனார்; தம் பூசனை...நினைவினால் - தமது பூசனையினுள் இத்தகைய செய்கை இங்கு அநுசிதமாகும் என்று எண்ணும் நினைவு கொண்டதனால்; அவர்...நீப்பார் - அம் மனைவியார் தம்மைவிட்டு நீங்கும்படி துறப்பாராகி,

(வி-ரை.) செய்த அன்பு - அன்பினாற் செய்த செயல். அன்பின் செயலை என்னாது **செய்த அன்பினை** என்றது, இச்செயலைத் தூண்டிய அன்பே கருதத்தக்கதன்றி, நாயனார் கொண்டதுபோலச் செயல்மட்டிற் காணத்தக்கதன்று என்று குறித்தற்கு.

மனத்தினிற் கொள்ளுதல் - கருதி ஏற்றல். அமைத்துக்கொள்ளுதல்;

பூசனைத் திறத்தில் - அநுசிதமாம் - தாம் செய்த பூசனையின் தூய்மையினைச் சிதைக்கும் தீய செய்கையாம்.

அநுசிதம் - ந - உசிதம் - உசிதமல்லாதது; தகாத செயல். தகுதியன்று என்பதோடன்றி விலக்கத்தக்க தீமையும் பயப்பது என்றது குறிப்பு. அதர்மம் - என்புழிப்போல **அ** என்னும் நகரம் ஈண்டு மறுதலைப் பொருள்தந்து உசிதத்துக்கு மாறுகிய தீமை என்பது குறித்தது.

தம்மைவிட்டு அவர் அகன்றிட - என்க. **நீத்தல்** - தமது மனைவியார் என்ற தொடர்பு அறத் துறந்துவிடல்.

நீப்பார் - நீப்பாராகி. எதிர்கால வினைமுற்றெச்சம். **நீப்பார் - உரைத்தார்** என மேல்வரும் பாட்டுடன் முடிக்க. *14*

1842. (இ-ள்.) வெளிப்படை. "மின்போன்று ஒளிவீசுகின்ற நீண்ட சடையினையுடைய விமலராகிய சிவபெருமானுடைய திருமேனியின் மேல்விழுந்த நூற் சிலம்பியை வேறு ஒருவகையினால் தவிர்க்காது, முன்வந் தணைந்து வாய்நீர்படும்படி முயன்றனை; நான் உன்னை இனி ஈங்குத் துறந்துவிட்டேன்" என்று உரைத்தனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

(வி-ரை.) மின்நெடுஞ்சடை மின் - மின் சடை - மின்னும்சடை. மின்னல் போன்று விளங்கும். "மின்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணம் வீழ்சடை" (பொன்வ - அந்).

1842. "மின்னெ டுஞ்சடை விமலர்மேல் விழுந்தநூற் சிலம்பி
தன்னை வேறொரு பரிசினுற் றவிர்ப்பது தவிர
முன்ன ணைந்துவந் **தூதிவாய் நீர்பட முயன்ருய்;**
உன்னை யானினித் துறந்தன னீங்"கென வுரைத்தார். 15

விமலர் - மலமற்றவர் - இயல்பாகவே பாசங்களி னீங்கியவர். விமலராதலின் சிலம்பியைப் பதைப்பின்றி வேறுவகையாற் றவிர்க்கலாமென்பது குறிப்பு. விமலராதலின் அன்பினுல் வாய்நீர்பட ஊதித் துமிதலால் அநுசிதப்படார் என்பதும் போதருதலின், அதனைத் தாமே மறந்து கூறினுர் என்ற குறிப்பும்பட உரைத்த நயம் கருதுக.

நூற்சிலம்பி - நூல் நூற்கும் இயல்புடைய சிலம்பி.

வேறொரு பரிசு - வாய்நீர்பட ஊதித் துமிதலன்றி வேறு செயல் வகை.

முயன்ருய் - செய்தாய்.

துறந்தனன் - ஈங்கு - இங்கே நீத்துவிட்டேன். **நீங்கு** - என்னை விட்டு நீங்குவாயாக என்றலுமாம். *15*

1843. (இ-ள்.) மற்ற...மறைந்தான் - மற்று அப்போது சூரியன் மேற்கு மலையில் மறைந்தனன்; உற்ற...நீங்க - பொருந்திய கட்டளையின் வழியே நின்று மனைவியார் ஒரு பக்கம் நீங்க; முற்ற...முடித்து - தமது பூசனை முற்றுதற்கு வேண்டப்படுவனவாகிய குற்ற நீக்கும் பூசை முறைகளைச் செய்து முடித்து; கற்றை...புகுந்தார் - கற்றையாக முடித்த சடையினையுடைய சிவபெருமானின் தொண்டனுரும் தமது கடிமனையினுட் புகுந்தனர்.

(வி-ரை.) மற்று அவ்வேலை - மனைவியாரது அன்பன் மனங்கொள்ளாது புற நிகழ்ச்சி பற்றியே நாயனுர் கடிந்து அவரைத் துறந்தமையின் **மற்று அவ்வேலை** என்ருர்.

மலை - அத்தமனகிரி. **கதிரவன் - மறைந்தான்** - உலக அண்டம் சுழன்று சென்று ஒரு பகுதி ஞாயிற்றின் ஒளியினின்றும் மறைதலைக் கதிரவன் மறைவதாகக் கூறுதல் உபசார வழக்கு. **அவ்வேலை** - அந்த நேரம். அகரம் முன்னறிசுட்டு. நாயனுர் மனைவியாரைத் துறந்தமை காணமாட்டாது மறைபவன்போல என்ற குறிப்புப்பட **மற்றவேலையில் மறைந்தான்** என்ருர்; "சம்பந்த ருடன்வந்தார்க்கெய்தும் வெம்மை யிளைப்பஞ்சி னுன்போல...வெய்யவன் சென்று மேல்கடல் வீழ்ந்தனன்" (2090) முதலியவை பார்க்க.

உற்ற ஏவலின் - உற்ற - தம் தலைவராகிய கணவனுரிடமிருந்து வந்த; தாம் பிழைசெய்யாது அன்பின் மிகுதியாற் செய்யினும் நியதியின் வழிவந்து பொருந்திய என்ற குறிப்புமாம். **ஏவலின்** - கட்டளையின்படி. 1830ல் கூறியபடி கற்பை நான்காவது தீ என ஓம்பி வளர்ப்பவராதலின் கணவனுர் சொற்றிறங் கடவாது அமைந்து என்க.

ஒரு வழி நீங்குதலாவது கணவனுர் பக்கலினின்றும் ஒருவழியாக ஒதுங்குதல்.

1843. மற்ற வேலையிற் கதிரவன் மலைமிசை மறைந்தான்;
உற்ற வேவலின் **மனைவியா ரொருவழி** நீங்க,
முற்ற வேண்டுவ **பழுதுதீர் பூசனை** முடித்துக்
கற்றை வேணியார் தொண்டருங் கடிமனை புகுந்தார். 16

ஒரு வழி - ஒரு பக்கமாக; ஒரு புடையே.

முற்ற - தமது பூசனை நியமம் இடையில் இடையூறுபட்டு அநுசிதமடைந்து விட்டதாக எண்ணினமையால் அவ்வாறு இடையறுது பூசை முற்றும்படி.

பழுதுதீர் வேண்டுவ பூசனை - பழுதுதீர் பூசனை - குற்றம் போக்கும் கழுவாய்; பிராயச்சித்தம் என்பர். "பழுதுபுகுந் ததுதீரப் பவித்திரமாஞ் செயல்புரிந்தே" (*788*) என்றவிடத் துரைத்தவை பார்க்க. **வேண்டுவ** - செய்யவேண்டுவனவாகிய. **பூசனை** - பிராயச்சித்தச் செயல்கள். **பூசனை முடித்து** - முன் "அன்பினு னிரம்பார்" (*1837*)என்றபடி பூசனையை வேண்டி நின்ருராதலின் அவ்வாறே மேலும் பூசித்து முடிக்க இறைவர் வாய்ப்பு அளித்தனர் என்பது.

கடி மனை - கடி - காவல். காவல் பொருந்திய மனை என்றது ஆருத செந்தீ எந்நாளும் விதிவழி வளர்க்கப்படும் மறை யொழுக்கத்தாலும், கனவில் அன்றிரவு இறைவர் எழுந்தருளி மனைவியாரது அன்பின் மேன்மையைத் தேற்றி மனையை மனையாக்குதலாலும், பின்னர் ஆளுடைய பிள்ளையார் அடியார் திருக்கூட்டத்துடன் எழுந்தருளும் பேறுபெற உள்ளமையாலும் காவல்பெற்ற தென்றதாம். **கடி** - கடிந்த என்று, மனைக்குரிய மனைவியாரைக் கடிந்து போந்த மனை என்ற குறிப்பும்தர நின்றது; மேலே அடைமொழியின்றி "மனையின்" (*1847*) என்பதும் காண்க. *16*

1844. (இ-ள்.) நங்கையார் - அம்மையார்; அஞ்சும்...அணைவுற மாட்டார் - பயந்த வுள்ளத்தினேடும், அவர் பக்கத்தில் அணையமாட்டாதவராய்; நஞ்சமுண்டவர் கோயிலில் இருந்தார் - விடமுண்ட பெருமானது கோயிலில் தங்கியிருந்தனர்; செஞ்சொல்...தாம் - செம்மையாகிய சொற்களையுடைய நான்மறைவல்ல திருநீலநக்கர்தாமே; இரவு... பள்ளிகொள்கின்ருர் - அன்றிரவில் பஞ்சுபெய்த மெல்லணையில் துயில்கின்ருராகவே;

(வி-ரை.) அஞ்சும் உள்ளம் - இறைவனிடம் அநுசிதம் விளைத்து விட்டனரென்ற நிலைமையும், அதுகாரணமாக நாயகரால் துறக்கப்பட்டமையும் எண்ணவே அச்சம் உண்டாயிற்று.

மருங்கு அணைவுற மாட்டார் - துறக்கப்பட்டமையால் பக்கத்தில் போகமாட்டாதவராய். **மாட்டார்** - மாட்டாமல்; முற்றெச்சம்.

நஞ்சமுண்டவர்....இருந்தார் - உடலின் நாயகராற் றுறக்கப்பட்டபோது, உயிரின் நாயகராகிய சிவபெருமானிடம் இருந்தார் என்பது. காரைக்காலம்மையார் சரித வரலாறு இங்குச் சிந்திக்கற்பாலது. *1765* பார்க்க. தமது நாயகரது மனையினன்றிப் பெண்கள் வேறெங்கும் தங்குதல் தகாதென உலகநிலையறத்தினும் விலக்கப்படுதல் காண்க.

1844. அஞ்சு முள்ளமோ டவர்மருங் கணைவுற மாட்டார்
நஞ்ச முண்டவர் கோயிலி னங்கையா ரிருந்தார்;
செஞ்சொ னான்மறைத் திருநீல நக்கர்தா மிரவு
பஞ்சின் மெல்லணைப் பள்ளியிற் பள்ளிகொள் கின்றார்; 17

நஞ்சமுண்டவர் - "ஆலத்தின லமிர்தாக்கிய"துபோல் இங்கு அநுசிதத்தையும் அன்பினல் சிறந்த செயலாகக் கொண்டவர் என்பது குறிப்பு.

நங்கையார் - பெண்களுட் சிறந்தவர். ஆடவருட் சிறந்தவரை நம்பி என்பது போல.

செஞ்சொல் - திருநீலநக்கர் என்றும், **நான்மறைத் - திருநீலநக்கர்** - என்றும் தனித்தனி கூட்டுக. **செஞ்சொல்** என்றது முன் மனைவியாரை "உன்னையான் இனித் துறந்தனன்" என்ற சொல் அன்பினைக்கொள்ளாது வலிந்த சொல்லாயினும், இறைவன்பால் அநுசிதம் நிகழக் காண்பது பொறாத செம்மையால் எழுந்து செம்மை செய்வது என்ற குறிப்பும் தருவது.

பஞ்சின் மெல்லணை...பள்ளி கொள்கின்றார். மனைவியாரைத் துறந்து விட்டமையைச் சிறிதும் மனம் வைக்காமல் - நினையாமல்.

பள்ளி கொள்கின்றார் - துயின்றவர் என்னது இவ்வாறு கூறியது பந்தஞ் சிதைக்கும் மாதவரா (1840)தலின் விழிப்பு நீங்கினும் தாமதத்தின்பாற்பட்ட துயிலுக்கு முற்றிலும் அடிமையாகாது சிவனினைவுடன் துயின்றனர் என்று குறித்தற்கு. இருந்தும் நின்றும் நடந்தும் வருநிலைமாறிக், கிடந்த நிலைமட்டில் மேற்கொண்டார் என்பது. நிகழ்காலத்தாற் கூறியது மிக்கருத்து. மேல்வரும் பாட்டிலும் "பள்ளிகொள் பொழுது" என்று இவ்வாறே தொடர்ந்து கூறுவதும் காண்க.

பள்ளிகொள்கின்றார். ஒரு சொல் நீர்மையாய்க் கிடப்பாராய் என்றபொருளில் வந்தது. முற்றெச்சம். *17*

1845. (இ-ள்.) பள்ளிகொள் பொழுது - அவ்வாறு துயின்ற பொழுதில்; அயவந்திப்பரமர்...காட்டி - அயவந்தியில் எழுந்தருளிய சிவபெருமான் அவரது கனவில் எழுந்தருளிக் கங்கை நீர் ததும்பும் சடையுடனே தமது திருமேனியைக் காட்டி; "உள்ளம்....கொப்புள்" என்று அருள - "மனத்தில் அன்பு வைத்து எம்மை முன் ஊதித் துமிந்த பக்கம் ஒழிய மற்று இப்புறமெல்லாம் சிலம்பியின் கொப்புளங் கொள்ளும்; (காண்பாயாக)" என்று அருளிச் செய்ய,

(வி-ரை.) கனவில் - நாயனரது கனவில். மெய்ம்மறந்து கிடக்கை யில்லாவிடினும் விழிப்புநிலை நீங்கியபடியால் கனவு நிலையில் என்றார்.

வெள்ளநீர்ச் சடையோடு தம் மேனியைக் காட்டி - வெள்ளநீர் - கங்கை; **நீர்ச்சடை** - கங்கையால் நனைந்து அதனல் கங்கை நீர்மேலே ததும்பி வழியும் சடை. புனித நீர்களுள் சிறந்ததாய்ப் பிறவிநோய் முதலாக எவ்வெத் தீங்கையும் போக்கிக் காக்கவல்லதாய் உள்ளது கங்கை நீர். "கங்கைநீ டுறையாடிக் கருத்துறைநீள் கடலேற்று, மங்கணர்தாம் அவிமுத்தம்" (திருமூலர் - புரா - 4). அவ்வாருகிய கங்கை நீரால் நனையும் திருமேனியுடையராயினும்

1845. பள்ளி கொள்பொழு தயவந்திப் பரமர்தாங் கனவில்
வெள்ள நீர்ச்சடை யோடுதம் **மேனியைக் காட்டி,**
"உள்ளம் வைத்தெமை யூதிமுன் றுமிந்தபா லொழியக்
கொள்ளு மிப்புறஞ் சிலம்பியின் கொப்பு"ளென் றருள, 18

சிலந்தியின் தீங்கு அதனுல் ஒழிக்கப்படாது இங்கு அம்மையாரின் அன்பு கலந்த வாய்நீரினுல் ஒழிக்கப்பட்டதென்றும், அதனுல் அதனைக் கங்கைநீரினும் புனிதமாய்த் தம்மால் ஏற்றுக்கொள்ளப் பட்டதென்றும் உணர்த்தியமை குறிக்க **நீர்ச் சடையோடு தம் மேனியைக் காட்டினுர்** என்க. "புண்ணிய கங்கை நீரிற் புனிதமாந் திருவாய் நீரில்" (*671*) என்றது இங்கு நினைவு கூர்தற்பாலது.

மேனியைக்காட்டி - முன்னர் நாயனுர் அநுசிதம் நிகழ்ந்ததாகத் தாம் கண்டதும் மேனிதான்; இப்போது காட்டியதும் அத்திருமேனிதான்; ஆயின் முன்னர்க்கண்டது அன்பினை மனத்தினுட் கொள்ளாது தாம் கண்டது. இஃது அவ்வாறன்றி அன்பின் திறங் காணுமாறு இறைவர் காட்டக்கண்டது என்பார் **காட்டி** என்ருர். "காட்டுவித்தா லாரொருவர் காணு தாரே; காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே" (தேவா). "உனக்கவன்றன் செயல் **காட்ட** நானினீ யொளித்திருந்தால், எனக்கவன்றன் பரிவிருக்கும் பரிசெல்லாங் காண்கின்ருய்" (*807*) என்ற கருத்தை இங்கு வைத்துக் காண்க.

உள்ளம் வைத்து - (கொப்புள் கொள்ளாது தடுக்கும் பதைப்புடன்) அன்பு கொண்டு என்ற பொருளில் வந்தது. மனைவியார் உள்ளம் வைத்து என்க.

முன் துமிந்த பால் ஒழிய - முன். "**முன்** துமிப்பவர்" (*1839*); "**முன்** அணைந்து" (*1842*) என்றவை பார்க்க. **பால்** - பக்கம். **ஒழிய** - தவிர - நீங்க.

இப்புறம் சிலம்பியின் கொப்புள் கொள்ளும் - என்க. **இப்புறம்** - துமியாத இப்பக்கம். **இப்புறம்** - இகரச்சுட்டு மேனியை நாயனுர் காண அவர்பக்கம் திருப்பிக்காட்டிய அணிமை குறித்தது.

கொள்ளும் தன்மை காண்க - என்றருளியபடி; **தன்மை காண்க** என்றது இசையெச்சம்.

நீர்ச்சடையொடு நின்று - என்பதும் பாடம். *18*

1846. (இ-ள்.) கண்ட...கருதி - கண்ட அந்தப் பெருங்கனவை நனவெனவே கருதி; கொண்ட...விழித்து - பெற்ற பயத்துடனே அஞ்சலியாகத் தலைமேற் குவித்த கைகளுடனே விழித்து எழுந்து; தொண்டனுர் - தொண்டராகிய திருநீலநக்கனுர்; தொழுது ஆடினுர்...அழுதார் - தொழுது ஆடினர்; பாடினர்; துதித்தனர்; அண்டநாயகராகிய சிவன் பெருங்கருணையினையே போற்றி நின்று அழுதனர்;

(வி-ரை.) பெருங் கனவு - பெருமையினைப் புலப்படுக்குங் கனவு; பெருமைதருங் கனவு - பெரியோன் அருளிய கனவு என்றலுமாம்.

கனவினை நனவெனக் கருதி - கனவுநிலையிற் கண்டது பயன்றருவதனுல் நனவு போன்ற தென்பதன்றி, நனவில் நேரே கண்ட காட்சியே யாம் என்று கொண்டு.

1846. கண்ட வப்பெருங் கனவினை நனவெனக் கருதிக்,
கொண்ட வச்சமோ டஞ்சலி குவித்துடன் விழித்துத்,
தொண்ட ஞர்தொழு தாடினுர்; பாடினுர்; துதித்தார்;
அண்ட நாயகர் கருணையே போற்றிநின் றழுதார்; 19

அஞ்சலி குவித்துடன் விழித்து - அஞ்சலி குவித்து என்னுது **குவித்துடன் விழித்து** என்றது "கொழுநற் றொழுதெழுவாள்" (குறள்) என்புழிப்போலநின்றது. கனவின் தொடர்பில் அஞ்சலி குவித்துக்கொண்டே விழிப்பு நிலையினை அடைந்தார். முழுதும் தம்மை மறந்து விடாது துயின்றனராதலானும், கனவினை நனவெனக் கருதினுராதலானும் கைகுவித்துக் கொண்டே விழித்தனர் என்பது. குவித்து - உடன் - விழித்து என்றது குவித்தலும் விழித்தலுமாகிய இரண்டு செயல்களும் உடனே நிகழ்ந்தன என்றதாம்.

ஆடினுர் - பாடினுர் - துதித்தார் - இவை யாவும் அருள் வெளிப்பாடு கண்டதொரு காரணம்பற்றியே தொடர்ந்து நிகழ்ந்தமையின், வினையெச்சங்களாற்கூறி **அழுதார்** என்று ஒரு வினை முடிபாக்கி உரைக்காது தனித்தனி வினைமுற்றுகளாற் கூறினுர்; நிகழ்ச்சி முறையில் அன்பு மிகுதிப்பாட்டினுல் தொடர்பின்றி நிகழும் தனிச்செயல்களாய்த் தோற்றப் பட்டமை குறித்தற்கு. முற்றெச்சங்களாகக்கொள்ளினு மிழுக்கில்லை. **பாடுதல்** - பெருமைகளைக் கீதங்களாகப் பாடுதலும், **துதித்தல்** - பெருமைகளை எடுத்துக் கூறித் தோத்திரித்தலுங் குறித்தன. "இத்தனையு மெம்பரமோ வைய வையயோ வெம்பெருமான் றிருக்கருணை யிருந்தவாறே" (தேவா) என்றபடி மறித்து மறித்து எண்ணுதலால் இவை நிகழ்ந்தன என்றலுமாம்.

கருணையே போற்றி நின்று அழுதார் - ஏகாரம் தேற்றம். **கருணை** - தம் மனைவியார் செய்த அநுசிதத்தினை உசிதமாகக் கொண்ட திருவருட் பெருமையும்; அத்துணையானே, தவருக எண்ணிய தம்மையும் பொருளாக்கொண்டு தெருட்டியருளிய அருட்பெருமையும் உடன் கொள்ளப்படும். "ஆறாத காதலின்மிக் கடியார் செய்த வனாசாரம் பொருத்தருளி யவர்மே லென்றும், சீறாத பெருமானை" (தேவா). என்ற திருவாக்கு இங்கு இருவரிடத்தும் பொருந்துமாறும், இறைவரது பேரருட்டிறத்தினைப் புலப்படுத்துமாறும் காண்க. **நின்று** - முன் நிகழ்ந்த ஆடுதல் முதலிய செயல்களை ஒன்றுமின்றித் தம்பித்து நின்று. **அழுதல்** - தமக்கும் அருளிய அவர் பெருமையும், அதற்குத்தகாத தம் சிறுமையும் எண்ணும்போது உளதாகும் மெய்ப்பாடு.

கருணையை - என்பதும் பாடம். *19*

1847. (இ-ள்.) போது...புகுந்தே - இரவுப்பொழுது நீங்கி இருள்போய்ப் புலர்ந்திடத் திருக்கோயிலினுள் சென்றே; ஆதிநாயகர்...பரவி - ஆதிநாயகராய் அயவந்தியில் எழுந்தருளிய அங்கணருடைய பாதமூலங்களிற் பணிந்து கீழே விழுந்து எழுந்து திருமுன்பு துதித்து; மாதராரையும்....அணைந்தார் - அம்மையாரையும் உடன்கொண்டு தங்கள் மனையினிடத்து மீண்டு அணைந்தனர்.

இந்நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டுரைக்க நின்றன.

1847. போது போயிருள் புலர்ந்திடக் கோயிலுட் புகுந்தே,
ஆதி நாயக ரயவந்தி யமர்ந்தவங் கணர்தம்
பாத மூலங்கள் பணிந்துவீழ்ந் தெழுந்துமுன் பரவி
மாத ராரையுங் கொண்டுதம் மனையின்மீண் டணைந்தார். 20

(விரை) போதுபோய் இருள் புலர்ந்திட - போது - இரவுப் பொழுது. பொழுது என்பது போது என நின்றது. "அவ்வேறாம் போதுபோ லாங்கு" (போதம்-4-உதா). **போதுபோய்** - இரவு நீங்கிக் கழிந்து; **இருள் புலர்தல்** என்றது இருள்போய் ஒளிவரும் நிலை. **புலர்தல்** - நீங்குதல். "மாலைப்பொழுதும் புலர்வுற்றது" (993). இங்கு **இருள்** என்றது இரவின் இருளும் வைகறையின் வரும் புலரி இருளும் குறித்தது.

கனவுகண்டு விழித்தமையும் அதனைத்தொடர்ந்து உடனே இருள்புலர்ந்தமையும் கூறினமையால் கனவுகண்டது வைகறைப்பொழுதில் கூடிற்று என்பது கருதப்படும். வைகறைக்கனா உடனே பலன்தரு மென்பர்.

புலர்ந்திடக் கோயிலுட் புகுந்தே - கனாக்கண்டபின் துயில் கொள்ளாது பொழுது விடிவதனை எதிர்பார்த்திருந்த நாயனார் விடிந்தவுடன் முதற்செயலாகக் கோயிலினுட்போய்ப் புகுந்தனர் என்பது குறிப்பு. **அங்கணர்** - அம்மையாரது அன்பினைக் கொண்டருளிய அங்கண்மை.

பாத மூலங்கள் - பாதங்களி னடி. பாதமாகிய மூலம் என்றலுமாம்.

மாதரார் - மாதர் - என்ற பன்மையின் மேலும் **ஆர்** என்ற மற்றொரு பன்மை விகுதி தந்தோதியது அவரது சிறப்பு மிகுதியை நாயனார் உணர்ந்து கொண்ட குறிப்பு உணர்த்துதற்கு. முன்னர் **மாதர்,** மனைவியார் என்ற அளவில் இருந்தனர்; இப்போது அதன்மேல் இறைவர் அருள்பெற்ற சிறப்புடன் நின்றனர் என்க. "பின்பு முன்னையிற் பெருகிய மகிழ்ச்சி வந்து எய்த" (1848) என்று வரும்பாட்டிற் கூறுவது காண்க.

தம்மனையின் மீண்டு அணைந்தார் - முன்னர்க் **கடிமனை** - என்றும், **தம் மனையின் மீண்டு** என்று இவ்விடத்தும் கூறிய தகுதியும் பண்பும் காண்க. **தம்** என்ற பன்மை இருவருரிமையும் உணர்த்தி நின்றது. **மீண்டு** என்றதும் மனைவியாருடன் வந்த சிறப்புக் குறிப்பாம். 20

1848. (இ-ள்.) பின்பு...எய்த - அதன்பின்னர், முன்பிருந்ததினும் பெரிதாகிய மகிழ்ச்சி வந்து பொருந்தியிட; இன்புறும்... இயற்றி - இன்பம் சேர்கின்ற தன்மையுடைய அளவற்ற பூசனைகளை இறைவனுக்குச் செய்து; அன்பு...முடிப்பார் - அன்பு மேம்படும் அடியார்கள் மிகவும் அணைவார்களுக்கெல்லாம் முன்புபோலவே அவ்வவர் வேண்டுவனவற்றை விருப்போடும் முடித்துக் கொடுப்பாராகி;

(வி-ரை.) பின்பு - தம்மால் துறக்கப்பட்ட மனைவியாரைத் திருக்கோயிலினின்று அழைத்து உடன்கொண்டு மனையின் மீண்டணைந்த பின்பு.

முன்னையிற் பெருகிய மகிழ்ச்சி வந்து எய்த -முன்னையில் முன்னுள்களினும்; **பெருகிய**

1848. **பின்பு முன்னையிற் பெருகிய மகிழ்ச்சிவந் தெய்த**
இன்பு றுந்திறத் தெல்லையில் பூசனை யியற்றி
அன்பு மேம்படு மடியவர் **மிகவணை வார்க்கு**
முன்பு போலவர் வேண்டுவ விருப்புடன் முடிப்பார், 21

மகிழ்ச்சி வந்து எய்துதற்குக்காரணம் சிவனருள் சுரந்து அம்மையாரது அன்பின் திறத்தை வெளிப்படச் செய்தது. **வந்து - எய்த** - என்ற குறிப்புமது.

பூசனை - முன்னைநாள் அயவந்தி நாயனருக்கு ஆதிரை நாளிற்செய்த பூசனைபோலப், பின்னும் அளவில்லாத பூசைகள்.

அவர் வேண்டுவ விருப்புடன் முடிப்பார் - இது அடியவர் பூசை - "காதலாலவை யிரண்டுமே செய்கருத்துடையார்" (*1832*) என்றபடி முன்நியதியாகச் செய்த சிவன் பூசையும் அடியார் பூசையும் முன்னையினும் சிறப்பாகச் செய்தனர் என்க.

அன்பு மேம்படும் அடியவர் - அன்பு மேம்படும் - அன்பினல் மேம்பட்ட என்றும் - அன்பின் மேம்படச் செய்யும் என்றும் உரைக்க நின்றது.

மிக அணைவார் - முன்னையினும் அதிகமாக. "ஆளு நாயக ரன்ப ரானவ ரளவிலார்" (*244*). முன்னையினும் மிக அணைவதற்குக் காரணம் இறைவன் திருவருள் நிகழ்ச்சியால் இவர்களது அன்பின் பெருமை உலகறியச் செய்யப்பட்டதாம்.

முன்போல் - இறைவன் பூசையினை "இன்பு றுந்திறத் தெல்லையில் லாதவாறு இயற்றி" என்ற ஆசிரியர், இங்கு அடியவர் பூசையினை "முன்போல் - முடிப்பார்" என்ற தென்னையோ எனில்; அடியவர் மேன்மேல் மிக அணைந்தாரேனும் அதனல் அன்பினல் வேண்டுவ முடித்துக் கொடுத்தலிற் குறைவுபடாது **முன்புபோலவே** முடித்தனர் என்பதாம்.

முடிப்பார் - முடிப்பாராகி; ஒழுகு நாளில் என்றதுடன் கூட்டிமுடிக்க. *21*

1849. (இ-ள்.) அன்ன...நாளில் - அத்தன்மையில் விரும்பி இனிது ஒழுகி வருகின்ற அந்நாளில்; மன்னு...போற்றிட - நிலைபெற்ற சீகாழிப்பதியில் அவதரித்த மறைப்பிள்ளையாராகிய திருஞானசம்பந்த நாயனருடைய பெருமைகளைப் பலவாறும் சொல்லி உலகம் போற்றிடக் கேட்டு; மற்றவர்...சிறந்தார் - அவருடைய திருவடிகளைச் சென்னியுற வணங்கி அவருடன் கலக்கும் விருப்பமிக்க சிறப்புப் பொருந்தியவரானர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டுரைக்க நின்றன.

(விரை) அமர்தல் - விரும்புதல் - இருத்தல் என்றலுமாம். **இனிது ஒழுகுதலாவது** மனமுவந்து ஒழுகுதல்.

மன்னு பூந்தராய் - மன்னுதலாவது பலவூழிகளினும் நீர்ப்பெருக்கில் ஆழ்ந்து படாது மிதந்து பின் நிலைபெற்றிருத்தல். **பூந்தராய்** - சீகாழியின் *12* திருப்பெயர்களுள் ஆருவது பெயர்.

*1849. அன்ன தன்மையி லமர்ந்தினி தொழுகுமந் நாளில்
மன்னு பூந்தராய் வருமறைப் **பிள்ளையார் பெருமை**
பன்னி வையகம் போற்றிட, மற்றவர் **பாதஞ்**
சென்னி வைத்துடன் சேர்வுறும் விருப்பினிற் சிறந்தார். 22

பிள்ளையார் - ஆளுடைய பிள்ளையார். பிள்ளையார் என்ற இப்பெயர்க்காரணம் அவர் புராணம் - 69 - ஆவது பாட்டிற் பார்க்க.

வையகம் பன்னிப் போற்றிட - என்க. **வையகம்** - உலகில் உள்ள அறிவுடையோர். **வையகம்** - வையகத்துள்ள அறிவோரைக் குறித்தது. ஆகுபெயர். "உலகெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே" என்றதனுலும் இது பெறப்படும். "உலக முவப்ப" (முருகு) முதலியவை காண்க. **பன்னுதல்** - பலவற்றுனும் எடுத்துச் சொல்லுதல். **போற்றுதல்** - துதித்தல். **போற்றிட** - போற்றியிடலால், அது கேட்டு, அது கேட்டு என்பது இசையெச்சம்.

அவர்பாதம் சென்னி வைத்துச் சேர்வுறும் விருப்பு என்க. **சென்னிவைத்தல்** - வணங்குதல்; நேரே கண்டு விழுந்து கும்பிட விரும்பினுர் என்க.

உடன் சேர்வுறும் விருப்பு - உடனிருக்கும் விருப்பு "உட னுறைவின் பயன் பெற்ருர்" (1509) என்றவிடத் துரைத்தவை பார்க்க. **உடன் சேர்வுறும்** என்றது பின்னர் "உள்ளமங் **குடன்போக்கி**" (1861), "பூவடித்தலம் பொருந்திய உணர்வொடும்" (1862), "சீகாழி ஒருவர் தந்திருக் கல்லியா ணத்தினி**லுடனே** திருமணத் திறஞ்சேவித்து நம்பர்தாள் சேர்ந்தார்" (1864) என்று வரும் சரித நிகழ்ச்சிகள் நிகழ்வதற்குரிய திருவருட் குறிப்பினுல் எழுந்த விருப்பம் என்ற முற்குறிப்புப்பட நிற்பதும் காண்க.

சிறந்தார் - **சிறத்த**லாவது அவ்விருப்பம் மிகுதி பெற்று விளங்குதல். ஆண்டவர் பூசனையும் அடியவர் பூசனையும் செய்யும் ஒழுக்கத்தினின்று சிறந்த அவர், குருவின் அருள்பெறும் விருப்பும் பெற்று மேலும் சிறப்புடையராயினுர் என்றலுமாம். 22

1850. (இ-ள்.) பண்பு...பருவம் - பண்பினுல் மேம்படும் தன்மையுடைய திருநீலநக்கர் முன்சொன்ன நிலையிற்பயில்கின்ற அக்காலத்தில்; மண்பெருந் தவப்பயன்....அணைவார் - பெருந் தவப்பயனை உலகம் பெறும்பொருட்டுப் பொருந்திய நற்றலங்களில் விண்ணில் விளங்கும் கங்கைதங்கிய சடையினையுடைய சிவபெருமானைத் தொழுவதற்கு அணைவாராகி; சண்பை...சார்ந்தார் - சீகாழித்தலைவராகிய ஆளுடைய பிள்ளையாரும் திருச்சாத்தமங்கையில் வந்து சார்ந்தனர்.

(வி-ரை.) பண்பு மேம்படு நிலைமையார் - பண்பு - அடிமைப் பண்பு. முன்பாட்டிற் "**சிறந்தார்**" என்றநிலை. **நிலைமையார்** - நிலைமை யுடையாராகிய நாயனுர். **பயிலுதல்** - அந்நிலையில் இடைவிடாது பல காலம் ஒழுகுதல்.

பருவம் - காலம் ஏழனுருபு தொக்கது; **பருவம் - மன்னரும் சார்ந்தார்** என்று கூட்டுக. **பருவம்** - பயன்தரும் பக்குவகாலம் என்ற பொருளும் தந்து, "பாதம் சென்னிவைத்

1850. பண்பு மேம்படு நிலைமையார் பயிலுமப் பருவம்
மண்பெ ருந்தவப் பயன்பெற மருவுநற் பதிகள்
விண்பி றங்குநீர் வேணியார் தமைத்தொழ வணைவார்
சண்பை மன்னருஞ் சாத்தமங் கையில்வந்து சார்ந்தார். 23

துடன்சேர்வுறும் விருப்பினிற் சிறந்தா"ராதலின் அவ்விருப்பம் முற்றிப் பக்குவப்பட்டுப் பலன்தரும் பருவத்தில் என்ற குறிப்பும் பெற நின்றது. அப்பூதியடிகள் திருநாவுக்கரசரைத் தியானித்திருந்த உறைப்பின் பயன் தருநாளில் அவர் தாமே வந்தணைந்த சரிதம் இங்கு நினைவு கூர்தற்பாலது.

மண்பெருந் தவப்பயன் பெற - மருவும் நற்பதிகள் என்றும், **மண்பயன் பெறத் தொழ - அணைவார்** என்றும் கூட்டி உரைக்க நின்றது. **மண்தவப்பயன் பெறப்பதிகள் மருவுதலாவது** - உலகத்தார் கண்டு கும்பிட்டு வழிபட்டுய்யும் பொருட்டுத் தலங்களில் இறைவர் வெளிப்பட வீற்றிருந்தருளுதல். **தவம்** - சிவ வழிபாடு. முன்னைத் தவமுடையார்களே தலங்களைச் சார்ந்து பயன் பெறுவர். **பெற** - பெறும் பொருட்டு. **மண்** - மண்ணுலகம் - நிலவுலகம். "வானிடத்தவரும் மண்மேல் வந்தரன் றனையர்ச் சிப்பர்" "புவனியிற் போய்ப்பிற வாமையினுணும் போக்குகின் றோமவமே" என்றற் றொடக்கத்த திருவாக்குக்களின்படி நிலவுலகம் தவஞ் செய்து பிறத்தற் கேதுவாகிய இடம். அதுவேயுமன்றித் தவஞ் செய்தற்குமிடம். **பெருந்தவப்பயன்** என்றது தலங்களுட் புகுந்து வழிபடுதல். தவங்களுட் சிறந்த பெருந்தவத்தாலாவது என்பதாம். **மருவும்** - இறைவர் விளங்க எழுந்தருளும். "மாதவஞ் செய்த தென்றிசை வாழ்ந்திட" (35) என்ற கருத்துக் காண்க.

மண்பயன் பெறத்தொழ அணைவார் என்றது பிள்ளையார் சிவதலங்களிற் சென்று வழிபட்டது தம் பொருட்டன்றி உலகத்தவர் பயன்பெறும் பொருட்டேயாம் என்றதாம். இப்பொருளில் **மருவும்** என்றது பிள்ளையார் சேரும் என்றதாம்.

நற்பதிகள் - நன்மை - இயல்பு குறித்த அடைமொழி. **பதிகள் பதி** - என்றது "பளிங்கிற் பவளம் பதித்தான் பதியே" என்ற திருமந்திரக் கருத்தின்படி தலங்களிற் றம்பெருந்தெய்வத் தன்மை பதித்தாற்போல விளங்கும் இடம் என்ற குறிப்புப்பட நின்றது.

விண்பிறங்கு நீர் - ஆகாயத்தினின்று வந்து விளங்கும் கங்கை.

அணைவார் - அணைவாராகி; முற்றெச்சம். **அணைவார் - சார்ந்தார்** என்க. 23

1851. (இ-ள்.) நீடு.......உடன்வர - திருநீடும் பெரிய திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் மலர்கள் பொருந்துதற்கிடமாகிய கூந்தலையுடைய பாணியாராகிய மதங்க சூளாமணியாரும் உடனே வர; தொண்டர்......குழாத்தொடும் - அடியவர்கள் கூடுகின்ற அந்தப் பெருங்கூட்டத்துடனே; புகலியார் பெருமான்......கேட்டு - சீகாழித் தலைவராகிய ஆளுடைய பிள்ளையார் தமது நகரத்தின் பக்கத்தில் எழுந்தருளியதனைக் கேட்டு; உளம் மகிழ் நீலநக்கர் - உள்ளம் மகிழ்ந்த திருநீலநக்கநாயனார்.

1851. நீடு சீர்த்திரு நீலகண்டப்பெரும் பாணர்
தோடு லாங்குழல் விறலியா ருடன்வரத் தொண்டர்
கூடு மப்பெருங் குழாத்தொடும் புகலியார் பெருமான்
மாடு வந்தமை கேட்டுள மகிழ்நீல நக்கர், 24

(வி-ரை.) நீடுசீர் - என்றது ஆளுடைய பிள்ளையாரைக் கண்டு உடன் பணிசெய்து ஒழுகுதற்கு முன்னும் சிறப்புடையவராய், அதன்பின்னும் மேலும் பெருஞ்சிறப்புப்பெற உள்ளவராய் நின்ற சிறப்பு. **நீடு** - முன்னும் பின்னும் நீடும்.

தோடுலாங்குழல் - தோடு - இதழ் - இதழ்களையுடைய மலருக்காயிற்று. **உலாம்** - விளங்கும்; **குழல்** - கூந்தல்.

விறலியார் - பாணியார். **விறலி** - பாணர் மரபுப் பெண் என்று சாதிப் பெயராய் வருவது அகப்பொருள்களுட் காண்க. இங்கு **விறலியார்** என்றது திருநீலகண்ட யாழ்ப்பாணருடைய மனைவியாராகிய மதங்கசூளாமணியாரை. **பாணர்** - பாணர் மரபில் வந்தவர் என்று மரபுபற்றி யுணர்த்தியது. **பாணி** - அதன் பெண்பால். பாடினி என்பது வழக்கு.

பாணர் விறலியாருடன் வர - பிள்ளையாரது திருப்பதிகங்களைக் கண்டத்திலும் கலத்திலுமாக இயற்றி வாசித்துக்கொண்டு, நாயக நாயகியாகக்கூடி, அத்திருக்கூட்டத்தில் முன்வருவோர்கள் இவர்களாதலின் இவர்களை முன் ஒருசேர வைத்து உடன் வர என்று பிரித்தோதினர். பாடற்றிறமும் அடிமைப் பண்பும் கூடாதவழி இவர்கள் அத்திருத் கூட்டத்தினுட் சேர்ந்து **உடன்வரும்** இயைபின்மையும் கருதுக. **தொண்டர் கூடும் அப்பெருங்குழாம்** - என்ற கருத்தும் காண்க.

தொண்டர் கூடும் அப்பெருங்குழாம் - பிள்ளையாரது எண்ணிறந்த பரிசனங்களும் உடன்வரும் தொண்டர்களும் அங்கங்கும் கூடும் அடியார்களுமாகிப் பெருந் திருக்கூட்டமாயிற்று.

புகலியர் பெருமான் - சீகாழித்தலைவராகிய திருஞானசம்பந்த நாயனூர். **புகலி** - சீகாழியின் 12 திருப்பெயர்களுள் மூன்றுவது பெயர்.

மாடு வந்தமை - தமது சாத்தமங்கை நகரத்தின் பக்கத்தில் வந்த செய்தியினை

நீலநக்கர் (1851); கிளர்ந்து - புனைந்து - நாட்டி - இட்டு - கொடு - எழுந்தார் - (1852), ஒன்றி - எதிர்கொண்டு - ஆடியும் பாடியும் தொழுதெழுந்து - அணைவார் - உடன்கொடு புகுந்தர் (1853) என்று இம்மூன்று பாட்டுக்களையும் தொடர்ந்து முடித்துக் கொள்க.

கேட்டபொழுது முதல் **உடன்கொடு புகுந்த** வரையில் திருநீலநக்கர் தம் செயல்களை இடையீடின்றித் தொடர்ந்து செய்வாராய்ப், புகுந்தபோது வினைமுடிபு கொண்டனர் என்று குறிக்கத் தொடர்ந்து வினையெச்சங்களாற் கூறி ஒன்றுக முடித்த நயம் காண்க. 24

1852. (இ-ள்.) வெளிப்படை. கேட்ட அப்போதே பெருமகிழ்ச்சி பொங்கி, மலர்மாலைகளையும் கொடிகளையும் தூக்கி அலங்கரித்துத், தோரணங்கள் நாட்டி, நீண்ட

1852. கேட்ட வப்பொழு தே, பெரு மகிழ்ச்சியிற் கிளர்ந்து,
தோட்ட லங்கலுங் கொடிகளும் புனைந்து, தோரணங்கள்
நாட்டி, நீணடைக் காவண மிட்டு நற் சுற்றத்
தீட்ட முங்கொடு, தாமுமு னெதிர்கொள வெழுந்தார். 25

தூரமளவும் நடைக்காவணம் இட்டு நல்ல சுற்றத்தாரின் கூட்டத்தையும் உடனே கொண்டு, தாமும் முன்பு எதிர்கொள்ளும் பொருட்டு எழுந்தனராகி,

(வி-ரை.) கேட்ட அப்பொழுதே - கிளர்ந்து - பலநாள் எதிர்பார்த்துத் தியானித்திருந்த பொருள் தானேவந்து கைகூடியதனால் கேட்டபொழுதே ஒரு கணமும் தாழாமல் எதிர்கொள்ளும் சிறந்த செயல்களிற்றலைப்பட்டு, அதன் பயன்பெற முயன்றனர். கேட்டசெய்தியில் அவர்கொண்ட அன்பின் உறைப்பு வெளிப்பட்டது என்க. "உரைப்பக் கேட்டார்" (*1442*), "விருப்பு வாய்ப்ப" (*1443*), "அப்பொழுதே யம்பலத்து ளாடுகின்ற கழல் வணங்கி அருள்முன் பெற்று" (*1444*) என்ற விடத்து அப்பர் சுவாமிகள்பால் நிகழ்ந்த செயலின் தன்மை இங்கு வைத்துக் காணத்தக்கது. **கிளர்தல்** - உருப்பெற்று வெளிப்பாடு பெறுதல்.

தோட்டலங்கல் - தோடு - இங்குத் தோடுகளையுடைய மலர்களைக் குறித்தது. ஆகுபெயர். **தோடு** - மலரிதழ்; **அலங்கல்** - மாலை.

அலங்கலும் கொடிகளும் புனைந்து தோரணங்கள் நாட்டி - என்றது தோரணங்களில் இடையிடையே மலர்மாலைகளையும் கொடிகளையும் புனைந்து நாற்றுதல் குறித்தது.

நீள் நடைக்காவணம் இடுதல் - நீண்டதூரத்துக்கு நடைப்பந்தர் அமைத்தல். ஆளுடைய பிள்ளையாரை எதிர்கொள்ளத் திருமயிலையிலிருந்து திருவொற்றியூரளவும் (*10* நாழிகையளவும்) நடைக்காவணமிட்ட சிவநேசரது அன்புச்செயல் இங்கு நினைவு கூர்தற்பாலது. "திருவொற்றி யூரளவுந் துன்னு நீணடைக் காவணந் துகில் விதானித்து" (திருஞான - புரா - *1070*).

நற்சுற்றத்து ஈட்டமும் கொடு - தமது மனைக்கடையில் வந்து அணைந்த அப்பர் சுவாமிகளை வணங்குதற்கு "ஆர்வமுறப் பூண்டபெருஞ் சுற்றமெலாங் கொடு" (*1801*) புறப்பட்ட அப்பூதியார் செயலை நினைவுகூர்க. **நற்சுற்றம் - நன்மை** - ஆளுடைய பிள்ளையாரை நேரே வரவேற்று எதிர்கொள்ளும் பேறு பெற்றமை.

முன் - வேறு யாவர்க்கும் முன்; பிள்ளையார் தம்மை அறிவதற்கு முன் என்ற குறிப்புமாம்.

எதிர்கொள எழுந்தார் - எழுதல் - மனவெழுச்சி கொள்ளுதல் மனையினின்று புறப்படுதல் என்றலுமாம். **எழுந்தார்** - எழுந்தாராகி; முற்றெச்சம். *25*

1853. (இ-ள்.) சென்று - போய்; பிள்ளையார்......ஒன்றி - ஆளுடைய பிள்ளையார் எழுந்தருளிவரும் அத்திருக் கூட்டத்தைச் சேர்ந்து; அங்கு எதிர்கொண்டு - அங்கு அதனை

1853. சென்று, பிள்ளையா ரெழுந்தரு ளுந்திருக் கூட்டம்
ஒன்றி, யங்கெதிர் கொண்டு,தங் களிப்பினு லொருவா
றன்றி யாடியும் பாடியுந் தொழு தெழுந் தணைவார்
பொன்ற யங்குநீண் மனையிடை யுடன்கொடு புகுந்தார். 26

எதிர்கொண்டு நல்வரவு ஏற்று; தம் களிப்பினுல்........ அணைவார் - தமது மகிழ்ச்சியின் மேலீட்டினுலே ஒரு படித்தாயன்றிப் பலவாருக ஆடியும் பாடியும் தொழுது எழுந்து அணைவாராகி; பொன்.....புகுந்தார் - பொன் விளங்கும் பெரிய தமது திருமனையினிடத்து உடனே அழைத்துக்கொண்டு புகுந்தனர்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை.) திருக்கூட்டம் ஒன்றி ஒன்றுதல் - சேர்தல்; கிட்டுதல்.

ஒருவாறு அன்றி - ஒருபடியாயல்லாமல் பலபடியாகவும்; **பலபடியா**வன ஆடுதல், பாடுதல், தொழுதல், எழுதல் முதலான செயல்களும் அவற்றுக்குரிய மெய்ப்பாடுகளுமாம். ஒவ்வொரு செயலிலும் பலவகையுமாம். இவை மன மகிழ்ச்சியின் நிறைவும் வெளிப்பாடும் குறிப்பன.

பொன் தயங்கு நீண் மனை - பொன் தயங்குதல் - பொன் - அழகுபடுத்தும் செயல்கள். **தயங்குதல்** - விளங்குதல். **பொன்** - பொன்னுலியன்ற சித்திரிப்புக்கள் என்றலுமாம். **நீண்மனை** - ஆளுடைய பிள்ளையார் திருக்கூட்டத்துடன் எழுந்தருளும் பேறுபெறும் குறிப்பு.

உடன்கொடு - தம்முடனே கொண்டு; மனவொருமைப் பாட்டுடன் என்றதும் குறிப்பு.

தொழுதெழுந் தயர்வார் - தொழுதெழுபவராய் - என்பனவும் பாடங்கள். *26*

1854. (இ-ள்.) பிள்ளையார்......விரும்ப - ஆளுடைய பிள்ளையார் அங்கு எழுந்தருளிய பெருமைக்குத் தக்கபடி பெருந்திரளாகத் திரண்ட அடியவர் கூட்டமும் விரும்பி வர; உள்ளம் ஆதரவு ஓங்கிட - உள்ளத்தில் அன்பு வளர; தம் மனையிடை - தமது திருமனையின் கண்; ஓங்கு சீகாழி வள்ளலாரை - ஓங்கும் சீகாழியில் அவதரித்த வள்ளலாராகிய அத் திருஞானசம்பந்த நாயனுரை; அமுது செய்வித்தார் - திருவமுது செய்வித்தனர்.

(வி-ரை.) பெருமைக்குத் தக்க - அடியார் கூட்டமும் விரும்ப - பெருமைக்கேற்றபடி அடியவர் கூட்டம் விரும்பிக் கூடி யணைய.

வெள்ளம் - பெருந்திரள் என்ற பொருளின் வந்தது. ஆற்று வெள்ளப் பெருக்குபோலப் பலவழிகளாலும் கூடியும் திரண்டும் பெருகியும் இடையருது வரும் நிலையின் குறிப்புமாம். **வெள்ளம்** என்ற பேரெண்ணின் குறிப்புமாம். **ஆகிய** - ஆக்கச்சொல் கூடிய என்ற பொருள்தந்து நின்றது.

உள்ளம் ஆதரவு ஓங்கிட - அடியவர்களை அமுதூட்டி வழிபடுவோர்களும் அவர்கள் அளவில்லாதபடி வரின் மனங்குன்றுதல் உலக இயல்பாம். ஆனுல் "கணங்களாய் வரினும்

1854. பிள்ளை யாரெழுந் தருளிய பெருமைக்குத் தக்க
வெள்ள மாகிய வடியவர் கூட்டமும் விரும்ப
வுள்ள மாதர வோங்கிட, வோங்குசீ காழி
வள்ள லாரைத்தம் மனையிடை யமுதுசெய் வித்தார். 27

அடியவர் தங்களைக் கண்டால் குணங்கொடு பணியும்" குலச்சிறையாரும், "அன்ப ரானவ ரளவி லாருள மகிழவே நாளு நாளு நிறைந்து வந்து நுகர" அளித்த இளையான்குடி மாறனாரும் போல இவ்வாறு எண் பெருகக் கண்டபோது உள்ளம் ஆதரவு ஓங்கிடப் பெறுதல் எந்தம் பெருமக்களுக்கே அமைவதாம் என்பது குறிக்க விதந்தோதினர்.

ஓங்கு சீகாழி - ஓங்குதல் - சிறப்பால் மிகுதல். ஊழி வெள்ளத்தில் அமிழாது மேல் மிதந் தோங்குதலும் குறிப்பு. ***சீகாழி*** - பத்தாவது பெயர்.

வள்ளலாரை - தாமாகவந்து நாயனாரைப் பணிகொண்டமையும் இனித் திருமணத்தில் அவரையும் ஏனைத் திருக்கூட்ட முழுமையும் பணிகொண்டு முத்தி கொடுக்க உள்ள வண்மையும் குறிப்பு. திருக்கூட்ட முழுமையும் விரும்ப அவர்களுடன் வள்ளலாரை என்க.

அமுது செய்வித்தார் - வெள்ளமாகிய திருக்கூட்டத்துடன் வள்ளலாரை அமுது செய்வித்தல் ஒரு தனிப்பெருஞ் சிறப்புடைய செயலாம் என்பது. நீலநக்கர் என்ற எழுவாய் வருவிக்க. *27*

1855. (இ-ள்.) அமுது செய்தபின் - ஆளுடைய பிள்ளையாரும் அடியவர் திருக்கூட்டமும் திருவமுது செய்தபின்பு; பகலவன்மேல் கடல் அணைய - சூரியன்மேல் கடற்றிசையினை யணைந்து அத்தமிக்க; குமுத.....போதில் - ஆம்பல் மலர்களையுடைய வாவிகளில் குளிர்ந்த மதியின் கதிர்கள் சேரும் இரவுக் காலத்திலே; இமய.......உண்டவர் - பார்வதியம்மையாரின் திருமுலைப்பாலுண்ட அத் திருஞானசம்பந்த நாயனார்; இரவும்......சமைத்தார் - அன்றிரவிலும் தமது சிறப்புடைய திருமனையில் தங்குதற்கு வேண்டியவற்றை அமைத்தனர் (திருநீலநக்கர்).

(வி-ரை.) அமுது செய்தபின் - முன்பாட்டில் நீலநக்கனார் வள்ளலாரைத் திருக்கூட்டத்துடன் அமுது செய்வித்தமை கூறிய ஆசிரியர், அவ்வாறு அவர்கள் அமுது செய்தமையைக் கூறுவார் **செய்தபின்** என்றார். அமுது **செய்வித்த**வர் செயல் முன்பாட்டிலும், அமுதுசெய்தவர் செயல் பின் இங்குமாகக் கூறினர். இதனைத் தொடர்ந்து வரும்பாட்டில் விரித்தலும் காண்க. **செய்த** என்றதற்கு **வள்ளலார்** என்ற எழுவாய் தொக்கு நின்றது. **செய்வித்த** என்றது **செய்த** எனப் பிறவினை தன்வினையாக வந்ததென்றுகொண்டு, இங்கும் நீலநக்கர் செயலாக வைத்துரைத்தலுமாம்.

பகலவன் - சூரியன். பகற்போதில் விளங்குபவன். **பகல்** - நாட்போதை இரண்டு கூறாகப் பகுத்ததன் முற்பகுதி என்று, **பகு** என்ற பகுதியிற் பிறந்த தொழிற்பெயர். **பகலவன்** - அவ்வாறு பகுத்தலைச் செய்கின்றவன் என்ற பொருளும் கொண்டது.

1855. அமுது செய்தபின், பகலவன் மேல்கட லணையக்,
குமுத வாவியிற் குளிர்மதிக் கதிரணை போதில்
இமய மங்கைதன் றிருமுலை யமுதுண்டா ரிரவுந்
தமது சீர்மனைத் தங்கிட வேண்டுவ சமைத்தார். 28

மேல் கடல் அணைய - மேல்கடல் - மேற்குத் திக்கில் உள்ள கடல்; அத்த மிக்க என்பது பொருள். நில அண்டம் உருளுதலினால் மேல்கடற்றிசை சூரியனை நோக்கிச் செல்லுதலைச் சூரியன் மேல்கடலை அணைவதாகக் கூறுவது உபசாரம். இதனால் பகற்கால எல்லை தீர்ந்தமையும் பகற்போது முழுமையும் பிள்ளையாரும் அத்திருமனையிற் றங்கியருளி யமையும் கூறப்பட்டன.

குமுத...போதில் - இதனால் பகல் கழியப் பின் இரவுக் காலம் போந்தமையும் கூறினார். **குமுதம்** - ஆம்பல், மதிக்கதிர்போத ஆம்பல் மலர்கின்ற தன்மை குறிப்பிடப்பட்டது. **குமுத வாவி** - நீலநக்கனாரது திருமனை என்றும், **மதிக்கதிர்** - ஆளுடைய பிள்ளையாரது திருவருள் என்றும் இங்குக் குறிப்புக்காணும் விசேடவுரை யாசிரியருமுண்டு.

இமய மங்கை - இமயமலை யரசன் மகளார். பார்வதி என்பது இக்காரணத்தாற் போந்த பெயர்.

இரவும் - அன்று பகலிற் றங்கியதேயன்றி இரவிலும் தங்க என்று உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை.

தங்கிட வேண்டுவ சமைத்தார் - தங்கிட - தங்குவதற்கு. **வேண்டுவ சமைத்த**லாவது இடத்தைப் பள்ளியறையாதற்கு உரியபடி அமைத்தல். திருவமுது முதலியனவும் என்பாரு முண்டு. "என் சிந்தைப், பாழறை யுனக்குப் பள்ளியறையாக்கிச், சிந்தைத் தாமரைச் செழுமலர்ப் பூந்தவி, செந்தை நீயிருக்க விட்டனன்...இமையக், கொழுந்தையு முடனே கொண்டிங், கெழுந்தரு ளத்தகு மெம்பெருமானே" (திருக்கழுமல மும்மணிக்கோவை - 4) என்று பட்டினத்தார் திருக்கழுமலத்து இமயமங்கை நாயகர்க்கு விண்ணப்பித்த அமைப்பெல்லாம் இங்கு வைத்துக் காண்க.

கருங்கடல் - என்பதும் பாடம். 28

1856. (இ-ள்.) சீலம்...செய்தருளி - சீலமுடைய மெய்த் தொண்டர்களுடனே திருவமுது செய்தருளியபின்; ஞாலம்...அழைத்திட - உலகம் ஓங்கும் பொருட்டுப் பெரியநாயகி யம்மையாருடன் தோணியப்பர் வெளிப்பட்டருளும் காலம் பெற முன் அழுதவராகிய ஆளுடைய பிள்ளையார் அழைக்க; கடிது...நின்றார் - திருநீலநக்கனார் விரைவில் வந்து அடிவணங்கித் திருமுன்பு நின்றனர்;

(வி-ரை.) சீல...அமுது செய்தருளி - இஃது அன்றிரவு பிள்ளையார் தொண்டர்களுடன் திருவமுது செய்தருளிய தனைக்குறித்தது.

ஞாலம் மிக்கிட - உலகம் ஓங்கி உயர்வடையும் பொருட்டு.

1856. சீல மெய்த்திருத் தொண்டரோ டமுதுசெய் தருளி
ஞால மிக்கிட நாயகி யுடனம்பர் நண்ணுங்
கால முற்பெற வழுதவ ரழைத்திடக் கடிது
நீல நக்கனார் வந்தடி பணிந்துமுன் னின்றார்; 29

மிக்கிட (காலம் முற்பெற) - அழுதவர் - என்க. ***மிகுதல்*** - உயர்தல். உலகம் ***மிக்கிட அழுதலாவது*** அழுத அதனால் ஞானப்பாலுண்டு, அதனால் அமுதமாகிய தேவார அருள்மொழிகள் அருளி உலகை உயர்த்துதற்கு ஏதுவாதல்.

நாயகியுடன் நம்பர் நண்ணும் காலம்பெற முன்அழுதவர் - என்க. நண்ணுதல் வெளிப்பட்டருளுதல்.

காலம்பெற - பெறுதற்பொருட்டு. நாயகியுடன் நம்பர் எழுந்தருளும் சமயம் வாய்க்கும் பொருட்டு; "காலம்பெற அழுதார்" (திருஞான - புரா - *163*)

அழைத்திடக் - கடிதுவந்து - இரவும் தங்க வேண்டுவன சமைக்கும் முயற்சியில் நீலநக்கனார் இருக்க, அவரைப் பிள்ளையார் தாம் எழுந்தருளியிருந்த இடத்திற்கு அழைக்க, அவரும் கடிது விரைவில் - வந்து.

அடிபணிதல் - திருவடிகளில் வணங்குதல்; ***நின்றார்*** - ஏவல் கேட்கும் முறை.

ஞாலமுய்ந்திட - என்பதும் பாடம். *29*

1857. (இ-ள்.) நின்ற...என்ன - அவ்வாறு வந்து முன்நின்ற அன்பராகிய திருநீலநக்கரைப் பார்த்துத், "திருநீலகண்டயாழ்ப்பாணருக்கு இன்று இங்குத் தங்குதற்குத் தக்கதாகிய ஓர் இடம் கொடுத்தருள்வீராக" என்று பிள்ளையார் கூற; நன்றும் இன்புற்று - பெரிதும் மகிழ்ந்து; சென்று - அதனை ஏற்றுச் சென்று; மற்றவர்க்கு - மற்று அத்திருநீலகண்டப் பாணனுருக்கு; நடுமனை வேதியின் பாங்கர் - நடுமனையில் வேதிகையின் பக்கத்திலே; இடங்கொடுத்தனர் திருமறையோர் - திருமறையவர் இடம் அமைத்துக் கொடுத்தனர்;

(வி-ரை.) ***நின்ற*** - அழைத்த பணியென் என்று கேட்கும் குறிப்புடன் முன் நின்ற; முன் வந்து வணங்கி நிற்றலேயன்றி அழைத்த காரியம் என்ன? என்று பெரியோர்களிடம் வாக்கினாற் கேட்பது மரபன்று என்பது குறிக்கப்பட்டது.

நீலகண்ட...என்ன - பாணர் மனைவியாருடன் எழுந்தருளியுள்ளாரா தலானும், அவரது பெருமையும் அடிமைத்திறமும் அவர்பால் தாம்கொண்ட அன்பும் பிறவும் திருநீலநக்கர் முற்றும் அறிய வாராதிருக்குமாதலானும், அவரது குலம் பற்றி அவர் அம்முறையில் அமைக்கப்படுதல் உலகியல்பாதலானும், பிறவாற்றானும் பிள்ளையார் இவ்வாறு தேற்றம்பெற வேறெடுத்து அறிய உரைத்தருளினர். நீலநக்கர் மறையவராதலின் ஒருவேளை யாழ்ப்பாணரிடம் தீண்டாமை பாராட்டுவரோ? என்று நினைந்து பிள்ளையார் இவ்வாறு அருளினர் போலும் என்று இங்கு விசேட ஆராய்ச்சி செய்வாருமுண்டு. **ஓர் இடம்** -

1857. நின்ற வன்பரை "நீலகண் டப்பெரும் பாணர்க்
கின்று தங்கவோ ரிடங்கொடுத் தருளுவீ" ரென்ன
நன்று மின்புற்று நடுமனை வேதியின் பாங்கர்ச்
சென்று மற்றவர்க் கிடங்கொடுத் தனர்திரு மறையோர்; 30

என்றதனால் தாம் எண்ணுதற்கேற்ப ஓரிடம் தருதலே பிள்ளையார் கருத்து என்க. தமது கருத்தைக் குறிப்பாலுணர்த்தியதன்றித் திருநீலநக்கரது அடிமைப் பண்பில் பிள்ளையார் ஐயங்கொண்டாரிலர் என்க. **அருளுவீர்** - அஃது உம்பால் உயர்ந்த செயலாம் என்பது குறிப்பு.

நன்றும் இன்புற்று - நன்றும் - பெரிதும்; தமது கருத்துமதுவே யாதலின் பிள்ளையாரது திருவுள்ளமும் அதனோடு பொருந்தப் பெற்றபோது பெரிதும் மகிழ்ந்தனர் நாயனார் என்பது.

நடுமனை வேதியின்பாங்கர் - மனைநடுவில், வேதிகையின் பக்கத்தில். மரபினது முறையினால் மனையின் புறத்து நிற்கவும். வேதியை அணுகாது நிற்கவும் உள்ளவர் என்பது குறிப்பு. **வேதி** - வேள்வித்தீ வளர்க்குமிடத்தைக் கொண்ட மேடை. "குன்றனைய மாளிகைக் டொறுங்குலவும் வேதிகைகள், ஒன்றிய மூவாயிர மங்குள வென்பா ராகுதிகள்" *(1064)*; "இப்பரிசா யிருக்கவெனக் கெய்தலரிது" *(1065)* என்று நகரத்தினுட் புகாமல் மதிற்புறத்தில் வலங்கொண்ட திருநாளைப்போவார் செய்தி இங்கு நினைவு கூர்தற்பாலது. களநிலவு நஞ்சணிந்தார் பாலணையுங் கவுணியனார் பாணனாரை அவர் மரபுக்கேற்றவாறு கோயிலினிற் புறமுன்றிற் கொடுபுக்குக் கும்பிடுவித்தருளினர் *(2031 - 2032)* என்புழிப்போல வருமிடங்களும் ஈண்டுக் கருதற்பாலன.

திருமறையோர் - மரபினும் அன்பின் பெருமை சிறந்தது என்று கூறும் மறையின் கருத்தை உணந்தவர் என்பது குறிப்பு.

யாழ்ப்பாணர் - என்பதும் பாடம். *30*

1858. (இ-ள்.) ஆங்கு...ஒளிர - ஆங்கு அந்த வேதிகையில் என்றும் அருது வளர்க்கப்பட்டு உள்ள செந்தீயானது வலமாகச் சுழித்தெழுந்து மேல்ஓங்கி முன்னிலையிலும் ஒருபடியாயன்றிப் பலவாறும் விளக்கமுறவே; தாங்கு நூலவர் மகிழ்வுற - நூல் தாங்கியவர் (திருநீலநக்கர்) அது கண்டு மகிழ்ச்சியடைய; சகோடயாழ்...பள்ளி கொண்டார்- சகோடயாழ்த் தலைவராகிய திருநீலகண்ட யாழ்ப்பாணர் தம் பக்கத்தில் அமரும் பாணி யாருடனே திருவருளின் வயமாகப் பள்ளி கொண்டனர். *31*

இந்த மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை.) அருத செந்தீ...ஒளிர - இடையருது வளர்ந்து வரும் தீ, தனது நித்திய நிலையினின்றும் பலவகையாலும் மேலும் ஓங்கிவிளங்க. **தீ ஒளிர்தல்** - மேல் ஓங்கிச் சுடர்விட்டு எரிதல். **ஒருபடித்து அன்றியே** - ஒருவகையா னன்றிப் பலபடியாலும் பலபடிகளாவன - உயர்ந்து - எரிதல், பரந்து - எரிதல், சுழித்து - எரிதல், மிக்கு - எரிதல் முதலாயின. **அருதசெந்தீ** - என்றும் அவியாது காத்து வளர்க்கப்படும் தீ. நித்தியாக்கினி

1858. ஆங்கு வேதியி லருதசெந் தீவலஞ் சுழிவுற்
ேறாங்கி முன்னையி லோருபடித் தன்றியே யொளிரத்,
தாங்கு நூலவர் மகிழ்வுறச், **சகோடயாழ்த் தலைவர்**
பாங்கு பாணியா ருடனருளாற்பள்ளி கொண்டார். 31

என்பது இவை ஆகவனீயம் - காருகபத்தியம் - தட்சிணாக்கினி என மூன்றும். "மூன்றெரி புறப்போர்" மறையவர் மணவேள்வியில் ஏற்ற தீயைச் சாங்காறும் அவியாது காத்துவருதல் வேண்டும் என்பதும் இறந்தபோது அதனாலே எரிக்கப்படுதல் வேண்டுமென்பது விதிகள். பிற ஊர்களுக்குச் செல்லும்போது தீயையும் உடன்கொண்டு காத்துச் செல்வர். "புகைவிடும் வேள்விச்செந்தீ யில்லுடன் கொண்டு போவார்" (திருஞான - புரா - *1202*) என்று, ஆளுடைய பிள்ளையார் திருமணங் காண உடன்செல்லும் மறையவர்கள் மனைவியார் களுடனே தாம் வளர்க்கும் தீயினையும் கொண்டு செல்வர் என்பது காண்க.

ஒளிர - அருத செந்தீ இவ்வாறு முன்னையினும் ஒளிர்தல் பாணரது அடிமைத்திறமும் பாணியாரது கற்பின்றிறமும் என்றிவற்றின் மிகுதிப்பாட்டின் தொடர்பாலாகியது.

தீ வலஞ் சுழிவுற்று எழுதல் - நன்மையைக் குறிக்கும் என்ப. இடஞ்சுழித்தெழுதல் தீ நாற்றமுண்டாதல் முதலியவை தீமைகுறிக்கு மென்றும் கூறுப. **ஓங்குதல்** - மேலெழுதல்.

தாங்குநூலவர் - திருநீலநக்கர். மறையவர்கள் என்று பொதுமை குறித்ததெனினுமாம். **மகிழ்வுறுதல்** - ஓங்கி வலஞ்சுழித் தெழுந்ததனால் இச்செயல் திருவருள் வழியே நிகழ்ந்ததென்று அறிந்த மனமகிழ்தல். **அருளால் பள்ளிகொள்கின்றார்** - என்ற குறிப்புங் காண்க. **நூலவர்** - நூல்வழியே உணர்ந்தார் என்ற குறிப்புமாம்.

சகோடயாழ்த் தலைவர் - திருநீலகண்டப்பாணர். **சகோடயாழ்** என்பது நால்வகை யாழினுள் ஒன்று; அவை - பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ் என்பன. சகோடயாழ் பதினான்கு நரம்புகளுடையது. இதனையே திருநீலகண்டப்பாணர் கைக்கொண்டு இதில் இசைவல்லவராய் விளங்கினர். அவ்வியல்பெல்லாம் அவர் புராணத்துள்ளும், ஆளுடைய பிள்ளையார் புராணத்துள்ளும், பிறாண்டும் கண்டுகொள்க. **தலைவர்** - வல்லவர் என்ற பொருளில் வந்தது.

பாங்கு - நீலநக்கர் இடம்கொடுத்த நடுமனை வேதியின்பாங்கர். **பாங்கு** - தமது பக்கத்தில் என்றலுமாம். அமரும்பாங்கில் பள்ளிகொண்டார் என்று கூட்டியுரைத்தலும் பொருந்தும்.

அருளாற் பள்ளிகொண்டார் - இந்நிகழ்ச்சிக்குத் திருவருளே காரணமாம் என்றது. "வேண்டி நீயா தருள்செய்தா யானு மதுவே வேண்டினல்லால்" (திருவா). **பள்ளிகொள்ளுதல்** - துயிலுதல். *31*

1859. (இ-ள்.) கங்குலில்......எழுந்தருளுவார் - கவுணியர் தலைவராகிய ஆளுடைய பிள்ளையார் அன்றிரவு அங்குத் திருப்பள்ளியமர்ந்தபின் எழுந்து அங்குநின்றும் புறப்படுவாராகி; நீலநக்கரைச் சிறப்பித்தே - திருநீலக்கரைச் சிறப்பாக எடுத்துக் கூறியே; அயவந்தி.....சூடியை - அயவந்தியில் விரும்ப வீற்றிருக்கும் பெருமானை; பொங்கு.......புனைந்தார் - பொங்கும் செந்தமிழாகிய திருப்பதிகத் தொடையினை அமைத்தனர்.

1859. கங்கு லிற்பள்ளி கொண்டபின் கவுணியர்க் கிறைவர்
அங்கு நின்றெழுந் தருளுவா ரயவந்தி யமர்ந்த
திங்கள் சூடியை **நீலநக் கரைச்சிறப் பித்தே**
பொங்கு செந்தமிழ்த் திருப்பதி கத்தொடை புனைந்தார். 32

(வி-ரை.) கவுணியர்க்கிறைவர் பள்ளிகொண்டெழுந்தபின் என்க. "அமுதுண்டார் இரவும் தமது சீர்மனைத் தங்கிட வேண்டுவ சமைத்தார்" (1855) என்று திருநீலநக்கரது செயலளவின்மட்டிற் கூறிய ஆசிரியர், அதற்கிணங்கப் பிள்ளையார் அவ்விரவு அங்குத்தங்கி ஏனைய திருக்கூட்டத்துடன் பள்ளிகொண்ட செயலை உய்த்துணர வைத்துப் **பள்ளிகொண்டபின்** நிகழ்ச்சியைக் கூறி மேற் செல்லும் கவிநயம் காண்க. சாக்கிரத்தே அதீதத்தைப்புரியும் சீவன் முத்தராகிய பிள்ளையார் ஏனை உயிர்கள்போலத் துயில் முதலிய அவத்தைகளி னுட்படாராதலின் அக்குறிப்புப்பட முன்னர் "மனைத்தங்கிட" என்றனர். அவர் பள்ளிகொண்டமை கூறுமையும் இக்குறிப்பு.

அங்குநின்றும் என்க. நீக்கப்பொருள்தரும் ஐந்தனுருபு சாரியை நிற்கத் தொக்கது. **அங்கு** - சாத்தமங்கை.

எழுந்தருளுதல் - பெயர்ந்து பிற தலங்களிற் செல்லப் புறப்படுதல்.

எழுந்தருளுவார் - முற்றெச்சம். **புனைந்தார்** என்னும் வினைகொண்டு முடிந்தது.

நீலநக்கரைச் சிறப்பித்து - "***நிறையினுர் நீலநக்கன்***" என்று அவரது சிறப்பை எடுத்துப் பாராட்டி. பதிகம் பார்க்க.

"***திங்கள் சூடியைப் புனைந்தார்***" என்றதனல் பதிகத்துள் சிவபெருமானைத் துதித்தலே பொருளாவது என்றும், அதனுள் "***நீலநக்கரைச் சிறப்பித்தே***" என்றதனுல், அத்தனேடு இணைந்துவரும் அடியார் சிறப்பு என்ற அளவுமட்டில் அவர் சிறப்பு அமைவதாம் என்றும் குறித்தபடியாம்.

பொங்கு செந்தமிழ் - தமிழ்த் தன்மையும் சிவனருளின் தன்மையும் அன்று போலவே என்றும் உள்ளமைந்து மேலே பொங்கும் தமிழ்.

புனைந்தார் என்றதற்கேற்பத் **தொடை** என்ருர். இங்குப் **புனைதல்** அணிதல் என்ற பொருளில் வந்தது.

திருப்பதிகம் - இஃது ஆளுடைய பிள்ளையார் அத்தலத்தினின்று புறப்பட்டருளி இறைவரிடம் விடைபெற்றுச் செல்லும்போது அருளியது. முன்னர்த் தரிசித்து வணங்கியபோது அருளியவை கிடைத்தில!

கவுணியர் தலைவர் - என்பதும் பாடம். 32

1860. (இ-ள்.) பதிகம்...பரவி - திருப்பதிகமாகிய புதிய மலர் மாலையினாலே தமது பெருமானை அணிந்து துதித்து; அதிகம்...அருளி - தமது பெரிய நட்பினைத் திருநீலநக்கருக்குக் கொடுத்தருளி; என்றும் புதிய... பூசுரனார் - **பழைய மறைகளை என்றும் புதியதாகவேயுள்ள செந்தமிழினால் மொழிந்தருளிய அந்தணராகிய ஆளுடைய**

1860. ***பதிக நாண்மலர் கொண்டுதம் பிரான்கழல் பரவி,**
யதிக நண்பிஙே நீலநக் கருக்களித் தருளி,
எதிர்தொ ழும்பதி களிலெழுந் தருளின ரென்றும்
புதிய செந்தமிழ்ப் பழமறை மொழிந்தபூ சுரனூர். 33

பிள்ளையார்; எதிர்...எழுந்தருளினார் - மேலும் தொழச்செல்லும் தலங்களில் எழுந்தருளுவாராயினார்.

(வி-ரை.) பதிக நாண்மலர் - புதிய செந்தமிழ் என்று முன்பாட்டிற் கூறியதற் கேற்ப **நாண்**மலர் என்றார். **நாண்மலர்** - அன்றலர்ந்த புதிய பூ. புதிய பூக்களே பூசைக்குச் சிறப்பா யுரியன என்பது விதி. சென்ற சென்ற தலங்கடோறும் அவ்வப்போது வெவ்வேறு பதிகங்களாற் போற்றுதலின் பதிக **நாண்**மலர் என்றார். **மலர்** - இங்கு மலர்மாலையைக் குறித்தது; ஆகுபெயர்.

கொண்டு - கருவிப் பொருளில் வந்த மூன்றாவதன் சொல்லுருபு. மலர் கொண்டு பரவியதனை இங்குக் கூறுவதனால் முன் பாட்டில் **தொடை புனைந்தார்** என்பதற்கு மாலை அமைத்தனர் என்று பொருள்கொள்ளப்பட்டது.

மலர்கொண்டு பரவி - பரவி - இங்கு அலங்காரம் செய்யும் வகையாற் போற்றுதல் என்ற பொருள்தந்து நின்றது.

அதிக நண்பு - நண்பு - இவர் அவர் உள்ளத்திலும் அவர் இவருள்ளத்திலுமாக ஒன்றுபோல வைத்து ஊன்றியிருக்கும் அன்புரிமையின் தொடர்பு. **அதிக நண்பு** - பின்னர்த் தமது திருமணத்தில் வேள்விபுரி சடங்குசெய்து உடன்செல்லும் சிறப்புரிமையின் அருட்குறிப்புப் பெற **அதிகம்** என்றார். **அளித்தருளி** என்ற குறிப்பும் அது. **அளித்தல்** - அளியோடு வழங்குதல். **அளி** - கருணை.

எதிர்தொழும் பதிகள் - எதிர் - எதிர்காலத்தில். இடத்தால் எதிர்ப்படும் என்று இடத்தாலும் எதிர்வு குறித்தது. **தொழும்** - தொழப்படும். செயப்பாட்டுவினை செய்வினையாக வந்தது. **பதி** - இறைவர் விளக்கம் பெறப் பதிந்து கிடத்தல் குறிப்பு. பிள்ளையாரும் ஏனை எந்தம் பெருமக்களும் சென்று வணங்கிய தலங்களில் சிவபெருமான் பண்டும் இன்றும் என்றும் பதிந்து விளங்குதலே குறிப்பு.

எழுந்தருளினார் - செல்வதற்குப் பயணமாகப் புறப்பட்டனர் என்ற பொருளில் வந்தது.

என்றும் புதிய செந்தமிழ் - தெய்வத் தமிழ்மொழியின்பால் ஆசிரியர்கொண்ட ஆர்வம் விளங்கும் பல இடங்களுட் சிறந்த இடம் இது. "ஞாலமளந்த மேன்மைத் தெய்வத் தமிழ்" (970) என்றவிடத்துரைத்தவை பார்க்க. **என்று மிருத்தலும், புதுமை பயத்தலும், செம்மை தருதலும் தமிழ்க்குரிய சிறப்பியல்புகளாம். என்றும் புதிய** - (எக்காலத்திலும்) வழங்குதலின்றி அழிதல், சிதைதல், பெருகுதல், சிறுகுதல் முதலிய குறைவுகளின்றிப் புதியதாகவே யிருத்தல், "**என்றுமுள தென்றமி** ழியம்பி யிசைகொண்டான்" என்றதும் காண்க. **புதுமை**யாவது பழைமை பெற்றன என்று கழிக்கப்படுமாறின்றிப் புதுமைகளைத் தந்துகொண்டிருத்தல். இது மாறாத இளமை என்றும், தெய்வத்தன்மை என்றும் பேசப்படும். "கன்னித் தமிழ்" என்ற வழக்கும் இக்கருத்து. "அகிலாண்ட கோடி யீன்ற அன்னையே பின்னையுங் கன்னியென மறை பேசும்" என்று தாயுமானார் அம்மையைப்

1861. பிள்ளை யாரெழுந் தருள,வத் தொண்டர்தாம் பின்பு
தள்ளு மன்புடன் கேண்மையுந் தவிர்ப்பில வெனினும்
வள்ள லார்திரு வருளினை வலியமாட் டாமை
உள்ள மங்குடன் போக்கி, மீண் டொருவகை யிருந்தார். 34

போற்றுதல் தமிழுக்கும் பொருந்தும். **செம்மை** - அழியாத பேரின்பம். இவ்வியல்புகள் எல்லாம் பிள்ளையார் திருவாக்குக்களுக்குச் சிறப்பாயுரியன என்பது. **பழமறை என்றதனால் அவற்றுள் இவை மிக்கில்லாமையும், அவை தமிழல்லாமையும், கருதப்படும்.** இவை யிரண்டின் பொருள் பற்றியும் மொழி பற்றியும் பிணங்கிப் பூசலிடுவோர் இக்கருத்துக்களை உன்னிப் பிணக்கொழிவார்களாக.

பழமறை....புதியசெந்தமிழ் மொழிந்த - *சிவன் தாமே அருளிய மறைமொழியும் பிள்ளையார்பானின்று மொழிந்த அருண்மொழியும் மொழியால் வேறுபடினும்* **பொருளாலும் பயனாலும் ஒன்றேயாம் என்பது**, இவ்வுண்மை "எனதுரை தனதுரையாக" (இலம்பையங்கோட்டூர் - தேவா) என்ற பிள்ளையாரது திருவாக்காலும், அவர்தம் புராணத்தினுள் திருமறைக்காட்டின் நிகழ்ச்சியாலும் பிறவாற்றாலும் நன்கு விளங்கும்.

பூசுரன் -பூ - நிலம். **சுரன்** - தேவன். "நிலத்தேவர்" (திருஞான - புரா - *1993*) மறையவர்களுக்குச் சிறப்புப்பெயர். இங்குக் குலப்பெயரின்றித், தேவர் கணப் பெயருமன்றித், தெய்வத் தன்மையாகிய சிவத்தன்மை குறித்த பெயராய் நின்றது. "சுத்தர்கள்சேர் காழிச் **சுரன்**ஞான சம்பந்தன்" (ஆளுடைய பிள்ளையார் மும். கோ - 5) என்பது நம்பியாண்டார் நம்பிகளது திருவாக்கு.

புதிய செந்தமிழ்ப் பழமறை மொழிந்த - என்ற இத்தன்மை பற்றிக் கூறிய குறிப்பு என்னை? எனின், திருநீலநக்கர் "ஞாலமிக்க **நான்மறைப் பொருள் விளக்கிய நலத்தார்**" (*1831*) என்றபடி பழமறையினால் உலகு விளங்கச் செய்தனர். பிள்ளையாரது திருமணத்தின் வேள்வியை அம்மறை விதியினைக்கொண்டு "நம்பெருமான் பாதமேவு முள்ளத்தாற் செய்"பவர் (திருஞான - புரா - *1239*). ஆனால் அத்திருமணத்தில் மணமகனாகிய பிள்ளையார் "நம்பனேநின் பாதமெய்ந் நீழல்சேரும் பருவமீது என்று" பாடி (மேற்படி *1245*), அப் பழமறை விதிமணத்தினையே "கல்லூர்ப் பெருமணம் வேண்டா" (தேவா), என, என்றைக்கும் புதிய செந்தமிழினாற் பாடியருளுவர் என்று வரும் பின்னிகழ்ச்சியின் அருட்குறிப்பாமென்க.

எதிர்கொளும் பதிகளில் - என்று பாடங்கொள்வாரு முண்டு. *33*

1861. (இ-ள்.) பிள்ளையார் எழுந்தருள - அவ்வாறு ஆளுடைய பிள்ளையார் அங்கு நின்றும் புறப்பட; அத்தொண்டர்தாம் - அத்திருநீலநக்கரும்; பின்பு...எனினும் - ஆளுடைய பிள்ளையாரைத் தொடர்ந்து செல்லும்படி தம்மை உந்திச் செலுத்தும் அன்பும் கேண்மையும் தவிர்ப்பிலவாய் இருந்தன என்றாலும்; வள்ளலார்...வலிய மாட்டாமை - வள்ளலாராகிய ஆளுடைய பிள்ளையாரது அருளிப்பாடாகிய திருவாணையினை வற்புறுத்தி மறுக்கமாட்டாமையால்; உள்ளம்...மீண்டு - தமது உள்ளத்தை அவர் செல்லுமிடங்களில் உடன்செல்லும்படி போக்கித் தாம் மீண்டு; ஒருவகை இருந்தார் - ஒருவாறு தங்கியிருந்தனர்.

(வி-ரை.) எழுந்தருள - அப்பதியை நீங்கிச்செல்ல. **அத்தொண்டர்** - திருநீலநக்கர். "சிறப்பித்து", "அதிக நண்பினை அளித்தருள"ப்பெற்ற அந்த என் அகரம் முன்னறிசுட்டு,

1862. மேவு நாளிலவ் வேதியர் முன்புபோல் விரும்பு
தாவில் பூசனை முதற்செய்கை தலைத்தலை சிறப்பச்
சேவின் மேலவர் மைந்தராந் திருமறைச் சிறுவர்
பூவ டித்தலம் பொருந்திய வுணர்வொடும் பயின்றார். 35

தொண்டர் - பிள்ளையாருக்குத் தொண்டு பூண்டொழுகும் நிலையில் தம்மை வைத்தொழுகியவர் என்பது குறிப்பு. தொண்டராயும் அதிக நண்பு அளிக்கப்பெற்றாராயும் இருந்து தம் தலைவருடனே செல்லாதிருந்தமையை விளக்க எழுந்தது இப்பாட்டு; ஆதலின் இங்குத் **தொண்டர்** என்ற இத்தன்மையாற் சுட்டினார். **தாம்** - தாமும் என்ற சிறப்பும்மை தொக்கது.

பின்பு...எனினும் - பின்பு தள்ளும் - பிள்ளையார் பின் செல்லும்படி தள்ளும் என்றும், தமது பின்பிருந்து பிடர்பிடித்து உந்தித் தள்ளும் என்றும் உரைக்க நின்றது. **தள்ளுதல்** - உந்திச் செலுத்துதல்.

பின்பு தள்ளும் என்றதனைக் கேண்மையும் என்பதுடனும் கூட்டுக.

கேண்மை - பிறப்பில் உடன்வந்து பிரியாது நிற்பது போன்றது.

எனினும் - அன்புங் கேண்மையும் நிரம்பநின்று நீலநக்கரைப் பிள்ளையார்பின் செல்லும்படி பின்புறமிருந்து உந்துகின்றன; இந்நிலை தவிராமல் உள்ளது ஆயின் நீலநக்கர் அவற்றால் உந்தப்பட்டு பிள்ளையார்பின் செல்லவில்லை; என்ன காரணமென்னில் பிள்ளையாரது அருளை வலியமாட்டாமையேயாம் என்றபடி.

திருவருள் - நீர் என்னுடனே பின்பற்றிவராது இங்கே இரும் என்று பிள்ளையார் வற்புறுத்திய வகையாகும். **வலியமாட்டாமை** - இணங்காது வலிந்து ஒதுக்கி அவருடன் போகமாட்டாமையால்.

உள்ளம் அங்கு உடன்போக்கி - தமது பூத உடம்பு பிள்ளையாரது ஆணைக்குட்பட்டு இங்கு நின்றாலும் மனத்தை அவருடனே செல்லவைத்து.

மீண்டு - நகர்ப்புறம் சென்று விடைகொண்டு மீண்டு இருக்க.

ஒருவகை - மனம் விடினும் பிரிவாற்றாமையை ஒருவாறு தேற்றிக்கொண்டு.

தப்பில எனினும் - என்றும் பாடம். *34*

1862. (இ-ள்.) மேவுநாளில் - முன்கூறியவாறு ஒருவகையிருந்த நாள்களில்; அவ்வேதியர் - அந்த வேதியராகிய திருநீலநக்கர்; முன்புபோல்....சிறப்ப - முன்பு போல வேதம் விரும்பிய குற்றமில்லாத பூசனை முதலாகிய செயல்களெல்லாம் மேல் மேலும் சிறப்பா யோங்க; சேவின்...பயின்றார் - இடபவாகனத்தின்மேல் வரும் சிவபெருமானது மைந்தராகிய திருமறைச் சிறுவருடைய அழகிய திருவடிகளைப் பொருந்திய வுணர்ச்சியுடன் பயின்றனர்.

1863. சண்பை யாளியார் தாமெழுந் தருளுமெப் பதியும்
நண்பு மேம்பட நாளிடைச் செலவிட்டு நண்ணி
வண்பெ ரும்புக ழுவருடன் பயின்றுவந் துறைந்தார்
திண்பெ ருந்தொண்ட ராகிய திருநீல நக்கர். 36

(வி-ரை.) மேவும் - முன்சொல்லியபடி ஒருவகையால் ஆற்றியிருந்த என்ற பொருளில் வந்தது.

முன்புபோல் - பிள்ளையார் எழுந்தருளுவதற்கு முன்னுள்களிற் போலவே.

விரும்பும் தாவில் பூசனை முதற்செய்கை - அரன் பூசையும் அடியார்க்கமுது செய்வித்தல் முதலாகிய பணிகளும்; இவை 1833-ல் உரைக்கப்பட்டன. **தா** - குற்றம். **தாவில் பூசனை** என்றது முன்னர் இறைவன் திருமேனிமேல் சிலம்பி வீழ்ந்தபோது மனைவியார் ஊதித்துமிந்து விலக்கியதனை இறைவர் ஏற்றுக்கொண்டு மகிழ்ந்துகாட்டிய வரலாறும், பாணனுர் பாணியாருடன் நடுமனை வேதியின் பாங்கர்ப் பள்ளிகொண்டதனைச் செந்தீவலஞ் சுழிவுற் றெழுந்தோங்கும்படி மகிழ்ந்து ஏற்றுக்கொண்டு காட்டிய வரலாறும் உட்குறிப்பாகக் கொண்டுநின்றது.

முதற்செய்கை - முதலாகிய என்றும், முதன்மைபெற்ற என்றும் உரைக்க நின்றது.

தலைத்தலை சிறத்தல் - நாடோறும் செய்யுந்தோறும் ஒன்றற்கொன்று சிறந்தோங்குதல்.

சேவின்மேலவர் மைந்தர் - இறைவியாரது ஞானத் திருமுலைப் பாலுண்ட காரணத்தால் மைந்த ரென்றுபசரிக்கப்பட்டது. முன் "புரமெரித்தார் திருமகனுர்" (1666) என்றவிடத் துரைத்தவையும், பின் ஆளுடையபிள்ளையார் புராணம் (66) முதலிய இடங்களில் உரைப்பவையும் பார்க்க.

மறைச் சிறுவர் - வேதியர் குலத்துதித்த சிறுவர்; **அடித்தலம் பொருந்திய உணர்வு** - அடியினையே சிந்தித்து நின்ற உணர்ச்சி. "உள்ள மங்குடன் போக்கி மீண்டொருவகை யிருந்தார்" என்று முன்கூறிய நிலையை விளக்கியபடி. **பயின்றுர் - பயிலுதல்** - அத்தன்மையில் தவிராது நிலைபெற்று ஒழுகுதல். **பொருந்திய** - பயின்றுர் என்று கூட்டிச் செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சமாகக் கொண்டு, அடித்தலம் பொருந்தும் பொருட்டு, அவ்வுணர்வுடன் ஒழுகினுர் என்றலுமாம். பின்பு சரித விளைவுக் குறிப்பும் காண்க. 1864 பார்க்க. பயின்று நின்ற ஒழுக்கத்தின் விளைவு மேல் வரும் இரண்டு பாட்டுக்களிலும் விரிப்பார்.

அறிவொடும் பயின்றுர் -அறிவொடும் புணர்ந்தார் - என்பனவும் பாடங்கள். 35

1863. (இ-ள்.) சண்பை ஆளியார்...பதியும் - சீகாழி யதிபராகிய ஆளுடையபிள்ளையார் எழுந்தருளும் எவ்வெத் தலங்களின் கண்ணும்; நாள் இடைச்செலவிட்டு - இடையிடையில் பலநாள்கள் கழிந்தபின்; நண்புமேம்பட நண்ணி - அன்பு மேலீட்டினுல் சென்று சேர்ந்து; திண்...நீலநக்கர் - திண்மையுடைய பெரிய தொண்டராகிய திருநீலநக்கர்;

1864. பெருகு காதலிற் பின்னெடு நாண்முறை பிறங்க
வருபெ ருந்தவ மறையவர் வாழிசீ காழி
யொருவர் தந்திருக் கல்லியா ணத்தினி லுடனே
திரும ணத்திறஞ் சேவித்து நம்பர்தாள் சேர்ந்தார், 37

வண்பெரும்...உறைந்தார் - வண்மையுடன் பெரும் புகழுடைய அவருடனே பயின்றிருந்து மீண்டுவந்து அமர்ந்திருந்தனர்.

(வி-ரை.) சண்டை யாளியார் - ஆளுடைய பிள்ளையார்; **சண்டை** - சீகாழியின் பன்னிரண்டு திருப்பெயர்களுள் ஒன்பதாவது திருப்பெயர்.

நாள் இடைச் செலவிட்டு எப்பதியும் - நண்பு மேம்பட நண்ணி என்க - பல நாள்கள் இடைகழிய அவருடன் கூடியிருத்தல் வேண்டுமென்ற காதல் மிகுதியாக, அது காரணமாக, அவர் எழுந்தருளுவது எத்தலமாயினும் சென்று சேர்ந்தனர் என்பதாம்.

பயின்று வந்து உறைந்தார் - பிள்ளையார் பல தலங்களிலும் செல்ல, அவரது திருவடித்தலம் பொருந்திய உணர்வொடும் பயின்று சாத்தமங்கையிலிருந்த நீலநக்கர், அவ்வாறே அமைந்து இங்கே யிருந்தனரோ? எனின், அற்றன்று, பிரிந்து சிலநாள்கள் செல்ல அன்புமேலிட்டதனல், பிள்ளையார் சென்றருளியது எப்பதியாயினும் அங்குச் சென்று அவருடன் பயின்றிருப்பதும், பின் மீண்டு இங்கு வந்துறைதலுமா யிவ்வண்ண மிருந்தனர் என்பதாம். **உறைதல்** - அமர்ந்து வீற்றிருத்தல். **பயின்று** - உடனுறைந்து; **வந்து** - மீண்டு வந்து; **எப்பதியும்** - எத்தலமாயினும்; **அங்கு** - இவை திருப்புகலூர் முதலாயின.

நண்பு மேம்பட - நண்பு - காதல் என்ற பொருட் குறிப்புப்பட வந்தது. **மேம்பட** - மேம்பட்டதனல் என்று காரணப் பொருளில் வந்த வினையெச்சம். மேம்படும் பொருட்டு என்றுரைப்பினு மமையும்.

வண் பெரும் புகழவர் - ஆளுடைய பிள்ளையாரது வள்ளன்மையாவது தற்பயன் கருதாது வரையாது கொடுத்தல். பெரும்புகழ் அவ்வள்ளன்மையால் வருவது. இவை பொதுவாய்ப் பிள்ளையாரது சரிதப் பல பகுதிகளிலும், சிறப்பாய், அவரது திருமணத்தில் **வந்தார்க்கெல்லாம் முத்திப்பேற்றை நல்கிய பகுதியிலும் விளங்குவன.** இக்குறிப்பினை மேல்வரும் பாட்டில் விரித்துக் கூறுதல் காண்க.

திண்பெரும் தொண்டராகிய - திண்மை - உறைப்பு. இதனை இவர் சரிதத்தின் முன் இரண்டு பெரும் பகுதிகளிலும் காண்க.

பெருந்தொண்டு - "நிறையினர் நீலநக்கன்" என்று ஆளுடைய பிள்ளையார் விதந்து பேசுவதற்குரிய பெருமை.

ஆகிய - ஆக்கம் சரிதக் குறிப்புணர்த்திற்று. *36*

1864. (இ-ள்.) பெருகு...மறையவர் - பெருகும் காதலினற் பின்னர் நீண்ட நாள்கள் இவ்வாறே விளங்கும்படி நிகழவரும் பெருந்தவ வேதியராகிய நீலநக்கர்;

1865. **தருதொழிற்றிரு மறையவர்** சாத்தமங் கையினில்
வருமு தற்பெருந் திருநீல நக்கர்தாள் வணங்கி,
இருபி றப்புடை யந்தண ரேறுயர்த் தவர்பால்
ஒருமை யுய்த்துணர் நமிநந்தி யார்தொழி லுரைப்பாம். 38

வாழி.....கல்லியாணத்தினில் - எந்நாளும் வாழ்வுடைய சீகாழியில் அவதரித்த ஒப்பற்ற ஆளுடைய பிள்ளையாரது திருக்கல்லியாணச் சிறப்பின்கண்; திருமணத்திறஞ் சேவித்து - அத் திருமணத்திறத்தினைக் கும்பிட்டபடியினால்; **உடனே** - அவருடனாக; நம்பர்தாள் சேர்ந்தார் - சிவபெருமான் றிருவடிகளைச் சேர்ந்தனர்.

(வி-ரை.) பெருகு காதலில் - முன் சொல்லியபடி ஒழுகிய காரணத்தால் காதல் பெருகிற்று என்பது. **காதல்** - "நண்பு மேம்பட" (*1863*) என்றது காண்க. தலைவன் தலைவியரிடத்து நிகழும் அன்பு போல்வது என்பது குறிப்பு.

முறை பிறங்கு வரு - முன்பாட்டிற் சொல்லியபடி பல முறையும் சென்று சென்று பயின்று வந்த. **பெருந்தவர்** - அவ்வாறு பிறங்க வருவதற்குக் காரணம் முன்னைப்பெருந்தவமாம் என்பது. **பெருந்தவ மறையவர்** - திருநீலநக்கர். **சீகாழி ஒருவர்** - ஆளுடைய பிள்ளையார். **ஒருவர்** - ஒப்பற்றவர். **வாழி** - இகரம் விரித்தல் விகாரம்.

திருமணத்திறஞ் சேவித்து - திறம் - பெருமை - காட்சி. **சேவித்தல்** - வழிபடுதல். இங்குத் திருநீலநக்கர் அத்திருமணத்தில் மறைவிதிப்படி வேள்விச்சடங்குகள் செய்வித்தமையும் குறிப்பு. "முதன்மறை முறையி னோடு, மெய்த்தநம்பெருமான் பாத மேவுமுள் ளத்தாற் செய்ய" (திருஞான - புரா - *1239*); "திருமணத்துடன் சேவித்து முன்செலுஞ் சிறப்பு" (மேற்படி *1249*). **சேவித்து** - சேவிக்கும் பேறு பெற்றதனால். காரணப் பொருளில் வந்த வினையெச்சம்.

உடனே - தாள்சேர்ந்தார் என்று கூட்டுக. பிள்ளையாரும் மற்றும் சேவித்தாரும் உடனாக என்றலுமாம்.

நம்பர் - சிவபெருமான். *37*

1865. (இ-ள்.) தருதொழில் திருமறையவர் - தொழில் தரும் திருமறையாவராகிய; சாத்தமங்கையினில்...வணங்கி - திருச்சாத்த மங்கையில் அவதரித்த முதன்மையுடைய பெரிய திருநீலநக்கருடைய திருவடிகளை வணங்கி (அத்துணையாலே); இருபிறப்புடையந்தணர் - இரண்டு பிறப்புடைய அந்தணராய்; ஏறு...உரைப்பாம் - இடபக் கொடியை உயர்த்திய சிவபெருமானிடத்து மன ஒருமைப்பாடுவைத்து உணர்கின்ற நமிநந்தியார் செய்த திருத்தொழிலினை உரைக்கப் புகுகின்றோம்.

(வி-ரை.) ஆசிரியர் தமது நியதியின்படி; இத்திருப் பாட்டால் இதுவரை கூறிவந்த சரிதத்தை நிறைவாக்கி முடித்துக்காட்டி; இனிக் கூறப்புகும் சரிதத்துக்குத் தோற்றுவாய் செய்கின்றார்.

தொழில்தரும் மறையவர் என்க. **மறையவர்** என்றதனுல் வேதம் பயில்பவர் என்றும், **தருதொழில் அவர்** என்றதனுல் மறையினுல் விதிக்கப்பட்ட தொழில் புரிகின்றவர் என்றும் குறித்தபடியாம். **மறைதரு தொழிலவர்** - என்று கூட்டி உரைத்துக்கொள்க.

திருமறையவர் - என்றதனுல் "நான்மறைப் பொருள் விளக்கிய நலத்தார்" (*1831*) என்ற கருத்தும், **தருதொழில்** என்றதனுல் "வேத உள்ளுறை யாவன...இரண்டுமே செய்கருத் துடையார்" (*1832*) என்றதும், *-1833-1834* திருப்பாட்டுக்களிற் கூறியவையும் ஆகிய பொருள்களும் முடித்துக் காட்டப்பட்டன. "நிறையினுர்" என்றது தேவாரம். ஈதற்றொழிலையுடைய மறையவர்கள் வாழும் சாத்தமங்கை என்றலுமாம். **தருதல்** - ஈதல்; மறையவர்களின் அறு தொழில்களுள் ஒன்று. இங்குத் தருதலாவது "வேட்டுலகை மிகவளிப்போர்" (தேவா) என்ற படி தமது வேத வொழுக்கத்தின் பயனை உலகுக்கு அளித்தல்.

முதற்பெரும் நீலநக்கர் - மேற்கூறியபடி அடியார் பூசையும் ஆண்டான் பூசையும் செய்துவந்த தொழிலின் றிறத்தாலே தரப்பட்ட ஆளுடைய பிள்ளையாரது திருக்கூட்டப்பேறும், அதுகாரணமாக **முதற் பெருந்திரு**வாகிய முத்தியை அடைதலாகிய பேறும்பெற்றவர் என்ற சரித வரலாறுகளைக் குறிப்பிற்காட்டி முடித்தபடி,

சாத்தமங்கையினில் "வரும்" - என்றதனுல் "ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கர்க்கடியேன்" (தொகை) என்று முதனூலும், "நிறையினுர் நீலநக்கன் நெடுமாநகர்" (பிள் - தேவா) என்ற தேவாரமும் போற்றி வற்புறுத்தி உணர்த்தப்பட்டன.

வணங்கி - உரைப்பாம் - வணங்கி அவ்வருள்பெற்ற துணைகொண்டு உரைக்கப் புகுகின்றேம் என்பது.

இருபிறப்பு உடை அந்தணர் - அந்தணர் என்றதனுலேயே வைதிகச் சடங்கினுல் எய்தும் இருபிறப்புடைமை பெறப்படுவதாகவும், ஈண்டு **இருபிறப்புடை (அந்தணர்)** என்றது உபநயனச் சடங்கின்மேலும், சிவாகம விதியால் சிவபூசை செய்தற்குரிமை தரும் சிவதீக்கைப் பேறும் உடைமையை உணர்த்தி நின்றது. "சூத்திரர் முதலிய சாதிகளை எடுத்து, சுவாகாந்த மூலத்தால் மூன்றுகுதிகள் செய்து, பின்னர்ச் சிவனைக் குறித்து இவ்வாறு கூறுக : பகவனுகிய பரமேசுவரனே! உணவு எண்ணங்களால் வந்த குற்றங்களினின்றும், பிறப்புவாய், வித்து, உடல்களின் குற்றங்களினின்றும் இவ்வுயிர் தூயதாகி இருபிறப்புடையதாகுக" எனவரும் காமிகாகம வசனங்களால் சிவதீக்கையால் இருபிறப்புடையராதல் அந்தணர் முதலிய நால்வருணத்தார்க்கும் உண்டென்பது காணலாம். ஆதலின் சிவதீக்கையால் இருபிறப்புடைமையில்லாத அந்தணரை நீக்கலின் பிறிதினியைபு நீக்கிய அடை. இது ஸ்ரீமத் முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகளின் குறிப்பு. செஞ்ஞாயிறு என்புழிப்போல இயற்கை யடைமொழி என்பாருமுண்டு. அஃது இந்நாயனரது சரிதத்தின் இரண்டு பெரு நிகழ்ச்சிகளின் குறிப்புப்பெறவும் நின்றது.

ஒருமை உய்த்து உணர் - ஒருமை - "ஒன்றியிருந்து நினைமின்கள்" (தேவா) என்றபடி பிறிதொன்றினும் செலுத்தாது சிவன் திருவடியினிலே உய்த்தல். **உய்த்தல்** - செலுத்துதல்.

தொழில் - திருத்தொண்டின் செய்கை என்ற பொருளில் வந்தது. "நீரால் விளக்கிட்டமை நீணு டறியுமன்றே" (தேவா) என்றபடி அவரது செயல் உலக மறிய விளக்கியதனுல் அதனைத் **தொழில்** என்று குறிப்பட்டார்,

இப்பாட்டினுல் இது வரை கூறிவந்த சரிதசாரத்தைக்கூறி முடித்துக்காட்டிய திறனும், மேல்வருஞ் சரிதசாரத்தை எடுத்துக் காட்டிய அமைதியும் கண்டு கொள்க. இஃது ஆசிரியரது தெய்வக் கவிநலம்.

சரிதச் சுருக்கம்:- காவிரி பாய்வதனுற் செழிப்புமிக்க **சோழநாட்டில்** மறையவர்கள் நிறைந்த சிறந்தவூர் **சாத்தமங்கை.** அதனிற் சீலம் மிக்கவராய் உலகில் மறைப்பொருள் விளக்கிய நலமுடையவராய்ச் சிவபெருமானிடத்து அன்புடைய தொண்டராய் விளங்கியவர் **திருநீலநக்கர்.**

வேதங்களின் உள்ளுறையாவன அரனையும் அவனடியார்களையும் பூசித்தலும் வணங்குதலுமே என்றறிந்து அவர் ஆராத ஆசையுடன் அவ்விரண்டினையுமே செய்யும் கருத்துடன் வாழ்ந்திருந்தார். அத்தலத்தில் **அயவந்தி** என்னும் திருக்கோயிலில் எழுந்தருளிய இறைவரை ஆகமவிதிப்படி நித்தலும் பூசனை புரிந்துவந்தனர். அடியார்களுக்கு அமுதூட்டுதல் முதலாகிய எல்லாப் பணிகளையும் குறிப்பறிந்து செய்து வந்தனர்.

இவ்வாறெழுகுநாளில் ஒருநாள் அயவந்திப் பரமரைப் பூசனை செய்வதற்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் கொண்டு மனைவியாருடன் கூடத் திருக்கோயிலை அணைந்தனர். பூசனைக்கு வேண்டும் பொருள்களை மனைவியார் ஏந்தி நிற்க உயர்ந்த பூசனையை முறைப்படி முடித்தனர். பூசனை நிரம்பியும் அன்பினுல் நிரம்பாதவராகிய இறைவரை வலங்கொண்டு வணங்கித்துதித்து மறைப்பொருளைத் தெளிவுற நோக்கிக்கொண்டு திருமுன் இருந்து திருவைந்தெழுத்தை விதிப்படி கணித்தனர். அப்போது சுதைச்சிலம்பி ஒன்று வழுவி இறைவரது திருமேனியின் மேல் விழுந்தது. அயலில் நின்ற மனைவியார் இளங்குழவிமேற் சிலம்பி விழக்கண்டவர்போலப் பதைத்து அதனை வாயினுல் ஊதித்துமிந்து விலக்கினர். மறையவர் அதுகண்டு மனைவியார் செய்த அன்பினை மனங்கொள்ளாது, கண்புதைத்துக் கொண்டு "அறிவில்லாதவளே! மற்றிது செய்தது என்னை?" என்றனர். அதற்குச் "சுதைச் சிலம்பி மேல்விழ ஊதித் துமிந்தனன்" என்று அவர் கூறக்கேட்ட நாயனுர், பூசையில் இது அநுசிதமாகும், என்று எண்ணி, "சிலம்பியை வேறு வழியால் நீங்காது, வாய் நீர்பட ஊதித் துமிந்தனை; உன்னை நான் இனி இங்குத் துறந்தனன்" என்றூர். அப்போது மாலைப்பொழுதாயிற்று. தம் ஏவலின்படி மனைவியார் ஒருவழி நீங்க, நாயனுர் பூசனையை முடித்து மனைபுகுந்தனர். அச்சத்தால் மனைவியார் அவர் பக்கம் அணுகமாட்டாது இறைவர் கோயிலில் இருந்தனர். மனையில் நீலநக்கர் பள்ளிகொண்டனர். அவரது கனவில் அயவந்திப்பரமர் எழுந்தருளித் தம் திருமேனியைக் காட்டி "ஊதித் துமிந்த பக்கம் ஒழிய இப்புறமெல்லாம் சிலம்பியின் கொப்புள் உள்ளன; காண்" என்றருளினர். அதைத் நனவாகவே கண்டு தொண்டனுர் அச்சத்துடன் கைகள் அஞ்சலி கூப்பி விழித்து எழுந்து தொழுது ஆடினுர்; பாடினுர்; துதித்தார்; இறைவரது கருணையை நோக்கி நின்றழுதார். பொழுது புலர்ந்தவுடன் திருக்கோயிலுக்குச் சென்று, இறைவரை வணங்கி மனைவியாரையும் உடன்கொண்டு மனையில் அணைந்தனர்.

அதன்பின்பு முன்னையினும் பெருகிய மகிழ்ச்சி பொருந்த இறைவரது பூசனைகளைச் செய்தும், அடியார்கள் மிகப்பெருக அணைவார்க்கு முன்போல வேண்டுவனவற்றை விருப்புடன் முடித்தும் வாழ்ந்து வந்தனர். அந்நாளில் திருஞானசம்பந்த நாயனுருடைய பெருமையை எடுத்து உலகம்போற்றிடக் கேட்டு அவரைச் சார்வதற்கு மிக்க விருப்பம் கொண்டிருந்தனர். அப்போது பல தலங்களையும் வணங்கிக் கொண்டு திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவர் மனைவியார் மதங்கசூளாமணியாரும், உடன்வரத், திருத்தொண்டர் கூட்டத்துடன் ஆளுடைய பிள்ளையார் சாத்தமங்கையில் எழுந்தருளினர். அதுகேட்ட திருநீலநக்கர் அப்பொழுதே பெருமகிழ்ச்சி பொங்க மாலைகளும் கொடிகளும் தொங்கிய தோரணங்களை நாட்டினர்; நடைக் காவணமிட்டனர்; சுற்றத்தாருடன் சென்று பிள்ளையாரைத் திருக்கூட்டத்துடன் ஏற்றவாறு எதிர்கொண்டு அழைத்துத் தமது திருமனையிற் கொண்டு வந்து திருவமுது செய்வித்தனர். மாலைப்பொழுது கூடவே அன்றிரவும் பிள்ளையார் தமது திருமனையில் தங்கிட வேண்டியவற்றை அமைத்தனர். திருவமுது செய்தபின் பிள்ளையார்

திருநீலநக்கரை அழைத்துத் திருநீலகண்ட யாழ்ப்பாணரும் மதங்கசூளாமணியாரும் இரவு தங்குதற்கு ஓர் இடங்கொடுக்கும்படி அருள அவர் மகிழ்ந்து, நடுமனை வேதிகையின் பக்கத்தில் அவர்களுக்கு இடங்கொடுத்தனர். அவ்வேதியில் அருத செந்தீ ஓங்கி முன்னையினும் ஒருபடித்தன்றியே வலஞ்சுழித்தெழுந்து விளங்கிற்று. யாழ்ப்பாணரும் தேவியாரும் அங்குப் பள்ளி கொண்டருளினர். பின்னர்ப் பிள்ளையார் அயவந்தி யிறைவரைத் துதித்த பதிகத்திற் றிருநீலநக்கரைச் சிறப்பித்துப் பாடிப் பிற பதிகளில் எழுந்தருளினர்.

நீலநக்கர் அன்பினால் அவரைப் பிரியாது உடன்செல்ல ஒருப்படினும் அவரது அருளை மறுக்கமாட்டாது, அவரை நினைந்த வண்ணமாகவே சாத்தமங்கையில் தங்கினர். பின்னர்ச் சில நாளிடைச் செல்லவிட்டுப் பிள்ளையார் எழுந்தருளும் எப்பதியிலும் சென்று உடனுறைந்து மீண்டுவந்து தமது பதியில் அமரும் ஒழுக்கமும் பூண்டனர். இவ்வாறு பன்னாள் கழிய ஆளுடைய பிள்ளையாரது திருக்கல்லியாணத்தில் முன்செய் தவத்தாற் போந்து திருமணஞ் சேவித்து உடனாக இறைவர் பாதம் சேர்த்தனர்.

கற்பனை :- (1) நீர்வளத்தாற் செழித்துக் காய்க்கும் நெற்பயிர் காடுபோன்றிருப்பது காவிரி நாட்டுச் சிறப்பு.(1828)

(2) மறையவர் முத்தீவளர்த்தல் குலமரபுக் கின்றிமையாதது. (1830)

(3) மறையவர் தத்தம் மனைவியாரோடு இருந்து முத்தீவளர்த்தல் வேண்டும்.

(4) மனைவியர் கணவருடன் முத்தீவளர்த்தல் இல்வாழ்க்கைக்குரிய தருமங்களுள் ஒன்று. அவர்கள் தம் கற்பினையும் அத்தீப்போலவே காத்து வளர்த்தல் முறையாகும்.(1830)

(5) மறைபயில்வார் அம்மறைப் பொருள்களைத் தம் வாழ்க்கை ஒழுக்கத்தில் விளக்குதல் வேண்டும். (1831)

(6) சிவனையும் சிவன் அடியாரையும் அருச்சிப்பதும் பணிவதும் என்ற இவை யிரண்டே வேதங்களின் உள்ளுறை பொருளாவன. (1832)

(7) அடியார் பூசையுள் அவர்களை அமுதூட்டுதல் சிறந்த பகுதி. (1833)

(8) ஆன்மார்த்தமாய்ச் சிவனைத் திருக்கோயிலில் ஆகம விதிப்படித் தம் பொருட்டு அருச்சிப்பதும் சிவதீக்கை பெற்ற மறையவர்களாகிய மகா சைவர்க்குரியது. (1836 - 1837)

(9) அரனை அன்புடனே பூசித்து அருச்சனை புரிவோர் அப்பூசை நிரம்பியும் அன்பினால் நிரம்பாது திருக்கோயில் வலம்வருதலும், திருமுன்னிருந்து மறைப் பொருளைத் தெளிவுற நோக்கித் திருவைந்தெழுத்தை விதிப்படி கணித்தலும் செய்வர். (1837)

(10) இறைவரது திருமேனிமேல் சுதைச்சிலம்பி விழப்பார்த்தவுடன் தமது இளங்குழவியின்மேற் சிலம்பி விழக்கண்டதுபோலப் பதைத்து வாய்நீர்பட ஊதித்துமிந்து அச்சிலம்பி பட்டதனாற் கொப்புள் கொள்ளாது விளக்கினர் திருநீலநக்கருடைய மனைவியார்; இது இறைவரிடத்து, (நூல் விதி கடந்து) தாயன்பு போன்ற அன்பின் செய்கை. (1839)

(11) திருமேனியின் மேல் வாய்நீர்பட ஊதித் துமிந்தசெயல் பூசை முறையில் அநுசிதமாம் எனக் கொண்டு மனைவியாரைக் கடிந்து நீத்தனர் திருநீலநக்கர். அடிமைத் திறத்தில் இதுவும் (நூல் விதிப்படி) அன்பினால் நிகழ்ந்த செய்கை, (1842)

(12) **திருத்தொண்டில் விதிகடந்த பேரன்பானிகழும் செயலும் விதிப்படி நிகழும் செயலும் முரண்பட்டபோது இறைவர் இரண்டினையும் ஏற்றவாறு அமர்ந்து அருள்வர். தம்மை மறந்து விதிகடந்து நிகழும் தொண்டின் செயலை மிகவும் உகப்பர்.** கண்ணப்பர் சிவகோசரியார் வரலாறுகள் சிந்திக்கத்தக்கன.(1845)

(13) திருவருள் சிறக்கும் பெரியாரது செயலைக் கேட்டபோது மன மகிழ்ந்து அவர்பா லன்புசேர நிகழ்வது பெரியோர்தன்மை. திருநாவுக்கரசர் ஆளுடைய பிள்ளையார் திறங்கேட்டவுடனே அவரைக்கண்டு வணங்கச்சென்ற திறம் கருதத் தக்கது. (1849)

(14) மதங்கசூளாமணியாருடன் திருநீலகண்ட யாழ்ப்பாணர் தம்மோடு வரத், திருக்கூட்டத்துடன் ஆளுடைய பிள்ளையார் தமது பதியில் எழுந்தருளியது கேட்டவுடனே தமது திருமனையையும் நகரையும் அலங்கரித்துச்சென்று எதிர் கொண்டு அழைத்துவந்து அமுதுசெய்வித்தனர் திருநீலநக்கர். குருபத்தியிலும் அடியார் பத்தியிலும் பயில்பவர் இவ்வொழுக்கத்தினைப் பின்பற்றுதல் நன்மை பயக்கும். (1850 - 1855)

(15) திருநீலகண்டப்பாணனாரும் பாடினியாரும் தமது மனையில் இரவு தங்குவதற்குத் தமது நடுமனைவேதியின் பாங்கர் இடங்கொடுத்தனர் திருமறைய வராகிய திருநீலநக்கர். அப்போது அவ்வேதியில் அருத செந்தீ வலஞ்சுழித்து ஓங்கி முன்னையினும் மிக்கு விளங்கித் திருவருட் பெருமையினை விளக்கிற்று. இது பாணனாருடைய சாதிகுலம்பற்றி யன்றி அன்பின் பெருமைபற்றி நிகழ்ந்தஅருட் செயலாகும். (1858)

(16) அடியார்களது அன்பின் பெருமை அவர்களை ஆண்ட பரமரைப் போற்றும் திருப்பதிகத்தினும் வைத்துப் பாராட்டத்தக்கது. (1859)

(17) குருவழிபாட்டிற் சிறக்க ஒழுகுவோர்க்கு அக்குரு வெளிப்பட்டுவருவர். பின் அவர் அக்குருவருளினாலே முத்தியடைகுவர். (1862 - 1864)

தலச்சிறப்பு:- திருச்சாத்தமங்கை - காவேரிக்குத் தென்கரையில் 18ஆவது தலம். **அயவந்தி** என்பது இத்தலத்துக்கோயிலின் பெயர். திருநீலநக்கநாயனாரது தலம் என்று அவர் பெருமைபற்றி உலகம் எடுத்துப் போற்றும் பெருமை பெற்றதென்று ஆளுடைய பிள்ளையாராற் றிருப்பதிகத்தினுள் வைத்துப் போற்றப்பட்டது. "**அயவந்தி**" என்ற பெயரால் அயன் (பரமன்) போற்றிய தலம் என்பது கருதப்படும். நாயனாரது திருவுருவமும் அவரது தேவியார் திருவுருவமும் அம்மை சந்நிதியில் தாபிக்கப்பட்டுள்ளன. திருநாவுக்கரசு நாயனாரும் ஆளுடைய பிள்ளையாரும் வணங்கிப்போற்றிய சிறப்புடையது. சுவாமி **அயவந்திநாதர்;** அம்மை - **மலர்க்கண்ணியம்மை**. பதிகம் 1.

இத்தலம், நன்னிலம் என்ற இருப்புப்பாதை நிலயத்தினின்றும் கிழக்கே மட்சாலையில் நான்கு நாழிகையளவில் உள்ள திருப்புகலூரை அடைந்து, அங்கிருந்து கிழக்கே மட்சாலைவழி மூன்று நாழிகையில் உள்ள திருமருகலினின்றும் வடகிழக்கே மட்சாலையில் ஒரு நாழிகையளவில் அரிசொல் ஆற்றுக்கு வடகரையில் உள்ளது. ஆற்றுக்குப் பாலம் உண்டு. திருச்செங்காட்டங்குடியி னின்றும் வடகிழக்கே மட்சாலை வழி இரண்டு நாழிகையிலும் இதனை அடையலாம்.



நமிநந்தியடிகள் நாயனார் (வைகாசி - பூசம்)

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

27. நமிநந்தியடிகணாயனார் புராணம் (32 திருப்பாடல்கள்)

தொகை

"அருநம்பி நமிநந்தி யடியார்க்கு மடியேன்"

- *திருத்தொண்டத்தொகை (4)*

வகை

"வேத மறிக்கரத் தாரூ ரரற்கு விளக்கு நெய்யைத்
தீது செறியமண் கையாட் டரவிடத் தெண்புனலால்
'ஏத முறுக வருக'ரென் றன்று விளக்கெரித்தான்
நாத னெழிலேமப் பேறூ ரதிப னமிநந்தியே"

- *திருத்தொண்டர் திருவந்தாதி-31*

விரி

1866. வையம் புரக்குந் தனிச்செங்கோல் வளவர் **பொன்னித் திருநாட்டிற்**
செய்ய கமலத் தடம்பணையுஞ் செழுநீர்த் தடமும் புடையுடைத் தாய்ப்
பொய்தீர் வாய்மை யருமறைநூல் **புரிந்த சீலப் புகழதனுல்**
எய்தும் பெருமை யெண்டிசையு மேறூ **ரேமப் பேறூரால்**. 1

புராணம்: நமிநந்தியடிகள் என்ற பெயருடைய அடியாரது சரிதவரலாறும் பண்பும் கூறும் பகுதி. இனி, நிறுத்தமுறையானே, திருநின்ற சருக்கத்தில் ஏழாவதாக நமிநந்தியடிகளது சரிதங்கூறத் தொடங்குகின்றுர். **அடிகள் - பெரியார்களைக் குறிக்கும் சிறப்புப் பெயர்.**

தொகை: அருநம்பியாகிய நமிநந்தி என்ற பெரியாரது அடியார்களுக்கும் நான் அடியேனுவேன். **அருநம்பி** - "தொண்டர்க்காணி" என்று, திருத்தொண்டின் பெருமையை அளவு காணுதற்குக் கருவியாயமையும் பண்புடைய பெரியார் எனத் திருநாவுக்கரசர் போற்றும் அருமைப்பாடு குறித்தது. நம்பி - ஆடவருட் சிறந்தவர். இவர்பெயர் "நம்பிநந்தி" என்றும் "நந்தி" என்றும் தேவாரத்தினுட் குறிக்கப்படுவது காண்க.

வகை : வேதம்...அரற்கு - வேத உருவமாகிய மான் கன்றைக் கையில் ஏந்திய திருவாரூர்ச் சிவபிரானுக்கு; விளக்கு...அட்டாவிட - விளக்குக்கு வேண்டிய நெய்யினைத் தீயநெறியிற்செல்லும் கீழ்களாகிய சமணர்கள் வார்க்காதுவிடவும்; ஏதம்...என்று - இந்த அமணர்கள் கெடுதியை யடைவாராக என்று எண்ணி; தெண்புனலால் - தெளிந்த நீரினல்; விளக்கு எரித்தான்...நமிநந்தியே - விளக்கு எரித்தவர் எமது தலைவராகிய அழகிய ஏமப்பேறூர் - அதிபராகிய நமிநந்தியேயாம்.

வேத மறி - மறி வேத உருவாகுதல் அதன் நாதச்சிறப்பால் என்க. வேதங்கள் போற்றும் மறி என்றலுமாம். **தீது செறி அமண்** - விளக்குக்கு நெய்வார்க்காது விடுத்ததோடு கொடுமையாகிய அவமான மொழிகளையும் சொல்லிய தீமையும் (*1875*), அக்காலத்தில்

தமிழ்நாடு முழுதும் பரவிச் சைவத்திற்குச் செய்த பல தீமைகளும் கூடியதனுல் **செறி** என்ருர். **கையர் - கீழ்கள். தெண்புனல் -** ஒரு விளக்கில் விட்டு எரித்துக்கண்டபோது அது அருளால் எரியும் தன்மையுடையது என்று தெளிந்துகொண்ட புனல். *(1879)*

'ஏத முறுக அருக'ரென்று - இங்கு **அருகர்** என்றது அவர்தம் கொள்கைகளேயும் அவர்கள் சைவத்திற்குச் செய்த தீமைகளின் தொகுதியினேயும் *(1883)*; என்று - என்று கவன்று *(1876)*. பிறன்கேடுசூழ்தல் சைவத்தின் இல்லே. வையகமுந் துயர் தீர்கவே என்று வாழ்த்துதல் சைவத் திறம். ஆயின் இங்கு "ஏதமுறுக அருகர்" என்ற தென்னேயோ? என்னின், அருகர் சைவத்துக்குச் செய்த தீமையை விலக்குமளவே என்க. பிற்சரித நிகழ்ச்சி காண்க. "குண்டர் அழிய" *(1883)* என்று விரி நூலுட் கூறியதும் இக்கருத்து. **அன்று** - அமணர் மதியாது அவமதியுரைத்த அப்பொழுதே - ஏகாரம் தொக்கது. ஏனேக்காலங்களேப் பிரித்தலின், பிரிநிலே. **நாதன்** - தலேவன். **விளக்கெரித்தான் - நமிநந்தியே** என்று முடிக்க. ஏகாரம் அசைநிலே.

பெயரும் பண்பும் தொகைநூல் உணர்த்தியது; ஊரும் பெயரும் பண்பும் திருத்தொண்டின்றிறமும் வகைநூல் வகுத்தோதிற்று. இவை விரிந்தபடி விரிநூலுட் கண்டு கொள்க.

விரி:- 1866. (இ-ள்.) வையம்...நாட்டில் - உலகத்தைக் காவல்புரியும் தனிச் செங்கோலேயுடைய சோழர்களுடைய காவிரித் திருநாட்டிலே; செய்ய...புடையுடைத்தாய் - செந்தாமரைத் தடங்களே யுடைய பெரிய வயல்களேயும் செழித்த நீர்த்தடாகங்களேயும் எப்பக்கங்களினும் கொண்டதாகி; பொய்தீர்...ஏறுஊர் - மலங்களே நீக்குந்தன்மையுடைய மெய்ப்பொருளேக் கூறும் அரிய வேதங்களிலும் அவற்றின் வழியாய நூல்களிலும் கூறும் விதிகளே யிடைவிடாது சிந்தித்துச் செய்யும் நல்லொழுக்க முடையோர்களின் புகழினுலே வருகின்ற பெருமையானது எல்லாத் திக்குக்களிலும் பரந்து செல்கின்ற ஊர்; ஏமப்பேறூர் - ஏமப்பேறூர் என்பதாம்; (ஆல் - அசை).

(வி-ரை.) வையம்...வளவர் - ஆசிரியரது காலத்தில் சோழ அரசரது ஆட்சி தலேசிறந்து பரந்து விளங்கியதனுல் **புரக்கும்** என நிகழ்காலத்தாற் கூறியதுமன்றி, இவ்வாறு சிறப்பித்தும் கூறினுர். **வையம் புரக்கும் -** என்பது அந்நாளில் நாடுகள் பலவற்றினும், கடல் கடந்தும் சென்ற சோழர் ஆட்சியின் பரப்புக் குறித்தது; **தனிச்செங்கோல் -** முடிமன்னராகித் தமக்கு எதிராவார் பிறரின்றி நின்ற தன்மை குறித்தது. "பற்றல ரிலாதாய்" *(577)*; "மாறின்றி மண்காக்கின்ற" *(578)*; என்று முன்னேநாட்சிறப்பும். "வையம் பொதுக்கடிந் தினிது காக்குங், கொற்றவனநபா யன்பொற் குடைநிழற் குளிர்வது" *(85)* என்று அந்நாளின் நிகழ்காலச் சிறப்பும் கூறியவை சிந்திக்க.

வளவர் திருநாடு என்றும், **பொன்னித் திருநாடு** என்றும் கூட்டுக. **வளவர் பொன்னி -** தனது பயன் முழுதும் சோழநாட்டுக்கே தந்து வளம், படுத்தலால் வளவர்க்குரிய பொன்னி என்றுரைக்கவும் நின்றது.


பணேயும் - தடமும் - புடையுடைத்து என்றது அந்நகரைச் சூழ்ந்து பக்கங்களில் வயல்களும் நீர்த்தடங்களும் உள்ள நீர்ச்சிறப்பும் நகரச் சிறப்பும் கூறியதாம்.




திருவாரூர் அரனெறி நமிநந்தியார்
நீரால் விளக்கெரித்த திருக்கோயில்
(பாட்டு 1879)



நமிநந்தி நாயனார்
இடது தோளில் எண்ணெய்க்
குடுக்கையுடன்
ஏமப்பேரூரில் உள்ள திருவுருவம்



சங்க தீர்த்தம்
தேவாசிரியனின் மேல்புறம்
இதன் நீர் கொண்டு விளக்கெரித்தது
(பாட்டு 1877-1878)



திருவாரூர் கமலாலயத் திருக்குளம் (பாட்டு 1874)
(சமணர் மனைகளிருந்த குளக்கரை. தண்டி. புரா. 4)

1867. மாலை பயிலுந் தோரணங்கண் மருங்கு பயிலு மணிமறுகு;
வேலை பயிலும் புனல்பருகு மேகம் பயிலு மாடங்கள்;
சோலை பயிலுங் குளிர்ந்தவிருள்; சுரும்பு பயிலு மரும்பூகங்;
காலை பயிலும் வேதவொலி; கழுநீர்பயிலுஞ் செழுநீர்ச்செய். 2

கமலத்தடம்பணை - தாமரைத்தடங்கள் வயல்களினிடையிடை உள்ளன என்பது. **செழுநீர்த்தடம்** - என்றது அவ்வயல்களுக்கு நீர்தர அமைந்த பெரியநீர், நிலைகள். **தடம்பணை** என மெல்லொற்றுக் கெடாது நின்றது இசையின்ப நோக்கி; இவ்வாறன்றித், **தடம்பணை** - இடமகன்ற பெருவயல்கள் என்றுகொண்டு, மேல் 1868இல் வரும் கருத்துக்குத் தோற்றுவாய் செய்தாங்கு வைத்துக் கமலங்கள் மலர்ந்துள்ள பெருவயல்கள் என்று கொண்டனர் முன் உரைகாரர். ஒரே கருத்து இருமுறை வரவுரைத்தல் சிறப்பிலதென்க. **புடை** - பக்கங்கள்; தன்னகத்தே என்றுரைப்பாருமுண்டு. **புடையுடைத்து** - பக்கங்களில் உடையது. "பணையுந் தடமும் புடைசூழு மொற்றியூர்" (சோமாசி - புரா - 6).

பொய்தீர் வாய்மை - பொய்யைப் போக்கும் மெய்ப்பொருள் - **பொய்** என்றது இங்குப் "பிறவிப்பணி"க்குக் காரணமாகிய மூலமலத்தைக் குறித்து நின்றது; "பொய்யிருள் கடிந்தமெய்ச் சுடரே" (திருவா) என்பது காண்க. **தீர்** - தீர்க்கும் - நீக்கும். இதற்குப் பொய்யிலாமெய்யர் என்றாற்போல விசேடியப் பொருளே கொண்டு மெய்மையான என்றுரைகொண்டனர் முன்னுரை ஆசிரியர்.

மறைநூல் - மறைகளும் அவற்றை உள்ளிட்ட விதிநூல்களும். **புரிந்த சீலம்** - இடைவிடாது கொண்டொழுகிய நல்லொழுக்கம்.

எண்திசையும் ஏறுதல் - எங்கும் சென்று பரவுதல். "ஏமப்பேறூர்" - (அரசுகள் - க்ஷேத் - கோவை - 3); இதனால் நாட்டுவளமும், நகரவளமும், குடிச்சிறப்பும் கூறியதுடன் அவ்வூர் சீலமறையவர் நிறைந்த நகரம் என்றும் கூறி நாயனரது சரிதத்துக்குத் தோற்றுவாய் செய்தார். 1

1867. (இ-ள்.) மணிமறுகு - அழகிய வீதிகளில்; மருங்கு - பக்கங்களில்; மாலைபயிலும் தோரணங்கள் பயிலும் - மாலைகள் மிக்குத் தொங்கவிடப்பெற்ற தோரணங்கள் மிக விளங்குவன; மாடங்கள் - மாடங்களின்மேல்; வேலை பயிலும் மேகங்கள் பயிலும் - கடலில் நிறைந்த நீரை உண்ணும் மேகங்கள் பொருந்தியுள்ளன; சோலை....இருள் - குளிர்ந்த இருண்டநிழல் சோலைகளிற் பொருந்தும்; சுரும்பு...பூகம் - அரிய கமுகுகளில் வண்டுகள் படிவன; காலை...ஒலி - உரிய காலங்களில் வேதவொலி மிக்கு இருப்பன; செழுநீர்ச்செய் கழுநீர் பயிலும் - செழிப்புடைய நீர்வயல்களில் கழுநீர் மலர்கள் மிக்குள்ளன;

(வி-ரை.) பயிலும் - என்பது இப்பாட்டில் மிக்கு விளக்கவுள்ள தன்மைகுறிக்கப் பன்முறையும் மிக்குப் பயின்றுவந்தது. சொற்பொருட் பின்வரு நிலை.

மாலை பயிலும் தோரணங்கள் - (மலர்) மாலைகள் ஓர் அளவுபட அறுத்துத் தோரணங்களில் தொங்கவிடுதல் அணிவகைகளுள் ஒன்று. "மாலை, துணையுற வறுத்துத்தூங்க நாற்றி" (முருகு); **மருங்கு** - தமது பக்கங்களில்; **பயிலும்** - பயில உள்ளன.

1868. பணையில் விளைந்த வெண்ணெல்லின் பரப்பு மீது படச்செய்ய
துணர்மென் கமலமிடையிடையே சுடர்விட் டெழுந்து தோன்றுவன
புணர்வெண் புரிநூ லவர்வேள்விக் களத்திற் புனைந்த வேதிகைமேன்
மணல்வெண் பரப்பி னிடையிடையே வளர்த்த செந்தீ மானுமால். 3

மாலை பயிலும் - வேலை பயிலும் - பயிலும் - பெயரெச்சங்கள்; இப்பாட்டில் ஏனைய ஆறு இடத்தும் பயிலும் என்பவை வினைமுற்றுக்கள். தோரணங்கள்; மேகம், இருள் சுரும்பு, வேதவொலி, கழுநீர் என்பன ஆறும் அம்முற்றுக்களுக்கு எழுவாய்கள். மறுகு, மாடங்கள், சோலை, பூகம், காலை, செய் என்னும் ஆறும் ஏழாம் வேற்றுமை யுருபு தொக்கு வந்தன.

மேகம் புனல் பருகுதல் - "முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்து" (திருவா - திருவெம்) என்றபடி கடல்நீர் ஞாயிற்றின் வெப்பத்தால் ஆவியாயெழுதலால் மேகமிகுவதனை இவ்வாறுரைப்பது ஒரு மரபு. நீர், ஆவியாய் மேகத்தைச் சார்தலும் மேகத்தாற் குறைக்கப்படுதலும் ஆகிய இருநிகழ்ச்சிகளுமுண்டு; "நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி தானல்கா தாகிவிடின்" (குறள்) என்பதும் அதன் உறையும் காண்க; இவ்வியல்பு கடல்வாழ் மாந்தரும் கப்பல் செலுத்துவோரும் கண்கூடாகக் கண்ட வுண்மை.

மேகம் பயிலும் மாடங்கள் - மாடங்கள் மிக உயர்ச்சி யுடையனவாயிருத்தலின் மேகங்கள் அவற்றில் தவழ்வன என்பது.

இருள் - இங்கு, நிழல் என்ற பொருளில் வந்தது.

காலை பயிலும் வேத ஒலி - காலை என்புழிப் பொழுது இடமாயிற்று; அதுகாலை நேரத்தை மாத்திரம் உணர்த்தாமல் காலப்பொதுமையை உணர்த்தி நின்றது; மற்றைக் காலங்களினும் வேதம் பயிலப்படுதலின்.

கழுநீர்ச்செய் - செய்களில் கழுநீர் பூக்க இருப்பது நீர்ச்சிறப்புக் குறிக்கும். 2

1868. (இ-ள்.) பணையில்...பட - வயல்களில் விளைந்த வெள்ளிய நெற்பயிர் பரந்த இடத்தின் மேலே தோன்றும்படி; செய்ய...தோன்றுவன - இடையிடையே ஒளிவிட்டு எழுந்து தோன்றுவனவாகிய சிவந்த பல மெல்லிதழ்களையுடைய தாமரைமலர்கள்; புணர்மென்...வேதிகைமேல் - பொருந்திய வெள்ளிய முப்புரிநூலணிந்த வேதியர்கள் வேள்விக்களத்தில் அழகுபட அமைத்த வேதிகையின் மேலே; மணல்...மானுமால் - வெள்ளிய மணற்பரப்பி னிடையிடையே வளர்த்த செந்தீயை ஒத்திருக்கும்.

(வி-ரை.) தோன்றுவன(வாகிய) - கமலங்கள் - செந்தீ மானும் என்று கூட்டி முடிக்க. **ஆல்** - அசை.

பணை - வயல். பண்ணை என்பது பணை என நின்றது.

வெண்ணெல்லின் பரப்பு - நெல் - விளைந்த நெற்பயிரினைக் குறித்தது. **பரப்பு** - பரந்த இடம். பரப்பியது போன்ற பயிர்.

பரப்பு மீது பட - பரப்பின் பயிரின்மேல் தோன்றும்படி. **படுதல்** - உண்டாகுதல் - தோன்றுதல் என்ற பொருளில் வந்தது. ஏற்பாடு என்புழிப்போல.

1869. பெருமை விளங்கு மப்பதியிற் பேணு நீற்றுச் **சைவநெறி**
யொருமை **நெறிவா ழந்தணர்த மோங்கு குலத்தி** னுள்வந்தார்
இருமை யுலகு மீசர்கழ லிறைஞ்சி யேத்தப் பெற்றதவத்
தருமை புரிவார் **நமிநந்தி** யடிக ளென்பா ராயினர். 4

துணைமென் கமலம் என்பது பாடமாயின் நெருங்கிய - பலவாகிய - என்க.

கமலம் நெல்லின் இடையிடையே தோன்றுவன - என்றது நெற்பயிரின் இடையிடை அங்கு முளைத்துப் பூக்கும் தாமரை மலர்களை; இது நீர்வளத்தாலாவது.

புணர் - பொருந்தும். பிரமசரிய முதலிய நிலைகளுக்கேற்றவாறு புணரும்.

வேள்விக் களம் - யாகஞ்செய்யுமிடம் - யாகசாலை.

வேதிகை - யாகத்தீவளர்க்கும் மேடை - யாகத்திண்ணை (*1064*) பார்க்க.

மணல் வெண் பரப்பு - தூய்மையின் பொருட்டு வெண்மணலைப் பரப்ப அதன் மேல் எரிவளர்த்தல் மரபு.

இடையிடை வளர்த்த செந்தீ - வேள்விக்களத்தில் பல திக்குக்களிலும் உரிய பல தெய்வங்களுக்கு ஆகுதி தருதற் பொருட்டுப் பலவாகத் தீ வளர்த்தல் முறையாதலின் **இடையிடையே வளர்த்த - தீ** என்றார்.

பணை = வேதிகைக்கும்; வெண்மை **நெல்லின் பரப்பு** = மணல் வெண்பரப்புக்கும்; **கமலம்** (மலர்) = செந்தீக்கும் ஆகத் தொடர்ந்து உரு பற்றி வந்த விரியுவமம். புராணமுடைய நாயனார் வேதியராதலானும், அந்நகர் மறையவர் ஊராதலானும், ஆங்குச்சூழும் இயற்கைப்பொருள்கள் இவ்வாறு ஆசிரியரது தெய்வக்கண்ணுக்குப் புலனாகின்றன. முன்னர் *866 - 867 - 1042*ல் உரைத்தவை பார்க்க. 3

1869. (இ-ள்.) பெருமை....பதியில் - பெருமையினால் விளங்கும் அந்தத்தலத்தில் பேணும்......வந்தார் - பேணுகின்ற திருநீற்றுச்சார்புடைய சைவ நெறியில் ஒருமைப்பாடுற்ற வழியில் வாழும் அந்தணர்களின் ஓங்கும் **குலத்தில்** வந்தவதரித்தாராய்; இருமை...அருமைபுரிவர் - இருமையாகிய உலகிலும் சிவபெருமான் திருவடிகளை வணங்கி வாழ்த்தும் பேறுபெற்ற தவத்தினை அரியவகையினால் இடைவிடாது செய்துவருபவர்; நமிநந்தியடிகள் என்பார் - நமிநந்தியடிகள் எனப்படுபவர்; ஆயினார் - உள்ளவரானார்.

(வி-ரை.) பேணும் நீற்றுச் சைவநெறி - பேணுதல் - காத்தல் - தவிராது காத்தல்; அடைந்தாரைக்காக்கும் நெறி என்றும், அடைந்தாரால் தவிராது காக்கப்படும் நெறி என்றும் உரைக்க நின்றது. உயர்ந்தோர் பேணும் நெறி என்றலுமாம். **நீற்றுச் சைவநெறி** - சைவநெறியின் சிறப்புரிமை திருநீறு என்பதாம். "திருநீற்றுத் தொண்டின் வழிபாட்டின்" (*610*), "திருநீற்றுச் சார்புடைய வெம்பெருமான்" (*649*), "கண்ணுதலான் திருநீற்றுச் சார்வினோர்" (திருஞான - புரா - *562*) முதலியவை பார்க்க. சைவநெறி - சைவதீக்கையுடைய என்ற குறிப்பும் தருவது.

1870. **வாய்மை மறைநூற் சீலத்தால் வளர்க்குஞ் செந்தீ யெனத்தகுவார்;**
தூய்மைத் திருநீற் றடைவேமெய்ப் பொருளென் றறியுந் துணிவினர்,
சாம கண்டர் செய்யகழல் வழிபட் டொழுகுந் தன்மைநிலை
யாம விரவும் பகலுமுணர் வொழியா வின்ப மெய்தினர். 5

சைவநெறி(யில்) ஒருமைநெறி வாழ் - என்க. ஒருமை நெறி என்றது அதனையே தமது உறுதியான குறிக்கோளாகக்கொண்டு ஒன்றுபட்ட எண்ணத்துடன் உணர்ந்து வாழ்தல், "இவர்தேவ ரவர்தேவ ரென்று சொல்லி யிரண்டாட்டா தொழிந்தீசன் றிறமே பேணி" (தேவா) : **ஒருமை வழி** - என்பதும் பாடம்.

நீற்றுச் சைவநெறி...அந்தணர்தம் ஓங்குகுலம் - என்றதனல் சிவாகம விதிப்படி சிவதீக்கைபெற்றுச் சைவ சித்தாந்த நெறியின் வழிவந்த மகா சைவராகிய அந்தணர் குலம் என்க. வேதநெறியினை மட்டும் உடம்பட்டுச் சிவாகமநெறியில் வாராத சார்பினரை வேறுபிரிக்க இவ்வாறு கூறினர். இவர்கள் சிவாகம விதிப்படி ஆன்மார்த்தமாகச் சிவபூசையியற்றற்குரியார் என்பதனையும் மேல் வலியுறுத்துதல் காண்க. திருநீலநக்கர் "மெய்த்த வாகம விதிவழி வேதகா ரணரை, நித்தல் பூசனை புரிந்தெழு நியமமுஞ் செய்"தனர் (1833) என்பதும் ஆண்டுரைத்தவையும் நினைவு கூர்க.

இருமையுலகும்....அருமைபுரிவார் - முன்னர்த் திருநீலநக்கருக்கு உரைத்தபடியே உரைத்துக்கொள்க. இருமையுலகு - இம்மையும் அம்மையும். இம்மை - பெத்தநிலை. அம்மை - முத்தநிலை. "இம்மையேதரும் சோறுங் கூறையும்....அம்மையே சிவலோக மாள்வதற்கு" (தேவா - நம்பி) **தவம்** - சிவபூசை. **தவத்து அருமைபுரிவார்** - அருமைத் தவத்தினை இடைவிடாது செய்வார். **அத்து** - சாரியை; அருமைத்தவம் புரிவார் என்க. **புரிதல்** - இடைவிடாது நினைத்தல் என்றுகொண்டு, ஏத்தும் பேறுபெற்ற தவத்தின் அருமையினை எப்போதும் எண்ணுவர் என்றலுமாம். "ஈசர்கழல் முறைபுரிந்த முன்னுணர்வு" (திருஞான - புரா - 68), **தவத்தின் அருமை**யாவது எளிதில் அடையப்படாமை. இறைஞ்சி ஏத்தப்பெறும் தவம் தமக்குக் கிடைத்தமையை எண்ணி மகிழ்வர் என்பது. "இறுமாந் திருப்பன்கொலோ வீசன் பல்கணத் தெண்ணப்பட்டு" (திருவங்கமாலை).

என்பார் - எனப்படுவார். படு விகுதி தொக்குநின்றது; "இல்வாழ்வா னென்பான்" (குறள்) என்புழிப்போல்.

ஆயினர் - அவர் உளரானர். உண்மை நெறியின் ஆக்கப்பாட்டினைக் கொண்டனர். 4

1870. (இ-ள்.) வாய்மை...தகுவார் - வாய்மை மொழியாகிய மறைகளிலும் அவற்றின் வழியில் வரும் நூல்களிலும் விதித்த ஒழுக்கத்தால் வளர்க்கப்படும் செந்தீயாவார் இவர் என்று சொல்லப்பெறும் தகுதியுடையவர்; தூய்மை......துணிவினர் - தூய திருநீற்றின்சார்பே மெய்ப்பொருளாவது என்று துணிந்து மேற்கொள்ளும் அறிவினையுடையார்; சாமகண்டர்...நிலை - சாமகண்டராகிய சிவபெருமானது சிவந்த கழல்களை வழிபட்டு ஒழுகும் தன்மை நிலையினை; யாம இரவும்...எய்தினர் - இரவின் யாமங்களிலும் பகலிலும் உணர்ச்சியிற் கொள்கின்ற இடைவிடாத இன்பத்தை யடைந்திருந்தனர்.

(வி-ரை.) வாய்மை மறைநூல் சீலம் - முன் "பொய்தீர் வாய்மை யருமறை நூல் புரிந்த சீலம்" (1866) என்றவிடத் துரைத்தவை பார்க்க.

சீலத்தால் வளர்க்கும் செந்தீ - சீலம் - இங்கு ஒழுக்கத்தின் நின்ற செயலுக்கு வந்தது. வளர்க்கும் - வளர்க்கப்படும். படுவிகுதி தொக்கு நின்றது.

செந்தீ எனத்தருவார் - தீயை இடைவிடாது விதிவிழி கைக்கொண்டு வளர்த்து வருதலால் இவரே அத்தீயாவார் என்று கூறுதல் தகும் என்ற தன்மையைப் பெற்றவர்.

தூய்மை......துணிவினுர் - தூய்மைத் திருநீறு - தூய்மை செய்யும் திருநீறு; "சுத்தம தாவது நீறு" (தேவா). தூய்மையுடைய என இயற்கையடைமொழி என்றலுமாம். **அடைவு** - சார்பு. **நீற்றடைவு** - நீற்றினையே உறுதிப்பொருள் என்று கொண்டொழுகுதல். "உறுவது நீற்றின் செல்வ மெனக்கொளு முள்ள மிக்கார்" (355). **அறியும் துணிவினுர்** - துணியும் அறிவினுர் என்க. அறிவுகொண்டு துணிவு பூண்டவர் என்றலுமாம்.

சாமகண்டர் - சிவபெருமான். சாமவேதம் அருளியவர். வேதங்களெல்லாவற்றையும் பாடியவராயினும் சாமத்தில் மிகவும் விருப்புடையவராதலின் சிறப்புப் பற்றி இவ்வாறு கூறுவர். "சாமகானப்பிரியன்" என்று வழங்குவது நாமமந்திரம். **சாமம்** - வேதப்பொதுமை யுணர்த்திற்று என்றலுமாம். **சாமம்** - இருள் என்றலுமாம்.

ஒழுகும் தன்மைநிலை - உணர்வு ஒழியா இன்பம் - வழிபடும்நிலை, ஒரு நாளில் ஒருமுறை - இருமுறை - மும்முறை - நான்குமுறை எனத் தீக்கையின் பேதம்பற்றி வகுக்கப்படும். "**ஒருக்காலுந்** திருக்கோயில் சூழாராகில், உண்பதன்முன் மலர் பறித்திட்டுண்ணு ராகில்" என்றும், "**காலையிலு மாலையிலுங்** கடவுளடி பணிந்து கசிந்த மனத்தவர் பயிலுங் கலயநல்லூர்காணே" என்றும், "**சந்தி மூன்றிலுந் தாபர நிறுத்திச்** சகளி செய்திறைஞ் சகத்தியர்" என்றும் வரும் வேதமொழிகள் காண்க. - ஆயின் அந்த வழிபாட்டுத் **தன்மை நிலைக்கு** இக்காலவரை யறையில்லை. அது எப்பொழுதும் மறவாதிருக்க வேண்டுமென்பது விதியாதலின் அவ்வுணர்வின் ஒழுக்கம் ஈண்டுக் குறிக்கப்பட்டது. - **உணர்வு ஒழியா இன்பம்** என்றது வழிபாட்டுத் தன்மையினை உணர்விற் கொண்டபோது உளதாகும் மகிழ்ச்சி.

யாம இரவும் பகலும் - துயில்வந்தெய்த அதனுல் வழிபாட்டு நினைவை யாவரும் மறக்கும் காலம் இரவாதலின் அப்போதும் இந்நாயனுர் அந்நிலையுணர்வுடனிருக்கும் சிறப்புப்பற்றி இரவை முன்வைத்தார். உம்மை இரண்டும் எண்ணின் கண்வந்தன. **யாம இரவு** = நள்ளிரவு என்றலுமாம். அபிடேகம் பெற்ற நிலையினையுடையோர்க்கு நடு இரவில் வழிபாட்டு விதியுண்மையும் கருதுக. **உணர்வு ஒழியா இன்பம்** - என்றதனுல் இரவின் எல்லா யாமங்களினும் இந்நிலையுணர் வின்பம் எய்தினுர் என்றுரைக்கப்பட்டது.

அருமறைநூல் புரிந்த சீலப்புகழ் - (1866) என்றதனுல் அவ்வூரந்தணர்களின் பொது வைதிக இயல்பும், **நீற்றுச் சைவநெறி - வாழந்தணர்தம் ஓங்குகுலம்** என்றதனுல் நாயனு ரவதரித்த குலத்தின் வைதிக சைவச் சிறப்பியல்பும் கூறிய ஆசிரியர், முன்பாட்டினும் இப்பாட்டினும் அக்குலத்து வந்த **நாயனுரது** வைதிக சைவச் சிறப்புடனே மிக்க சிவஞானச் சிறப்பை விளக்கியதோடு சரித நிகழ்ச்சிக்குத் தோற்றுவாயும் செய்த நயம் கண்டுகொள்க.

1871. அவ்வூர் நின்றுந் திருவாரூ ரதனை யடைவா **ரடியார்மேல்**
வெவ்வூ றகற்றும் பெருமான்றன் விரைசூழ் மலர்த்தாள் **பணிவுறுவ**
தெவ்வூ தியமு மெனக்கொள்ளுமெண்ண முடையார் பலநாளுந்
தெவ்வூ ரெரித்த வரைச்சிலையார் திருப்பா தங்கள் வணங்கினார். 6

வைதிக ஒழுக்கம் அவ்வூர் **விளைநிலம்** காட்டவும், **ஊர்** அச்சீலப்புகழ் ஏறவும், **ஊரவர்** காலங்களில் வேதவொலி பயிலவும், குலத்தவர் நீற்றுச் சைவநெறி யொருமை நெறிவாழவும், ஆக இத்தகைய அமைப்புக்களி னிடையே வந்தவதரித்தவர் நாயனார் என்ற நயமும் காண்க. இப்பாட்டிற் கூறிய பெருமைபற்றித் "தாவியவ னுடனிருந்துங் காணாத தற்பரனை, யாவிதனி லஞ்சொடுக்கி யங்கணனென் றுதரிக்கும், நாவியல்சீர் நமிநந்தி யடிகளுக்கு நல்குமவன், கோவியலும் பூவெழுகோற் கோளிலியெம் பெருமானே" என்ற ஆளுடைய பிள்ளையார் திருவாக்கும் கருதுக. 5

1871. (இ-ள்.)அடியார்மேல்...எண்ணமுடையார் - அடியார்மேல் வரும் வெவ்விய வற்றினை நீக்கும் சிவபெருமானுடைய மணங்கமழு மலர்போன்ற பாதங்களைப் பணியும் தன்மை பெறுவதுவே எல்லாவூதியமும் ஆகும் என்று கொள்ளும் எண்ணமுடைய அந்நாயனார்; அவ்வூர்நின்றும்...அடைவார் - அந்த ஏமப்பேறூரினின்றும் திருவாரூரை அடைவாராகி; பலநாளும்...வணங்கினார் - பகைவர்களுடைய மூன்றூர்களையும் எரித்த மலையாகிய வில்லையேந்திய சிவபெருமானது திருப்பாதங்களைப் பலநாள்களிலும் வணங்கினார்.

(வி-ரை.) எண்ணமுடையார் - அடைவார் - வணங்கினார் என்பது வினை முடிபு.

அவ்வூர் - தாமிருந்த முன் சொல்லிய (*1866*) ஏமப்பேறூராகிய அந்த ஊர். அகரம் முன்னறிசுட்டு. **நின்றும்** - நீக்கப் பொருளில் வந்த ஐந்தாவதன் சொல்லுருபு. **நின்றும்** - முன்சொல்லியபடி "வழிபட்டொழுகும் தன்மைநிலை யாம இரவும் பகலுமுணர் வொழியா வின்ப மெய்திய" (*1870*) நிலைபெற்றிருந்தும் அதனாலன்பு நிரம்பாமல் என்ற குறிப்புப்படவும் நின்றது. "பூசனை நியதியை விதியினால் முடித்து - நாய னுரையு மருச்சனை புரிந்திட நயந்தார்" (*1834*) என்றும், "பூசனை நிரம்பியு மன்பினானிரம்பார்" (*1837*) என்றும் வந்தமை காண்க.

அடியார்மேல் வெவ்வூறு - அடியார் மேலதாய் நின்ற கொடிய ஆணவ மலமாகிய பிணி. பிறவிக்கு வித்தாய் நின்று ஊறுகள் எல்லாவற்றுக்கும் காரணமாய உடம்பை மீளமீளத் தருதற்கேதுவாதலின் ஆணவம் **வெவ்வூறு** எனப்பட்டது.

"ஞானத் திரளாய் நின்ற பெருமா னல்ல வடியார்மேல், ஊனத் திரளை நீக்கு மதுவு முண்மைப் பொருள்போலும்" (பிள்: திரு அண்ணாமலை). "சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடனாதல்" (சிவஞானபோதம் - 9 - வெண்) என்றபடி "ஏகனாகி இறைபணி நிற்பாராகி" அடைந்தார்க்குப் பாசநீக்கம் செய்பவன் என்ற "**துணிவினா**"ராதலின் (*1870*) பிறவி வாராமற் செய்யும் திருவாரூர்ப் பெருமானை அடைவாராயினர் என்பது. "**மலர்த்தாள் பணிவுறுவது எவ்வூதியமும்**" என்றது ஏகனாகி இறைபணிநிற்கும் தன்மை குறித்தது. முன்னர் இரவும்

1872. செம்பொற் புற்றின் மாணிக்கச் செழுஞ்சோ **தியைநேர் தொழும்சீலந்**
தம்பற் ருக நினைந், தணைந்து,தாழ்ந்து, பணிந்து, வாழ்ந்து, போந்,
தம்பொற் புரிசைத் திருமுன்றி லணைவார் பாங்கோ **ரரனெறியில்**
நம்பர்க் கிடமாங் கோயிலினுட் புக்கு வணங்க நண்ணினார். 7

பகலும் வழிபாட்டுத் தன்மைநிலை உணர்வில் ஒழியா இன்ப மெய்திய தன்மையினால் இக்குறிப்புத் திருவருளாற் கூடிற்று என்பதாம்.

பலநாளும் - வணங்கினர் - ஏமப்பேறூரினின்றும் சென்று சென்று பலநாளும் திருவாரூர்ப்பெருமானை வணங்கி வரும் செயலை மேற்கொண்டனர். "செழுந்தண் பதியி னிடையப்பாற் செல்லிற் செல்லும் பொழுதென்ன, ஒழிந்து" (*1874*), "இரவு சென்று தம்பதியி னெய்தி மனைபுக்கு" (*1881*), "பண்டுபோலப் பல நாளும் பயிலும் பணிசெய்து" (*1883*), "தொழுது தம்மூர் மருங்கணைந்து" (*1888*), "விடியல் விரைவோடு, நாதனார்தந் திருவாரூர் புகுத" (*1893*) "அருளாற் குடியுந் திருவா ரூரகத்துப் புகுந்து வாழ்வார்" (*1895*) என்று மேல் வருவனவும், பிறவும் சரித நிகழ்ச்சியும் காண்க.

தெவ்வூர் எரித்த - தெவ் - பகைவர் - திரிபுரவாணர். **ஊர்** - முப்புரம். "முப்புர மாவது மும்மல காரியம்" (திருமந்) என்றபடி புரமெரித்த அவரே மலநாசம் செய்து வெவ்வூறு அகற்றவல்ல பெருமான் என்பது குறிப்பு.

எவ்வூதியமும் - எல்லாப் பேறுகளும், "முதல்வர் நாமத் தஞ் செழுத்துங், கேளும் பொருளு முணர்வுமாம் பரிசு வாய்ப்பக் கெழுமினார்" (*1711*) என்றநிலை கருதுக. முற்றும்மை இதனின் ஊதியம் வேறு பிறவில்லை என்பது குறித்தது.

பணிவுறுதல் - என்பதும் பாடம். *6*

1872. (இ-ள்.) செம்பொன்....சோதியை - செம்பொன் போன்ற அழகிய புற்றினிடமாக எழுந்தருளியுள்ள இயற்கை ஒளியுள்ள மாணிக்க வண்ணச் செழுஞ்சோதியாகிய சிவபெருமானை; நேர்தொழும்...நினைந்து - நேரேகண்டு வழிபடும் நல்லொழுக்கமே தமக்குறுதியாவது என்று நினைந்து; அணைந்து.....நண்ணினார் - சார்ந்து, நிலம் பொருந்த வீழ்ந்து, வணங்கி அதனால் வாழ்வடைந்து, வெளிப்போந்து பொன் மதிற்றிருமுற்றத்தில் தனியிடமாகிய அரனெறி என்னும் தலத்தில் சிவபெருமானுக்கு இடமாகிய கோயிலினுள்ளே புகுந்து வணங்குதற்குச் சேர்ந்தனர்.

(வி-ரை.) புற்றின் மாணிக்கச் செழுஞ் *சோதி* - புற்றிடங் கொண்டெழுந் தருளிய இறைவர். திருவாரூர்த் திருமூலத்தானத்தில் எழுந்தருளியுள்ள வன்மீகநாதர். புற்றில் அரவும், அரவின் மணியும் மணியிற் சோதியும், உள்ளது இயல்பாகும்; இங்குப் புற்றாகிய இருப்பிடமும், அதனுள்ளே அருட்குறியாகிய திருமேனியும்;அதனுள் அருள் ஒளிப்பிழம்பாய் விளங்கும் இறைவருமாகக் கண்டுகொள்ள வைத்த உருவக நயம் காண்க. இவற்றை முறையே ஆசனம், மூர்த்தி, மூர்த்திமான் என்று சிவாகமங்கள் வகுக்கும்.

நேர்தொழும் *சீலம்* - முன்னர் உணர்வு வகையால் இரவும் - பகலும் வழிபடுந் தன்மையின் இன்பமெய்தியதன்றி நேரே கரணங்களாலும் தொழப் பெறும் சீலம்.

1873. **நண்ணி** யிறைஞ்சி யன்பிஞ னயப்புற் றெழுந்த காதலுடன்
அண்ண லாரைப் பணிந்தெழுவா, **ரடுத்த நிலைமைக் குறிப்பிஞற்**
பண்ணுந் **தொண்டின் பாங்குபல பயின்று பரவி விரவுவார்,**
எண்ணி றீப மேற்றுவதற் கெடுத்த கருத்தி னிசைந்தெழுவார், 8

நேரேயும் - என்று இறந்தது தழுவிய எச்சவும்மை தொக்கது.

தம்பற்ருக - தமக்குறுதிதரும் பற்றுக் கோடாக.

பற்று - நலம்பெறச் சாரும் உறுதிப்பொருள். "எவ்வூதியமும்" என முன்பாட்டிற் கூறியது.

நினைந்து....போந்து - "எண்ணம்" முற்றிச் செயலாய் விளைந்து நிகழ்ந்து முற்றிய வொவ்வொர் படியினையும் தனித்தனி வினையெச்சங்களாற் கூறிக்காட்டிய நயம் காண்க. "புனிதரரு, ணினைந்துருகி விழுந்தெழுந்து நிறைந்துமலர்ந் தொழியாத, தனம் பெரிதும் பெற்றுவந்த வறியோன்போல் மனந்தழைத்தார்" (*1461*) என்ற அரசுகள் புராணமும் ஆண்டுரைத்தவையும் பார்க்க.

போந்து - திருமூலத்தானநாதர் சந்நிதியினின்றும் வெளிப்போந்து.

அம்பொற் புரிசைத் திருமுன்றில் - அழகிய பொன்மதில் சூழ்ந்த திருமாளிகையின் முன்னிடத்தில்.

பாங்கு ஓர் அரனெறியில் - திருமுற்றத்தின் ஒரு பக்கத்தில் உள்ள **அரனெறி** என்னும் தனித் தலத்தில்.

நம்பர்க் கிடமாம் கோயில் - நம்பர் விளங்க வீற்றிருத்தற் கிடமாகிய திருக்கோயில். இது திருவாரூர்ப் பெருங்கோயிலினுள் புறத்திருமுற்றத்தில் தென்கீழ்திசையில் உள்ள தனிக்கோயில். பதிகக் குறிப்புக்கள் III - தொகுதி பாகம் - (I) பார்க்க. *7*

1873. (இ-ள்.) நண்ணி...பணிந்தெழுவார் - பொருந்தி வணங்கி அன்பு காரணமாக ஆசை பொருந்த மேல் எழுந்த காதலோடும் பெருமையுடைய சிவபெருமானைப் பணிந்து எழுவார்; அடுத்தநிலைமைக் குறிப்பிஞல் - அடுத்து வரும் நிகழ்ச்சிக்காக அருள் வழியே மனத்திலெழுந்த குறிப்பிஞலே; பண்ணும்...விரவுவார் - செய்யும் திருத்தொண்டின் பாங்கு பலவும் பயிலச் செய்து துதித்துஅங்குத் தங்குபவராகி; எண்ணில்....எழுவார் - அளவில்லாத விளக்குகளை ஏற்றுவதற்கு மனத்துள் எழுந்த கருத்துக்கிசைந்து அது செய்ய ஏற்றெழுவாராகி;

(வி-ரை.) அன்பு - நயப்பு - காதல் - என்பன அன்பு மேன்மேல் முறுகி விளைந்து முற்றும் நிலைகள். **நயப்பு** - ஆசை; **காதல்** - நாயகன் நாயகிகளிடை வரும் அன்பு.

அடுத்த நிலைமைக் குறிப்பிஞல் - மேல்வரும் நிகழ்ச்சியின் பொருட்டுத் திருவருளால் நாயனரது திருவுள்ளத்துத் தோன்றிய குறிப்பிஞலே. இக்குறிப்பாவது, பலநாளும் வந்து

1874. எழுந்த பொழுது பகற்பொழுதங் **கிறங்கு மாலை யெய்து**தலுஞ்
செழுந்தண் பதியினிடை **யப்பாற்செல்லிற் செல்லும் பொழுதென்ன**
ஒழிந்தங் **கணைந்தோர் மனையில்விளக் குறுநெய் வேண்டியுள்புகலும்**
அழிந்த நிலைமை யமணர்மனை யாயிற் றங்க ணவருரைப்பார்; 9

திருவாரூரிற் **புற்றிடங் கொண்ட புராதனரை வணங்கிச்** சென்றவர் அன்று மிக்க அன்பு மூளத் **தாழ்ந்து பணிந்து வாழ்ந்து போந்தனர்;** பின்னர், அன்று சிறப்பாக **அரனெறியிற் புக்கு** வணங்கினர்; அவ்வணக்கம் முன்னரெல்லாம் காணுத அன்பு மூண்டெழுந்த நயப்பினை விளைக்க; **அது ஆருகக் காதல்** பெருகிற்று; அஃது அவ்வணக்கத்தோ டமையாது **தொண்டின் பாங்கு பல**வும் பயின்று பரவி விரவச் செய்தது; பொழுது செல்லச் செல்லத் திரு **விளக்கு** எரிக்கும் கருத்தினை விளைத்தது; தம் ஊர் சென்றுவரின் பொழுது செல்லும் எனக் கொண்டு அவ்வூரில் **விளக்கு நெய்** தேடச் செய்தது; என்றிவ்வாறு இவை ஒன்றின்மே லொன்ருக விளைந்ததன் காரணம் அவரையும் அறியாது மேற்சரித நிகழ்ச்சியின் பொருட்டே போந்த அருட்குறிப்பு. **அடுத்த நிலைமை** - மேற்சரித நிகழ்ச்சி. **குறிப்பு** - அருள் காரணமாக வரும் குறிப்பு.

தொண்டின் பாங்கு பல - திருவலகு, திருமாலை, திருக்கோயிற்பணி முதலாயின.

எண்ணில் தீபம் ஏற்றுவதற்கு - எண்ணில் - பல. **தீபம் ஏற்றுதல்** - ஞானத்திற் கேது வென்பர், "விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞான மாகும்" (தேவா). எண் நில் என்று கொண்டு அடியார் கருத்தில் நிற்கின்ற என்றலுமாம்.

கருத்தின் இசைந்து எழுவார் - கருத்தினுட் குறிப்புத் தோன்றிற்று; அதற்கு மனம் இசைந்தது; அதற்கு உடன் முயற்சி ஒருப்பட்டு எழுவாராகி.

இசைந்தெழுந்தார் - என்பதும் பாடம். *8*

1874. (இ-ள்.) எழுந்த...எய்துதலும் - அவ்வாறு துணிந்தெழுந்த நேரமானது அங்குப் பொழுது இறங்கும் மாலை நேரமாகச் சேரலும்; செழுந்தண்.....ஒழிந்து - செழிப்புடைய தண்ணிய தமது பதியின்கண் சேர்ந்து திரும்பும்படி சென்ருல்பொழுது சென்றுவிடுமென்று கருதிஅதனைவிட்டு; அங்கு அணைந்து...உள்புகலும் - அங்கே அணைந்து விளக்குக்கு நெய்பெறுதலை வேண்டி ஒரு மனையினுள் புகுதலும்; அழிந்த.....ஆயிற்று - அது உண்மைநிலை யழிந்த அமணரது மனையாயிருந்தது; அங்கண் அவர் உரைப்பார் - அவ்விடத்தில் அவர்கள் சொல்வாராகி.

(வி-ரை.) எழுந்த பொழுது - அவ்வாறு செயல் மேற் கொண்டெழுந்த நேரம்.

பகற்பொழுது அங்கு இறங்கு மாலை யெய்துதல் - பகற்பொழுதாகிய நாட்கூறு ஞாயிறு மேற்றிசையில் இறங்கும் மாலைப் பொழுதாகப் பொருந்துதல்.

செழுந்தண் பதியினிடை அப்பால் செல்லில் - விளக்கு நெய்வேண்டித் தமது ஊராகிய ஏமப்பேறூரின்கண் போய்வருவதற்குச் சென்ருல்.

1875. "கையில் விளங்கு கனலுடையார் தமக்கு விளக்கு மிகைகாணும்;
நெய்யிங் கில்லை; விளக்கெரிப்பீ ராகி னீரை முகந்தெரித்தல்
செய்யு"மென்றுதிருத்தொண்டர்க்குரைத்தார்தெளியா"**தொருபொருளே
பொய்யுமெய்யு மா**" மென்னும்பொருண் மேற்கொள்ளும் **புரைநெறியார்**. 10

பொழுது செல்லும் - பகற்பொழுது போய்விடும்; எனவே விளக்கு எரிக்கும் நேரம் கழிந்துபோகுமாதலின். **ஒழிந்து** - அவ்வாறு தம் பதியிற் சென்றுவரும் கருத்தினைவிட்டு.

அங்கு அணைந்து - அவ்வூரில் (திருவாரூரில்) வெளியே அணைந்து. **ஓர் மனையில்** - திருக்கோயிலின் மேல்புறம் கமலாலயக் கரையினைச் சுற்றிலும் மனைகள் உள்ளனவாக அவற்றுள் ஓர் மனையில் என்க. அந்த மனைகளே திருக்கோயிலினை அடுத்துள்ளன. அந்நாளில் அங்குத் திருக்குளத்தின் இடங்களையும் தூர்த்து இடையூறு விளைத்து அமணர்கள் தங்கள் மனைகளை அமைத்து நின்றனர் என்றும், அரசனால் தண்டிக்கப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டனர் என்றும் தண்டியடிகள் புராணத்தால் அறிகின்றோம். *1883*ம் பார்க்க.

நெய்வேண்டி உள்புகலும் - விரும்பி மனையினுள்ளே புகுதலும் என்க. அமணரிடம் அடியார் வேண்டினார் என்று கூற இசையாது **புகுதலை** மட்டும்கூறி, மேல்வரும் பாட்டிற் கூறுமாறு அவர்களது மாறுபட்ட விடையினால் இவர் அவர்கள்பால் வேண்டிக்கொண்ட செய்தியை உய்த்துணர வைத்தார். இது ஆசிரியரது அன்பின் மரபு.

அழிந்த நிலைமை அமணர் மனை ஆயிற்று - **அழிந்த நிலைமை** - உண்மையினின்றும் பிறழ்ந்த நிலையுள்ள என்றபடி. கமலாலயக் குளக்கரை யழிந்த நிலையில் அங்கு அமைக்கப்பட்ட மனை என்பதும் குறிப்பு. **ஆயிற்று** - ஆயிற்றாதலின், ஆயிட்டு என்பது ஆயிற்றெனப் படம் பிறழ்ந்ததோ என்பது ஐயப்பாடு. **ஆயிட்டு** என்பதற்கு ஆயிடலான் என்று ஆசிரியர் மாதவச் சிவஞான யோகிகள் பொருள்கொண்டனர்.

அங்கண் - அவ்விடத்து. அப்போது என்றலுமாம்.

உரைப்பார் - முற்றெச்சம். உரைப்பார் (ஆகி) - என்று உரைத்தார் என மேல்வரும் பாட்டுடன் முடிந்தது. *9*

1875. (இ-ள்.) கையில்....காணும் - கையில் விளங்கும் கனலை ஏந்திய பெருமானுக்கு விளக்கு மிகையாகும்; நெய் இங்கு இல்லை - விளக்குக்கு நெய் இங்கு இல்லை; விளக்கு...செய்யும்.....உரைத்தார் - நீர் விளக்கு எரிப்பீராஞல் நீரை முகந்து எரிப்பீராக என்று திருத்தொண்டர்க்கு உரைத்தனர்; தெளியாது...புரை நெறியார் - தெளிவில்லாமல் ஒருபொருளே பொய்யும் மெய்யுமாகும் என்ற கொள்கை மேற் கொண்டொழுகுகின்ற குற்றமுள்ள நெறியினையுடைய அவ்வமணர்.

இந்த மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

(வி-ரை) இப்பாட்டினால் "அருகர் மதியாது உரைத்த உரை" (*1876*) விரித்துக் கூறப்பட்டது.

1876. அருகர் மதியா துரைத்தவுரை யாற்ற ராகி யப்பொழுதே
பெருக மனத்தில் வருத்தமுடன் பெயர்ந்து போந்துபிறை யணிந்த
முருகு விரியு மலர்க்கொன்றை முடியார் கோயின் முன்னெய்தி
யுருகு மன்பர் பணிந்துவிழ, வொருவாக்கெழுந்த துயர்விசும்பில், 11

கையில்...மிகை காணும் - இது அந்த அமணர் சொல்லிய சைவத் தெய்வ அவமதிப்புச் சொல்.

விளக் கெரிப்பீராகில்...செய்யும் - என்றது அவர்கள் அடியாரைச் சொல்லிய அவமதிப்புச் சொல்.

நெய் இங்கு இல்லை - என்பது பொய்ச்சொல்.

திருத்தொண்டர்க்கு உரைத்தார் - தொண்டரின் பெருமை தேறாது என்பதும், தொண்டர்பால் சொல்லியது அவருள்ளத்து நிறைந்த தலைவர்க்குச் சொல்லியதாகும் என்பதும் குறிக்கத் **தொண்டர்க்கு** என்றார். இதுபற்றியே இறைவரது அருள்வாக்கு எழுந்த தொடர்ச்சியினை மேற்பாட்டிற் காண்க. **தெளியாது** என்றதும் இக்குறிப்பு. **தெளியாது - உரைத்தார்** என்று கூட்டி உரைக்கவும் நின்றது.

தெளியாது...புரைநெறி - இது சமண சமயத்தின் "அத்தி நாத்தி" என்னும் கொள்கை. **ஒருபொருளே பொய்யு மெய்யும் ஆம்** - "அஸ்தி - நாஸ்தி" என்பது அவர்களது மந்திரம். "மெய் யடுபவர் பொருளை யத்தி நாத்தியென் றெழுதி" (திருஞான-புரா-*814*) என்பது காண்க. அஸ்தி - உண்டு; நாஸ்தி - இல்லை; ஒரு கடவுள் உண்டு இல்லை என்பது. சிவஞானபாடியம் - அவையடக்கம் - ஆருகதமதம் பார்க்க. கடவுளை மாத்திரம் உண்டு இல்லை என்பதன்று, அவர்களது பொருள்கள் ஏழும் அத்தகையனவே என்பது அவர் கொள்கை. தெளியாது - உண்மைப் பொருளின் தெளிவுபெறாது. **புரைநெறியார்** - குற்றமுள்ள நெறியில் நிற்கும் சமணர்கள்.

விளக்குமிகை என்றவர்கள் அதற்கு மாறுக **விளக்கெரிப்பீர்** என்று முன்பின் மாறுபடக் கூறுதலும், எரியும் விளக்கினை அவிக்கும் தன்மை கொண்ட நீரினால் விளக்கெரிப்பீர் என்று முரண்படக் கூறுதலும், அவர்களது, "ஒரு பொருளே பொய்யு மெய்யுமாம்" என்னும் புரை நெறியினைக் காட்டுவன என்ற குறிப்பும் காண்க. புரைநெறி மேற்கொள்பவர் ஒழுக்கெல்லாம் அவ்வாறேயாம் என்பதும் குறிப்பு.

ஒரு **பொருளை** - என்பதும் பாடம். *10*

1876. (இ-ள்.) அருகர்....ஆகி - சமணர் மதியாமற் சொன்ன சொல்லைக் கேட்டுத் தரியாதவராகி; அப்பொழுதே.....போந்து - அப்போதே மனத்திற்பெருகும் வருத்தத்துடன் அங்கு நின்றும் நீங்கிப்போய்; பிறையணிந்த.... எய்தி - பிறையைச் சூடியமணம்வீசும் கொன்றைப் பூவையணிந்த முடியினையுடையாரது திருக்கோயில் முன்புசேர்ந்து; உருகும் அன்பர் பணிந்து விழ - மனம் உருகும் அன்பர் பணிந்து வீழ்ந்தாராக; ஒரு வாக்கு உயர் விசும்பில் எழுந்தது - உயர்ந்த ஆகாயத்தினின்றும் ஒரு திருவாக்கு உதித்தது.

(வி-ரை.) மதியாது உரைத்த உரை - அவமதிப்பான உரை; மதியாமையே அவமதிப்பாம் என்பதுமமையும்.

விளக்கு நெய் வேண்டிய அடியார்க்கு அதுதர இசையாராயின், அமணர் அவ்வாறே, யாம் தரமாட்டோம்; அது எமது சமயக்கொள்கைக்கு இழுக்கு, என்று கூறி அமைந்திருந்தால் அதுவே சாலும். அவ்வாறமையாது, மேற்கூறியபடி நிந்தையும் அவமதிப்பும் செய்தது மிகைபட்ட செய்கையாம். தண்டியடிகள் புராணமும், பிறவும் பார்க்க.

ஆற்றுராகி - சைவத் தெய்வநிந்தையும் அடியாரை அவமதிப்பும் செய்ததனைக் கேட்கத் தரியாராய்; தம்மை அவமதித்தார் என்பதன்று; "**மறைக னிந்தனை சைவ நிந்தனை பொறுமனமும்**" என்று நந்திபெருமான் வரங்கேட்டமை காண்க. தம்மை அவமதிப்பதனை ஆற்றுமை ஆணவத்தின் வாய்ப்பட்டுச் சான்றோரால் விலக்கப்படுவது.

மனதில் பெருக வருத்தமுடன் - என்க. தம்மால் அதற்குத் தீர்வு ஒன்றும் செய்யவியலாமை வருத்தத்திற்குக் காரணம்.

அப்பொழுதே - பெயர்ந்து - போந்து - சிவ நிந்தனை செய்தாரைத் தண்டித்தல் வேண்டும்; (சத்திநாயனுர், விறன்மிண்டநாயனுர் முதலியோர் வரலாறுகள் பார்க்க.) அஃதியலாதபோது சிவநாமஞ் சொல்லிச் செவிபொத்திக்கொண்டு அவ்விடம் விட்டுப் பெயர்ந்துபோதல் வேண்டும் என்பது விதி. **அப்பொழுதே** - ஒருகணமுந் தரிக்கலாற்றுமை குறிப்பு.

கோயில் முன் எய்திப் - பணிந்து விழ - சிவபெருமானே இதற்குத் தீர்வு தரவல்லவர் என்ற கருத்தினுல் கோயிலுக்குச் சென்றனர். தீர்வாவது - அமணரது தீய சொல்லுக்குத் தண்டனையும், விளக்கு ஏற்றக்கொண்ட தமது கருத்து நிறைவேறும் வழியினையும் வகுத்தலாம்; இவற்றுள், கருத்து முடித்தல் மேல்வரும் பாட்டிலும், தண்டம் வகுத்தல் 1883லும் கூறுவார்.

பணிந்து விழுதல் - முறைப்படும் வகையால் அடி வீழ்தல்.

விழ - எழுந்து - விழுந்ததுவே எழுந்ததற்குக் காரணம் என்பது குறிப்பு. முறைப்பாடும் தீர்வும் இடையீடின்றி உடன்தொடர்ந்து நிகழ்ந்த விரைவும் குறிப்பு. கீழேவிழ - மேலே எழுந்தது என்ற நயமும் காண்க.

உயர் விசும்பில் - அசரீரி என்று சொல்லும் இறைவனது ஞாஞகாயத் திருமேனியினின்றும். **உயர்** - உயர்வுடைய. சடமாகிய பூதாகாயத்துக்கு வேருய் அதனின் உயர்ந்த என்க.

ஒரு வாக்கு - ஒப்பற்ற அருளாகிய திருவாக்கு. வாக்கினது விவரம் மேல் வரும் பாட்டிற் காண்க. ***11***

1877. (இ-ள்.) வந்த...என - "வந்த கவலையை மாற்றிக் கொள்ளும்; இனி இடையறுது திருவிளக்குப் பணியைச் செய்வதற்குப் பக்கத்தில் உள்ள இந்தக் குளத்தின் நீரினை முகந்து கொண்டுவந்து விளக்கேற்றுவாயாக" என்று; அந்தி...கேளா - அந்தியிற் ருேன்றும்

1877. "வந்த கவலை மாற்றுமினி மாற விளக்குப் பணிமாற
இந்த மருங்கிற் குளத்துநீர் முகந்து கொடுவந் தேற்று"மென
அந்தி மதிய மணிந்தபிரா னருளா லெழுந்த மொழிகேளாச்
சிந்தை மகிழ்ந்து **நமிநந்தி யடிகள் செய்வ தறிந்திலரால்.** 12

பிறையினைச் சூடிய சிவபெருமானது திருவருளால் எழுந்த மொழியினைக் கேட்டு; சிந்தை...அறிந்திலரால் - நமிநந்தியடிகள் மனமகிழ்ந்து செய்வதறியாமல் நின்றனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண் டுரைக்க நின்றன.

(வி-ரை.) - வந்த கவலை - அமணரது அவமதிப்பால் வந்த; மனக் கருத்து முற்றுறுதபோது வரும் மனவருத்தம் **கவலை** எனப்படும். இங்குக்கவலை விளக்கெரிக்கச் செயலிலாமை முதற்கண்ணேயும், வெம்மை மொழி கேட்க நேர்ந்தமை பின்னேயும் வந்தன.

மாற்றும் - மாற்றிக் கொள்ளுக; "தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான் - மனக்கவலை மாற்ற லரிது" (குறள்) என்றபடி இங்குத் தாள் வீழ்ந்தார் கவலை மாற்றப் பெற்றார் என்க.

இனி, மாறு விளக்குப் பணிமாற - மாறு - இடையறுமல் - அளவுபடாமல்; "கோயிலடைய" (*1879*) "விடியுமளவும்" (*1880*) என்பன காண்க. பணிமாற - பணி செய்வதற்கு; மரபு வழக்கு; "திருஅலகு பணிமாறி" "திருவத்தயாமம் பணிமடங்கி".

இந்த மருங்கிற் குளத்து நீர் - திருக்கோயிலினுள் அடுத்துள்ள குளத்துநீர். இது தேவாசிரியனை அடுத்து மேல்புறத்துள்ள சங்கதீர்த்தம் என்பது கருதப்படும். அதுவே "**இந்த மருங்கு**" என்ற அணிமைச்சுட்டுக்கிலக்காய், புற்றிடங்கொண்டார் கோயில் முன் நாயனூர் எய்திப் பணிந்துவிழுந்த இடத்தின் அணிமையில் உள்ளது. படம் பார்க்க. அரனெறியார் கோயில் முன்பும் முன்னுள் ஒரு சிறு குளம் இருந்ததாகக் கூறுவர்.

அந்திமதிய மணிந்தபிரான் - இருள் வரும் நேரத்தில் ஒளிப்பொருளை ஒளிதரச் செய்பவராதலின் இங்கு விளக்கு ஏற்றும் பரிசு நல்கினர். சாபத்தால் ஒளி குறைந்து அவியு நிலையில் வந்த மதியினை ஒளிவீசச் செய்தமைபோல, விளக்கு எரிவதனை அவியச்செய்யும் நீரினையே எரியச் செய்பவர் என்பதும் குறிப்பு. முன் பாட்டில் **பிறையணிந்த** (*1876*) என்றதும் இக்கருத்தில் வந்த முற்குறிப்பு. இக்குறிப்பினை மனங்கொண்டு நாயனூர் பணிந்து வீழ்ந்தனர் என்பதுமாம்.

மொழிகேளா - மொழியினைக் கேட்டு.

செய்வ தறிந்திலர் - மேற்செய்வ தின்னதென்று தோன்றுத திகைப்பு. இது சடுதியில் வந்த பெருமகிழ்ச்சியாலாயது.

தமது கடைத்தலையில் வந்து நின்றவர் திருநாவுக்கரசு நாயனூர் என்று தெரிந்தபோது அப்பூதியார் "முன் செய்வதறியாதே" பலவும் செய்தமையும் (*1801*), நம்பிகள் தமது நாட்டில் வந்தாரென்று கேட்டபோது கழறிற்றறிவார் நாயனூர் "செய்வ தொன்றுமறியாது

1878. சென்னி மிசைநீர் **தரித்தபிரா னருளே** சிந்தை செய்தெழுவார்,
நன்னீர்ப் பொய்கை நடுப்புக்கு **நாதர் நாம நவின்றேத்தி,**
அந்நீர் முகந்து கொண்டேறி, யப்பர் கோயி லடைந் **தகலுள்**
முந்நீ **ருலக மதிசயிப்ப,** முறுக்குந் **திரிமே னீர்வார்த்தார்;** 13

சிந்தை மகிழ்ந்து களிகூர்ந்து" பலவும் செய்தனவும் (வெள்ளானைச் சருக் - 17), பிறவும் இங்கு வைத்துக் காண்க. (இவ்வாறு வரும் திகைப்புப் பெருந் துன்பத்தாலுமாகும்.) 12

1878. (இ-ள்.) சென்னி.....எழுவார் - தலையின்மேல் கங்கையைத் தரித்த பெருமானது திருவருளினையே சிந்தித்து எழுவாராய்; நன்னீர்ப் பொய்கை நடுப்புக்கு - நல்ல நீருடைய அக்குளத்தின் நடுவுட் புகுந்து; நாதர்....ஏறி - நாதருடைய திருநாமமாகிய மகா மந்திரத்தினைச் சொல்லித் துதித்துக்கொண்டு அந்த நீரினை முகந்து எடுத்து கொண்டு மேல் ஏறி; அப்பர் கோயில் அடைந்து - அப்பருடைய அரனெறித் திருக்கோயிலினைச் சேர்ந்து; அகலுள்...வார்த்தார் - கடல் சூழ்ந்த உலகத்தார் அதிசயித்துக் காணும்படி அகலினுள் முறுக்கும் திரியின்மேல் அந்நீரினை வார்த்தனராகி;

(வி-ரை.) சென்னிமிசை நீர் தரித்தபிரான் அருளே - இறந்த முன்னோரைப் பகீரதனுக்காக உயிர் தந்து எழுப்பிய கங்கை நீர் தரித்த பெருமான் அருள் இந்நீராலும் தீ எரியச் செய்யும் என்பது குறிப்பு. **அருளே** - அருளினையே ஏகாரம் பிரிநிலை.

அருளே சிந்தை செய்து எழுவார் - அடிவீழ்ந்த நிலையில் திருவாக்கினைக் கேட்ட மிக்க மகிழ்ச்சியாற் செய்வதறியாது கிடந்த நாயனார் இஃது சிவனருளே யாம் என்று சிந்திக்கவல்லராகிப் பின் எழுவாராய். **எழுதல்** - வீழ்ந்த நிலையினின்றும் மேல் எழுதல். திகைப்பு நீங்கி அவ்வருளின்படியே செய்வது துணிந்தெழுவார் என்ற குறிப்புமாம்.

எழுவார் - எழுந்தாராகி என்று இறந்த காலக் குறிப்புடன் நின்றது. காலவழு வமைதி.

நன்னீர் - இறைவரருளால் தீயை வளரச் செய்து அருள் வெளிநாட்டுதற்கும் அன்பர் மனங்களிக்கவும் அல்லாதார் தேற்றம்படவும் உள்ள நிகழ்ச்சிக் கருவியாய் நின்ற நீர். நன்மை - உலகம் நலம் பெற்றோங்கக் கருவியாதல்.

நாதர் நாமம் நவின்று - முதல்வரது திருநாமமாகிய திருவைந்தெழுத்து என்னும் மகாமந்திரத்தைச் சொல்லி.. பெருஞ்செயலுட்புகுவார் இவ்வாறு திருநாமஞ் சொல்லிப் புகுதல் அவரருளின் துணையுள் தம்மை ஒப்புவித்தலாம். அமர்நீதி யன்பர் துலை ஏறும்போதும் (*544*), திருநாவுக்கரசர் கயிலைமலைச்சாரலில் ஆணை வழியே தடத்தினுள் மூழ்கியபோதும் (*1635*), புகழ்ச்சோழர் எரியினுட் புகுந்த போதும் (புகழ்ச் - புரா - *39*) இவ்வாறு செய்த அருண்மரபும் பிறவும், இங்கு வைத்துக் காணத்தக்கன.

அகலுள் - திரிமேல் - என்க. ஓர் அகலினுள், "சோதி விளக்கொன் றேற்றுதலும்" என மேற்பாட்டிற் கூறுதல் காண்க. **அகலுள்** - என்றது அகலின் உள்ளிடம் நிறைய என்றும், **திரிமேல்** - என்றது திரி நனைந்து சுடர்படிக்கத் துணை செய்ய என்றும் கொள்க. **முறுக்கும் திரி** - விரைந்து எரிந்து போகாமல் நின்று ஒரு சீர்பட எரிதற்கும், சுடர் முதலிற் பற்றுதற்கும்,

1879. சோதி விளக்கொன் றேற்றுதலுஞ் சுடர்விட் டெழுந்த; ததுநோக்கி
ஆதி முதல்வ ரரனெறியார் கோயி லடைய விளக்கேற்றி
ஏத நினைந்த வருகந்த ரெதிரே, முதிருங் களிப்பினுடன்
நாத ரருளாற் றிருவிளக்கு நீரா லெரித்தார் நாடறிய. 14

திரியை முறுக்குதல் ஆம். ஒன்று - விளக்குப் பலவும் ஏற்ருது அகல் ஒன்றினுள் நீர் நிறைந்து ஏற்றிய தென்னை?; திருவருளுண்மையில் நாயனுர் ஐயங் கொண்டனரோ? எனின், அற்றன்று; திருவருள், எல்லாஞ் செய்ய வல்லது என்பதும், தாம் கேட்டது அந்த அருண்மொழியாகிய கட்டளை என்பதும் உண்மை என்று துணிந்து கொண்ட பின்னரே நாயனுர் இவ்வாறு பொய்கைப் புகுதல், நாமமேத்தி நீர் முகத்தல், ஏறிக் கோயிலுட்புக்கு விளக்கில் நீர்வார்த்தல் என்றிவ்வளவும் செய்தனர். ஆயின் **கடல் பெரிதாயினும் அதனுள் முகக்கும் கொள்கலத்தினளவே நீர் நிறையும்; அதுபோல் திருவருள் பெரிதாயினும் அதனைக் கொள்ளத் தமது தகுதியினளவு எத்துணையோ என்று அஞ்சியே விளக்கு ஒன்றேற்றினர் என்க.** "முதிருங் களிப்பினுடன்" என்று பின் கூறுவது மிக்கருத்து. இது பெரியோரியல்பு என்க. பின்னர்க் கோவில் அடைய விளக்கேற்றிய தென்னையோ? எனின் தம்மையும் பொருளாக ஆக்கித் தகுதி பெறுவித்து இறைவர் அருள் புரிந்தது தெளிந்தாராகலின் முன்னர், "எண்ணில் தீப மேற்றுவதற் கெடுத்த கருத்து"க் கொண்டமையால் அன்பு மேலீட்டால் அவ்வாறு செய்தனர் என்க.

அப்பர் - அரனெறியுடைய பெருமான். அரனெறியப்பர்.

முந்நீர் - கடல். உலகைப் படைத்தலாதி முத்தொழிலும் உடைமையின் இப்பெயர் போந்ததென்பர். இங்கு நீர் தன்னியல்பு மாறிச் செயல் செய்தமையின் **முந்நீர்** என்று நீரினைப் பற்றிக் கூறினுர்.

அதிசயிப்ப - அதிசயித்துக் காண. "அதிசயம் கண்டாமே" (திருவா). 13

1879. (இ-ள்.) சோதி எழுந்தது - விளக்கு ஒன்று சோதி ஏற்றுதலும் சுடர்விட்டு எழுந்தது - அவ்விளக்கு ஒன்றில் தீயைக் கொளுவுதலும், அது சுடர்விட்டு மேல்நோக்கி எழுந்து எரிந்தது; அது நோக்கி....ஏற்றி - அதனை நோக்கி ஆதி முதல்வராகிய அரனெறியப்பருடைய திருக்கோயில் முழுதும் எங்கும் திருவிளக்குகளை ஏற்று வித்து; ஏதம்...எதிரே - குற்றமே நினைந்து நிந்தைபகர்ந்த அமணர்களின் எதிரில் முதிரும்....நாடு அறிய - மிக்குப் பெருகிய மகிழ்ச்சியினேடு நாதருடைய திருவருளால் நாடெல்லா மறியும்படி நீரினை வார்த்துத் திருவிளக்கினை எரித்தனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டுரைக்க நின்றன.

(வி-ரை.) விளக்கு ஒன்று சோதி ஏற்றுதலும் என்க; **ஒன்று** - ஒன்றின்கண்; ஏழனுருபு தொக்கது. **சோதி ஏற்றுதல்** - திரியில் தீக்கொளுவுதல்.

கோயில் அடைய - கோயில் எங்கணும் - முழுதும். **அடைய** - அடையும்படி. என்று

1880. **நிறையும் பரிசு திருவிளக்கு விடியு மளவு நின்றெரியக்**
குறையுந் தகளி களுக்கெல்லாங் கொள்ள வேண்டு நீர்வார்த்து,
மறையின் பொருளை **யர்ச்சிக்கு மனையி னியதி** வழுவாமல்
உறையும் பதியி லவ்விரவே யணைவார் பணிவுற் றெருப்பட்டார்; 15

கொண்டு ஆதி முதல்வராய்ப் பேரொளிப் பிழம்பாகிய சிவபெருமான் திருவருள் இக்கோயிற் பணியின்மூலம் அடையும்படி என்றுரைத்தலுமாம்.

ஏத நினைந்த அருகந்தர் எதிரே - அவமதிப்புடன் நிந்தைபுரிந்த அந்தஅமணர் முன்பே. அந்த என்ற முன்னறிசுட்டுத் தொக்கது. **ஏதம் நினைந்த** - அவர்கள் கூறிய சொல்லினன்றிச் சொல்லைத் தூண்டிய நினைப்பு ஏதமாம்; (தீமை) குற்றம் நினைப்பின்பாலதேயாம் என்ற நீதிநூல் வரம்பும் காண்க. புறச்சமயிகள் நேரிற் கண்டு மனமயங்கவும் உண்மை காணவும் அவர்கள் **எதிரே;** "உரிஞ்சாய வாழ்க்கை யமனுடையைப் போர்க்கும், இருஞ்சாக் கியர்க ளெடுத்துரைப்ப" (பிள் - மயிலை - 10) என்ற கருத்தைச், சைவ உண்மை விளங்கும் இடத்தில், நன்றியில் சமயத்தில் உள்ள சமண் சாக்கியர் முதலியோர் இச்செய்கை ஏற்றதன்றென வெடுத்துரைக்கக் கூர்ந்து பார்த்துக் காத்துக் கொண்டிருப்பர் என்று ஆசிரியர் விளக்கிக் காட்டியதும் பார்க்க,

முதிரும் களிப்பு - முன் கூறியபடி சிறிதாகத் தொடங்கி மேன்மேல் வளர்ந்து முதிர்வதாகிய மகிழ்ச்சி.

திருவிளக்கு நீரால் எரித்தார் நாடறிய - "நமிநந்தி, நீராற் றிருவிளக் கிட்டமை நீணாடறியுமன்றே" (தேவா) என்ற திருவிருத்த ஆட்சி போற்றப்பட்டது காண்க. **நாடறிய** - புறச்சமயிகள் முதலிய எல்லோரும் உண்மை அறிந்து கொள்ள. "அறியும் அன்றே" என்ற தேவாரத்தால் எரித்த அப்பொழுதே நேரில் உடனிருந்து கண்டறிந்தனர் என்பது போதருதல் காண்க. இச்செய்தி தேவாரத்தினுற் பெற்ற சரித ஆதரவு கொண்ட பெருமையுடையது. **நாடறிய** என்றதனை இறுதியில் வைத்து வற்புறுத்திக் காட்டியது மிக்கருத்து. *14*

1880. (இ-ள்.) திருவிளக்கு......எரிய - விடியுமளவும் திருவிளக்குக்கள் அவியாமல் நின்று எரியும் பொருட்டு; குறையும் தகளிகளுக்கெல்லாம் - எரிவதனால் விளக்கு நெய்யாகிய நீர் குறையும் அகல்களில் எல்லாம்; நிறையும் பரிசு - நிறைவாகும் தன்மையால்; கொள்ளவேண்டும் நீர் வார்த்து - எரியும் தன்மைக்கும் அகலின் அளவுக்கும் ஏற்றவாறு கொள்ளத்தக்க நீரை விளக்கு நெய்யாக வார்த்து; மறையின்...வழுவாமல் - வேதப் பொருளாகிய சிவபெருமானைத் தமது மனையில் வைத்துப் பூசனை புரியும் நியதி தவறாமல்; உறையும்.....ஒருப்பட்டார் - தாம் வாழும் நகராகிய ஏமப்பேறூரின்கண் அன்றிரவே யணைவாராய் இறைவரைத் தொழுது புறப்பட்டனராகி;

(வி-ரை.) நிறையும் பரிசு - நிறைவாவது, கோயில் முழுதும் எங்கணும் ஒளி பொருந்துதலும், இரவு முழுவதும் நிறைதலும், மிகுதலும் குறைதலுமின்றிச் சுடர் ஒத்த அளவாற் பொருந்தி எரிதலும் முதலாயின.

நின்று எரிய - மிகையும் குறையுமின்றி ஒரே அளவாய் எரியும்படி.

1881. இரவு சென்று தம்பதியி னெய்தி **மனைபுக் கென்றும்போல்**
விரவி நியமத் தொழின் முறையே விமலர் தம்மை யருச்சித்துப்
பரவி யமுது செய்தருளிப் பள்ளி கொண்டு புலர்காலை
யரவ மணிவார் பூசையமைத் தாரூர் நகரின் மீண்டணைந்தார். 16

குறையும் தகளி - எரிதலால் (நெய்) நீர் குறைகின்ற அகல்.

மறையின் பொருள் - வேதங்களால் இதுவே பொருள் என்று முடிபாகக் கொண்ட பொருளாகிய சிவன்.

மனையின்....நியதி - தமது மனையின்கண்ணே நித்த நியமமாகச் செய்யும் ஆன்மார்ந்த சிவபூசையின் கடமை. முன்னர்த் திருவாரூர்ப் பூங்கோயிலமர்ந்த பெருமானையும் அரநெறியப்பரையும் வணங்கிவந்தது பரார்த்த பூசைக்குரிய - திருக்கோயிலிற் செய்த - வழிபாடு. இது மனையில் ஆகம விதிவழி செய்யும் ஆன்மார்த்த பூசை. **வழுவாமல்** - இரவிலும் பூசிக்கு நியமமுடையவர் நாயனர் என்றதாம். வழுவாதபடி, வழுவாதியற்றும் பொருட்டு. "யாம விரவும்" (*1870*).

அவ்விரவே அணைவார் - தாம் உடனிருந்து எரிக்காவிடினும் விடியுமளவும் நின்று எரியும்படி விளக்குக்களுக்கெல்லாம் அளவுபட நீர் (நெய்) வார்த்து இரவுப்போது கழியா முன் தமது மனையின்கண் அணைவாராகி.

இரவு - நடுஇரவுக்கு முற்பகுதி. **அவ்விரவே** - நடு இரவு ஆவதன்முன். அதற்குள் செய்வது அந்நாளினுக்கும், அதன்பின் செய்வது பிற்றை நாளுக்கும் சேரும் என்பது விதியாதலின், அந்நாள் நியதியான இரவுப்பூசை காலம் வழுவாது செய்வதற்கு அவ்விரவே நடுயாமத்தின்முன் அணைந்தனர். இந்நாளில் நவீனர் கொள்ளும் நாட்கூறு நடுயாமத்தோடு முடியும் கூறுபாடும் ஒப்பிடுக.

அணைவார் - அணைவாராகி; முற்றெச்சம். **அணைவார் - ஒருப்பட்டார்** என்று முடிக்க. **ஒருப்படுதல்** - வழிப்படத் துணிதல். செல்லுதல் என்றலுமாம்.

அருச்சித்து - என்பதும் பாடம். இது சிறப்பின்று. *15*

1881. (இ-ள்.) இரவு.....அருச்சித்துப் பரவி - அவ்விரவே சென்று தம்நகரிற் சேர்ந்து மனையிற் புகுந்து நித்தம் செய்வதுபோலப் பொருத்தி நியமமாகச் செய்யும் பூசைமுறைச் செயல்களின் முறைப்படியே விமலரைப் பூசித்து போற்றிப், பின்னர்; அமுது செய்தருளி......அமைத்து - திருவமுது செய்தருளிப் பள்ளிகொண்டு, விடியற்காலம் எழுந்து அரவணிந்தாரது பூசையின் நியமத்தினை முடித்துக்கொண்டு; ஆரூர் நகரின் மீண்டணைந்தார் - திருவாரூர்த் திருநகரத்தில் மீண்டும் வந்தணைந்தனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண் டுரைக்க நின்றன. தனி முடிபாக்கி உரைக்கினு மிழுக்கில்லை.

(வி-ரை.) இரவு.....அமுது செய்தருளி - தமது பதியினுக்கு வழிச்செல்லுதலும், பதியிற் சேர்தலும், மனையிற் புகுதலும், என்றும்போல விமலரை அருச்சித்துப் பரவுதலும், அமுது

1882. வந்து வணங்கி, யரனெறியார் மகிழுங் கோயில் வலங்கொண்டு
சிந்தை மகிழப் பணிந்தெழுந்து, புறம்பு முள்ளுந் திருப்பணிகண்
முந்த முயன்று பகலெல்லா முறையே செய்து, மறையவனார்
அந்தி யமையத் தரியவிளக் கெங்கு மேற்றி, யடிபணிவார்; 17

செய்தருளுதலும், பள்ளிகொள்ளுதலும் - என்றித் துணைச் செயல்களையும் அவ்விரவு காலந் தவறாமல் விதி நியதியின்படி உரிய காலத்தில் செய்து முடித்தனர். நாயனாரது பதியாகிய ஏமப்பேறூர், திருவாரூரினின்றும் ஆறு நாழிகையளவில் உள்ளது. எனவே மாலைப் பொழுதில் விளக்கேற்றும் நேரங் கடவாது இவ்வாறு நீரால் விளக்கெரித்த நாயனார் விளக்கு ஏற்றி மூன்று நான்கு நாழிகையளவும் தாமே அங்கிருந்து விளக்கு எரித்துப் பின்னர் அவ்விளக்கு விடியுமளவும் எரியும்படி நீர்வார்த்து அமைவு செய்துவிட்டுச் சென்றனர் என்பதும், அவ்வாறு சென்றதுவும், இரவு மனையில் தாம் செய்யும் சிவபூசை நியதி வழுவா தியற்றும் பொருட்டேயாம் என்பதும் பெறப்படும்.

புலர் காலை....பூசை அமைத்து - காலையில் தாம் செய்யும் நியமமாகிய ஆன்மார்த்த சிவபூசையினைச் செய்து முடித்துக்கொண்டு. "யாம இரவும் பகலு முணர்வொழியா வின்பம் எய்தினார்" (*1870*) என்றது காண்க. இறைவன் பணியிற் புகுவா ராயினும் தமது நியதியாகிய ஆன்மார்த்த பூசைக் கடமையை முடித்தபின்பே புகுதல் வேண்டும் என்பது விதி. இவ்விதியில் வழுவாது ஒழுகியவர் இந்நாயனார் என்பது ஈசர்கழ லிறைஞ்சி யேத்தப் பெற்றதவத் தருமை புரிவர் (*1869*) என முன் காட்டப்பட்டது.

ஆரூர் நகரின் மீண்டு(ம்) அணைந்தார் - திருவாரூர்ப் பெருமானை வழிபடுதலே என் ஊதியமாகும் என்றுகொண்ட கொள்கையினாற் பலநாளும் வந்துவந்து வழிபடுவார் அன்று மீண்டும் அவ்வாறே அணைந்தனர் (*1871*) என்பது மட்டுமன்றி, முன்னைநாளிற்றாம் பெற்ற திருஅருட் பேற்றினதின்பம் ஆராமையால் மீண்டும் பணிசெய்து திருவருட் பெருக்கினிற் றிளைத்து வழிபடும் திறத்தால் மீண்டும் அணைந்தனர் என்ற குறிப்புமாம். இறந்தது முதலிய எச்சவும்மை விரிக்க. அணைந்தவுடன் அரனெறியார் கோயில் வலங்கொண்டு வழிபட்டனர் என வரும்பாட்டில் கூறும் குறிப்பும் காண்க. *16*

1882. (இ-ள்.) வெளிப்படை. முன் சொல்லியவாறு ஒருப்பட்டு வந்து சேர்ந்து வணங்கி, அரனெறியப்பர் விரும்பி விளங்க வீற்றிருக்கும் கோயிலினை வலமாக வந்து மனமகிழ்ச்சியோடும் கீழே விழுந்து பணிந்து எழுந்து, அத்திருக்கோயிலின் புறத்திலேயும் உள்ளேயும் செய்யத்தக்க திருப்பணிகளை, முந்த முயன்று, அந்த நாளிற் பகற்கால முழுமையும் முறைமைப்படி செய்து, மறையவனாராகிய நமிநந்தியடிகள் மாலைக் காலம் வர அப்போது அரிய திருவிளக்குக்களை ஏற்றி அடிபணிவாராய்,

(வி-ரை.) திருவருள் வெளிப்பட்டபின் பிற்றை நாள் அவ்வருளின் பெருமையை உட்கொண்டு நாயனார் திருப்பணி செய்த ஆர்வமிகுதியைக் கூறிற்று. **வணங்கி, வலங்கொண்டு, முயன்று, பணிந்தெழுந்து, செய்து, ஏற்றிப் - பணிவார்** என்று பகலுமிரவும் செய்த திருப்பணிகளை எல்லாம் விரித்துக் கூறுதல் காண்க.

1883. பண்டு போலப் பலநாளும் பயிலும் பணிசெய் தவரொழுகத்,
தண்டி யடிக ளாலமணர் கலக்கம் விளைந்து சார்விலமண்
குண்ட ரழிய, வேழுலகுங் குலவும் பெருமை நிலவியதால்
அண்டர் பெருமான் றொண்டர்கழ லமரர் பணியு மணியாரூர். 18

"புலர் காலை"யில் தமது ஆன்மார்த்த பூசையினை முடித்து வந்துவிட்டமையால் இரவு நியமத்துக்குச் செல்லும்வரை நாள் முழுமையும் அரனெறிக் கோயிலில் பணி செய்திருந்தனர் என்க.

புறம்பும் உள்ளும் திருப்பணிகள் முந்த முயன்று - புறம்புசெய் திருப்பணி - திருவலகு - திருமெழுக்கு இடுதல் - உழவாரப்பணி செய்தல் முதலாயின.

உள்ளேசெய் திருப்பணி - திருவிளக்கு, திருமாலை, திருமஞ்சனம் முதலாயின.

முந்த முயன்று - தாமதமின்றி விரைவாகச் செய்து.

முறையே செய்தல் - முன்செய்வன பின்செய்வன என்ற கிரமம் அறிதலும், காலமறிதலும் முதலாயின.

அரிய விளக்கு - அருமையாவது திருவருளால் நீரை எரித்த அருமைப்பாடு.

அந்தியமைத்த - என்பதும் பாடம். *17*

1883. (இ-ள்.) பண்டுபோல.... ஒழுக - முன்போலவே பல நாள்களிலும் பயிலும் திருப்பணி செய்து அவர் ஒழுகிவந்தாராக; தண்டியடிகளால்... அழிய - தண்டியடிகளால் அமணர்களுக்குக் கலக்கம் சேர்ந்ததனால் நற்சார்பு இல்லாத சமணர்களாகிய கீழ்மக்கள் அழிந்தொழியவே; அண்டர்....அணியாரூர் - தேவர் தலைவராகிய தியாகேசருடைய அடியார்களது பாதங்களைத் தேவர்கள் போற்றுதற்கிடமாகிய திருவாரூரின்கண்; ஏழுலகும்... நிலவியது - ஏழுலகங்களும் போற்றும் பெருமை நிலவியது.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண் டுரைக்க நின்றன.

(வி-ரை.) பண்டுபோலப் பலநாளும் - முன்னும் பல நாள்கள் செய்தனர். "**பலநாளும்.....வணங்கினர்**" (*1871*) என்றது காண்க. **பண்டுபோல** என்றது அந்தி யமையத் தரிய விளக்கேற்றுதல் ஒன்றொழிய ஏனையவை எல்லாம் முன்போலவே யியற்றினர் என்ற குறிப்புத் தருவது.

ஒழுக - இஃது ஒரு நியதியான ஒழுக்கமாகவே நிகழ்ந்தது என்பதாம்.

தண்டியடிகளால் - குண்டர் அழிய - இதன் விரிவு தண்டியடிகள் புராணத்துட் பார்க்க.

கலக்கம் - அப்போது உள்ள நிலையின் மாறுபாடு. கலகம் - வடமொழி. கலக்கம் - தமிழ்; கலங்குதல் என்பது பொருள். **கலக்கம் விளைந்து** - கலங்குதல் நிகழ்ந்தமையின்; வினையெச்சம் ஏதுப்பொருட்டு. இதுகலகம் என வழங்குவதுபோலும்.

ஆரூரில் - பெருமை நிலவியது என்று கூட்டுக.

1884. நாத மறைதேர் நமிநந்தி யடிக ளார்நற் றொண்டாகப்
பூத நாதர் புற்றிடங்கொள் புனிதர்க் கமுது படிமுதலா
நீதி வளவன் றான்வேண்டு நிபந்தம் பலவு மரியணையின்,
மீது திகழ விருந்தமைத்தான் வேதா கமநூல் விதிவிளங்க, 19

தொண்டர் கழல் அமரர் பணியும் - தாம் நலம் பெறுதற்பொருட்டுத் தேவர்கள் அடியார்களைப் பணிந்து, அவர்களது கருணைபெறும் காலம் பார்த்து வாயில் காத்துக்கொண்டுள்ளார்கள் என்பது திருக்கூட்டச் சிறப்பில் உரைக்கப்பட்டது. தேவாசிரிய மண்டபம் என்ற பெயர்க் காரணமும் காண்க.

அண்டர்பெருமான் - தியாகேசர் தேவருலகத்தில் எழுந்தருளியிருந்த குறிப்பு.

விளக்க - என்பதும் பாடம். *18*

1884. (இ-ள்.) நாதமறைதேர் நமிநந்தி யடிகளார் நல்தொண்டாக - நாதவடிவாகிய வேதங்களைத் தேரும் நமிநந்தியடிகளாருடைய நல்ல திருத்தொண்டின் பயனாக; பூத....புனிதர்க்கு - பூதநாதராகிப் புற்றிடங்கொண்ட புனிதராகிய பெருமானுக்கு; அமுதுபடி முதலாம்......தான் வேண்டும் நிபந்தம் பலவும் - நித்த நிவேதனத்துக்குவேண்டிய திருவமுதுபடி முதலாகத் தான் வேண்டும் படியே நிபந்தங்கள் பலவற்றையும்; வேதாகம நூல் விதி விளங்க - வேதங்கள் ஆகமங்களாகிய முதல் நூல்களில் விதித்த விதிகள் விளங்கும்படி; நீதி வளவன் அரியணையின்மீது திகழ இருந்து அமைத்தான் - நீதியுடைய சோழர் தனது சிங்காதனத்தில் விளங்க வீற்றிருந்து அமைத்தார்;

(வி-ரை.) நாதமறை - நாதவடிவமாகிய மறை. **நாதம்** - ஒலிவடிவான என்றதாம். **நாதம் - சத்தியின் வடிவம்; சிற்சத்தியாகிய ஞானமயமாகிய** வேதம் என்க. **மறைதேர்** - வேதங்களைத் தேர்தல் என்றது அவற்றில் உண்மைப்பொருளாகக் கொண்ட முடிபைத் துணிந்து கொண்டு அதன்படி ஒழுகுதல்.

நமிநந்தி அடிகளார் நல்தொண்டாக - விதிவிளங்க நிபந்தம் பலவும் வளவன் அமைத்தான் - என்று முடிக்க. அடிகளாரது தொண்டாக அரசன் அமைத்தலாவது அடிகளார் பொருட்டு வெளிப்பட விளங்கிய தெய்வத் திருவருள் நினைவாக அடிகளார் தாமே அமைத்தது போன்று அரசன் நியமித்தல். அமைத்ததுஅரசனே யாயினும் அடிகளது பெயரால் விளங்க அமைத்தான் என்பது.

பூதநாதர் புற்றிடங்கொள் புனிதர்க்கு - பூதநாதர் - உயிர்களுக்கெல்லாம் தலைவர். சிவபூதகணங்களின் தலைவர் என்றலுமாம். உயிர்களுக்குத் தலைவர் என்பது பசுபதி என்ற தன்மை. எல்லா உயிர்களுக்குள்ளும் நிறைந்து வீற்றிருந்து அவைகளை இயக்குவித்து ஆளுதல்.

அமுது படிமுதலாக நிபந்தம் பலவும் - படி - திட்டமாக அமைத்த கட்டளை. "வாசத் திருமஞ்சனப் பள்ளித் தாமஞ் சாந்த மணித்தூபந், தேசிற் பெருகுந்செழுந் தீப முதலா யினவுந் திருவமுதும்" (கழறிற் - புரா - 24) என்றபடி பூசைக்குரிய திரவியங்கள் பலவும் நித்தமாக

1885. வென்றி விடையார் மதிச்சடையார் **வீதி விடங்கப் பெருமாடாம்**
என்றுந் திருவா ரூராளு மியல்பின் முறைமைத் திருவிளையாட்
டொன்றுஞ் செயலும் **பங்குனியுத் திரமாந் திருநா ளுயர்சிறப்பும்**
நின்று விண்ணப் பஞ்செய்த படிசெய் தருளு நிலைபெற்றார். 20

அமைந்து வரும்படி செய்யும் திட்டம் - **நிபந்தம்** - என்க. சிறப்புப் பற்றி அமுதுபடியை எடுத்துக்கூறிப் பிறவெல்லாம் கருதவைத்தார். **அமுதுபடி** - திருவமுது. பாலமுது, நெய்யமுது, தயிரமுது, அடைக்காயமுது முதலாயின எல்லாம் அளவுப்படி கொள்க. இவை சிவாகமங்களுள் **நித்தம்** எனப்படுவன.

நீதிவளவன் அமைத்தான் - நீதியுடையனுதலால் அமைத்தான் என்று காரணக் குறிப்புப் பெற உடம்பொடு புணர்த்தி ஓதினர்.

அரியணையின் மீது திகழ இருந்து அமைத்தான் - இது மரபு. அரசனுணையின்படி செய்யப்படும் அரசாங்கத் திட்டங்கள் அரியணைமீது இருந்து செய்வனவாம் என்பது மரபு. இவற்றை எழுதும் முன்னைநாட் கல்வெட்டுக்களின் முறையும் அமைப்பும் காண்க.

வேதாகம நூல் விதி விளங்க - விதி - வேதங்களில் விதித்த மந்திரவிதிகளும் ஆகமங்களின் விதித்த தந்திர விதிகளும் ஆம். **விளங்க** - உலகில் இவையிவை இன்னின்னபடி செயல்முறை நிகழத்தக்கன என்று விளங்கும்படி, திருவாரூர்ப் படித்தரத் திட்டங்களும், ஏனைத் திருவிழாச் சிறப்புக்களின் திட்டங்களும் மிகஉயர்ந்த நிலையிலும் முழு அமைப்பிலும் இன்றுவரை விளங்கும் தன்மையும் இதனுற் பெறப்படும். *19*

1885. (இ-ள்.) வென்றி...பெருமாள்தாம் - வெற்றியுடைய விடையையுடையாரும் மதியினையணிந்த சடையினையுடையாரும் ஆகிய வீதிவிடங்கப்பெருமானர் தாம்; என்றும்....செயலும் - என்றும் திருவாரூரினை ஆட்சி புரியும் இயல்பின் முறைமையாகிய திருவிளையாடல் பொருந்திய செயலினையும்; பங்குனி உத்திரமாம் திருநாள் உயர்சிறப்பும் - பங்குனி உத்திரமாகிய திருநாளில் உயர்ந்த திருவிழாவையும், நின்று...நிலைபெற்றார் - நின்று விழாக்கொண்டருள வேண்டுமென்று விண்ணப்பம் செய்து கொண்டபடியே விழாக் கொண்டருளும் நிலைமையினையும் பெற்றனர். (நமிநந்தியடிகளார்)

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபாக வைத்துரைக்க நின்றன.

(வி-ரை.) வென்றி......வீதிவிடங்கப் பெருமாள் - தியாகராசப் பெருமான். "அணிவீதி மழவிடைமேல்......நின்றான் வீதிவிடங்கப்பெருமான்" (*130*), "சடைமருங்கி லிளம்பிறையும்" (*131*) என்ற பாட்டுக்களிற் கூறியபடி மநு வேந்தனுக்குக் காட்சி கொடுத்த திருமேனி இங்கு நினைவு கூர்தற்பாலது.

என்றும் திருவாரூர் ஆளும் இயல்பின் - இறைவர் விளங்க வீற்றிருந்து அருள்புரியும் தன்மை தெரிய; **ஆளும்** என்பது மரபு; தியாகராசர் அரசராம் பெயர்க்கும் ஏற்றபடி ஆளும் என்றார். "அமரர்நா டாளாதே யாரூராண்ட அயிராவணமே" (தேவா) "எல்லையிலா வாட்சிபுரிந் தின்புற்று மகிழ்ந்த" (திருஞான - புரா - *1133*); என்றும் - **ஆளும்**

1886. இன்ன பரிசு திருப்பணிகள் பலவுஞ் செய்தே, யேழுலகும்
மன்னும் பெருமைத் திருவாரூர் மன்ன ரடியார் வழிநிற்பார்
அன்ன வண்ணந் திருவிளையாட் டாடி யருள வெந்நாளும்
நன்மை பெருக நமிநந்தி யடிக டொழுதார் நாமுய்ய. 21

"முன்னே...பின்னே......திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே" (தேவா) என்றபடி திருப்பாற்கடலுக்கும் தேவருலகத்துக்கும் சென்றருளி வீற்றிருந்து, திருவாரூருக்கு முசுகுந்தர் மூலம் வருவதற்கு முன்னும் திருவாரூரிலே எழுந்தருளியவர் என்பதும் குறிப்பு.

இயல்பின் முறைமை...செயலும் - ஆட்சி புரியும் தன்மை விளங்கப் பலநாளும் செய்யும் பல திருவிளையாடல்கள். இவை தியாகராச லீலைகள் என்று தலபுராணத்தினுள் விரிக்கப்பட்டுள்ளன. திருவாலவாயுடையாரது திருவிளையாடல்களைத் திருவிழாக் கொண்டாடுதல்போல் இவையும் அவ்வப்போது விழாக் கொண்டாடப்பட்டன. இவை தல ஐதீகம் பற்றி நிகழும் உற்சவங்கள்.

பங்குனி உத்திரமாம் திருநாள் உயர் சிறப்பும் - பங்குனி மாதத்தில் உத்திரத் திருநாளைப் பெருநாளாகக் கொண்டு முன் ஒருமாத அளவில் கொடியேற்றிப் பெருந் திருவிழாக்கொள்ளுதலும். **உயர் சிறப்பு** - பெருந்திருவிழா - திருவாரூர்ப் பெருமானது திருவிழாக்கள் ஆண்டிற்பலவாக, அவற்றுள்ளே பங்குனி உத்திரவிழாப் பெருவிழாவாகும். இது **உருத்திரபாத தரிசனம்** என்று தேற்றமாக அறியப்படும். தியாகப்பெருமான் திருவாழித் தேரில் எழுந்தருளும் பெருமாள். இவை சிவாகமங்களுள் **நைமித்திகம்** - (நிமித்தம் பற்றிச் செய்யப்படுவது) எனப்படுவன.

நின்று விண்ணப்பஞ் செய்தபடி - திருவிழாக்கொண்டருள வேண்டுமென்று விண்ணப்பிக்க அவ்வாறே, "ஆராய்ந்து, செங்க ணமரர் புறங்கடைக்கட் சென்றீண்டி, யெங்கட்குக் காட்சியரு ளென்றிரப்ப" (ஞானவுலா); "புகலிசேர், வீதி யெழுந்தருள வேண்டுமென விண்ணப்பம், ஆதரத்தாற் செய்யவ வர்க்கருள" (ஆளுடைய பிள்ளையார் - திருவுலாமாலை) முதலியவை காண்க.

செய்தருளும் நிலை - அவர் விண்ணப்பித்ததனை ஏற்றுக்கொண்டு அவ்வாறே திருவிளையாடல் உகந்தும், உயர்சிறப்புக்கொண்டருளியும் செய்தருளும் தன்மை.

முன் பாட்டால் நித்தியமும், இப்பாட்டால் நைமித்திகம் என்ற சிறப்புக்களும் கூறிய அமைதி காணப்படும். "சிறப்பொடு பூசனை" (குறள்). 20

நேர் பெற்றுர் - என்பதும் பாடம்.

1886. (இ-ள்.) நமிநந்தி அடிகள் இன்ன....செய்தே - நமிநந்தியடிகளார் இத்தன்மையாகப் பற்பல திருப்பணிகளையும் செய்து கொண்டே; ஏழுலகும்...மன்னர் - ஏழுலகங்களிலும் நிறையும் பெருமையுடைய திருவாரூர்ச் செல்வத் தியாகேசர்; அடியார்....அருள - அடியார்களது அன்பின் வழியே நிற்பாராதலின் அவர் விண்ணப்பித்தபடியே திருவிளையாடல்களைக் கொண்டருளினராக; எந்நாளும் நன்மை

பெருக நாம் உய்யத் தொழுதார் - எந்நாளும் எல்லா நன்மைகளும் பெருக நாம் உய்யும்படி தொழுதனர்.

(வி-ரை.) இவ்வாறு திருப்பணிகள் பலவும் செய்தொழுகினர்; திருவாரூர் மன்னர் அடியார் வழி நிற்பாராதலின் அவர் பணிசெய்து விண்ணப்பித்தபடி திருவிளையாட்டாடி யருளினர்; அவ்வாடல்களை நமிநந்தியார் எந்நாளும் நன்மை பெருக நாமுய்யத் தொழுதனர் என்று முடித்துக்கொள்க.

அடிகள் பணிசெய்தொழுகியமையால் மன்னர் ஆடியருளினர்; ஆடியருளியமையால் அடிகள் தொழுதனர். தொழுததனல் நாம் உய்யும் பேறு பெற்ருேம் என்று காரண காரிய முறையில் வைத்தும் கண்டு கொள்க.

திருப்பணிகள் பலவும் - திருவிளக்கிட்டமையும், நித்திய நைமித்திகங்கள் பெருகச் செய்தமையும் போல அவ்வாறுள்ள சிவஞானம் பெருகுதற்கேதுவாகிய பல திருப்பணிகளும், இவை அடியார்க் கமுதூட்டுதல், அடியார்களை ஆக்குதல், சிவஞான தானம் செய்தல், திருக்கோயில் புதுக்குதல், திருக்குளம் பெருக்குதல் - முதலாயின.

ஏழுலகும்....மன்னர் - எங்கும் நிறைந்த பெருமையுடையாராயும் திருவாரூரில் விளங்க எழுந்தருளியிருந்து ஆட்சி புரிபவர். திருவாரூரைத் தலைநகராகக் கொண்டு ஏழுலகங்களையும் ஆட்சிபுரியும் அரசர் என்றலுமாம். **மன்னர்** - என்ற குறிப்புமது.

மன்னர் அடியார்வழி நிற்பார் - தாம் ஏழுலகும் காவல் புரியும் தலைவராகிய மன்னரேயாயினும் அடியார் வழியில் தாம் அமர்ந்து ஒழுகுபவர். **அடியார்** - தமது திருவடியைப் புகலாகச் சார்ந்தவர்.

வழி நிற்றலாவது - அவர் எண்ணியபடி தாம் நின்று அவர் வேண்டுங்குறைகளை நிறைவேற்றியருளுதல். **நிற்பார்** - நிற்பாராதலின்.

திருவிளையாட் டாடியருள - திருவிழாக் கொண்டருள.

எந்நாளும்....நாமுய்ய - எந்நாளும் தொழுதார்; நன்மை பெருகத்தொழுதார்; தாமுய்யத் தொழுதார் - என்று தனித்தனி கூட்டுக. **நாமுய்ய** என்றது பின்வரும் உலகர் யாவரும் தம் பெருமை கண்டு தாங்களும் அவ்வாறே தொழுது நன்மையடையும் பொருட்டு. எம்மனோர் போல் நமிநந்தியடிகள் தமது நலங்கருதித் தொழாது உலக நலங்கருதித் தொழுதனர் என்பதாம். "தாமென்று மனந்தளராத் தகுதியரா யுலகத்துக், காமென்று சரண்புகுந்தார் தமைக்காக்குங் கருணையினன்" (பிள்ளை - தேவா); "வையகமுந்துயர் தீர்கவே" (தேவா); "எங்களை வாழமுன்ன ளேடுவை கையினி லிட்டார்" (திருஞான - புரா - 1231); "தேசமுய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பணித்த திருவாளன்" (சண் -புரா -60) முதலியவை காண்க. அன்றியும் இறைவர் திருவிழாக் கொண்டாடுதல் உலகமுய்யச் செய்யப்படுதலும் காண்க. 21

1887. (இ-ள்.) தேவர்...எழுந்தருள - தேவர் நாயகராகிய தியாகேசர் எழுச்சியாக ஒருநாள் திருமணலிக்கு எழுந்தருள; யாவர்.....அணைந்து - இவர் இன்னர் என்று கண்டறியாது ஒருங்கே கலந்து சேவித்து எல்லாக் குலத்திலுள்ளவர்களும் உடனகக் கலந்து வந்து

1887. தேவர் பெருமா னெழுச்சிதிரு மணலிக் கொருநா ளெழுந்தருள
யாவ ரென்று துடன்சேவித் தெல்லாக் குலத்தி லுள்ளோரும்
மேவ வன்பர் தாமுமுடன் சேவித் தணைந்து விண்ணவர்தங்
காவ லாள ரோலக்க மங்கே கண்டு களிப்புற்றார். 22

பொருந்த அன்பராகிய நமிநந்தியடிகளாரும் அவர்களோடு உடனுகச் சேவித்து அணைந்து; விண்ணவர்தம்.....களிப்புற்றார் - தேவர்களது காவலராகிய தியாகேசரது திருவோலக்கத்தை அங்குக் கண்டு மகிழ்ச்சியடைந்தனர்

(வி-ரை.) எழுச்சி....எழுந்தருள - தேவர் பெருமானது எழுச்சியானது எழுந்தருளா நிற்ப; **எழுச்சி எழுந்தருள** என்றது "கறைமிட றணியலு மணிந்து" என்புழிப்போல நின்றது.

திருமணலி - திருவாரூருக்கும் ஏமப்பேறூருக்கும் அணிமையில் உள்ள ஓர் ஊர். இங்குத் தியாகேசர் திருவாரூரினின்றும் ஆண்டுக்கு ஒருமுறை எழுந்தருளும் வழக்கம் முன்னுளில் இருந்தது என்றும், பின்னுளில் அது நின்றுபட்டது என்றும் கருதப்படுகின்றது.

யாவர் என்னது உடன்சேவித்து எல்லாக் குலத்தினுள்ளோரும் மேவ - திருக்கோயிலினுள் இன்ன குலத்தினர் இன்னபடி இன்ன இடத்தில் நின்று ஏனையோருடன் கலவாது தனித்தனி நின்று சேவிக்க வேண்டுமென்பது ஆகமங்களுள் விதிக்கப்பட்டுள்ளது. திருக்கோயிலினுள்ளே புகாது வெளிநின்று சேவிக்கும் குலத்தவருமுண்டு. நோய், ஆசௌசம் முதலாயின காரணங்களால் திருக்கோயிலினுள் புகுதலை விலக்கப்பட்டாரும் உண்டு. ஆனல் இறைவர் திருக்கோயிலினின்றும் எழுச்சிபெற்றுத் **திருவீதியில்** எழுந்தருளும் காலத்தில் இவ்விதிவிலக்குக்கள் இல்லையாதலின் **யாவ**ரென்னது என்றும், எல்லாக் குலத்தினுள்ளோரும் **உடன்** சேவித்து என்றும் கூறினர். இதுபற்றிப் "புறத்திருத்தொண்டர்" என்று திருநாளைப்போவார் நாயானர் புராணத்திலுரைத்தவையும், திருநீலகண்ட யாழ்ப்பாணர் சரிதப் பகுதிகளும் ஈண்டு வைத்துச் சிந்திக்கத்தக்கன. இவ்வாறுஉள்ள விதி விலக்குக்களின் உண்மையுணராது, இதுபற்றி இந்நாளில் பெரும் பூசல் விளைத்தல் அறியாமையின் பாற்படும்.

தேவர் பெருமான் என்றும் - **விண்ணவர்தங் காவலாளர்** என்றும் கூறியவை தியாகேசர் தேவருலகத்திருந்தபோதும், அங்கு நின்று இங்கு எழுந்தருளியபின் இப்போதும் தேவர்களால் வழிபடப்படும் வரலாற்றுக் குறிப்பு.

ஓலக்கம் அங்கே கண்டு களிப்புற்றார் - திருவிழாச் சேவித்தலின் சிறப்புப் பற்றி ஆளுடைய பிள்ளையாரது திருமயிலைத் தேவாரங் காண்க. இத்தியாகேசர் திருவிழாச் சிறப்பினை அடியார் கண்டு வழிபடும் பெருமைபற்றி ஆளுடையஅரசுகளது திருவாரூர் "முத்து விதானம்" (குறிஞ்சி) என்ற திருப்பதிகமும் ஈண்டுச் சிந்திக்கற்பாலது. அமர்நீதியார் திருநல்லூரில் திருமடம் அமைத்தமர்ந்த புராண வரலாறும் கருதுக. **ஓலக்கம்** - உற்சவங் கொண்டருளும் காட்சி. 22

1888. (இ-ள்.) பொழுது வைகச் சேவித்து - பகற்பொழுது உள்ள அளவும் சேவித்துக்கொண்டிருந்து; புனிதர் மீண்டும்....தொழுது - இறைவர் மீளவும்

1888. பொழுது வைகச் சேவித்துப், புனிதர் மீண்டுங் கோயில்புகத்
தொழுது, தம்மூர் மருங்கணைந்து, தூய மனையுட் புகுதாதே,
இழுது மிருள்சே ரிரவுபுறங் கடையிற்றுயில **வில்லத்து
முழுதுந் தருமம் புரிமனையார்** வந்துட் புகுத மொழிகின்றார்; 23

திருக்கோயிலுக்கு எழுந்தருளவே, தொழுது; தம் ஊர்....துயில - தமது தலத்தில் சேர்ந்து தூயதமது திருமனையினுள் புகுதாமல் இழுதுபோன்ற திணிந்த இருள்சேரும் இரவில் மனைப் புறங்கடையில் உறங்கினராக; இல்லத்து....மொழிகின்றார் - இல்லறங்கள் முற்றும் செய்யும் மனைவியார் வந்து நாயகரை உள்ளே புகும்படி மொழிவாராய்;

(வி-ரை) பொழுது வைக - வைகுதல் - நீடுதல், **பொழுது** - பகற்பொழுது; பகற்பொழுது முழுமையும். **பொழுது வைக** - நீண்ட நேரம் என்றலுமமையும்.

புனிதர் மீண்டும் கோயில் புகத் தொழுது - திருமணலியினின்றும் திருக்கோயிலுக்கு எழுந்தருளத் தொழுது விடைகொண்டு; திருவாரூர்க் கோயிலுக்குள் இறைவர் எழுந்தருளுமளவும் சேவித்து என்பதாம்.

தூய மனையுட் புகுதாதே - தூய மனை - பகலிலும் இரவிலும் ஆகமப்படி சிவபூசை நியமமும், வேத விதிப்படி முத்தீவேள்வி நியமமும். அடியார் கூட்டமும் நிகழ்தற் கிடமாதலின் **தூயமனை** என்றார். திருவோலக்கம் சேவித்து வருதலால் எல்லாக் குலத்தவரும் உடன்போத இழிவு தொடக்கிற்று (*1888*) என்று எண்ணினராதலின் மனையின் தூய்மைக் கிழுக்காகுமென்று கருதி உட்புகாதாராயினர் என்று காரணக் குறிப்புப்படத் தூய மனையுட் புகுதாதே என்றார்.

இழுதும் இருள்சேர் இரவு - இழுதும் இருள் - மைக்குழம்பு போன்ற இருள். "வண்ண நீடிய மைக்குழம் பாமென்று, நண்ணல் செய்யா நடுவிருள் யாமத்து" (*455*), "கருகு மையிரு ளின்கணங் கட்டுவிட் டுருகுகின்றது போன்றது" (*454*) என்பன காண்க.

புறங்கடையில் துயில - வழிபோய் வந்த அயர்ச்சியினால் புறங்கடையில் அமர்ந்து துயில முயன்றாராக. இஃது குளித்து நியமம் முடிக்குமுன் வந்த சிறு அயர்ச்சியாலாயது.

இல்லத்துத் தருமமுழுதும் புரிமனையார் என்க. இல்லறத்துக்குரிய தருமங்கள் முற்றும் செய்தற்குத் துணையாக நிற்றல் மனைவியாரது கடனாதலின் அவ்வாறு முழுதும் தருமம் புரிமனையார் என்றார். **தருமம்** - இல்லறம்.

மொழிகின்றார் - என என்று கூட்டுக. **மொழிகின்றார்** என்ற முற்றெச்சம் **என** என்ற வினையெச்சத்துடன் முடிந்தது.

உட்புகுத மொழிகின்றார் - மனைப்புறங்கடையிற் சிறிது துயிலப்புக்க கணவனாரை மனையின் உள்ளே புகும்படி உரைப்பாராகிய மனையார் இல்லற தருமம் முழுவதும் புரிவாராதலின் உட்புகுந்து பள்ளியமர்வீர் என்று வாளா கூறிவிடாது பூசனை முடித்தும், கடன்முறை அங்கி வளர்த்தும், அமுது செய்தும் பள்ளிகொள்வீர் என்று தம் நாயகரது உடலுக்கும் உயிர்க்கும் உரிய ஊதியமாகிய கடமைகளைக் கூறும் அமைதி வரும் பாட்டில் விரித்தல் காண்க. 23

1889. "திங்கண்முடியார் பூசனைகண் முடித்துச்செய்யுங் கடன்முறையால்
அங்கி தனைவேட் டமுதுசெய்து பள்ளிகொள்வீ"ரென,வவர்க்குத்
"தங்கள் பெருமான் றிருமணலிக் கெழுச்சி சேவித் துடனண்ண
எங்கு மெல்லா ரும்போத விழிவு தொடக்கிற் றெனை"யென்று. 24

1889. (இ-ள்.) "திங்கள் முடியார்......பள்ளிகொள்வீர்" என - "பிறையைச் சூடிய முடியினையுடைய பெருமானின் பூசனைகளை முடித்துச், செய்கின்ற கடமை முறைமையின்படி அக்கினி காரியமும் செய்து பள்ளிகொள்வீராக" என்று சொல்ல; அவர்க்கு.....என்று - அவருக்குத் "தமது தலைவராகிய சிவபெருமான் திருமணலிக்கு எழுந்தருளும் எழுச்சியினைச் சேவித்து உடன்கலக்கும்படி எவ்விடத்தும் எல்லாரும் கலந்து போந்ததனால் என்னை இழிவு தீண்டிற்று" என்று கூறி;

(வி-ரை) திங்கள் முடியார் பூசனைகள் முடித்தல் - இரவு அருச்சனை செய்யும் சிவபூசை நியதி. "சாம கண்டர் செய்ய கழல் வழிபட்டொழுகுந் தலைமை நிலையாம விரவும் பகலும்" (*1870*) என்று இந்நியதியைத் தொடக்கத்திலே அறிவித்தது காண்க.

கடன் முறையால் அங்கிதனை வேட்டு - இது அந்தணர்க்குரிய வேள்வியும், சிவபூசையின் முடிபில் அதன் அங்கமாகச் செய்யும் நித்திய வேள்வியுமாம். இவ்விரண்டினையும் குறிக்கக் **கடன் முறையால்** என்றார்.

பூசனைகள் முடித்து - அங்கிதனை வேட்டு - அமுதுசெய்து - என்றமையால் அவ்விரண்டு நியமமும் முடித்தன்றி இரவிலும் அமுது செய்தல் கூடாமை என்பதாயிற்று.

அவர்க்கு - அவ்வாறு மொழிந்த மனைவியாருக்கு - விடையாக.

அவர்க்கு - என்று - எனச் - செப்ப - என்று வரும் பாட்டுடன் முடிக்க.

உடன் நண்ண எங்கும் எல்லாரும் போத இழிவு தொடக்கிற்று - எங்கும் - என்றதனால் தங்கும் இடத்தாற்றூய்மையற்றாரும் என்பதும், **எல்லாரும்** என்றதனால் பிறப்பாலும் தொழிலாலும் ஒழுக்கம் முதலிய பிறவாற்றாலும் தூய்மையற்றாரும் என்பதும் குறிக்கப்பட்டன.

உடன் நண்ணப் - போத என்று கூட்டுக. உடன் கலந்து தீண்டும்படி புடைபட்டு போந்தமையால். **இழிவு** - தூய்மையில்லாதாரைத் தீண்டுதலால் ஒருவற்குத் தொடக்குறுதலாகிய தூய்மையற்ற தன்மை; இதனைத் **தீட்டு** (தீண்டுதலால் வருவது) விழுப்பு - என்று வழங்குவர்.

இழிவு தொடக்குதல் - இந்நாள் நவீனக் கலைஞானிகளும் இதனுண்மையை ஒப்புவர். நோயாளியைத் தீண்டும் தோறும் மருத்துவர் தம்மையும் மருத்துவக் கருவிகளையும் தூய்மைசெய்து கழுவிக்கொள்ளுதல் காண்க. இனிக், கருமப்பகுதியின் பக்குவ வேறுபாட்டால் மன முதலிய அந்தக்கரணங்களின் தூய்மையற்ற தன்மையுடையோரின் தீண்டுதலானது புறக்கரணங்களின் வழியே சென்று உட்கரணங்களை மிகவும் தாக்கிப்

1890. "ஆத லாலே குளித்தடுத்த தூய்மை செய்தே யகம்புகுந்து
வேத நாதர் பூசனையைத் தொடங்க வேண்டு; மதற்குநீ
சீத நன்னீர் முதலான கொண்டிங் கணைவா" யெனச்செப்பக்
காதன் மனையார் தாமுமவை கொணரு மதற்குக் கடிதணைந்தார். 25

புறத்தினும் மிக, அகத்துட் கேடு விளைக்கும்; இது நுண்ணிய நிலை. இதனைச் சில நவீனர் மறந்து பலவும் பிதற்றி ஒழிவர். ஆயின் நவீனருள் மனத்தத்துவக்கலை ஆராய்ச்சியாளர் இதனை ஒப்புவர். நல்லாரிணக்கமும், தீயோர் சார்பு விலக்கமும் இதனை உள்ளுறுத்தெழுந்த விதிகளேயாம்.

தொடக்குதல் - தொழுதலினாற் பற்றிப் படர்தல். 24

1890. (இ-ள்.) "ஆதலாலே....அணைவாய்" எனச் செப்ப - "ஆதலினாலே குளித்துப் பின் அடுத்த தூய்மைகள் செய்த பின்பே மனையிற் புகுந்து வேதங்களின் தலைவரது பூசனையைத் தொடங்கவேண்டும்; அதற்கு நீ குளிர்ந்த நல்ல நீர் முதலாயினவற்றைக் கொண்டு இங்கு சேர்வாயாக" என்று சொல்ல; காதல் மனையார்...அணைந்தார் - அன்புடைய மனைவியாரும் அவற்றைக் கொண்டு வருதற்கு விரைந்து சென்றனர்.

இந்த மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டுரைக்க நின்றன.

(வி-ரை) குளித்த அடுத்த தூய்மை செய்தே - குளித்தல் - புறத் தூய்மையும் **அடுத்த தூய்மை செய்தல்** - புறத்தினை அடுத்த அகத்திடத்தைத் தூய்மை செய்தலும் குறித்தன. **அடுத்த தூய்மை செய்தல்** - திருநீறிடுதலும், அகோரம் முதலிய உரிய மந்திரங்களைச் செபித்தலும், அதுபோன்ற பிறவுமாம்.

வேதநாதர் பூசனையைத் தொடங்கவேண்டும் - பூசனை தொடங்குதற்குமுன் செய்யவேண்டும் இவ்விதிகளை வேதங்கள் விதித்தலால் **வேதநாதர்** என்றார்.

சீதநன்னீர் முதலான - குளித்தற்கேற்றது குளிர்ந்த நீரே என்பது குறிப்பு. வெந்நீரிற் குளித்தல் பிற்றைநாட் செயற்கை வழக்கு. **நன்னீர்** - என்றது பலவாற்றாலும் அசுத்தப்படுத்தப்படாத தூய்மையுடைய நீர் என்றபடி. **சீதநன்னீர்** - ஏனை அகத்தூய்மைக்குரிய வழிபாட்டுக்கும் உரியது. **முதலான** - தூய்மை செய்தற்குரிய திருநீறும் - தோய்த் துலர்ந்த உடையும், மண்ணும், செபவடமும் முதலாயின.

காதல் மனையார் - கடிதணைந்தார் - இமுதுமிருள்சேர் இரவு முற்றுவதாதலின் நள்ளிரவின் முன்னர், முன்னே சொன்ன கடன்கள் முடித்து நாயகரைப் பள்ளி கொள்ளச் செய்தல் அவரது பாதுகாவலுக்கேற்றது என்ற ஆர்வம் காதல் காரணமாய் மனையாருக்கு வருவது என்ற காரணக் குறிப்புப்படக் **காதல் மனையார்** என்று உடம்பொடு புணர்த்தி ஓதினார். **கடிது (அணைந்தார்)** என்ற குறிப்புமது. **அணைந்தார்** - சென்றனர். 25

1891. (இ-ள்) ஆய...அருளாலேயோ? - அவ்வாறு மனைவியார் சீத நன்னீர் முதலான கொண்டுவரக் கடிதணைந்த அச்சிறிய நேரத்தில் தமது பெருமானது திருவருளினாலேயோ?;

1891. ஆய பொழுது தம்பெருமா **னருளா லேயோ?** மேனியினில்
ஏயு மசைவி **னயர்வாலோ?** வறியோ; மிறையுந் தாழாதே
மேய வுறக்கம் வந்தணைய விண்ணோர் பெருமான் **கழனினைந்து**
தூய **வன்பர் துயில்கொண்டார்**; துயிலும் பொழுது **கனவின்கண்**. 26

மேனியினில்... அயர்வாலோ? - அவர்தம் திருவுடம்பில், வழிச்சென்று வந்த அயர்ச்சியினாலோ?; அறியோம் - இன்ன காரணத்தாலென்று நாம் அறியமாட்டோம்; இறையும்...அணைய - சிறிதும் தாழ்க்காது பொருந்திய உறக்கம்வந்து சேர; விண்ணோர்... துயில் கொண்டார் - தேவர் பெருமானது திருவடிகளையே நினைந்த வண்ணமாய்த் தூய அன்பராகிய நாயனார் துயில்கொண்டனர்; துயிலும்போது கனவின்கண் - அவ்வாறு துயிலும்போது அவரது கனாவிலே;

(வி-ரை.) ஆயபொழுது - ஆய - "கடிதணைந்தா"ராய. கடிது அணைந்தாராயினும் அப்பொழுதினுள். **அருளாலேயோ? - அயர்வாலோ - அறியோம்** - ஓகாரங்கள் ஐயப் பொருளில் வந்தன; **அறியோம்** என்றது, மனையார் வருவதற்குள் சிறிதும் தாழாதே உறக்கம் வந்தணைதலின் காரணம் அறியோம் என்றபடி. குளித்துப் பூசைக்கடன் முடித்தலினை எதிர்நோக்கியும், மனைவியார் விரைந்து நன்னீர் கொணர்தலினை எதிர்பார்த்துமிருந்த நாயனுருக்கு இவ்வாறு மிக விரைவில் உறக்கம் வந்தது; அன்றியும், விழிப்புநிலை நீங்குதலுக்கும் உறக்க நிலை புகுதலுக்கும் இடையில் வேண்டும் சிறிது காலம் பெருது **இறையும்** தாழாதே உறக்கம் வந்தது; ஆதலின் இதற்குக் காரணம் மேனியசைவின் அயர்ச்சியன்று; பின்சரித நிகழ்ச்சிக்குரிய திருவருளே யாம் என்பது இவ்விஞக்களின் கருத்து. **அருளாலேயோ** என முன் வைத்தமை இக்குறிப்புத் தருவதாம். அருளாலோ என்னுது **அருளாலேயோ** என்ற ஏகாரமும் இக்குறிப்புப்பட வைத்ததாம். "தம் மேலைச் சார்புணர்ந்தோ? சாரும் பிள்ளைமைதாஞே?" (திருஞான புராண - 63) முதலியவை காண்க. இவ்வாறு கருதவைத்து கூறுதல் ஆசிரியரது தெய்வக் கவிநலச் சிறப்புக்களுள் ஒன்று.

இறையும் தாழாதே மேய உறக்கம் வந்து அணைய - இறையும் - சிறிதும். **மேய** - பொருந்திய - அருட்குறிப்புப் பொருந்திய. **வந்து** - விரும்பாது தானே வந்து.

விண்ணேர் பெருமான் - தியாகேசர். "தேவர் பெருமான்...... விண்ணவர்தங் காவலாளர்" (*1887*). **கழல் நினைந்து - துயில் கொண்டார்.** "மருட் கேவலமுண்டாக்கும் உறக்க மெய்தாது நின்மலாவத்தை யெய்தி யுறங்கினர் எனக் கொள்க" என்பது ஆறுமுகத் தம்பிராஞருரை. **விழிப்பு மாறிய உறக்க நிலையிலும் இறைவரது நினைவு மறக்கப்படா தொழுகுதல் பெரியோர்களது தன்மை. விழிப்பு நிலையினும் மறத்தல் எம்போன்ற கீழோர் இயல்பு. தூய அன்பர்** - என்பதும் இக்குறிப்பு. **தூய்மை** யாவது ஆணவ மறைப்பினுல் அடிமைத்திறம் மறைக்கப்படாமை.

கனவின்கண் - விதிவிடங்கப் பெருமான் - வந்தருளி - என்றருளிச் செய்து - அகன்றுர் - என மேல்வரும் பாட்டுடன் கூட்டி முடிக்க. *26*

1892. மேன்மை விளங்குந் திருவாரூர் வீதி விடங்கப் பெருமாடாம்
மான வன்பர் **பூசனைக்கு வருவார் போல வந்தருளி**
"ஞான மறையோ **ராரூரிற் பிறந்தா ரெல்லா நங்கணங்க**
ளான பரிசு காண்பா"யென் றருளிச் செய்தங் கெதிரகன்றார். 27

1892. (இ-ள்) மேன்மை...வந்தருளி - பெருமை விளங்குதற் கிடமாகிய திருவாரூரின்கண் எழுந்தருளிய வீதிவிடங்கப் பெருமாள் தாமே, பெரிய அன்பராகிய நமிநந்தியடிகளுடைய பூசனை ஏற்பதற்கு வருபவர்போல எழுந்தருளிவந்து; ஞானமறையோர்.....எதிரகன்றூர் - "திருவாரூர்ப் பிறந்தார்களெல்லாம் ஞான மறையோர்களாய் நம் சிவகணங்களேயான பரிசினை நாம் காட்ட நீ காண்பாயாக" என்று அருளிச் செய்து அவர் எதிரே மறைந்தருளினர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை.) வீதிவிடங்கப் பெருமான் - அன்பர் பூசனைக்கு வருவார் போல - நமிநந்தியடிகள் இனிக் குளித்துத் தூய்மை செய்து செய்யவிருக்கும் பூசனையை ஏற்றுக்கொள்ள முன்வருவார்போல. இதனுல் நமிநந்தியடிகளார் தமது நித்திய பூசையில் தியாகேசரையே தம் ஆன்ம பூசைக்குரிய நாயகராகக் கொண்டு நியமமாகப் பூசித்தனர் என்பதும், அவ்வாறு செய்யும் பூசைகொள்ளத் தினமும் வரும் வழக்கம்போல இறைவர் வந்தருளினர் என்பதுமாம். எங்கும் நிறைந்த இறைவரைத் தமது பூசை முடியும் வரையில் பூசைக்காகக் கொண்ட இலிங்கத் திருமேனியினிடத்து விளக்கமாக எழுந்தருளி யிருக்கவேண்டுமென்று விண்ணப்பித்தலும் அவ்விதமே ஆகுக என்று அவர்அருளுதலும் ஆகிய சிவபூசை ஆகம விதிமுறையும் இங்குக் கருதத்தக்கது.

மேன்மை விளங்கும் திருவாரூர் - விளங்கும் - இன்றும் விளங்குதற்கிடமாகிய; மேன்மையாவது திருவாரூரில் தியாகேசர் ஆட்சி புரிந்தருளுதல்.

ஆரூர்ப் பிறந்தார் எல்லாம் ஞான மறையோர்: ஆதலின் **(அவர்) தம்கணங்கள் ஆன பரிசு** என்று கூட்டுக. "திரு ஆரூர்ப் பிறக்கும் பெருமைத் தவமுடையார்" (தண்டியடிகள் - புரா - 1) என்றபடி முன்னைத் தவத்தால் ஞானம் பெற்று முத்திபெறத் தகுந்த பக்குவமுடைய ஆன்மாக்களே திருவாரூரில் வந்து பிறக்கும்பேறு பெறுவர்; ஆதலின் **பிறந்தார் எல்லாம் ஞான மறையோராவர்;** ஆதலால் அவர் முத்திபெற்று நம் கணங்களாவார் என்றதன்மை. இதுபற்றியே "திருவாரூர்ப் பிறந்தார்களெல்லார்க்கு மடியேன்" என்று திருத்தொண்டத் தொகையுள் இவர்களைத் தொகையடியார் கூட்டத்தினுள் வைத்துப் போற்றினர். "திருவாரூர்ப் பிறக்கமுத்தி" என்பது மிக்கருத்து. இக்கருத்தறியாது **ஞானமறையோய்** என்று பாடங்கொண்டு, நமிநந்தியாரை இறைவர் விளித்ததாக உரைகொள்வாருமுண்டு.

எதிர் அகன்ருர் - எதிரினின்றும் அறைந்தருளினர். *27*

1893. ஆதி தேவ ரெழுந்தருள, வுணர்ந்தா "ரிரவர்ச் சனைசெய்யா
தேத நினைந்தே" னெனவஞ்சி, யெழுந்த படியே வழிபட்டு
மாத ரார்க்கும் புகுந்தபடி மொழிந்து விடியல் விரைவோடு
நாத னூர்தந் திருவாரூர் புகுத வெதிரந் நகர் காண்பார், 28

1893. (இ-ள்.) ஆதிதேவர் எழுந்தருள - முன் கூறியவாறு ஆதிதேவர் மறைந்தருளினராக; உணர்ந்தார் - உணர்ந்தவராகி; இரவு......அஞ்சி - "இரவிற் செய்யும் பூசனையைச் செய்யாமல் பிழைபட நினைந்தேன்" என்று அஞ்சி; எழுந்தபடியே வழிபட்டு - உணர்ந்து எழுந்த அவ்வாறே உட்புகுந்து வழிபட்டு; மாதரார்க்கும்......மொழிந்து - மனைவியார்க்கும் போந்த செய்தியைச் சொல்லி; விடியல்......புகுத-விடியற்காலையில் விரைவினோடு சென்று இறைவருடைய திருவாரூரினுள் புகுத; எதிர் அந்நகர் காண்பார் - எதிரில் அத்திருநகரத்தைக் காண்பவராகிய நாயனுர்;

(வி-ரை.) ஆதிதேவர் - முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான்; தேவர்கள் அனைவர்க்கும் இறைவராக உள்ள மகாதேவர் என்றலுமாம். "ஆதி பகவன்" (திருக்குறள் *1*) ஆதி - எல்லாவற்றுக்கும் தொடக்கமாகவும் காரணமாகவும் உள்ள பழைமையான இறைவர். "மூளைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி" (அரசுகள் தேவாரம் - திருவாலவாய் - திருத்தாண்டகம் *1*); "ஆதீயுனக் காளாயினி அல்லேனெனலாமே" (நம்பிகள் தேவாரம் - இந்தளம் - திருவெண்ணெய் நல்லூர்); "அந்தம் ஆதி என்மனுர் புலவர்" (சிவஞான போதம் - சூத்திரம் *1*).

எழுந்து அருள - கனவின்கண் வந்து நாயனுர்க்கு, "ஆரூரில் பிறந்தார் எல்லாரும் ஞானமறையோர்; அவர்கள் அனைவரும் நம் கணங்களாவர்; அவ்வுண்மையை நீ அறிவாயாக", என்று உணர்த்தி யருளியபின் மறைந்தருளினராக. தாம் கனவிற் காட்டிய வடிவத்தைச் சொரூப நிலையுள் மறைத்தருள.

அருள - இறைவர் அவ்வாறு திருவுருக் கரந்ததும் அருளிப்பாடே யாகும். இன்றெனில் கனவில் தோன்றி நிற்கும் அந்நிலையையே நாயனுர் கண்டு தொடர்ந்து இன்புற்றிருக்க, இரவுப் பொழுது முழுதும் கழிந்துபோம். நாயனுர், அன்றிரவு தம ஆன்மநாயகரை அருச்சித்துப் பூசிக்கும் நியதியினின்றும் வழுவி யிருப்பர். கனவில் இறைவரைக் கண்டு போற்றுதலும் பூசனையே எனினும்; நாயனுர் கனவு நனவு இரண்டிலும் பூசனைபுரியும் பேறு பெறுதல் வேண்டுமென்று இறைவர் திருவுள்ளம் பற்றினுராகலின், கனவினின்றும் மறைந்தார். அவ்வாறு மறைந்தது அருளிப்பாடே என்றவாறு.

அருள உணர்ந்தார் - என்று கூட்டியுரைத்து "நாயனுர் உணர்தல் வேண்டும்" என்று இறைவர் திருவுள்ளம் பற்றினுராகலின் நாயனுர் உணர்ந்தார் எனலும் அமையும். ஆன்மாக்கள் உணர்தல் இறைவர் அருளினுலன்றி அமையாதாம். "காண்பாரார் கண்ணுதலாய் காட்டக்காலே" (அரசுகள் தேவாரம் - தனித் திருத்தாண்டகம் *3*). "அவன் அருளாலே அவன்றுள் வணங்கி" (திருவாசகம் - சிவபுராணம் - *18*). "காணுங் கண்ணுக்குக் காட்டும் உளம்போல் காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்" (சிவஞானபோதம் - சூத்திரம் *11*).

ஏதம் நினைந்தேன் - ஏதம் - இரவில் உரிய காலத்தில் ஆன்ம நாயகரைப் பூசிக்காமல் காலந்தாழ்ந்த நினைந்த ஏதமும், திருவாரூரில் பிறந்த "ஞானமறையோரும் சிவகணங்களுமாகிய" புனிதப்படுத்தும் அடியார் கூட்டத்தை இழிவு தொடக்கும் கூட்டமாக நினைந்த ஏதமுமாம்.

அஞ்சி - சிவாபராதமாகிய ஏதம் செய்ய இருந்ததனை நினைந்து அச்சமடைந்து. திருவாசகம் - அச்சப்பத்து முழுதும் பார்க்க. "அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில்" (திருக்குறள் 428).

எழுந்தபடியே வழிபட்டு - நீராடித் தூய்மை செய்து கொள்ளாதது மட்டுமன்றித் துயிலுணர்ந்து எழுந்ததும் முகம் கை கால்களைக் கூட நீரால் தூய்மை செய்துகொள்ளாமல் விழித்தெழுந்த அந்நிலையிலேயே வழிபாடு தொடங்கி சோர்வாலாகிய ஏனைய உறக்கத்தின் பின் தூய்மை செய்துகொண்டு புத்துணர்வு பெறுதல் சாலும்; ஆனால் நாயனாரின் இவ்வுறக்கம் சோர்வையும் ஏத நினைவையும் நீங்கிய புனிதக் காட்சியைத் தரிசிக்கச் செய்ததாகலின் அக்கனவுக் காட்சியையே கழுவி ஒதுக்குவதுபோல் நீரால் தூய்மை செய்துகொள்வது அமையும்; ஆதலின் அதைத் தவிர்க்க, "எழுந்தபடியே வழிபட்டார்" என்றவாறு.

மாதாரார்க்கும் - மாதர் - பெண், காதலி, பொன் - ஈண்டு, அம்மையார், தம் கணவனாரின் உலகியல் வாழ்வுக்குத் துணைவியராக அமைந்தது மட்டுமன்றி, அவர்தம் ஆன்ம வாழ்விலும் துணை நின்றார். இதனை, அவர், தம் கணவனார் வழி நடந்து வந்த அயர்வால் புறங்கடையில் துயிலும் நிலையிலும் அவரைத் துயிலுணர்த்தித் "திங்கள் முடியார் பூசனைகள் முடித்துச் செய்யுங் கடன் முறையால் அங்கிதனை வேட்டு" அதன் பின்பே "அமுது செய்து பள்ளிகொள்ள" வேண்டுவதால் அறிக. அதனால் நாயனாருக்கு உடலோடு மட்டுமன்றி உயிர்க்கும் காதலியாகின்றார். எனவே பொன் போன்ற உயர்வுடையவரானார். ஆதலின் "**மாதர்**" என்ற மட்டில் அமையாது "ஆர்" என்ற சிறப்பு விகுதியும் புணர்த்து "**மாதாரார்க்கும்**" என்று கூறினார் ஆசிரியர். முன் பாட்டிலும், "முழுதும் தருமம்புரி மனையார்" என்றது காண்க. நாயனார், தாம் கனவிற் கண்ட இறைவரின் அருளிப்பாட்டை "அருளுடையார் அளித்தருளும் செவ்விய பேரருள் விளம்புந் திறமன்று" (1743) என்ற விதிக்கு மாறாக ஈண்டு, "மாதரார்க்கும் புகுந்தபடி மொழிதல்" அம்மையாரின் சிவனடிமைத் திறம் கருதியேயாம் என்க.

புகுந்தபடி - கனவில் நிகழ்ந்த வண்ணம்.

புகுதல் - உரியவர் அனுமதியின்றி அவர் அழையாதிருந்த காலத்தும் தானே வலிய உள் நுழைதல். "புகுந்தனன் முத்தநாதன்" (473). ஈண்டு, நாயனார் நினையாதிருந்த போதும் இறைவன் அவர் கனவில் தோன்றினான் என்றவாறு.

விரைவோடு - கனவில் பெற்ற அருளிப்பாட்டை நேரில் காணும் ஆவலால் செல்கின்றார் - ஆதலின் வழக்கமாகச் செல்வதைவிட விரைந்து செல்கின்றார் என்றவாறு.

நாதனார்தம் திருஆரூர் - நாதனார் - சிவபெருமான். **திருஆரூர்** - அவர்தம் செல்வமாகிய முத்தித்திரு நிறைந்த திருவாரூர்.

1894. தெய்வப் பெருமா டிருவாரூர்ப் பிறந்து வாழ்வா ரெல்லாரும்
மைவைத் தனைய கண்டரவர் வடிவே யாகிப் பெருகொளியான்
மொய்வைத் தமர்ந்த மேனியராம் பரிசு கண்டு, முடிகுவித்த
கைவைத் தஞ்சி யவனிமிசை விழுந்து பணிந்து களிசிறந்தார். 29

ஆர்தல் - நிறைந்து இருத்தல். ஞான மறையோர்களாகவும், சிவ கணங்களாகவும் விளங்கும் திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லாரும் சிவபெருமானின் உடைமைப் பொருள்களாகிய அவன் செல்வங்களேயாம். அவர்கள் நிறைந்துள்ள ஊராதலின் "**திருவாரூர்**" என்றார் எனலுமாம்.

எதிர் அந்நகர் காண்பார் - தொலைவில் வரும் பொழுதே முதலில் கட்புலனாவது நகரமாதலின் அதை ஈண்டுக் கூறினார். அண்மையில் நெருங்க அந்நகரின் மக்களாகிய "திருவாரூர்ப் பிறந்தார்" தெரிவதும்; மேலும் அருகில் வர அவர்கள் அனைவரும் சிவகணங்களாகக் காட்சி தருவதும் வரும் பாட்டில் கூறுவார். *28*

1894. (இ-ள்.) தெய்வம்...எல்லாரும் - தேவர் தலைவராகிய தியாகேசரது திருவாரூரில் பிறந்து வாழ்வார்கள் எல்லாரும்; மை வைத்தனைய...பரிசு கண்டு - மை வைத்தது போன்ற கண்டத்தை யுடைய பெருமானது திருவடிவத்தையே உடையவர்களாகிப் பெருகும் ஒளியினால் திரண்ட மேனியினைக் கொண்டவர்களாய் விளங்கும் தன்மையினைக் கண்டு; முடி குவித்த...களிசிறந்தார் - உச்சியின் மேல் கூப்பிய கை தூக்கி வைத்து அஞ்சி நிலம் தோய வீழ்ந்து வணங்கி மிகவும் களிப்பினை யடைந்தார்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை.) தெய்வப் பெருமாள் - "தேவர் பெருமான்" (*1887*); பெருந்தெய்வம் என்றலுமாம்.

பிறந்து வாழ்வார் - வாழ்வார் - சிவனையும் அடியாரையும் மறவாது போற்றுதலால் வாழ்வின் பயன் பெற்று வாழ்பவர். **பிறந்தார்** என்றது **பிறந்து வாழ்வார்** என்றதும் இக்கருத்து. அவ்வாறு பெறுதோர் பிறந்தும் பயன் பெறுமையிற் பிறந்திலரே யாவர் என்பதும் குறிப்பு. "மற்றுப் பிறந்தவர் பிறந்தி லாரே" (தேவா).

மைவைத்த கண்டரவர் வடிவே யாகி - என்றது சிவசாரூபம் பெற்ற நிலை. இது சிவயோகங் கைவந்த பெரியோர் ஞானம் பெற்றுச் சிவசாயுச்சிய மடையதன் முன் பெறும் பதமாம். சரியையாதி நான்கனுள் இரண்டாவது கிரியையாளர் பெறும் பதம். "ஞான மறையோர்" (*1894*).

பெருகு ஒளியால் மொய் வைத்து அமர்ந்த மேனி - பேரொளிப் பிழம்பாய்ச் சிவவொளியிற் றோன்றும் சோதி வடிவம். **மொய் வைத்து** - மொய்த்தலைச் செய்து; **பெருகுஒளி** - இது சிவஞான வொளி. மற்று எல்லா ஒளிகளுக்கும் மேலானது. "ஒளியா யொளியத னொளியா யொளியத னொளியுந் தணிதருமொளியாகி" (பேரூர்ப் புராணம் - நிருத்தப்படலம்) "மாயை யாக்கையின்மேலளவின் றுயர்ந்த சிவமயமாய்...சூழ்ந்த

1895. படிவ மாற்றிப் பழம்படியே நிகழ்வுங் கண்டு பரமர்பால்
''அடியேன் பிழையைப்பொறுத்தருள வேண்டு''மென்று பணிந்தருளாற்
குடியுந் திருவா ரூரகத்துப் புகுந்து வாழ்வார் குவலயத்து
நெடிது பெருகுந் **திருத்தொண்டு நிகழச் செய்து நிலவுவார்;** 30

வொளியிற் றேன்றினர்'' (*1260*). திருஞான - புரா - *829* - *831* - முதலியவை காண்க. சிவசாயுச்சியத்துட் கலந்து ஒன்றுவதற்கு முன்னைநிலை.

மைவைத் தனைய கண்டரவர் வடிவேயாகி - பெருகு ஒளியால் அமர்ந்த மேனியர் **ஆம் பரிசு** - ஆரூரில் வந்து பிறந்த தன்மையாலே காலாந்தரத்தில் சிவசாரூபம் பெற்று முத்தியடையும் தன்மை. **ஆம்** - இனி ஆகும் என்ற குறிப்பும் தருவது. **ஆம் பரிசு கண்டு** - முன்னர் ''ஆன பரிசு காண்பாய்'' (*1892*) என்று அருளிக்காட்ட, அவ்வாறே ஆகும் பரிசு கண்டார் என்க. ''காட்டுவித்தா லாலொருவர் காணுதாரே காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே'' (தேவா). முன்னர் அவ்வாறு காணுது ''எல்லாரும்போத இழிவு தொடக்கிற்று'' (*1889*) என்று கண்டார். இப்போது இறைவன் றிருவருள் காட்ட அது மாறிச் சிவவொளி கண்டார்.

முடிகுவித்த......சிறந்தார் - இவை உண்மை கண்டவுடன் நிகழ்ந்த மெய்ப்பாடுகள்.

மைவைத்தனைய மணிகண்டர் - என்பதும் பாடம். *29*

1895. (இ-ள்.) படிவம்......கண்டு - முன் காட்டிய படிவத்தை மறைக்க முன்னிருந்தபடியே நிகழ்வதனையும் கண்டு; பரமர்பால்...பணிந்து - இறைவரிடம் ''அடியேனது பிழையைப் பொறுத்தருள வேண்டும்'' என்று விண்ணப்பித்து வணங்கி; அருளால்...வாழ்வார் - திருவருளினாலே தமது தலத்தினின்றும் திருவாரூரினில் குடிபுகுந்து வாழ்வாராகி; குவலயத்து... நிலவுவார் - உலகத்தில் நெடிது பெருகுகின்ற திருத்தொண்டுகளிற் பலவற்றையும் நிகழும்படி செய்து நிலவுவாராகி;

(பரிசு கண்டதுபோலப்) (*1894*) - பழம்படியே நிகழ்வுங்கண்டு, பணிந்து - புகுந்து - செய்து - நிலவுவாராய் (*1895*); மேவுதலால் - தொண்டர்க்கு ஆணி எனும்பேறு - பெற்ற பெருமையினுராகித் (*1896*); திருப்பணிகள் செய்து, நமிநந்தியடிகள் திருவாரூர் மன்னர் பாதநீழல் - சோதி மன்னினர் (*1897*) என்று இந்த மூன்று பாட்டுக்களையும் தொடர்ந்து கூட்டி வினைமுடிவு கொள்க.

(வி-ரை.) படிவம் - ''தெய்வப் பெருமாள்......பரிசு கண்டு'' (*1894*) என்று முன் பாட்டிற் கூறியபடி கண்ட வடிவம்; இஃது இறைவர் காட்டக்கண்ட காட்சி; **பழம்படியே நிகழ்வும் கண்டு** - அதற்கு முன் தாம் கண்ட பழையபடியே உள்ள கோலத்தையும் கண்டு; **நிகழ்வும்** - மேனியராம் பரிசு கண்டு அதுபோல நிகழ்வும் கண்டு என உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை.

பிழை - திருவாரூர்ப் பெருமான் எழுச்சியில் சேவிக்கப் புகுந்தார் பல குலத்தாரும் புடைபட்டுத் திரண்டு சேர்தலின் இழிவு தொடக்கிற்று என்றும், அதற்குக் குளித்துத் தூய்மை செய்தல் வேண்டும் என்றும் எண்ணிய பிழை.

1896. நீறு புனைவா ரடியார்க்கு நெடுநா ணியதி யாகவே
வேறு வேறு வேண்டுவன வெல்லாஞ் செய்து மேவுதலால்
ஏறுசிறப்பு மணிப்புற்றி லிருந்தார் "**தொண்டர்க் காணி**"யெனும்
பேறு திருநா வுக்கரசர் விளம்பப் பெற்ற பெருமையினுர்; 31

திருவாரூ ரகத்துக் குடியும் புகுந்து வாழ்வார் - தம் ஊரை விட்டுத் திருவாரூரில் குடிபுகுந்து வாழ்வடைவாராகி தம் ஊரில் நின்ற வாழ்க்கையின் மேலாய்த் திருவாரூரிற் குடிபுகுந்து இருத்தலைப் பெருவாழ்வாகக் கொண்டனர்; தமக்கும் உலகர்க்கும் பயன் கருதி.

குவலயத்து நெடிது பெருகும் திருத்தொண்டு - இஃது இறைவர் பணி. நித்திய நைமித்திகங்கள் என்று முன் *1884 - 1885*-ல் கூறியவையும், சரியையாதி பிறவுமாம். அடியார் பணியை மேல்வரும் பாட்டிற் கூறுவது காண்க. *30*

1896. (இ-ள்.) நீறுபுனைவார்.......மேவுதலால் - திருநீற்றினைப் புனைவாராகிய சிவபெருமானது அடியார்களுக்கு நெடுங்காலமாக நியதியாக வேறு வேருக வேண்டுவன எல்லாவற்றையும் செய்து பொருந்தியதனுல்; ஏறு...பெருமையினுர் - ஏறும்சிறப்பினுடன் மணிப்புற்றையிடங்கொண்டு வாழ்கின்ற பெருமானின் "தொண்டர்க்கு ஆணிப் பொன்னுவார் இவர்" என்று பாராட்டும் பேறு திருநாவுக்கரசர் பெருமானுல் விளம்பப்பெற்ற பெருமையினை உடையராய்;

(வி-ரை.) வேறு வேறு வேண்டுவன எல்லாம் - வெவ்வேறு திறம்பட வரும் அடியார்களுக்கு வேண்டுவன வெவ்வேருய் நிகழுமாதலின் **வேறு வேறு** என்ருர். இப்புராணத்துள் வரும் அடியார்களின் வரலாறுகள் பலவும் கருதுக.

ஏறு சிறப்பு - உயர்வாகிய சிறப்பு - "ஏறுமயி லேறி விளையாடும்" (திருப்புகழ்)

மணிப்புற்றிருந்தார் - புற்றிடங் கொண்ட பெருமான். **மணி** - அழகு. **மணியிருத்தற்கிடமாகிய** என்றலுமாம்.

"**தொண்டர்க்கு ஆணி**" - "ஆராய்ந் தடித்தொண்ட ராணிப்பொன்" என்பது திருவிருத்தம். **ஆணி** - பொன்னுரையாணி, இயல்பிற் பெருமையுடைய பொன்னையும் அளந்து காட்டும் உரை ஆணிபோல இயல்பாற் பெருமையுடைய அடியார்களின் தொண்டின் றிறங்களை அளந்து காட்டுபவர் என்பது. "நமிநந்தி யடியார்க்கு மடியேன்" என்று தொகை நூலுட் கூறியது மிக்கருத்து. "ஆணியை" (கோயில் - குறுந்.)

"ஆராய்ந் தடித்**தொண்ட ராணிப்பொ** னூரு ரகத்தடக்கிப்
பாரூர் பரிப்பத்**தம் பங்குனி யுத்தரம் பாற்படுத்தான்**
நாரூர் நறுமலர் நாத னடித்தொண்ட **னம்பிநந்தி**
நீராற் றிருவிளக் கிட்டமை நீணு டறியுமன்றே" (தேவாரம்)

நாயனுரது சரித வரலாற்றுக்கு இத்தேவாரம் பேராதரவு தருவது காண்க.

திருநாவுக்கரசர் விளம்பப்பெற்ற பெருமை - இறைவரைப் போற்றும் தேவாரத்தினுள் எந்தம் பரமாசரியர்களால் வைத்துப் பாராட்டப்படுதல் மிகப் பெரும் பேருகும்; இறைவரது பெருமைகளை யன்றி வேறொன்றும் போற்ருத மெய்த்திருவாக்குக்கள் அவையாதலின். "அன்ன மெய்த்திரு வாக்கெனு மமுதம்" (திருஞான - புரா. *1088*); "பிள்ளையார்தந்

1897. இன்ன வகையாற் றிருப்பணிக ளெல்லா வுலகுந் தொழச்செய்து
நன்மை பெருகு நமிநந்தி யடிக ணயமார் திருவீதி
சென்னி மதியுந் திருநதியு மலேய வருவார் **திருவாரூர்**
மன்னர் பாத நீழன்மிகும் வளர்பொற் சோதி மன்னிஞர். 32

திருவாக்கிற் பிறந்தலாலே சிவமே கூடின" (திருஞான-புரா 983) முதலியவையும், பிறவும் கருதுக. இந்நாயனுரைத் திருநாவுக்கரசர் போலவே, ஆளுடைய பிள்ளையாரும் தமது தேவாரத்தினுட் பாராட்டி யருளியமையும் இங்குக் கருதத்தக்கது.

> "தாவியவ னுடனிருந்தும் காணுத தற்பரனே
> யாவிதனி லஞ்சொடுக்கி யங்கணனென் றுதரிக்கும்
> நாவியல்சீர் **நமிநந்தி யடி**களுக்கு நல்குமவன்
> கோவியலும் பூவெழுகோற் கோளிலியெம் பெருமானே"

என்றதனுள் இவருடைய சீலமும் அன்பின் உரைப்பும் பேசப்பட்டன காண்க. "உணர்வொழியா வின்பமெய்திஞர்" (1870); "விண்ணோர் பெருமான் கழனினைந்து, தூயவன்பர் துயில்கொண்டார்" (1891); முதலியவை இத்தேவாரக் கருத்தின் விரிவாகுமென்க.

ஏறு சிறப்பின் - என்பதும் பாடம். 31

1897. (இ-ள்.) நன்மை பெருகு நமிநந்தி அடிகள் - நன்மைகளெல்லாம் பெருக வரும் நமிநந்தி யடிகளார்; இன்ன...செய்து - இவ்வாறு எல்லா வுலகும் தொழும்படியாகத் திருப்பணிகள் பலவற்றையுஞ் செய்து; நயமார்...வருவார் - நலம் பொருந்தும் திருவீதியில் சென்னியில் பிறையும் கங்கையும் பொருந்த வருவாராகிய; திருவாரூர் மன்னர் - திருவாரூர்த் தியாகராசருடைய; பாதநிழல்...மன்னிஞர் - திருவடி நீழலின் வளர்கின்ற அழகிய சோதியினுள் நிலேபெற்றுச் சார்ந்தனர்.

இந்த மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை.) எல்லாவுலகும் தொழ - உலகமெல்லாந் தெரிந்து பின்பற்றித் தொழுது உய்ய.

திருவீதி வருவார் திருவாரூர் மன்னர் - வீதிவிடங்கப் பெருமானாகிய தியாகேசர்.

பாதநீழல் வளர் பொற்சோதி மன்னிஞர் - "மன்ன"ரைத் தமது ஆன்மநாயகராகக் கொண்டு வழிபட்டாராதலின் அவர் திருவடியிற் சிவவொளியில் கூடிஞர். அவரை ஆன்ம நாயகராகக் கொண்டு நியதியாக வழிபட்டமை "பூசனைக்கு வருவார்போல" (1892) என்றதனுற் காண்க.

நீழல் - சோதி - பிறவி வெம்மையினை மாற்றுதலின் **நீழல்** என்றும், அறியாமையைச் செய்யும் மூலமாகிய ஆணவ இருளை மாற்றுதலின் சோதியென்றும் உருவகித்து உபசரிப்பது மரபு. "சுழலால் துயர்வெயிற் சுட்டிடும் போதடித் தொண்டர் துன்னு, நிழலாவன" (தேவா). இவை வெவ்வேறு தன்மை குறித்தலின் தம்முள் முரண்படாமை உணர்க.

மன்னுதல் - மீளாது நிலே பெற்று நிற்றல். 32



சுந்தரமூர்த்தி நாயனார்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்தி நாயனார் துதி

தொகை

"ஆரூர னாரூரி லம்மானுக் காளே" - திருத்தொண்டத்தொகை

வகை

"நந்திக்கு நம்பெரு மாற்குநல் லாரூரி னாயகற்குப்
பந்திப் பரியன செந்தமிழ் பாடிப் படர்புனலிற்
சிந்திப் பரியன சேவடி பெற்றவன்; சேவடியே
வந்திப்ப வன்பெயர் வன்றொண்ட னென்பரிவ் வையகத்தே"

- திருத்தொண்டர் திருவந்தாதி

விரி

1898. **நாட்டா ரறிய முன்னாளி னன்னா ளுலந்த வைம்படையின்
பூட்டார் மார்பிற் சிறியமறைப் புதல்வன் றன்னைப் புக்கொளியூர்த்
தாட்டா மரையின் மடுவின்கட் டனிமா முதலை வாய்நின்றும்
மீட்டார் கழல்க ளினைவாரை மீளா வழியின் மீட்பனவே.** 1

துதி: இனி நிறுத்த முறையானே, "திருநின்ற" என்ற திருத்தொண்டர் தொகைப் பாசுரத்தினுள், "நமிநந்தி யடியார்க்கு மடியேன்" என்ற சரிதத்தினை அடுத்து, "ஆரூர னாரூரி லம்மானுக் காளே" என்றதனுட் போந்தபடி ஆரூர் நம்பிகள் ஆரூர்ப்பெருமானுக்கு ஆளாயின சரிதத்தின் ஓர் பகுதியைக் கூறத் தொடங்கிய ஆசிரியர் அதனைக் துதிமுகத்தாற் கூறுகின்றார்.

தொகை: தொகை நூலுள் "திருநின்ற" என்ற திருப்பாட்டிற் சொல்லப்பட்ட ஏழு அடியார்களுக்கும் தனித்தனி அடியேனாகிய ஆரூரன், திருவாரூர் அம்மானுக்கும் ஆள் என்று தொடர்புபடுத்தி முடிக்க. இவ்வாறு முன் உரைத்தவை பார்க்க.

வகை : நந்தியும், நம்பெருமானும், திருவாரூர் நாயகனுமாகிய இறைவருக்கு அளவுபடாத சிறப்புடைய செந்தமிழ்த் திருப்பதிகத்தினைப் பாடி, ஓடும் நீரினையுடைய காவிரியினிடையே சிந்தித்தற் கரிதாகிய அத்திருவடியின் அருளினைப் பெற்றவர்; அத்திருவடியையே வந்திப்பவர்; அவர் பெயர் இவ்வுலகத்தில் வன்றொண்டர் என்று சொல்லுவர்.

நந்தி - சிவபெருமான் றிருப்பெயர். "நந்தி மகன்றனை" (திருமந்). **படர்புனலில்...பெற்றவன்** - காவிரியாற்றுப் பெருக்கில் நம்பிகளும் கழறிற்றறிவாரும் (திருவையாறு கண்டு கும்பிடக்) கடந்து செல்வதற்குப் "பரவும் பரிசு" என்ற திருப்பதிகம் பாடித் திருவருளால் ஆறு வழிவிடச் சென்று வழிபட்டு வந்த வரலாறு குறித்தது. (கழறிற்றறிவார் புராணம் *131 - 139*) **சேவடி** - திருவருள். **சேவடியே** - அத்திருவடிகளையே.

ஏகாரம் பிரிநிலை; பெற்றவன் - வந்திப்பவன் - பெயர் - வன்றொண்ட னென்பர் என்று முடிக்க.

1898. (இ-ள்.) நாட்டார் அறிய - நாட்டின் மக்கள் அறியும்படி; முன்நாளின் - முன்னைநாளில்; உலந்த...தன்னை - இறந்த, ஐம்படை யணிந்த மார்பையுடைய சிறிய வேதியப் புதல்வனை; புக்கொளியூர்...நின்றும் - புக்கொளியூரில் தாளையுடைய தாமரைத் தடத்தில் தனித்த பெரிய முதலையின் வாயினின்றும்; நன்னாள் - நல்ல நாளில்; மீட்டார் - மீட்டவராகிய ஆளுடைய நம்பிகளுடைய; கழல்கள் - திருப்பாதங்களே; நினைவாரை...மீட்பனவே - தம்மை நினைவார்களை மீளாவழியினின்று மீட்பனவாம்.

(வி-ரை.) நாட்டாரறிய என்பது **நாட்டார் அறிய - உலந்த** என்றும், **நாட்டாரறிய - மீட்டார்** என்றும், **நாட்டாரறிய - மீட்பன** என்றும் தனித்தனி கூட்டி உரைக்கநின்ற முதனிலைத்தீவகம். **நாட்டார்** - அருள் நாட்டமுடையவர்கள் என்றலுமாம்.

நன்னாளின் - மீட்டார் - என்று கூட்டுக. இவ்வாறன்றி, **நன்னாளுலந்த** என்று வைப்பு முறையின்படியே கொண்டு, இறந்தது இறந்தபடியே ஒழியாது முன்போல மீள நன்கு வந்து வாழ்தற்கேது வாயினமையாலும், ஏனையோர்போலப் பிரமனாற் படைக்கப்படாது சிவனருள் வழியே சிவசிருட்டியாய் வந்தமையாலும், சிவனருள் விளைவுக்குக் கருவியாய் நின்றமையாலும் அவன் உலந்தநாள் **நன்னாள்** எனப்பட்டது என்றலுமாம்.

ஐம்படையின் பூட்டு ஆர் - ஐம்படை - ஐம்படைத்தாலி - "ஐம்படைச் சதங்கை சாத்தி" (150); **பூட்டு** - பூணுதற்குரிய அணி. **பூட்டு** - பூட்டப்படுவது. **ஆர்** - பொருந்திய.

சிறியமறைப் புதல்வன் - ஐந்து வயதுடைய வேதியச் சிறுவன்.

புக்கொளியூர் - திரு அவிநாசி என வழங்குவது; **புக்கொளியூர்** - ஊர்ப்பெயர், அவிநாசி என்பது அங்கு எழுந்தருளிய இறைவர் பெயர். "புக்கொளியூர் அவிநாசியே!" (தேவா.)

மீட்டாரது கழல்கள் தம்மை நினைவாரை மீட்பன என்க.

மீளா வழியின் மீட்பன - மீளாவழி - மீளாப் பிறவி வழி - **மீளா** என்பது தொலைக்க முடியாத - மீளுதல் எளிதில் அமையாத என்க.

நெறியினின்றும் மீட்பன - இன் - நீக்கப்பொருளில் வந்த ஐந்தனுருபு.

முதலை வாயின் மறைச் சிறுவனை மீட்டாராதலின் அதுபோல **முதலையைப் போன்று விடாது பற்றிக்கொண்டிருக்கும் பிறவி வாயினின்றும் உயிர்களை மீட்பர் என்பது குறிப்பு.** "மூல மலமெனுமோர் வெங்கரவின் பகுவாயி னின்றும்" என்று இக்கருத்தையே வைத்துப் பிற்கால ஆசிரியர் சிவப்பிரகாசர் தமது நால்வர் நான்மணிமாலையிற் போற்றுதல் காண்க.

இவ்வரலாறு வெள்ளானைச் சருக்கத்துள் 4 முதல் 14 வரை உள்ள திருப்பாட்டுக்களால் விரிக்கப்படுவதாம்.

இச்சருக்கத்தினுள் பெரும்பான்மை நின்றமைபற்றித் திருநாவுக்கரசு நாயனார் புராணம் அப்பூதிநாயனார் புராண வரலாறுகளாற் போந்த உள்ளுறையைத் தொடர்ந்து கொண்டது இத்திருப்பாட்டு.

சரிதச் சுருக்கம்:- சோழவள நாட்டில் வளமிக்க ஊர்களுள் ஒன்று **ஏமப்பேறூர்** என்பதாம். அது அருமறை நூல் வாய்மை ஒழுக்கத்தின் புகழ்மிக்கது - அப்பதியில் சைவ நெறியின் ஒருமைப்பாடுடைய **அந்தணர்** குலத்தில் அவதரித்த அருந்தவர் **நமிநந்தி யடிகள்.**- வேத வொழுக்கத்தின் வளர்க்கும் தீயினையே போல்வர்; திருநீற்றின் அடைவே மெய்ப்பொருள் என்றும் துணிவுடையவர்; சிவபெருமானை யாம இரவிலும் பகலிலும் வழிபாடு செய்தலிற் சிறந்து உணர்ச்சியில் விடாது பற்றிய இன்பநிலை யடைந்தவர்.

அவ்வூரினின்றும் திருவாரூரை யடைந்து புற்றிடங் கொண்டாரையும் தியாகராசப்பெருமானையும் வணங்குதலே எல்லா ஊதியங்களினும் சிறந்தது என்றதுகொண்டு அவ்வாறே பலநாளும் சென்று அவர் வணங்கி வந்தனர்.

ஒருநாள் புற்றிடங்கொண்ட பெருமானைப் பணிந்து வாழ்ந்து போந்து திரு முன்றிலை யணைந்து அப்பாங்கு **திருவரனெறிக்** கோயிலினுட் புகுந்து வணங்கி அடுத்த நிலைமைக் குறிப்பினால் அங்குத் திருப்பணிகள் பலவற்றையும் செய்து இருப்பார் எண்ணில் தீபமேற்றுவது கருத்துட் கொண்டனர். அப்பொழுது பகற்பொழுதில் இறங்குமாலை யாயிடலால், தமது ஊருக்குச் சென்று வருவதாயின் பொழுது சென்றுவிடுமாதலின், அடுத்ததொரு மனையில் விளக்கு நெய் வேண்டி உட்புகுந்தனர்; அது அழிந்த நிலைமை யமணர் மனையா யிருந்தமையால் அவர்கள் "உமது இறைவர் தம்கையில் நெருப்பை யுடையவராதலின் அவருக்கு விளக்கு மிகையேயாம்; இங்கு விளக்கு நெய் இல்லை; விளக்கு எரிக்க வேண்டினீராகில் நீரை முகந்து எரிப்பீராக" என்று இகழ்ந்து கூறினர். அவ்வாறு மதியாதுரைத்த உரை கேட்டு நமிநந்தியார் மனமிக வருந்தி அப்பொழுதே அங்கு நின்றும் நீங்கிப் போந்து திருக்கோயிலின் முன் சேர்ந்து திருமுன்பு பணிந்து வீழ்ந்தனர். உடனே ஆகாயத்தில் ஒரு வாக்கு எழுந்து "வந்த கவலையை இனி மாற்றும்; மாறுத திருவிளக்குப் பணி செய்வதற்குப் **பக்கத்தில் உள்ள இந்தக் குளத்தின் நீரை** முகந்து கொண்டுவந்து விளக்கேற்றுவீராக" என்று அருளிற்று. அது கேட்டுச் சிந்தை மகிழ்ந்தனர் நமிநந்தியார்; செய்வ தொன்று மறிந்திலர்; சிவனருளினையே சிந்தித் தெழுந்தனர்; பொய்கை நடுவுட் புகுந்து சிவன் **திருநாமத்தை ஏத்தி** அந்நீர் முகந்து கொண்டுஏறிக் கோயிலை யடைந்து ஒரு விளக்கில் முறுக்குந் திரியின்மேல் நீர் வார்த்து ஏற்றினர். உலகம் அதிசயிக்கும்படி அது சுடர்விட்டெழுந்தது. அது கண்டு அரனெறியார் திருக்கோயில் முழுதும் விளக்கேற்றிக், குற்றம் சொல்லிய அமணர் எதிரே **நாடறிய நமிநந்தியார் நீரால் விளக்கெரித்தனர்.** குறையும் தகளிகளுக்கெல்லாம் அவை விடியுமளவும் நின்றெரியும்படி நிறைய நீர் வார்த்தபின், மனையின் நியதி தவறாமல் சிவனை அருச்சனை செய்யும் பொருட்டுப் பணிந்து அவ்விரவே திருவாரூரினின்றும் புறப்பட்டுத் தம் பதியில் வந்து என்றும்போல் நியமப்படி இரவு சிவபூசை செய்து அமுது செய்து பள்ளிகொண்டனர். புலர் காலையில் நியதியான தமது பூசனையை முடித்துக்கொண்டு திருவாரூரில் மீண்டணைந்தனர். அரனெறியார் கோயிலை வலங்கொண்டு பணிந்து எழுந்து, புறத்தும் உள்ளும் பணிகள் பலவும் செய்து, அந்தியில் முன்னை நாட் போலவே அரிய விளக்கை ஏற்றினர். இவ்வாறு பல நாளும் பணி செய்து அவர் ஒழுக, அந்நாளில், **தண்டியடிகளால் அமணர் கலக்கம் விளைந்து,** சார்பில்லாத அமணர்கள் எல்லாம் திருவாரூரினின்றும் துரத்தப்பட்டழிந்தொழியவே, ஏழுலகும் போற்றும் பெருமை திருவாரூரின்கண் விளங்கிற்று.

சோழவரசர் நமிநந்தியடிகளாரின் நற்றுணையாகப் புற்றிடங்கொண்ட பெருமானுக்கு வேண்டும் அமுதுபடி முதலாக **நித்த நிபந்தம்** பலவும் ஆராய்ந்து, சிங்காசனத்தில் வீற்றிருந்து, வேதாகம நூல் விதி விளங்கும்படி அமைத்தனன். அதுவன்றி வீதிவிடங்கப் பெருமானுக்குப் **பங்குனி உத்தரமாகிய உயர்ந்த திருநாட் சிறப்பும்** விண்ணப்பம் செய்தபடி இறைவர் திருவிளையாட்டுக் கொண்டருளும் செயலும் நேர்பெற்றனராகி நாமுய்ய நமிநந்தியடிகள் எந்நாளும் நன்மை பெருகத் தொழுதனர்.

ஒருநாள் தியாகேசர் எழுச்சி திருமணலிக்கு எழுந்தருள, யாவர் என்னாது எல்லாக் குலத்தினுள்ளோரும் மேவ, நமிநந்தியாரும் உடன் சேவித்து இறைவரது திருவோலக்கத்தை அங்கே கண்டுகளித்தனர். மாலையில் இறைவர் திருக்கோயிலுக்கு மீண்டும் எழுந்தருளத், தொழுது, தம்மூர் அணைந்து, மனையினுள் புகுதாதே இருள் சூழும் இரவில் மனைப்புறங்கடையிற் றுயில, மனைவியார் வந்து "சிவபூசனை முடித்துத் தீவேட்டு அமுது செய்து பள்ளி கொள்வீராக" என்றனர். அதற்கு நமிநந்தியார் "இறைவரது திருமணலிக் கெழுச்சி சேவிக்க உடன் எங்கும் எல்லோரும் போத எனை இழிவு தொடக்கிற்று; ஆதலாலே குளித்து அடுத்த தூய்மை செய்தே மனையினுட் புகுந்து பூசை தொடங்கவேண்டும்; அதற்கு நீ சீத நன்னீர் முதலாயினவற்றைக் கொண்டு இங்கு அணைவாய்" என்றனர். அவரும் அவ்வாறே கொணரக் கடிதணைந்தனர். அப்பொழுது - பெருமானுடைய திருவருளாலேயோ? திருமேனி யசைவின் அயர்வாலோ? நாம் அறியோம் - சிறிதும் தாழாமல் நாயனுருக்கு உறக்கம் வந்தது. இறைவரது கழலை நினைந்தபடியே தூய அன்பர் துயில் கொண்டனர். அப்பொழுது அவர் கனவில், தியாகேசர் அவரது பூசைக்கு வருவார்போல வந்து தோன்றித் "திருவாரூர்ப் பிறந்தார்களெல்லாம் நமது கணங்களேயான பரிசு காண்பாயாக" என்றருள்செய்து மறைந்தனர். நமிநந்தியார் உணர்ந்து "இரவு அருச்சனை செய்யாது குற்ற நினைந்தேன்" என்று அஞ்சி எழுந்த அப்படியே வழிபட்டு, மனைவியாருக்கும் சொல்லி, விடியற்காலையில் விரைவோடு திருவாரூர் புகுந்தனர். அந்நகரை எதிர் காண்பவர், அங்குப் பிறந்து வாழ்வாரெல்லாரும் சிவபெருமானது திருவடிவே யுடையார்களாகிச் சிவவொளி பெற்ற மேனியாராகி விளங்குதல் கண்டு தலைமேற் கூப்பிய கையுடன் அஞ்சி நிலமிசை வீழ்ந்து வணங்கிக் களித்தனர். அவ்வடிவம் மாற்றிப் பழம்படியே நிகழ்வும் கண்டு, இறைவனிடம் அடியேன் பிழையைப் பொறுத்தருள வேண்டுமென்று பணிந்தனர். திருவருளால் தம்மூரை யகன்று திருவாரூரிற் குடியும் புகுந்து வாழ்ந்து நெடிதுகாலம் திருத்தொண்டுகளைச் செய்து வந்தனர்; சிவனடியார்களுக்கு நெடுநாள் நியதியாக வேறு வேறு வேண்டுவன எல்லாம் செய்து மேவுதலால் "தொண்டர்க்கு ஆணி" என்று திருநாவுக்கரசர் பாராட்டும் பேறும் பெற்றனர்.

இவ்வாறு அவர் திருப்பணிகள் பலவும் செய்து பல காலம் வாழ்ந்து, தியாகேசரது திருவடி நீழலை யடைந்தனர்.

தலவிசேடம் :- (1) ஏமப்பேரூர் - இஃது இப்போது **திருமப்பற்று** என்றும், **நெய்ப்பேறு** என்றும் வழங்குகின்றது. நெய்ப்பேறு என்பது மருவி (திரு)மப்பற்று என வந்தது போலும். நெய்ப்பேறு என்பது நெய் வேண்டி நீரை விளக்கு நெய்யாகப் பெற்றவரது ஊர் என்ற காரணக் குறியாகப் போந்த பெயர் என்று கருதப்படும். இங்குப் பழைய சிவாலயம் ஒன்று உண்டு. நமிநந்தியாருக்குத் தனியாலயமும் உண்டு. அவரது

திருமனையினையே அவர் கோயிலாக ஆக்கிப் பற்காலத்தார் வழிபட்டு வருகின்றனர் என அஃது அறியப்படுகின்றது. அவரது திருவுருவம் பூணூலும் முன் குடுமியும் கொண்டு, தோளில் விளக்கு நெய்க் குப்பியுடன் விளங்குகின்றது. சிவாலயம் இந்நாயனர் வழிபட்ட பெருமையுடையது. இதனைத் திருப்பணிசெய்து நன்கமைத்தல் பெருஞ் சிவபுண்ணியமாகும். உரையாசிரியரின் கனவு இருபத்தொன்றாம் நூற்றாண்டில் நனவாகி இத்திருக்கோயில் திருப்பணி நிறைவுபெற்று கும்பாபிடேகம் முடிந்து திருக்கோயில் புதுப் பொலிவுடன் விளங்குகிறது என்பதைப் பதிப்பாசிரியர் பதிவு செய்கிறார்.

இத்தலம் திருவாரூருக்குத் தெற்கில் திருத்துறைப்பூண்டி போகும் கற்சாலையில் ஆறு நாழிகை யளவில் உள்ளது.

குறிப்பு:- திருவெண்ணெய் நல்லூரினின்றும் வடக்கில் இரண்டு நாழிகையளவில் மட்சாலை வழி மலட்டாற்றின் தென்கரையில் உள்ள ஏமப்பூர் என்பதனோடு இது மயங்கி யறிதற்பாலதன்று. அது நடு நாட்டில் உள்ளதன்றியும், சரிதத் தொடர்பொன்றுமில்லை.

(2) **திருமணலி:-** திருவாரூருக்குத் தென்மேற்கில் நான்கு நாழிகையளவில் உள்ள வூர் என்பதும், இவ்வூருக்கு முன்னாளில் திருவாரூரினின்றும் இறைவர் எழுச்சி பெற்று எழுந்தருளும் வழக்கு நிகழ்ந்திருந்ததென்பதும் அறியப்படுகின்றன. இப்போது அது நீண்ட நாளாக நிகழ்கின்றதில்லை என்பதும் தெரிகின்றது.

(3) (நாயனர் விளக்குக்கு நீர் முகந்த) **திருக்குளம்:-** தேவதீர்த்தம் என்னும் கமலாலயம் என்று சிலர் கூறுகின்றனர். ஆனல், நாயனர், திருக்கோயிலின் முன்புறம் திருமுன்பு வீழ்ந்து வருந்தி முறையிட்டபோது "இந்த **மருங்கிற் குளத்து** நீர் முகந்து கொடுவந்து ஏற்றும்" என்று திருவாக்கு எழுந்ததாக, உடனே நீர் முகந்து கொண்டு வந்தனர் என்றும் அறியப்படுதலால் இது, தேவாசிரியனுக்கு அடுத்த மேல்புறம் உள்ள சங்கு தீர்த்தம் என்னும் திருக்குளமாம் என்பது பல அறிஞர்கள் கருத்து; விளக்கு நெய் வேண்டிப் புகுந்த அமணர்மனை திருக்கோயிலுக்கு மேல்பால் கமலாலயக் குளக்கரையில் இருந்ததென்பது தண்டியடிகள் புராணத்தாலும் அறியக்கிடக்கின்றது.

கற்பனை:- (1) பெரியோர் வாழும் தலங்களின் தாவர முதலிய இயற்கையமைப்புக்களும் அப்பெரியோர்களது சீலவொழுக்கத்தின் காட்சி பெற விளங்குந் தன்மையுடையன. *(1868)*

(2) திருவாரூர்ப் பெருமானை வணங்குவது உயிர்களுக்கு எவ்வூதியமுமாகும் பெருஞ் சிறப்புடையது. *(1871)*

(3) சிவ புண்ணியங்களின் பொருட்டுப் பிறர்பாற் பொருள்கள் வேண்டுதல் இரப்பு என்னும் இழிவின்பாற் படாது. *(1874)*

(4) அவ்வக் காலங்களிற் செய்ய எண்ணிய சிவபுண்ணியங்களைத் தமது பொருள் உதவாவிடினும், பிறர்பாற் பொருள் பெற்றேனும் காலம் தவருது செய்தலும் தகுதியுடையது. *(1874)*

(5) சிவ புண்ணியங்களுக்காகப் பொருள் வேண்டப்பட்டோர் இயன்ற அளவு ஏற்ற பொருள்களை உதவுதலால் தாமே அச்சிவ புண்ணியம் செய்த பலனைப்பெறுவர்.

அவ்வாறு உதவமாட்டாதோர் வாளா விருத்தலன்றி, அப்புண்ணியங்களையும் அவற்றில் முயல்வோரையும் அவமதித்துக் கூறுதல் கொடும்பாவம். அவர்கள் அரசனாலும் இறைவராலும் தண்டிக்கப்படுவர். (1875, 1876, 1879, 1883). இவ்வாறுள்ள பாவத்திற் பங்குபற்றிக் கொடிய பாதகத்துக்காளாவோர் பலப் பலரை இந்நாளுலகிற் காணவுள்ளது வருந்தத்தக்கது.

(6) சிவபெருமான் றிருக்கோயிலில் விளக்கிடுதல் ஞானத்துக் கேதுவாகிய பெருஞ் சிவபுண்ணியமாம்.

(7) சிவனருள் விளக்கத்திற்குக் காரணர்களான பெரியோர்கள் பெயரால் இறைவருக்கு நித்திய பூசைக்கும் நைமித்திகச் சிறப்புக்களுக்கும் அரசாங்க நியமப்படி நிபந்தங்கள் அமைத்தல் முந்தை நாளில் மனுநீதிச்சோழர் முதலிய அரசர்களின் வழக்கு (1884 - 1885). இது பின்பற்றத்தக்க நல்வழக்கு.

(8) இறைவரின் சிறப்புக்களைப் (திருவிழா) பெரியோர்கள் கண்டு வழிபட்டுச் சேவிப்பது உலகமுய்தற் பொருட்டாகும். (1886)

(9) மக்கள் பலரும் கூடும் இடங்களில் யாவர் என்னாது எங்குமெல்லாக் குலத்திலுள்ளோரும் ஒன்றாய் விரவி உடன் நண்ண நிகழ்வது இழிவு தொடக்குதற் கேதுவாகும். அதனைப் போக்கித் தூய்மை செய்துகொள்ளுதல் வேண்டுமென்பது நூல்களுள் விதித்தது. (1889 - 1890). ஆனால் அப்பொதுவிதி திருவாரூர்ப் பிறந்தார்களிடத்துச் செல்லாது. (1892)

(10) குளித்தற்குச் சீத நன்னீரே தகுதியுடையது. (1890)

(11) விழிப்பு நீங்கி உறக்கம் வந்தபோதும் இறைவன் திருவடிகளை மறவாது நினைந்த வண்ணமாகத் துயில்வது பெரியோர் தன்மை. (1891)

(12) உயிர்கள், தாமே காணமாட்டாமல் இறைவனருள் காட்டக் காணும் இயல்புடையன. (1892, 1894, 1895)

(13) திருநாவுக்கரசர் முதலிய பரமாசாரியர்களது திருவாக்கிற் பாராட்டிப் பேசப்படுவது கிடைத்தற்கரிய பெரும்பேறு. (1896)

(14) முன்னைத் தவத்தினால் ஞானம் பெற்று முத்தியடைதற்குத் தகுதி யுடையவர்களே திருவாரூர்ப் பிறக்கும் பேறு பெறுவர். (1882)

நமிநந்தியடிகள் நாயனார் புராணம் முற்றிற்று.

திருநின்ற சருக்கம் முடிந்தது.

திருத்தொண்டர் புராணம் முதற் காண்டம்

திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார்

உரையுடன் நிறைவாயிற்று

திருச்சிற்றம்பலம்

சேக்கிழார் பெருமான் சேவடி வாழ்க.

பிற்சேர்க்கை - 1

மூன்றாம் தொகுதி - இரண்டாம் பாகம்

சரித ஆராய்ச்சிக் குறிப்புக்கள்

22. குலச்சிறை நாயனார்:- இவரும் மங்கையர்க்கரசியாரும் நின்றசீர் நெடுமாற நாயனாரும் திருஞான சம்பந்தர் காலத்தவர்கள். அவர் வாழ்ந்த காலம் கி.பி. 6வது நூற்றாண்டின் முற்பகுதி என்று ஒருவாறு சரித ஆராய்ச்சியாளர் துணிந்துள்ளார்கள்; திருநாவுக்கரசு நாயனார் புராணம் சரித ஆராய்ச்சிக் குறிப்புக்கள் பார்க்க. இவர் பதியாகிய **மணமேற்குடி** என்பது இப்பொழுதும் அப்பெயராலே வழங்கப்படுகின்றது. தலவிசேடம் இந்நாயனார் புராண நிறைவில் பார்க்க.

23. பெருமிழலைக் குறும்ப நாயனார்:- தலவிசேடம் இந்நாயனார் புராண நிறைவில் பார்க்க. இந்நாயனார் சுந்தரமூர்த்திகள் காலத்தில் வாழ்ந்து அவரை உபாசித்து முத்திபெற்றவராதலின் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் வாழ்ந்திருத்தல் வேண்டுமென்று துணியலாம்.

24. காரைக்கா லம்மையார்:- சரிதஆராய்ச்சி குறிப்புக்கள் பார்க்க. இவர் திருஞான சம்பந்த நாயனார் காலத்திற்கு முற்பட்டவர்.

25. அப்பூதியடிகணாயனார்:- இவர் திருநாவுக்கரசு நாயனார் காலத்தில் வாழ்ந்து அவரது வழிபாட்டினால் அவரருளைப் பெற்று முத்தி பெற்றவர். அவர் புராணத் திறுதியிற் சரித ஆராய்ச்சிக் குறிப்புக்கள் பார்க்க.

26. திருநீலநக்க நாயனார்:- திருஞானசம்பந்த நாயனார் காலத்தில் வாழ்ந்து அவரை வழிபட்டு அவர் திருமணத்தில் **உடனாக** முத்தியடைந்தவர். அவர் சரித ஆராய்ச்சிக் குறிப்புக்களும் திருநாவுக்கரசர் சரித ஆராய்ச்சிக் குறிப்புக்களும் பார்க்கத் தக்கன.

27. நமிநந்தியடிக ணாயனார்:- "தொண்டர்க்காணி" என்று திருநாவுக்கரசரால் பாடப் பெற்றமையால் அவர் காலத்துக்குப் பலநாள் முற்பட்டவராதல் வேண்டும் "நீராற் றிருவிளக் கிட்டமை நீணா டறியுமன்றே" (திருவிருத்தம்) என்று அரசுகள் துதித் தருளியமையால் இவர் சரிதம் அரசுகள் காலத்திலேயே மிகத் தேற்றமாக எல்லாரும் அறிந்து நம்பி வழிபடும் நிலையில் இந்நாட்டில் வழங்கப்பட்டு வந்தமையும் அறியப்படும். **- உரையாசிரியர்**

இராவ்பகதூர் - திரு. C.M. இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள் அன்புடன் உதவிய குறிப்புக்களின் சுருக்கம்:

குலச்சிறை நாயனார்:- மணமேற்குடி - இது இப்பெயராலே இன்றும் வழங்குகின்றது; முன்னை நாளிற் பாண்டி நாட்டிற் சேர்ந்திருந்தது. நம்பி திருவிளையாடலில் இத்தலத்தில்

தேன் றதும்பும் குருந்த மரங்கள் உண்டு எனப் பேசப்பட்டுள்ளது. அணிமையில் உள்ள ஆவுடையார் கோயில் என்னும் திருப்பெருந்துறையில் குருந்த மரத்தினடியில் திருவாதவூரடிகளுக்கு இறைவர் அருளிய சரிதம் நினைவு கூர்க.

தற்கால நிலை - இவ்வூர் கிழக்குக் கடற்கரையோரம் உள்ளது. மணல்மேட்டின் மேல் அமைந்ததாதலின் இப்பெயர் பெற்றது. மணற் குன்றாக வைத்துக் "குருந்தவிழ் சாரல்" என்பது நம்பி திருவிளையாடல். முன்னாளில் வடக்கிருந்து இராமேச்சுரம் செல்வதற்குக் கடற்கரை ஓரமாக ஒரு பெருவழி இருந்தது. அதில் அங்கங்கும் யாத்திரிகர்கள் தங்குதற்கு விடுதிகளும் சத்திரங்களும் கட்டப்பட்டிருந்தன. அதற்குச் சத்திரச்சாலை என்று பெயர். அச்சாலை வழியில் இவ்வூர் உள்ளது. திருஞான சம்பந்த நாயனுர் இவ்வழியே தான் இராமேச்சுவரத்திலிருந்து சோழ நாட்டுக்கு எழுந்தருளினுர் என்று தெரிகிறது.

தொன்மை - திருஞான சம்பந்தர் காலத்துக்கு முன் இருந்தே இவ்வூர் சிறப்பாக விளக்கம் பெற்றிருந்தது. குலச்சிறை நாயனுர் அவதரித்த பெருமை பெற்றது. மங்கையர்க்கரசி யம்மையாரும், நின்றசீர் நெடுமாற நாயனுரும், குலச்சிறை நாயனுரும், திருஞானசம்பந்த நாயனுருடன் கூடி நான்கு நாயன்மார் ஒரு காலத்தில் எழுந்தருளியிருந்த தனிச் சிறப்புப் பெற்ற தலம். இங்கு பழைய சிவாலயங்கள் இரண்டு உண்டு. அவற்றுள் குலச்சிறையார் வழிபட்ட தலம் இப்போது அணிமையில் பழுது பார்க்கப்பட்டுள்ளது. பன்னிரண்டாம் நூற்றுண்டில் பாண்டியர்களுக்குள் நிகழ்ந்த போர்களில் இலங்கை மன்னனுன பராக்கிரமபாகுவின் உதவிகொண்டு பாராக்கிரம பாண்டியன் தன் பகைவன் குலசேகரனது படைகள் தங்கிய வடமண மேற்குடி மக்குடி முதலிய ஊர்களை எரித்து வேலன்குடி சென்றுன் என்ற வரலாறு இலங்கைச் சரித்திரமாகிய மகா வமிசத்திலும் பாண்டிய நாட்டுக் கல்வெட்டுக்களிலும் காணப்படும். அப்போது வடக்கும் தெற்குமாக இவ்வூர் இரண்டு பிரிவுகளாக இருந்தது.

பெருமிழலைக் குறும்ப நாயனுர்:- ஊர் - இவர் அவதரித்த ஊர் பெருமிழலை; அது பாண்டிய நாட்டைச் சார்ந்த ஓர் ஊர். ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள் "மிழலை நாட்டுப் பெருமிழலை" என்று கூறுவதனுல் மிழலை நாடு பாண்டிய நாட்டின் ஓர் உள்நாடு ஆகும்; அதன் தலைநகர் பெருமிழலை. மிழலை என்ற பெயருள்ள ஊர் வேறு நாடுகளிலும் உண்டு; மிழலை நாட்டு மிழலை; வெண்ணி நாட்டு மிழலை; சோழ நாட்டு வீழி மிழலை.*

தொன்மை - முன்னை நாளில் நாட்டுப் பிரிவுகளைக் **கூற்றம்** என வழங்கினுர்கள். மிழலை நாட்டை மிழலைக் கூற்றம் என்றனர். புறம் - 24; அகம் 266 பார்க்க. இது முட்டூற்றுக் கூற்றத்தோடு இணைத்துக் கூறப்பட்டது ஆராய்ச்சிக்குரியது. புறம் 24-ல் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற **நெடுஞ்செழியனைப்** பாடிய மாங்குடிகிழார் "மிழலையொடு....முத்தூறு தந்த கொற்றம்" என மிழலை முத்தூறு எனும் இரண்டு கூற்றங்களையும் நெடுஞ்செழியன் வென்ற செய்தியைக் குறிக்கிருர். இப்பாட்டினுல் மிழலைக் கூற்றம் கடற் கரையைச் சார்ந்ததென்று கருத இடமுண்டு; அதனை வேள் **எவ்வி** யிடமிருந்து

*தலவிசேடம் III-தொகுதி பார்க்க. மிழலைநாடு புதுக்கோட்டைச் சீமையில் உள்ளதென்பதே ஆராய்ச்சியிற் கண்டது.

நெடுஞ்செழியன் வென்று கைப்பற்றினதாகத் தெரிகிறது. **அகம் - 266**-ல் இச்செய்தி தெரிகின்றது. - இனி, 7-ஆம் நூற்றுண்டில் இந்திய நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்த **யுவான்சுவாங்** என்ற சீன யாத்திரிகன் **மலகூடம்** என்றதொரு நாட்டைப்பற்றி எழுதியுள்ளான்; அதுவே பாண்டிய நாட்டு மிழலைக் கூற்றமாக இருக்கக் கூடுமென்று சரித ஆராய்ச்சியாளர் திரு. K.V. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் கருதுகின்றுர்கள்; அது காஞ்சியினின்றும் 3000-ம் லீ என்ற அளவில் இருந்ததாக அவன் கூறுவதால் அது மதுரைக்கு அருகில் இருக்கலா மென்றும் அதனுல் அதுவே பாண்டிய நாட்டு மிழலை என்றும் அவர் கூறுகின்றுர். ஆனுல் பின் வந்த ஆராய்ச்சியாளர் இதனை ஒப்பவில்லை; காரணம் புறப்பாட்டிற் கண்டபடி மிழலைக் கூற்றம் கடற்கரையோரமாக இருக்க வேண்டுமென்பதே.

உட்பிரிவுகள் - மிழலைக் கூற்றம் கீழ்க் கூற்று - நடுவிற் கூற்று என்ற உட்பரிவுகளைக் கொண்டதென்று திருப்பூவணக் கல்வெட்டினுல் அறிகின்றோம்; கீழ்க்கூற்று என்றமையால் மேற்பகுதி ஒன்றிருத்தல் கூடும்; களக்கூற்று என்றதொரு பகுதியை சுத்த மல்லிக் கல்வெட்டுக் குறிக்கின்றது.

மிழலை நாட்டு ஊர்கள் - (1) - கொழுவனூர் - கீழ்க் கூற்று - மிழலைக் கூற்றம். (460/09 - T.N.) (1); விளத்தூர் . ஜெயங் கொண்ட சோழ நல்லூர் - களக்கூற்று. மிழலைக் கூற்றம் (460/09 - 451 T.N.); (3) கருவூர் - மிழலைக் கூற்றம் (246 - 1911 - 48 - T.) (4) தஞ்சை திருந்துதேவன் குடி மிழலை நாடு - விருதுராஜ பயங்கர வடநாடு - (47/10. 465 T.) (5) புள்ளுர்க்குடி - நடுவிற்கூற்று - மிழலைக் கூற்றம். (130/08. 268 R.N. ராமநாதபுரம்); (6) பாரூர் - மிழலைக் கூற்றம் (67/1910 - 104 - மதுரை) பேச்சிப் பாளம் - வட்டெழுத்து); (7) நரிக்குடி - திருவிளையாடற் புராணம் - நரி குதிரையானது.

குறும்ப நாயனுர்:- பெருமிழலையில் ஆண்ட ஒரு குறுநில மன்னர். **குறும்பர்** - பண்டைக் காலத்திலிருந்து ஒரு சிற்றரச வகுப்பினர். கி.பி. 9-ஆம் நூற்றுண்டின் முற்பகுதி.

திருவிளையாடல் - திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில் மிழலை நாட்டு நரிகளைக் குதிரையாக்கினதாகக் கூறியிருக்கிறது. நரிக்குடி என்ற ஊர்ப் பெயர் காண்க. ஆனுல் டாக்டர் திரு. உ.வே. சாமிநாத ஐயர் அவர்கள் மிழலைநாடு புதுக்கோட்டைச் சீமையில் இருப்பதாகவும் அந்நாட்டு வேளாளரை மிழலைச் சதகம் வருணிப்பதாகவும், மற்றொரு இடத்தில் மிழலை நாடு திருப்பெருந்துறைக்கருகில் இருப்பதாகவும் கூறுகிறுர்.

பிற்சேர்க்கை - 2

மேற்கோள் நூலகராதி

பகுதி III - 2 பாகம் - பாட்டு *1695* - முதல் *1898* வரை

பிற்சேர்க்கை - 3

மூன்றாம் பகுதி - இரண்டாம் பாகம்

பாட்டு முதற்குறிப்பகராதி

(1695 முதல் 1898 வரை)

பிற்சேர்க்கை - 4

மூன்றாம் பகுதி - இரண்டாம் பாகம்

அருஞ்சொற்றொடரகராதி

(எண்கள் - பாட்டு வரிசை எண்கள்)



பன்னிரு திருமுறை ஆய்வு மையம்,

கற்பகம் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.